විදේශ කටයුතු අමාත්‍යාංශය
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
MINISTRY OF FOREIGN AFFAIRS



වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த முன்னேற்ற அறிக்கை
ANNUAL PERFORMANCE REPORT

2018

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

இலங்கை

வருடாந்த முன்னேற்ற அறிக்கை

2018

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

உள்ளடக்கம்	பக்க இல
1. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தொலைநோக்கு, விடயங்கள் மற்றும் செயற்பாடுகள்	01
2. நிறைவேற்றுச் சுருக்கம்	03 - 08
3. அமைச்சின் ஒழுங்கமைப்பு அட்டவணை	09 - 10
4. பிரிவுகளின் முன்னேற்ற அறிக்கை	
- ஆபிரிக்க அலுவல்கள் பிரிவு	11 - 35
- கொன்சியுலர் அலுவல்கள் பிரிவு	37 - 49
- கிழக்காசியா மற்றும் பசுபிக் பிரிவு	51 - 138
- பொருளாதார அலுவல்கள் பிரிவு	139 - 154
- ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா பிரிவு	155 - 200
- ஐரோப்பிய ஒன்றியம், பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் பொதுநலவாய பிரிவு	201 - 216
- நிதிப்பிரிவு	217 - 221
- பொது நிருவாகப் பிரிவு	223 - 228
- லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிரிவு	229 - 236
- சட்டப்பிரிவு	237 - 243
- மத்திய கிழக்குப் பிரிவு	245 - 291
- சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய பிரிவு	293 -306
- வெளிநாட்டு நிருவாகப் பிரிவு	307 - 317
- மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு	318 - 319
- உபசரணைப் பிரிவு	321 - 335
- பொதுத் தொடர்பாடல்கள் பிரிவு, வெளிநாட்டு இலங்கையர் மற்றும் கலாச்சார இராஜதந்திரப் பிரிவு	337 - 346
- தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு	347 - 362
- ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு	362 - 372
- ஐக்கிய அமெரிக்கா, கனடா பிரிவு	373 - 393
5. வெளிநாடுகளிலுள்ள இராஜதந்திர தூதரக பணியகங்களின் வலையமைப்பு	395
6. வெளிநாட்டு இலங்கைத் தூதரகங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் - 2018	397 - 398
7. வெளிநாட்டு இலங்கைத் தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் நடவடிக்கைகள் - 201	399 - 405
8. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	407 - 407

தொலைநோக்கு

சர்வதேச சமூகத்தில் பொறுப்புள்ள நாடாகவும் சகல நாடுகளுடனும் நட்புறவுடனான தொடர்புகளைப் பேணுகின்ற நாடாகவும் இருத்தல்

செயற்பணி

"அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கேற்ப, இலங்கையின் தேசிய நலன்களை சர்வதேச ரீதியில் ஊக்குவித்தல், திட்டமிடல் மற்றும் பாதுகாத்தலுடன், இலங்கையின் தேசிய நலன்களுக்கு அமைவாக வெளிநாட்டு உறவுகளை முகாமைப்படுத்தலில் அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்குதல்"

வெளிநாட்டு அமைச்சின் விடயங்களும் பணிகளும்

வெளிநாட்டு விவகாரங்கள் பற்றியதில் அரசியல் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்;

வெளிநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தல்;

சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள்;

இலங்கையில் வெளிநாட்டு அரசாங்கம் மற்றும் சர்வதேச நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தல்;

வெளிவாரியாக விளம்பரப்படுத்துதல்;

இராஜதந்திர விலக்குரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள்;

கொன்சியுலர் பணிகள்

முன்னுரை

நிறைவேற்றுச் செயற்பாட்டு சுருக்கம்

சர்வதேச ரீதியில், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இணக்கமான முறையில், இலங்கையின் தேசிய நலன்களை முன்னேற்றுவதும், முன்மதிப்பீடு செய்வதும், பாதுகாப்பதும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணி நோக்காகும். 2018 ஆம் ஆண்டில் அது "***அனைவருடனும் நட்புறவைப் பேணுதல் மற்றும் எவருடனும் பகைமை பாராட்டாதிருத்தல்***" எனும் கருப்பொருளைப் பலப்படுத்தும் வகையில் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார செயற்களங்களில் இலங்கையின் ஈடுபாட்டினை அதிகரித்துக் கொள்வதற்கான செயல் முனைப்பைத் தொடர்ந்தும் காட்டி வந்துள்ளது. ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகள், சட்டவாட்சி மற்றும் பேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான தனது வாக்குறுதிகளை உறுதிப்படுத்தி வரும் அதேவேளையில், இலங்கை உலகளாவிய ரீதியிலான அதன் நிலையினை மீண்டும் உறுதிப்படுத்திட அரும்பாடுபட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட மூலக் கோட்பாடுகள் மூலம் வழிப்படுத்தப்பட்ட இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக மேன்மை தங்கிய ஜனாதிபதி, கௌரவ பிரதமர் மற்றும் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோரால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் 'சார்க்' அமைப்பு (SAARC), 'பிம்ஸ்டெக்' (BIMSTEC) அமைப்பு மற்றும் ஏ.ஆர்.எப் (ARF) அமைப்பு உள்ளடங்கலான பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான எமது ஈடுபாடானது, அனைத்து மட்டங்களிலும் அரசாங்கம் பேணி பாதுகாத்து வரும் உறவுகள் ஊடாக அதன் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததும். ஆக்கபூர்வமானதுமான ஈடுபாட்டினை நிரூபித்துள்ளது.

எமது நெருங்கிய அயல் நாடாம் இந்தியாவுடனான நட்புறவைத் தொடர்ந்தும் பேணி வருகின்றமை பல்வேறு இராஜதந்திர ஈடுபாட்டுத் தடங்கள் ஊடாக ஊட்டிவளர்க்கப்பட்டுள்ளது. பலதரப்பட்ட விவகாரங்கள் குறித்து உயர்மட்டச் சந்திப்புக்களை ஏற்படுத்தி, பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பில் பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்தி வருவதன் மூலம் அதன் தெற்காசிய நட்பு நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகியவற்றுடன் இலங்கை காட்டி வரும் ஈடுபாட்டில் இதனையொத்த முக்கியமான முன்னேற்றத்தைக் கண்டுகொள்ள முடியும்.

சீனாவுடனான எமது வரலாற்று ரீதியான உறவுகள், அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார செயற்களங்களில் ஏற்பட்டுள்ள அதிகரித்த பரஸ்பர ஒத்துழைப்புடன் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவுடனான இலங்கையின் ஈடுபாடானது, பொருளாதார ஒத்துழைப்புக்கென முன்னெடுக்கப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களுடன் மேலும் விரிவடைந்துள்ளது. இலங்கை ஆசியாவில் ஒருங்கிணைவு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மீதான மாநாட்டு அமைப்பின் (CICA) முழுமையான உறுப்புரிமையை 2018 ஓகஸ்டில் பெற்றுக் கொண்டது.

இலங்கை – ஐக்கிய அமெரிக்க உறவுகள், உயர் மட்ட விஜயங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் நல்லிணக்கம், சமாதானம் மற்றும் சமூக – பொருளாதார உறவுகள் உள்ளிட்ட பல விடயப்பரப்புக்களில் பாரிய ஒத்துழைப்பு மற்றும் புரிந்துணர்வுடன் மேலும், விருத்தியடைந்துள்ளன.

பிரதமர் ஷின்ஸோ அபே அவர்களின் அழைப்பின் பேரில் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் ஜப்பானுக்கு அரச விஜயமொன்றை மேற்கொண்டார்.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, சிங்கபூர், தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளுடனான உறவுகள், பல்வேறு நலன்சார்ந்த விடயப்பரப்புக்களில் தொடர்ந்தும் விரிவடைந்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய – இலங்கைக் கூட்டு ஆணைக்குழு, ஐரோப்பிய ஒன்றியத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள பங்காண்மைத்துவ செயல்முறை மீதான வருடாந்த கலந்துரையாடல் ஊடாக ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகையினைப் பெற்றுக் கொள்ளுதல் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தும் மற்றும் இணங்கி ஒழுகும் பணிகளில் இந்த அமைச்சு ஈடுபட்டு வருகின்றது. பன்முகத்தன்மை வாய்ந்த பங்காண்மைத்துவத்தின் பயனாக வர்த்தக வசதிப்படுத்தல், நல்லாட்சிக்கு ஒருபுறமாக அபிவிருத்தி உதவி, சட்டவாட்சி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் குறித்த கலந்துரையாடல்களை தோற்றுவித்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பயங்கரவாத அமைப்பொன்றாக தொடர்ந்தும் இரண்டு வருட காலப்பகுதியில் பட்டியல் படுத்துவதனைப் பேணுவதிலும் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து ஈடுபட்டுள்ளது.

இலங்கை இலண்டன் மாநகரில் 2018 ஏப்ரலில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டத்தில் அதன் தீவிர ஈடுபாட்டினைக் காண்பித்ததன் மூலம், பொதுநலவாய செயலகம் மற்றும் அதன் உறுப்பு நாடுகளுடனான அதன் நெருங்கிய ஒத்துழைப்பினை தொடர்ந்தும் பேணி வந்துள்ளது. இலங்கை ஐரோப்பிய பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பலவற்றுடன், குறிப்பாக, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, இத்தாலி, துருக்கி, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனான தனது உறவுகளைத் தொடர்ந்தும் விரிவடைய வைத்துள்ளது. சைப்பிரஸ் நாட்டுடனான எமது ஈடுபாட்டினை மேலும் பலப்படுத்தும் வகையில், சைப்பிரஸில் இலங்கையின் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. உயர் மட்ட விஜயங்கள் மற்றும் கலந்துரையாடல் ஊடாக அரசியல், பொருளாதார, சமூக, பாதுகாப்பு, மற்றும் கலாச்சார ஒத்துழைப்பினை மேம்படுத்துவதிலும் பல்வகைப்படுத்துவதிலும், இலங்கை ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள நட்பு நாடுகளுடன் மேற்கொண்டுள்ள நடவடிக்கை மேல் நோக்கிய போக்கினை ருசுப்படுத்தியுள்ளது.

இலங்கை ஜேர்மன் வர்த்தக ஒத்துழைப்பானது, பலமடைந்து இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டினை மேலும் முன்னேற்றம் காண வைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன அவர்கள் 2018 ஏப்ரல் 17 அன்று நடைபெற்ற "பேர்லின் சக்திவள இடை மாறுபாடு குறித்த கலந்துரையாடல் (BETD) மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக ஜேர்மனிக்கு விஜயம் செய்தார்.

ஆபிரிக்க ஒன்றியத்தில் எமக்குள்ள பார்வையாளர் அந்தஸ்தைப் பயன்படுத்தி, தென்னாபிரிக்கா மற்றும் ஆபிரிக்கா ஒன்றிய (AU) உறுப்பு நாடுகளுடனான எமது இருதரப்பு உறவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையாளப்படுத்தி இலங்கை ஆபிரிக்கா கண்டத்து நாடுகளுடனான தனது ஈடுபாட்டினை செயற்களங்கள் பலவற்றில் தொடர்ந்தும் விரிவுபடுத்தி வருகின்றது.

இலங்கை பொருளாதார மற்றும் கலாச்சார செயற்களங்களில் பேணிவரும் இருதரப்பு உறவுகள் ஊடாக இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்தியத்தில் தொடர்ந்தும் தடம் பதித்து வந்துள்ளது.

மத்திய கிழக்கில் உள்ள அநேகமான நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு உயர் மட்ட விஜயங்கள், நடாத்தப் பெற்ற கூட்டு ஆணைக்குழு மாநாடுகள் மற்றும் ஏனைய ஈடுபாடுகள் மூலம் 2018 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் மத்திய கிழக்குடனான இலங்கையின் ஈடுபாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியதெனலாம். நாம் சவுதி அரேபியா, கட்டார், குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரெய்ன், ஓமான், ஜோர்தான், ஈராக், மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுடனான எமது உறவுகளை அனைத்து செயற்களங்களிலும் தொடர்ந்தும் விரிவாக்கி வருகின்றோம். இலங்கை பாலஸ்தீனிய மக்களுக்கான அதன் உதவி மற்றும் ஆதரவை ரமல்லாஹ் நகரில் (Ramallah City) உள்ள எமது பிரதிநிதி ஊடாக தொடர்ந்தும் நிலை நிறுத்தி வருகின்றது. இலங்கை இஸ்ரேலுடனான ஒத்துழைப்பு குறித்த பலவிடயப்பரப்புக்களில் அதனுடனான இடைவினைகளை அதிகப்படுத்தியுள்ளதுடன், இஸ்ரேலுடனான உறவுகள் தசாப்த காலமாக தொடர்ந்தும் வளர்ச்சி கண்டுள்ளன.

வெளிப்படுத்தல் தன்மை மற்றும் உட்படுத்தல் தன்மை குறித்த அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக, குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற இலங்கை குறித்த பூகோள காலாந்திர மீளாய்வு அமர்வில் செய்யப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் குறித்த சர்வதேச உடன்படிக்கையின் கீழ் அரச தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து பகிரங்க கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தை (NHRAP) உரிய முறையில் நடைமுறைப்படுத்தலை அமைச்சு ஏனைய முகவரமைப்புக்களுடன் நெருங்கிய முறையில் இணைந்து தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 மற்றும் 34/1 தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக, ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை அமைப்புக்களின் கீழ் இலங்கை அளித்திருந்த வாக்குறுதிகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் முகவரமைப்புக்களின் ஒத்துழைப்புடன் நேரடியாகவே மேற்பார்வை செய்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73 ஆவது அமர்வில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின், பங்கேற்பானது, சர்வதேச அரசியல் முறைமையில் இலங்கை பொறுப்பு வாய்ந்த செயற்பாட்டாளராக விளங்கி வரும் அதன் ஈடுபாட்டின்

முக்கியத்துவத்தினை உலகத்திற்கு உணர்த்தியுள்ளது. இலங்கை ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படை நடவடிக்கைகளில் தனது இராணுவத்தினரைப் பணியில் அமர்த்தி வருவதன் மூலம் அது உலகளாவிய ரீதியில், அமைதியை நிலை நாட்டுவதற்கான தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் அடையாளப் படுத்தி வருகின்றது.

கடந்த 2018 ஆம் ஆண்டில் இலங்கை ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆயுதக்களைவு குறித்த மாநாட்டில் (CD) முட்டுக்கட்டை நிலையைத் தகர்த்தல் மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு, பலதரப்பு ஆயுதக்களைவினை படிப்படியாக அதிகரித்தல் மற்றும் புதிய ஆயுத மோதல்கள் ஏற்படுவதனைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை அதிகப் படுத்துவதற்கான இலங்கையின் வாக்குறுதிச் செயற்பாடு மற்றும் கடின உழைப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆயுதக்களைவு மாநாடு தொடர்பாக ஐந்து உப குழுக்களை அமைப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.

இலங்கையின் பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சித் திட்டத்தில் அமைச்சின் வகிபங்காக விளங்குவது என்னவெனில், இருதரப்பு மற்றும் பலதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துதல், வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலாத்துறை, தேயிலை உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி உதவி ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் மூலம் உலகளாவிய ரீதியில் இலங்கையின் பொருளாதார அடிச்சுவட்டை அதிகப்படுத்துவதேயாகும். பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சித் திட்டமானது, தூதரகங்களுக்கான பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் செயலாற்றுகை இலக்குகள் (EIPTM), தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் ஏற்படும் பொருளாதார மேம்பாடு மற்றும் இலங்கை வெளிநாட்டு உறவுகள் மற்றும் பொருளாதார இராஜதந்திர கலந்துரையாடல் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (UNESCAP) கொழும்புத் திட்டம், இந்து சமுத்திர ஓர சங்கம் (IORA), ஆசிய ஒத்துழைப்புக் கலந்துரையாடல் (ACD), அபுதாபி கலந்துரையாடல் மற்றும் நேபாளத் தலைநகர் கத்மண்டுவில் 2018 ஒகஸ்டில் நடைபெற்ற தனது 4 ஆவது உச்சி மாநாட்டில் இலங்கைக்கு தலைமைத்துவத்தை வழங்கிய "பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன் முயற்சி" (BIMSTEC) அமைப்பு ஆகியவை ஊடாக அமைச்சானது இருதரப்பு மற்றும் பலதரப்பு பொருளாதார உறவுகளை ஊட்டி வளர்த்துள்ளது.

இலங்கை இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக விளங்கி வருகின்றமையைக் கருத்திற் கொண்டு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் சமுத்திரம் சார்ந்த விவகாரங்கள் மீதான 3 ஆவது இலங்கை – ஜப்பான் கலந்துரையாடல் (மாநாடு) கொழும்பில் நடைபெற்றது. இந்து சமுத்திர நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதனை தனது தொலைநோக்காகக் கொண்டுள்ள நிலையில், இலங்கை இந்து சமுத்திர ஓர சங்க (IORA) கடல்சார் பாதுகாப்பு செயலமர்வை 2018 செப்டெம்பரிலும் "இந்து சமுத்திரம்: எமது எதிர்காலத்தை நிர்ணயித்தல்" எனும் தொனிப்பொருளில் அமைந்த தடம் 1.5 மாநாட்டினை 2018 ஒக்டோபரிலும் நடாத்தியது.

கொன்சியுலர் அலுவலகத்தின் வடமாகாண கிளையொன்று ஸ்தாபித்தமையானது ஒரு சரித்திர நிகழ்வாக கருதப்படும் நிலையில், அதன் இன்னொரு கிளையை 2019 முதல்

காலாண்டில் தென்மாகாணத்தின் மாத்தறையிலும் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கிளிநொச்சி மற்றும் மன்னார் பிரதேசங்களில் ஒருமுகப்படுத்தப்பட்ட கொன்சியுலர் சேவைகளை நடாத்தியுள்ளதன் மூலம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அதன் பிராந்திய அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து செயல்திறன் மிக்க வகையில் தனது கொன்சியுலர் சேவைகளை பொது மக்களுக்கு வழங்கியுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் 2018 ஓகஸ்ட் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப் பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தமானது, பிரதேச செயலகங்களில் இத்தகைய சேவையினை வழங்கிடும் வகையில் ஆவண அத்தாட்சிப்படுத்தல் செயல் முறையினைப் பன்முகப்படுத்தியுள்ளது. 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் மத்தியில் இழப்பீடாகவும் ஏனைய கொடுக்குமதிகளாகவும் வழங்குவதற்கென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அண்ணளவாக 420 மில்லியன் இலங்கை ரூபா அறவிடப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாத நிலையில் வெளிநாடுகளில் மரணித்தோர் மற்றும் மனித சடலங்களை தாயகத்திற்கு மீண்டும் எடுத்து வருவதற்கு/ வெளிநாடுகளில் இறுதிச் சடங்குகளை நடாத்துவதற்கான செலவை ஈடு செய்ய முடியாத நிலையில் இருந்தோர் விடயத்தில் அமைச்சு அத்தகைய 12 இலங்கையர்களுக்கென அண்ணளவாக 577,975/= இலங்கை ரூபாவை செலவிட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு காலத்திற்குப் பொருத்தமான தகவல்களைப் பரப்பியும், வெளிநாடுகளில் இலங்கையின் நற்பெயரை துலங்கச் செய்தும் வெளிநாட்டுத் தரப்பினருடனான உறவுகளைத் தொடர்ந்தும் பேணி வருகின்றது. அமைச்சின் புதிய மும்மொழி வலைத்தளம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைச்சானது இக் காலப்பகுதியில் 452 ஊடக அறிக்கைகளை வெளியிட்டதுடன் அதிமுக்கிய பிரமுகர்களின் விஜயங்களை வசதிப்படுத்தியும் ஊடக செயற்பாடுகளை ஒருங்கிணைத்தும் இலங்கையில் வெளிநாட்டு ஊடக செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலும் செயற்பட்டது. மேலும், வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து தமது உறவுகளுடன் மீண்டும் இணைந்து கொள்ளவும், வெளிநாடுகளில் இயங்கி வரும் அமைப்புக்கள் இலங்கையில் செயற்படுவுமான ஈடுபாடு குறித்த வசதிப்படுத்தலை அமைச்சு பலப்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் இலங்கையுடனான கலாச்சாரத் தொடர்பினைத் தக்க வைத்துக்கொள்ள இடமளிக்கும் வகையில், ரூபாவாஹினி தொலைக்காட்சி நிறுவனத்தின் "எதர மெதர" (Ethera Methera) நிகழ்ச்சியானது இத்தாலி, ஐக்கிய இராச்சியம் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளில் ஒளிபரப்பாகிட வசதியளிக்கப்பட்டது.


நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் சமகாலத் தேவைப்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் நிருவாகக் கட்டமைப்பானது மறுசீரமைக்கப் பெற்றது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் வெளிநாடுகளில் அமைந்துள்ள அதன் தூதரகங்களினதும் ஒட்டு மொத்த செயலாற்றுகை மதிப்பீடொன்று நடாத்தப்பட்டது, திறமை வாய்ந்த மனித வளங்களுடனான பதவியணியினரை அமைச்சு கொண்டிருக்கும் வகையில்,

ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது வெளிப்படைத் தன்மை வாய்ந்த நிலையில் நியாயமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த 20 அதிகாரிகள் அமைச்சில் 2018 மே 2 ஆம் திகதியன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்த அதிகாரிகள் பண்டார நாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவகத்தினால் வடிவமைக்கப் பெற்ற பரந்தளவிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொண்டனர்.

மேலும், கப்பல்துறை, சிவில் விமானப் போக்குவரத்து சர்வதேச வர்த்தகம், முதலீட்டுப் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு, புலம்பெயர்வு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுதல் குறித்த சர்வதேச அம்சங்கள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டுக் கொள்கைத் தீர்மானங்கள் குறித்த சட்ட அம்சங்கள் மீதான சட்ட ஆலோசனையை அமைச்சு வழங்கியது.

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, இலங்கைத் திருநாட்டின், இறையாண்மை, நலன்கள் மற்றும் அதன் மக்களின் தேவைகள் ஆகியவற்றை மனதிற் கொண்டு, வெளிநாடுகளில் இலங்கையின் நலன்களை மேம்படுத்தியும் பாதுகாத்தும் வரும் அதே வேளையில், அதன் இராஜதந்திர ஈடுபாட்டினை அதிகரிக்கவும், பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்தவும், அனைத்து நாடுகளுடனான நட்புறவு குறித்த வெளிநாட்டுக் கொள்கையைப் பேணவுமென தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
குடியரசுக் கட்டிடம்
கொழும்பு 01


வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கமைப்பு வரைபடம் - 2018
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
செயலாளர்
இராஜாங்க செயலாளர்
LKIRSS
BIDTI
மேலதிக செயலாளர்/ இருதரப்பு அலுவல்கள்
மேலதிக செயலாளர்/ பலதரப்பு அலுவல்கள்
மேலதிக செயலாளர்/ சட்டம்
மேலதிக செயலாளர்/ பொருளாதார அலுவல்கள், வெளிநாடுவாழ் இலங்கையர்கள் & கலாசார இராஜதந்திரம்
மேலதிக செயலாளர்/ நிர்வாகம் & கொன்சியுலர்
உபசரணைப் பிரிவு பிரதானி (பணிப்பாளர் நாயகம்)
வெளிநாட்டு நிர்வாகம் (பணிப்பாளர் நாயகம்)
பொதுத் தொடர்பாடல், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் கலாசார இராஜதந்திரம் (பணிப்பாளர் நாயகம்)
கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி (பணிப்பாளர் நாயகம்)
தெற்காசிய மற்றும் சார்க் அமைப்பு (பணிப்பாளர் நாயகம்)
கிழக்காசிய மற்றும் பசுபிக் (பணிப்பாளர் நாயகம்)
மத்திய கிழக்கு (பணிப்பார் நாயகம்)
ஆபிரிக்கா (பணிப்பாளர் நாயகம்)
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் தீவுகள் (பணிப்பாளர் நாயகம்)
ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா (பணிப்பாளர் நாயகம்)
ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா (பணிப்பாளர் நாயகம்)
ஐரோப்பிய ஒன்றியம், பொது நலவாயம் & பலதரப்பு உடன்படிக்கைகள் (பணிப்பாளர் நாயகம்)
ஐக்கிய நாடுகள் & மனித வளங்கள் (பணிப்பாளர் நாயகம்)
சமுத்திர அலுவல்கள் மற்றும் கால நிலை மாற்றம் (பணிப்பாளர் நாயகம்)
சட்ட அலுவல்கள் (பணிப்பாளர் நாயகம்)
பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகம் (பணிப்பாளர் நாயகம்)
வெளிநாடுகளில் உள்ள வெளிநாடுவாழ் இலங்கையர்கள் மற்றும் கலாசார இராஜதந்திரம்
கொன்சியுலர் அலுவல்கள் (பணிப்பாளர் நாயகம்)
பொது நிர்வாகம்(பணிப்பாளர் நாயகம்)
நிதி (பிரதம கணக்காளர்)
உள்ளகக் கணக்காய்வு (பிரதானி)

வெளிநாட்டுத்தமிழ்வம்சா வளர்ச்சிக் கழகத்தின் தலைமைச் செயலகம் (1 ஜூலை 2039 @ திருநெல்வேலி)
வெளிநாட்டு அலுவலர் மாநாடு
ஆராய்ச்சி மாநாடு
செயலர்
@ராஜேந்த் செயலர்
மேலதிக செயலர் / @தொழில் நுட்பவியல் வளர்ச்சி
மேலதிக செயலர் / பொருளாதார ஆலோசகர்
மேலதிக செயலர் / @வெளிநாட்டு அலுவலர், மாநாடுகள் ஒருங்கிணைப்பு
மேலதிக செயலர் / நிர்வாகம்
இணைச் செயலர் / நிதி
துணைச் செயலர் / @ஆராய்ச்சி மற்றும் புள்ளியியல்
துணைச் செயலர் / @தொழில் நுட்பவியல்
துணைச் செயலர் / @வெளிநாட்டு அலுவலர்
துணைச் செயலர் / @மாநாடுகள்
துணைச் செயலர் / @நிர்வாகம்
வெளிநாட்டுத்தமிழர் நலன் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர

ஆபிரிக்க விவகாரங்களுக்கான பிரிவு

பிரிவின் செயற்பாடுகள்

1. ஆபிரிக்காவுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகளை ஒருங்கிணைத்தல்.

2. மேன்மை தங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி, கௌரவ வெளிநாட்டமைச்சர் மற்றும் பிற அமைச்சரவை மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் மட்ட அதிகாரிகளுக்கான இருதரப்பு விஜயங்களை ஒருங்கிணைத்தல் உட்பட, உயர்மட்ட விஜயங்கள் மற்றும் வெளிநாட்டு தூதுவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வுகளுக்கான பேச்சுக்குறிப்புக்களையும் நாடுகளுக்கான சுருக்க உரைகளையும் தயாரித்தல்.

3. அதிமுக்கிய மற்றும் முக்கிய நபர்களின் வெளிநாட்டு, உள்நாட்டு விஜயங்களுக்கான ஒழுங்குகளைச் செய்தல். (விபரங்கள் அந்தந்த தூதரகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன)

4. நிலுவையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளை முன்கூட்டி நிறைவு செய்வதற்கான தொடர் நடவடிக்கைகளை எடுத்தல்.

5. அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளுக்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதலும்.

6. மேன்மைதங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் கௌரவ வெளிநாட்டமைச்சருக்கான அனுதாபச் செய்திகள், தேசிய தினச் செய்திகள், பாராட்டுச் செய்திகள் வாழ்த்துச்செய்திகள் போன்றவற்றைத் தயாரித்தல்

7. கொழும்பிலுள்ள ஆபிரிக்கப் பிராந்தியத்தின் தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள் போன்றவர்களுக்கான உள்ளக கூட்டங்கள் மற்றும் மரியாதை நிமித்தமான சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல்.

8. ஆபிரிக்க பிராந்தியத்திற்கான செயற்றிட்டம், செயற்பாடு, பாதீட்டு அறிக்கைகள் போன்றவற்றைத் தயாரித்தல்.

9. நாளாந்த செயற்பாடுகளின்போது; ஆபிரிக்க பிராந்திய கொழும்பு பிரிவிலிருந்து வெளி நாட்டு தூதரகங்களையும் இலங்கையின் வெளிநாட்டு தூதரங்களை, நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற முகவர்களுடனும் ஒன்றிணைத்தல்.

பிராந்திய பரப்பெல்லை

அ) 54 நாடுகள் – தென்னாபிரிக்கா, அங்கோலா, பொட்ஸ்வானா, எஸ்வதினி, லெசோதோ, மலாவி, மொஸாம்பிக், ஸாம்பியா, சிம்பாப்வே, நமீபியா, டுனீஷியா, அல்ஜீரியா, மொரோக்கோ, எகிப்து, லிபியா, எரித்திரியா, எத்தியோப்பியா, ட்ஜிபோட்டி, தென் சூடான், சூடான் குடியரசு, சோமாலியா, கானா, செனகல், கபோன், கேப் வேர்டெ, சாஓ டோம் மற்றும் பிரின்ஸிபே, மத்திய கோட்டு கினியா, புருண்டி, நைகர், நைஜீரியா, பெனின், போ்கினா ஃபாசோ, கோட்டே டிவொய்ரே, மாலி, லைபீரியா, மொரிஷானியா, சாட், கமரூன், டோகோ, கென்யா, உகண்டா, ருவாண்டா, தன்சானியா, சேஷெல்ஸ், மடகஸ்கார், மொரீஷியஸ்,

கொமொரோஸ், சியர லியோன், கினியா, கினியா பிசோ, கொங்கோ குடியரசு, கொங்கோ ஜனநாயக குடியரசு, மத்திய ஆபிரிக்க குடியரசு.

ஆபிரிக்க கண்டத்திலுள்ள 54 நாடுகளில், இதுவரையில் இலங்கை 44 நாடுகளில் முறைசார்ந்த இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்துள்ளது.

மிகுதி 10 நாடுகளிடம் உறவுகளை ஸ்தாபிப்பதற்கான தொடர் நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

ஆ) ஆபிரிக்க கண்டத்தில் ஆறு வதிவிட இராஜதந்திர தூதரகங்கள் உள்ளன:

- பிரிட்டோரியா, தென்னாபிரிக்காவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம்
- நைரோபி, கென்யாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம்
- அபூஜா, நைஜீரியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம்
- விக்டோரியா, சேஷெல்ஸிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம்
- அடிஸ் அபாபா, எத்தியோப்பியாவிலுள்ள இலங்கைத் தூதரகம்
- கெய்ரோ, எகிப்திலுள்ள இலங்கைத் தூதரகம்

இ) ஆபிரிக்க கண்டத்திலிருந்து நான்கு இராஜதந்திர பிரதிநிதித்துவம் கொழும்பு நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது:

- தென்னாபிரிக்க குடியரசுக்கான உயர் ஸ்தானிகராலயம்
- எகிப்திய அரபுக் குடியரசின் தூதரகம்
- சேஷேல்ஸ் குடியரசின் உயர் ஸ்தானிகராலயம்
- லிபிய நாட்டு தூதரகம்

ஈ) சமகால அங்கீகாரம் :

- **தென்னாபிரிக்கா**விலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் (8) – அங்கோலா, எஸ்வதினி, லெசோதோ, மலாவி, மொஸாம்பிக், நமீபியா, ஸாம்பியா, சிம்பாப்வே
- **எகிப்தி**லுள்ள இலங்கை தூதரகம் (3) –: லிபியா, எரித்திரியா, சூடான் குடியரசு
- **எத்தியோப்பியா**விலுள்ள இலங்கை தூதரகம் (3) – தெற்கு சூடான், சோமாலியா, ட்ஜிபோட்டி
- **நைஜீரியா**விலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் (11) – கோட்டே டிவொய்ரே, காம்பியா*, சியர லியோன், கினியா, கினியா-பிஸெள, டோகோ, பெனின், பேர்கினா ஃபாஸோ, லைபீரியா, மொரிடேனியா, மாலி
- **கென்யா**விலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் (5) – கொங்கோ குடியரசு, கொங்கோ ஜனநாயக குடியரசு, உகண்டா, ருவாண்டா, தன்சானியா

- **சேஷெல்ஸி**லுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் (1) – மடகஸ்கார்

* கம்பியாவுடனான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டமை பற்றிய பதிவுகள் இதுவரையில் இல்லை. ஆனபோதிலும், நைஜீரியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகருக்கான உடன்படிக்கையை கம்பியா வழங்கியுள்ளது.

உ) சமகால அங்கீகாரமற்ற நாடுகள்:

- நைகர்
- மத்திய ஆபிரிக்க குடியரசு
- மத்திய கோட்டு கினியா
- கபொன்
- சாஓ டோம் மற்றும் பிரின்ஸிபே
- புருண்டி
- கமரூன்
- கேப் வேர்டே
- சாட்
- கொமொரொஸ்

ஊ) வதிவில்லா தூதுவர்கள் நியமிக்கப்படவுள்ள நாடுகள் :

- மொரிஷியஸ் (முன்னர் சேஷெல்ஸ்ஸுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)
- கானா (முன்னர் உகாண்டாவுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)
- செனெகல் (முன்னர் உகண்டாவுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)
- பொட்ஸ்வானா (முன்னர் தென்னாபிரிக்காவுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)
- அல்ஜீரியா (முன்னர் எகிப்துடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)
- மொரொக்கோ (முன்னர் எகிப்துடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)
- டுனீசியா (முன்னர் எகிப்துடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது)

ஆபிரிக்க நாடுகளுடனான உறவை மேலும் பலப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களை முன்வைத்து, இலங்கையானது ஏப்ரல் 2014 இலிருந்து, ஆபிரிக்கா அல்லாத நாடு என்ற அங்கீகாரத்தை **ஆபிரிக்க ஒன்றிய**த்திடமிருந்து பெற்றுள்ளது.

எ) கௌரவ தூதரக பிரநிதித்துவம்

இலங்கையானது; மலாவி, மொரிஷியஸ், மடகஸ்கார், மொசாம்பிக், நமீபியா, செனகல், தென்னாபிரிக்கா (டேர்பன் மற்றும் கேப் நகரம்), சூடான், தன்சானியா, டுனீசியா மற்றும் சாம்பியா போன்ற நாடுகளில் கௌரவ தூதரக பிரதிநிதித்துவத்தை வகிக்கிறது.

1. நைஜீரியா

I. இருதரப்பு உறவுகள்

உயர்ஸ்தானிகராலயம் பின்வருவனவற்றை ஏற்பாடு செய்தது:

- மார்ச் 2018 இல் பேராசிரியை மைத்திரீ விக்கிரமசிங்க நைஜீரியாவுக்கு வருகை
- பெப்ரவரி 2018 இல் இளைஞருக்கான ஐ. நா செயலாளர் நாயகத்தின் தூதுவர், செல்வி ஜயத்மா விக்ரமநாயக்கவின் நைஜீரியாவுக்கான விஜயத்தை, யூனிசெஃப் உடன் இணைந்து ஒழுங்குசெய்தமை.
- மார்ச் 2018 இல் இலங்கையின் முன்னாள் கடற்படை அதிகாரி, அபூஜாவிலும் லாகோஸிலும் பயங்கரவாத தடுப்பு பற்றி வழங்கிய ஒரு பொதுவுரை.
- மே, 2018 இல் லாஓஸ் நாட்டில் நடந்த கப்பற்படை மாநாட்டில் ஒரு உயர் நிலை கடற்படை அதிகாரி கலந்துகொண்டமை.
- ஜூன் 2018 நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஹிஸ்புல்லா, ஜவரி கோஸ்ட்டுக்கு விஜயம் செய்தமை.
- கொழும்பிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, மேற்காபிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமுதாயத்திற்கான (ECOWAS) தனது உயர்ஸ்தானிகருக்குச் சான்றளித்தமை. அக்டோபர் 2018 இல் உயர்ஸ்தானிகர் நியமனக்கடிதங்களை வழங்கினார்.

II. பல்தரப்பு உறவுகள்

- இலங்கையும் நைஜீரியாவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், உலக வர்த்தக நிறுவனம் போன்றவையுட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்களில் உறுப்பினர்களாக இருக்கின்றன. சகல நாடுகளினதும் நன்மைகளுக்காக உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பு, சுதந்திரமானதும் நியாயமானதுமான வர்த்தகம் போன்றவற்றில் இந்த இரு நாடுகளும் இணைந்து பணிபுரிகின்றன. மோதல்களிலிருந்து சமாதானத்திற்கான பாதையைக் காட்டுவதற்கான ஐ.நா அமைதிப்படையின் தொழிற்பாடுகளுக்கு இந்த இரு நாடுகளுமே குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளன.

III. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- 2013 இல் ஒவ்வொரு நாடுகளின் தலைநகரங்களிலும் வதிவிட தூதரகங்கள் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இருதரப்பு பொருளாதார உறவுகள் ஸ்திரமாக விரிவடைந்தன. (*ஆனபோதிலும், நைஜீரியாவில் பொருளாதாரம் மோசமடைந்ததையொட்டி 31.12.2017 இலிருந்து, கொழும்பிலிருந்த நைஜீரிய உயர்ஸ்தானிகராலயம் மூடப்பட்டது.*
- இலங்கையின் பெரும்பாலான வர்த்தகங்களிலும் முதலீட்டுத் தனிக்கூட்டங்களிலும் நைஜீரிய வணிகர்கள் பங்குகொள்வதை உயர்ஸ்தானிகராலயம் உறுதிசெய்துள்ளது.

- பெரும் எண்ணிக்கையான வர்த்தக விசாரணைகளை உயர்ஸ்தானிகராலயம் கையாள்கிறது. இதன் காரணமாக, நைஜீரியாவுக்கான தேயிலை, ஆடைகள் மற்றும் ரப்பர் பொருட்களின் ஏற்றுமதி பெருமளவில் அதிகரித்துள்ளன.

IV. கலாச்சார உறவுகள்

- உயர்ஸ்தானிகராயலமானது, நிலுவையிலுள்ள கலாச்சார உடன்படிக்கை தொடர்பான நைஜீரிய அதிகாரிகளின் கண்காணிப்புக்கள் பற்றியதிலான தொடர்நடவடிக்கையை எடுத்து வருகிறது. நைஜீரியாவின் பிரபலமான திரைப்பட தயாரிப்பாளர் ஒருவர், இரு நாட்டு கலைஞர்களும் பங்கேற்கும் ஒரு திரைப்படத்தை இலங்கையில் தயாரிப்பதற்கு உயர்ஸ்தானிகராலயம் உதவியுள்ளது. இத்தயாரிப்பாளர் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

V. தொழிலாளர் நலன்

- நைஜீரியாவில் புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் தொழில்ரீதியாக கட்டுமானத்துறையில் பணிபுரியும் பொறியியலாளர்கள் ஆவர். மற்றவர்கள் பெரும்பாலும் ஹோட்டல் துறையில் இருப்பவர்கள். அவர்கள் உதவி நாடி உயர்ஸ்தானிகராலயத்திற்குச் சென்று உரிய நேரத்தில் தேவைப்படும் உதவிகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

VI. பிற செயற்பாடுகள்

- குடியேற்றத்துக்கான சர்வதேச நிறுவனத்துடன் (IOM) நெருக்கமாக இணைந்து பணிபுரியும் இலங்கை உயர்ஸ்தானிகராலயமானது, மொரிட்டேனியா, பெனின், நைஜீரியா, நைகர் மற்றும் கமரூனில் தவித்து நிற்கும் பெருமளவு சட்டவிரோத இலங்கை குடியேறிகளைத் தாயகத்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இவ்விலங்கையர்கள், சிறப்பான வாழ்க்கையை எதிர்பார்த்து ஐரோப்பா செல்லும் நோக்குடன், தமக்கு வரவேற்புக் கிடைக்காத தேசங்களில் தவித்த நிலையில் விடப்பட்டனர். அத்துடன் சில மீனவர்களும் தாயகம் திரும்புவதற்கான உதவிகளை உயர்ஸ்தானிகராலயம் செய்தது.

2. தென்னாபிரிக்கா

I. இருதரப்பு உறவுகள்

- 11 டிசம்பர் 2018 அன்று, உயர்ஸ்தானிகர் தனது நியமன கடிதத்தை தென்னாபிரிக்க ஜனாதிபதியிடம் வழங்கினார்.

- பிரிட்டோரியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிக அதிகாரிகள், சர்வதேச உறவுகள் மற்றும் கூட்டுறவு திணைக்களத்தின் (Department of International Relations and Cooperation – DIRCO) அதிகாரிகளைப் பலதடவைகள் சந்தித்து, இருதரப்பு உறவுகளை, குறிப்பாக இலங்கை – தென்னாபிரிக்கப் பங்குடைமை மன்றத்தின் ஏழாவது அமர்வினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பற்றிக் கலந்துரையாடினர்.

- விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப அமைச்சின் முன்னாள் செயலாளர், திரு உதய ஆர். செனெவிரத்னவின் பிரிட்டோரிய விஜயத்தின்போது, இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றியதிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனவரி 2018 இல் கைச்சாத்திடப்பட்டது.

- கடந்த சில வருட கால நல்லாட்சி அரசாங்கம் மற்றும் சமரசம் பற்றியதில் இலங்கையின் முன்னேற்றம் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்காக தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமஃபோஸாவினால் வழங்கப்பட்ட மதிய உணவு உட்பட, தென்னாபிரிக்க அதிகாரிகளால் ஒழுங்குசெய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகளில் உயர் ஸ்தானிகர் கலந்துகொண்டார்.

பிரிட்டோரியாவிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட நாடுகள்

உயர்ஸ்தானிகர் பின்வரும் நிகழ்வுகளில் கலந்துகொண்டார்:

- 12 மார்ச் 2018 இல் பொட்ஸ்வானா ஜனாதிபதியின் வருடாந்த இராஜதந்திர தொகுப்புரையின்போது.

- மேன்மைதங்கிய மொசாம்பிக் ஜனாதிபதியினால், இராஜதந்திரக்குழு உறுப்பினர்களுக்கு வாழ்த்து வழங்கும் பாரம்பரிய நிகழ்வின்போது

- நமீபிய ஜனாதிபதியினால், அவரது இல்லத்தில் நடைபெற்ற புதுவருட நிகழ்வின்போது

- 2018 – 2022 தவணைக்கான யுனெஸ்கோவின் 'புலப்படா கலாச்சார பாரம்பரிய குழு' IV இல் இலங்கையின் இருக்கைக்கான ஆதரவைக் கோருவதற்காக உயர்ஸ்தானிகர், **மொசாம்பிக், நமீபியா, மலாவி, எஸ்வதினி அரசு, ஸாம்பியா** மற்றும் **சிம்பாப்வே** நாடுகளின் தூதர்களுடன் கலந்துரையாடினார். இத்தேர்தலில் இலங்கை வென்றது.

II. பல்தரப்பு உறவுகள்

29 ஜூலை 2018 இலிருந்து 5 ஓகஸ்ட் 2018 வரை டேர்பனில் நடைபெற்ற இந்துசமுத்திர எல்லை வலையச் சங்கம் (Indian Ocean Rim Association), CSO மற்றும் IOD இலும் 2018 செப்டெம்பர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற, சமுத்திர மூலவள பொருளாதாரம் பற்றியதிலான IORA பணிக்குழு கூட்டத்திலும் உயர்ஸ்தானிகரகம் பங்குபற்றியது.

III. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- 2018 ஆம் வருடத்திற்கான இருதரப்பு வர்த்தகம், 316.46 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அகும். இதில் இலங்கையிலிருந்தான ஏற்றுமதி 60.68 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 2018 இல் தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப்பயணிகள் தொகை 7416 என்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- SAITEX, GTS, COMPLAST 2018 மற்றும் Eid shopping festival போன்ற சர்வதேச வர்த்தக சந்தைகளில் இலங்கை கலந்துகொள்ளும் ஏற்பாடுகளைச் செய்தது.

- 'Synergy Travel Pvt Ltd' மற்றும் 'Manta Travel Services' போன்ற பயண முகவர்களுடன் இணைந்து உயர்ஸ்தானிகராலயம் உல்லாசப்பயண ஊக்குவிப்பு பிரசாரத்தை ஒழுங்குபடுத்தியது.

- தென்னாபிரிக்க உல்லாசப்பயண திணைக்களத்தினால், 'சிறந்த உல்லாசப்பயண பயிற்சிகள் பற்றிய பயிற்சிப் பட்டறை' யில் இலங்கையின் பங்களிப்பு ஒருங்கிணைக்கப்பட்டது.

- இலங்கையுடனான வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான பல்வேறு கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் ஜொஹனேர்ஸ்பேர்க் வர்த்தகம் மற்றும் தொழிற்றுறைச் சம்மேளனம் மற்றும் பிற வர்த்தக நிறுவனங்கள், வணிகச் சமுதாயங்களுடன் உயர்ஸ்தானிகர் மேற்கொண்டார்.

- 'இலங்கை – தென்னாபிரிக்கா வணிக மன்றம்' ஒழுங்குபடுத்தப்பட்டபோது, ஜொஹனேர்ஸ்பேர்க் வர்த்தகம் மற்றும் தொழிற்றுறைச் சம்மேளனத்தில் B2B வலையமைப்பு அமர்வில் உயர்ஸ்தானிகராலயம் பங்குபற்றியது.

- பொருளாதார இராஜதந்திர செயற்றிட்டத்தின் கீழ், 20 – 22 நவம்பர் 2018 இல் கேப் நகரத்தில் இடம்பெற்ற, சர்வதேச ஆடை, துணி மற்றும் காலணி இறக்குமதி வர்த்தக கண்காட்சியின்போது, ஐந்து இலங்கை ஏற்றுமதியாளர்கள் தமது உற்பத்திப்பொருட்களைக் காட்சிப்படுத்தியபோது உயர்ஸ்தானிகராலயம் பங்குபற்றியது.

- 8 டிசம்பர் 2018 இல் DIRCO வினால் நடாத்தப்பட்ட வருடாந்த இராஜதந்திர வேடிக்கை நிகழ்வில், இலங்கையின் சுற்றுலாப்பயணம் மற்றும் தேயிலையை ஊக்குவிக்கும் தகவல்களையும் காட்சிகளையும் வெளிப்படுத்திய இலங்கை காட்சியரங்கினை உயர்ஸ்தானிகராலயம் ஒழுங்குசெய்தது.

IV. கலாச்சார உறவுகள்

- இலங்கைச் சமுதாயத்தினர் கலந்துகொண்ட இலங்கையின் 70 ஆவது சுதந்திரத்தை உயர்ஸ்தானிகராலயம் கொண்டாடியதுடன் இராஜதந்திர வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது.

    - இந்த வருடம் வெசாக் தினமானது; 29 ஏப்ரல் 2018 அன்று, தென்னாபிரிக்காவில் வசிக்கும் பௌத்தர்களின் பங்களிப்புடன் உயர் ஸ்தானிகராலயத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், பிரித் ஓதுதல், தியானம், தீபம் ஏற்றுதல், வெசாக் கூண்டுகளில் விளக்கேற்றல் மற்றும் பக்திப்பாடல்கள் பாடுதல் போன்றவை இடம்பெற்றன. இதில் தென்னாபிரிக்காவிலுள்ள தாய்லாந்து பிரதான பௌத்த மதகுரு ஒருவரும் கலந்துகொண்டார்.

- ஜொஹனேர்ஸ்பேர்க் தியான நிலையத்தினால் (தாய்லாந்து கோவில்) ஒழுங்குசெய்யப்படும் சமய, கலாச்சார நிகழ்வுகளில் உயர்ஸ்தானிகராலயத்தினர் வழக்கமாக கலந்துகொள்வதனால், இரு நாடுகளுக்கிடையேயான உறவுகள் வலுப்படுத்தப்படுகின்றன.

- தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் கூட்டுறவு திணைக்களத்தினால் – DIRCO (Department of International Relations and Cooperation), ஒழுங்குசெய்யப்பட்ட இராஜதந்திர வர்த்தக சந்தையில் இலங்கை கலாச்சாரம், உணவுகள், புகைப்படங்கள் மற்றும் ஆடைகள் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டன.

- உயர்ஸ்தானிகர், தமிழ் சமுதாயத்தினருக்காக தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் 11 நவம்பர் 2018 அன்று தீபாவளி வரவேற்பு நிகழ்ச்சியொன்றை அளித்தார்.

- வணக்கத்துக்குரிய கிட்சகொல் ்பனோய் அவர்களின் அழைப்பின்பேரில், ஜொஹனேர்ஸ்பேர்க் தியான நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உயர்ஸ்தானிகரும் அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

3. எத்தியோப்பியா

I. இருதரப்பு உறவுகள்

கிழக்கு ஆபிரிக்க பிராந்தியத்தின் ஒரேயொரு பிரதிநிதித்துவமாக விளங்கும் இந்த தூதரகமானது; இப்பிராந்தியத்தில் இலங்கையின் அரசியல், பொருளாதார நலன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, எத்தியோப்பியாவுடனும் உயர்ஸ்தானிகராலயத்தின் சமகால அங்கீகாரத்தைக் கொண்ட நாடுகளுடனும் இணைந்துள்ளது.

அதன்படி, பின்வரும் பிரமுகர்கள்/ முகவர்களுடன் தூதரகம் வெற்றிகரமான சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளது:

- எத்தியோப்பியாவின் வெளிநாட்டு விவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு விவகார இராஜாங்க அமைச்சருடனான வழமையான சந்திப்புக்கள்.

- கருத்துரையாளர், சிந்திப்போர் குழுமம், ஊடகங்கள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி, இலங்கையின் சமூக அரசியல் வளர்ச்சிகளைத் தொகுத்துரைத்தல்.

- 13-17 செப்டெம்பர் 2018 காலப்பகுதியில் எத்தியோப்பியாவுக்கான இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்கவின் பயணத்தின்போது, அவர் பின்வரும் பிரமுகர்கள்/நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்தார்:

  அ. மேன்மைதங்கிய எத்தியோப்பிய ஜனாதிபதி

ஆ. மாண்புமிகு எத்தியோப்பிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்.

இ. எத்தியோப்பிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகள்

ஈ. எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழு

உ. ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவின் இடையேற்புத் தலைவர்

ஊ. யுனெஸ்கோவின் உயர்நிலைசார் இயக்குனர்

எ. எத்தியோப்பிய வர்த்தக சம்மேளனம்

- 55 நாடுகளைக்கொண்டிருக்கும் ஆபிரிக்க பிராந்தியத்தில் (ஐக்கிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் 54) இலங்கையானது 6 நாடுகளில் மட்டுமே பிரதிநிதித்துவங்களைக் கொண்டுள்ள நிலையில், சீராய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் தூதுவர் / ஆபிரிக்க ஒன்றியத்தின் நிரந்தர பிரதிநிதி, ஆபிரிக்க நாடுகளுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகள் தொடர்பாக அடிஸ் அபாபாவிலுள்ள ஆபிரிக்க நாடுகளின் தூதர்களுடன் பல சந்திப்புக்களை நடத்தினார்.

- எத்தியோப்பிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மூலமாக கிடைத்த ஐந்து விண்ணப்பங்களும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

- இந்த வருடத்தில் இலங்கைத்தூதுவர் ஆபிரிக்க தேசிய பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு வழங்கிய நேர்காணல் ஆபிரிக்காவுடனான இலங்கையின் சுற்றுலாத்துறை, வர்த்தகம், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் தொழிற்றிறன் கொண்டோருக்கான வேலைவாய்ப்புகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

அடிஸ் அபாபாவிலுள்ள சமகால அங்கீகாரம் கொண்ட நாடுகள்

- இலங்கை தூதரகம், **ட்ஜிபோட்டி, சோமாலியா, சூடான் குடியரசு** மற்றும் **தெற்கு சூடான்** ஆகியவற்றின் தூதர்களுடன் அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்தியது. (தற்போது சூடான் குடியரசு எகிப்திலுள்ள இலங்கை தூதரகத்தில் சமகால அங்கீகாரத்தைக் கொண்டுள்ளது).

    - ட்ஜிபோட்டிக்கான முதலாவது சமகால அங்கீகாரம் பெற்ற நியமனத்தை, தூதுவர் 5 நவம்பர் 2018 அன்று தனது நியமனக்கடிதத்தை மேன்மை தங்கிய இஸ்மாயில் ஓமார் குவெல்லெயிடம் சமர்ப்பித்தார்.

    - தூதுவர், 5-6 நவம்பர் 2018 காலப்பகுதியில் ட்ஜிபோட்டிக்கான தனது விஜயத்தின்போது, அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு மஹ்மூட் அலி யூசுவ் அவர்களையும் உயர்நிலை சார் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

- 25-28 அக்டோபர் 2018 இல் புருண்டியின் முதலாவது உப ஜனாதிபதியின் இலங்கைக்கான விஜயத்தை தூதரகம் ஒழுங்கிணைத்தது. (இலங்கை தற்சமயம் புருண்டியுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கவில்லை).

II. பல்தரப்பு உறவுகள்

- ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி என்ற வகையில், தூதரகம் அந்த நிறுவனத்தோடு நெருங்கியதும் சுமுகமானதுமான உறவுகளைப் பேணிவருகிறது.

- ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவுடன் பரந்த ஈடுபாடுகளை வைத்திருக்கும் நோக்குடன் இலங்கைத் தூதரகமானது, அந்த நிறுவனத்தின் தலைவர், உப தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களை காலத்துக்குக் காலம் சந்தித்து, இலங்கையின் சமூக அரசியல் விவகாரங்களைத் தொகுத்து வழங்குகின்றது.

- நிறைவேற்று ஆணைக்குழுவின் 32 ஆவது சாதாரண அமர்வின் ஆரம்ப மற்றும் நிறைவு விழாவின்போதும் 2018 ஜனவரியில் ஆபிரிக்க ஒன்றியத்தினால் அடிஸ் அபாபாவில் நடத்தப்பட்ட 30 ஆவது சாதாரண அமர்வின் நிறைவு விழாவிலும் தூதுவர் கலந்துகொண்டு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

- ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவின் அதிகாரம் பெற்ற, ஆபிரிக்க ஒன்றிய உறுப்புரிமையற்ற நாடுகளின் (முறைசாரா குழு) சங்கத்திலும் தூதரகமானது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. வட்டமேசை மாநாடுகள், கருத்தரங்கங்கள், பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றை ஒழுங்குசெய்வதற்கும் தூதரகம் ஆதரவளித்தது..

- **தெற்கு சூடான்** தூதுவர்கள் குழுவுடன் (தெற்கு சூடானுடன் சமகால அங்கீகாரம்பெற்ற தூதுவர்கள் குழு) இணைந்த கூட்டங்கள், பயிற்சிப்பட்டறைகளில் தூதரகம் ஆக்கபூர்வமாக இணைந்துகொண்டது. யுனெஸ்கோவின் ஆதரவுடன், இலங்கைக்கும் ஆபிரிக்க ஒன்றியத்துக்கும் இடையேயான சுற்றுலாத்துறை மற்றும் கலாச்சார கூட்டுறவுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சாத்தியக்கூறை ஆராயும் நோக்குடன் தூதுவர், ஆபிரிக்காவுக்கான யுனெஸ்கோ பணிப்பாளருடன் கலந்துரையாடினார்.

- 23 – 24 ஏப்ரல் 2018 இல் வடக்கு எத்தியோப்பியாவிலுள்ள அத்வாவில் நடைபெற்ற அனைத்து ஆபிரிக்க நாடுகளுக்கான சர்வதேச மாநாட்டில், இலங்கையின் பிரதிநிதியாக இலங்கைத் தூதுவர் கலந்துகொண்டார்.

- **ஆபிரிக்க நாடுகளின் 34 தூதரக தலைவர்கள்**, எத்தியோப்பிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சர்வதேச நிறுவனங்களின் பணிப்பாளர்கள் போன்றோரைச் சந்தித்த தூதுவர், 'புலப்படா கலாச்சார பாரம்பரிய' தேர்தலில் இலங்கையின் பிரதிநிதித்துவத்திற்கான ஆதரவைத் தேடினார். எத்தியோப்பியா உட்பட, பெரும்பாலான

ஆபிரிக்க நாடுகள் இலங்கையின் பிரதிநிதித்துவத்திற்கு ஆதவரவு வழங்கியதால், 122 வாக்குகளுடன், இலங்கை தெரிவுசெய்யப்பட்டது.

- அடிஸ் அபாபாவிலுள்ள ஆபிரிக்க ஒன்றிய தலைமையகத்தில் 3 -7 செப்டெம்பர் 2018 காலகட்டத்தில் நடைபெற்ற உலகளாவிய தபால்துறை ஒன்றியத்தின் அதிவிசேட அவையில் இலங்கையின் தபால்சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் கௌரவ எச்.எம் அப்துல் ஹலீம் அவர்கள் தலைமையிலான குழுவினர் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை தூதரகம் செய்தது.

- ஆபிரிக்க ஒன்றிய ஒப்பந்தங்களுக்கு ஒப்புதலளித்தல் மற்றும் ஒத்திசைவளித்தல் தொடர்பாக 11.05.2018 அன்று அடிஸ் அபாபாவில் நடைபெற்ற, ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்ட மண்டேலா கொள்கை மன்றத்தில் இலங்கைத்தூதரகம் பங்குபற்றியது.

- ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவில் நடைபெற்ற ஆபிரிக்க தின விழாவில், தூதரகம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

III. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

- எத்தியோப்பியாவுடனான இலங்கையின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன், தூதரகமானது எத்தியோப்பியாவிலுள்ள பின்வரும் அதிகாரிகள்/ முகவர்களுடன் அடிக்கடி கூட்டங்களை நடத்தியது:

  அ) ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவின் வர்த்தகம் மற்றும் தொழிற்றுறைகளுக்கான ஆணையாளர்

  ஆ) எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்றதிகாரி மற்றும் உயர் அதிகாரிகள்

  இ) அடிஸ் அபாபா வர்த்தக சம்மேளனம் மற்றும் துறைசார் சங்கம்.

  ஈ) அனைத்து ஆபிரிக்க வர்த்தக சம்மேளனம்

  உ) எத்தியோப்பிய வர்த்தக சம்மேளனம் மற்றும் துறைசார் சங்கம்

  ஊ) ட்ஜிபௌட்டி, சூடான் குடியரசு, தெற்கு சூடான் மற்றும் சோமாலியா நாடுகளின் தூதுவர்கள் மற்றும் வர்த்தக அதிகாரிகள்

  எ) இலங்கைத் தூதர் நவம்பர் 2018 இல் ட்ஜிபோட்டிக்கான தனது விஜயத்தின்போது, இலங்கையின் வர்த்தகச் செயற்பாடுகளை விரிவாக்கும் நோக்குடன், ட்ஜிபோட்டியின் வர்த்தக சம்மேளனத் தலைவரைச் சந்தித்துப்பேசினார்.

- இராஜாங்க அமைச்சர், கௌரவ வி சேனநாயக்காவின் விஜயத்தின்போது, இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் பற்றியதான தகவல்களைப்

பரிமாறிக்கொள்ளும் பொருட்டு, இலங்கைத் தூதரகமானது, எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழு மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் உயர் நிலை அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றை ஒழுங்குசெய்திருந்தது.

- எத்தியோப்பியாவில் ஒப்பனை மற்றும் வாசனைத் திரவியங்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலையை அமைக்கும் நோக்குடன், 'ஒகாபோ குளோபல் பெர்ஃப்யூமரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்' மற்றும் இலங்கையின் 'கே.எம்.பி டெக்ஸ்டைல் கொன்சல்டன்ட் மனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிட்டெட்' மற்றும் அடிஸ் அபாபாவிலுள்ள 'அலீடா லான்ட் குரூப்' இற்கும் இடையே இணைந்த வணிக முயற்சிக்கான ஒப்பந்தமொன்று, 2 ஜூலை 2018 அன்று தூதுவரின் ஆதரவுடன் கைச்சாத்திடப்பட்டது.

- எத்தியோப்பியாவுக்கு விஜயம் செய்த பின்வரும் வணிக குழுக்களுடன் தூதரகம் வெற்றிகரமான சந்திப்புக்களை மேற்கொண்டது:

  அ) ஒறேஞ்ச் எலெக்ரிகல்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
  ஆ) சியரா கொன்ஸ்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
  இ) ஒகபு குளோபல் பெர்ஃப்யூமரீஸ் பிரைவேட் லிமிட்டெட்
  ஈ) இன்ஃபோர்மட்டிக்ஸ் கொம்ப்யூட்டர் சொலூஷன்ஸ்
  உ) வில்கின்ஸ் ஸ்ரீலங்கா கொம்பனி லிமிட்டெட்
  ஊ) ஸ்மார்ட் ஷேர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
  எ) எஸ் அன்ட் டி கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
  ஏ) எக்கோனோ பாக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
  ஐ) கே எம் பி டெக்ஸ்டைல்ஸ் மனேஜ்மென்ட் கொன்சல்டன்ட்ஸ்
  ஒ) 20 கியூப் லொஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்
  ஓ) மிராஜ் இண்டர்நாஷனல் பிரைவேட் லிமிட்டெட்

- மின்சார தொகுதிகள் உற்பத்தியாளரான 'வெனோரா லங்கா பவர் பனர் (பிரைவேட்) லிமிட்டெட், இலங்கை தூதரகத்தின் உதவியுடன், 5 அக்டோபர் 2018 அன்று தமது உற்பத்திப்பொருட்களை எத்தியோப்பியாவில் அறிமுகம் செய்தனர்.

- இலங்கையின் பாரிய கட்டுமான நிறுவனங்களான 'சங்கின் ஓவர்சீஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 'சோ எஞ்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட், 'வீ பவர் (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் 'ஈ.எல்.எஸ் கொன்ஸ்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டெட் ஆகியவற்றின் பிரதிநிதிகள் 1 நவம்பர் 2018 தூதரக வளவில் தமது வணிக ஊக்குவிப்பு இலக்கினை மேற்கொண்டனர்.

IV. கலாச்சார உறவுகள்

- இலங்கைத்தூதரகத்தின் வழிகாட்டலின் பேரில், எத்தியோப்பியாவில் வசிக்கும் இலங்கையர்கள் தமிழ்-சிங்கள புத்தாண்டை கொண்டாடும் வண்ணம் ஏப்ரல் 2018 இல் எத்தியோப்பியாவின் 'ஹவஸா தொழில் பூங்கா' வில் ஒரு நிகழ்வை நடத்தினர்.

V. தொழிலாளர் நலன்

- தற்சமயம் எத்தியோப்பியாவில் 500 இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். எத்தியோப்பியாவிலுள்ள இலங்கையர்களின் நலன்களை மேம்படுத்துவதுடன் அவர்களின் பிற பிரச்சனைகள் தொடர்பிலும் எத்தியோப்பிய முதலீட்டு ஆணைக்குழுவுடனும் பிற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தூதரகம் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

- குடியேறியோருக்கான சர்வதேச நிறுவனத்தினதும் (IOM), போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினதும் உதவியுடன், 31.05.2018 இல் சோமாலியாவில் கட்டாயத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 12 இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் தாயகம் அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

- 2014 இலிருந்து எத்தியோப்பியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு (04) இலங்கையர்கள் மார்ச் 2018 இல் விடுவிக்கப்பட்டதுடன், அதில் இருவர் 15.03.2018 அன்று தாயகம் அனுப்பிவைக்கப்பட்டனர். மற்றைய இருவரும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், எத்தியோப்பியாவின் உச்ச நீதிமன்றத்திலுள்ள இந்த வழக்கை விரைவில் தீர்த்துவைப்பதற்காக தூதரகம் சட்ட அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றது.

- ஆகஸ்ட் 2018 இல், புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்கள் குடியிருப்போர் அல்லாத வெளிநாட்டு நாணய வங்கி கணக்குகளைத் திறப்பதற்கு தூதரகம் உதவி செய்தது.

4. கென்யா

I. இருதரப்பு உறவுகள்

- கென்ய அதிகாரிகளுடன் இலங்கைக்கும் கென்யாவுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

- இலங்கையிலிருந்தான பின்வரும் உயர்மட்ட விஜயங்களை உயர்ஸ்தானிகராலயம் ஒழுங்கிணைத்தது:

    - கௌரவ வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கென்யாவுக்கு விஜயம் (24-28 ஜூன்)

      கௌரவ அமைச்சர்; சுற்றாடல் செயற்றிட்டங்களில் கூட்டுறவு பற்றியதில் கென்ய வெளிநாட்டலுவல்கள் அமைச்சரவைச் செயலாளர் டாக்டர். மொனிக்கா ஜூமா மற்றும் வனவியல் வேளாண்மை நிறுவனமான 'டோனி சிம்ஸன்' நிறுவனத்தின் பொது இயக்குனரையும் சந்தித்தார்.

- நைரோபியில் 11-13 ஜூலையில் சோமாலிய கடற்கொள்ளையர் பற்றியதிலான தொடர்புக்குழுவின் 21 ஆவது முழு அமர்வுக்கான இலங்கைப் பிரதிநிதித்துவம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர், கௌரவ சுஜீவ சேனசிங்க தலைமையில் பிரதிநிதிகள் குழுவொன்று கென்யாவுக்கு விஜயம் செய்தது (3-10 ஆகஸ்ட்).

- கௌரவ வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ருவாண்டாவுக்கு விஜயம் செய்தார் (21-25 அக்டோபர்).

- கென்யாவில் ஒழுங்குசெய்யப்பட்ட சமுத்திர பொருளாதார மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் பங்குபற்றினர் (26-28 நவம்பர்).

- கென்யாவில் இடம்பெற்ற விமான சேவைகள் பேச்சுவார்த்தையில் இலங்கைப் பிரதிநிதிகள் பங்குபற்றினர் (10-14 டிசம்பர்).

- இலங்கை ஜனாதிபதி புலமைப்பரிசில் பற்றி இருதரப்பு கலந்துரையாடல்களிலும் பொது மன்றங்களிலும் கொடுக்கப்பட்ட பரந்தளவிலான விளம்பரங்களின் விளைவாக, ஆறு கென்ய மாணவர்கள் இலங்கையில் கற்கை நெறிகளைப் பயில்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

- இலங்கையில் இடம்பெற்ற இந்துசமுத்திர வலைய நாடுகளின் கடல் பாதுகாப்பு செயற்குழு மாநாடு (4-5 செப்டெம்பர்), மற்றும் 'இந்துசமுத்திரம்: எமது எதிர்காலத்தை வரையறுக்கும்' பற்றிய மாநாடு (11-12 அக்டோபர்), என்பவற்றில் கென்யா அதிகாரிகளின் பங்களிப்பினைத் தூதரகம் உறுதி செய்தது.

நைரோபியில் சமகால அங்கீகாரமுள்ள நாடுகள்

- கௌரவ வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் உகண்டாவுக்கான விஜயத்தை உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்தது (20-24 ஜூன்)

  கௌரவ வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தனது உகண்டாவுக்கான விஜயத்தின்போது, மரியாதை நிமித்தமாக உகண்டா ஜனாதிபதி, மாண்புமிகு யெளரி ககுதா முசெவேனி, பிரதம மந்திரி, மாண்புமிகு டாக்டர்.ருஹகனா ருகுண்டா, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஒகெல்லோ ஓர்யெம் மற்றும் உள்நாட்டு மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சர் தளபதி ஒடொங்கோ போன்றோரைச் சந்தித்து பாதுகாப்பு கூட்டுறவு, வர்த்தகம் மற்றும் முதலீடு பற்றி கலந்துரையாடினார்.

- பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவான் விஜேவர்த்தனவின் ருவாண்டாவுக்கான விஜயத்தை (14-18மே) உயர்ஸ்தானிகராலயம்

ஒருங்கிணைத்தது. *(இவ்விஜயத்தின்போது, இலங்கைக்கும் ருவாண்டாவுக்கும் இடையிலான பாதுகாப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது).*

- இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு வீசா விலக்குரிமை வழங்குவது பற்றியதிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் **தன்சானியா, உகண்டா** மற்றும் **ருவாண்டா** ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திடப்படுவதை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

- இலங்கை வர்த்தக சம்மேளனத்திற்கும் ருவாண்டாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவது ஏற்பாடு செய்யப்பட்டது.

- இலங்கையின் பாதுகாப்புச்சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரியின் 15 உறுப்பினர்கள் **ருவாண்டா**வுக்கான ஆய்வுச்சுற்றுலா ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டை தூதரகம் செய்தது. இரண்டு ருவாண்டா அதிகாரிகள் சேர் ஜோன் கொத்தலாவல இராணுவப்பயிற்சி செயற்றிட்டத்திலும் ஒருவர் கட்டளை மற்றும் பதவிநிலை கற்கை நெறியிலும் சேர்க்கப்பட்டனர்.

- தூதரகத்தின் ஏற்பாட்டின்படி, ருவாண்டா பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, கொழும்பில் நடந்த பாதுகாப்பு மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

- இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஆலோசனையுடன், **தன்சானியா**வுக்கான கௌரவ தூதரின் நியமனத்திற்கான ஏற்பாட்டை தூதரகம் மேற்கொண்டது.

- இலங்கையர்கள் விடயத்தில் தொடரும் வீசா பிரச்சனைகள் சம்பந்தமாக, உயர்ஸ்தானிகராலயம் தன்சானியா உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

- உகண்டா மற்றும் ருவாண்டா உயர்ஸ்தானிகர்களுடன் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துவதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

II. பல்தரப்பு உறவுகள்

- புலப்படா கலாச்சார பாரம்பரிய தேர்தலில் (Intangible Cultural Heritage – ICH 2018 – 2022) இலங்கையின் வேட்பாளரை நிறுத்துவதற்கு கென்யா மற்றும் கொங்கோ ஜனநாயக குடியரசின் ஆதரவை உயர்ஸ்தானிகராலயம் உறுதிப்படுத்தியது.

- கென்யாவில் இடம்பெற்ற. கடல்சார் குப்பைகள் மற்றும் மைக்ரோபிளாஸ்டிக் பற்றிய தற்காலிகமானதும் வரையறைகள் அற்றதுமான விற்பன்னர்கள் குழுவில் அதிகாரிகள் பங்குகொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

- இலங்கைத் தூதரகம் 35 ஐக்கிய நாடுகள் சுற்றாடல் பாதுகாப்பு கூட்டங்களிலும் (UNEP) 51 ஐக்கிய நாடுகள் வாழ்விட கூட்டங்களிலும் பங்குபற்றி, அதன் மையக்கருத்துக்களை இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்தனர்.

III. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

உயர்ஸ்தானிகராலயம் பொருளாதாரம் சம்பந்தமான பின்வரும் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தது:

- கென்யாவின் அரசாங்க மற்றும் தனியார்துறை அதிகாரிகள், இலங்கை தோற்பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு விஜயம் செய்வதற்கான வட்டமேசை மற்றும் இருதரப்பு வணிக கூட்டங்கள். (21-24 மார்ச்).

- இராஜதந்திர குழுவினர் மற்றும் விருந்தினர்களுக்கான தொண்டு நிகழ்வில் இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பு பிரசாரம் (23 ஜூலை).

- நைரோபியிலுள்ள இலங்கை வணிகங்களுக்கிடையே ஒரு வணிக வலையமைப்பு அமர்வு (7 ஜூலை)

- நிதிசார் சந்தைக் குழுமங்கள் மற்றும் சிறு இயந்திர பொறியியல் துறைகள் பற்றியதில், சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சரின் தலைமையிலான ஏற்றுமதி அபிவிருத்திச் சபை / தனியார் துறை பிரதிநிதிகளுக்கான இருதரப்பு வணிக கூட்டங்களும் இருதரப்புக் கூட்டங்களும் **கென்யா**வில் ஒழுங்குசெய்யப்பட்டன. (3-10 செப்டெம்பர்).

IV. கலாச்சார உறவுகள்

2018 இல் பின்வரும் கலாச்சார நிகழ்வுகளில் உயர்ஸ்தானிகராலயம் ஈடுபட்டது:

- ரியாரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற, பல்கலைக்கழகங்களுக்கிடையிலான முதலாவது வருடாந்த 'புதுமை உருவாக்க ஆர்வலர்க' ளுக்கான தேர்வுக்குழு உறுப்பினராக அழைக்கப்பட்டமை (22 பெப்ரவரி)

- ஆசிய இராஜதந்திர வாழ்க்கைத்துணை சங்கத்தின் அறக்கொடை அங்காடியில் கலந்துகொண்ட தூதரகம், தானமாக வழங்கப்பட்ட பொருட்களை கென்யாவிலுள்ள குறிப்பிட்ட சில அறக்கொடைகளுக்கு வழங்கியது (23 ஏப்ரல்)

- இலங்கை புதுவருட கொண்டாட்டங்களுக்கு இணை அனுசரணை (29 ஏப்ரல்)

- பௌத்த விகாரையில் நடைபெற்ற சமூக வெசாக் தினத்தில் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன (20 மே).

- ஐக்கிய நாடுகள் வெசாக் தின கொண்டாட்டத்தை தூதரகம் ஏற்பாடு செய்தது (21 மே)

- கென்யாவின் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மத்தியில் இலங்கையை ஒரு திரைப்பட பயண இலக்காக வளர்ச்சி ஊக்கமளித்தல். (மே)

- தூதரகம் தனது இணைய தளத்தை ஆரம்பித்தது. wwwslhc.nairobi.org (4 செப்டெம்பர்)

- கென்யாவின் வெளிநாட்டு அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆசியா பசுபிக் BBAQ விழாவில் இலங்கை தேயிலை பற்றியதான தகவல் மற்றும் கண்காட்சிக் கூண்டு வைக்கப்பட்டது. (22 செப்டெம்பர்).

- ஆசிய நிரந்தர பெண் துணைப் பிரதிநிதிகளுக்கான இலங்கை இரவு/கலாச்சார இரவு நடத்தப்பட்டது (29 செப்டெம்பர்).

- முதன்முதலாக கென்யாவிலுள்ள இலங்கைச் சமூகத்தினரின் பங்களிப்புடன் தீபாவளி கொண்டாடப்பட்டது (11 நவம்பர்).

- முதல் தடவையாக ஒரு சமுதாய கிறிஸ்துமஸ் நிக்ழ்ச்சி நடத்தப்பட்டு, 'மொக்ரா' சிறுவர் இல்லத்திற்கு உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் தானமாக வழங்கப்பட்டன. (1 டிசம்பர்).

- இராஜதந்திர தூதர்களின் மனைவிமார்களுக்காக இலங்கை உணவுகள் பற்றிய செயல்முறை விளக்கம் ஒன்று, உயர்ஸ்தானிகரின் மனைவியால் ஏற்பாடு செய்யப்பட்டது.

5. எகிப்து

I. இருதரப்பு உறவுகள்:

எகிப்து தூதரகம் பின்வரும் விஜயங்களை ஏற்பாடு செய்தது:

- சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான, 11 பாராளுமன்ற உறுப்பினர்களும் 03 அதிகாரிகளும் ஜூலை 2018 இல் எகிப்துக்கு விஜயம் செய்தனர்.

  இப்பிரதிநிதிகள் குழுவானது, எகிப்தின் பிரதம மந்திரி, சபாநாயகர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர், விவாசாய மற்றும் காணிகள் அமைச்சர் போன்றோரைச் சந்தித்தனர். அத்துடன் இக்குழுவினர், மரியாதை நிமித்தமாக, கிழக்காசிய மரபுவழித் திருச்சபையின் போப் அவர்களையும் அல் அஸார் பல்கலைக்கழகத்தின் பிரதி இமாமையும் சந்தித்தனர்.

- இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான தெற்கு – தெற்கு கூட்டுறவு திட்டத்தின் கீழ், விவசாய அமைச்சிலுள்ள பத்து (10) அதிகாரிகள், எகிப்தின் விவசாயத்திற்கான சர்வதேச நிலையம் வழங்கிய 3 மாத பயிற்சி செயற்றிட்டத்தில் கலந்துகொண்டனர்.

- அக்டோபரில் இடம்பெற்ற கொள்கை மற்றும் பயிற்சிக்கிடையிலான ஃபத்வாவை புதுப்பித்தல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சர், கௌரவ ஏ.எச்.எம். ஃபௌசி மற்றும் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர், கௌரவ எம்.எச்.ஆ ஹலீம் ஆகியோர் கலந்துகொண்டனர். அதைத்தொடர்ந்து அல் அஸார் பல்கலைக்கழகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

- 3-6 அக்டோபர், 2018 இல் கெய்ரோவிலுள்ள ஷார்ம் எல் ஷேக்கில் எகிப்து குடியரசின் ஜனாதிபதி மேன்மைதங்கிய திரு அப்துல் ஃபடா எல் சிசி அவர்களால் அளிக்கப்பட்ட உலக இளைஞர் மன்றத்தில் இலங்கைத் தூதரகத்தினர் பங்குபற்றினர்.

  எகிப்திலிருந்து இலங்கைக்கான பின்வரும் விஜயங்களை இலங்கைத்தூதரகம் ஒருங்கிணைத்தது:

- எகிப்திய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட ஆறு (06) இளைஞர்களை உள்ளடக்கிய எகிப்திய இளைஞர் பிரதிநிதிகள் குழுவொன்று, மார்ச் 2018 இல் குருனாகலிலுள்ள நிக்கவெரெட்டியாவில் நடைபெற்ற 'யொவுன்புர இளைஞர் விழா' வில் கலந்துகொண்டது.

- அக்டோபர் 2018 இல் கொழும்பில் இடம்பெற்ற இலங்கை வெளிநாட்டுக்கொள்கை மற்றும் பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சித்திட்டத்தில் எகிப்திய வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் கலந்துகொண்டார்.

கெய்ரோவில் சமகால அங்கீகாரமுள்ள நாடுகள்

- சூடான் குடியரசின் ஜனாதிபதி, மேன்மைதங்கிய ஒமார் ஹஸன் அஹ்மட் அல் பஷீர் அவர்களிடன், கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதர் தன் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

இலங்கைத்தூதர் தனது சூடான் விஜயத்தின்போது, அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்துப் பேசி, அவர்களின் கொன்சியுலர் பிரச்சனைகளைக் கேட்டறிந்தார். மேலும், இலங்கைக்கான கௌரவ கொன்சியுலர் திரு சவுத் மமௌன் மொஹமெட் அஹ்மெட் எல் பிரீர் அவர்களையும் சந்தித்தார். அத்துடன், சூடான் குடியரசின் வர்த்தக சம்மேளனத்தின் அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களையும் சந்தித்தார்.

II. பல்தரப்பு உறவுகள்:

- 2018 நவம்பர் 14 இலிருந்து 29 வரை, கெய்ரோவின் ஷார்ம் எல்-ஷேக்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் உயிர் பல்வகைமை மாநாட்டில் இலங்கைத் தூதரகம் கலந்துகொண்டது. மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் அதிகாரி ஒருவரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்.

- 21 அக்டோபர் 2018 இல் ஆசிய தூதுவர்கள் குழுவின் மாதாந்தக் கூட்டத்தை தூதுவர் வழங்கினார்.

III. பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்:

- இலங்கைத் தூதரகம் கலந்துகொண்ட 51 ஆவது 'கெய்ரோ சந்தை' யில், அதன் ஏற்பாட்டாளர்களால் இலங்கையின் விற்பனைக் காட்சியரங்கங்களை இலவசமாக கண்காட்சிக்கென வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

- வணிக ஊக்கப்படுத்தல் நோக்கங்களுக்காக தூதரகத்தின் ஏற்பாட்டின் பேரில், 'டி.எஸ்.ஐ குழும கம்பனிகளின் பிரதிநிதிகள் குழுவொன்று கெய்ரோவுக்கு விஜயம் செய்தது.

- இலங்கைத் தேயிலை ஊக்குவிப்பின் அங்கமாக 'அஸ்டா பஸாரி' ல் அன்பளிப்பாக தேநீர் வழங்கப்பட்டது. 'டில்மா' வினால் கொடையளிக்கப்பட்ட தேயிலையுடன் கையால் நெய்யப்பட்ட நூல் இழைகளும் 'அஸ்டா பஸாரி' ல் விற்பனை செய்யப்பட்டன.

- 2018 டிசம்பர் 8 இலிருந்து 10 வரை கெய்ரோவில் இடம்பெற்ற ஆபிரிக்க உணவுக் கண்காட்சியில், 'ஸ்டாஸென்' தனியார் ஏற்றுமதிக் கம்பனி பங்கெடுப்பதற்குத் தூதரகம் ஏற்பாடு செய்தது.

- எகிப்திலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வருவோர் எண்ணிக்கையானது, 2017 இல் 2981 ஆகவிருந்து, 2018 இல் 3854 ஆக அதிகரித்தது. (இது 27.8% அதிகரிப்பாகும்). எகிப்திலுள்ள பிரித்தானிய பல்கலைக்கழகத்தின் '்பேரோனிக் விலேஜ்' இல் இலங்கை தூதரகத்தினால் சுற்றுலா ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

- இலங்கையர்கள் எகிப்துக்கு பயணம் செய்வதை, குறிப்பாக நைல் நதியில் உல்லாச கப்பல் பயணம் மற்றும் எகிப்தின் தொல்பொருள் இடங்களைப் பார்வையிடுதல் போன்றவற்றை ஊக்கப்படுத்தும் பல இலங்கைப் பயண முகவர்களுக்கான உதவிகளைத் தூதரகம் செய்துகொடுத்தது.

IV. கலாச்சார உறவுகள்:

எகிப்திலுள்ள இலங்கையர்களின் பங்களிப்புடன் தூதரகத்தினால் பின்வரும் நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டன:

- பாரம்பரிய தமிழ் இந்து அலங்காரங்கள் மற்றும் சடங்குகளுடன் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டது.

- இலங்கைத் தேசிய தினமானது, எகிப்திலுள்ள இலங்கையர்களின் பங்களிப்புடன் கொண்டாடப்பட்டது. அதன்பின் தூதுவரால் மதியபோசனம் வழங்கப்பட்டது. கெய்ரோவின் 'நாஷனல் ஒபரா ஹவுஸ்' இல் கலாச்சார நிகழ்ச்சியும் ஷெரட்டன்

ஹோட்டலில் இராஜதந்திரிகள், அரசாங்க பிரதிநிதிகள் மற்றும் வணிக சமுதாயத்தினர் கலந்துகொண்ட தேசிய தின கொண்டாட்டங்களும் இடம்பெற்றன.

- தேசியதினக் கொண்டாட்டத்தின்போது, இலங்கை இராணுவத்தினரின் கலாச்சாரக் குழுவின் நிகழ்ச்சி ஒன்றை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.
- பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் போட்டிகளுடன் இலங்கையர்களின் பங்களிப்புடன் புதுவருட கொண்டாட்டங்களை தூதரகம் ஒழுங்குசெய்திருந்தது.
- இலங்கையர்களுடன் பிற பௌத்த நாடுகளின் இராஜதந்திரிகளும் கலந்துகொண்ட வெசாக் நிகழ்வு தூதரகத்தினால் கொண்டாடப்பட்டது.
- இலங்கையிலுள்ள ஷியா மற்றும் சன்னி முஸ்லிம் சமூகத்தினர் கலந்துகொண்ட இ◌ஃப்தார் நிகழ்வு தூதரகத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கையிலிருந்து ஒரு சமய தலைவரும் எகிப்திலிருந்து ஒரு சமய தலைவரும் கலந்துகொள்ள, இணைந்த சமய வழிபாடுகள் இடம்பெற்றன.
- நாட்டுப்புற நடனம் மற்றும் கலைகளுக்கான 'டமனூர்' விழாவில் தேசிய இளைஞர் சேவைகள் சபையின் கலாச்சார குழு கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டை தூதரகம் செய்திருந்தது. இக்குழு கெய்ரோவில் நடைபெற்ற 'முரசு மற்றும் பாரம்பரிய கலை' களுக்கான தேசிய விழாவிலும் கலந்துகொண்டது.
- இஸ்மைலியா சர்வதேச கலாச்சார மற்றும் கலைகளுக்கான விழாவின் 19 ஆவது சுற்றில் அரச இசை, நடனக் குழுவின் பங்களிப்பினை தூதரகம் ஒழுங்குசெய்தது.
- இலங்கையின் மடிதுர் ரசூல் குழுவானது, எகிப்தின் 'சர்வதேச சூ◌ஃபி இசை மற்றும் சமய விழாவான 'சமா' வின் 11 ஆவது சுற்றில் கலந்துகொண்டது.
- இலங்கையர்களின் பங்களிப்புடன், தூதரகத்தில் கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.

V. தொழிலாளர் நலன்

- எகிப்தில் சில நூறு இலங்கையர்களே தொழில் புரிந்து வருகிறார்கள். எகிப்திய நாணயத்தின் பணமதிப்பு வீழ்ச்சியால், உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கான வாய்ப்புக்கள் குறைந்தன. தகுதிச்சான்றிதழ் உள்ள ஆடைத் தொழிலாளர்களுக்கான கேள்வி இருக்கின்றது. இலங்கையின் துணி மற்றும் ஆடை நிறுவனமானது, ஆடைத்தொழிலாளர்களின் வேலைத்தகுதியை அத்தாட்சிப்படுத்தும் திட்டத்தை அறிமுகம் செய்வதன் மூலம், ஆடைத்தொழிலாளர்கள் எகிப்தில் நல்ல சம்பளத்துடன் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்யமுடியும். வீசா இல்லாமல் எகிப்தில் தங்கியிருக்கும் தொழிலாளர்கள், தூதரக அலுவல்களுக்கான செலவுகளைத் தவிர, எந்த தண்டனையுமின்றி நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தூதரகம் உதவியது.

6. சேஷெல்ஸ்

I. இருதரப்பு உறவுகள்

- இலங்கை மற்றும் சேஷெல்ஸுக்கு இடையேயான முப்பது வருடகால இராஜதந்திர உறவுகளை நினைவுகூரும் வண்ணம், மேன்மைதங்கிய ஜனாதிபதி, அக்டோபர் 2018 இல் சேஷெல்ஸுக்கு விஜயம் செய்தமையானது, சேஷெல்ஸ் தலைநகரம் விக்டோரியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

  இந்த இராஜாங்க விஜயத்தின்போது, பின்வரும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன:

  - *இலங்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கும் சேஷெல்ஸ் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை.*

  - *இலங்கை மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கும் சேஷெல்ஸ் பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை.*

- இலங்கை - சேஷெல்ஸ் ஜனாதிபதிகளுக்கிடையேயான இருதரப்புச் சந்திப்பில் இணங்கியவாறு, சேஷெல்ஸ் அரசாங்கத்திற்கு இரண்டு 'வேவ் ரைடர்' கரையோர ரோந்துப் படகுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (*ரோந்துப் படகுகள் 1 பெப்ரவரி 2019 அன்று, மேன்மைதங்கிய சேஷெல்ஸ் துணை ஜனாதிபதி வின்சென்ட் மெரிட்டனிடம் கையளிக்கப்பட்டன.).*

- மடகஸ்கார் மற்றும் மொரிஷியஸ் குடியரசுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய கௌரவ தூதர்களின் நியமனங்களை உயர்ஸ்தானிகராலயம் ஒருங்கிணைத்தது.

II. பல்தரப்பு உறவுகள்

உயர்ஸ்தானிகராலயம்:

- சோமாலிய கடற்பரப்பில் கடற்கொள்ளையர்களைத் தடுக்கும் நடவடிக்கை தொடர்பில் கொழும்பில் தொடர்புக்குழுச் செயலகம் (Contact Group on the Piracy off Coast of Somalia – CGPCS) ஒன்றை நிறுவுவதை ஒருங்கிணைத்தது.

- இந்து சமுத்திரத்தின் மேற்குப் பிராந்தியத்திலுள்ள ஆபிரிக்க நாடுகளுனான இலங்கையின் நெருக்கத்தை உறுதிப்படுத்தி, உலக மன்றங்களின் ஆதரவை உறுதிப்படுத்தும் CGPCS மற்றும் IOC இன் கூட்ட அமர்வுகளில் கலந்துகொண்டது.

- 'இந்து சமுத்திர ஆணைக்குழு' (Indian Ocean Commission – IOC) வில், பார்வையாளர் உறுப்பினர் உரிமையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொண்டது.

- சேஷெல்சில் இடம்பெற்ற, சமுத்திர பொருளாதார மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

- விவசாய கூட்டுறவு பற்றியதிலான ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வதற்காக விவசாயத்துறைப் பிரதிநிதிகள் குழுவொன்று அக்டோபரில் சேஷெல்ஸுக்கு விஜயம் செய்தது.

III. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்திற்கு இணைவாக, 3 ்பெப்ரவரி 2018 அன்று 'கோரல் ஸ்றாண்ட்' ஹோட்டலில் இடம்பெற்ற இலங்கை உணவுத்திருவிழாவை உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்தது.

- ஜூன் 2018 இல் விக்டோரியாவில், 'லங்கா ஹொஸ்பிடல்ஸ் லிமிட்டெட்' இன் கிளை திறந்துவைக்கப்பட்டது. (*இது, மேன்மைதங்கிய ஜனாதிபதியின் சேஷெல்ஸ் விஜயத்தின்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது).*

- இலங்கையின் விவசாய நிபுணர்களால் சேஷெல்ஸில் ஒரு 'தானியங்கி பசுமை இல்லம்' அமைக்கப்பட்டது.

- சேஷெல்ஸ் விவசாயிகள் அடங்கிய சிறு குழுவொன்று இலங்கைக்கு கல்விச்சுற்றுலா மேற்கொண்டது.

- இலங்கை தொழில் முனைவோரால் பசுமை இல்லம் சம்பந்தமாக, குளிர்மையான அறைகளை நிறுவுதல் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பற்ற குப்பை போடும் பைகளை வழங்கும் நடவடிக்கையும் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

- சேஷெல்ஸின் விக்டோரியா நகரிலுள்ள 'மஹே' யில் 'ஆயுர்வேத பங்ஜகர்ம வைத்தியசாலை' ஒன்றை திறந்துவைப்பதற்கான செயற்பாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டன. *முதலாவது தாதிமார் குழுவொன்று ஏற்கனவே சேஷெல்ஸுக்குச் சென்றுள்ளது.*

- சேஷெல்ஸில் வியாபார முயற்சிகளை ஆரம்பிக்கக்கூடிய தொழில்முனைவோருடன் உயர்ஸ்தானிகராலயம் கலந்துரையாடல்களை நடத்தியது.

- உயர்ஸ்தானிகராலயம், இயற்கையான தேங்காய் எண்ணையை ஏற்றுமதி செய்யும் இலங்கை தொழில் முனைவோருடன் பற்றியதில், சேஷெல்ஸ் உப ஜனாதிபதியுடனான கலந்துரையாடல்களை ஒருங்கிணைத்தது.

விக்டோரியாவில் சமகால அங்கீகாரமுள்ள நாடுகள்

- **மடகஸ்கா**ரில் 'சங்கின் ஓவர்சீஸ் (சேஷெல்ஸ்) லிமிட்டெட்' கம்பனியின் துணைக்கம்பனியை திறப்பதற்கு உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்தது.

- **சேஷெல்ஸ், மடகஸ்கார், மொரிஷியஸ்** மற்றும் **கொமொரோஸி**ல் 'களனி கேபில்ஸ் லிமிட்டெட்' டின் துணைக்கம்பனிகளை நிறுவுவதற்கும் உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்தது.

IV. கலாச்சார உறவுகள்

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, உயர்ஸ்தானிகராலயம், பாரம்பரிய இலங்கை நடனம் மற்றும் இசையை முன்னிலைப்படுத்திய ஒரு கலாச்சார நிகழ்வை ஒழுங்குசெய்தது.

- வெசாக், பொசொன் மற்றும் வாப் பூரணை தினங்களில் இலங்கை பௌத்த பிக்குமார் மற்றும் சேஷெல்ஸ் பௌத்த சங்கம் ஒருங்கிணைந்த சமய நிகழ்வுகளும் தியான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

- இலங்கை பௌத்த சங்கத்துடன் இணைந்து, இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பிரித் ஓதும் நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டது.

- உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் கிறிஸ்மஸ் நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

- சேஷெல்ஸில் பௌத்த விகாரையொன்று நிர்மாணிப்பது தொடர்பாக, சேஷெல்ஸ் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளப்பட்டது.

V. தொழிலாளர் நலன்

- சேஷெல்ஸிலுள்ள இலங்கையர்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கை உயர்ஸ்தானிகராலயம், சேஷெல்ஸ் அதிகாரிகளுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறது.

- சேஷெல்ஸில் வேலை செய்வதற்காக இலங்கையர்களை ஆட்சேர்ப்பதற்கு ஒரு முன்னணி மனிதவலுக்கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

- சேஷெல்ஸிலுள்ள இலங்கையர்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர் வழக்குகள் சிலவற்றில் உயர்ஸ்தானிகராலயம் சம்பந்தப்பட்டு, அவர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொண்டது.

- சேஷெல்ஸ் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்ததாகச் சந்தேகத்தின் பேரில் இலங்கைப் படகுகள் (முத்துக்குமாரி மற்றும் சுபபதும்) தடுத்து வைக்கப்பட்ட நிலையில், உயர்ஸ்தானிகராலயம் சம்பந்தப்பட்ட சேஷெல்ஸ் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அப்பிரச்சனையைத் தீர்த்துவைத்தது.

கொன்சியுலர் அலுவல்கள் பிரிவு

அறிமுகம்

1. நுழைவாயிலாக விளங்கும் கொன்சியுலர் அலுவல்கள் பிரிவின் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கொன்சியுலர் செயற்பாடுகள் சட்டத்திற்கு அமைவாக நாட்டிலும், வெளிநாடுகளிலும் வசித்து வரும் இலங்கைப் பிரஜைகளுக்கு அதன் அலுவலகம், பிராந்திய அலுவலகங்கள், இலங்கைத் தூதரகங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள், உதவி தூதரக அலுவலக நாயகம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள கௌரவ உதவி தூதரக அலுவலகங்கள் மற்றும் இலங்கைக்கான அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் துணை அலுவலகங்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு நிறுவனங்கள்/ அதிகார சபைகள் ஊடாக உதவி வழங்கி வருகின்றது.

2. கொழும்பு -01 செலிங்கோ நிறுவனத்தில் அமைந்துள்ள கொன்சியுலர் பிரிவானது ஆவண உறுதிப்படுத்தல் பிரிவு, தாயகத்திற்கு திருப்பி அழைத்துவரும் பிரிவு, இழப்பீடு வழங்கல் பிரிவு, மரணப்பிரிவு மற்றும் நானாவித அலுவல்கள் பிரிவு ஆகிய உபபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

3. கடந்த 2017 ஜனவரி 26 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் முதலாவது பிராந்திய கொன்சியுலர் அலுவலகமானது வட மாகாணம் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் வசித்துவரும் மக்களுக்கு கொன்சியுலர் உதவியை வழங்கிவரும் மக்களின் வாயிற்படிக்கு சேவைகளை எடுத்துச் செல்லும் பொருட்டு மாத்தறையில் இன்னுமொரு பிராந்திய கொன்சியுலர் அலுவலகத்தை திறந்து வைப்பதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆ. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள்

4. நாட்டில் இடம் பெற்றிருந்த யுத்தகாலத்தின் போது வெளிநாடுகளுக்குப் புகலிடம் தேடிச் சென்றிருந்த நிலையில் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இலங்கைக்குத் தன்னார்வ அடிப்படையில் திரும்பி வந்துள்ளோரின் கொன்சியுலர் சேவைகள் தொடர்பான தேவைகளை கையாளும் வகையில், வெளிநாட்டு அமைச்சர் திலக் மாரப்பன அவர்களின் வழிகாட்டலின் கீழ் கிளிநொச்சி மற்றும் மன்னாரில் கொன்சியுலர் இரண்டு ஒருமுகப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகள் நடாத்தப் பெற்றன.

5. அமைச்சர் மாரப்பன மேற்படி இரண்டு ஒருமுகப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகளிலும் பிரசன்னமாக இருந்ததுடன் உதவி நாடி வந்திருந்த மக்களுடன் அளவளாவி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தார். மேற்படி ஒருமுகப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, யாழ்ப்பாணப் பிராந்திய கொன்சியுலர் அலுவலகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களக் குடியுரிமைப் பிரிவு ஆகியவற்றின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

6. மேற்படி இரண்டு ஒருமுகப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் போது பிரஜாவுரிமைக்கான 422 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், 120 கொன்சியுலர் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன், பிரஜாவுரிமை மற்றும் பிறப்புச்சான்றிதழ்கள் தொடர்பான விடயங்களில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் தேவைப்பட்டோருக்கு தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

7. ஆவண அத்தாட்சிப்படுத்தல் செயல் முறையினைப் பன்முகப்படுத்தி இந்தச் சேவையினை பிரதேச செயலகங்களில் வழங்கும் வகையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2018 ஓகஸ்ட் 16 ஆம் திகதியன்று கைச்சத்திடப்பட்டது.

8. ஏற்றுமதி தொடர்பான ஆவணங்களை இலத்திரனியல் முறையில் அத்தாட்சிப்படுத்துவதனைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் இலங்கை வர்த்தக சபைக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2018 டிசம்பர் 12 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

9. இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் தண்டனைக்குட்படுத்தப்பட்டுள்ள நபர்களை இடமாற்றம் செய்து கொள்ளும் முகமாக, இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்குமிடையே கைதிகள் இடமாற்ற உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடுதலை இந்தப் பிரிவு முன்மொழிந்ததுடன், தற்போது இது குறித்த செயல்முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இ. ஆவண அத்தாட்சிப்படுத்தல் பிரிவு

10. ஆவண அத்தாட்சிப்படுத்தல் பிரிவானது, புத்தாக்க எண்முறை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் ஆவண அத்தாட்சிப்படுத்தல் முறைமை (e-DAS) ஊடாக ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தி வருகின்றது. வெளிநாடுகளில் உள்ள அனைத்து இலங்கைத் தூதரகங்கள்/ துணை அலுவலகங்கள் மற்றும் பிராந்திய கொன்சியுலர் அலுவலகங்கள் ஆவணங்களை கொழும்பில் உள்ள கொன்சியுலர் அலுவலகத்திற்கு தரவேற்றம் செய்வதனையும், அதனிடமிருந்து தரவிறக்கம் செய்வதனையும் சாத்தியப்படுத்திய தகவல் சேமிப்பு கொள்ளளவையும் செயலாற்றுகையையும் அதிகரிக்கும் வகையில் "லங்கா கவர்மென்ட் கிளவ்ட்) (LGC) தற்போது LGC 1 இலிருந்து LGC 2 வரை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

11. இந்தப் பிரிவும் பிராந்திய அலுவலகமும் அநேகமாக 300, 000 ஆவணங்களை செயல்முறைப்படுத்தியதுடன் மீளாய்வுக்குள்ளான காலப்பகுதியில் 232.2 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ள நிலையில் அவற்றை உறுதிப்படுத்தியுமிருந்தன.

12. இந்தப் பிரிவானது ஆவண அத்தாட்சிப்படுத்தலுக்கென கைரொக்க கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக கடன் மற்றும் பற்று வரவு அட்டைக் கொடுப்பனவுகளையும் ஏற்றுக் கொள்கின்றது.

ஈ. மக்களை நாட்டிற்குத் திருப்பி அழைத்துவரும் பிரிவு

13. மக்களை நாட்டிற்குத் திருப்பி அழைத்துவரும் பிரிவானது, பெரும் எண்ணிக்கையிலான காரணங்களின் நிமித்தம் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்கள் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாள்வதனைத் தனது கடமையாகக் கொண்டுள்ளது.

14. இந்தப் பிரிவானது, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் (SLBFE) பதிவின்றி வேலை வாய்ப்பு நோக்கம் கருதி வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த இலங்கையர்களை தாயகத்திற்கு மீண்டும் அழைத்து வருவதற்கான வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்கள் மற்றும் ஏனைய அதிகாரசபைகளுக்கு நேரடியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக, மக்களை தாயகத்திற்கு மீண்டும் அழைத்து வருவதற்கான உதவியை நாடி மிக நெருங்கிய உறவினர்களால் (NOK) செய்யப்பட்ட 480 முறைப்பாடுகள் இந்தப் பிரிவுக்கு நேரடியாகக் கிடைக்கபெற்றன.

15. சம்பந்தப்பட்ட சிறைக்கைதிகளின் மிக நெருங்கிய உறவினர்களிடமிருந்து அல்லது தூதரகங்கள்/ துணை அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகளைத் தொடர்ந்து வெளிநாடுகளில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை தாயகத்திற்கு திருப்பி அழைத்து வரப்படுவதற்கு இந்தப் பிரிவு வசதியளித்து வருகின்றது. 2018 ஆம் ஆண்டில் சிறைவாசம் அனுபவித்து வந்த 146 இலங்கையர்களில் 54 பேர் நாட்டிற்குத் திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

16. மேலும், சட்டவிரோதமான முறையில் முறையே குவைத் மற்றும் லெபனானில் தங்கியிருந்தமைக்காக பொது மன்னிப்பு வழங்கப்பட்ட 6750 மற்றும் 95 புலம்பெயர் தொழிலாளர்கள் முன்சொல்லப்பட்ட காலப்பகுதியில் தாயகத்திற்கு திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

17. போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் ஈரானில் 2017 மே 15 தொடக்கம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு இலங்கையர்கள் நாட்டிற்கு திருப்பி அழைத்து வரப்படுவதற்கும் இந்தப் பிரிவு வசதியளித்தது.

18. சோமாலியாவில் சிக்கித் தவித்த 12 புலம்பெயர் தொழிலாளர்கள் இந்தப் பிரிவின் தலையீட்டுடனும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புடனான (IOM) ஒருங்கிணைப்பிலும் நாட்டிற்குத் திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

19. இந்தப் பிரிவானது, ஆட்கடத்தல் வியாபாரத்தின் மூலம் பாதிக்கப்பட்ட 48 பேர் நாட்டிற்கு பாதுகாப்பாக திரும்பி வருவதற்கு வெளிநாடுகளில் உள்ள சம்பந்தப்பட்ட இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து உதவியது. சட்ட விரோதமான முறையில் கடத்தப்பட்டோர் தன்னார்வ அடிப்படையில் இலங்கைக்குத் திரும்பி வருவதற்கும் இந்தப் பிரிவு வசதியளித்து வருகின்றது.

20. விசேட மீள் அனுமதி விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்து செயல் முறைப்படுத்துவதற்கான மீள் அனுமதி விடய முகாமைத்துவ முறையின் கீழ் குவி மையமாக செயற்பட்டும் இந்தப் பிரிவானது மீள் அனுமதி விடய முகாமைத்துவ முறையின் (RCMS) ஊடாக 24 விண்ணப்பங்களை செயல்முறைப்படுத்தியது.

உ.

21. இந்தப் பிரிவானது வெளிநாடுகளில் மரணிக்கும் இலங்கையர்களினதும், பல்வேறு காரணங்களின் நிமித்தம் தமக்குரிய சட்டபூர்வமான உரிமையளிப்புக்களைப் பெற்றுக் கொள்ளாமல் நாட்டிற்குத் திரும்புவோரினதும் இழப்பீடுகள், காப்புறுதிகள் முடிவு சேவை/ ஓய்வூதிய நன்மைகள் தொடர்பான விவகாரங்களைக் கையாண்டு வருகின்றது.

22. 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுமார் 190 குடும்பங்களின்/ பாதிப்புற்றோரின் விடயங்களைத் தீர்த்து வைத்ததன் மூலம் இழப்பீடு/ உயிரீட்டுத் கூலி மற்றும் ஏனைய கொடுக்குமதிகளாக அண்ணளவாக 420 மில்லியன் ரூபா மீளப் பெறப்பட்டுள்ளது.

23. இழப்பீட்டிற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் உயிரிழந்தோரின் மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் ஏனையோருக்குத் தேவையான அளவில் கொன்சியுலர் உதவி வழங்கப்பட்டு வருவதுடன் வேண்டப்படும் மாதிரி அமைப்பிலான மொழிபெயர்ப்புக்கள் முதலியன உள்ளடங்கலாக வேண்டப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் சம்பந்தமாகவும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டும் வருகின்றது.

24. இந்தப் பிரிவானது, அந்தந்த நாடுகளில் உள்ள சட்ட நிறுவனங்கள் ஊடாக, பாதிப்புற்றோர் சார்பாக இழப்பீடுகளையும் ஏனைய சட்டபூர்வமான உரித்துடமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கான சட்டபூர்வமான நடவடிக்கையை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுடன் கலந்தாலோசனை செய்து வசதிப்படுத்தி வருகின்றது. தேவைப்படும் ஆவணங்களை கட்டணமின்றி தயாரிப்பதற்கு மிக நெருங்கிய உறவினர்களுக்கு உதவியளிக்கப்பட்டு வருகின்றது.

25. வெளிநாடுகளில் படுகொலை அல்லது விபத்து தொடர்பான இலங்கையர்களின் மரணங்கள் விடயத்தில், அவர்களுக்கான உரித்துடமைகளை மிக நெருங்கிய

உறவினர்கள் பெற்றுகொள்வதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

26. வெளிநாடுகளில் சம்பளங்கள்/ ஏனைய கொடுக்குமதிகள் வழங்கப்படாமை சம்பந்தமாக புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகளும் அந்தந்த இலங்கைத் தூதரகங்கள் ஊடாக வசதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஊ. மரணம் தொடர்பான பிரிவு

27. வெளிநாட்டில் மரணமொன்று ஏற்படும் விடயத்தில் உரிமையுள்ள இரத்த உறவினரை இனங்காண்பதற்கும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களுடனும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் ஒருங்கிணைந்து கூடிய விரைவில் மனித சடலங்களை தாய் நாட்டிற்கு எடுத்துவருதல், நல்லடக்கம் செய்தல் அல்லது தகனம் செய்தலுக்கு வசதியேற்படுத்துவதற்குமான பொறுப்பு இந்தப் பிரிவையே சாரும்.

28. உரிமையுள்ள தரப்பை தீர்மானிப்பதில், விசேடமாக, மனித சடலத்திற்கு பல தரப்பினர் உரிமை கோருமிடத்து கூடிய கவனஞ் செலுத்திய பின்னரே மனித சடலத்தை நாட்டிற்கு எடுத்து வருவதற்கு, நல்லடக்கம் செய்வதற்கு அல்லது தகனம் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு இந்தப் பிரிவானது தூதரகங்களுக்கு அறிவுறுத்தி வருகின்றது.

29. வெளிநாடுகளில் மரணித்துவரும் இலங்கைப் பிரஜைகளின் இரத்த உறவினர்களைக் கண்டறிவதற்கென அமைச்சு பொது மக்களிடமிருந்து உதவி கோரும் வகையில் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரித்து வருகின்றது.

30. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் கொன்சியுலர் சேவை உதவி கோரி மொத்தம் 444 மரணங்கள் பற்றி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்ட அதே சமயம் உதவி கோராத நிலையில் 110 மரணங்கள் குறித்து வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

31. இந்தப் பிரிவானது இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவும் வசதியளித்து வருகின்றது.

32. மரணம் ஏற்படுமிடத்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடமிருந்து காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள உதவி புரிந்து வருகின்றது.

33. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவுசெய்திராத நிலையில் உள்ள இலங்கையர்களுக்கு மரணம் சம்பவிக்குமிடத்து அல்லது அவர்களின் சடலங்களை தாயகத்திற்கு எடுத்து வருவதற்கு, நல்லடக்கம் செய்வதற்கு

மற்றும் தகனம் செய்வதற்கு முடியாத நிலையில் உள்ளோருக்கு இந்தப் பிரிவு உதவி புரிந்து வருகின்றது. இது சம்பந்தமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 12 இலங்கையர்களுக்கென அண்ணளவாக 3,577,975/= ரூபாவை செலவிட்டுள்ளது.

34. 2018 ஆம் ஆண்டில் சவுதி அரேபியா, ஜோர்தான், அபுதாபி, லெபனான் மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் உயிரிழந்த 6 இலங்கையர்களின் இரத்த உறவுகளைக் கண்டறிவதற்கான பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கென 435,878 ரூபா 50 சதம் செலவிடப்பட்டது.

பின்னிணைப்பு I – அரசாங்க செலவினம்

பின்னிணைப்பு II – 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை

எ. நானாவித அலுவல்கள் பிரிவு

35. இந்தப் பிரிவானது, கொன்சியுலர் பிரிவின் ஏனைய பிரிவுகளின் அதிகார வரம்பின் கீழ் நேரடியாக வராத, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் கொன்சியுலர் உதவிக்கான கோரிக்கைகளை அடிப்படையில் கவனித்து வருகின்றது.

36. வெளிநாடுகளில் உள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்படும் ஆயுட்கால சிறைத் தண்டனை மற்றும் மரண தண்டனைக்கு முகம்கொடுத்துவரும் இலங்கைப் பிரஜைகளின் விடயங்களை இந்தப்பிரிவானது கையாண்டு வருவதுடன், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் மொத்தமாக 21 இத்தகைய விடயங்கள் கவனிக்கப்பட்டிருந்தன. குற்றவாளிகளாகக் காணப்பட்ட மூவர் இலங்கைக்கு திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

37. இந்தப் பிரிவானது, ஏனைய நாடுகளின் ஆள்புல நீர்ப்பரப்புக்குள் செல்லும் மீன்பிடிப்படகுகளை விடுவித்தல் மற்றும் நடுக்கடலில் சிக்கித்தவிக்கும் அல்லது வெளிநாட்டு கடற்படை அதிகாரிகளால், கடலோரக் காவல் படையினரால் தடுத்து வைக்கப்படும் மீனவர்களையும் தமது படகுகளையும் ஏனைய மீனவர்களையும் விடுவிக்க உதவுதல் ஆகிய விடயங்களையும் கையாண்டு வருகின்றது. அதன் பிரகாரம் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் வெளிநாடுகளில் அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்கு வெளியே கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகள் குறித்து மொத்தம் 152 வழக்குகள் கவனஞ் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீனவர்களையும் படகுகளையும் விடுவிப்பதற்கான உதவியும் வழங்கப்பட்டது.

38. தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தை (NHRA) நடைமுறைப்படுத்தல் மீதான துறைசார்ந்த குழுவுக்கென தூதரகங்களுக்கென பெறப்படும் பதிவு செய்யப்படாத

புலம்பெயர் தொழிலாளர்களின் மனித உரிமைகள் மீதான மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை இந்தப் பிரிவு செயல்முறைப் படுத்தி வருகின்றது.

39. இலங்கைப் பிரஜைகள் வசித்தும் பணியாற்றியும் வந்த வெளிநாடுகளால் வழங்கப்படும் பொலிஸ் இசைவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள இந்தப் பிரிவு வசதியளித்து வருகின்றது. விண்ணப்பதாரர்களிடம் கையளிக்கப்பட்ட அத்தகைய பொலிஸ் இசைவுச் சான்றிதழ்களின் மொத்த எண்ணிக்கை 411 ஆகும்.

40. "ஜனாதிபதியிடம் கூறுங்கள்" எனும் தலைப்பிலான மனக்குறைகள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 30 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அவை செயல்முறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

41. மேலும், கொன்சியுலர் பிரிவின் ஏனைய பிரிவுகளின் அதிகார வரம்பின் கீழ் வந்திராத வெளிநாடுகளில் உள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள், மாணவர்கள், தொழில்வாண்மையாளர்களுக்கான கொன்சியுலர் உதவி நாடி விடுவிக்கப்பட்ட 206 வேண்டுகோள்கள் இந்தப் பிரிவினால் கவனிக்கப்பட்டிருந்தன.

42. வெளிநாடுகளில் பிறக்கும் பிள்ளைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்களை வழங்குதலை இந்தப் பிரிவானது வசதிப்படுத்தி வருவதுடன் இது சம்பந்தமாக 69 முறைப்பாடுகளையும் கவனித்திருந்தது. வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கென மொத்தமாக 1058 பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

43. இலங்கையில் திருமணச்சடங்குகள் செய்து வைத்தல், இலங்கைக்கான விசா விண்ணப்பம் மற்றும் பல்வேறு கொன்சியுலர் ஆவணங்களை உறுதிப்படுத்துதல் போன்ற விசாரணைகள், வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்து செயல் முறைப்படுத்தியதன் மூலம் இந்தப் பிரிவானது 54 வெளிநாட்டவர்களுக்கு உதவியுள்ளது.

44. வெளிநாடுகளில் காணாமல் போயிருந்த உறவினர்களின் இருப்பிடங்கள் சம்பந்தமாக 20 முறைப்பாடுகளை இந்தப் பிரிவு செயல் முறைப்படுத்தியது.

45. வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 16 பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட அதே சமயம் 18 முறைப்பாடுகள் குறித்து கவனஞ் செலுத்தப்பட்டது.

46. வெளிநாடுகளில் தத்தெடுக்கப்பட்டோரின் உயிரியல் சார்/ இயற்கை சார் பெற்றோர் சம்பந்தப்பட்ட தகவல்களுக்கான வேண்டுகோள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களிடமிருந்து பிரிவுக்கு அவ்வப்போது கிடைக்கப்பெறும் ஏனைய அதனையொத்த வேண்டுகோள்கள் மீதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2018 ஜனவரி 1 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதியில் வழங்கப்பட்ட கொன்சியுலர் உதவி குறித்த விபரங்கள்

ஆவணங்களின் எண்ணிக்கை	297,410
மொத்த பண சேகரிப்பு (செவ்வை பார்த்தல் ரூபா)	232,210,700.00
அறிவிக்கபபட்ட மரணங்கள்	444
இலங்கைக்கு திருப்பி அழைத்து வர ஆதரவு கோரும் முறைப்பாடுகள் (சாதாரணமானவை)	219
வழங்கப்பட்ட பொலிஸ் இசைவுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை	196
மேலும் அனுப்புவதற்கென வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கல்விச் சான்றிதழ்களின் எண்ணிக்கை	85
தடுத்து வைத்திருந்தமைக்கான முறைப்பாடுகள் (வெளிநாடுகளில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர்கள்	21
பிறப்புப் பதிவுக்கான முறைப்பாடுகள்	68
நன்மை பெற்ற குடும்பங்கள் (எண்ணிக்கை இழப்பீடு)	182
பதிவு செய்யப்படாத முறைப்படுகளின் எண்ணிக்கை	172
மொத்தமாக செலுத்தப்பட்ட இழப்பீடு (ரூபா)	417,824,923.55
நானாவித விசாரணைகள் (எழுத்துருவில்)	68
நாட்டிற்கு திருப்பி அழைத்து வரப்பட்ட இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை	80
செயல்முறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு பொலிஸ் இசைவுச் சான்றிதழ் விண்ணப்பங்கள் குறித்த விபரங்கள்	215
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட முறைபாடுகளின் எண்ணிக்கை	61
வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பிறப்புப் பதிவுகள் குறித்த விபரங்கள்	1058

இணைப்பு I

இறந்தவர்களின் உடல்களை தாயகத்திற்கு அனுப்புதல், தகனம் செய்தல் மற்றும் புதைத்தலுக்கென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட கொடுப்பனவு - 2018

இல	இறந்தோரின் பெயர்கள்	கடவுச்சீட்டு இல	இறப்புக்கு காரணம்	இறந்த திகதி	தூதரகம்	செலவு		நிலைமை
						இலங்கை ரூ.	உள்ளூர் நாணயம்	
1	வண.மொரப்பே. குசலஞான தேரர்	N7278366	சுகவீனம்	8/3/2018	பாங்கொக்	இல.ரூ.560,100/=	USD.3564	அனுப்பப்பட்டது
2	திருமதி பி.கே ஷ்யாமளி	N 0947912	கொலை	28/01/2018	ஜோர்டான்	இல.ரூ .184,900/=	USD.840	அனுப்பப்பட்டது
3	திரு எல்.எம் பி என் தரங்க	N7477477	சுகவீனம்	3/4/2018	பஹ்ரெய்ன்	இல.ரூ .102,800/=	BHD. 247	அனுப்பப்பட்டது
4	திரு சுகத் சி. பெர்னாண்டோ	N1319265	சுகவீனம்	4/4/2018	சவுதி அரேபியா	இல.ரூ .383,940/=	SAR.9000	அனுப்பப்பட்டது
5	திரு ரொணி லக்கி லீட்ச்	N7842132	சுகவீனம்	1/10/2018	அவுஸ்திரேலியா	இல.ரூ .953235/=	AUD7796.55	அனுப்பப்பட்டது
6	வண.பம்பவே இந்திரஜோதி தேரர்	N5205877	சுகவீனம்	20/12/2018	தாய்லாந்து	இல.ரூ .400,000/=	THB 70,000	அனுப்பப்பட்டது
7	திருமதி லூபா ஷாந்தி	N3979238	சுகவீனம்	30/01/2018	குவைத்	இல.ரூ 14,000/=	KD 25	புதைக்கப்பட்டது
8	செல்வி எம் ஜே எஃப் ஹசீனா	N5830090	தற்கொலை	4/6/2018	டுபாய்	இல.ரூ.146,000/=	AED.3,353	புதைக்கப்பட்டது
9	திருமதி ஸ்ரீயானி கனங்கரகே	N5877508	குறிப்பிடவில்லை	குறிப்பிடவில்லை	டுபாய்	இல.ரூ.223,000/=	AED.4780	புதைக்கப்பட்டது
10	திருமதி பரெல் கே ஃபேபர்	N7946146	சுகவீனம்	10/11/2018	டுபாய்	இல.ரூ.240,000/=	AED.4780	புதைக்கப்பட்டது
11	செல்வி ஷாந்தி பெர்னாண்டோ	Not given	சுகவீனம்	15/10/2018	லெபனான்	இல.ரூ.145,000/=	USD 800	புதைக்கப்பட்டது
12	திருமதி கே ஷாந்தி	குறிப்பிடப்படவில்லை	சுகவீனம்	21/05/2018	சவுதி/ரியாத்	இல.ரூ.225,000/=	USD 5,000	புதைக்கப்பட்டது
	மொத்தம்					இல.ரூ.3,577,975/=		

இணைப்பு II

01.01.2018 - 31.12.2018 வரை பதிவிடப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை

இலக்கம்	தூதரகம்	இறப்புகளின் எண்ணிக்கை
1	அபுதாபி	8
2	அவுஸ்திரேலியா	9
3	ஒஸ்ரியா	1
4	பஹ்ரேய்ன்	9
5	பங்களாதேஷ்	4
6	பெல்ஜியம்	1
7	சீனா	1
8	சைப்பிரஸ்	2
9	கனடா	2
10	டுபாய்	32
11	எகிப்து	2
12	எத்தியோப்பியா	1
13	பீஜி	1
14	பிரான்ஸ்	6
15	இந்தியா	14
16	இந்தோனேசியா	1
17	ஈரான்	1
18	இஸ்ரேல்	2
19	ஜப்பான்	6
20	ஜோர்தான்	11
21	சவூதி அரேபியா	103
22	கென்யா	1
23	கொரியா	7
24	குவைட்	73
25	லாவோஸ்	2
26	லெபனான்	5
27	மலேஷியா	17
28	மாலைதீவு	7
29	ஒமான்	14
30	பிலிப்பைன்ஸ்	1
31	கட்டார்	49
32	இத்தாலி	31
33	துருக்கி	1
34	தாய்லாந்து	2
35	சீசெல்ஸ்	1
36	சுவிட்சர்லாந்து	1

37	ஜேர்மன்	2
38	சுவீடன்	1
39	ஐக்கிய இராச்சியம்	5
40	ஐக்கிய அமெரிக்கா	4
41	கானா	1
42	ஹொங்கொங்	1
43	நேபாளம்	1
மொத்தம்		444

கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிரிவு

உள்ளடக்கப்பட்டுள்ள நாடுகள்: 11 (அவுஸ்திரேலியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, விடட்நாம்)

துணை தூதரகங்களின் எண்ணிக்கை: 04 (**அவுஸ்திரேலியா**-சிட்னி,மெல்பேர்ன், **சீனா**-சன்காய், குவாங்சோ)

இணை அங்கீகாரம்

அவுஸ்திரேலியா(கென்பரா)- பிஜி,நியூசிலாந்து,பபுவா நியு ஜீனியா,வனுஹாது,சொலமன் தீவுகள்

சீனா -சனநாயக மக்கள் குடியரசு கொரியா, மொங்கோளியா

சிங்கப்பூர் -புருனெய் தருஸ்சலாம்

தாய்லாந்து -கம்போடியா,லாவோஸ்

பல்தரப்பு பிராந்திய /தாபனங்களின் எண்ணிக்கை: ஆசியான் பிராந்திய போரம் (ARF), சன்காய் கூட்டுரவு தாபனம் (SCO), ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பிக்கை கட்டியெழுப்பல் நடவடிக்கைகள் பற்றிய மாநாடு (CICA)

உள்ளடக்கப்பட்ட ஏனைய தாபனங்களின் எண்ணிக்கை: பாலி சனநாயக போரம், சங்கரில்லா டயலொக்

1.1 கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் பிரிவு பணிகளின் பிரதான பிரிவுகளை பின்வருமாறு பரந்தளவில் வகைப்படுத்தலாம்:

I. சம்பந்தப்பட்ட புவியியல் பிராந்தியத்திலுள்ள நாடுகள் தொடர்பில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை வழிகாட்டிகளை வகுத்தல்.

II. சம்பந்தப்பட்ட புவியியல் பிராந்தியத்திலுள்ள இலங்கை தூதுவராலயங்களுக்கு அரசாங்கத்தின் கொள்கை தீர்மானங்கள் பற்றிய ஆலோசனை வழங்கள் மற்றும் அவை தாபிக்கப்பட்டுள்ள நாடுகளில் இலங்கையின் புகழை மேம்படுத்தி பிரதிபலிக்கும் வகையில் அவற்றுக்கு வழிகாட்டல்.

III. சம்பந்தப்பட்ட புவியியல் பிராந்தியத்திலுள்ள இலங்கை தூதுவராலயங்கள் பொருளாதார இராஜதந்திரம், பொது இராஜதந்திரம் ஆகியவற்றில் முனைப்புடன் ஈடுபட்டு இலங்கையர்கள் மற்றும் இலங்கை பிரசைகளுக்கு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவற்கான வழிகாட்டலை வழங்கள்.

IV. பிரமுகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு விஜயம் செய்வதற்கும் அனுசரணை/ ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

V. சம்பந்தப்பட்ட புவியியல் பிராந்தியத்திலுள்ள நாடுகள் மற்றம் தாபனங்கள் ஆகியவற்றுடன் இருதரப்பு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்தணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடுதல் தொடர்பில் அனுசரணை வழங்கள்

VI. ஆசியான் பிராந்திய போரம், சன்காய் கூட்டுறவு தாபனம், பாலி செயன்முறை மற்றும் CICA தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

VII. கொழுப்பில் தாபிக்கப்பட்டுள்ள கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய வெளிநாட்டு தூதுவராலங்கள் இடையில் நெருங்கிய மற்றும் சுமூகமான உறவை பேணுதல்.

1.2 இருதரப்பு ஒத்துழைப்பு

I. கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிரிவானது 2018 ஆம் அண்டு சனவரி முதல் டிசம்பர் வரையில் பல அதி முக்கிய பிரமுகர்கள், அமைச்சரவை விஜயங்கள் ஆகியவற்றை கையாண்டதுடன் பல இருதரப்பு வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகள் ஆகியவற்றையும் ஏற்பாடுசெய்துள்ளது.

II. இப்பிரிவானது இந்தோனேசிய குடியரசின் சனாதிபதியாகிய அதிமேதகு சனாதிபதி ஜோக்கோ விரோடோ அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்(2018 சனவரி 24-25) மற்றும் சிங்கப்பூர் பிரதமர் கௌரவ லீ ஹ்சியன் லோங் அவர்களின் உத்தியோகபூர்வ விஜயம் (2018 சனவரி 24-25) மற்றும் தாய்லாந்து பிரதமர் கௌரவ ப்ரேயூட் சான்-ஓ-சாவின் விஜயம் (2018 யூலை12-13) ஆகியவற்றையும் அதிமேதகு சனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் அவர்கள் மேற்கொண்ட இருதரப்பு கூட்டங்களையும் ஒழுங்கு செய்தது.

III. 2018 மார்ச் 12-15 வரை இடம்பெற்ற அதிமேதகு சனாதிபதியின் உத்தியோகபூர்வ ஜப்பானிய விஜயத்தை ஒழுங்கமைத்தது.

IV. கௌரவ பிரதமரின் சிங்கப்பூர் விஜயம்(2018 யூலை 08) வியட்நாம் விஜயம் (2018 ஆகஸ்ட் மற்றும் 2018 செப்டெம்பர் 11-13) ஆகியவற்றுக்கு இப்பிரிவால் அனுசரணை வழங்கப்பட்டது.

V. ஜப்பான் வெளிநாட்டு அழுவல்கள் அமைச்சர் கௌரவ டாரோ கோனோ விஜயம் (2018 சனவரி 05) மற்றும் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் கௌரவ சுனோரி ஒனோதெராவின் விஜயம் ஆகியவற்றுக்கு இப்பிரிவால் அனுசரணை வழங்கப்பட்டது.

VI. கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் லாவோ மக்கள் சனநாயக குடியரசு விஜயம்(2018 ஏப்பிரல் 17-21), தென் கொரியா விஜயம் (2018 ஆகஸ்ட் 27-30) ஜப்பான் விஜயம் (2018 பெப்ரவரி 25- மார்ச்ச் 03) மற்றும் வியட்நாம் விஜயம் (2018 ஏப்பிரல் 21-27) ஆகியன இப்பிரிவால் ஒழுங்குசெய்யப்பட்டன.

VII. கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் சிங்கப்பூர் விஜயம் (2018 ஆகஸ்ட் 6-7) இந்தோனேசிய விஜயம் (2018 ஆகஸ்ட் 6-7) மலேசியா விஜயம்(2018 ஆகஸ்ட் 19-31) ஆகியன இப்பிரிவால் ஒழுங்குசெய்யப்பட்டன

VIII. கொரிய குடியரசுடனான இருதரப்பு வெளிநாட்டு அலுவலக கலந்துரையாடலகள்(2018 யூன் 7) தாய்லாந்து(2018 பெப்ரவரி 27-28), வியட்நாம்(2018 ஏப்பிரல் 11), பிலிப்பைன்ஸ் (ஒக்டோபர் 23, மனிலா) இப்பிரிவால் கூட்டப்பட்டன.

1.3 பிராந்திய ஒத்துழைப்பு.

1.4.1. ஆசியான் பிராந்திய மன்றம்(ARF)

இலங்கையானது ஆசியான் பிராந்திய மன்றத்தில் ''பங்கேற்கும்'' ஒரு நாடாகும் என்பதுடன் ஆசியான் மன்றத்தில் துறைவாரியான கலந்துரையாடல் பங்குடைமையை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையானது ஆசியான் பிராந்திய மன்றத்தின் பின்வரும் நிகழ்வுகளில் முனைப்பாக பங்கேற்றுள்ளது.:

I. ஆசியான் பிராந்திய மன்றத்தினது வேலைச்சட்டகத்தின் கீழ் தடுப்பு இராஜதந்திரத்தை மேம்படுத்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மீயாய்வு செய்யவும் ஆசியான் பிராந்திய மன்றத்தால் பிராந்திய பாதுகாப்பை மேம்படுத்தக்கூடிய நடைமுறைசார்ந்த வழிமுறைகளை கலந்துரையாடவும் 2018 மார்ச் 6-7 வரை வியட்நாமில் இடம்பெற்ற 12வது ஆசியான் பிராந்திய மன்ற வல்லுநர்கள் மற்றும் நிபுணத்துவ நபர்கள் கூட்டத்தில் பங்கேற்றது.

II. 2018 யூன் 7ஆம் திகதி சிங்கப்பூரில் இடம்பெற்ற 25ஆது ஆசியான் பிராந்திய மன்ற சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் கூட்டத்தல் கிழக்கு ஆசியா பணிப்பாளர் நாயகம் பங்கேற்றார்.

III. 2018 ஆகஸ்ட் 3-4 வரையில் இடம்பெற்ற 25ஆது ஆசியான் பிராந்திய மன்ற அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்ற தூதுக்குழுவை கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் வழிநடத்தினார்.

1.4.2 பாலி செயல்முறை

இலங்கையானது பாலி செயல்முறையின் ஒரு உறுப்பினராகும். இலங்கையானது இந்த காலத்தில் பாலி செயல்முறையில் இடம்பெற்ற பயிற்சிப்பட்டறை/செயலமர்வுகள் ஆகியவற்றில் நீதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் ஊடாக பங்கேற்றது. ஆவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. பாங்கொக், தாய்லாந்தில் 2018 மார்ச் 21-22 வரை இடம்பெற்ற திட்டமிடல் மற்றும் தயார்நிலை பற்றிய பாலி செயல்முறை செயலணியின் 3வது கூட்டம்.

ஆ. தாய்லாந்தில் 2018 மார்ச் 28ஆம் திகதி இடம்பெற்ற ஆட் கடத்தல், சட்டவீரோதமாக மக்கள் கடத்தப்படல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நாடுகடந்த குற்றம் பற்றிய தகவல் பரிமாற்றத்திற்கான வழிகாட்டி வரைவு பற்றிய பாலி செயல்முறை ஆலோசனை பயிற்சிப்பட்டறை.

இ. இந்தோனேசியாவில் 2018 ஏப்பிரல் 23-27 இடம்பெற்ற விமான நிலையங்களில் இடம்பெறும் சட்டவிரோத மக்கள் கடத்தல், ஆட்கடத்தல் ஆகியவற்றை முறியடிப்பதற்கான பாலி செயல்முறை முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை

ஈ. மனிலா, பிலிப்பைன்ஸில் 2018 ஏப்பிரல் 23-24 ஆம் திகதிகளில் இடம்பெற்ற மீள்வருகை மற்றும் மீள்ஒருங்கிணைத்தல் பற்றிய பாலி செயல்முறை தொழில்நுட்ப நிபுணர்கள் குழு

உ. ஜகார்த்தா, இந்தோனேசியாவில் 2015 மே 3-4 ஆம் திகதிகளில் இடம்பெற்ற சட்டவிரோத ஆட்கடத்தல், மக்கள் கடத்தப்படுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நாடுகடந்த குற்றம் தொடர்பில் தகவல் பரிமாற்றலுக்கான வழிகாட்டிகள் பற்றிய பாலி செயல்முறை முன்னோடி பயிற்சி பயிற்சிப்பட்டறை

ஊ. சிட்னி, அவுஸ்திரேலியாவில் 2018 யூன் 27ஆம் திகதி இடம்பெற்ற 13வது பாலி செயல்முறை எட்ஹொக் குழுவின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கயளின் கூட்டம்.

எ. மக்கள் கடத்தப்படுதல், ஆட் கடத்தல் மற்றும் இவை தொடர்பான நாடுகடந்த குற்றம் பற்றிய 7வது பாலி செயல்முறை மற்றும் அமைச்சரவை மாநாடு இந்தோனேசியாவில் 2018 ஆகஸ்ட் 6-7 ஆம் திகதிகளில் இடம்பெற்றதுடன் கௌரவ இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சாரால் தலைமை வகிக்கப்பட்டது. பிரதி நீதி அமைச்சர் மற்றும் சட்டத்துறை தலைமை

அதிபதியின் திணைக்களம், வெளிநாட்டு அமைச்சு மற்றும் ஏனயவற்றின் சிரேஸ்ட உத்தியோகத்தர்களும் இந்த மாநாட்டில் பிரதிநிதித்துவம் செய்தனர்.

இலங்கையானது இந்த நிகழ்வில் ஒழுங்காய் பங்கேற்று வந்துள்ளதுடன் இவ்வருடம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேற்படி மாநாட்டு தூதுக்குழுவை வழிநடத்திய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இந்நிகழ்வானது பாலி செயற்பாட்டில் இலங்கைக்கு வளர்ந்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. கடந்த காலத்தில் நீதி அமைச்சர்/பிரதி அமைச்சர் தூதுக்குழுவை மாநாட்டிற்கு வழிநடத்தியிருந்தனர்.

இந்த மாநாடானது, பாலி செயல்முறை பணிக்குழுக்கள், ஏனைய ஈடுபட்டுள்ள பொறிமுறைகள் போன்றவற்றில் முன்னெடுக்கப்பட்ட பணிகள் உள்ளடங்களாக பாலி செயற்பாட்டின் முன்னேற்றங்கள் தொடர்பாக மீளாய்வு செய்தது.

1.4.3 ஆசியாவில் ஈடுபாடு மற்றும் நம்பிக்கை கட்டியெழுப்பல் பற்றிய மாநாடு(CICA)

இலங்கை முழு உறுப்புரிமையை 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதி பெற்றுக்கொண்டது.

அ) நியூயோர்க்கில் 2018 செப்டம்பர் 24ஆம் திகதி இடம்பெற்ற ஐ.நா. பொதுச்சபையின் 73வது அமர்வின் வேளையில் இடம்பெற்ற ஆசியாவில் ஈடுபாடு மற்றும் நம்பிக்கை கட்டியெழுப்பல் பற்றிய மாநாட்டின் விசேட அமைச்சரவை கூட்டத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பங்கேற்றதுடன் ஒரு கூற்றையும் அவர் முன்வைத்தார்.

ஆ) 2018 ஒக்டோபர் 16-17 ஆம் திகதிகளில் அஸ்டானா, கசகஸ்தானில் இடம்பெறவுள்ள ஆசியாவில் ஈடுபாடு மற்றும் நம்பிக்கை கட்டியெழுப்பல் பற்றிய மாநாட்டின் இராணுவ அரசியல் பரிமாணம் பற்றிய செயலமர்வில் ஒரு உத்தியோகத்தரை நியமிக்கும் முகமாக பாதுகாப்பு அமைச்சுடன் இலங்கை ஒருங்கிணைவை மேற்கொண்டது.

1.4.4 ஷான்காய் ஒத்துழைப்பு தாபனம்(SCO)

இலங்கையானது 2009 ஆண்டில் இருந்து ஷான்காய் ஒத்துழைப்பு தாபனத்தின் ஒரு கலந்துரையாடல் பங்குதாரராக உள்ளதுடன் தாபனத்தின் அவதானிப்பு அந்தஸ்தை பெறுவதற்கும் விண்ணப்பித்திருந்தது.

அ) கௌரவ சட்டத்துறை தலைமை அதிபர் துஷன்பே, தாஜிகிஸ்தானில் செப்டெம்பர் 20ஆம் திகதி இடம்பெற்ற ஷான்காய் ஒத்துழைப்பின் வழக்கறிஞர் நாயகம் பேரவையின் 16வது கூட்டத்தில் பங்கேற்றார்.

1.4.5 ஷன்ஜரீ-லா கலந்துரையாடல்

பாதுகாப்பு அமைச்சு 11SS ஷன்ஜரீ-லா கலந்துரையாடலில் இலங்கையின் சார்பில் தொடர்ச்சியாக பங்கேற்று வந்துள்ளது.

அ) சிங்கப்பூரில் 2018 யூன் 1-3 வரை இடம்பெற்ற 17வது 11 SS 'ஷன்ஜரீ-லா கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பங்கேற்றதுடன் ''இந்திய சமுத்திர பிராந்திய போட்டி மற்றும் ஒத்துழைப்பு'' என்ற தலைப்பில் சமகால விசேட அமர்வு 4 லின் மாநாட்டில் உரையாற்றினார்.

2. இலங்கை உயர் ஸ்தானிகராலயம் கம்பரா, இலங்கை துணைத் கொன்சுலேட் நாயகம் மெல்பேர்ன் மற்றும் இலங்கை கொன்சுலேட் நாயகம், சிட்னி

இரதரப்பு உறவுகள்

1. **இலங்கை உயர் ஸ்தானிகராலயம்/கம்பரா**

I. உயர் ஸ்தானிகராலயம் இலங்கையில் அறிப்படாத சிறுநீரக நோயக் காரணி கண்டறிவதற்கு அவுஸ்திரேலிய அனுசக்கி மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப

II. தாபனத்தின் ஒத்துழைப்பை பின்வற்றுவதை உயர் ஸ்தானிகராலயம் தொடர்ந்தது.

III. இராஜாங்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க DFATயின் விசேட விஜயத்தின் நிகழ்ச்சிநிரலின் கீழ் மார்ச் மாதம் அவுஸ்திரெலியாவுக்கு விஜயம் செய்தார்.

IV. இலங்கை பாராளுமன்ற பெண்கள் அணியின் தூதுக்குழுவொன்று கம்பரா உட்பட அவுஸ்திரேலியாவுக்கு மார்ச் மாதம் விஜயம் செய்ததுடன் பாராளுமன்றம் மற்றும் அரசாங்க திணைக்களங்கள் ஆகியவற்றில் இடம்பெற்ற கூட்டங்களில் பங்கேற்றது.

V. இலங்கைக்கான வடக்கு பிராந்தியத்திற்கான கௌரவ கௌன்சல் ஒருவரின் நியமனம் (டார்வினில் தாபிக்கப்பட்டுள்ள) இறுதிசெய்யப்பட்டது.

VI. இலங்கை கடற்படை கப்பல் ஆகஸ்ட்/செப்டெம்பரில் டார்வினில் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கப்பற்படை பயிற்சியான Kakadu வில் பங்கேற்றதுடன் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வளர்ந்துவரும் பாதுகாப்பு உறவுகளை பறைசாற்றியது.

VII. சபுகஸ்கந்த கட்டளை மற்றும் சேவைகள் பணியாட் கல்லூரியின் தளபதி மாணவ தூதுக்குழுவொன்றை் கல்விச்சுற்றுலாவொன்றுக்கு ஆகஸ்ட் மாதம் வழிநடத்தினார். இந்த நிகழ்ச்சித்திட்டமானது கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசகரின் ஊடாக அனுசரணை வழங்கப்பட்டது.

VIII. இலங்கையர்கள் குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள/ குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தூதுவராலயம் உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்ச்சியான தொடர்பை பேணியது

IX. " இலங்கையில் அரசியலமைப்பை உருவாக்கல்: வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள்" பற்றிய கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்னவின் கலந்துரையாடல் ஒன்றுக்காக கம்பராவிலுள்ள இலங்கை பிரசைகளுக்கு முறைசார் கலந்துரையாடல் ஒன்றை தூதுவராலயம் ஏற்பாடுசெய்தது.

இணை ஒத்துழைப்பு

உயர் ஸ்தானிகர் தகுதிச் சான்றிதழ்களை பபுவா நியு கினியாவில் மே மாதம் சமர்ப்பித்தார் அத்துடன் பபுவா நியு கினியாவின் வெளிநாட்டு அமைச்சர் மற்றும் செயலாளர்/ வெளிநாட்டு /அலுவல்கள் ஆகியோரையும் சந்தித்தார். இந்த கூட்டங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் பின்பற்றப்பட்டதுடன் இருதரப்பு ஆலோசனைகளுக்காக ஒரு வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கையும் பபுவா நியு கினியாவுடன் பரிமாற்றப்பட்டது.

வெளியேறும் பிஜி உயர் ஸ்தானிகருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இராஜதந்திர மற்றும் உத்தியோரபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்துள்ளவர்களுக்கு விசா வழங்கும்

பொருட்டு மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கையை ஒத்த வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கையும் பிஜியின் பரிசீலனைக்காக பரிமாற்றப்பட்டது.

நியுசிலாந்துடன் இருதரப்பு கலந்துரையாடல் ஆரம்பிக்கும் முகமாக முன்னெடுப்புகள் இடம்பெறுகின்றன. இளைஞர் வலுவூட்டல் தொடர்பான ஒத்துழைப்பு பற்றிய வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கைகையொன்றும் நியுசிலாந்துடன் பரிமாற்றப்பட்டுள்ளது.

உயர் ஸ்தானிகர் தகைமை சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்காக விஜயம் செய்திருந்த வேளையில் அவருடன் போர்ட் மோர்ஸ்பியில் இடம்பெற்ற மற்றும் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து சிரேஸ்ட மட்ட உத்தியோத்தர் கலந்துரையாடல்களை தாபிக்குமாறு கம்பராவிலுள்ள உயர் ஸ்தானிகராலத்திற்கு பிரேரிக்கப்பட்டது.

11 இலங்கை கொன்சுலேட் ஜெனரல்/மெல்பேர்ன்

இலங்கை அமைச்சர்கள்/உத்தியோகத்தர்கள் ஆகியோரின் விஜயங்கள் மற்றும் அரச பிரமுகர்கள்/உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் இருதரப்பு அரசியல் உறவுகளை வலுப்படுத்தியுள்ளன. மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலத்தில் இடம்பெற்ற உயர் மட்டத்திலான கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் பின்வருமாறு:

I. இலங்கை பெண் பாராளுமன்ற அணி-மெல்பேர்ன் 2018 மார்ச் 21-29
II. இலங்கை தேசிய போக்குவரத்து தலைவரின் மெல்பேர்னுக்கான 2018 சனவரி 10 ஆம் திகதிய விஜயத்தின் போது விக்டோரியா பொது போக்குவரத்துடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு அனுசரணை வழங்கப்பட்டது.
III. நீரில் மூழ்குவதை தடுத்தல் மற்றும் நீர் பாதுகாப்பு கூட்டுறவு இலங்கை பங்கேற்பாளர்களை லைப் சேவிங் விக்டோரியா அமைப்புடன் 2018 பெப்பரவரியில் இடம்பெற்ற நிகழ்வுக்கு அனுசரணை வழங்கப்பட்டது.
IV. சட்டத்துறை நிலையம், டேகன் பல்கலைக்கழகம் மெல்பேனில் 2018 மே 30 ஆம் திகதி இடம்பெற்ற இந்திய சமுத்திர மாநாட்டின் சுயாதீன கப்பலோட்ட நிகழ்வில் இலங்கையின் பங்கேற்றலுக்கு அனுசரணை வழங்கப்பட்டது.
V. விக்டோரியா பாராளுமன்றத்தால் 2018 யூலை 18 ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்ட விக்டோரியா சிஸ்டர் சிட்டீஸ் மன்றத்தில் இலங்கை பரதிநிதித்துவம் செய்தது.
VI. சபுகஸ்கந்த, பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாற் கல்லூரியை 2018 ஆகஸ்ட் 2-14 வரையில் அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டு ஆய்வு விஜயமொன்றுக்கு அனுசரணை வழங்கியது.
VII. விஞ்ஞானம் மற்றம் தொழில்நுட்ப கௌரவ இராஜாங்க அமைச்சர் 2018 செப்டெம்பர் 3-7ஆம் திகதி வரையிலான மெல்பேர்ன் விஜயத்தை ஒருங்கிணைத்தது.
VIII. இலங்கை பிரதம நீதியரசரின் 2018 செப்டெம்பர் 7-17 திகதி வரையிலான மெல்பேர்ன் விஜயம்
IX. கௌரவ சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழிகள் அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி பெற்றோலிய வளங்கள் பிரதி அமைச்சர் அநோமா கமகே ஆகியோரின் விஜயங்களக்கு அனுசரணை வழங்கள்

111 இலங்கை கொன்சுலேட் ஜெனரல்/சிட்னி

I. அவுஸ்திரேலிய விசேட விஜய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 .09. 23-30 வரையில் கௌரவ இராஜயாங்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

II. சிறந்த மரபுரிமை முகாமைத்துவ நடைமுறைகள் தெரிந்துகொள்வதற்கான சிட்னி பல்கலைக்கழகம், தேசிய கடல்சார் அருங்காட்சியகம்,மற்றும் அவுஸ்திரேலிய மரபுரிமை முகாமைத்துவ நிறுவகங்கள் ஆகியவற்றுடன் கலாநிதி சிரான் தெரனியகலவுக்கு கூட்டங்களை ஒழுங்குசெய்தல்.

III. இலங்கை அதிகாரரிகளுடன் இணைந்து நியுகாசல் பல்கலைக்கழகத்தின் சீ.ஈ.ஓ மற்றும் சீ.ஆர்.சீ கெயார் முகாமைத்துவ பணிப்பாளர் பேராசிரியர் ரவி நாயிடுவின் பிரேரணையொன்றை மண் சீரழிவை தடுத்தல் மற்றும் சீயுடியு வை தடுப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கவும் ஒருங்கிணைத்தல்.

IV. பின்வரும் விஜயங்களுக்கு கொன்சுலேட் அனுசரணை வழங்கியது.

அ. 2018 மார்ச் 26-29- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

ஆ. 2018 யூன் 25-29- பாலி செயல்மறைக்கான இலங்கை தூதுக்குழு

இ. 2018 ஆகஸ்ட் 11-14- கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் ஜே. ஆர். குலதுங்க தலைமையில் சிட்னிக்கான சபுகஸ்கந்த கட்டளை மற்றும் சேவைகள் பணியாற் கல்லூரி தூதுக்குழுவின் கற்றல் விஜயம்.

V. கடுமையான வறட்சியால் பாதிப்படைந்த என்.எஸ்.டபிள்யூ கமக்காரர்களுக்கு உலர் உணவு கேகரிக்கும் பணியில் 2018 செப்டெம்பரில் சிட்னிக்கான இலங்கை சங்கங்களுடன் இணைந்து கொன்சியுலேட் ஜெனரல் ஈடுபட்டார்.

பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

.இலங்கை கொன்சுடேட் ஜெனரல்/ கம்பரா

I. அவுஸ்திரேலியா-இலங்கை இணை வர்த்தக மற்றும் முதலீட்டு குழுவின் ஆரம்ப கூட்டம் ஏப்பிரல் 19 இடம்பெற்றது.

II. உயர் ஸ்தானிகராலயமானது புதிய ஆடை கம்பனியொன்றை அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு அறிமுகம் செய்துவைத்தது: இந்த கம்பனியானது உற்பத்தியை ஆரம்பித்ததுடன் ஆடை உற்பத்திகளை இலங்கையில் இருந்து இறக்குமதிசெய்து "குனி லொயல்" என்ற பெயரில் புதிய ஒரு பிராண்ட்ட் அவுஸ்திரேலில் ஊக்குவிக்கின்றது.

III. உயர் ஸ்தானிகராலயம் "ஹன்சா சீலோன் கோப்பி" வகையை நியூசிலாந்து கம்பனியான "எக்ஸ்பிரசோ ஸ்டப்" வில் அறிமுகம் செய்தது.

IV. விவசாயம் மற்றும் மற்றும் நீர் வளங்கள் திணைக்களம் அவுஸ்திரேலியா மற்றும் விவசயாத் திணைக்களம், இலங்கை இணைந்து ஈ-பைதோ சிஸ்டத்தை இலங்கையில் அறிமுகம் செய்வதற்காக ஈடுபட்டுள்ளதால் உயர் ஸ்தானிகராலயம் இலங்கையில் ஈ-

பைதோ சிஸ்டத்தை (Phyto System) அறிமுகம் செய்யும் முயற்சிக்கு அனுசரணை வழங்கியது.

V. "இலங்கை தேங்காய் எண்ணெய் உற்பத்திகள் அவுஸ்திரேலியாவில்" என்பது தொடர்பில் அறிக்கையொன்றை எழுதும் முகமாக அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தில் உள்ளக முதுநிலை பட்டதாரியாக மாணவனாக ஒருவரை உயர் ஸ்தானிகராலயம் இணைத்து மேற்பார்வை செய்தது. இந்த அறிக்கையானது இலங்கை ஏற்றுமதியாளரிகளின் நன்மைக்காக (SLEDB) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சமையுடன் பகிர்ந்துகொண்டது.

VI. அவுஸ்திரேலியா உட்பட வெளிநாடுகளில் இலங்கை இளைஞர்களை சாத்தியமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் சுகாதார பராமறிப்போருக்கு அவுஸ்திரேலிய தணைமையொன்றை அறிமுகம் செய்வதற்கான சாத்தியங்களை உயர் ஸ்தானிகராலயம். ஆய்வுசெய்தது. இது தொடர்பில், முன்னோடியான சுகாதார தீர்வுகளை உலகலாவியவாறு வழங்கும் அவுஸ்திரேலியாவுக்கு உரித்தானதும் பதிவு செய்யப்பட்டதுமான வயோதிபர் சுகாதார சேவை நிறுவனமான எஸ்பன் மெடிகல் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற இணங்கியுள்ளதுடன் அதன் பிரெரணையையும் சமர்ப்பித்துள்ளது. இப்பிரேரணையானது இலங்கை அரசாங்கத்துடன் பகிரப்பட்டுள்ளது.

VII. உயர் ஸ்தானிகரலாயமானது இலங்கையில் வர்த்தகத்தை ஆரம்பிக்கும் முகமாக அவுஸ்திரேலிய கடல் உணவு இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றதுடன் இலங்கை கடற்றொழில் கைத்தொழிலில் முதலீடு செய்வது தொடர்பில் சாத்தியங்களை ஆய்வுசெய்கின்றது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கலந்தரையாடலில் ஈடுபடுவதற்கு வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் அவர்களும் கொள்கையளவில் இணங்கியுள்ளனர். இரு தரப்பிற்கும் விஜயத்தை மேற்கொள்வதாற்கான சுமூகமான திகதிகளை தீர்மானிக்கும் வகையில் இச்செயற்பாடானது முன்னெடுக்கப்படல் வேண்டும்.

VIII. .இலங்கை கடற்படை மற்றும் தனியார் துறையுடன் பணியாற்றும் முகமாக இலங்கை கடற்படை, கைத்தொழில் பிரமுகர்கள் மற்றும் ஒஸ்டல், அவுஸ்திரேலிய கப்பல் கட்டும் கம்பனி ஆகியவற்றுக்கு இடையில் கூட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டது.

சுற்றுலா மேம்பாடு

I. உயர் ஸ்தானிகராலயமானது 2019 நவம்பரில் அனுசரணை வழங்கி நடாத்தும் வகையில் உலக சாகச பந்தய போட்டியொன்றை அறிமுகப்படுத்துவதற்கான கருத்திட்டமொன்றுக்கான முன்னெடுப்பை மேற்கொண்டது. கடந்த வருடத்தில் இலங்கைக்கு வரும் அவுஸ்திரேலிய சுற்றுளா பயணிகளின் எண்ணிக்கையானது 38% அதிகரித்துள்ளது.

II. ஸ்தானிகராலயத்தில் இடம்பெறும் இலங்கை வருடாந்த விழாவில் ஊக்குவிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுடன் சுற்றுளா மேம்பாட்டு கலந்துரையாடல்களும் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டது.

III. 2018 செப்டெம்பர் முடிவில், 78756 அவுஸ்திரேலியர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். இத்தொகையானது 2017 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுளா பயணிகளுடன் ஒப்பிடுகையில் 38.6 சதவீத அதிகரிப்பாகும்.

இலங்கை கொன்சிலேட் /மெல்பேர்ன்

I. அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளன உறுப்பினர்களின் மெல்பேர்ன் விஜயத்திற்கு-2018 சனவரி 18-25 அனுசரணை வழங்கப்பட்டது.

II. 2018 பெப்ரவரி 23ஆம் திகதி இலங்கை மற்றும் விக்டோரியாவுக்கு இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான பரஸ்பர வாய்ப்புக்களை இனங்காண்பதற்கு வலையமைப்பு வரவேற்பொன்று ஒழுங்கமைக்கப்பட்டது.

III. 2018 மார்ச் 14ஆம் திகதி இலங்கை நனோ தொழில்நுட்பம் பற்றிய மேம்பாட்டு முதலீட்டிற்கான புலம்பெயர் நிகழ்வொன்று இடம்பெற்றது.

IV. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் வர்த்தக பிரதிநி திரு.ஜயம்பதி அரம்பேபொலவின் 2018 ஏப்பிரல் 16ஆம் திகதிய விஜயத்திற்கு அனுசரணை வழங்கப்பட்டது.

V. இலங்கை தேயிலை சபை, இலங்கை தென்னை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு ஆகியன பைன் உணவு கண்காட்சியில் பங்பேற்பதற்கான அனுசரணை 2018 செப்டெம்பர் 10-13 திகதிகளில் வழங்கப்பட்டது.

VI. இலங்கை தென்னை ஏற்றுமதியாளர் மற்றும் சாத்தியமான கொள்வனவாளர்கள் ஆகியோருக்கு இடையில் வர்த்தக காலையுணவுக் கூட்டம் மெல்பேர்னில் 2018.செப்டெம்பர் 11ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டது.

VII. இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் விஜயத்திற்கு 2018 நவம்பர் 18-27 ஆம் திகதி வரையில் அனுசரணை வழங்கப்பட்டது.

VIII. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மையின் விஜயத்திற்கு 2018 நவம்பர் 26-27 வரை அனுசரணை வழங்கப்பட்டது.

IX. ஐ.சீ.டி.ஏ வர்த்தக தூதுக்குழுவிற்கு அனுசரணை வழங்கும் முகமாக ஆர்.எம்.ஐ.டி பல்கலைக்கழகத்துடன் இணைந்து சமூக வலையமைப்பொன்று ஒழுங்கமைக்கப்பட்டது.

இலங்கை கொன்சுலேட்/ சிட்னி

வர்த்தகம்

I. இலங்கை நனோ தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தூதுக்குழுவின் சிட்னிக்கான விஜயம்.- இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் தலைமையில் நான்கு உறுப்பினர்கள் உள்ளடக்கிய உத்தியோகபூர்வ தூதுக்குழுவானது 2018 மார்ச் 18-21வரையில் சிட்னிக்கான விஜயத்தை மேற்கொண்டது.

II. அவுஸ்திரேலியாவுடனான டீ.ஐ.எப்.ஏ. பற்றிய முதலாவது உத்தியோகபூர்வ கூட்டம் அவுஸ்திரேலிய கம்பராவில் 2018 மார்ச் 19 ஆம் திகதி இடம்பெற்றது.

III. இலங்கை தேசிய வர்த்தக அனுசரணை குழுவின் அவுஸ்திரேலியாவுக்கான விஜயம் தொடர்பான அனுசரணை. இலங்கை போடர் ஒழுங்கமைப்பு முகவாண்மைகள், தனியார் துறை தாபனங்கள், வர்த்தக சம்மேளனம், மற்றும் இலங்கை தேசிய வர்த்தக அனுசரணை குழு ஆகியவற்றின் பதினைந்து பிரதிநிதிகள் 2018 ஆகஸ்ட் 27-31வரையில் அவுஸ்திரேலிய விஜயத்தில் ஈடுபட்டனர்.

IV. சன்கன் குருப், இலங்கை பொரப்பிட்டி டிவலொப்பர்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் 2018 பெப்ரவரி மாதம் சிட்னிக்கு விஜயம் செய்தனர்.

V. வேலை தளங்களில் பால்நிலை சமத்துவம் தொடர்பில் உயர் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கை பெண்களின் பிரிஸ்பேனுக்கான விஜமொன்றுக்கு 2018 செப்டம்பர்/ஒக்டோபரில் அனுசரணை வழங்கப்பட்டது.

VI. இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தில் இருந்து வர்த்தக தூதுக்குழுவுக்கான வலையமைப்பு மாலை மெல்பேர்னில் இடம்பெற்றது. மெல்பேர்னில் இருந்து 12 உறுப்பினர்கள் உள்ளடக்கிய வியாபார தூதுக்குழு 2018 நவம்பர் 19-24 வரை

VII. விக்டோரியன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடனான கூட்டம்- என்.சீ.ஈ தூதுக்குழுவின் வருகைதந்த உறுப்பினர்கள் அவர்களின் மெல்பேர்ன் விஜயத்தின்போது கூட்டமொன்றிலும் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

VIII. வரத்தக விக்டோரியா- ஸ்டேட் அரசாங்கம் அவுஸ்திரேலியாவுடனான கூட்டம்- என்.சீ.ஈ தூதுக்குழுவின் வருகைதந்த உறுப்பினர்கள் அவர்களின் மெல்பேர்ன் விஜயத்தின்போது

IX. வர்த்தக விக்டோரியாவின் தென் ஆசிய மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு. ஜேம்ஸ் எட்வரட்ஸ் அவர்களை சந்தித்தனர். அவுஸ்திரேலிய ஏற்றுமதி பேரவையுடனான கூட்டம்- என்.சீ.ஈ தூதுக்குழுவின் வருகைதந்த உறுப்பினர்கள் ஆய்வுத் தலைவர் மற்றும் அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதி பேரவையின் விக்டோரியா பிராந்திய முகாமையாளர் திரு. நீல்ஸ் ஸ்டிராடின்ஸ் அவர்களை சந்தித்தனர்.

X. ஐ.சீ.டி.ஏ வினால் வழிநடத்தப்பட்ட IT-BPM இலங்கை தூதுக்குழுவின் சிட்னி பயணம் - சிட்னியில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை கொன்சிலேட் ஜெனரலின் ஒத்துழைப்புடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையால் வழிகாட்டலில் ஏழு IT-BPM கம்பனிகள் இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்திற்கு அனுசரணை வழங்கவும் ஆதரவை வழங்கவும் துரித சந்தை அணுகல் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விஜயத்தை 2018 நவம்பர் 28-30வரை சிட்னிக்கான மேற்கொண்டது.

XI. இலங்கை ஐ.சீ.டி.ஏ தூதுக்குழுவின் மெக்குவயர் பல்கலைக்கழகம், சிட்னிக்கான பயணம்.- இலங்கை தூதுக்குழுக்காக மெக்குவயர் பல்கலைக்கழகத்தின் கணணித் திணைக்களத்தில் விழிப்பூட்டல் ஏற்பாட்டையும் கொன்சுலேட் ஒழுங்கமைத்தது.

XII. இலங்கை IT-BPM கம்பனிகளுக்கான பீ2பீ கூட்டங்கள் சிட்னியில்- விற்பளை பீடம், ஆலோசனை முகவராண்மை ஒத்துழைப்புடன், இலங்கை கம்பனிகளுக்கு பொருத்தப்பாடு கூட்டங்கள் மற்றும் பீ2பீ அமர்வுகளையும் கொன்சுலேட் 2018 நவம்பர் 29ஆம் திகதி ஒழுங்கமைத்தது.

சுற்றுலா

I. சிட்னியில் இடம்பெற்ற சுற்றுலா கைத்தெதாழில் கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பு- இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் 2018 ஆகஸ்ட் 21-22 வரையில் டொக்சைட் டார்லிங் துறைமுகம்.

II. கௌன்சல் ஜெனரல் மற்றும் கௌன்சல் கொமர்சல் பெயார்பெக்ஸ் மீடியா அவுஸ்திரேலியாவுடன் இலங்கை சுற்றுளாவை அவர்களின் வருடாந்த நிகழ்வான "நைட் நூட்டில் மார்க்கட்" சிட்னியில் மேம்படுத்தும் முகமாக கூட்டமொன்றை 2018 ஒக்டோபர் 4-21வரையில் ஏற்பாடு செய்தது.

III. இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் மேண்டுகோளுக்கு இணங்க, (1) FAM சுற்றுளாவுக்கு தெரிவுசெய்யப்பட்ட அவுட்பைண்ட் சுற்றுலா செயற்பாட்டாளர்கள் (2) FAM சுற்றுலாவுக்கு தெரிவுசெய்யப்பட்ட பயண ஊடகவியலாளர்கள் (3) பில் போர்ட் கம்பனிகள் அவுஸ்திரேலியா (4) அவுஸ்திரேலியாவில் அச்சிடப்பட்ட பயண வெளியீடுகள் (5) பயண துறையிலுள்ள பீ.ஆர் கம்பனிகள்

முதலீடுகள்

i. பணிப்பாளர்/முதலீடுகள் உடன் முகாமைத்துவ பணிப்பாளர் ஹெலன்/ கமின்ஸ்கி திரு கிம் டார்லிங் அவர்களுக்கு கூடட்டம் ஒன்று 2018 ஏப்பிரல் 2ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்டது.

ii. கௌன்சல் கொமர்சல் கொழும்பில் வியாபாரம் ஒன்றை தாபிக்கும் அவரின் ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் திரு கார் விசன்பீக், எம்டீ/லாப் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து திரு கார் விசன்பீக் ஆகஸட் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அவர் தற்போது அவரது தகவல் தொழில்நுட்ப வியாபாரத்தை கொழும்பில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடுகின்றார்.

<u>கலாசார உறவுகள்</u>

<u>இலங்கை உயர் ஸ்தானிகராலயம்/கன்பரா</u>

i. உயர் ஸ்தானிகராலயம் வருடாந்த கம்பரா பல்கலாசார விழாவில் தேநீர் மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு பீடத்துடன் பெப்ரவரி மாதத்தில் பங்கேற்றது.

ii. 13 பேர் உள்ளடக்கிய இலங்கை தூதுக்குழுவானது உயர் ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட நீரில் மூழ்குதலை தடுத்தல் மற்றும் நீர் பாதுகாப்பு பயிற்சிபட்டறையால் அனுசரணை வழங்கப்பட்ட உயிர் காப்பு பற்றிய உயிர் காப்பு விக்டோரியாவில் பங்கேற்றது.

iii. உயர் ஸ்தானிகராலயம் விளையாட்டு அமைச்சர் மற்றும் உத்தியோகத்தர்கள் கோல் கோஸ்டடடில் ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற பொதுநலவாய போட்டிகளில் பங்கேற்பதற்கு அனுசரணை வழங்கியது.

இலங்கை கொன்சுலேட் ஜெனரல்/மெல்பேர்ன்

i. இலங்கை விசுதிமக்க சர்வதேச பௌத்த தாபனத்தின் தவைலர் அதிவணக்கத்துக்குரிய வெனரபல் நாகொட சட்டாலோக தெரோ அவரிகளின் 2018 17 மே -11யூன் வரையிலான மெல்பேர் விஜயத்திற்கு அனுசரணை வழங்கியது.

ii. விக்டோரியா பிராந்திய அரசாங்கத்தினால் ஐக்கிய நாடுகள் தின வெசாக் கொண்டாட்டங்கள்- 2018 மே 12ஆம் திகதி மெல்பேர்ன் நகர மண்டபம்

iii. விக்டோரியா பல்கலாசார ஆணைக்குழுவினால் 2018 யூன் 27ஆம் திகதி நடாத்தப்பட்ட பல்கலாசார மற்றும் பல்வகைத்தன்மை தின கொண்டாட்டத்தில் பங்கேற்பு

iv. மஹாமெவ்நாவ பாவனா அசப்பௌவவினால் 2018 ஆகஸ்ட் 25ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்ட மெல்பேர்ன் தாது மன்திரா பூஜாவுக்கு அனுசரைண வழங்கல்

இலங்கை தூதரகம்/பீஜீங்

1. **இருதரப்பு உறவுகள்**

I. இலங்கை ஹொனரரி கொன்சுலேட்டை உலான்பாட்டர் மங்கோலியாவில் தாபித்தல் தொடர்பான பணிக்கு அனுசரணை வழங்கியது

II. சீனா மற்றும் எனைய அங்கீகாரம் பெற்ற நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தல் தொடர்பில் தூதுவர் அதிமேதகு கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு பின்வரும் கூட்டங்களில்/ நிகழ்வுகளில் பங்கேற்றார்.

-வெளிநாடுகளுடான நட்புறவுக்கான சீனா சங்கத்துடன் எம்பசியில் 2018 சனவரி 17 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம்

- முதலீடுகள், வர்த்தகம் மற்றும் சுற்றுளாதுறை ஆகியவற்றை இலங்கை –சீனா இடையில் ஊக்குவிக்கும் நோக்கில், 2018 பெப்ரவரி 27ஆம் திகதி சின்உவா செய்தி முவருடன் எம்பசியில் இடம்பெற்ற நேர்காணல்.

-குஹான்ஜி சுஹான் சுயாட்சி பிராந்தியத்தில் 2018 ஏப்பிரல் 24-28 வரையில் குஹான்ஜி மற்றும் உலக நடைபவனி

-2018 மே 6-7வரையில் இடம்பெற்ற 14வது சீன சர்வதேச கலாசார கைத்தொழில் எக்ஸ்போ சந்தை இலங்கை கண்காட்சியாளர்களால் பங்கேற்கப்பட்டது.

-பென்கு, அன்ஹுயில் 2018 மே 26-28 வரை இடம்பெற்ற அன்ஹியி பென்கு புராதன வதிவிட எக்ஸ்போ பூங்கா பயணத்தில் பங்கேற்றல்.

-குமிங் மற்றும் லின்கேங்கில் 2018 யூன் 11-14 வரையில் இடம்பெற்ற நெஸ்ட் இன்வஸ்ட்மென்ட் யுநன் குரப் கம்பனிக்கு விஜயம் செய்தமை

-குமிங்கில் 2018 யூன் 14-17வரையில் இடம்பெற்ற 5வது சீன-தெண் ஆசிய எக்ஸ்போ மற்றும் 25வது சீன குமிங் இறக்குமதி சந்தையில் பங்கேற்றல்

-நிலைபேறான நகர அபிவிருத்தி பற்றிய 2வது உயர்மட்ட சர்வதேச மண்றம்.

குயின்டோ, சாங்டொங் மாகாணத்தில் ஆகஸ்ட் 11-12வரையில் இடம்பெற்ற 2018 மேற்கு கோஸ்ட் சர்வதேச ஈ-விளையாட்டு கைத்தொழில் உச்சி மாநாடு

-திபெத்தில் 2018 செப்டெம்பர் 7-11 வரையில் இடம்பெற்ற 2018 சர்வதேச சுற்றுலா மற்றும் கலாசார எக்ஸ்போ

-சென்டுஹு, சிஹுன் மாகாணத்தில் 2018 செப்டெம்பர் 19-21 வரையில் இடம்பெற்ற 17வது வெஸ்டர்ன் சீன சர்வதேச சந்தை(பெல்ட் மற்றும் பாதை கல்வி கண்காட்சி)

-2018 செப்டம்பர் 19-21 வரையில் இடம்பெற்ற கல்வி ஒத்துழைப்பு மன்றம்

2. பல்தரப்பு உறவுகள்

ஆசியாவில் கலந்துரையாடல் நம்பிக்கை கட்டியெழுப்பல் பற்றிய மாநாடு(CICA)

ஆசியாவில் கலந்துரையாடல் நம்பிக்கை கட்டியெழுப்பல் பற்றிய மாநாட்டின் (CICA) முழு உறுப்புரிமையை இலங்கை 2018 ஆகஸ்ட் 15ஆம் திகதி பெற்றுக்கொண்டது. இலங்கை சார்பில் அதிமேதகு தூதுவர் அவர்கள் உறுப்பு நாடுகள் மத்தியில் கொள்கை வழிகாட்டி உறவுகள் பற்றிய பிரகடனம் மற்றும் "ஆள்மட்டி சட்டம்" ஆகியவற்றில் பீஜிங்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கைச்சாத்திட்டார்.

மூங்கில் மற்றும் ரட்டான் பற்றிய சர்வதேச வலைப்பின்னல் (INBAR)

I. பீஜிங்கில் உள்ள மூங்கில் மற்றும் ரட்டான் பற்றிய சர்வதேச வலைப்பின்னலின் செயலகத்துடன் ஒழுங்கான தொடர்பை எம்பசி பேணுவதுடன் செயலகத்தால் ஒழுங்கமைக்கும் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளிலும் பங்கேற்கின்றது.

II. எம்பசியானது மூங்கில் மற்றும் ரட்டான் பற்றிய சர்வதேச வலைப்பின்னல பீஜிங்கில் 2018 யூன் 25-27 வரையில் இடம்பெற்ற INBAR's பிரேரணைகள் மற்றும் உலகலாவிய மூங்கில் மற்றும் சட்டான் காங்கிரஸ் தொடர்பில் ITI, MST&R மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு அனுசரணை வழங்கியது.

3. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

இருதரப்பு வர்த்தக முன்னெடுப்புகளை மேம்படுத்தல்

i. இலங்கை சிசுன் வர்த்தக முதலீட்டை அதிகரிக்கும் வகையில் சர்வதேச வர்த்தக CCPIT யின் மேம்பாட்டிற்காக சென்டு சிசுன் மாகாண கௌன்சில் உடனான கூட்டம்- 9வது தெண் ஆசிய சிசுன் வர்த்தக மேம்பாட்டு வட்ட மேசை மாநாட்டில் முதலீட்டுச்சபை, சம்மேளன பெடரேசன் மற்றும் COYLE மற்றும் இலங்கை கட்டளைகள் உள்ளிட்ட 22 இலங்கை உறுப்பினர்களை கொண்ட தூதுக்குழு பங்கேற்றது. வியாபார வட்ட மேசை மற்றும் சீன தென் ஆசிய ஸ்டென்டர்டைசேஷன் மாநாடு ஆகியவற்றில் முன்நிலைபடுத்தல்களை மேற்கொண்டது.

ii. சீன இயற்கை வளங்கள் அமைச்சின் தேசிய மாணிக்க தொழில்நுட்ப நிர்வாக நிலையத்துடன் கூட்டம்- 2018 திசம்பர் பீஜிங் சர்வதேச மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள் சந்தையில் இலங்கையின் பங்கேற்றல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

iii. பெல்ட் அன்ட் ரோட் சர்வதேச உற்பத்தி திறன் ஒத்துழைப்பு மேம்பாட்டு நிலையத்தின் இலங்கைக்கான விஜயத்தை 22 உறுப்பினர்களுடன் ஒழுங்கமைத்து அனுசரணை வழங்கள். இது தொடர்பில் செயலமர்வொன்று கிங்ஸ்பெரி ஹோட்டல் கொழும்பில் இடம்பெற்றதுடன் கௌரவ பிரதி நிதி அமைச்சர் இரான் விக்ரமசிங்க அததியாக கலந்துகொண்டார். உற்பத்தியாளர்களின் ஒத்துழைப்புடன் கொழும்பு துறைமுக நகரத்திற்கான விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டது.

iv. குன்மிங்கில் 2018 யூன் 6-10 வரையில் இடம்பெற்ற தென் ஆசிய பண்டங்கள் சந்தையில் 80 கண்காட்சியாளர்களுடன் பங்கேற்றல்

v. இலங்கை மென்பொருள் சங்கம் SLSSCOM மற்றும் சென்டு மென்பொருள் சங்கம் ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றுக்கு அனுசரணை வழங்குவதற்கு கொமர்சல் பிரிவு சிசுன் CCPIT உப கௌன்சில் இணங்கியது

புதிய உற்பத்திகள் அறிமுகம்:

- இலங்கை கடற்றொழில் உற்பத்திகளை சீனாவில் அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- காணப்படும் உற்பத்திகளின் சந்தை பங்கை விஸ்தரித்தல்: மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள் ஆகியவற்றை ஊக்குவித்து இலங்கை கண்காட்சிகளின் எண்ணிக்கையை சீனாவில் அதிகரித்தல். இது தொடர்பில் 15ற்கும் மேற்பட்ட வர்த்தக சந்தைகள் மற்றும் இவ்வாண்டில் இதுவரையில் 12ற்கும் மேற்பட்ட இலங்கை கண்காட்சிகளிவல் இலங்கை கண்காட்சியாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

வர்த்க சந்தைகளை ஒழுங்கமைத்தல் / பங்கேற்றல்

- ஹன்கு லக்சரி எக்ஸ்போ, சனவரி
- சென'ஹன் தேயிலை எக்ஸ்போ-மார்ச் (UBM)
- சன்காஹி ஜீவெல்ரி
- டாலியன் ஜீவெல்ரி கண்காட்சி-ஏப்பிரல்
- கும்மிங்-யூன் தெண் ஆசிய பண்டச் சந்தை(பீஜிங்-செப்டம்பர்)
- 10வது சீன ஹைனன் சர்வதேச கமுத்திர கைத்தொழில் கண்காட்சி
- தென் ஆசிய எக்ஸ்போ-யூன் குமிங்

இலங்கை புகழை சீனாவில் நிலைநாட்டும் வகையில் இலங்கை கண்காட்சியாளலர்கள் பின்வரும் கண்காட்சிகளில் பங்கேற்றனர்.

-முதலாவது சீன சர்வதேச இறக்குமதி எக்ஸ்போ சன்காஹி

-சீன புகையிரதப்பகுதி எக்ஸ்போ
-பீஜிங் மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சி பீஜிங் திசம்பர்
-ஹன்சுஹு தேயிலை எக்ஸ்போ திசம்பர்
-குலோபல் லொஜிஸ்டிக் அலாயன்ஸ் கொன்பெரி சென்ஹென்
-அன்உய் வேர்ட் ஹெரிடேஜ் இவன்ட் மேம்பாட்டு தேயிலை
-இலங்கை முதலீட்டு போரம்- அன்உய் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய முன்நிலைபடுத்தலை மேற்கொண்டது.
-மத்திய சீன சன்காச இறக்குமதி எக்ஸ்பொ மேம்பாடு இலங்கை தேயிலை
-கமத்தொழில் உற்பத்திகள் வகை மேம்பாட்டு மாநாடு
-ஹைனன் BOAO உச்சி மாநாடு

உள்வாரி வரத்தகம்/ கொள்முதல் செய்யும் தூதரகங்கள்
-8 உறுப்பினர்களை கொண்ட சீன கமத்தொழில் மொத்த விற்பனை சந்தை சங்கங்கள் இலங்கையில் விஜத்தை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல்

சந்தை உள்ளீடு இடர்களுக்கு பரிகாரம் காணல்:

-இலங்கை அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உறுதியளிப்பது தொடர்பில் சீன கமத்தொழில் அமைச்சுடன் சந்திப்பை மேற்கொண்டதுடன் அதன் அடிப்படையில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரச-தனியார் பங்குடைமையின் கீழ் வியாபார வலைப்பின்னல் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்ட முன்னெடுப்புகள்

-இலங்கை ஊக்குவிப்பு நிகழ்வு சென்டு மற்றும் குன்மிங்

அரச-தனியார் நிகழ்ச்சித்திட்ட முன்னெடுப்பின் கீழ் வியாபார வலைப்பின்னல் /முன்னேற்றம்

-இலங்கை மீன் உற்பத்தியாளர், தும்பு, மற்றும் அத்தியாவசிய எண்ணெய் தேயிலை

தேயிலை மேம்பாடு

- எப்போதும் பிரசித்தமான சீன பிலக் தேயிலை சந்தைக்கான புதிய ஏற்றுமாதியாளர்களுக்கு அனுசரணை வழங்கள் மற்றும் சீனா முழுவதும் விசேட சந்தைகளில் இலங்கையின் பங்கேற்றலை மேம்படுத்தல்.

முதலீட்டு மேம்பாடு

-இலங்கையில் சிசுன் முதலீட்டை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்டிகொள்ளப்பட்டன. விஹேடமாக உட்கட்டமைப்பு, வீடமைப்பு, கமத்தொழில், பொறித்தொகுதிகள், மறபார்ந்த சீன மருத்துவம், தகவல் தொழில் நுட்பம், புடைவை மற்றும் இரத்திரனியல், உணவு மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் ஆகியவற்றில்.

-தூதரகத்தில் SEIC முதலீட்டு செயலமர்வுக்கு அனுசரணை வழங்கள்

- தூதரகத்தில் முதலீட்டு செயலமர்வை நடாத்தல்

-ஜிலின் மாகாண தூதுக்குழுவை இலங்கையில் 2018 ஒக்டோபர் 23-25வரையில் விஜயம் மேற்கொள்வதற்கு அனுசரணை வழங்கள்

-சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தூதுக்குழுவின் இலங்கைக்கான விஜயத்திற்கு அனுசரணை. 2018 மே 28முதல் யூன் 01வரையில் சியன் வட்டமேசையில் பங்கேற்றல்.

சுற்றுலா மேம்பாடு

- சென்டு தொலைகாட்சி மற்றும் சிசுன் மாகாண சுற்றுலா அதிகாரசபையின் ஒத்துழைப்பை பெற்று இருதரப்பு சுற்றுலாவை சிசுன் மற்றும் இலங்கைக்கு இடையில் சென்டு மற்றும் கும்மிங் வர்த்க சந்தையின் போது மேம்படுத்தல் தொடர்பில் பல கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

- சீனாவின் பாரிய பயண அமைப்பான CITS உடன் ஒத்துழைப்பை பெற்று எம்.ஐ.சீ.ஈ சுற்றுலா செயலமர்வை ஒழுங்கமைத்தல்.

- சீனாவிலுள்ள IBTM, BITM, மருத்துவ சுற்றுலா மற்றும் பல பயண சந்தைகள் ஆகியவற்றில் இலங்கை சுற்றுலா மற்றும் கொன்வென்சன் பணியகத்தின் பங்கேற்பை மேற்கொள்வதற்கு அனுசரணை வழங்கள்

ஏனைய வர்த்தம் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்கள்

4. கலாசார உறவுகள்

i. இலங்கை மற்றும் சீன உறவுகளை காட்சிப்படுத்தும் புகைப்பட கண்காட்சியொன்று இடம் பெற்றது. இலங்கை சுதந்திரம் மற்றும் இலங்கை மாணிக்கக் கற்கள் போன்ற பொருட்களை காட்சிப்படுத்துவதன் ஊடாக இந்த நிகழ்வு இடம் பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பிருந்து சீன ஊடகங்கள் மூலம் விளம்பரப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

ii. இலங்கையில் படப்பிடிப்புக்கு ஏற்ற இடங்கள் மற்றும் சர்வதேச படபிடிப்பு இடங்கள் பற்றிய தகவல்களை கண்காட்சிப்படுத்தும் வகையில் 2018 மே 17 – 19 வரையில் பீஜிங்கில் இடம்பெற்ற 15வது சர்வதேச படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்ட கண்காட்சியில **தூதரகம்** பங்கேற்றது.

iii. பீஜிங்கில் யூன் 22 – 23 வலை இடம்பெற்ற மெரிடைம் சில்க் ரோட் ECI சர்வதேச இன்னோவேசன் விழாவில் இலங்கையின் கலாசாரம் மற்றும் கலை **நிகழ்ச்சிகள்** காட்சிப்படுத்தப்பட்டது.

5. தொழிலாளர் சேமநலன்

i. ஹொங்கொங் வாழ் இலங்கை தொழிலாளர் சமூகத்தின் சேமநலனுக்கு அனுசரணை வழங்கும் வகையில் ஹொங்கொங் கௌரவ கொன்சுலேட்டுடன் **தூதரகம்** ஒருங்கிணைப்பை மேற்கொண்டது.

ii. சீன சுற்றுலா பயணிகள் வீசா விண்ணப்ப செயல்முறைக்கு அனுசரணை வழங்கல். சீனாவிக் ‘‘யூனியன் பே’’ கொடுப்பனவு முறையை ETA முறைமையில் உள்ளடக்கும் முகமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் **தூதரகமி** பணியாற்றியது.

6. ஏனையவை

I. கல்வி

- இலங்கைக்கான சீன புலமைப்பரிசில் வாய்ப்புக்களை இலங்கை கல்வி அமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஊடாக சாத்தியமான சீன விண்ணப்பதாரிகளுக்கு சீன புலமைப் பேரவையின் மூலம் **தூதரகமி** அறிமுகம் செய்தது.

- சீனாவிலுள்ள இலங்கை மாணவர்களுக்கு அவசியமான ஆலோசனைகளை **தூதரகமி** எம்பசி வழங்கியதுடன் அவர்களின் கேள்விகள் மேன்முறையீடுகள் தொடர்பில் சீன கல்வி அதிகாரிகளை தொடர்பு கொண்டு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- இலங்கை மாணவர்களுக்கு எம்பசியின் கல்வி மற்றும் கலாசார பிரிவு பற்றிய செய்திகள் / தகவல்கள் வழங்கும் முகமாகவும் கல்வி சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் துரித அணுகலை எம்பசியிடம் இருந்து பெறும் முகமாகவும் சமூக ஊடக குழுவொன்று தாபிக்கப்பட்டது.

- உயர்கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு. பேராதெனிய பல்கலைக்கழகம், NSBM, CINEC போன்ற இலங்கை கல்வி அதிகாரசபைகளுக்கு அவசியமான ஒருங்கிணைப்பையும் அனுசரணையை வழங்கியும் கண்காட்சி கூடங்களுக்கு மாணவர்களின் சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து, ஜெய்சுவில் இடம்பெற்ற உயர் தொழில் கல்வி மன்றம் (செப்டம்பர் 14 -18) மற்றும் சென்ஜீ கல்வி எக்ஸ்போ (செப்டம்பர் 20 -24) போன்ற கல்வி சந்தைகள் மற்றும் மன்றங்களின் முனைப்புடன் எம்பசி பங்கேற்றது. கல்வி எக்ஸ்போ, சீன சர்வதேச கல்வி நிறுவகம் ஆகியவற்றின் விளைவாக எதிர்காலத்தில் உறவுகளையும் சாத்தியமான புதிய ஒத்துழைப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று CINEC உடன் 2018வாய்ப்பையும் பெற்றுக் கொண்டது.

II. பாதுகாப்பு

- தூதரகம் இலங்கை படையினருக்கு இராணுவ பாடநெறிகளை வழங்குவதற்கான அனுசரணையை வழங்கியதுடன் 2018 / 19 ஆண்டில் இலங்கை பாதுகாப்பு படையினருக்கு 285 கிரடிஸ் இராணுவ பாடநெறிகளை பெற்றுக் கொண்டது.

- இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் வான்படை பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்படும் இராணுவ பாடநெறிகள் சீன பாதுகாப்பு அமைச்சால் ஏற்றும கொள்ளப் பட்டதுடன் எட்டு (8) PLA அதிகாரிகளை இலங்கை அனுப்பியும் இருந்தது.

- 12 வீரர்களை உள்ளடக்கிய இலங்கை இராணுவ குத்துச்சண்டை குழுக்கள் 2018 யூலை 22 - 31 வரை சீனாவில் உயர்மட்ட குத்துச்சண்டை பயிற்சியில் கலந்து கொண்டன.

- கடற்படை பிரதானி உட்பட இலங்கை தூதுக்குழுவுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கபில வைத்தியரத்ன பீஜிங்கில் 2018 ஒக்டோபர் 24 – 26 வரையில் இடம்பெற்ற 8வது பீஜிங் சியன்சான் மன்றத்தில் கலந்து கொண்டனர். பாதுகாப்பு செயலாளர், மன்றத்தின் போது ஜெனரல் வெய் பென்ஜி, அரச கௌன்சலர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர பணியாள் சாவின் பிரதித் தலைவர் ஆகியோரை சந்தித்தார். PLA கடற்படையில் கடற்படை கட்டளை கல்லூரியின் கட்டளை அதிகாரி.

- சீன கடற்படை கப்பல் நான்கு நாள் நல்லெண்ன விஜயத்தை மேற்கொண்டு ஒக்டோபர் 4 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தது.

- PLA கடற்படையில் இருந்து கடற்படை கட்டளை கல்லூரியின் கட்டளை தளபதி ரியர் எட்மிரல் தலைமையில் தூதுக்குழு ஒன்று இலங்கை கடற்படை ஒழுங்கமைத்த காலி கலந்துரையாடலில் பங்கேற்றது.

- சீன வான்படை கண்காட்சி 2018 இல் இலங்கை இராணுவத்தை சேர்ந்த இரண்டு பிரிகேடியர்கள் பங்குபற்றினர்.

கோன்சுலேட் ஜெனரல், குவான்கு

1. **இருதரப்பு உறவுகள்**

தூதுக்குழு விஜயங்கள்

I. கமத்தொழில் விஞ்ஞான குவான்டொங் கல்லூரியின் தலைவர் திரு லூ ஊசொங் மற்றும் பல்வேறு ஆய்வு பிரிவுகள் / நிறுவனங்களை சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் தூதுக்குழு 2018 யூன் 25 – 28 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டது.

கொன்சல் ஜெனரல் வருகை தந்த தூதுக்குழுவிற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சம்பந்தப்பட்ட அரசியல் பீடங்களுக்கு விஜயம் செய்வதற்கான கூட்டங்களை ஏற்பாடு செய்தார்.

இலங்கை கமத்தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியவற்றுடன் இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் GAAS ஆல் பிரேரிக்கப்பட்டன.

II. திரு யூங் பின்சி / சீன உதவி செயலாளர் நாயகத்தின் விஜயம் - ஆசியான் செயலகம் மற்றும் நான்கு உறுப்பினர்கள் தூதுக்குழு 2018 யூலை 1 – 4 வரை இலங்கைக்கு விஜயம்.

III. சீன விஞ்ஞான கல்லூரியின் துணைத் தலைவர் மற்றும் குவான்சுவின் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சீன - இலங்கை இணை நிலையத்தின் தலைவர் மற்றும் தூதுக்குழு ருகுன பல்கலைக்கழகத்தின் 2018 செப்டெம்பர் 25 – 30 வரை விஜயம் செய்ததது.

IV. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றுடன் தூதுக்குழுவிற்கு சீன – ஆசியான் செயலகம் ஆகியவற்றும் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முகமாக கூட்டங்களை கௌன்சல் ஜெனரல் ஏற்பாடு செய்தார்

2. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

சுற்றுலா மற்றும் வர்த்தகம் / முதலீடுகள் மன்றம்

I. 2018 மார்ச் 1 – 3 வரை குவான்சூவில் இடம்பெற்ற சர்வதேச பயண சந்தையில் (GITF) இலங்கையின் பங்கேற்பை கொன்சுலேட் ஜெனரல் ஒழுங்கு செய்தார். இலங்கை சுற்றுலா மேம்பாடு பணியகத்துடன் 15 இலங்கை பயண முகவராண்மைகள் மற்றும் நான்கு ஒப்பரேட்டர்ஸ் பங்கேற்றனர்.

இலங்கை தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக " அதிக கவர்ச்சியான சுற்றுலா முடிவிடம்" என்ற விருதை வெற்றியீட்டியது. 2014 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையின் இரண்டாவது பாரிய சுற்றுலா மூல சந்தையாக சீனா இருந்து வருகின்றது.

II. இலங்கை சுற்றாடல் ரோட்சோ GITF3றுடன் 2018 மார்ச் 5 ஆம் திகதி குஹன்சூவில் நடைபெற்றது.

இலங்கை கம்பனிகள் ரோட்சோவில் பங்கேற்கதை பிஸ்னஸ் - பிஸ்னஸ் வலையமைப்பு அமர்வு ஊக்குவித்ததுடன் பல வியாபார வாய்ப்புகளுக்கும் வழி சமைத்தது.

III. திரு கிஹான் டி சில்வா விஜேரட்னவுடன் இலங்கை வனசிவராசிகள் பற்றிய செயலமர்வொன்றை கொன்சுலேட் ஜெனரால் ஒழுங்கமைத்து நடாத்தியது. இலங்கையில் காணப்படும் எண்ணற்ற வனசீவராசிகள் தொடர்பில் குஹான்டொங் மாகாணத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு இலங்கை வனசீவராசிகள் நிபுணர் அமர்த்தப்பட்டுள்ளார்.

அ. இந்த பணிப்பட்டறை இலங்கையில் உள்ள வனசீவராசிகள் மற்றும் வனசீவராசிகள் சபாரி ஆகியவற்றை விஷேடமாக உள்ளடக்கியது.

IV. 18 வது சர்வதேச உணவு கண்காட்சி, குஹான்சூவில் இலங்கையின் பங்கேற்றலை கொன்சுலேட் ஜெனரல் அனுசரணை வழங்கினார். தேயிலை மற்றும் தென்னை துறையை சேர்ந்த இரண்டு இலங்கை கம்பனிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றன.

V. இலங்கையில் கைப்பணி பொருட்களை மேம்படுத்தவும் மரபார்ந்த மற்றும் சேர் பெறுமதி ஏற்றுமதிகளை சீனாவில் கண்காட்சிபடுத்தவும் குஹன்சூவில் வர்த்தக சந்தையை கொன்சுலேட் ஜெனரல் ஒழுங்கு செய்தார்.

VI. இலங்கையையொரு தனித்துவமான சுற்றுலா முடிவிடமாக மேம்படுத்தும் முகமாக சீன பிரயான முகவராண்மைகள் மற்றும் அச்சு ஊடகம் ஆகியவை மூலம் செப்டெம்பர் 8 ஆம் திகதி சுற்றுலா செயலமர்வு இடம் பெற்றது.

VII. நாடு பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் மூன்று நாள் நிகழ்வின் போது ஒரு பீடத்தை பேணுவதன் மூலம் 2018 செப்டம்பர் 7 – 9 வரை சீனாவில் இடம்பெற்ற சுற்றுலா எக்ஸ்போவில் கொன்சுலேட் ஜெனரல் பங்கேற்றார்.

VIII. 2018 செப்டெம்பர் 7 - 9 வரை இடம் பெற்ற உணவு மற்றும் விருந்தோம்பல் வர்த்தக சந்தையில் இலங்கையின் பங்கேற்புக்கு கொன்சுலேட் ஜெனரல் அனுசரணை வழங்கினார்.

IX. மன்னிங், குஹான்சி மாகாணத்தில் 2018 செப்டெம்பர் 12 – 15 வரை இடம் பெற்ற 15வது சீனா – ஆசியான எக்ஸ்போவில் இலங்கையின் பங்கேற்புக்கு கொன்சுலேட் ஜெனரல் அனுசரணை வழங்கினார்.

X. 15வது சீன சர்வதேச சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் சந்தையில் இலங்கையின் பங்கேற்றலை கொன்சலேட் ஜெனரல் ஒழுக்கத்துடன் இதில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் தேசிய மாணிக்கக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் இலங்கையை சேர்ந்த 30 சிறிய மற்றும் நடத்தர தொழில் முயற்சியாளர்கள் பங்கேற்றனர்.

XI. இலங்கை கம்பனிகள் அவற்றின் உற்பத்திகளுக்கு குஹான்டொங் மாகாணத்தில் வர்த்தக வாய்ப்புகளை அணுகும் வகையில் 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதி B – B ஒருங்கிணைப்பு கூட்டமொன்றை கொன்சுலேட் ஜெனரல் அனுசரணை வழங்கினார்.

XII. இலங்கை சேர் பெறுமதி ஏற்றுமதிக்ள மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் ஆகியவை தொடர்பில் விழிப்பூட்டும் வகையில் 2019 ஒக்டோபர் 12ம் திகதி குஹான்சூவில் இலங்கை வர்த்தக செயலமர்வொன்றை கொன்சுலேட் ஜெனரல் நடாத்தினார்.

XIII. டொன்குவானில் 2018 ஒக்டோபர் 25 – 28 வரை இடம் பெற்ற குஹான்டொங் 21வது சென்சரி மெரிடைம் சில்க் ரோட் சர்வதேச எஸ்போவில் இலங்கையின் பங்கேற்றலை ஏற்படுத்துவதற்கு கொன்சுலேட் ஜெனரல் ஆதரவளித்தார்.

XIV. திரு சமர் லீ / பொது முகாமையாளர் மற்றும் குஹான்சூ கிரியேட் விவ் சர்வதேச தரவு தகவல்கள் கம்பனி லிமிடட்டின் பிராண்ட் பணிப்பாளர் மிஸ் டான் கியுயிங் (இது சீனாவின் முன்னணி கல்வி கைத்தொழில் முயற்சியான்மையானரதும்) 2018 ஒக்டோபர் 29 ஆம் திகதி கொன்சல் ஜெனரலை சந்தித்ததுடன் பின்னர் இலங்கை பல்கலைக்கழகங்களில் ‘‘ஸ்மார்ட் சிலாஸ்’’ கருத்திட்டங்களுக்கு உள்ள வாய்ப்புக்களை கண்டறிய அவர்களின் உற்பத்தி காட்சியறைக்கு விஜயம் செய்தார்.

மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள் மற்றும் தேயிலை துறைகளை சேர்ந்த 09 இலங்கை கம்பனிகள் பங்கேற்றது. நன்னிங் இல் காணப்படும் மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடன் கம்பனிகள் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துவதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

<u>வர்த்தக விசாரணைகள்</u>

i. இந்தப் பதவியானது வர்த்தக சச்சரவுகளை முறையாக விசாரணை செய்து தீர்ப்பதற்கும் துணை புரிகின்றது. வர்த்தக சம்மேளனம் மற்றும் ஈ - வர்த்தக மேடை இயக்குநர்கள் ஆகியோருடன் இலங்கை பொருட்களுக்கு ஈ - வர்த்தக மேடையில் சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கு முறையான கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

3. கலாசார உறவுகள்

இலங்கை குசினை (Cuisine) மேம்படுத்தல் மற்றும் விழிப்பூட்டல்

i. 2018 மே 8 – 10 வரை இடம் பெற்ற போகூஸ்ட் டி ஆசிய பசுபிக் கலினரி போட்டியில் (Bocuse d'Or Asia Pacific Culinary) இலங்கையின் பங்கேற்றலை கொன்சுலேட் ஜெனரல் அனுசரணை வழங்கினார். இந்த போட்டியில் வோட்டர்ஸ் எட்ஜ்ஜை சேர்ந்த இரண்டு சமையல் வல்லுனர்கள் பங்கேற்றனர்.

ii. 2018 செப்டெம்பர் 28 - நவம்பர் 1 வரை பியுஜீயான் மாகாணத்தில் இடம் பெற்ற 5வது உலக பௌத்த மன்றத்தில் பங்கேற்பதற்காக இலங்கை ராமாரு மஹா நிகாயவை சேர்ந்த ரோயல் பண்டித் வண. நாபன பேமசிறி தேரோவின் தலைமையில் 13 பௌத்த பிக்குகள் உள்ளடக்கிய தூதுக்குழுவுக்கு கோன்சுலேட் ஜெனரல் உதவி வழங்கினார்.

கொன்சுலேட் ஜெனரல், சன்ஹாய்

4. இரு தரப்பு உறவுகள்

I. 13வது சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் திறப்பு விழா.

II. 15வது தேசிய அரசியல் மாநாட்டின் திறப்பு விழா

III. ஹொன்சு வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகத்தில் சந்திப்பு

IV. சன்காய் மாநகர மக்கள் காங்கிரசின் நிலையியற் குழு தலைவர் Mme Yin Yicui மற்றும் அவரது தூதுக்குழுவின் இலங்கைக்கான விஜயம்.

V. குசூ (QUZHOU) வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகம் மற்றும் குசூ சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப நிலையத்தில் சந்திப்பு

VI. சிஸ்டர் - சிடி ஒத்துழைப்பு தொடர்பில் குசூ சர்வதேச மேயர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகத்தில் சந்திப்பு.

VII. சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டு சன்காய் குழுவை 2018 சந்தித்தல்.

VIII. சன்காய் முனிசிபல் மக்கள் அரசின் மேயரை சந்தித்தல்.

5. பொருளாதார உறவுகள்.

I. "போகசிங் ஒன் த பெல்ட் அன்ட் ரோட் அன்ட் கொன்றிபியூசன் டு ஹெல்சி சைனா" என்ற தொனிப் பொருளில் சீனா வைத்தியசாலை அபிவிருத்தி பற்றிய சர்வதேச மன்றத்திற்கான மாநாட்டு தயார் பணி.

II. "லங்கா சீனா பொருளாதார மற்றும் கலாசார பேரவை" தாபித்தல் தொடர்பில் பீஜிங் லாங்சேங் சென்சரி எக்ஸிபிஷன் கம்பனியைச் சந்தித்தல்.

III. இலங்கை மற்றும் சீனா கலாசார மற்றும் பொருளாதார பரிமாற்ற கூட்டம் 2018.

IV. சீனா சுகாதார கைத்தொழில் மேம்பாட்டு மன்றம்

V. உலகளாவிய தொழில் முயற்சியாண்மைக்காக சன்காய் ஒருங்கிணைந்த சேவை நிலையத்தை அங்குரார்ப்பனம் செய்யும் விழா.

VI. நிங்கியா வர்த்தக சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட சன்காய் 1வது வியாபார மன்றம்.

VII. ஹைநன் மாகாணத்தில் 9வது சீன சர்வதேச மாநாட்டு கைத்தொழில் விழா.

VIII. வன் பெல்ட் அன்ட்ரோட் பிரான்ட் எக்ஸ்போ திறப்பு விழா.

IX. கிலீன்லண்ட் குளோபல் கொமோடிடி டிரேடிங் ஹப் அங்குரார்ப்பன விழா.

X. சன்காயில் இலங்கை மாணிக்க கண்காட்சி நிலையத்தில் சந்திப்பு

XI. இலங்கை கடல் உணவு கைத்தொழில் மேம்பாடு தொடர்பில் ஓரியன்டல் கடற்றொழிலாளரின் இரவு.

XII. குசூ வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகம் மற்றும் குசூ சர்வதேச வர்த்தகம் மற்றும் வர்த்தக நிலையத்தில் சந்திப்பு

XIII. யூயான் டியான்டி இறக்குமதி உணவு விநியோக சங்கிலி மேடை மன்றம்.

XIV. 2018 சீன சர்வதேச கைத்தொழில் சந்தை திறப்பு விழா

XV. சீன லொஜிஸ்டிக் மற்றும் பர்சர்ஸ்சிங் டிரேட் அன்ட் எக்ஸ்ஸிபிசன் ஹெட் குவாடர்ஸ் பேஸில் சந்திப்பு

XVI. 2018 சீன சர்வதேச எக்ஸ்போவுக்கான தயார் நிலை மாநாடு

XVII. இலங்கை பிரதம பாதுகாப்பு அதிகாரி மற்றும் புரடகோல் தூதுக்குழு மற்றும் சீன அதிகாரிகளுக்கான புரடகோல் பாதுகாப்பு விவரங்கள் தொடர்பில் 2018 CIIE சந்தித்தல் மற்றும் கள விஜயம்.

XVIII. சீன – லங்கா கலாசார தலைசார் மற்றும் பொருளாதார பரிமாற்ற கம்பனிக்கான 2018 CIIE ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியோரை சந்தித்தல்.

XIX. சர்வதேச வர்த்தக சங்காய் உப – கொன்சில் மேம்பாட்டுக்கான சீன கொன்சுலை சந்தித்தல்.

XX. பெல்ட் அன்ட் ரோட் கொன்ஸ்ரக்ஷன் கோமரேசன் சிம்போசியம் பற்றிய முன்நிலைப்படுத்தல்கள்

XXI. பெல்ட் அன்ட் ரோட் இன்டர்நேஷனல் இகோனோமிக் அன்ட் டிரேட் கோபரேசன் ப்ரோமோசன் கொன்பரன்ஸ் சூஊ

XXII. லங்கா டியுஜியன் வர்த்தக சம்மேளன தலைவரை சந்தித்தல்.

XXIII. சீனா சர்வதேச தங்க, ஆபரண மற்றும் மாணிக்க சந்தை

XXIV. ஆன் லைன் வர்த்தக கூட்டுறவுக்காய் யுஹன் டியன்டி கருத்திட்டத்தை சந்தித்தல்

XXV. அன்ஹி மாகாணம் மற்றும் சன்காய் வெளிநாட்டு தூதரகம் இடையில் கலந்துரையாடல் மற்றும் தொழில் முயற்சியாளர்களை இணைக்கும் நிகழ்வுகள்.

XXVI. எக்ஸ்போ தொடர்பான எதிர்கால கூட்டுறவுக்காக ரீட் எக்சிபிசன்ஸ் இன்டர்நேசனல் நெட்வேர்க்கிங் நைட்.

6. கலாசார உறவுகள்

I. இலங்கையின் 70வது சுதந்திர தினத்திற்காக ஆயத்தம் செய்யும் வகையில் சீன – லங்கா பொருளாதார கலாசார கம்பனியை சந்தித்தல்

II. இலங்கை கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் ‘‘லிட்டில் பிரக்டிசனர்ஸ் மாணவர்கள்’’ கொன்சுலேட்டிற்கு விஜயம் செய்தல்.

III. இலங்கை கலாசாரம் மற்றும் கல்வி உறவுகளை மேம்படுத்துவதற்கான Jinhaua சர்வதேச ஆரம்ப பாடசாலை மாணவர்களின் விஜயம்.

IV. இலங்கை கலாசார மற்றும் கல்வி உறவுகள் மேம்பாடு தொடர்பில் Jinhaua சர்வதேச ஆரம்ப பாடசாலை மாணவர்களின் விஜயம்.

V. ஜேட் புத்த பன்சலை பிரதம தேரரை சந்தித்தல்

VI. இலங்கை கலாசாரத்தை மேம்படுத்த சன்காய் eyeயால் வீடியோ நேர்காணல்.

VII. இலங்கை பௌத்த கலாசாரம் மற்றும் மத சுற்றுலாக்களை மேம்படுத்துவதற்கு சீன – ஆசிய பொருளாதார அபிவிருத்தி சங்கம் மற்றும் Takungpao வினால் சன்காய் Xilin கோவில் ஆரம்ப விழா.

VIII. சர்வதேச பேரன் ஊட் மேகர் பப்லிக் பெல்பெயா மார்க்கட்

IX. இலங்கை கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு சன்காய் Shenfeng ஜியாலேஜிகல் நியு தொழிநுட்ப அப்ளிகேசன் ஆய்வு நிலையத்தில் சந்தித்தல்.

X. ICS தொலைக்காட்சி சேவையின் 10வது ஆண்டு விழா.

XI. சீன - இலங்கை தூதுவரின் கலை மற்றும் கலாசார பரிமாற்ற போட்டி

XII. இலங்கை தேயிலை, சுற்றுலா மற்றும் மாணிக்கம் ஆகியவற்றை மேம்படுத்த குளோபல் டைம்ஸ் நேர் காணல்.

XIII. கலாசார பரிமாற்றம் தொடர்பில் லிட்டில் மாஸ்டர் ஜேர்னல் மாணவர்களின் விஜயம்.

XIV. கலாசார பரிமாற்றம் தொடர்பில் சிலோன் பிரிசஸ் குஹான்சூவில் சந்திப்பு

XV. கலாசார பரிமாற்றம் தொடர்பில் Huamei வைத்தியசாலை தர்ம தன நடவடிக்கை

XVI. கலாசார மற்றும் கல்வி ஒத்துழைப்பை நாடும் வகையில் யன்கி தர்ம பௌன்டேசன் செயலாளரை சந்தித்தல்

7. வெளிநாட்டு முதலீடுகள்

இலங்கையில் வாய்ப்புக்கள் பற்றிய பவர் - பொயின்ட் முன்னிலைப்படுத்தல்

I. சாத்தியமான முதலீடுகளுக்காக தென் - தென் கூட்டுறவு Yangtzi ரிவர் டெல்டா கிளையின் செயலாளருடன் சந்திப்பு

II. முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் சன்காய் சன்சைன் டெகரேடிவ் மெடேரியல் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளருடன் சந்திப்பு

III. சாத்தியமான முதலீடுக்காக தென் - தென் கூட்டுறவு Yangtzi ரிவர் டெல்டா கிளையை மேம்படுத்துவதற்காக கௌசிலால் Quzhouக்கான கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

IV. சாத்தியமான முதலீட்டுக்காக சர்வதேச வர்த்தக Hangzhou குழுவை மேம்படுத்துவதற்காக சீன கௌன்சிலை சந்தித்தல்.

V. ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களின் முதலீட்டு வாய்ப்புகளுக்கான ஜியாங்சு வர்த்தக சம்மேளனத்துடனான சந்திப்பு.

VI. இலங்கையில் சாத்தியமான முதலீடுகளுக்காக சன்காய் அகியுலா IMP. மற்றும் EXP. யை சந்தித்தல்.

VII. மூலதன வாய்ப்புகளை நாடி Guome கம்பனிகளின் CEO வை சந்தித்தல்

VIII. சாத்தியமான முதலீட்டிற்காக சர்வதேச வர்த்தக WUXI குழுவை மேம்படுத்தும் பொருட்டு சீன கௌவுன்சின் தலைவரை சந்தித்தல்.

IX. சாத்தியமான முதலீட்டிற்காக Wenzhpu வர்த்தக சம்மேளனத்தை சந்தித்தல்

X. சாத்தியமான முதலீட்டை நாடும் வகையில் Qingpn மாவட்டத்தின் முதலீட்டு சுற்றாடல் மேம்பாட்டை மேற்கொள்ளல்

XI. தொழில்சாலை நிர்மானம் தொடர்புடைய முதலீட்டு ஒத்துழைப்புக்காக Haicheng நகரத்திற்கு விஜயம் செய்து மேயரை சந்தித்தல்

8. தேயிலை மற்றும் சுற்றுலா மேம்பாடு

இலங்கை சுற்றுலா முடிவிடமாக பவர் பொன்ய்ண்ட் பிரசன்டேசன்

I. **இலங்கை சுற்றுலாவை மேம்படுத்த** Yi You **சர்வதேச டிரவல்ஸ் முகவராண்மையின் முகாமையாளரை சந்தித்தல்**.

II. இலங்கை சுற்றுலா மேம்படுத்த டிரவல் அன்ட் லெசர் மகசீனின் வருடாந்த பயண விருது வழங்கல் விழா.

III. இலங்கை தேயிலையை மேம்படுத்த சன் காய் Tea Forth கம்பனியை சந்தித்தல்.

IV. சுற்றுலா ஒத்துழைப்புக்காக சன் காய் Baiqian இன்டஸ்டிரியல் கம்பனியை சந்தித்தல்

V. இலங்கை தேயிலையை மேம்படுத்துவதற்கு 2018 சன் காய் உலக பயண சந்தையை திறக்கும் ஆரம்ப வைபவம்

VI. இலங்கை சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் 2018 சன் காய் உலக பயண சந்தையை திறக்கும் ஆரம்ப வைபவம்

VII. இலங்கை சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் வன் பெல்ட் அண்ட் ரோட் கல்சர் மற்றும் டுவரிசம் போம்

VIII. இலங்கை சுற்றுலாவை மேம்படுத்த Zhosahan இல் "ஐலண்ட்ஸ், வளங்கள், சுற்றுலா மற்றும் சமூகம்"

IX. சுற்றுலா ஒத்துழைப்புக்கான பயண முகவர் ஸ்பொட் ரெய்சன் கம்பனியை சந்தித்தல்

X. சுற்றுலா மேம்பாட்டிற்காக 13 ஆவது சீன சர்வதேச லெசன் இண்டஸ்டிரி எக்ஸ்போ

XI. சீன சர்வதேச பயண மார்ட் 2018 ஆரம்ப வைபவம்

XII. இலங்கைகு "சிறந்த சுற்றுலா வீடியோ" என்ற விருதுடன் 3 அவது உலக சுற்றுலா வீடியோ போட்டியில் விருது விழா

XIII. Ningbo சுற்றுலா ரோட் கண்காட்சி

<u>ஜப்பானில் இலங்கைத் தூதரகம்</u>

இரு தரப்பு உறவுகள்

I. அதிமேதகு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயம் ஜப்பானிய பிரதமர் திரு சன்சு அபே அவர்களின் அழைப்பின் பேரில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜப்பானுக்கான விஜயத்தை 2018 மார்ச் 12-17 வரை மேற்கொண்டார். பிரதமரின் அலுவலகத்தில் இருதர்ப்பு உச்சி மாநாட்டை மார்ச் 14 ஆம் திகதி இரண்டு தலைவர்களும் மேற்கொண்டார். கூட்டத்தின் முடிவில், இலங்கையில் சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மேம்பாட்டிற்கென 10.639 பில்லியன் யென் கடன் வடிவத்திற்கான பத்திரங்கள் பரிமாறப்பட்டன.

II. முதலீட்டு மன்றம்

உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் பங்கேற்றலுடன் இலங்கை – ஜப்பான் முதலீட்டு பங்குடமையை மேலும் வலுவூட்டும் வகையில் முதலீட்டு மன்றம் ஒன்று டோக்கியோவில் இடம்பெற்றது.

III. கழிவு முகாமைத்துவ தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்ள ஜப்பானின் இருந்து கழிவு முகாமைத்துவ தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்ளும் வகையில், அதிமேதகு ஜனாதிபதி

மற்றும் அவரின் தூதுக் குழுவினர் Shinaguwa Ineinerutim Plant, நவீன உயர் தொழில்நுட்ப கழிவு முகாமைத்துவ பொறிமுறை தொகுதிக்கு விஜயம் செய்தனர்.

IV. இலங்கை கடலோர காவற் படைக்கு கண்காணிப்பு ரோந்து கப்பல் நன்கொடையளித்தல்

SLCAS சமுத்திர ரஸ்கா" மற்றும் SLCGS சாமரக்ஷா ஆகிய இரண்டு கரையோர ரோந்து கப்பல்கள் 2018 ஆகஸ்ட் 29 ஆம் திகதி இரண்டு நாடுகளுக்கும் இடையிலான விரிவான பங்குடமை தொடர்பான இணை பிரகடனத்தின் அடிப்படையில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாட்டப்பட்ட மானிய உடன்படிக்கையின் ஒரு பகுதியான இலங்கைக்கு நன்கொடை வழங்கப்பட்டது/ இந்த ரோந்து கப்பல்கள் கடல்சார் பாதுகாப்பு, கடல்சார் சட்ட அமுலாக்கம் தேடுதல் மற்றும் காப்பாற்றல், அனர்த்த ஆபத்தை தணித்தல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற இலங்கை படையின் திறனை அதிகரிக்கும்.

இலங்கை கரையோர பாதுகாப்பை சேர்ந்த 08 உத்தியோகத்தர்களுக்கு ரோந்து கப்பல்களில் 2018 மே 07-19 வரை டோக்கியோவில் பயிற்சியொன்று வழங்கப்பட்டது.

V. இருதரப்பு விஜயங்கள்

I. கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் பாராளுமன்ற தூதுக் குழுவொன்று 2018 பெப்ரவரி 25- மார்ச் 03 வரை ஜப்பானுக்கு விஜயம் செய்தது

.

II. காணி மற்றும் பாராளுமன்ற சீர்த்திருத்த அமைச்சர் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பிரதான கொறடாவான கயந்த கருணாரதிலக மற்றும் இலங்கை பாராளுமன்ற உத்தியோகத்தர்களை உள்ளடங்கிய தூதுக்குழு ஒன்று 2018 ஏப்ரல் 8-13 வரை ஜப்பான் பாராளுமன்ர முறைமை தொடர்பில் கற்றல் விஜயமொன்ரை மேற்கொண்டார்,

III. சபுகஸ்கந்த பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் கல்லூரியின் உத்தியோகத்தர்கள் 2018 ஆகஸ்ட் 2-14 வரை ஆய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றில் கலந்து கொண்டார்.

IV. ஜப்பான் இராஜாங்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குசுயுகி நகானே 2018 ஆகஸ்ட் 28-30 வரை இலங்கையில் விஜயம் மேற்கொண்டதுடன் ஜப்பானால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு கப்பல்களையும் ஆரம்பித்து வைத்தர்.

V. ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் திரு இசு நோரி ஒனோரா 2018 ஆகஸ்ட் 20-22 வரை இலங்கையில் விஜயம் மேற்கொண்டார். இது அவரின் இலங்கைக்கான முதலாவது விஜயமாகும்.

VI. ஜப்பான் வெளி விவகார அலுவல்கள் அமைச்சர் கௌரவ டாரோ கொனோ 2018 ஜனவரி 05 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார்.

VII. ஆசிய – ஆபிரிக்க சட்ட ஆலோசனை தாபனத்தின் 57 ஆவது ஆண்டு அமர்வில் நீதி மற்றும் சிறைச்சாலை அமைச்சர் தலதா அதுகோரல 2018 ஒக்டோபர் 8-10 வரை பங்கேற்றார். அத்துடன் ஜப்பான் நீதி அமைச்சர் கௌரவ தடசாகி யமாசிட்டா இருதரப்பு கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

VIII. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னாள் அலோசகர் கலாநிதி சரத் அமுனுகம 2018 ஒக்டோபர் 7-9 வரை கையோடோ ஜப்பானில் இடம் பெற்ற 15 அவது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் வருடாந்த மன்றத்தில் பங்கேற்றார்.

IX. இலங்கை உடன் ஜப்பான் பிராந்திய மற்றும் சர்வதேச மன்றங்களில் ஒவ்வொருவரின் வேட்பாளர்களுக்கான ஆதரவை பரிமாற்றிக் கொண்டார்.

பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. 2018 ஆண்டானது அதிமேதகு ஜனாதிபதியின் ஜப்பானிய விஜயம் உட்பட உயர் மட்ட அரசியல் விஜயங்களை ஏற்படுத்தியது. இந்த விஜயமானது சிறந்த பொருளாதார உறவுகளுக்கான நேர்மறை சமிஞ்சையை காட்டியுள்ளது. இரண்டு நாடுகளுக்கு இடையில் பரந்த பொருளாதார உறவுகளின் முன்னேற்றதை கலந்துரையாடுவதற்கான ஜப்பான் பிரதமரின் விசேட ஆலோசகர் கலாநிதி ஹிரோதோ இசுமி 2018 ஆம் ஆண்டு இலங்கை விஜயத்தை மேற்கொண்டார்.

II. ஜப்பானில் இருந்து முன்னணி வர்த்தக தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதியுடனும் வர்த்தக சமூகத்துடனும் கலந்துரையாடினார்.

III. அதிமேதகு ஜனாதிபதி மார்ச்சில் ஜப்பான் விஜயம் செய்து அத்துடன் 200 ஜப்பான் கம்பனிகளுடன் முதலீடு மன்றம் ஒன்றில் பங்கேற்றார்.

IV. ஜப்பான் பிரதமர் சின்சோ அமெயின் விஷேட ஆலோசகர் கலாநிதி ஹொலோடோ இசாமி இலங்கைக்கு விஜயம் செய்து இரண்டு நாடுகளுக்கு இடையில் பரந்த பொருளாதார உறவுகள் பற்றி கலந்துரையாடினார்.

V. முதல் ஒன்பது மாத காலத்தில், இந்த தூதரகம் இலங்கைக்கான 03 வர்த்தகம் சாரந்த தூதுக் குழுக்களை ஒழுக்காற்று/ அணுசரனை வழங்கியுள்ளது. டோக்கியோ மற்றும் கியூமாவில் (08) எட்டு முதலீட்டு/ வியாபார மேம்பாட்டு செயலமர்வுகள் பொறுப்பேற்கப்பட்டன. கிட்டத்தட்ட 100 பாரிய சாத்தியமான கம்பனிகள் தூதுவரின்

அனுசரணையுடன் 9 மாத காலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டன. இந்த தூதரகம் 4 தனி நாட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து/ அனுசரனை வழங்கியுள்ளது.

அதாவது, ஜப்பானின் இலங்கை விழா (02) சிலோன் தேயிலை செயலமர்வு, முதலீட்டு சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஜப்பானிய தரப்பின் உடன் வர்த்தக கலந்துரையாடல். இலங்கைத் தூதரகனானது 4 சர்வதேச வர்த்தக சந்தைகளில் இலங்கையின் பங்கேற்புக்கு ஆதரவு வழங்கியுள்ளது. இத் தூதரகம் இலங்கையில் மசாலாவை ஆய்வு செய்து சந்தையில் கவனம் செலுத்தும் வகையில் 04 கம்பனிகளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள அனுசரணை வழங்கியதுடன் 60 ஜப்பான் கம்பனிகளுக்கு B2B கலந்துரையாடல்களையும் ஏற்பாடு செய்தது. இந்த தூதரகமானது அபிவிருத்தி மூலோபாயம் அமைச்சர் மற்றும் பயிற்செய்கை கைத்தொழில் அமைச்சர் ஆகியோரின் பொறுப்பேற்றலின் அடிப்படையில் 02 அமைச்சரவை விஜயங்களுக்கு ஆதரவு அளித்தது. தூதரகமானது ஜப்பானில் இருந்து இலங்கைக்கான 10 கம்பனி மட்ட அறிமுகங்கள் பற்றிய ஏற்றுமதி கட்டளைக்கு அனுசரணை வழங்கியது. இந்த தூதரகமானது (50) அம்பது வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்பான விசாரனைகளுக்கு பதிலளித்தலுடன் அத்துடன் 01 வர்த்தக புகாருக்கு பரிகாரம் கண்டது.

VI. பின்வரும் ஜப்பானிய நிதியிடல் கருத்திட்டங்களை நிரல் முகவராண்மைகளுடன் நிறைவேற்ற இப்பிரிவானது அணுசரனை வழங்கியது.

- திருகோணமலைத் துறைமுகம்
- மத்திய அதிவேகப்பாதை 03 ஆவது வகுதி (பொதுஹர – கலகெதர)
- திரவ இயற்கை வாயு மின்சக்தி மற்றும் வழங்கல் சங்கிலித் தொடர்
- பாரிய கண்டி நகர அபிவிருத்தி
- மென் இரயில் இடைத்தங்கல்
- பண்டார நாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி கருத்திட்டம

4. **சுற்றுலாத் துறை**

I. முதல் எட்டு மாத காலத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 34, 824 ஆகும். இந்த எண்ணிக்கையானது 2017 ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.46 சதவீத அதிகரிப்பாகவுள்ளது.

II. டோக்கியோவில் உள்ள இலங்கைத் தூதரகம் டோக்கியோவில் 2018 செப்டெம்பர் 20-23 வரை நடைபெற்ற பிரயாண முகவர்கள் ஜப்பானிய சங்க "எக்ஸ்போ" (EXPO) கண்காட்சியில் கலந்து கொண்டது. மேற்படி கண்காட்சியில் சுற்றுலா அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் அலுவிஹார, சுற்றுலாத்துறை அமைச்சுக்கான கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுஜித் பெரேர மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை

ஊக்குவிப்புப் பணியகத் தலைவர் திரு.டெஹான் செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

III. இலங்கை மற்றும் ஜப்பானிய பிரயாண முகவர்களின் பங்கேற்புடன் டோக்கியோ மற்றும் சப்போரோ ஆகிய நகரங்களில் இரண்டு பாதைக் கண்காட்சிகள் முறையே 2018 செப்டெம்பர் 25 மற்றும் 27 ஆம் திகதிகளில் வெற்றிகரமாக நடைபெற்றன.

IV. இலங்கையின் பல்வேறு கலாச்சார மற்றும் மதம் சார்ந்த அம்சங்கள் மீதான தயாரிப்புக்களை மேற்கொள்வதற்கென தூதரகம் பின்வரும் ஐந்து ஜப்பானிய ஊடக ஒலிபரப்பு முறைமையை பணியாளர்களுக்கு இலங்கை விஜயத்தை வசதிப்படுத்தியது

நிப்பொன தொலைக்காட்சி வலையமைப்புக் கூட்டுத் தாபனம், ஜப்பானிய பாக் அப் மீடியக கம்பனி லிமிடெட், கிரியேட்டிவ் 30 கம்பனி லிமிடெட், ஆஷி தொலைக்காட்சி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

V. தூதரகம் இலங்கையின் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் பொருட்டு பின்வரும் விழாக்களில் கலந்து கொண்டது :-

மினாட்டோ சிற்றியின் ஏற்பாட்டில் டோக்கியோ கோபுரப் பகுதியில் 2018 மார்ச் 25 இல் நடைபெற்ற மினாட்டோ சிற்றி உலகக் களியாட்டு விழா, இலங்கையை சுழியோடுதலுக்குச் சிறந்த இடமாக அறிமுகப்படுத்துவதற்கென ஏப்ரல் 6 – 9 வரையிலான மூன்று நாள் நிகழ்வை இலங்கை விற்பனைக் கூடத்தை ஒழுங்கு செய்திருந்த டோக்கியோ சுழியோடல் சந்தை 2018. மேற்படி சந்தையில் இலங்கை விற்பனைக் கூடத்தை சுமார் 50,000 பேர் தரிசித்தனர். ஓகஸ்ட் 26 இல் நடைபெற்ற சமாதான படகினட உலகத்திருவிழா, 2018 மே 4 – 5 வரை சமுத்திரக்கனவு, யோஹோமா ஒசான்பஷி சர்வதேச பயணிகள் கப்பல் தளம் 2017 மற்றும் இலங்கையின் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்கென நடாத்தப்பெற்ற 2018 மார்ச் 25 இல் டோக்கியோ கோபுரப்பகுதியில் மினாட்டோ சிற்றி உலகத் திருவிழா மற்றும் இலங்கையின் சுற்றுலாத்துறை மற்றும் கலாசாரம் ஆகியவற்றை மேம்படுத்தவென நடாத்தப்பட்ட ஊக்குவிப்பு நிகழ்வு.

VI. டோக்கியோ நகரின் மினாட்டோ வட்டாரத்தில் உள்ள ஷிபா பூங்காவில் மினாட்டோ பிரஜைகள் திருவிழா 2018 ஒக்டோபர் 6 – 7 வரை நடைபெற்றது. மேற்படி திருவிழா மினாட்டோ நகரின் ஷிபா கூன் பிரதேசத்தில் வருடாந்தம் நடைபெற்று வருவதுடன் அதனை 200,000க்கும் மேற்பட்டோர் கண்டுகளித்தும் வருகின்றனர். இந்த நிகழ்வை மினாட்டோ நகர அலுவலகத்துடன் சேர்ந்து டோக்கியோவில் உள்ள தூதரகங்களும் சர்வதேச அமைப்புக்களும் ஒருங்கிணைந்தன.

VII. ஜப்பானில் உள்ள யோயோகி பூங்காவில் ஓகஸ்ட் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் நடைபெற்ற 14 ஆவது இலங்கைத் திருவிழா 2018 நிகழ்வானது ஜப்பானில் உள்ள இலங்கை வியாபார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

5. கலாசார உறவுகள்

I. இலங்கை வாழ் மக்களின் காட்சியமைப்பு, பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் "டோக்கியோவின் புகைப்பட மாதம் - 2018" நிகழ்வானது டோக்கியோவில் 4 மாறுபட்ட மக்கள் பார்வைக் கூடங்களில் 2018 மே 28 முதல் ஜூன் 26 வரை நடைபெற்றது.

II. ஜப்பானில் அமைந்துள்ள தூதரகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கைச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 14 ஆவது இலங்கைத் திருவிழாவுக்கு உத்தியோப்பூர்வ ஒருங்கிணைப்பு ஆதரவு வழங்கப்பட்டது.

III. 2018 செப்டம்பர் 02ஆந் திகதி சம்மு நகர அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை தினத்தில் பங்கேற்கப்பட்டது.

IV. இலங்கை கலாச்சாரத்தின் சரியான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக அதி மேதகு தூதுவரின் இல்லத்திற்கு 36 மாணவர்கள் மற்றும் கும்மாவிலுள்ள தகசாகி யுனெஸ்கோ சங்கத்தின் 7 உத்தியோகத்தர்கள் ஆகியோர் தூதரகத்தின் 40வது விஜயத்தின் போது விஜயம் செய்தனர்.

V. "தூதுவரின் பார்வையில் ஜப்பான்" எனும் தலைப்பின் கீழ் இலங்கையின் தூதுவர் கவாசகி ரோடரி கிளப் உறுப்பினர்களின் மத்தியில் உரையாற்றினார்.

VI. டோக்கியோ, எடோகவா ஷிஷிபோன் ஆரம்ப பாடசாலையின் மற்றும் ஹிரோஷிமாவின் குமானோ ஹிகாஷி கனிஷ்ட உயர் பாடசாலையின் 80 மாணவர்களுக்கான கலாச்சார விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று தூதரக உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்டது.

6. ஊழியர் மற்றும் நலன்புரி

I. 2018 பெப்ரவரி 01ஆந் திகதி தொழினட்ப பயிற்சி நிகழ்ச்சி தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றுக்கு ஜப்பான் அரசாங்கம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆகியன கைச்சாத்திட்டன.

II. ஜப்பான சர்வதேச பயிற்சி ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றுக்கு இடையிலான மறுசீரமைக்கப்பட்ட ஆலோசனைகள் 2018 மே 31ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டன.

III. 2017 யூலையில், சர்வதேச மனிதவள அபிவிருத்தி அமைப்பு மற்றும் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை தொழினுட்ப பயிற்சிகள்

தொடர்பான ஜப்பானின் தொழில்வாய்ப்பு முகவர்களுக்கு தூதரகத்தினால் பட்டறைகள் நடாத்தப்பட்டன. 2018 ஆகஸ்ட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட அத்தகைய 10 பயிலுனர்கள் ஜப்பானை அடைந்ததுடன், தற்போது அவர்கள் விவசாயம் மற்றும் இயந்திவியல் உற்பத்தி துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2018 செப்டம்பரில் மெலும் 08 பயிலுனர்கள் வருகை தந்ததுடன், அவர்கள் தற்போது சைட்டமாவிலுள்ள ஐ.எம். ஜப்பான் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் தாதியியல் பராமரிப்பு துறையில் பணியமர்த்தப்படவுள்ளனர்.

IV. நடமாடும் கொன்சியூலர் நிகழ்ச்சிகள் மூலமாக ஜப்பானின் கும்மா, ஒசாகா, புக்குஒகா மற்றும் நாகோயா ஆகிய பிரதேசங்களிலுள்ள இலங்கையர்களுக்கு கொன்சியூலர் உதவிகள் வழங்கப்பட்டன. இந்த கொன்சியூலர் சேவைகளின் வாயிலாக சுமார் 140 இலங்கையர்கள் சேவைகளை பெற்றுக்கொண்டனர்.

கொரியக் குடியரசு

1. இருதரப்பு உறவுகள்

மீளாய்வுக் காலத்தின் போது, இலங்கை அரசாங்கத்திற்கும், கொரியக் குடியரசிற்கும் இடையில் நட்பு ரீதியான சிறந்த இருதரப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில், கொரிய அமைச்சுக்கள் மற்றும் அதன் இணை அமைப்புக்கள், கொரிய நிறுவனங்கள், வியாபார அமைப்புக்கள், மற்றும் தேசிய சபையின் உறுப்பினர்கள் உள்ளடங்கலான கொரியக் குடியரசின் அரசியல் தலைமைத்துவம் ஆகியவற்றுடன் தூதரகம் நல்ல உறவுகளை பேணியது.

மீளாய்வுக் காலத்தின் போது கொரியக் குடியரசின் அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பில் நெருக்கமாக அவதானித்து, கொழும்பிலுள்ள தொடர்புடைய அதிகாரிகளுக்கு அரசியல் அறிக்கைகளை தபாலில் அனுப்புதல் உள்ளடங்கலாக அது குறித்து வழமையான குறிப்புக்களை வழங்கியது. கொரியக்குடாவின் அபிவிருத்திகள் தொடர்பில் தூதரகம் நெருக்கமாக அவதானிப்பதுடன், கொரியக் குடியரசின் ஜனாதிபதி மூன் ஜே-இன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் கொரியக் கடாவில் நிரந்தரமானதும், நிலையானதுமான சமாதானம் மற்றும் அணுவாயுதத்தை இல்லாதொழித்தல் ஆகியவற்றின் நோக்கில் பன்முன்ஜோம் பிரகடனம் மற்றும் பியங்யாங் இணைந்த பிரகடனம் ஆகியவற்றை உள்ளடக்கும் மூன்று (03) கொரிய-உள்ளக மாநாடுகள் தொடர்பான வழமையான தகவல்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வழங்கியது. கொரியாவின் உள்ளக அரசியல் நிலவர அபிவிருத்திகள் மற்றும் கொரியக்குடியரசு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்தும் தூதரகம் அவதானித்தது.

I. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கொரியக் குடியரசிற்கான அரசுமுறை விஜயம் தொடர்பான அவதானிப்பு

இரண்டு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 40 ஆண்டுகள் பூர்த்தியை கொண்டாடும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் கொரியக் குடியரசிற்கு மேற்கொள்ளப்பட்ட 2017 நவம்பர் 28 - 30 வரையான காலப்பகுதிக்கான அரசுமுறை விஜயம் தொடர்பான பின்பற்றுதல் நடவடிக்கைகளை தூதரகம் மேற்கொண்டது. இந்த அரசுமுறை விஜயத்தின் போத மேற்கொள்ளப்பட்ட ஐந்து ஒப்பந்தங்கள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்க கைச்சாத்திடுதலும் குறித்த பின்பற்றுதல் நடவடிக்கையில் உள்ளடங்கியிருந்தது. இது தொடர்பில் செயற்படுவதற்காக, இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகங்கள் மட்ட ஆலோசனைகளில் இடுபடுவதற்கு, கொரிய வெளிவிவகார அமைச்சின் ஆசிய மற்றும் பசுபிக் விவகார பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி. கிம் யுன்-யங் 2018 மே மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

II. இருதரப்பு அரசியல் ஆலோசனைகள்

இலங்கை மற்றும் கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்களுக்கு இடையிலான 2ம் சுற்று இருதரப்பு அரசியல் ஆலோசனைகள் ஐந்து வருடங்களின் பின்னர் 2018.06.07ஆந் திகதி கொழும்பில் நடைபெற்றது (ஆலோசனைகளின் முதலாம் சுற்று 2013இல் இடம்பெற்றது). வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, விவசாயம், மீன்பிடி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், கலாச்சாரம், சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றை உள்ளடக்கியிருந்த இருதரப்பு உறவுகளின் விடயப்பரப்புக்கள் இதன் போது மீளாய்வு செய்யப்பட்டன.

III. பொருளாதார ஒத்துழைப்புக்கான இணைந்த ஆணைக்குழு

2017 நவம்பரில் இடம்பெற்ற அரசுமுறை விஜயத்தின் போது இலங்கை மற்றும் கொரியக் குடியரசினால் கைச்சாத்திடப்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கட்டமைப்பிற்குள், பொருளாதார ஒத்துழைப்பு மீதான முதலாவது இணைந்த ஆணைக்குழு 2018 யூன் 28ஆந் திகதி கொழும்பில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடல்களின் போத கொரியக் குடியரசு அவர்களின் வெளிநாட்ட அலுவல்கள் அமைச்சினாலும், இலங்கை அரசாங்கமானது மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினாலும் தலைமை தாங்கப்பட்டன. இருதரப்பு முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலா ஆகிய பொறிமுறைகளை மேம்படுத்துவது தொடர்பில் இந்த இணைந்த ஆணைக்குழுவின் போது கலந்துரையாடப்பட்டன.

புதிய தெற்கு கொள்கை மற்றும் தெற்காசியாவுடனான நெருக்கமான ஒத்துழைப்பு

தெற்காசிய பிராந்தியத்துடனான ஈடுபாடுகளை உள்ளடக்கும் (இலங்கை உள்ளடங்கலாக) ஜனாதிபதி முன் அவரிகளின் புதிய தெற்கு கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பின்தொடர்வு நடைமுறைகளை தூதரகம் மேற்கொண்டது. கொரிய தேசிய இராஜதந்திர அகடமியின் வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு நிறுவகத்தின் தலைவர் தூதுவர் கிம் இன்-சுல் மற்றும் கே.என்.டி.ஏ.யில் புதிதாக நிறுவப்பட்ட ஆசியான்-இந்தியா நிலையத்தின் தலைவர் கலாநிதி. சோ வொங்கி ஆகியோருடனான தொடர்பாடலை இலங்கைக்கும், கொரியக் குடியரசிற்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் 2018 ஆகஸ்ட்டில் தூதரகம் ஆரம்பித்து வைத்தது. கே.என்.டி.ஏ.யின் ஆதரவுடன் கொரிய வெளிவிவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2018 செப்டம்பர் 20ஆந் திகதி நடைபெற்ற 9வது கொரியக் குடியரசு - சார்க் பங்காண்மை கருத்தரங்கில் தூதரகம் தேமலும் பங்குபற்றியதுடன், அதில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிரிவின் பணிப்பாளர் உள்ளடங்கலான (அவர் ஒரு பேனல் உறுப்பினராவார்) சார்க் உத்தியோகத்தர்களும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

IV. இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய அவர்களின் கொரியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் (2018 ஆகஸ்ட் 27 தொடக்கம் 30)

கொரிய தேசிய பேரவையின் சபாநாயகரின் அழைப்பின் பேரில், இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய அவர்கள் 2018 ஆகஸ்ட் 27 தொடக்கம் 30 சரையான காலப்பகுதிக்கு கொரியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது பல்வேறு குழுக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகருடன் சென்றிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது சபாநாயகர் அவர்கள் கொரியாவின் பிரதமர் கௌரவ லீ நாக்-யொன், கொரிய தேசிய பேரவையின் சபாநாயகர் கௌரவ மூன் ஹீ-செங், தேசிய பாதுகாப்பின் பணிப்பாளர் (தலைவர்) / என்.எஸ்.சி. நிலையியற் கழுவின் தலைவர் கௌரவ சுங் யி-யங் மற்றும் கொரிய - இலங்கை பாராளமன்ற நட்புறவுக் குழுவின் தலைவர் கௌரவ சுங்-ஹோ மற்றும் அதன் உறுப்பினர்களுடன் சந்திப்புக்களில் ஈடுபட்டார்.

கொரியாவிலுள்ள இலங்கை சமூகத்தினருடனான தூதரகத்தில் இடம்பெற்ற உத்தியோகபூர்வமற்ற ஒருங்கிணைதல் நிகழ்வொன்றிலு கௌரவ சபாநாயகரும், அவரது தூதுக்குழுவினரும் பங்குபற்றினர்.

V. தேசிய சபையின் உறுப்பினர்கள்

மீளாய்வுக் காலத்தின் போது, கொரிய - இலங்கை பாராளுமன்ற நட்புறவுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக கொரிய தேசிய பேரவையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு தூதுவர் அழைப்பு விடுத்து, அவர்களுடன் சகஜமான நட்புறவுகளில் ஈடுபட்டார்.

VI. இருதரப்பு ஒத்துழைப்புக்கான விடயங்கள்

பரந்த விடயங்களான உட்கட்டமைப்பு, ஆட்சி, கல்வி, தொழிற்துறை, மீன்பிடி, சக்தி, விவசாயம், மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம் ஆகியன உள்ளடங்கலான விடயங்களின் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை மற்றும் கொரிய எக்சிம் வங்கி - பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் தூதரகம் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது.

தற்போது நடைமுறையிலுள்ள ஒத்துழைப்பின் கீழ் பயிற்சி / பரிமாற்றுதல் நிகழ்ச்சிகளுக்காக இலங்கையிலும், கொரியக் குடியரசிலும் உள்ள பாதுகாப்புடன் தொடர்பான நிறுவனங்களுடன் தூதரகம் ஒத்துழைப்புக்களை மேற்கொண்டது. அந்த வகையில், தேசிய பாதுகாப்பு அமைச்சு மற்றும் கொரியாவிலுள்ள பாதுகாப்புடன் தொடர்பான நிறுவனங்களுடன் தூதரகம் கூட்டிணைந்து, சபுகஸ்கந்தையிலுள்ள பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் ஊழியர் கல்லூரியின் வேண்டுகோளுக்கு இணங்க, அதன் 16 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவிற்கு 2 வார கால சுருக்கமான வெளிநாட்டு கற்கை சுற்றுலா ஒன்றினை ஏற்பாடு செய்து, நெறியாழ்கைப்படுத்தியது.

விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆய்வு அமைச்சு மற்றும் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் கண்டுபிடிப்புக்கான இணைப்பு செயலகம் ஆகியன உள்ளடங்கலாக இலங்கையின் நிறுவனங்களுடன் இணைந்து விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவை தொடர்பில் தூதுரகம் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றியது. இந்த கூட்டிணைப்பின் கீழ், மே 28 முதல் யூன் 06 வரை கொழும்பில் தகைமை கட்டியெழுப்புகை பட்டறையொன்று எஸ்.டி.இ.பி.ஐ. யின் ஆதரவுடன் நடைபெற்றது.

கல்வித் துறையில், இலத்திரனியல், மின்னியல் மற்றும் உயிரியல் தொழினுட்ப பொறியில் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான (விஞ்ஞான முதுமாணி, கலாநிதி) புலமைப்பரிசில் சந்தர்ப்பங்களை உள்ளடக்கும் வகையில், இன்சியன் தேசிய பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் பேராதனை மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பணியில் தூதரகம் உதவியது. இது தொடர்பில், 2018 ஆகஸ்ட்டில் ஐ.என்.யு.

வின் தலைவர் பேராசிரியர் சோ டொங்-சுங் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர்களை உள்ளடக்கிய தூதுக்குழு ஒன்று பேராதனை மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்தது.

2018ஆம் ஆண்டின் இரணடாம் பருவ காலத்திற்கான வூஜுங் புலமைப்பரிசிலுக்காக 05 இலங்கை மாணவர்களை தெரிவு செய்வதற்கு தூதரகம் வூஜுங் கல்வி மற்றும் கலாச்சார நிறுவனத்திற்கு உதவிகளை வழங்கியது.

கல்விக்கான குவான்ஜு மெட்ரோபொலிடன் அலுவலகத்துடனான (கல்விக்கான குவான்ஜு மெட்ரோபொலிடன் அலுவலகத்தின் அத்தியட்சகர்) இலங்கையில் ஈ-கற்கை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பயிற்சியை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்வதற்காக கல்வி அமைச்சரினால் கொரியக் குடியரசிற்கு 2018 ஆகஸ்ட் 27ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விஜயத்தை தூதரகம் ஒருங்கிணைத்தது.

தூதுவர் ஆலோசகராக செயற்படும் கொரியாவிலுள்ள இலங்கை மாணவர்கள் சங்கத்துக்கு தூதரகம் மாணவர்களுக்கும், கொரியாவிலுள்ள இலங்கையின் தொழில் சமூகத்தினருக்கும் இடையிலான பகல் விருந்துபசாமொன்றினை 2018 மார்ச்சில் ஏற்பாடு செய்தமை மற்றும் 2018 செப்டம்பர் 29ஆந் திகதி தூதரகத்தில் நடைபெற்ற 8வது வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்தியமை உள்ளடங்கலாக, தொடர்ச்சியாக ஆலோசனைகளை வழங்கி, அவர்களுடன் இணைந்து பணியாற்றியது.

ஆய்வு ஒருங்கணிணவின் கீழ், 2017 மார்ச்சில் கொரியக் குடியரசின் கொரிய தெசிய இராஜதந்திர அகடமி மற்றும் இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகம் ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து, இரண்டு நிறுவனங்களுக்குமிடையிலான ஒத்துழைப்பை தூதரகம் தொடர்ந்தும் பேணியது. தூதரகம் தொடர்ந்தும் கொரியக் குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு நிறுவகத்திற்கும் இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகம் மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பை பேணியது. ஒரு வழி - ஒரு பாதை திட்டத்திற்கான ஐ.எப்.ஏ.என.எஸ் / கே.என்.டி.ஏ ஆய்வுப் பணிகளுக்காக கொரியாவின் தேசிய இராஜதந்திர அகடமியின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு நிறுவகத்தின் சீன கற்கைகளுக்கான பணிப்பாளர் தூதுவர் சுங் சன்-கி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் (2018 ஒக்டோபர் 19-22 வரை).

2018 ஒக்டோபர் 11 - 12 வரை கொழும்பில் நடைபெறவிருந்த “இந்த சமுத்திரம்: எமது எதிர்காலத்தை கண்டறிதல்” மாநாட்டின் 1.5 நிகழ்வு நிரலில் கொரியாவின் பங்குபற்றுதல்

தொடர்பில் கொரிய வெளிநாட்டு அமைச்சுடன் தூதரகம் பேணிய தொடர் பின்பன்றுகையினால், அவர்களது பங்குபற்றுகை உறுதிப்படுத்தப்பட்டது.

பரஸ்பர சட்ட உதவிகள் தொடர்பில், 1990 களில் கொரியாவில் இடம்பெற்ற குற்றவியல் வழக்கு ஒன்று தொடர்பில் கொரியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இலங்கையின் குற்றவியல் விசாரணை திணைக்களம் மற்றும் கொரியாவின் நீதி அதிகாரிகளைக் கொண்ட தூதுக்குழுவினருக்கு இடையில் 2018 ஆகஸ்ட் 13ஆந் திகதி இடம்பெற்ற விசாரணைகளுக்கு, தூதரகம் ஆதரவளித்து, வசதிகளை வழங்கியிருந்தது.

இலங்கையில் விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல் செயற்பாட்டிற்காக கொரியாவின் விளையாட்டு அமைச்சடன் இணைந்து ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டதுடன், கொரியாவில் 10 இலங்கை டேக்வாண்டொ விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன் (13 ஏப்ரல் - 01 மே), அவர்கள் 2018 ஆகஸ்ட்டில் நடைபெற்ற 2018 ஆசிய டேக்வாண்டொ விளையாட்டுக்களில் பங்குபற்றினர்.

தேசிய புலமைச்சொத்து பிரிவைச் சார்ந்த இலங்கையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சினால் தலைமை தாங்கப்பட்ட 8 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவின் கொரியன் புலமைச்சொத்து அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2018 செப்டம்பர் 10 - 14 வரையான காலப்பகுதிக்கான கொரியக் குடியரசிற்கான கற்கை விஜயத்திற்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

தூதரகம் தொடர்ந்தும் கௌரவ கொன்சல்கள் மற்றும் அவர்களின் அலுவலகங்களுடன் இணைந்து பணியாற்றியது. புசானுக்கான கௌரவ கொன்சலும், மீன்பிடி கூட்டுறவுகளுக்கான தேசிய சங்கத்தின் தலைவருமான திரு. கிம் இம்-வியொன் இலங்கைக்கு விஜயம் செய்தார். தெற்கு கியோக்சாங் மாகாணத்திற்கான இலங்கையின் கௌரவ கொனடசலாக தூதரகத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட வசின் கப்பல் மற்றும் விமான சரக்கு தனியார் நிறுவனத்தின் தலைவர் திரு. சியோமின்ஜா அவர்கள் 2018 ஏப்ரல் 10ஆந் திகதி நியமிக்கப்பட்டார்.

(1) **உயர் மட்ட விஜயங்கள்**

மீளாய்வின் கீழான காலப்பகுதியின் போது பின்வரும் சில உயர் மட்ட விஜயங்கள் இடம்பெற்றிருந்தன:

கொரியக் குடியரசிற்கு:

- 19வது கடல்வழிக்கான உதவிகள் மற்றும் வெளிச்சவீட்டு அதிகார சபைகளின் சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக (2018 மே 8 - 30 வரை), துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சல் கௌரவ மஹிந்த சமரசிங்க விஜயம் செய்தார்.

- கொரிய உற்பத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் பங்குபற்றுவதற்காக (2018 யூன் 25 - 27 வரை), பொது நிர்வாகம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்தும பண்டார கொரியாவிற்கு விஜயம் செய்தார்.

- கொரிய தேசிய பேரவையின் சபாநாயகரின் அழைப்பின் பேரில் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய அவர்கள் (2018 ஆகஸ்ட் 27 - 30 வரை) கொரியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மெற்கொண்டார்.

- கல்விக்கான குவாங்ஜு மெட்ரோபொலிடன் அலுவலகத்தின் அழைப்பின் போரில் கல்வி அமைச்சர் கௌரவ அகில விராஜ் காரியவசம் கொரியாவிற்கான விஜயத்தினை மெற்கொண்டு (2018 ஆகஸ்ட் 24 - 29 வரை), இலங்னையில் ஈ-கற்கை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பயிற்சியை அபிவிருத்தி செய்தல் தொடர்பான 5 புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் ஜான் வி-கக்கிலுள்ள கல்விக்கான குவாங்ஜு மெட்ரோபொலிடன் அலுவலகத்துடன் இணைந்து கைச்சாத்திட்டார்.

- "அரசியல் விவகாரங்களில் கௌரவ அதிதிகள்" நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக இளைஞர் விவகாரம், திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்நாயக்க அவர்கள் விஜயம் செய்தார். (2018 செப்டம்பர் 02 - 08 வரை).

- கொரியாவின் காணி, உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக உட்கட்டமைப்பு ஒத்துழைப்பு மாநாட்டில் பற்குபற்றுவதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை பிரதி அமைச்சர் கௌரவ அசோக் அபேசிங்க அவர்கள் (2018 செபடம்பர் 18 - 20 வரை) கொரியாவிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது பிரதி அமைச்சர், கொரியக் குடியரசின் காணி, உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து துணை அமைச்சர் கிம் ஜோங் ரியோல் அவர்களை சந்தித்து, அவர்களது அமைச்சுக்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒத்துழைப்புக்கள் குறித்து கலந்துரையாடினர்.

- மேற்கு பசுபிக் கடற்படை கருத்தாய்வில் பங்குபற்றுவதற்காக இலங்கை கடற்படையின் பிரதானி வைஸ் அட்மிரல் எஸ்.எஸ். ரனசிங்க அவர்கள் கொரியாவிற்கான விஜயத்தினை (2018 ஒக்டோபர் 11 - 18 வரை) மேற்கொண்டார்.

- சியோல் பெருநகர அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "நகரங்களை கௌரவமான பணிக்காக மாற்றுவதற்கான சர்வதேச அரங்கு 2018" இல் பங்குபற்றுவதற்காக கொழுமட்பு மேயர் கௌரவ ரோஸி சேனநாயக்க அவர்கள் (2018 டிசம்பர் 10 - 13 வரை) கொரியாவிற்கான விஜயத்தினை மேற்கொண்டதுடன், சியோல் பெருநகர சிட்டி பார்க் மேயர் வொன்-சூன் அவர்களை சந்தித்து, சியோல் நகரம் மற்றும் கொழும்பு நகரம் ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுவூட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து கலந்துரையாடினார். இந்த விஜயத்தின் போது, 2018 டிசம்பர் 12ஆந் திகதி சியோலிலுள்ள மேயரின் அலுவலகத்தில் இடம்பெற்ற விஷேட நிகழ்வொன்றில் சியோல் மேயரினால் மேயர் ரோஸி சேனநாயக்கவிற்கு "சியோலின் கௌரவ குடியுரிமை" வழங்கப்பட்டது.

இலங்கைக்கு:

- கொரியக் குடியரசின் 1வது வெளிநாட்டு அலுவல்கள் துணை அமைச்சர் கௌரவ லிம் சுங்-நம் அவர்கள் (20108 யூன் 06 - 07 வரை) இலங்கைக்கும், கொரியக் குடியரசிற்கும் இடையிலான இரண்டாம் சுற்று அரசியல் ஆலோசனைகளில் ஈடுபடுவதற்காக விஜயம் செய்தார்.

- கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆசிய மற்றும் பசுபிக் விவகாரங்களுக்கான பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. கிம் உன்-யங் (2018 மே 13 - 14 வரை)

- கொரியக் குடியரசு - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பின் முதலாவது இணைந்த ஆணைக்குழுவினை நடாத்துவதற்கான கொரிய தூதுக்குழுவின் தலைவராக கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இருதரப்பு பொருளாதார விவகாரங்களுக்கான பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. கிம் ஹீ-சன் (2018 யூன் 27 - 28 வரை)

(2) இருதரப்பு உடன்படிக்கைகள்

மீளாய்வுக் காலத்தின் போது பின்வருவன தூதரகத்தின் உவதியுடன் கைச்சாத்திடப்பட்டன:

- கடல் பிரயாணங்களுக்கான உதவிகளை அபிவிருத்தி செய்தலுக்கான இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சிற்கும், கொரியாவின் சமுத்திரங்கள் மற்றும் மீன்பிடி அமைச்சிற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மற்றும் கொரியாவின் சமுத்திரங்கள்

மற்றும் மீன்பிடி அமைச்சர் ஆகியோரினால் 2018 மே 28இல் கொரியக் குடியரசில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

- கல்வி அமைச்சர் மற்றும் கல்விக்கான குவான்ஜு மெட்ரோபொலிடன் அலுவலகத்தின் அத்தியட்சகர் ஆகியோருக்கு இடையிலான இலங்கையில் ஈ-கற்கை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பயிற்சியை அபிவிருத்தி செய்வது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை 20108.08.27ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

2. பல்தரப்பு உறவுகள்

(1) பல்தரப்பு நிறுவனங்களுடனான உடன்படிக்கைகள்

பசுமை காலநிலை நிதியத்துடனான ஒத்துழைப்பு

காலநிலை மாற்ற ஒத்துழைப்பு தொடர்பில் பசுமை காலநிலை நிதியத்துடன் இணைந்து தூதரகம் தொடர்ந்தும் செயற்பட்டதுடன், பசுமை காலநிலை நிதியத்தின் விலக்கலிப்புக்கள் மற்றும் சலுகைகள் குறித்த வரைவு உடன்படிக்கை தொடர்பான நடைமுறை குறித்து தொடர்ச்சியாக பின்பற்றுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

காலநிலை தழுவல் தொடர்பான மேலதிக ஒத்துழைப்புக்கள் மற்றும் இலங்கைக்கும், பசுமை காலநிலை நிதியத்துக்குமிடையிலான மட்டுப்படுத்தல்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக பசுமை காலநிலை நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி. ஹோவார்ட் பம்சேய் 2018 ஏப்ரல் 5 - 19 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். தனது விஜயத்தின் போது கலாநிதி பம்சேய் அதிமெதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் அழைக்கப்பட்டிருந்தார்.

உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தில் இலங்கையின் பிரதிநிதித்துவம்

பசுமை காலநிலை நிதியத்தின் விநியோக பங்காளரான உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தில் உறுப்பினராவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை பூர்த்தி செய்துள்ளது. அந்த வகையில், 2018.12.14ஆந் திகதி உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைமையகத்தில் குறித்த உட்பிரவேசிப்பிற்கான ஆவணத்தினை கையளித்தது. இலங்கை உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் 30வது உறுப்பினராவதுடன், இலங்கையின் அங்கத்துவமானது உத்தியோகபூர்வமாக 2019.01.13ஆந் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது.

மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் திரு. அனுர திசாநாயக்க மற்றும் சபையின் தலைவர் மற்றும் உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் கலாநிதி பன் கீ-மூன் ஆகியோருக்கு இடையில் 2018.07.17ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின்

போது இலங்கையின் உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்திலான அங்கத்துவம், காலநிலை மாற்றத் தழுவலில் அதன் ஈடுபாடு, மட்டுப்படுத்துகை மற்றும் யு.என்.எப்.சி.சி.சி.சி. யின் கீழான திட்டம் ஆகியன குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

1. கொரியாவிலுள்ள பொருளாதாரம் சார்பான நிறுவனங்களுடனான உறவு

கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, தொடர்புடைய கொரிய வரிசை அமைச்சுக்கள் மற்றும் முகவரமைப்புக்கள் மற்றும் அதன் அதிகாரமளிக்கப்பட்ட அமைப்புக்கள் மற்றும் அரச மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களுடன் தூதரகம் நல்லுறவுகளை பேணியது.

ஊக்குவிப்பு செயற்பாடுகள்

2. வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் பொருட்களின் 5 உறுப்பினர்கள் கொண்ட கொரிய தூதுக்குழு (ஏப்ரல் 01 - 04); கொரியாவின் தேசிய மீன்பிடி ஒத்துழைப்புக்கள் குழுவி தலைவரால் தலைமை தாங்கப்பட்ட அதன் 10 உறுப்பினர்கள் கொண்ட தூதுக்குழு (ஜனவரி 15 - 19); தீகு ஹானி பல்கலைக்கழகத்தின் துணை தலைவரால் தலைமை தாங்கப்பட்ட 06 உறுப்பினர் கொண்ட தூதுக்குழு (மார்ச் 15 - 19); சி.சி.சி.யினால் ஏற்பாடு செய்யப்பட்ட 03வது இலங்கை முதலீட்டு மற்றும் வியாபார கூட்டம் 2018 இல் பங்குபற்றுவதற்காக இரண்டு கொரிய நிறுவனங்கள் விஜயம் செய்ததுடன் (யூன் 19 - 21), இலங்கை / கொரியக் குடியரசிற்கான தனிப்பட்ட நிறுவன விஜயங்களுக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

3. சர்வதேச ஹோர்டிகல்சர் கொயாங் கொரியா 2018 இல் தூதரகம் பங்குபற்றியது / இலங்கையின் பங்குபற்றுதலுக்கு வசதிகளை வழங்கியது, "உலகைச் சூழ தெயிலை - தேயிலை உலகம்", பொரட்களை இறக்குமதி செய்தல் சந்தை, சியோல் பூட் 2018, 2018 யுங் வொன் உலக தெயிலை கண்காட்சி, ஹுடோங்க் காட்டுத் தேயிலை கலாச்சார திருவிழா, 33வது கொரிய சர்வதேச பிரயாண சந்தை, 06வது சியோல் சர்வதேச பௌத்த கண்காட்சி, பூசான் சர்வதேச பிரயாண சந்தை, கொரியன் சர்வதேச சுற்றுலா கண்காட்சி, சியோல் நட்புறவு சந்தை 2018, புயியுவில் இடம்பெற்ற 16வது சியோடொங் தாமரை திருவிழா.

4. எம்.பி.சி.யின் "விசார்ட் ஒப் நோவெயார்" க்கான 40 உறுப்பினர்கள் கொண்ட திரைப்படக் குழுவின் விஜயத்திற்கு தூதரகம் ஏற்பாடு செய்தது (ஜனவரி 30 - பெப்ரவரி 04); இரண்டு வகையான நிகழ்ச்சிகளை திரைப்படவாக்கம் செய்வதற்கதாக எஸ்.பி.எஸ்.இன் "லோ ஒப் ஜன்கில்" க்கான 45 உறுப்பினர்கள் கொண்ட குழுவின் இலங்கைக்கான விஜயம் (ஆகஸ்ட்

04 - 13). இந்த இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் கொரியாவில் இலங்கைக்கான சாத்தியமான பிரபல்யத்தினை ஏற்படுத்தும்.

5. கொரிய கலாச்சார சங்கம் மற்றும் சியோல்லோ முகாமைத்துவ அலுவலகம் ஆகியவற்றின் ஆதரவுடன், இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து தூதரகம் சியோலில் முதலாவது *இலங்கைத் தினத்தை* 2018 யூன் 16 சனிக்கிழமை சியோல்லோ 7017 - மக்னோலியா சதுக்கத்தில் ஏற்பாடு செய்தது.

6. பொலன்னறுவையிலுள்ள *கல் விகாரை* மற்றும் கண்டியிலுள்ள தலதா மாளிகையின் உட்கட்டமைப்பு ஆகிய உலக மதிப்புமிக்க இலங்கையின் பௌத்த தளங்களின் சட்டமிடப்பட்ட இரண்டு புகைப்படங்கள் இலங்கைக்கான பௌத்த சுற்றுலாக்களை ஊக்குவிக்கும் பொருட்டு கொரியாவிலுள்ள 100 விகாரைகளில் காட்சிப்படுத்தப்பட்டன.

7. தூதரகத்தினாலும், கொரிய பவுன்டேஷனினாலும் இணைந்து அனுசரணையளிக்கப்பட்டதும், நம்ஹுயே கன்டியினால் ஏற்பாடு செய்யப்பட்டதுமான "இலங்கை: பொக்கிஷத் தீவு" என்ற தலைப்பிலான இரண்டாவது புகைப்படக் கண்காட்சி ஜியோங்சன்ங்னம்-டுவிலுள்ள நம்ஹுயே எக்சைல் இலக்கிய நிலையத்தில் 2018 ஆகஸ்ட் 07 முதல் செப்டம்பர் 09 வரை நடைபெற்றது.

தொழிலாளர் நலன்புரி

2018 செப்டம்பர் 30ஆந் திகதிக்கு மதிப்பிடப்பட்ட 27,000 இலங்கையர்களுக்கு கொரிய தொழில் தருனர்களால் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. குறித்த தொழிலாளர்களில் பெரும்பாலானோர் மிகவும் நலச்சார்புடைய தொழில் நிபந்தனைகளை அனுபவிக்கின்றனர். கொரியாவில் மொத்தமாக 30,000 இலங்கையர்கள் வசித்தும், தொழில்களில் ஈடுபட்டும் வருவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தூதரகமானது கொரியாவின் தொழில் மற்றும் தொழிலாளர் அமைச்சு மற்றும் கொரியாவின் மனிதவளங்கள் அபிவிருத்தி சேவைகள் போன்ற உரிய கொரிய முகவர்களுடன் கொரியாவிலுள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு ஈ.பி.எஸ். இன் கீழ் நலன்புரி விடயங்களை மேற்கொள்வது தொடர்பாக தொடர்ந்தும் நெருக்கமான ஒத்துழைப்பை பேணி வந்தது. 2018 ஜனவரி 01 முதல் செப்டம்பர் 30 வரையான காலப்பகுதியில் கொரியக் குடியரசிற்கு வருகை தந்த ஊழியர்களின் எண்ணிக்கை 2683.

(1) நலன்புரி

2018 ஜனவரி 01 முதல் செப்டம்பர் 30 வரையான காலப்பகுதியில் தூதரகத்தின் தொழில் மற்றும் நலன்புரி பிரிவினால் கையாளப்பட்ட நலன்புரி பணிகளின் சுருக்கத்தினை பின்வரும் புள்ளிவிபரம் மூலம் அறியலாம்:

i. தொழிலாளர்களின் பணியுடன் சார்ந்த மொத்த முறைப்பர்டுகளின் எண்ணிக்கை - 272
தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை - 256
(* அத்தகைய முறைப்பாடுகளின் தன்மை: வல்லுறவு, ஊதியம் செலுத்தாமை, தொடர்பாடல் குறைபாடு, நோய், தொழில் ஒப்பந்தத்தை முடிவுறுத்துதல்)

ii. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விடயங்களின எண்ணிக்கை - 39

iii. சிறைச்சாலை சென்ற விடயங்களின் எண்ணிக்கை (சிறையிலுள்ள இலங்கையர்கள்) - 12

iv. தொழில் மற்றும் நலன்புரி நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை (கொன்சியூலர் நடமாடும் சேவைக்கு இணையானது) - தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்டது - 10

(9) கலாச்சார நிகழ்வுகள்

பின்வரும் வகையிலான ஐந்து நிகழ்வுகளை இலங்கை தூதரகம் ஏற்பாடு செய்து, பங்குபற்றியது:

i. "புத்தரின் பிறந்த நாள்" அல்லது வெசாக்கினை கொண்டாடும் முகமாக தூதரகத்தின் அனுசரணை மற்றும் பங்குபற்றுதலுடன் மே 12 சனிக்கிழமை மாலை இடம்பெற்ற வருடாந்த தாமரை விளக்கு திருவிழா 2018

ii. இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து 2018 ஜூன் 24ஆந் திகதி சியோலிலுள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க போன்கியன் விகாரையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விகாரையில் தங்கும் விஷேட நிகழ்வொன்று

iii. 2018 செப்டம்பர் 02ஆந் திகதி கொரியாவின் மனித வள அபிவிருத்தி சேவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு ஊழியர்கள் விழா 2018 இல் இலங்கையின் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தும் கூடம் ஒன்று தூதரகத்தினால் அமைக்கப்பட்டிருந்தது.

iv. 2018 செப்டம்பர் 09ஆந் திகதி கிம்போ சிட்டி ஹோலினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 11வது கிம்போ ஒன்றுகூடல் நாள் நிகழ்வில் இலங்கையின் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சுற்றுலாத்தளங்களை மேம்படுத்தும் கூடம் ஒன்று தூதரகத்தினால் அமைக்கப்பட்டிருந்தது.

v. 2018 ஒக்டோபர் 02ஆந் திகதி இலங்கையின் கலாச்சாரம், வரலாறு மற்றும் பண்பாடுகளை சம்சுங் நாள் பராமரிப்பு நிலையத்தின் 02 ஆசிரியர்கள் உள்ளடங்கலாக 14 சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தும் சுருக்கமான நிகழ்வொன்றை ஏற்பாடு தூதரகம் செய்திருந்தது.

vi. 2018 ஒக்டோபர் 13ஆந் திகதி இடேவொன் உலகத் திருவிழாவில் தென் கொரியாவிலுள்ள இலங்கை மாணவர்களின் ஒத்துழைப்புடன் அணிவகுப்பொன்றை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

vii. 2018 டிசம்பர் 07ஆந் திகதி கொரியக் குடியரசின் குவாங்ஜுவில் உள்ள ஆசிய கலாச்சார நிலையத்தில் ஆசிய நாட்டிய குழுவின் கூட்டத்தினை நடாத்துவதற்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

viii. தூதரகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கும் முகமாக, யோன்சே பல்கலைக்கழகத்தின் 03 பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கோடை கல்வியாண்டிற்கான வருடாந்த பயிற்சி நிகழ்ச்சியை தூதரகம் தொடர்ச்சியாக மேற்கொண்டது.

(10) ஈ.பி.எஸ். - டி.ஓ.பி.ஐ.கே. பரீட்சையில் சித்தியடைந்த இலங்கையின் தொழில் தேடுனர்களுக்கான கொரிய மொழி கற்பித்தல் நிகழ்ச்சி

இலங்கை வெளிநாட்டு லைவாய்ப்பு பணியகத்தின் உதவியுடன் ஈ.பி.எஸ். - டி.ஓ.பி.ஐ.கே. பரீட்சையில் சித்தியடைந்த இலங்கையின் தொழில் தேடுனர்களுக்கு ஆசிய அபிவிருத்தி பவுன்டேஷனினால் கொரிய மொழி கற்பித்தல் நிகழ்ச்சியொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழிவு செய்யப்பட்டது.

(11) பாதுகாப்பு தொடர்பிலான தகவல்

விஷேடமாக உற்பத்தி மற்றும் மீன்பிடித் துறைகளில் இலங்கை ஊழியர்களுக்கு ஏற்படும் தொழில்சார் மற்றும் ஏனைய விபத்துக்களை தவிர்ப்பதற்கான பாதுகாப்பு தகவல்களை தொடர்ச்சியாக தூதரகம் வழங்கி வந்தது.

(12) நட்டஈடு

மரணமடைந்த 09 இலங்கை ஊழியர்களுக்காக, மீளாய்வின் கீழான காலப்பகுதியில் மொத்தமாக 387,703,094 தென் கொரிய வொன்கள் (58,155,464 இலங்கை ரூபா) பெறுமதியான நட்டஈட்டினை தூதரகம் வழங்கியது.

சுற்றுலா ஊக்குவிப்பு

வருடத்தின் முதல் 9 மாதங்களில் கொரியக் குடியரசிலிருந்து இலங்கைக்கு 11,936 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதுடன், அது அதே காலப்பகுதியில் கொரியக் குடியரசிலிருந்து வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் தொகையினும் 14.96% அதிகமானதாகும்.

2018 ஜனவரி 31 முதல் பெப்ரவரி 05 வரையான காலப்பகுதியில் நுவரெலியா, சிகிரியா, காலி மற்றும் ஏனைய பிரதேசங்கள் உள்ளடங்கலான இலங்கையின் பிரதேசங்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை (பிரயாண நிகழ்ச்சி) தயாரிப்பதற்காகவும், 2018 மார்ச் 27 முதல் ஏப்ரல் 03 வரை முன்ஹுவா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "ஜன்சன்போ 1985" என்ற ஆவணப்படத்தின் பாகம் ஒன்றை தயாரிப்பதற்காகவும், முன்ஹுவா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இரண்டு தொலைக்காட்சி குழுக்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு தூதரகம் வசதிகளை ஏற்பாடு செய்திருந்தது.

2018 ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 16 வரை இலங்கையின் "காடுகளில் உள்ள சட்டம்" என்ற சியோல் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி நிகழ்ச்சியை மேற்கொள்வதற்காக தொலைக்காட்சிக் குழு விஜயம் செய்வதற்கு தூதரகம ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கை ஊடகம்

தேசிய ரூபவாஹினி சனலில் ஒலிபரப்பாகும் 'எதர மெதர' தொலைக்காட்சி நிகழ்ச்சியின் தயாரிப்பு குழுவானது கொரியக் குடியரசிற்கு விஜயம் மேற்கொண்டு, தூதுவர் மற்றும் ஊழியர்களுடனான நேர்காணல், நடமாடும் சேவைகள் மற்றும் கொரியக் குடியரசிலுள்ள இலங்கையர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சில நிகழ்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் தொடர் நிகழ்ச்சிகளை ஒளிப்படமாக்கியது.

மலேஷியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம்

1. இருதரப்பு உறவுகள்

I. 2018 ஏப்ரலில் கௌரவ பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பு

II. மலேஷியாவின் புதிதாக நியமனம் பெற்ற பாதுகாப்பு அமைச்சர் கௌரவ துவான் ஹாஜி முஹமட் பின் சபு அவர்களுடனான சந்திப்பு. இலங்கை அரசாங்கத்திற்கும், மலேஷியாவிற்கும் இடையிலான குறிப்பான பாதுகாப்பு விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

III. 2018 ஜூலையில் மலேஷியாவின் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருடனான சந்திப்பு

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இந்த கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

IV. 2018 ஜூலையில் தொழில்துறை மற்றும் வணிக அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீனின் விஜயம்

மலேஷியாவின் சர்வதேச வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கௌரவ டரெல் லெய்கிங் அவர்களினால் தொழில்துறை மற்றும் வணிக அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீன் அழைக்கப்பட்டிருந்தார். இலங்கைக்கும், மலேஷியாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடல்களின் போது கவனம் செலுத்தப்பட்டது.

V. 2018 செம்டம்பரில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன ஜ.ச. அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணி விஜயம்

a. இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன அவர்கள் மலேஷியாவிற்கு விஜயம் மேற்கொண்டு, மலேஷியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ டாடோ சைபுத்தீன் பின் அப்துல்லாஹ் அவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

b. கௌரவ சுற்றுலா, கலைகள் மற்றும் கலாச்சார பிரதி அமைச்சரை அமைச்சர் மேலும் சந்தித்துடன், இலங்கை: ஆசியாவின் அற்புதம் மற்றும் எம்.ஏ.டி.டி.ஏ. சந்தைக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின் போது, வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகளுக்காக இராஜதந்திர குறிப்பு ஒன்று அமைச்சர்களினால் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

c. இந்த விஜயத்தின் போது, வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகளுக்காக இராஜதந்திர குறிப்பு ஒன்று அமைச்சர்களினால் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

VI. 2018 செப்டம்பரில் சுற்றுலா மற்றும் கத்தோலிக்க மத விவகார அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களின் விஜயம்

தெற்காசிய கீழ் செயலாளர் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடனான தொடர்ச்சியான சந்திப்பு மற்றும் வரிசை அமைச்சுக்களுடனான தொடர்ச்சியான ஒருங்கிணைவு

VII. 2018 ஒக்டோபரில் மலேஷிய இலங்கை நிறுவனங்கள் சங்கத்தின் விஜயம்

எப்.ஓ.எம்.எஸ்.ஓ. இன் தலைவர் எஸ். குணசேகரன் அவர்களை உயர்ஸ்தானிகர் சந்தித்து, வர்த்தகதம் மற்றும் முதலீடு தொடர்பான விடயங்கள் குறித்தும், இலங்கை மஷேிய வியாபார சங்கத்தின் உத்தியோகத்தர்களின் வருகை குறித்தும் கலந்துரையாடினர்.

VIII. பெனாங்கின் பிரதம அமைச்சருடனான சந்திப்பு

பெனாங்கின் பிரதம அமைச்சர் திரு. சோ கொன் யூ அவரகளை உயர்ஸ்த்தானிகர் சந்தித்து, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா விடயங்களை மேலும் வலுப்படுத்துவதற்கான இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்

2. வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் / வெளிநாட்டு முதலீடுகள்

I. மலேஷியாவில் வர்த்தக சந்தையில் பங்குபற்றியமை

மலேஷியாவின் சர்வதேச உணவு மற்றும் குடிபான விற்பனை சந்தை - யூன் 2018

தேயிலை சபையின் கீழான 4 தேயிலை ஏற்றுமதியாளர்கள் மற்றும் இலங்கையின் 1 இயந்திர ஏற்றுமதியாளர் ஆகியோர் இந்த சந்தையில் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தினர்.

II. ஏசியான் மற்றும் எம். அன்ட் ஈ ஷோ - யூலை 2018

இந்த சந்தைக்கு 12 நபர்களை கொண்ட இலத்திரணியல் மற்றும் மின்னியல் தூதுக்குழு விஜயம் செய்திருந்தது. இந்த தூதுக்குழுவிற்காக ஒரு பி2பி அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

III. மலேஷியாவின் சர்வதேச பிரான்டிங் கண்காட்சி - டிசம்பர் 2018

இலங்கையின் 1 தேயிலை ஏற்றுமதியாளர் மற்றும் 1 அழிகுசாதன உற்பத்தியாளர் ஆகியோர் இந்த சந்தையில் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தினர்

IV. வர்த்தக தூதுக்குழுக்கள்

மலேஷிய உற்பத்தியாளர்களின் சங்கத்தின் தூதுக்குழு - ஜனவரி 2018

மேற்படி சங்கத்தின் 11 உறுப்பினர்களை கொண்ட வர்த்தக தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பி.ஓ.ஐ, ஈ.டி.பி. எம்.எஸ்.எல்.பி.சி, சி.சி.சி மற்றும் எப்.சி.சி.ஐ.எஸ்.எல். ஆகியோரினால் வியாபார நிகழ்ச்சிகள் மற்றும் சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

V. மலேஷிய இலங்கை வியாபார சபையின் வர்த்தக தூதுக்குழு - யூன் 2018

இலங்கையின் வணிக சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலீட்டு மற்றும் வியாபார அமர்வில் கலந்து கொள்வதற்காக எம்.எஸ்.எல்.பி.சி.யின் 13 உறுப்பினர்களை கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பி.ஓ.ஐ, ஈ.டி.பி,

எஸ்.எல்.ஆர்.ஏ மற்றும் எம்.எஸ்.எல்.பி.சி ஆகியவற்றினால் தனியான வியாபார சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

VI. இலங்கையிலிருந்து இலத்திரணியல் மற்றும் மின்னியல் தூதுக்குழு - யூலை 2018

12 நபர்களை கொண்ட வர்த்தக தூதுக்குழு மலேஷியாவிற்கு விஜயம் செய்தது. எம்.ஏ. ட்ரேட், எப்.எம்.எம், டி.ஈ.ஈ.ஏ.எம். ஆகியவற்றுடன் வியாபார சந்திப்புக்கள் மற்றும் இரண்டு தொழிற்சாலை விஜயங்கள் ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

VII. மலேஷியாவின் டன் சோங் குழுவிலிருந்து தூதுக்குழு - ஆகஸ்ட் 2018

லன்ங் ஒடோ 2018இல் பங்குபற்றுவதற்காக மலேஷியாவின் டன் சோங் குழுவிலிருந்து 9 நபர்களை உள்ளடக்கிய வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், இலங்கை முதலீட்டு சபை, இலங்கையின் நிலையான சக்தி அதிகாரசபை, இலங்கை வணிக சபை, இலங்கை மோட்டர் மற்றும் உதிரிப்பாக வர்த்தகர்களின் சங்கம் ஆகியவற்றுடன் தனியான சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

VIII. இலங்கை மலேஷிய வியாபார சபை தூதுக்குழுவின் விஜயம் - நவம்பர் 2018

இலங்கை மலேஷிய வியாபார சபையின் தலைவர் திரு. இக்ராம் கட்டிலான் அவர்களின் தலைமையின் கீழான 9 உறுப்பினர்களை உள்ளடக்கிய இலங்கை மலேஷிய வியாபார சபையின் தூதுக்குழு 12 - 14 நவம்பர் 2018 வரையான காலப்பகுதிக்கு மலேஷியாவிற்கான 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. மலேஷிய முதலீட்டு அபிவிருத்தி அதிகாரசபை, மலேஷிய வெளி வர்த்தக அபிவிருத்தி கூட்டுறவு, மலேஷிய இலங்கை வியாபார சபை மற்றும் ஒன்றிணைந்த சீன வணிக சபை மற்றும் மலேஷிய உற்பத்தியாளர்களின் சபை, இந்திய வணிக சபை, கோலாலம்பூர் மற்றும் செலாங்கருக்கான இந்திய வணிக சபை ஆகியன உள்ளடங்கலான மலேஷியாவின் வர்த்தக சபைகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது.

IX. அகடமி ஹேவா - மலேஷிய ரப்பர் சபை

i. இலங்கையின் லடெக்ஸ் உற்பத்தி துறையின் தொழினுட்ப பயிற்சி மற்றும் ஏற்மதி நிகழ்ச்சி - ஆகஸ்ட் 2018

- ஈ.டி.பி.யின் பிரேரணையின் கீழ் இலங்கையின் லடெக்ஸ் உற்பத்தி துறையின் தொழினுட்ப பயிற்சி மற்றும் ஏற்மதி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.
- இலங்கையிலிருந்து 12 லடெக்ஸ் உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றினர்.

X. உற்பத்தி மேம்பாடு

உயர்ஸ்தானிகராலயத்தில் இலங்கை தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் அறிமுக நிகழ்ச்சி 2018 மேயில் நடைபெற்றது.

XI. மலேஷியாவில் இலங்கை ஏற்றுமதிகளை மேம்படுத்துதல்

2018 யூன் மாதத்தில் எம்.ஐ.எப்.பி. 2018 உடன் இணைந்ததாக இல்கை தேயிலை சபையின் பங்குபற்றுதலுடன் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வொன்று இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

XII. நெருக்கமான மத ஒருங்கிணைவை அபிவிருத்தி செய்தல்

சர்வதேச கலாச்சார கொண்டாட்டமான கலைசங்கமம் 2018 இல் தூதுரகமட் பங்குபற்றியது - நவம்பர் 2018

XIII. நுண் கலைக்கான ப்ரிகேட் அகடமியின் 100க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் ஒன்றிணைந்து 23 இலங்கை மாணவர்கள் பங்குபற்றினர்.

3. தொழிலாளர் நலன்புரி

I. தொழில் தருனர் / தொழிலாளி சார்ந்த முறைப்பாடுகளை கையாளுதல்

தொழில் தருனர், பணியமர்த்தும் முகவர்கள் மற்றும் தொழிலாளிகளின் பல்வேறு முறைப்பாடுகளை உயர்ஸ்தானிகராலயம் தொடர்ச்சியாக கையாண்டது.

II. தொழில் ஒப்பந்தத்தை மீறுதல், சம்பளம் வழங்காமை, வல்லுறவு, தொடர்பாடல் குறைபாடு மற்றும் வெளியேறுதல் ஆகியவற்றுடன் சார்ந்த பல்வேறு பிணக்குகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. 60 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன.

III. சட்டவிரோதமான குடியெபர்வுகள் மற்றும் தொழிலாளர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுதல் ஆகியவற்றின் எண்ணிக்கையை குறைத்தல்

சிறைச்சாலைகள் மற்றும் முகாம்களுக்கு விஜயம் செய்தல்

சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் தகவல்களை திரட்டி, அவர்களுக்கு தேவையான நலன்புரி உதவிகளை வழங்குவதற்காக தொடர்ச்சியாக விஜயம் செய்தல்

IV. கைவிடப்பட்டுள்ள இலங்கையர்களின் தகவல்களை திரட்டி அவர்களுக்கு உதவுவதற்காக நாடுகடத்தப்படும் நபர்களின் செயற்பாடுகளை விரைவு படுத்தல்

4. சுற்றுலா ஊக்குவிப்பு

I. எஸ்.எல்.டி.பி.பி.யுடன் இணைந்து மலேஷிய சுற்றுலாவின் உதவியுடன் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையை ஒரு தளமாக மாற்ற விரும்பும் மலேஷியாவின் 11 பிரயாண முகவர்கள் மற்றும் 02 உத்தியோகத்தர்களுக்கான எப்.ஏ.எம். சுற்றுலா ஒன்றினை ஏற்பாடு செய்தது.

II. எம்.ஏ.டி.டி.ஏ மற்றும் மலேஷிய சுற்றுலா ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடனான நெருக்கமான தொடர்பு

- எம்.ஐ.சி.இ. சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக இலங்கை மாநாட்டுப் பணியகத்துக்கானசந்திப்புக்களை ஏற்பாடு செய்தது - மார்ச் 2018
- இலங்கை கடலுணவு கொண்டாட்டத்திற்காக பேர்ஜயா டைம் ஸ்கொயா ஹோட்டலை ஏறடபாடு செய்தது.

III. எஸ்.எல்.டி.பி.பி.யின் கீழ் இலங்கையின் 16 பிரயாண முகவர்கள் பங்குபற்றினர்

மலேஷியாவில் இலங்கையை ஒரு சுற்றுலா தளமாக ஊக்குவிப்பதற்காக எம்.ஏ.டி.டி.ஏ 2018 இல் இலங்கை - ஆசியாவின் அதிசயம் என்ற தொனியின் கீழ் எஸ்.எல்.டி.பி.பி.யுடன் இணைந்து உயர்ஸ்த்தானிகராலயம் ஏற்பாடு செய்தது.

IV. மலேஷிய சுற்றுலா முகவர்கள், சுற்றுலாத்துறை போரம் மற்றும் ஒரு ஊடக சந்திப்பை இலங்கையில் இலங்கை - ஆசியாவின் அதிசயம் என்ற நிகழ்வில் மேற்கொள்வதற்கு முகவர்களுக்கான தனியான பி2பி அமர்வு ஒன்றை ஏற்பாடு செய்தது.

5. பாதுகாப்பு

I. பயிற்சி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து, உதவுதல்

இலங்கையிலும், மலேஷியாவிலுமான பயிற்சி நிகழ்ச்சிகளை உயர்ஸ்தானிகராலயம் ஒருங்கிணைத்து, உதவியது.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தலைவரின் தலைமையின் கீழான 8 உறுப்பினர் கொண்ட தூதுக்குழு ஒன்று எம்.ஐ.டி.இ.சி., கோலாலம்பூரில் 2015 ஏப்ரலில் இடம்பெற்ற டி.எஸ்.ஏ. 2018இல் பங்குபற்றியது.

சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம்

5.2 உயர் மட்ட அரசியல் விஜயங்கள் உள்ளடங்கலான அரசியல், பொருளாதார, வர்த்தக மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள்

I. இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகளையும், தகைமை கட்டியெழுப்புதலில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைவுக்கான வழிவகைகளையும் ஏற்படுத்திய 2018 ஜனவரியில் சிங்கப்பூர் பிரதமரின் இலங்கைக்கான விஜயத்திற்கு தூதரகம் வசதிகள் மேற்கொண்டிருந்தது. பொருட்கள் மற்றும் சேவைகள், முதலீடு மற்றும் அரசாங்க கொள்முதல்கள் ஆகியவற்றிலான வர்த்தகம் தொடர்பான இருதரப்பு உடன்படிக்கையின் சுருமூக்கமான இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமானது இந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்டதுடன், வருகை தந்த பிரதமர் இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

II. சிங்கப்பூர் பிரதமரின் அழைப்பின் பேரில், இலங்கையின் பிரதமர் ரலணில் விக்ரமசிங்க அவர்கள் எஸ்.டைடப்ளியு.டப்ளியு - டப்ளியு.சி.எஸ். - சி.இ.எஸ்.எஸ். 2018இல் பங்குபற்றி, அடிப்படைக் குறிப்பினை வழங்கினார். இந்த விஜயத்தின் போது, பிரதமர் அவர்கள் சிங்கப்பூரின் பிரதமர், பிரதி பிரதமர் மற்றும் வர்த்தக உறவுகள் அமைச்சர் ஆகியோரை சந்தித்து இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் ஏனைய பரஸ்பர நன்மைபயக்கும் விடயங்களிலான ஒத்துழைப்பு ஆகியன தொடர்பில் கலந்துரையாடல்களில் இடுபட்டார்.

III. (எஸ்.டைடப்ளியு.டப்ளியு), (டப்ளியு.சி.எஸ்) மற்றும் (சி.இ.எஸ்.எஸ்) மாநாட்டுடன் இணைந்ததாக 2018 யூலையில் இடம்பெற்ற உலக மேயர்கள் மாநாட்டில் கொழும்பு, கண்டி ஆகியவற்றின் மேயர்கள் மற்றும் காலியின் பிரதி மேயர் ஆகியோர் பங்குபற்றுவது தொடர்பாக (எஸ்.டைடப்ளியு.டப்ளியு), (டப்ளியு.சி.எஸ்) மற்றும் (சி.இ.எஸ்.எஸ்) ஆகியவற்றின் ஏற்பாட்டாளர்களுடன் தூதரகம் கலந்துரையாடியது.

IV. 2018 ஆகஸ்ட் 23 - 24 ஆந் திகதிகளில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன அவர்கள் சிங்கப்பூருக்கான விஜயத்தினை மேற்கொள்வதற்கு தூதரகம் வசதியளித்திருந்தது. இந்த விஜயத்தின் போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சிங்கப்பூரின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி. விவியன் பாலகிருஷ்னன் அவர்களை சந்தித்து இருதரப்பு கலந்தரையாடல்களில் ஈடுபட்டார். இதன் போது, குறிப்புக்களை டிஜிட்டல் மயமாக்குதல் உள்ளடங்கலான குறிப்பு முகாமைத்துவம் மற்றும் இலங்கையின் சுவடிகள் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் அவர்கள் சிங்கப்பூரின் தொழிளுனுட்ப கற்கைகள் நிறுவகத்திற்கும், தேசிய

நூலக சபைக்கும், சிங்கப்பூரினக் தேசிய சுவடிக்கூடத்திற்கும் விஜயம் மேற்கொண்டதுடன், சிங்கப்பூரின் ஐ.டி.இ. கல்வி சேவைகளின் உதவியுடன் தர முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்காகவும், இலங்கை சுவடிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் பதிப்பு அனுபவத்தினை டிஜிட்டல் மயமாக்குவதற்கான பயிற்சிகளை வழங்குவதற்காகவும் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

V. 2018 ஆகஸ்ட்டில் ஏ.ஆர்.எப். அமைச்சர்கள் மட்ட சந்திப்பில் பங்குபற்றிய தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் விஜயத்திற்கு தூதரகம் வசதிகளை மேற்கொண்டிருந்தது.

VI. 2015 ஆகஸ்ட் 25 - 28 காலப்பகுதிக்கு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள அவர்கள் சிங்கப்பூருக்கான விஜயத்தினை மெற்கொள்வதற்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சட்ட அமைச்சின் சிரேஷ்ட இராஜாங்க அமைச்சர் கௌரவ எட்வின் டொங், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பாராளமன்ற செயலாளர் கௌரவ அம்ரின் அமின் மற்றும் சிங்கப்பூரின் சர்லதேச மத்தியஸ்த்த நிலையத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

VII. சிறைச்சாலைகள் முகாமைத்துவம் / மறுசீரமைப்பு தொடர்பில் நல்ல விடயங்களை பின்பற்றுவது தொடர்பில் பரீட்சயமாவதற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் தலைமை தாங்கப்பட்ட தூதுக்குழு ஒன்று சங்கி சிறைச்சாலைகள் தொகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

5.3 மேற்கொள்ளப்பட்டுள்ள அறிக்கைகள் மற்றும் மதிப்பீடுகள், மற்றும் உணரக்கூடியதும், உணர முடியாததுமான பெறுபேறுகளுடனான பின்பற்றுதல் நடவடிக்கைகள்

I. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தொழினுட்ப ஒத்துழைப்பு பணியகத்தின் ஒத்துழைப்புடன் 2018ஆம் ஆண்டுஅ காரப்பகுதியில் தூதரகம் 80 குறுகிய மற்றும் நடுத்தர கால பயிற்சி நிகழ்ச்சிகளை இலங்கை உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்டிருந்தது.

II. சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகமான லீ குவான் யூ பொதுக் கொள்கைகள் பாடசாலையில் கற்கைகளை மேற்கொள்வதற்கான சில நீண்டகால பட்டப்பின்படிப்பு சந்தர்ப்பம் இலங்கை அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது.

5.4 வெளிநாடுகளில் மற்றும் சர்வதேச நிறுவனங்களில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் / மாநாடுகள்

I. 2018 ஜனவரி 22 - 24 வரை சிங்கப்பூரில் இடம்பெற்ற 6வது ஐ.ஐ.எஸ்.எஸ். புல்லேர்டன் போரம் - ஷங்ர-லா டயலொக் ஷேர்பா சந்திப்பில் இலங்கை பங்குபற்றுவதற்கான வசதிகளை தூதரகம் மேற்கொண்டது.

II. 2008 யூனில் சிங்கப்பூரில் இடம்பெற்ற ஐ.ஐ.எஸ்.எஸ். ஆசிய பாதுகாப்பு மாநாடு: ஷங்ரி-லா டயலொக் 2018 இல் இலங்கை பங்குபற்றுவதற்காக, மூலோபாய கற்கைகளுக்கான சர்வதேச நிறுவகத்தின் ஷங்ரி-லா டயலொக்கின் ஏற்பாட்டாளர்களுடன் தூதரகம் இணைந்து செயற்பட்டது.

III. 2018 யூலையில் இடம்பெற்ற ஏ.ஆர்.எப். சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சந்திப்பில் பங்குபற்றிய இலங்கை தூதுக்குழுவிற்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

IV. 2018 ஆகஸ்ட்டில் இடம்பெற்ற 25வமு ஏ.ஆர்.எப். அமைச்சர்கள் மட்ட சந்திப்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் தலமையின் கீழ் பங்குபற்றிய தூதுக்குழுவின் விஜயம் தொடர்பில் சிங்கப்பூரின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏசியான பணியகத்துடன் தூதரகம் இணைந்து செயற்பட்டது.

5.4 வர்த்தகம், வெளிநாட்டு முதலீடு மற்றும் சுற்றுலா செயற்பாடுகள் - 2018

ஊக்குவிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் எண்ணிக்கை: 18

முன்னெடுக்கப்பட்ட சுற்றுலா வர்ரத்தகம் மற்றும் வணிக செயற்பாடுகளின் எண்ணிக்கை: 13

– 2018 ஜனவரி 20 - 23ஆந் திகதிகளில் சிங்கப்பூர் பிரதமர் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது, உயர் மட்ட வியாபார தூதுக்குழு ஒன்றினை என்டர்பிரைஸ் சிங்கப்பூருடன் இணைந்து தூதரகம் ஏறங்பாடு செய்திருந்தது.

பின்வரும் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன:

I. ஆடம்பர மோலில் உணவுத் தொகுதியொன்றை அமைப்பதற்கான கொழும்பு சிற்றி சென்டர்

II. மோலில் உணவுத் தொகுதியொன்றை அமைப்பதற்கான வன் கோல் பேஸ் (ஷங்ரி-லா மோல்)

III. வர்த்தக நிலையான்மைக்கு உதவும் முகமாக ஏற்றுமதி / விநியோகம் மேற்கொள்ளும் வகையிலான நண்டு பதியம் ஒன்றினை இலங்கைில் நிர்மாணிக்கும் இணைந்த வர்த்தக வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் பி.ஜி.ஐ. மற்றும் ஆர்க் ஹோல்டிங்க்ஸ் ஆகியன கைச்சாத்திட்டன.

IV. ஐகோனிக் கொலொனியல் புரபர்டியை மீள அபிவிருத்தி செய்து, இயக்குவதற்காக கிரேன்ட் ஒரியன்டல் ஹோட்டலுடன் இணைந்து எச்.பி.எல். ஹோட்டல்ஸ் அன்ட் ரிசோர்ட்ஸ் எல்.ஓ.ஐ. ஒன்றுக்கு கைச்சாத்திட்டது.

– சிங்கப்பூர் சீன வணிக மற்றும் தொழிற்துறை சபையினால் இலங்கைக்கு 25 உறுப்பினர் கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழு 2018 மே 06 - 11 வரை விஜயம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை எஸ்.சி.சி.சி.ஐ. சிங்கப்பூருடன் இணைந்து தூதரகம் மேற்கொண்டது.

– இலங்கை நிறுவனங்களுடன் இணைந்த வியாபார சந்திப்புக்களை இலங்கை வணிக சபை, இலங்கை - சிங்கப்பூர் வியாபார சபை, முதலீட்டு சபை ஆகியன ஏற்பாடு செய்திருந்தன. மேலும், இலங்கையில் வியாபார மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளம் காண்பதற்கான அந்த தூதுக்குவானது முலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சர், கொழும்பிலுள்ள தலைசிறந்த பெருநிறுவனங்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டது.

– இலங்கையுடனான பொருளாதார இணைப்புக்களை கண்டறிவதற்காக, 2018 செப்டம்பர் 10 - 14ஆந் திகதி வரை சிங்கப்பூரின் சட்ட சங்கம் (வர்த்தக சட்டத்தரணிகள்) இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

– இலங்கையின் வர்த்தக சட்டத்தரணிகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக சிங்கப்பூர் சட்ட சங்கத்தின் 22 உறுப்பினர்களை கொண்ட தூதுக்குழு ஒன்று செப்டம்பர் 10 தொடக்கம் 14 வரை இலங்கைக்கு வியஜம் மேற்கொண்டிருந்தது. இலங்கை சட்டத்தரஜிகள் சங்கம், முதலீட்டு சபை, அரச தனியார் பங்குடைமைக்கான தேசிய முகவரகம் மற்றும் சில தலைமை பெறுநிறுவனங்களை இந்த தூதுக்குழு சந்தித்தது. இலங்கை வணிக சபையினால் வலையமைப்பு அமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

– **சிங்கப்பூர் இலங்கை வியாபார சங்கம், கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஆகியவற்றுடன் இணைந்து 2018 மார்ச் 01ஆந் திகதி போர் சீசன்ஸ் ஹோட்டலில் இலங்கையில் முதலீடு செய்தல் மாநாட்டினை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.**

கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் தலைமை அதிதியாகவும், சிங்கப்பூரின் வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் எஸ். ஈஸ்வரன் அவர்கள் விஷேட அதிதியாகவும் பங்குபற்றிய இந்த மாநாட்டில் சிங்கப்பூரைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் நிதி முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

– **2018 யூலை 19 - 20ஆந் திகதி வரை இலங்கையின் இலத்திரணியல் மற்றும் மின்னியல் தூதுக்குழு வயாபார விஜயம் ஒன்றை மேற்கொண்டது.**

6 நிறுவனங்களிலிருந்து 10 உறுப்பினர்கள் விஜயம் செய்தனர். ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் பின்வருமாறு: சிங்கப்பூர் நிறுவனங்களின் 15க்கும் மேற்பட்ட குறிப்பான துறைகளுடனான என்டர்பிரைஸ் சிங்கப்பூர் ஒருங்கிணைவு, பி.2பி அமர்வுக்கான 35க்கும் அதிகமான நிறுவனங்களுடனான சிங்கப்பூர் உற்பத்தி பெடரேசன், 14க்கும் மேற்பட்ட நிர்மாண மற்றும் அதனுடன் தொடர்பான நபர்களுடனான சிங்கப்பூர் வியாபார பெடரேசன்.

இந்த தூதுக்குழுவின் ரோல்ஸ் ரோய்ஸ் சிங்கப்பூர் மற்றும் வில்சன் கேபில்ஸ் ஆகியவற்றுக்கான இரண்டு தொழிற்சாலை விஜயங்கள் ஏற்பாடு: செய்யப்பட்டன.

2018 யூன் 14 தொடக்கம் 17 வரை சிங்கப்பூரில் சில்லக்ஸ் சர்வதேச வர்த்தக சந்தைகளில் பங்குபற்றுதல்.

இலங்கை உற்பத்திகளின் தனித்துவத்தை ஊக்குவிப்பதற்காக இலங்கையின் தேயிலை, இலங்கையின் கறுவா மற்றும் இனிப்பு உற்பத்திகள் இலங்கைக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

2018 ஏப்ரல் 24 தொடக்கம் 27 வரை இடம்பெற்ற புட் அன்ட் ஹோட்டல் ஏசியாவில் இலங்கைத் தேயிலை, இலங்கை கறுவா ஊக்குவிப்பு திட்டம்

சிங்கப்பூரின் இரண்டு இடங்களில் நடைபெற்ற எப்.எச்.ஏ. 2018 இல் இலங்கையின் இரண்டு தொகுதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. தேயிலை சபையின் தொகுதி மூன்று கூடங்களையும், ஒரு தேயிலை விளக்க நிலையத்தையும் கொண்டிருந்தது.

சிங்கப்பூர் சர்வதேச ஆபரண கண்காட்சி 2018இல் இலங்கையின் பங்கேற்பு

சிங்கப்பூர் சர்வதேச ஆபரண கண்காட்சி 2018இல் இலங்கையின் பங்கேற்பானது இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

சுற்றுலா மற்றும் பிரயாணத் துறை வர்த்தக சந்தைகளில் பங்கேற்றல்

நடாஸ் ட்ரவல் பெயார்: 23 - 25 மார்ச் வரை சிங்கப்பூரில் எக்ஸ்போ கன்வென்ஷனில் இடம்பெற்ற நடாஸ் ட்ரவல் பெயாரிலான இலங்கையின் பங்கேற்பானது இலங்கை சுற்றுலா பணியகத்துடன் இணைந்து தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையிலிருந்து 09 பிரயாண நிறுவனங்கள் பங்கேற்றன.

2018 ஒக்டோபர் 16ஆந் திகதி ஹோட்டல் ஷங்ரி-லாவில் இடம்பெற்ற மைஸ் 2018 "இலங்கையில் சந்தித்தல்"

சுற்றுலாப் பிரயாணத்தை ஏற்பாடு செய்வதற்கான மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்து, இலங்கையை மைஸ் தளமாக ஆக்குவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இலங்கை மாநாட்டு பணியகம் தூதரகத்திற்கு அதிகாரமளித்திருந்தது.

வீடியோ காட்சிப்படுத்துகை, சுவைமிகு உணவுகள், இலங்கைத் தேயிலை, நண்டு நிலையம், அதிதி உரை போன்றன உள்ளடங்கலாக தூதரகம் இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தது. தமது பக்கேஜ்களை சந்தைப்படுத்துவதற்காக இலங்கையிலிருந்து விஜயம் செய்த 13 நிறுவனங்களுக்காக பி. மற்றும் பி அமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

28 - 30 நவம்பர் வரை ஜே.டி.எம்.ஐ.எஸ். இனால் மாணிக்கம் மற்றும் ஆபரங்கள் தொடர்பில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட கண்டறிதல் விஜயம்

வித்தியாசமான சந்தை நிபந்தனைகளுக்கு அமைவாக மாணிக்கங்களை வடிவமைப்பதற்காக மாணவர்களை பரிமாற்றம் செய்து கொள்வது தொடர்பிலான விழிப்புணர்வ நிகழ்ச்சியொன்று இந்த தூதுக்குழுவிற்கு மாணிக்கம் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் நடாத்தப்பட்டது.

காரணியை கண்டறிவதற்கான விஜயங்கள்: 08

ஆசியான் வெளிக்கள மாநாடு மற்றும் வலையமைப்பு நிகழ்வு; ஒரு வழி ஒரு பாதை திட்டம் தொடர்பான கருத்துக்கள்; சர்வதேச வணிக சபை; 2015 மார்ச் 20ஆந் திகதி இந்தோனேஷியாவின் படாம் தீவில் திறந்து வைக்கப்பட்ட நொங்சா டிஜிட்டல் பார்க்கின் ஆரம்ப நிகழ்வில் பங்பற்றியமை; 2018 மார்ச் 22ஆந் திகதி மரினா பே சேன்ட்சில் நடைபெற்ற கபே ஆசியா / சுவீட்ஸ் அன்ட் பேக் ஆசியா 2018; 14 - 16 மார்ச் வரையான ஆசியா பசுபிக்

மெரிடைம் எக்ஸ்போ 2018; 2018 மார்ச் 31ஆந் திகதி இடம்பெற்ற சிங்கப்பூர் இந்திய வணிக மற்றும் தொழிற்துறை சபை - சிங்கப்பூர் அபிவிருத்தி வங்கி சிங்கப்பூர் இந்திய தொழில்வாண்மையாளர் விருதுகள் 2018இல் பங்குபற்றியமை

சிங்கப்பூர் எக்ஸ்போவில் நவம்பர் 16ஆந் திகதி நடைபெற்ற ஆசிய பசுபிக் புட் எக்ஸ்போ

எல்.என்.ஜி. நிறுவனங்களை சந்திப்பதற்காக 2018 நவம்பர் 27ஆந் திகதி மரினா பே சேண்ட்சில் அடம்பெற்ற ஓ.எஸ்.ஈ.ஏ. யில் பங்குபற்றியமை

2018 நவம்பர் 8ஆந் திகதி ரசா சென்டோசா ரெசோர்ட் அன்ட் ஸ்பாவில் இடம்பெற்ற சி.என்.எப். 2018இல் பங்குபற்றியமை

ஆசியான் வியாபார மற்றும் முதலீட்டு மாநாடு - பிராந்திய தலைவர்களுடனான 33வது ஆசியான் மாநாட்டுடன் இணைந்ததாக ஆசியான் வியாபார மற்றும் முதலீட்டு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் பிராந்தியத்தின் 1500 தூதுவர்கள் பங்குபற்றியதுடன், இதன்போது சிங்கப்பூரின் தலைமை சபைகள் மற்றும் நிறுவனங்களுடனான வலைப்பின்னல் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட நிறுவனங்களின் விஜயங்களின் எண்ணிக்கை: 26

23 தனிப்பட்ட வியாபார விஜயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தி சபை, வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடனான சந்திப்புக்களுக்காக இந்த நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன.

மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகள்: 02

- புதிய ஏற்மதி பயிராக குயினோவா
- வர்த்தகம் / முதலீடு மற்றும் சுற்றுலா மீதான போக்கினை ஆராய்தல்

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள்

- இன்-டிப்லோமசி சஞ்சிகையின் வருடாந்த விநியோகம் 2018 க்கான இலங்கையின் உயர் உற்பத்திகள் தொடர்பான அறிக்கை
- இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள்

வர்த்தக கோரிக்கைகள் மற்றும் வர்த்தக முறைப்பாடுகளின் எண்ணிக்கை: 46

6. வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களுக்கு வசதியளித்து, மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை

- 2018 காலப்பகுதியில், நலன்புரி அளவீடுகளை வழங்குவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் 1585 இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை இந்த தூதரகம் பதிவு செய்தது.

- 2018இல், இலங்கையர்களுக்கு 2500 வேலை வாய்ப்புக்களை ஒதுக்கீடு செய்வதற்காக சிங்கப்பூரை தளமாகக் கொண்ட முகவர்களுடன் தூதரகம் ஒருங்கிணைந்து செயற்பட்டதுடன், உற்பத்தி (கட்டுமான பணியாளர்கள் / ஆண்கள்) மற்றும் வீட்டுப் பணியாளர்கள் / உதவியாளர்கள் தொகுதிகளில் வேலைகளுக்கு ஆட்கள் கோரும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக இலங்கை முகவர்களுடன் குறித்த தொழில்வாய்ப்புக்களை பகிர்ந்து கொண்டது.

- 2018 காலப்பகுதியில், சிங்கப்பூரை தளமாகக் கொண்ட இலங்கையின் புலம்பெயர் பணியாளர்களின் 130 பிணக்கு வழக்குகள் / முறைப்பாடுகளை தூதரகம் கையாண்டது.

- 2018 காலப்பகுதியில், சிங்கப்பூரை தளமாகக் கொண்ட இலங்கையின் புலம்பெயர் பணியாளர்களுக்கு தொழிலாளர் நலன்புரி மற்றும் கொன்சியூலர் சேவைகளை வழங்குவதற்காக 5 நடமாடும் சேவைகளை தூதரகம் ஏற்பாடு செய்தது.

- பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழில் முகவர்களுடனும் காலாண்டு சந்திப்புக்களை ஆண்டு முழுவதும் தூதரகம் ஏற்பாடு செய்வதுடன், தமது சேவை விநியோகத்தை தொழிலாளர் பிரிவினூடாக மேம்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட முகவர்களை சந்திப்பதற்கான புதிய பொறிமுறையை அறிமுகம் செய்து, குறித்த தொழில் முகவர்களின் ஊடாக புலம்பெயர் பணியாளர்களுக்கான தொழில் நிபந்தனைகள் தொடர்பான விஷேட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தியது. இந்த வருடத்தில் குறித்த முகவர்கள் / தொடர்புடைய நிறுவனங்களுக்கான அத்தகைய 120 விஜயங்களை தூதரகம் மேற்கொண்டது.

தாய்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகம்

1. இருதரப்பு உறவுகள்:

தாய்லாந்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள்:

I. 2018 யூலையில் தாய் பிரதமரின் உத்தியோகபூர்வ விஜயம். பின்வரும் உடன்படிக்கை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன: குற்றவாளிகளை பரிமாற்றுவதற்கான மற்றும் குற்றங்களுக்கான தண்டனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு தொடர்பான சாசனம், மூலோபாய பொருளாதார பங்காண்மை மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை, ஆரம்ப உற்பத்திகளின் பெறுமதி உட்சேர்ப்புடன் தொடர்பான தொழினுட்ப ஒருங்கிணைவு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை, தன்னிறைவான பொருளாதார தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நிலையான சமூக அபிவிருத்தி முறைமைக்கான ஒத்துழைப்புக்கான இணைந்த நடவடிக்கை நிகழ்ச்சி. தாய் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான தீர்மானங்கள் அமைக்கப்பட்டன.

II. தாய்லாந்திற்கான நிரந்தர வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர் 2018 பெப்ரவரியில் இலங்கையில் நடைபெற்ற 4வது இலங்கை - தாய்லாந்து அரசியல் ஆலோசனைகளுக்கு தலைமை தாங்கினார்.

III. 2018 டிசம்பர் 31ஆந் திகதி தாய்லாந்தின் கலாச்சார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, சியம் பிரிவின் துறவிகளின் தலைமைகளை தாய்லாந்துக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

IV. ரோயல் கடினா நிகழ்வினை நடாத்துவதற்காக (2018 நவம்பர்) தாய் வெளிநாட்டு அமைச்சர் தொன் ப்ரமுத்வினய் அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

தாய்லாந்திற்கான விஜயங்கள்

I. கௌரவ பிரதமர் கொழும்பிற்கான விஜயத்தின் போது பாங்கொக்கில் தரித்து நின்றார். பிரதமரின் அலுவலகத்துடன் தொடர்பான தாய் அமைச்சர் கொப்சாக் பூட்ராகூல் அவர்களுடனான சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரும் இணைந்து கொண்டார்.

II. சட்ட முறைமையின் செயற்பாட்டை ஆராய்வதற்காகவும், குற்றவாளிகளை நடாத்தும் முறைமையை கண்டறிவதற்காகவும் கௌரவ நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு

அமைச்சரினால் கற்கை விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர் தாய்லாந்தின் பிரதி பிரதமர் மற்றும் நீதியரசரை சந்தித்தார்.

III. ஆரம்ப தொழிற்துறை அமைச்சரினால் தாய் பெக்சாசுக்கான விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் ஒரு கூடம் அந்த அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு, இந்த தூதரகத்தினால் வசதியளிக்கப்பட்டது.

IV. கௌரவ பிரதமர் அலுவலகத்தின் ஊழியர்களின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் திட்ட முகாமைத்துவம், இளைஞர் விவகாரம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் இலங்கையின் சீன துறைமுக நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து ரியோங்கிலுள்ள அமாடா தொழிற்துறை பூங்காவிற்கு விஜயம் செய்தனர். கப்பல் வரி செயற்பாடு குறித்து அவர் அமைச்சர் பூட்ராகூலை சந்தித்தார்.

V. கௌரவ பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தாய்லாந்துக்கு விஜயம் செய்து, தாய்லாந்தின் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்தார்.

(5) ஏனைய இருதரப்பு ஈடுபாடுகள்

I. பிரதமரின் அலுவலகத்துடன் இணைந்த தாய் அமைச்சருடன் போதிமரக் கன்றை இலங்கையிலிருந்து வழங்குவது தொடர்பான சந்திப்பு இடம்பெற்றது.

II. பொருளாதார பிரச்சினைகளை கையாள்வது குறித்து வணிக அமைச்சர் மற்றும் பிரதமரின் அலுவலகத்துடன் இணைந்த அமைச்சர் ஆகியோருக்கு இடையில் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

III. விவசாயம் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் குறிப்பாக தொழினுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக டிகாவின் பணிப்பாளர் நாயகத்துடனான சந்திப்பு இடம்பெற்றது.

IV. கௌரவ இளவரசி சிரிந்தோர்ன் அவர்களுடனான அரச திட்டங்களுக்கான விஜயத்தில் பங்குபற்றி, அவரது தலைமைத்துவத்தின் கீழான விவசாயம், விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளிலான நிகழ்வுகளுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

V. அரச மழை உற்பத்தி பணியகத்தின் தாய் பணிப்பாளர் நாயகத்தின் இலங்கைக்கான விஜயம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டதுடன், அதற்கு இணையான இலங்கைக் குழாமின் தாய்லாந்து விஜயமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

VI. பட்டக்கீழ் படிப்பு புலமைப்பரிசில்கள் தம்மாசட் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டன. தாய் தரப்பினரால் வழங்கப்பட்ட ஏனைய தொழினுட்ப உதவி புலமைப்பரிசில்களும் செயற்படுத்தப்பட்டன.

VII. தன்னிறைவு பொருளாதார தத்துவத்தினை அனுபவிப்பதற்கான 2ஆம் ஆசியான இளைஞர் பிரதிநிதிகளில் பங்குபற்றுவதற்காக கொழும்பிலிருந்து இளைஞர் தூதுக்குழுவொன்று விஜயம் மேற்கொள்வதற்கு வசதியளிக்கப்பட்டது.

VIII. கொழும்பில் பாதுகாப்பு கலந்துரையாடலில் பற்குபற்றுவதற்கு தாய் தரப்பினருக்கு வசதிகள் வழங்கப்பட்டன. இராணுவ வீரர்களின் தாய்லாந்து கண்ணிவெடி செயற்பாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கும் வசதிகள் வழங்கப்பட்டன.

IX. சமுத்திரத்திற்கான ஆசிய பசுபிக் தின அங்குரார்ப்பன நிகழ்வு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தின ஆசிய பசுபிக் கொண்டாட்டம், சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம், 'விஸ்டம் ஒப் மொர்க்" - நிலையான அபிவிருத்தியின் உலக தலைவர் புத்தக வெளியீடு, சட்டம், கௌரவ மன்னர் பூமிபோல் அடுல்யதேஜ் அவர்களினால் தொடங்கப்பட்ட நிகழ்ச்சிகள், தாய் ஜனநாயகத்திற்கான கே.பி.ஐ. காங்கிரஸ் XXX மற்றும் களரவ இளவரசி மஹா சக்ரி சிரிந்தோர்ன் அவர்களினால் தலைமை தாங்கப்படும் பாங்கொக் போரத்தின் திறப்பு நிகழ்வு ஆகியவற்றில் பங்குபற்றப்பட்டது.

2. பல்தரப்பு உறவுகள்:

I. ஈ.எஸ்.சீ.ஏ.பி.யின் 74ஆவது ஆணைக்குழு அமர்வில் இலங்கை பங்குபற்றுவதற்கும், 2030ஆம் ஆண்டில் ஈ.எஸ்.சீ.ஏ.பி.யின் நிலையான அபிவிருத்திக்கான உயர் மட்ட கலந்துரையாடல்களில் இலங்கை பங்குபற்றுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டன.

II. யு.என்.ஈ.எஸ்.சீ.ஏ.பி.யின் ஆலோசனை கமிட்டியின் நிரந்தர பிரதிநிதிகளின் சந்திப்பு, ஏ.பி.டி.ஏ.யின் நிலையியற் குழுவின் 52ஆம் அமர்வு, பொது சுகாதாரம் மீதான 4ஆம் சர்வதேச மாநாடு, விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழினுட்பம் மீதான மாநாடு, அபிவிருத்திப ங்காளர்களுக்கான எப்.ஏ.ஓ. விளக்கம், பிம்ஸ்டெக்கிற்கான கொள்கை கலந்துரையாடல், யு.என்.ஈ.எஸ்.சீ.ஏ.பி.யின் காலநிலை மாற்ற போரம் ஆகியவற்றில் பங்குபற்றியது.

3. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்:

I. தொழிற்துறை பூங்காவை இலங்கையில் அமைப்பதற்கான சாத்தியப்பாட்டினை ஆராய்வதற்காக ரோஜானா தொழிற்துறை பூங்காவின் பிரதி தலைவருடன் கலந்துரையாடுவதற்கான சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சரின் பெங்கொக் விஜயத்திற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

II. ரொஜானா தொழிற்துறை பூங்காவுடன் ஆலோசனைகளில் ஈடுபடுவதற்கான முதலீட்டு சபை குழுவின் விஜயத்திற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

III. எப்.டி.ஏ. அமர்வுக்கு விஜயம் செய்து, மூலோபாய பொருளாதார பங்காண்மை புரிந்துணர்வு உடன்படிக்கையை கொழும்பில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படன.

IV. பேங்கொக் மாணிக்கம் மற்றும் ஆபரண சந்தை மற்றும் தாய்பெக்ஸ் ஆகியவற்றில் இலங்கை வர்த்தகர்கள் பங்குபற்றுவதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

V. தொழிற்துறை பூங்கா துறையில் முதலீடு செய்வதற்கான மாற்று வழிகளை ஆராய்வதற்காக அமாடாவின் பிரதம நிறைவேற்று அதிகாரியுடனான சந்திப்பு

VI. முவாங்தாய் லைப் அசுரன்ஸ் குழுவினரின் கொழும்பிற்கான விஜயத்திற்து வசதிகள் வழங்கப்பட்டன.

VII. தேயிலை மற்றும் கறுவா விற்பனையை ஊக்குவிப்பதற்காதக வருடாந்த செஞ்சிலுவை பசாரில் பங்குபற்றப்பட்டது.

VIII. தனது சீன திட்டங்களை இலங்கையில் மேற்கொள்வதற்கு சூடெக்கிற்கு உதவிகள் வழங்கப்பட்டன.

IX. 2019ஆம் ஆண்டில் நிறுவப்படவுள்ள இலங்கைக்கான விமான சேவைக்கான விருப்பம் தாய்-லயன் எயாரினால் தெரிவிக்கப்பட்டது.

X. இலங்கைக்கான தனியார் ஜெட் பயணம் மீதான முதலீடு தொடர்பிலான எம். ஜெட்டின் தூதுக்குழுவினரின் பயணத்திற்கு வசதிகள் வழங்கப்பட்டன.

XI. பின்வரும் தாய் நிறுவனங்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டன: ரப்பர் ஏற்றுமதி செய்யும் தாய் ரப்பர் நிறுவனம், ஐ.டி.எமட். ஏ.ஐ - உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் மொஸ்கிடைர்ஸ் குரூப், ஆடம்பர தளபாடங்களுக்கான லேசிபோய் கம்பனி,

தேயிலைக்கான தாய் லீடர் குலோபல் ட்ரேட் கோ, தேயிலை விநியோகம் செய்யும் டிட்டோ கோ லிமிடட், சுற்றுலா சார்ந்த ஏ.டி.எம். பேங்கொக் பட்டாயா ட்ரவல் குரூப்

XII. இலங்கை புகையிரதம், துறைமுக அதிகாரசபை, லங்கா மினரல் மண் நிறுவனம், அரச மருந்தக கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ், சிலோன் பெட்ரோலியம் கோபரேஷன், போக்குவரத்து மற்றும் சிவில் விமானம், அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம், லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் ஆகியவற்றின் விலைமனு கோரப்பட்டன.

XIII. வை.டப்ளியு.சி.ஏ. இராஜதந்திர நன்கொடை பஸாரில் பங்குபற்றி இலங்கையின் உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டன.

XIV. எம்.ஐ.டி. லங்கா நிறுவனத்திற்கு தாய்லாந்திலிருந்து ஏ4 ரக காகிதங்களை இறக்குமதி செய்வதற்காகவும், தேங்காய் உற்பத்தி சந்தையை கண்டறிவதற்காக சிலோன் மட்ரினட் ஹோல்டிங் நிறுவனத்திற்கும், பாங்கொக் ஊடாக கோழிக்குஞ்சுகளை ஏற்றுமதி செய்வதற்கான மூன்று ஏக்கர் பண்ணை நிலம், லா சி போயுடனான சந்திப்பின் மூலமாக தமது மர உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான சந்தையை கண்டறிவதற்கு பேர்னிகிராப்ட் கோ லிமிடட்டிற்கு வசதிகளை ஏற்படுத்துதல், இலங்கைத் தேயிலையை கொள்வனவு செய்வதற்காக ஜேர்மன் ஸ்டான்டர்ட் அன்ட் பொக்ஸ் ஒபீஸ் நிறுவனங்கள், பாங்கொக்கிலுள்ள ஹவுஸ் ஒப் டிட்டோ கோ லிமிடட் ஆகியவற்றுக்கும், இலங்கையிலிருந்து கடலுணவை இறக்குமதி செய்வதற்காக எஸ்.என்.எஸ். ஹோல்டிங்க்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கும் வணிக விபரங்கள் வழங்கப்பட்டன.

XV. தாய் இரத்தினம் மற்றும் ஆபரண வர்த்தகங்கள் சங்கத்தின் தலைவருக்கு பசெட் 2018 கண்காட்சிக்கு வருகை தருவதற்காக அழைப்பு விடுக்கப்பட்டதுடன், தாய் இரத்தின இறக்குமதியாளர்களுடன் சேர்ந்து ஒரு பிரதிநிதி வருகை தந்திருந்தார்.

XVI. 2018 ஒக்டோபரில் கொழும்பில் நடைபெற்ற தாய் மொத்த வியாபார போரத்தில் பங்குபற்றுவதற்காக தாய் மொத்த வியாபாரிகள் சங்கத்தின் சியம் பராகன் மொத்த வியாபார நிறுவனத்தின் பொது முகாமையாளர் - செயற்பாடுகள் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

XVII. பெட் பிலாஸ்டிக் உற்பத்தியில் முதலீடு செய்வதறடகாக இந்தோ ராமா குரூப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

XVIII. தாய்லாந்திலுள்ள இணைந்த வெளிநாட்டு வணிக சபையின் உறுப்பினர்களுக்கு இலங்கையின் பொருளாதாரம், சுற்றுலா மற்றும் முதலீடு தொடர்பான வர்ணனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

XIX. பாங்கொக்கின் யு.என்.எஸ்.சி.ஏ.பி. யில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் தினம் மற்றும் தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு கலந்துரையாடல் தொடர்பான பட்டறையிலும், யு.என்.எஸ்.சி.ஏ.பி. யினால் ஒருங்கிணைக்கப்பட்ட 5வது பசுமை தொழிற்துறை மாநாடு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 51வது ஆசியான் வெளிநாட்டு அமைச்சர்களின் சந்திப்பு மற்றும் அதனுடன் சார்ந்த சந்திப்புக்கள், ஆசிய தொழினுட்ப நிறுவனத்தின் நம்பிக்கை சபை உறுப்பினர்களின் கூட்டம் மற்றும் கையளிப்பு நிகழ்வு, யு.என்.எஸ்.சி.ஏ.பி. யில் இடம்பெற்ற விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழினுட்பம் மீதான மாநாடு, நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான பௌத்த பாதை தொடர்பான மாநாடு, இளையோர் பௌத்த சங்கத்தில் நடைபெற்ற உலக பௌத்த பல்கலைக்கழக மாநாடு மற்றும் ஆசிய தொழினுட்ப நிறுவகத்தின் 130வது பட்டமளிப்பு விழா ஆகியவற்றில் பங்குபற்றப்பட்டது.

XX. இலங்கையின் ரப்பர் தொழிற்துறைகளுக்கு ரப்பர் தொழினுட்ப பயிற்சி வழங்குனர்களை தெரிவு செய்வதற்காக தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சுக்கு வசதிகளை ஏற்படுத்தியதுடன், தாய்லாந்திலுள்ள டெக்னோபிஸ் தொடர்பாடல் நிறுவனத்தை பரிந்துரை செய்தது.

XXI. வெளியக தூதுக்குழு ஒன்றை இலங்கைக்கு ஏற்பாடு செய்வதற்காக எஸ்.எல்.ஈ.டி.பி. மற்றும் இலத்திரணியல் மற்றும் மின்னியல் ஒருங்கிணைவு சங்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

XXII. அரச மருந்தக கூட்டுத்தாபனம், கனிய மணல் நிறுவனம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட இலங்கை சந்தையின் எண்ணெய் விநியோகஸ்த்தர்கள், வலு மற்றும் புத்தாக்க சக்தியின் விலைமனு, கொழும்பிலுள்ள சால்மர்ஸ் கிரனரீஸ் நிலத்திற்கான அபிவிருத்தி திட்டத்துடன் தொடர்பான பிரேரனைகள் மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு அறிவித்தல் போன்ற உலக ரீதியான கொள்முதல் அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

XXIII. போலி நிதி பரிமாற்றம் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை சரி செய்வதற்காகவும், போட்டோ பைன் கலர் லெபரடரீஸ் (தனியார்) நிறுவனம் செலுத்தப்படாத கட்டணங்களை மீட்டுக் கொள்வதற்காகவும், கொழும்பு எம்.எம்.

ட்ரேடர்ஸ் பொருட்களை அனுப்பி வைக்காமை தொடர்பிலும், இலங்கையின் ஷெஹன்ஷா நிறுவனத்தின் பிலாஸ்டிக் மூலப்பொருட்கள் கொள்கலன்களின் செலுத்துகையை அனுப்பி வைக்காமை தொடர்பில் யூனியன் ஜே. பிலஸ் (தாய்லாந்து) கோ லிமிடட் நிறுவனத்திற்கும் வசதிகளை ஏற்படுத்தியது.

4. கலாச்சார உறவுகள்:

I. சுதந்திரத்தின் 70வது ஆண்டு நிறைவைத் தொடர்ந்து, "இலங்கை - தாய்லாந்து: ஒரு நேரம் கடந்த பங்காண்மை" என்ற தலைப்பிலான மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் விஷேட செயற்பாடுகளுக்கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அவர்களும், தாய்லாந்துக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஆகியோர் உரையாற்றினர்.

II. ஆசிய தொழினுட்ப நிறுவகத்தில் கற்கும் இலங்கை மாணவர்கள் மற்றும் தாய்லாந்திலுள்ள இலங்கை சங்கம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புதுவருட கொண்டாட்டத்தில் பங்குபற்றப்பட்டது.

III. சுலாலொங்கோர்ன் பல்கலைக்கழகத்தின் இலங்கைத் துறவி ஒருவரினால் வழங்கப்பட்ட பன நிகழ்வு ஒன்றை தூதரகம் ஏற்பாடு செய்திருந்ததுடன், அதில் பிரதி பிரதமர் விஸ்ஸனு-க்ரியா-கம் மற்றும் பிரதி வெளிநாட்டு அமைச்சர் விராசக்தி புட்ராகுல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

5. சுற்றுலாத்துறை:

I. பிரதி பிரதமர் விஸ்ஸனு-க்ரியா-கம் அவர்களினால் தலைமை தாங்கப்பட்ட தாய் பட்டு கண்காட்சியின் ஏற்பாட்டுக் குழுவிற்கு உதவுவதற்காக அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த நிகழ்வானது இலங்கையை பெஷன் உலகம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய இரண்டு கோணங்களிலும் காட்சிப்படுத்துவதற்கானதொரு சந்தர்ப்பமாகும்.

II. தாய் சர்வதேச சுற்றுலாத்துறை சந்தையில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் திறப்பு விழாவில் பங்கேற்கப்பட்டது.

III. புதிய சுற்றுலாத்துறை அமைச்சரை சந்தித்து, தெவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ள ஒரு கதைப் புத்தகத்தை வடிவமைப்பதனூடாக பௌத்த சுற்றுக்கான கொள்கைகளை வகுப்பதற்கான சந்திப்பிலும் பங்கேற்கப்பட்டது.

IV. தாய்லாந்திலுள்ள தேசிய சுற்றுலாத்துறை அமைப்பின் செயற்பாடுகள் பங்குபற்றி, தாய் சுற்றுலா செயற்பாட்டாளர்கள் இலங்கைக்கான எம்.ஏ.எம். பயணத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளுக்கு உதிவகள் வழங்கப்பட்டது.

லாவோ மக்கள் ஜனநாயக குடியரசு

1. இருதரப்பு உறவுகள்:

I. இலங்கையின் கௌரவ பிரதமர் மற்றும் லாவோ பிரதமர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்றினை 2018 செப்டம்பரில் வியட்நாமில் இடம்பெற்ற டப்ளியு.இ.எப். ஆசியான் கூட்டத்தின் போது வெற்றிகரமாக தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

II. கௌரவ இலங்கையின் சபாநாயகரினால் தலைமை தாங்கப்பட்ட இலங்கை - லாவோ பாராளமன்ற நட்டுறவுக் குழு லாவோ மக்கள் ஜனநாயக குடியரசிற்கு விஜயம் மேற்கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இலங்கையர்களின் சட்டத்திற்கு ஏற்ப வருகையின் போது வீசாவினை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் இந்த விஜயத்தின் போது தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்கு அப்போதைய கௌரவ கொன்சுல் நாயகமும் உதவிகளை வழங்கியிருந்தார்.

III. இலங்கைக்கான லாவோவின் கௌரவ கொன்சுலை நியமனம் செய்வது பூர்த்தி செய்யப்பட்டது.

IV. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு அரசியல் ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் யு.என்.ஜி.ஏ. யின் 73வது அமர்வின் இணை நிகழ்வாக நியூ யோர்க்கில் இடம்பெற்றது.

V. வியன்டியனில் பௌத்த துறவி ஒருவர் இறந்த பின்னர், அவரது உடல் இலங்கைக்கான கௌரவ கொன்சுலின் உதவியுடன் வெற்றிகரமாக மீள கொண்டுவரப்பட்டது.

VI. வியாபார மற்றும் கொன்சுலர் விசாரணைகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டன.

2. பல்தரப்பு உறவுகள்:

I. சிங்கப்பூரில் இடம்பெற்ற ஏ.ஆர்.எப். இன் இணைப் பாகமாக தூதரகம் கௌரவ பிரதமர் மற்றும் லாவோவின் பிரதமர் ஆகியோருக்க இடையிலான சந்திப்பு ஒன்றினை வெற்றிகரமாக ஒருங்கிணைத்தது.

II. “இந்து சமுத்திரம்: உமது எதிர்காலத்தை கண்டறிதல்” மாநாட்டை ஒருங்கிணைத்து, அதில் பங்குபற்றுவதனை உறுதிப்படுத்தியது.

III. இலங்கை வெளிநாட்டு உறவுகள் மற்றும் பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சி - 2018 இல் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

3. பொருளாதார உறவுகள்

I. லாவோ மக்கள் ஜனநாயக குடியரசில் முதலீடு செய்வதற்காக ஹேலிஸ் அட்வன்டிஸ் நிறுவனத்திற்கு உதவிகள் வழங்கப்பட்டன

கம்போடிய இராஜ்ஜியம்

1. இருதரப்பு உறவுகள்:

I. செப்டெம்பர் 2018 இல் வியட்னாமில் இடம்பெற்ற WEF ASEAN கூட்டத்தில் இலங்கை மற்றும் கம்போடிய பிரதம மந்திரிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்றை தூதரகம் வெற்றிகரமாக ஒருங்கிணைத்தது.

II. வணிக மற்றும் கொன்சியுலர் விசாரணைகளுக்கான அனுசரணை வழங்கப்பட்டது.

2. பல்தரப்பு உறவுகள் :

(1)சிங்கப்பூரில் இடம்பெற்ற ARF அமைச்சர்களுக்கிடையிலான கூட்டத்தில் இலங்கை மற்றும் கம்போடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்று தூதரகத்தினால் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டது.

ஜகார்த்தாவிலுள்ள இலங்கை தூதரகம்

1. இருதரப்பு உறவுகள்:

I. 2018 ஜனவரி 24 – 25 ஆம் திகதிகளில் மேன்மை தங்கிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ இராஜாங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டு, மாண்புமிகு பிரதம மந்திரியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். 38 வருடங்களுக்குப் பின்னர், இந்தோனேசிய ஜனாதிபதியின் இலங்கைக்கான விஜயமாக இது அமைதிருந்தது.

II. கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகள்: உயர்கல்வித்துறை, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம், ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு, தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு, சட்டவிரோத போதை வஸ்துக்கள், போதையைத் தூண்டும் இரசாயன உளநிலைமாற்றிகள் போன்றவற்றின் கடத்தலைத் தடுப்பதில் ஒத்துழைப்பு.

III. தேர்தல் ஆணையகங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு – பிராந்திய தேர்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் (ஜகார்த்தா) தேர்தல் ஆணையகம் பங்குபற்றல் மற்றும் 2018 ஜூன் 25 – 28 காலப்பகுதியில் தூதரக தலைவர்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் இராஜதந்திர அதிகாரியினால் நடத்தப்பட்ட தேர்தல் விஜயம். (சுரபயா).

IV. இராஜாங்க விஜயத்திற்கான கணிசமான விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்களை வழிநடத்தியமை: தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு, கல்வி மற்றும் ஆராய்ச்சி, போதைப்பொருட்கள், இடர் முகாமைத்துவம், காலநிலையியல், உணவுப்பாதுகாப்பு, கலாச்சார ஒத்துழைப்பு.

V. இளைஞர் பரிமாற்றம்: 2018 மார்ச் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெற்ற 'யொவுன் புரய' தேசிய இளைஞர் நிகழ்ச்சித்திட்டத்தின்போது 6 இந்தோனேசிய உறுப்பினர் குழு பங்குபற்றுவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டது.

VI. சிறந்த நடைமுறைகளைப் பகிர்தல்: 27 மார்ச் – 1 ஏப்ரல் 2018 காலப்பகுதியில் ஆரம்ப மற்றும் மகப்பேறு சுகாதாரம் பற்றியதிலான இந்தோனேசிய மருத்துவர்களின் ஆய்வுச்சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது.

VII. இந்தோனேசியாவின் சுரபயாவிலுள்ள 'எயர்லங்கா' பல்கலைக்கழகத்தில், 12-13 மே 2018 காலப்பகுதியில் இடம்பெற்ற, 'மகப்பேறு மரணங்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கான புதுமை உருவாக்க வழிமுறைகள்' என்பது பற்றிய கருத்தரங்கத்தில், இலங்கை விற்பன்னர் ஒருவர் தொழில்நுட்ப ஆராய்ச்சி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது.

VIII. இரு நாடுகளுக்குமிடையிலான 65 வருடகால இராஜதந்திர உறவுகளை நினைவுகூரும் வண்ணம், இந்தோனோசியாவின் 'போகோ தாவரவியல் பூங்கா' மற்றும் யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளத்திற்கு இலங்கையின் தேசிய மரம் வழங்கப்பட்டது.

IX. ஜகார்த்தா மற்றும் பலெம்பாங்கில் இடம்பெற்ற 2018 ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் இலங்கை குழுவினர் பங்கெடுப்பது ஏற்பாடு செய்யப்பட்டது.

X. இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ ஃபைஸர் முஸ்தபா மற்றும் இந்தோனேசிய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மேன்மைதங்கிய நக்வி அவர்களுக்கிடையே, விளையாட்டுத்துறையில் பயிற்சி, தொழில்நுட்ப நிபுணத்துவம் போன்றவை பற்றியதில் 1 செப்டெம்பர் 2018 அன்று இருதரப்பு கலந்துரையாடல் இடம்பெற்றது.

XI. ஆசிய விளையாட்டுப்போட்டி 2018 காலப்பகுதியில், க.பொ.த உ/த பரீட்சைகள் முதன்முதலாக வெளிநாட்டில் நடத்தப்பட்டது.

XII. சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையினர், 2018 அக்டோபர் - நவம்பர் காலப்பகுதியில் இந்தோனேசியாவுக்கு ஆய்வுச்சுற்றுலா ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் ஒழுங்குசெய்யப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

XIII. யோக்யகர்த்தாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட, , 25 அக்டோபர் 2018 அன்று, அரசர் ஸ்ரீ சுல்தான் ஹெமெங்கு புவோனோ- 10 அவர்களைச் சந்தித்து, இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும், குறிப்பாக யோக்யகர்த்தா பிராந்தியத்திற்கும் இடையிலான கலாச்சாரம், கல்வி, போன்றவற்றில் ஒத்துழைப்பு பற்றிக் கலந்துரையாடினார்.

2. பல்தரப்பு உறவுகள்

I. வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், கௌரவ திலக் மாரப்பன, ஜ.ச, பா.உ தலைமையிலான குழுவொன்று, 7 ஆகஸ்ட் 2018 இல் பாலியில் இடம்பெற்ற அமைச்சரவை ரீதியிலான, மனிதக்கடத்தல் வியாபாரம் மற்றும் அதுசம்பந்தமான நாடுகளுக்கிடையிலான குற்றங்கள் பற்றிய மாநாட்டில் கலந்துகொண்டது. உயர் அதிகாரிகள் சந்திப்பொன்று 6 ஆகஸ்ட் 2018 இல் இடம்பெற்றது.

II. அணு ஆயுத உற்பத்தி சாரா உடன்படிக்கை பற்றியதில் ஆசிய பிராந்திய பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனை பற்றியதன் மீளாய்வு மாநாடு ஜக்கார்த்தாவில் 21,22 மார்ச் 2018 இல் நடைபெற்றது.

III. 2018 டிசம்பர் 6-7 திகதிகளில் நடைபெற்ற, இந்து சமுத்திர பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான கடல்சார் ஒத்துழைப்பினை மேம்படுத்தல் பற்றிய உயர்மட்ட குழுவான IORA கூட்டத்தில் வெளிநாட்டமைச்சின், பொருளாதார அலுவல்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பங்குபற்றினார்.

IV. 2018 டிசம்பர் 6-7 இடம்பெற்ற, பதினோராவது பாலி ஜனநாயக மன்றத்தில் தூதுவரும் இலங்கைப் பிரதிநிதிகளும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

V. 1-2 நவம்பர் 2018 இல் இந்தோனேசியா, மனாடோவில் இடம்பெற்ற தீவுக்கூட்டங்கள் மற்றும் தனித்த தீவு நாடுகள் தொடர்பான கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதிகளும் தூதுவரும் பங்குபற்றினர்.

VI. 2018 அக்டோபர் 11-12 திகதிகளில் இடம்பெற்ற, 'இந்துசமுத்திரம்: எமது எதிர்காலத்தை வரையறுக்கும்' என்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, இந்தோனேசியாவின் முதன்மைச் சிந்திப்போர் குழுமத்தினரின் இலங்கை விஜயம், வெளிநாட்டலுவல்கள்

அமைச்சின் கொள்கை ஆய்வு மற்றும் மேம்பாடு முமைமைத்துவத்தின் தலைவரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

VII. நீடித்து நிற்கக்கூடிய நீர்வாழ் உயிரினங்களின் அபிவிருத்தி பற்றியதிலான பிராந்திய கருத்தரங்கு (GOSL 14 – SDG 14) சம்பந்தமான, இந்தோனேசிய மீன்பிடித்துறை மற்றும் கடல்சார் அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளுடனான, மேலதிக கலந்துரையாடல்கள் 11 மே 2018 இல் இடம்பெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

VIII. பாலி, இந்தோனேசியாவில் 29, 30 அக்டோபர் 2018 இல் இடம்பெற்ற சமுத்திர மாநாட்டில் தூதுவர்களும் இலங்கைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

3. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. இந்தோனேசியாவின் 11 உறுப்பினர்கள் அடங்கிய நிறைவேற்றதிகாரிகள் குழுவொன்று, சக இலங்கை கூட்டுப்பங்காளர்களைச் சந்தித்ததுடன், மாண்புமிகு பிரதம மந்திரியையும் சந்தித்துப்பேசினர் (24 ஜனவரி 2018).

II. ஐரோப்பிய ஜிஎஸ்பி இன் கீழ் ஆடைத்துறையில் பிராந்தியங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு இலங்கை மற்றும் இந்தோனேசியாவின் இணைந்த சமர்பித்தல்.

III. வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான பணிக்குழுவுக்கான குறிப்பு விதிமுறைகள் (TOR) பற்றியதில் இறுதி முடிவெடுத்தல்.

IV. கொள்கையளவிலுள்ல இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை (FTA) நிறைவுசெய்தல் பற்றியதில் தொடரும் உயர்மட்ட கலந்துரையாடல்கள் (ஜனவரி 2018 இலிருந்து).

V. மருந்துவகை, சக்தி, ஆடை, சுற்றுலா, சிமென்ட், இந்தோனேசிய துணை வலயம் போன்றவற்றில் அபிவிருத்தி, இரயில்பாதை, பாலங்கள், வீதிகள், துறை போன்றவற்றின் உட்கட்டுமானம் போன்றவற்றிலான முதலீடுகள் தொடர்பான நிறைவேற்று அதிகாரிகள் குழுவுடனான ஆலோசனை பற்றியதில் தொடர் நடவடிக்கைகள்.

4. வணிகம் மற்றும் வர்த்தக அனுசரணை

I. 24 ஜனவரி 2018 இல் இந்தோனேசிய நிறைவேற்று அதிகாரிகள் குழுவுக்கும் இலங்கை வர்த்த சம்மேளத்துக்கும் இடையிலான இடைவினை அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

II. ஜகார்த்தா சர்வதேச ஆபரண சந்தையில் இலங்கையின் பங்கெடுப்புக்கான அனுசரணை.

III. உல்லாசத்துறைச் சந்தையான 'அஸ்டிண்டோ'வில் இலங்கை கம்பனிகளின் பங்களிப்புக்கான அனுசரணை (2-4 மார்ச் 2018)

IV. இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல் மீதான தொடர்பான தொடர் நடவடிக்கை – 22 அக்டோபர் 2018.

V. சர்வதேச பெண்கள் சங்கத்தின் அறக்கொடைச் சந்தையில் இலங்கை காட்சியரங்கு – 14-15 நவம்பர் 2018.

5. கலாச்சார உறவுகள்

I. இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம் மற்றும் இந்தோனேசியாவுடனான 65 வருடகால உறவு போன்றவற்றின் ஞாபகார்த்தமாக, வரவேற்பும் இலங்கை உணவுகள் காட்சிப்படுத்தலும்.

II. ஆசிய விளையாட்டுப்போட்டி 2018 உடன் தொடர்பாக, சர்வதேச ஆடைக் கண்காட்சியொன்று ஜகார்த்தாவின் ஆடை அருங்காட்சியகத்தில் 2018, 9 ஆகஸ்ட் இலிருந்து 2 செப்டெம்பர் வரையில் இடம்பெற்றது. இதில் இலங்கையின் இடைநிலை ஆடையணிகள் காட்சியரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

III. தொழிற்றுறை, இளைஞர், பெண்கள் விவகாரங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் மாகாண ரீதியிலான பிரதிநிதிகள் குழுவொன்று, சிறிய, நடுத்தர கைவினைத்தொழிற்றுறை பற்றியதிலான இந்தோனேசிய ஆய்வுச் சுற்றுலா மேற்கொள்வதற்கான (9-13 ஆகஸ்ட் 2018) ஏற்பாடு செய்யப்பட்டது.

IV. இந்தோனேசியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சர்வதேச சமாதானத்திற்கான உதைபந்தாட்ட'த்தில் இலங்கையின் பங்களிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது - 22 செப்டெம்பர் 2018.

V. ஜகார்த்தாவில் 'எதெர மெதெர' தொலைக்காட்சி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது – 14 டிசம்பர் 2018.

6. தொழிலாளர் நலன்

I. KM Mega Top III உட்பட, 9 பெப்ரவரி 2018 இலிருந்து காணாமல் போன 04 கப்பல்களைத் தேடி மீட்பதில் இந்தோனேசிய அதிகாரிகளின் உதவி நாடப்பட்டது.

II. தானாக தாயகம் திரும்புவோர் பற்றியதில், குடியேறியோருக்கான சர்வதேச நிறுவனம் மற்றும் இந்தோனேசிய அதிகாரிகள் ஒன்றிணைந்த செயற்றிட்டம் - ஜனவரி 2018 இலிருந்து.

7. பாதுகாப்பு கூட்டுறவு

I. இலங்கைத் தூதரகம், மேற்கு பசுபிக் கடற்படைக் கருத்தரங்கில் பார்வையாளர் தகுதிக்கான இந்தோனேசியாவின் கொள்கையளவிலான ஆதரவைக் கோரி உறுதிப்படுத்தியது. 9 மார்ச் 2018 இல் இந்தோனேசியாவின் ஆதரவு நீடிக்கப்பட்டது.

II. பல்தரப்பு கடற்படைப் பயிற்சி (KOMODO) – 2018 இற்கான இறுதித் திட்ட மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கடற்படையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் கலந்துகொண்டனர். 5 -7 மார்ச், 2018 இல் லொம்பொக், மட்டாரமில் நடத்தப்பட்டது.

III. 2018, மே 4 முதல் 9 வரை லொம்பொக், மட்டாரமில் நடத்தப்பட்ட 3 ஆவது பல்தரப்பு கடற்படைப் பயிற்சி – 'KOMODO (MNEK -2018) இல் இலங்கைக் கடற்படையின் கடல் ரோந்துக்கப்பலான சாகர 1, மற்றும் கடற்படைப் பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டது.

IV. இலங்கைப் பாதுகாப்புச் சேவைகள் கட்டளைப் பதவிநிலைக் கல்லூரியிலிருந்து 17 உறுப்பினர் கொண்ட குழுவொன்று, வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவில் இந்தோனேசியா செல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

V. 2018 ஆம் கல்வியாண்டில் இந்தோனேசியாவின் தேசிய விரிவாற்றல் நிறுவகத்தின் முறைசார் கல்வித்திட்டத்தின் 57 ஆவது மற்றும் 58 ஆவது தொகுதியில் இரு அதிகாரிகள் பங்குபற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

VI. இந்தோனேசியாவின் லேம்ஹானா தேசிய விரிவாற்றல் நிறுவகத்தின் முறைசார் கல்வித்திட்டத்தின் 2018/2019 இன் 59 ஆவது தொகுதிக்கான உட்சேர்க்கையில் 02 அலுவலர்களுக்கான இடங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

VII. இந்தோனேசிய கடலோர காவல் படையினால், மத்திய ஜாவா, செமெராங்க், JCLEC இல் 2018 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரையில் ஏற்பாடு செய்யப்பட்ட "கடற்சட்டமும் கடல்வழி அமுலாக்கப் பயிற்சியும்" பற்றியதிலான HACGAM இயலளவு கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கையின் பிரதிநிதியாக ஒரு கரையோர காவற்படை அதிகாரி தெரிவுசெய்யப்பட்டார்.

VIII. 2018 ஏப்ரல் 19-22 இல் நடந்த முதலாவது ஆசிய பசுபிக் இராணுவ பெண்கள் கருத்தரங்கு – 2018 இல், இலங்கை இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த இரு பெண் இராணுவ அதிகாரிகள் பங்குபற்றினர்.

IX. இந்தோனேசியா மற்றும் அமெரிக்காவினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு, ஜக்கார்த்தாவில் 2018 ஏப்ரல் 23 முதல் 27 வரையில் இடம்பெற்ற 'பல்தரப்பு தொடர்பாடல் ஒருவருக்கொருவர் இணைந்து தொழிற்படக்கூடிய நிகழ்ச்சித்திட்டம் (PSW 2) – 2018' இல் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படையிலிருந்து ஒவ்வொரு அதிகாரிகள் பங்குபற்றினர்.

X. ஜக்கார்த்தாவில் 2018 மே 3-4 திகதிகளில் இடம்பெற்ற, மனிதக்கடத்தல் வியாபாரம் மற்றும் அது தொடர்பான நாடுகளுக்கிடையேயான குற்றங்கள் பற்றியதிலான தகவல் பரிமாற்றத்துக்கான வழிமுறைகள் பற்றிய முன்னோடிப் பயிற்சிப்பட்டறையில் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒரு அதிகாரி பங்குபற்றினார்.

XI. பாலியில் 2018 ஜூலை 16 முதல் 20 வரை நடைபெற்ற கடல்வழி தரவு ஆய்வில் சிறந்த நடைமுறைகள் பற்றியதிலான 'ஆசியான்' (ASEAN) பிராந்திய மன்ற பயிற்சிப்பட்டறையில் ஒரு இலங்கை கடற்படை அதிகாரி கலந்துகொண்டார்.

XII. சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் 2018 செப்டெம்பர் 13, 14 ஆம் திகதிகளில் நடந்த 11 ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் இந்தோனேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்திலிருந்து 02 அதிகாரிகள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

XIII. இலங்கை பாதுகாப்புச் சேவைகள் கட்டளை பதவிநிலைக் கல்லூரியின் 2019 இற்கான நெறிக்கு இந்தோனேசிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார்.

XIV. 2018 ஆம் வருடத்திற்கான கற்கை நெறிகளில் 13 வெற்றிடங்கள் வழங்கப்பட்டன.

XV. 2019 இல் இலங்கை கடற்படையால் நடாத்தப்படும் 'சமச்சீரற்ற போர்க்கால பயிற்சி' இல் இந்தோனேசிய இராணுவத்திற்கான 03 வெற்றிடங்கள் (1 அலுவலர், 02 பதவி நிலை அதிகாரிகள்) வழங்கப்பட்டன.

XVI. சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் 2019 ஆம் கற்கையாண்டுக்கான பட்டதாரி நெறிகளுக்கு இந்தோனேசியாவில் இரு இராணுவ அலுவலர்களுக்கு 02 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

XVII. இலங்கை இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கொமொரன்ட் தாக்குதல் பயிற்சியில் (Cormorant Strike) -2018, 2 பார்வையாளர்கள் மற்றும் இராணுவக்குழுவினர் அனுமதிக்கப்பட்டனர்.

பிலிப்பைன்ஸிலுள்ள இலங்கை தூதரகம்

அறிமுகம்

மீளாவுக் காலத்தில் இலங்கை-பிலிப்பைன்ஸ் உறவுகளைப் பொறுத்தவரையில், செயற்பாட்டுத் திட்டங்களை குறிப்பிட்ட மட்டத்தில் உறுதிப்படுத்துவதிலும் அடுத்துவரும் வருடத்திற்கான இலக்குகளை நிறைவேற்றுவது பற்றியதிலும் கவனம் செலுத்தப்பட்டது. இரு நாடுகளினதும் அதியுயர் அரசியல் மட்டங்களுக்கிடையேயான தொடர்பாடல்கள் பற்றிய உத்தி உருவாக்கப்பட்டது. இக்கருத்தினடிப்படையில், தூதரகத்தின் செயற்பாடுகள் பெரும்பாலும் அரசியல், வர்த்தகம் மற்றும் முதலீடு, உல்லாசப்பயணத்துறை, பாதுகாப்பு, விவசாயம், செயலளவு கட்டியெழுப்புதல் உள்ளிட்ட தொழிற்றுறை, கல்வி மற்றும் கலாச்சாரம் போன்ற தெரிவுசெய்யப்பட்ட துறைகள் பற்றியதிலே கவனம் செலுத்தப்பட்டன.

1. இருதரப்பு உறவுகள்

I. 2019 ஜனவரி மூன்றாம் வாரத்தில் இலங்கையிலிருந்து பிலிப்பைன்ஸுக்கான ஒரு உயர்மட்ட விஜயத்துக்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

II. இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான 2 ஆவது சுற்று அரசியல் ஆலோசனைகள் மணிலாவில் 23 அக்டோபர் 2018 இல் நடைபெற்றது.

III. கொழும்பில் பிலிப்பைன்ஸ் தூதரகத்தை மீளத்திறப்பது பற்றி வெளிநாட்டலுவல்கள் திணைக்களத்துடனான கலந்தாலோசனைகள் தொடர்ந்தன.

IV. விவசாயம், உயர்கல்வி, விமான சேவைகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல இருதரப்பு ஆவணங்கள், கைச்சாத்திடுவதற்கான இறுதிக்கட்டத்தில் இருப்பதுடன், விரைவில் மேற்கொள்ளப்பட்ட அதியுயர்மட்ட விஜயத்தின்போது நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

I. அத்துடன் பின்வரும் உடன்படிக்கைகள்/புரிந்துணர்வு உடன்படிக்கைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுவருகின்றன:

- நீதிமன்றத்தினால் தண்டனை கொடுக்கப்பட்டவர்களை இடமாற்றம் செய்தல்
- குற்ற விடயங்களில் உடன்படிக்கை தொடர்பான பரஸ்பர சட்ட உதவி
- 1978 STCW (மாலுமிகள் பயிற்சி, சான்றிதழளித்தல் மற்றும் கவனித்தல் நியமங்கள் பற்றியதிலான சர்வதேச மரபுமுறை) விதிகளின் கீழ், சான்றிதழ்களை அங்கீகரித்தல்

- ஏற்கனவேயுள்ள வர்த்தக உடன்படிக்கையை மீளப்புதுப்பித்தல்
- கலாச்சார கூட்டுறவு பற்றியதிலான நிறைவேற்றுத் திட்டத்தைச் செயற்படுத்தல்
- தொழிலாளர் கூட்டுறவு
- செவிலியர் பணி மற்றும் பராமரிப்புத் துறை
- இலங்கை விவசாய ஆராய்ச்சிக்கொள்கை மன்றத்திற்கும் பிலிப்பைன்ஸ் லொஸ் பனொஸ் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை
- உல்லாசப்பயணத்துறையில் கூட்டுறவு.

II. மீளாய்வுக்காலத்தில், இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர், பிலிப்பைன்ஸ் தேசிய பாதுகப்புக் கல்லூரியில் 2018/2019 ஆம் கல்வியாண்டில் இல.54 ஆவது ஒழுங்குமுறைக் கற்கைநெறியான, தேசிய பாதுகாப்பு நிர்வாகத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பினை (MNSA) தொடர்வதற்கான ஏற்பாடுகள் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

III. பிலிப்பைன்ஸ் லொஸ் பனொஸ் பல்கலைக்கழகத்தில் இலங்கை விஞ்ஞானிகள் தாவர இனப்பெருக்கம், விவசாய பொருளாதாரம் மற்றும் அது தொடர்பான விடயங்களில் 2018 ஆம் வருடத்திற்கான முதுநிலைப் பட்டப்படிப்பு மற்றும் கலாநிதிப்பட்ட ஆராய்ச்சி போன்ற கற்கை நெறிகளில் பங்குபெறுவது தொடர்பில் வெற்றிகரமான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையிலிருந்து முதல் பிரிவு விஞ்ஞானிகள் (19) முதுநிலை விஞ்ஞானம் (Msc), மற்றும் கலாநிதிப் பட்டத்திற்கான ஆராய்ச்சி (PhD) ஐ தொடர்வதற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 2019 இல் மேற்கொள்ளப்படவுள்ள இராஜாங்க விஜயத்தின்போது, மாணவர்கள் சேர்க்கை பற்றியதில் இலங்கை விவசாய ஆராய்ச்சிக்கொள்கை மன்றத்திற்கும் பிலிப்பைன்ஸ் லொஸ் பனொஸ் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

2. பல்தரப்பு உறவுகள்

I. பல்தரப்பு உறவுகளைப் பொறுத்தவரையில்;

- பெப்ரவரி 2018 இல் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவகத்தின் இலங்கை அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டமை,
- கொழும்புத்திட்ட பணிக்கல்லூரி (CPSC) மற்றும் ஆசிய அபிவிருத்து வங்கியும் ஒன்றிணைந்து, சூரிய சக்தி, உட்கட்டுமானம், சுகாதாரம், பாசனம் உள்ளிட்ட ஒன்பது செயற்றிட்டங்களுக்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கியமை,
- 'இலங்கை வணிகமுயற்சி' யின் கீழ், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டமை,

போன்றவை 2018 மீளாய்வுக்காலப்பகுதியில் பிலிப்பைன்ஸிலுள்ள பல்தரப்பு நிறுவனங்களில் இலங்கையின் ஈடுபாட்டை உயர்த்தும் கருவியாகவிருந்தன.

II. மேற்குறிப்பிட்டவற்றுடன், பல்தரப்பு உறவுகளைப் பொறுத்தவரையில் பின்வரும் வளர்ச்சிகள் குறிப்பிடத்தக்கவையாகும்:

ஜூன் 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்த பிலிப்பைன்ஸின் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IRRI) பணிப்பாளர் நாயகம், மேன்மை தங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் கௌரவ விவசாய அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து; அதிக விளைச்சல், காலநிலை மாறுதலுக்கு ஈடுகொடுக்கும் நெல் ரகங்கள், நெல் மதிப்புச் சங்கிலியைப் புதுப்பித்தல், நீடித்து நிற்கும் நிலத்தின் தன்மை, நீரை உறிஞ்சக்கூடிய மண் மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவம், தொலைநிலை உணர்திறன் மற்றும் புவியியல் தகவல் தொடர்பு அமைப்புகள், இயலளவு கட்டியெழுப்பல், மேம்படுத்தப்பட்ட மரபணு அடிப்படை, தாவர இனப்பெருக்கத் தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த வணிகச்செயற்பாடு மற்றும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட, இலங்கை - IRRI இற்கிடையிலான ஐந்துவருட வேலைத்திட்டம் (2019 -2025) பற்றிக் கலந்துரையாடினார்.

III. தென் கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தில் (ASEAN) துறைரீதியான பேச்சுவார்த்தைப் பங்காளராவதற்கான இலங்கையின் விண்ணப்பத்திற்கு ஆதரவளிப்பதற்காக, மணிலாவில் அமைந்துள்ள ஆசியான் (ASEAN) உறுப்பு நாடுகளுடனான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

IV. ஆசிய அபிவிருத்தி வங்கியானது, தனது நீண்டகால கூட்டாண்மைத்திட்ட 'உத்தி 2030' இற்கு இணைவாக, அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கையின் வளர்ச்சித்திட்டங்களான உட்கட்டமைப்பு, சக்தி, சுகாதாரம், மீன்பிடித்துறை மற்றும் கல்விச் செயற்றிட்டங்களில் நீண்டகால ஒத்துழைப்பை வழங்குவதற்காக 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதன் மூலம், இலங்கைக்கு ஆதரவளிக்கும் தனது அர்ப்பணிப்பை வலுப்படுத்தியுள்ளது.

V. பயிற்சிக்கான தேவைகள் மற்றும் தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் நடைமுறைகளை ஆராய்ந்து, நிர்வாகக்குழு உறுப்பினர் என்ற வகையில் CPSC திட்டம் 2018-2023 இற்கான தயாரிப்பில் இலங்கை பங்குபற்றியது. அத்துடன், மீளாய்வுக் காலகட்டத்தில் இலங்கை சகல பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள், சர்வதேச மாநாடுகள், தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 2018 ஜூன் இல் CPSC இனால் ஒழுங்குசெய்யப்பட்ட உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றிலும் இலங்கை பங்குபற்றியது. தற்சமயம், CPSC செயலகத்தில் இரண்டு இலங்கை தொழில்வல்லுனர்கள் உள்ளனர். (ஆளும் குழு ஈடுபட்ட துறைசார் அலோசகர் மற்றும் சர்வதேச அனுபவத்திற்கான தொழில்வல்லுனர் உள்ளகப்பயிற்சிச் செயற்றிட்டம்- PIPE).

VI. மீளாய்வுக்காலத்தில், சர்வதேச நிறுவனங்களில் (ADB, WHO, CPSC) மூன்று இலங்கை தொழில்வல்லுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. அரச மற்றும் தனியார் துறைகளின் தொடர்ந்த ஈடுபாடு மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி உற்பத்திப்பொருட்கள் போன்றவற்றின் விளைவாக, மீளாய்வுக்காலத்தில்

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான மொத்த வர்த்தக வருவாய், ஆகஸ்ட் 2018 வரையில் 47.5 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் என்பதாகப் பதிவிடப்பட்டுள்ளது. (ஏற்றுமதி – 10.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள், இறக்குமதி – 36.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள்).

II. 11 டிசம்பர் 2000 இல் கைச்சாத்திடப்பட்ட, வருமானத்தின் மீதான வரிகள் சம்பந்தமாக இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு மற்றும் நிதி ஏய்ப்புத் தடுப்பு பற்றியதில் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துடனான வெற்றிகரமான கலந்துரையாடல்களின் தொடர் நடவடிக்கையின் விளைவாக, மார்ச் 2018 இல் பிலிப்பைன்ஸ் ஒப்புதல் வழங்கியது.

III. 1980 இல் கைச்சாத்திடப்பட்ட பிலிப்பைன்ஸ் – இலங்கை வர்த்தக உடன்படிக்கையை புதுப்பித்தல் தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டு, அக்டோபர் 2018 இல் மணிலாவில் நடத்தப்பட்ட 2 ஆவது சுற்று அரசியல் ஆலோசனைகளின் தொடர் நடவடிக்கை பற்றி கலந்தாலோசிக்கப்படும்.

IV. மீளாய்வுக்காலத்தில் இலங்கையிலிருந்து பிலிப்பைன்ஸுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான ஏற்றுமதி உற்பத்திப்பொருட்களாக தேயிலை, வெவ்வேறு சுவைகளுடன் கூடிய தேயிலைப் பக்கட்டுகள், காற்றடிக்கப்பட்ட மற்றும் மீள உருவாக்கப்பட்ட டயர்கள் மற்றும் ரப்பர் உற்பத்திப்பொருட்கள், ஆடையணிகள், சமைத்த உணவு, அரிசி, தானியங்கள் ஆகியவை இனங்காணப்பட்டுள்ளன.

V. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தரைவிரிப்புக்கள், பிரயாணப் பொருட்கள், பைகள், அடிப்படை உலோக உற்பத்திப்பொருட்கள் மற்றும் லயன் மது வகைகள் ஆகிய பல புதிய உற்பத்திப்பொருட்கள் பிலிப்பைன்ஸ் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

VI. பின்வரும் இலங்கை உற்பத்திப்பொருட்களை பிலிப்பைன்ஸுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய இறக்குமதியாளர்களிடம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன:

லயன் பிரூவரி லிமிட்டெட் – லயன் பியர்
அஸோசியேட்டட் மோட்டர்வேஸ் - ரப்பர் டயர்கள்
ஓ.எம் அலியார் சன்ஸ் – பெற்றோலியம்
சேனோர் ஃபௌண்டேஷன் – படகுகள்
லங்கா ஸ்பைச்ஸ் பிரைவேட் லிமிட்டெட் – மசாலா வகைகள் மற்றும் கறுவா

VII. இலங்கையிலுள்ள பேரங்காடிகளை ஒருங்கிணைப்பதற்காக, இலங்கையில் வணிகச்செய்முறை புறச்செய்விப்பு ஒன்றை சென்ட் அண்டனீஸ் கம்பனி' ஐயும் 'எஸ் எம் குரூப் ஒஃப் கம்பனீஸ்' உடன் இணைந்து நிறுவுவதற்காக, 'ட்ரான்ஸ்கொம் வேர்ல்ட்வைட்' இன் பிராந்திய பொது முகாமையாளருடன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது.

VIII. 'ஜோர்ஜ் ஸ்டுவார்ட்ஸ் பிலிப்பைன்ஸ்' மற்றும் 'பசிலுர் டீ' இன் பங்குடைமையுடன் நவம்பர் 2018 இல் நடந்த 52 ஆவது சர்வதேச பஸாரில் இலங்கைத் தூதரகம் 'சிலோன் டீ' யை காட்சிப்படுத்தியது.

4. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

I. இலங்கைத் தூதரகம் மேற்கொண்ட இடைவிடாத ஊக்குவிப்புப் பிரச்சார செயற்பாடுகளினால், மீளாய்வுக் காலகட்டத்தில் ஆகஸ்ட் 2018 வரை இலங்கைக்கு வந்த பிலிப்பைன்ஸ் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை 13,550 ஆக அதிகரித்தது. (இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 23.6% அதிகரிப்பாகும்). இது ஆசியான் நாடுகளுடன் ஒப்பிடும்போது 2 ஆவது கூடிய, கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது 5 ஆவது கூடிய உல்லாசப்பயணிகள் வருகையாகும். கிழக்காசிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு உல்லாசப்பயணம் வரும் முதல் 5 நாடுகளில் முன்னணியில் இருக்கும் பிலிப்பைன்ஸிலிருந்து இலங்கைக்கு வருவதற்கு நேரடி விமான சேவை இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

II. 2018 பிப்ரவரி 9 இல் இடம்பெற்ற 25 ஆவது பிலிப்பைன்ஸ் பயண முகவர் கூட்டுறவில் இலங்கை தூதரகமும், சுற்றுலாத்துறை ஊக்குவிப்புச் சபையும் பங்குபற்றின. அத்துடன் அக்டோபர் 2018 இல் இரண்டாவது வருடமாக நடக்கவிருந்த 'வேர்ல்ட் ட்ரவல் எக்ஸ்போ 2018' இலும் பங்கெடுப்பதற்கான தயாரிப்புகள் நடந்தன.

III. 'ட்ரவல் லைவ்' சஞ்சிகையின் மூன்று பயண நிருபர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான பேச்சுவார்த்தைகள், இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புச் சபையுடன் நடந்துவருகின்றன.

IV. NKAR travels & tours (pvt ltd' உடன் இணைந்து பிலிப்பைன்ஸின் வெளிநாடுகளுக்கான சுற்றுலா இயக்குனர்களுடனான தொடர்பாடல் அமர்வு ஒன்று, 27 செப்டெம்பர் 2018 அன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

5. கலாச்சார உறவுகள்

I. இலங்கை சுதந்திர தினத்திற்கு இணைவாக, 2018 பெப்ரவரியில் 'கலாச்சார இயைபிணக்கம் மூலம் உறவுகளைப் பலப்படுத்தல்' – என்ற இராஜந்தந்திர வரவேற்பு ஒன்று இடம்பெற்றது.

II. தூதரகம், பிலிப்பைன்சிலுள்ள இலங்கையர்களுடனும் இலங்கை மாணவ மன்றங்களுடனும் இணைந்து, 'எரபது மல் வசந்தய' என்ற சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டத்தையும் 'புத்த ரஷ்மி' என்ற சர்வதேச வெசாக் கொண்டாட்டத்தையும் நடத்தியது.

III. ஏப்ரல் 2018 இல் "Destination Sri Lanka, Wonder of Asia" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி 'குளோபல் நியூஸ் நெட்வோர்க்' உடன் இணைந்து நடத்தப்பட்டது.

IV. ABS-CBN செய்தி சனல்களின் மூலமாக மே 2018 இல் 'Food Diplomacy' என்ற இலங்கை உணவுகளின் ஊக்கப்பிரச்சார நிகழ்ச்சியொன்று நடந்தது.

V. 'சகோதர நகரம்' என்ற கருத்தம்சத்தில் டகிக் மற்றும் கொழும்பு நகரங்களுக்கு இடையேயான கலாச்சார பரிமாற்ற கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

VI. இலங்கையின் ஆழ்ந்த பண்பாடு மற்றும் சிறந்த கலாச்சாரம் பற்றிய 'புத்துணர்ச்சியூட்டும் இலங்கை: ஆசியாவின் அதிசயம்' என்ற கருத்தம்சத்திலான காட்சியை செப்டெம்பர் 2018 இல் தூதரகம் ஏற்பாடு செய்தது.

VII. தெரிவுசெய்யப்பட்ட பௌத்த மடங்களிலுள்ள இலங்கை பிக்குகளுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதில் உதவுவதற்காக பிலிப்பைன்ஸிலுள்ள பௌத்தமத பக்தர்களுடன் கலந்துரையாடல் நடந்துவருகிறது.

VIII. நவம்பர் 2018 இல், பிலிப்பைன்ஸிலுள்ள இலங்கைச் சமுதாயத்தினருடனும் 'யூனிவேர்சல் விஸ்டம் ∴பௌண்டேஷன்' உடனும் இணைந்து, தூதரகம் 'கட்டின' பௌத்த நிகழ்வை ஒழுங்குசெய்தது.

IX. 'சார்க்' தினத்தையொட்டி, டிசம்பர் 2018 இல், மணிலாவிலுள்ள தெற்காசிய தூதகங்கள் ஒரு திரைப்பட விழாவை நடத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

6. தொழிலாளர் நலன்

I. தொழிலாளர் கூட்டுறவு, செவிலியர் பணி மற்றும் பராமரிப்பு பற்றியதில் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை நிறைவுசெய்வது மற்றும் 1978 STCW (மாலுமிகள் பயிற்சி, சான்றிதழளித்தல் மற்றும் கவனித்தல் நியமங்கள் பற்றியதிலான சர்வதேச மரபுமுறை) விதிகளின் கீழ், சான்றிதழ்களை அங்கீகரித்தல் போன்றவற்றின் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

II. இலங்கையைச் சேர்ந்த தாதியர், ஆசிரியர்கள், மாலுமிகள், மற்றும் வரவேற்புத்துறையிலிருக்கும் ஊழியர்களுக்கு பிலிப்பைன்ஸிலுள்ள நிறுவகங்களில் பயிற்சிகளை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன.

III. வெளிநாட்டு தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த சேவைகளை இனங்காணவென, தொழில்நுட்பக்கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி அதிகாரசபை (TESDA), பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிர்வாக மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர் நலன் நிர்வாகம் போன்றவற்றுடன் கலந்தாலோசனைகள் இடம்பெற்று வருகின்றன. (குறிப்பு: உலகில் அதி திறன் மிக்க தொழிலாளர்களை வழங்கும் நாடாக பிலிப்பைன்ஸ் உள்ளது)

மியன்மாரில் இலங்கை தூதரகம்

1. இருதரப்பு உறவுகள்

I. 70 ஆவது சுதந்திர தினத்தையொட்டி யங்கோனிலுள்ள ஷங்ரி –லா ஹோட்டலில் 5-11 பெப்ரவரி 2018 காலப்பகுதியில் இலங்கை உணவு விழா இடம்பெற்றது.

II. இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதநேய உதவியாக, மியன்மார் அரசாங்கம் 300 மெட்ரிக் தொன் அரிசியை வழங்கியது. இச்சரக்கு 29 மார்ச் 2018 அன்று இடர்முகாமைத்துவ அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

III. 19 ஏப்ரல் 2018 அன்று, நே பியி இலுள்ள ஐக்கிய மியன்மார் குடியரசின் திட்டமிடல் மற்றும் நிதியமைச்சருக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி இறக்குமதித் துறைகளை ஊக்குவித்தல், விவசாயத்துறையில் தொழினுட்ப அறிவுப் பகிர்வு, வைர தொழிற்றுறை, மூலிகை மருந்துகள் போன்றவை பற்றியும் இரு நாடுகளுக்கிடையிலான நேரடி விமான சேவைகளை ஆரம்பித்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

IV. 04 செப்டெம்பர் 2018 அன்று நே பியி இலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற உயர்ஸ்தானிகருக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில், இருதரப்பு கலாச்சாரம் மற்றும் சமய உறவுகளைப் பலப்படுத்தல், தொலைத்தொடர்பாடல், நுண்பாக நிதியம், வங்கித்துறை, ஹோட்டல் தொழிற்றுறை மற்றும் கட்டிட நிர்மாணத்துறை பற்றி உயர்ஸ்தானிகர் கலந்துரையாடினார்.

V. 2.11. 2018 அன்று, உயர்ஸ்தானிகர் நே பியி டோ இலுள்ள வெளிநாட்டமைச்சில் அவ்வமைச்சரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார்

2. பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. "COMPLAST MYANMAR" எனப்படும் சர்வதேச பிளாஸ்டிக் கண்காட்சி 15.06.2018 அன்று யங்கோனில் இடம்பெற்றது. இதில் வர்த்தக ஊக்குவிப்பு நோக்குடன் 10 முன்னணி இலங்கை கம்பனிகளும் தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

II. இலங்கை வர்த்தக வங்கியின் துணைக்கம்பனியான புதிய CBC மியன்மார் நுண்பாக நிதி அலுவலகம், 16.07.2018 அன்று நய் பியி டோவில் திறக்கப்பட்டது. தற்போது அது தனது நுண்பாக நிதி நடவடிக்கைகளைத் தொழிற்படுத்திவருகிறது.

III. இலங்கை Sanken Overseas (Pvt) Ltd இன் துணைக்கம்பனியான Sanken Overseas (Myanmar) Ltd., 2014 இலிருந்து மியன்மாரில் தொழிற்பட்டு வருகிறது. அது, மியன்மாரில் தனது வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்குடன், சூல், யங்கோனிலுள்ள ஷங்ரி-லா ஹோட்டலில், "An Evening of Knowledge Fellowship" என்ற நிகழ்வை நடத்தியது.

3. கலாச்சார உறவுகள்

I. இலங்கை, கண்டி புனித தந்த தாது விகாரையின் அழைப்பின் பேரில், மியன்மார் குடியரசின் இயற்கை மூலவளங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், 22 – 28 ஆகஸ்ட் 2018 இல் கண்டிக்கு விஜயம் செய்து, மியன்மார்

அரசாங்கத்தினால் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தந்தங்களைக் கொண்ட யானையைப் பரிசோதித்தனர்.

II. இலங்கை, கண்டி புனித தந்த தாது விகாரையின் அழைப்பின் பேரில், யங்கோன் புனித ஸ்வேதகன் விகாரையின் நம்பிக்கைப்பொறுப்புச் சபையின் இரு உறுப்பினர்கள் 22-28 ஆகஸ்ட் 2018 இல் கண்டிக்கு விஜயம் செய்தமையானது, இரு புனித விகாரைகளுக்கிடையிலான கலாச்சார சமய உறவுகளைப் பலப்படுத்தும்.

III. மியன்மாரின் முக்கிய இடங்களில் ஒன்றான யங்கோன் புனித ஸ்வேதகன் விகாரையின் மாதிரியொன்று, மியன்மார் பக்தர்களால் மாத்தளையில் நிறுவப்படவுள்ளது. இதற்கான நன்கொடை மாத்தளை வண.முகுணுவெல அனுருத்த தேரரிடம் 28.11.2017 அன்று கையளிக்கப்பட்டது.

IV. அக்கமஹா பண்டித வண. கொட்டுகொட தம்மவாச மஹா நாயக்க தேரர் மற்றும் வண. பேராசிரியர் மதவாச்சியே தம்மஜோதி தேரர் ஆகியோர் 22 -25 மே 2018 இல் மியன்மாருக்கு விஜயம் செய்து, மதங்களுக்கிடையே அமைதி, நீதி, இணக்கப்பாடு போன்றவற்றைப் பலப்படுத்துவதற்காக மியன்மார் தேசிய சமயத் தலைவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட உயர்மட்ட சர்வதேச பல்சமய பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

V. வண.பஹலவிதியல ஜனந்த மஹா தேரர் தலைமையில் 9 பிக்குமார் மற்றும் மியன்மாரில் தங்கிப் படித்துக்கொண்டிருக்கும் பல பிக்குமார்கள், மியன்மாரில் நடந்த போதி பூஜா நிகழ்வில் 11 ஆகஸ்ட் 2018 அன்று கலந்துகொண்டனர்.

VI. யங்கோன் புனித ஸ்வேதகன் விகாரையின் நம்பிக்கைப்பொறுப்புச் சபையின் அழைப்பின்பேறில் கண்டி புனிததாது விகாரையில் குழுவினர், 20-26 நவம்பர் 2018 இல் மியன்மாருக்கு விஜயம் செய்தனர்.

VII. இலங்கை கல்துவ யோகாஸ்ரம சன்ஸ்தாவின் தற்போதைய தலைவரான மஹோபாத்யாய, வண.கஹகொல்ல சோம வன்ச மஹா நாயக்க தேரர் மற்றும் இலங்கை, காலி ஞானபாஷ தியான நிலையத்தின் தலைவர், வண.மளிகவில்ல அஸாஜி தேரர் ஆகியோர் புனித ஸ்வேதகன் விகாரையில் சிறப்பு பௌத்த மத வழிபாடுகளை 10.12.2018 அன்று நடத்தினார்கள்.

ஹனோயிலுள்ள இலங்கை தூதரகம்

1. இருதரப்பு உறவுகள்

I. வெளிநாட்டலுவல்கள் துணை அமைச்சர், கௌரவ டாங் டிங் க்யு வின் தலைமையில் குழுவொன்று, ஏப்ரல் 2018 அன்று கொழும்பில் இடம்பெற்ற இலங்கை – வியட்நாம் 3 ஆவது அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டது.

II. 2018 ஏப்ரல் 23-27 காலப்பகுதியில் கௌரவ கரு ஜயசூரிய வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். அப்போது அவர் வியட்நாமிலுள்ள புனித தந்த பௌத்த விகாரைக்குப் பரிசுகளை வழங்கினார்.

III. வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் வெளித்துறை உறவுகளுக்கான ஆணைக்குழுவின் துணைத்தலைவர் திரு ட்ரான் டேலோய் தலைமையில் குழுவொன்று, ஜூன் 2018 இல் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டது.

IV. வியட்நாமின் சர்வதேச இன் துணைத்தலைவர், கேர்ணல் ங்குயென் கொங்க் சூவான், 30-31 ஆகஸ்ட் 2018 இல் கொழும்பில் நடந்த பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டார்.

V. புத்தசாசன அமைச்சர், கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா, 23-27 செப்டெம்பர் 2018 இல் வியட்நாமுக்கு விஜயம் செய்தார்.

VI. அக்டோபர் 29-31 இல் இடம்பெற்ற 46 ஆவது கொழும்புத்திட்ட நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பல்தரப்பு விவகார திணைக்களத்தின் இயக்குனர், நிதியமைச்சர் ஆகியோர் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

VII. வியட்நாம் வெளிநாட்டமைச்சின் தென் கிழக்காசியா, தென்னாசியா மற்றும் ஆசியா பசுபி திணைக்களத்தின் இயக்குனர் நாயகம் திரு ங்க்யென் தட் தான் அவர்களை உயர்ஸ்தானிகர் சந்தித்து, இலங்கையின் அரசியல் மேம்பாடுகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார் (21 நவம்பர்).

VIII. டா நாங்கில் நடைபெற்ற 37 ஆவது நிறைவேற்றுக் குழுக்கூட்டம் மற்றும் சிட்டி நெட் சர்வதேச கருத்தரங்கத்தில் கொழும்பு மேயர் பங்குபற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது (21 – 22 நவம்பர்).

IX. வியட்நாமில் வசிக்கின்ற, செல்கின்ற இலங்கையர்கள் சம்பந்தமான வீசா மற்றும் கொன்சியுலர் விவகாரங்கள் பற்றி, தூதுவர், செல்வி ங்க்யென் திஹுஒன்லனுடன் கலந்தாலோசித்தார் (21 டிசம்பர்)

2. பல்தரப்பு உறவுகள்

I. ஹனோயின் 5-9 மார்ச் 2018 இடம்பெற்ற நிபுணர்கள் மற்றும் முதன்மை நபர்கள் பற்றியதன் 12 ஆவது ஆசியான் பிராந்திய மன்றத்தில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதுநிலை பேராசிரியர் அமல் ஜயவர்த்தன கலந்துகொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

II. MOLISA உடன் இணைந்து Action Aid இனால் 7 மார்ச் 2018 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட, 'ஊதியமற்ற பராமரிப்பு வேலை ஆய்வின் பெறுபேறுகளைப் பகிர்தல்' என்ற தலைப்பிட்ட பயிற்சிப்பட்டறையில் தூதுவர் பங்கெடுத்தார்.

III. 2018 மார்ச் 15-16 இல் ஹனோயில் நடைபெற்ற, 'விரிவாற்றலுள்ள உணவு மற்றும் விவசாய முறையைப் பலப்படுத்துதல் பற்றிய பிராந்திய மாநாட்டில்' இலங்கையின் பங்கேற்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

IV. உலக சுற்றாடல் தினத்தைக் குறிக்கும் முகமாக, பிளாஸ்டிக் மாசுகளைத் தடுப்பது பற்றியதிலான நடத்தைக் கோவையில் தூதுவர் கைச்சாத்திட்டார். அது, தூதரகங்கள் மற்றும் சர்வதேச பங்காளர்கள் சம்பந்தப்பட்ட, பிளாஸ்டிக் மாசுக்கெதிரான பிரச்சாரமாகும். இதன் 4 தொடர் நடவடிக்கைகளிலும் தூதர் பங்குபற்றினார். (4 ஜூன் 2018)

V. இந்துசமுத்திர மாநாட்டில் இலங்கைப் பிரதமர் மற்றும் குழுவினர் பங்குகொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதம மந்திரிக்காக ஏழு மேலதிக கூட்டங்களும் ஒழுங்குசெய்யப்பட்டன.

VI. அமெரிக்காவின் புதிய இந்தோ – பசுபிக் உத்தி பற்றியதில் முறைசாரா கலந்துரையாடல் மற்றும் HCM-NAP மற்றும் APCSS ஆல் ஒழுங்குசெய்யப்பட்ட, 'இந்து – பசுபிக் பிராந்திய பாதுகாப்பின் மாற்றங்களும் சவால்களும் மற்றும் இன்றைய கூட்டுறவும்' பற்றியதிலான கருத்தரங்குக்கு தூதுவர் அழைக்கப்பட்டார். (4 செப்டெம்பர்).

VII. ஆசியான் – 2018 இல் கலந்துகொள்வதற்காக மாண்புமிகு பிரதமர் மற்றும் குழுவினரின் வருகை 10-13 செப்டெம்பர் 2018 இல் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் 10 மேலதிக இருதரப்பு கூட்டங்களும் ஒழுங்குசெய்யப்பட்டன.

VIII. வியட்நாம் வெ.அமைச்சின் சர்வதேச சட்டம் மற்றும் உடன்படிக்கைகள் திணைக்களத்தின் இயக்குனர் நாயகம் செல்வி லெ தி துயெட் மாய் அவர்களை தூதுவர் சந்தித்து, சர்வதேச வர்த்தகச் சட்டம் பற்றியதில் ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவுக்கான வியட்நாமின் அபேட்சகம் மற்றும் இரண்டு நாடுகளதும் பிற அபேட்சகங்கள் பற்றிக் கலந்துரையாடினார். (16 அக்டோபர்).

IX. DAV FESS மற்றும் VLA இனால் ஒழுங்குசெய்யப்பட்ட, டா நாங் நகரத்திலுள்ள ஷெரட்டன் ஹோட்டலில் இடம்பெற்ற, 'பிராந்திய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான 10 ஆவது தென் சீனக் கடல் சர்வதேச மாநாட்'டில் தூதுவர் கலந்துகொண்டார். (8 – 9 நவம்பர்).

X. ஹனோயில் இடம்பெற்ற, சுகாதார பயிற்சிப்பட்டறைக்கான மனிதவளங்கள் பற்றியதில் 10 ஆவது ஆசிய பசுபிக் கூட்டணியில் இலங்கை பங்கெடுத்தது. (19-21 நவம்பர்).

XI. ஹனோயிலுள்ள ஐக்கிய நாடுகள் சர்வதேச பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் தினத்தில் தூதுவர் பங்கெடுத்தார். அப்பாடசாலையில் 06 இலங்கைச் சிறுவர்கள் கல்வி கற்கிறார்கள். (30 நவம்பர்).

XII. வியட்நாமில் புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய ஆராய்ச்சி அறிக்கை தொடர்பில் ஆலோசனைப் பயிற்சிப்பட்டறை ஒன்றில், அனுபவங்களைப் பகிரும் சிறப்பு அழைப்பாளராக இலங்கைத் தூதுவர் பங்கேற்றார் (20 டிசம்பர்).

3. பொருளாதார உறவுகள்

I. இலங்கைத் தூதர், Respect Viet Nam நிறுவனத்துடன், வியட்நாமில் வேலை செய்தல் மற்றும் பல்-கலாச்சாரச் சூழலில் வியட்நாம் –இலங்கைத் தொழிலாளர்களின் பிரச்சனைகள் எவ்வாறு தீர்க்கப்படுதல் மற்றும் எவ்வாறு இலங்கையின் செயல்நோக்குகளை அடைதல் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். (7 ஜூன்).

II. வியட்நாமிலுள்ள SG - JCCI உடன் சந்திப்பு ஒன்றை நடத்திய தூதுவர், இலங்கைப் பிரதமரின் வியட்நாம் விஜயத்தின்போது JCCI இன் முன்னணி உறுப்பினர்களுடன் ஊடாடு அமர்வு ஒன்றை ஒழுங்குசெய்தல் தொடர்பாகக் கலந்துரையாடினார். (09 ஆகஸ்ட்).

III. அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் JCCI உறுப்பினர்கள் இடையேயான ஒரு ஊடாடு அமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது (11 செப்டெம்பர்)

IV. சனிமால் கைத்தறித்துணி உரிமையாளரான செல்வி ருசினி லியனகேவுடனான வணிக-வணிக கூட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது (15-26 நவம்பர்).

V. இலங்கை வைரங்கள் மற்றும் நகை ஊக்குவிப்பு நிகழ்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது (25 நவம்பர்).

VI. தூதரகத்திற்கு, இலங்கையிலிருந்தும் வியட்நாமிலிருந்து 13 வர்த்தக விசாரணைகள் கிடைக்கப்பெற்றன.

VII. தூதரகத்திற்கு, இலங்கையிலிருந்தும் வியட்நாமிலிருந்து 09 வர்த்தக விசாரணைகள் கிடைக்கப்பெற்றன.

4. வெளிநாட்டு முதலீடுகள்

I. இலங்கையில் *FPT* பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்கான சாத்தியக்கூறு பற்றி ஆராய்வதற்கும், மாணவர் பரிமாற்றம் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் வியட்நாமின் *FPT* பல்கலைக்கழக குழுவினர் இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

II. வியட்நாமிலுள்ள Asia Nordic Consult இனால் தலைமைதாங்கப்படும் தனிக்கூட்டத்தின் 'கழிவிலிருந்து சக்தி' முதலீட்டுச் செயற்றிட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது.

III. வியட்நாமிலுள்ள ஜப்பான் முதலீட்டாளருடன் ஒரு ஹோட்டல் செயற்றிட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது. (கடற்கரை உல்லாச விடுதி மற்றும் 100 இலிருந்து 200 அறைகளுடன் 'கோல்ஃப்' மைத்தானத்தையும் கொண்டுள்ள மலைநாட்டு ஹோட்டல்).

IV. "வியட்நாமில் 30 வருட வெளிநாட்டு நேரடி முதலீட்டு அசைவாக்கம்: புதிய நோக்கம், புதிய வாய்ப்புக்கள், புதிய சகாப்தம்' என்ற மாநாட்டில் தூதர் கலந்துகொண்டார் (04 அக்டோபர்).

5. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

I. வியட்நாம் பயண முகவர்கள் மற்றும் ஊடகத்தினர் இலங்கைக்குச் சுற்றுலா வருவதை ஒழுங்கு செய்யும் ஆரம்ப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

II. வியட்நாமிய புகைப்பட தினத்தின் 65 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு, 17-25 மார்ச் 2018 நடைபெற்ற நிகழ்வில், VAPA இனால் ஒழுங்குசெய்யப்பட்ட கண்காட்சியில் கலந்துகொண்டமை. இதில் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து 135 புகைப்படக்கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

III. 1999 இல் 'யுனெஸ்கோ' இனால் உலக பாரம்பரிய இடமாகப் பிரகடனம் செய்யப்பட்ட புராதன நகரமான 'ஹோய் அன்' இல் உள்ள சிற்ப பூங்காவில் இடம்பெற்ற, 3 ஆவது சர்வதேச உணவுத் திருவிழாவில் தூதரகம் கலந்துகொண்டது.

IV. இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தையும் இலங்கை-வியட்நாம் இடையிலான 48 வருட இராஜதந்திர உறவுகளையும் நினைவுகூரும் வண்ணம், வியட்நாம், ஹானோயிலுள்ள பெண்கள் நூதனசாலை வளாகத்தில் 3 நாட்கள் கலாச்சார விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வு 39 தடவைகள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன (27-29 ஏப்ரல்).

V. 2018 ஏப்ரல் 27 இலிருந்து மே 2 வரை நடத்தப்பட்ட 10 ஆவது 'ஹ்யூ விழா'வில் இலங்கையின் 'ரணரங்க நடனப்பள்ளி'யின் குழு கலந்துகொண்டது.

VI. 'ஆடை அலங்காரம் மூலம் நட்பைக் கொண்டாடுதல்' நிகழ்வு, இரு நாடுகளதும் பங்களிப்புடன் 24 மே அன்று நடத்தப்பட்டது. இலங்கையின் பல்வண்ணங்களிலான கைத்தறி மற்றும் பருத்தி கலப்புத் துணைகள் காட்சிப்படுத்தி ஒரு ஆடை, அலங்கார அணிவகுப்பும் இடம்பெற்றது.

VII. வெளிநாடுகளுக்கான சுற்றுலா இயக்குபவர்களுடன் ஊடாடு அமர்வு ஒன்று, ஹானோயில் 26 ஜூலை 2018 அன்று ஒழுங்குபடுத்தப்பட்டது.

VIII. ஹனோய் சித்திரவேலைப்பாடுள்ள சுவரில் இலங்கைச் சித்திரங்களை வரைவதற்கான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

IX. இலங்கை 'பட்டிக்' ஐ வளர்ச்சி ஊக்கப்படுத்துவதற்காக, இலங்கையின் பாரம்பரிய 'பட்டிக்' கலைஞரும் வடிவமைப்பாளருமான செல்வி சொனாலி தர்மவர்த்தனவினால் ஒரு ஆடை அலங்கார அணிவகுப்பு ஒழுங்குசெய்யப்பட்டது. (10 அக்டோபர்).

X. வியட்நாம் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவகத்தின் கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களைச் சந்தித்த இலங்கைத்தூதர், ஹானோயின் சமூக விஞ்ஞானக் கல்லூரியை இலங்கை களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த, இலங்கை தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்துடன் இணைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றிக் கலந்துரையாடினார். (31 அக்டோபர்).

XI. HIWC அறக்கொடை அங்காடி 2018 இல், பாரம்பரிய இலங்கைத் தாளவாத்தியக் கலைஞர்கள் பங்குபற்றும் இலங்கை காட்சியரங்கு ஒன்று வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது (18 நவம்பர்).

XII. வியட்நாம் உள்நாட்டுச் சிறப்புச் சந்தையில், இலங்கை விற்பனைக்காட்சியரங்கு ஒன்றை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. (21-23 நவம்பர்).

XIII. தூதரின் வதிவிடத்தில் மாணவர்களின் வரவேற்பு விழாவும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பும் ஏற்பாடு செய்யப்பட்டது. (1 டிசம்பர்).

XIV. தூதரின் வதிவிடத்தில் இலங்கை ஓவியக்கலைஞரான திரு வசந்த பெரேராவின் 'எனது அழகான இலங்கை' என்ற ஓவியக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. (5 டிசம்பர்)

6. கலாச்சார உறவுகள்

- 'ஷாக்ய கிங்டம்' ஆன்மீக மையத்தில், ஒரு வியட்நாமிய பௌத்த காட்சியரங்கிய நிர்மாணிப்பதற்கென, 'ஆசியாவின் ஒளி' அறக்கொடை நிறுவனத்தின் தலைவர் திரு நவின் குணரத்ன அவர்களின் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. (5- 8 ஜனவரி 2018).

- குருநாகல், நிக்கவரெட்டியாவில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'யொவுன்புரய இளைஞர் விழா' வில் 05 வியட்நாமிய மாணவர்கள் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. (28 மார்ச் - 1 ஏப்ரல்).

- 'ஹனோய் சிறுவர் அரண்மனை' இனால், HAUFO உடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச சிறுவர் தினத்தை (6 ஜூன்) நினைவுகூருமுகமாக, "I love Ha Noi – A Peaceful City" என்ற கருப்பொருளில் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச ஓவியப் போட்டிக்கு தூதரகம் அனுசரணை வழங்கியது. இப்போட்டியில் இலங்கையுட்பட பல நாடுகளிலிருந்தும் 5-15 வயதுடைய, கிட்டத்தட்ட 100 சிறுவர்கள் பங்குபற்றினார்கள். (27 மே).

- வெசாக் தினம், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம் மற்றும் இலங்கை-வியட்நாம் இடையிலான 48 வருட இராஜதந்திர உறவுகள் ஆகியவற்றைக் கொண்டாடும் வண்ணம்,

"Siddhartha: The Buddha" என்ற திரைப்படம், ஹானோயின் க்வான் சு பகோடா வளாகத்தில் திரையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. (29 மே).

- Net Viet TV இல் இடம்பெற்ற "'Sharing Viet Nam' என்ற, உரையாடல் நிகழ்ச்சியில் தூதுவர் கலந்துகொண்டு, ஹானோயின் தாமரைப்பூக்களின் பருவகாலம் பற்றிய தனது எண்ணங்களையும் இலங்கை கலாச்சாரத்தில் தாமரையின் பங்கு பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார். (இந்நிகழ்ச்சி 3 ஜூலை அன்று பதிவுசெய்யப்பட்டு, 24 ஜூலை அன்று ஒளிபரப்பப்பட்டது.)

- இலங்கையர்களின் பங்களிப்புடன் இலங்கை வியட்நாம் நட்புறவு இசை நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டது. (23 ஜூன்).

- 2018 ஐ.நாவின் சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்டங்களுக்காக, ஒரு சிறப்புக் குழுவினரால், ஸ்ரீமஹாபோதி மரக்கன்று ஒன்றைக் கொண்டுவந்து, அதை டாம் சுக் புத்தவிகாரை அமைந்துள்ள இடத்தில் நடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வு பற்றி, வியட்நாமில் 14 ஊடகச்செய்திகள் வெளிவந்தன. (22 ஜூலை).

- பாங்க் புத்தகோவிலிலுள்ள நன்றியுணர்வின் ஸ்தூபியில், புத்தபெருமானின் நினைவுச்சின்னங்களை வைத்து ஸ்தாபித்த நிகழ்வுக்கு அனுசரணை (19 ஆகஸ்ட்).

- வியட்நாமின் தேசிய தினத்தைக் குறிக்கும் வண்ணம், ஹனோய் ஒப்ரா ஹவுஸில், இசை நிகழ்ச்சி நடைபெற்றபோது, வியட்நாம் நெட் பத்திரிகையினால் இலங்கைத்தூதருடன் நேர்காணல் இடம்பெற்றது. (2 செப்டெம்பர்).

- தொடர்ந்து 3 ஆவது வருடமாக, தூதுவரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில், வியட்நாம் பெண்கள் தினத்தின் பொருட்டு வரவேற்பு ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. (20 அக்டோபர்)

- 02 இலங்கைத் திரைப்படங்களும் திரையிடப்பட்ட HANIFF 2018 இல் சுமித்திரா பீரிஸான் இயக்கப்பட்ட வைஷ்ணவி, சுதத் அபயஸ்ரீவர்த்தனவால் இயக்கப்பட்ட 'where is my route' ஆகிய இலங்கைத் திரைப்படங்கள், ஹனோய் சர்வதேச திரைப்பட விழா, HANIFF 2018 இல் (27 – 31 அக்டோபர்) திரையிடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- பார்வையற்ற மற்றும் முழுமையான பார்வையற்ற இளைஞர்கள் பங்கெடுக்கும் 'Hope Chor' இற்கான கிறிஸ்மஸ் கரோல் நட்புறவு இசை நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது. (2 டிசம்பர்)

- MOFA-VN இனால் நடத்தப்பட்ட 5 ஆவது சர்வதேச உணவுத் திருவிழாவில் இலங்கைக் காட்சியரங்கம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது (9 டிசம்பர்).

பொருளாதார அலுவல்கள் பிரிவு

பொருளாதார அலுவல்கள் பிரிவிடம் இருதரப்பு மற்றும் பலதரப்பு பொருளாதர ஒத்துழைப்பு தொடர்பான செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகள் மற்றும் அமைப்புக்களுடனான இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணுவதன் மூலம் இலங்கைக்கு நன்மைகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்தப் பிரிவானது, வணிகம், முதலீடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலாத் துறை, தேயிலை உற்பத்தி ஊக்குவிப்பு, மற்றும் அபிவிருத்தி உதவி ஆகிய விடயப் பரப்புக்களை சம்பந்தப்பட்ட அரசாங்க முகவரமைப்புக்களுடன் நெருங்கிய முறையில் ஒருமுகப்படுத்தி வருகின்றது.

இந்தப் பிரிவானது பொருளாதார இராஜதந்திர முன்னெடுப்புக்களைத் துரிதப்படுத்தவும் கூட்டங்கள் தொடர்பான FDI ஒழுங்குபடுத்தும் வியாபாரம்/ முதலீட்டை கவர்ந்து கொள்ளவுமான முயற்சிகளில் ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதில் முக்கிய வகிபாகத்தினைக் கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, ஏனைய நாடுகளுடனான பொருளாதார உறவுகளைப் பலப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி பொறிகளுக்கு ஆதரவளிப்பதற்கான வசதிப்படுத்துநராக அது தனது வகிபங்கினைத் தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொருளாதார அலுவல்கள் பிரிவானது, முதலீட்டைக் கவர்ந்து கொள்ளவும் சுற்றுலாத்துறையையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பையும் மேம்படுத்தல் உள்ளிட்ட இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தொனிக்கும் சந்தைகளைக் கண்டறியுமான முதன்மையான பொறுப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை மற்றும் ஏனைய பொருளாதார செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அரச நிறுவனங்களுடன் இந்தப் பிரிவானது இணைந்தும் செயற்பட்டு வருகின்றது.

1. பொருளாதார இராஜதந்திர முன்னெடுப்பு

இலங்கை அரசின் பொருளாதார முன்னெடுப்பை பயனுறுதிமிக்க வகையில் செயற்படுத்தும் வகையில் இந்தப் பிரிவானது, (I) தூதரகங்களுக்கான பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் செயலாற்றுகை இலக்குகள், (II) தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் இலங்கையின் பொருளாதார ஊக்குவிப்பு; மற்றும் இலங்கை வெளிநாட்டு உறவுகள் மற்றும் பொருளாதார இராஜதந்திர உரையாடல் ஆகிய மூன்று அம்சங்களைக் கொண்டுள்ள மூன்று வருட காலப்பகுதிக்கு பரவியிருக்கத்தக்க நிகழ்ச்சித் திட்டமொன்றை இந்தப் பிரிவானது அறிமுக்கப்படுத்தியுள்ளது. இத்தகைய உப நிகழ்ச்சித் திட்டங்கள் ஒவ்வொன்றும் ஏனைய நாடுகளுடனான இலங்கையின் உறவுகளை பொருளாதார இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் பலப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றது.

i. தூதரகங்களுக்கான பொருளாதார இலக்குகள்

தூதரகங்களுக்கான செயற்பாட்டு இலக்குகளை ஒதுக்கீடு செய்வதன் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது திடீரென வெளிப்படும் அல்லது மூலவாய்ப்பு வளமிக்க சந்தைகளுக்கு அதிகளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் அதே வேளையில் நிலையான சந்தைகளுடனான ஈடுபாட்டினை அடையாளங் கண்டு அதிகரித்துக் கொள்ள எதிர்ப்பார்க்கின்றது.

இத்தகைய மூலோபாய வள ஒதுக்கீடானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பல்வேறு நாடுகளுடனான ஒட்டுமொத்த ஈடுபாட்டினை அதிகளவு ஈர்த்தெடுக்கும் விதத்தில் பெருமளவில் பெருக்கிக் கொள்வதனைச் சாத்தியமாக்கும்.

ii. ஊக்குவிப்பு சார்ந்த செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதிலான நேரடி ஈடுபாடுகள்

இலங்கை நாடொன்றுடன் மேலும் உறவைப் பேணக் கூடிய வகையில் பொருத்தமான வழிமுறைகளை இனங்காண்பதற்கான உப நிகழ்ச்சித் திட்டமான "இலங்கையின் பொருளாதார ஊக்குவிப்பு" இரண்டாவது (நடுநிலை) அம்சமாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு சந்தையும் மாறுபட்ட உறுதிப்பாடுகளைக் (வலிமைகளை) கொண்டுள்ளதனால், இந்த உப நிகழ்ச்சித் திட்டமானது பிரதான சந்தைகளை இனங்கண்டு அத்தகைய உறுதிப்பாடுகளுக்கு வேண்டியவற்றை வழங்கிய பொருத்தமான ஊக்குவிப்பு மூலோபாயங்களை முன்மொழிவதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக, அமைச்சு நேரடியாக ஈடுபட்டு நிதி வழங்கவும், சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்கள் மற்றும் தனியார் துறை ஒத்துழைப்புடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யவுமான முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் பூகோள அடிச்சுவட்டை மிகுதிப்படுத்தி உறுதியான பொருளாதார நன்மைகளை நாட்டிற்கு கொண்டு வருவதற்கான இலக்கு வைக்கப்பட்டுள்ள பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் திடுமென வெளிப்படும் சந்தைகளில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது. இந்த ஊக்குவிப்பு நிகழ்வுகள் வரிசையில் சுவீடனில் தகவல் தொழில்நுட்ப உற்பத்திப் பொருட்கள், மற்றும் சேவைகள் மற்றும் சேதன உணவு உற்பத்திப் பொருட்கள் தென்னாபிரிக்காவில் ஆடை, ஜவுளி, மற்றும் பாதணி பஹ்ரேனில் பதனிடப்பட்ட உணவு, பிரெசிலில் இலத்திரனியல் சுற்றுலாத்துறை மற்றும் ஆடை ஐக்கிய அரபு இராச்சியத்தில நல்வாழ்வு சுற்றுலாத்துறை மற்றும் கொரிய குடியரசு மற்றும் ஜப்பானில் உட்புற முதலீடு ஆகியவை இடம்பிடித்தன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய ஏற்றுமதி மூலோபாயம் குறித்த பிரதான குவிமையத் துறைகளுடன் இணைந்த வகையில் இந்த நிகழ்ச்சித்

திட்டங்களைத் தெரிவு செய்யும் பொருட்டு அமைச்சு அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து செயலாற்றியது.

(III) மூன்றாவதாக, ஏனைய நாடுகளுடனான உறவுகளை மேலும் விருத்தி செய்யும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு உறவுகள் & பொருளாதார இராஜதந்திர உரையாடல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் தாபிக்கப்பட்டது. இலங்கையில் நடாத்தப்பெற்ற இந்த இராஜதந்திர பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவென தெரிவு செய்யப்பட்ட நாடுகளைச் சேர்ந்த இடைத்தர நிலையில் உள்ள இராஜதந்திரிகள் அழைக்கப்பட்டதுடன், இலங்கை வெளிநாட்டு உறவுகள் & பொருளாதார இராஜதந்திர கலந்துரையாடல் (SLFREDD) உலகின் அனைத்துப் பிராந்தியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 23 நாடுகளைச் சேர்ந்த இடைத்தர நிலையில் உள்ள இராஜதந்திரிகளின் பங்கேற்புடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2018 ஒக்டோபரில் வெற்றிகரமான முறையில் நடாத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த உறவுகளை, குறிப்பாக வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடு ஆகியவை குறித்து நாடுகளின் எதிர்கால தீர்மானம் எடுப்போருடனான உறவுகளை வலுப்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். உலக விவகாரங்கள், பொருளாதார இராஜதந்திரம் மற்றும் ஏனைய தொனிப்பொருள் சார்ந்த விடயப் பரப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் அதேவேளையில், இந்த நிகழ்ச்சித் திட்டமானது இலங்கையின் சமூக – பொருளாதார அபிவிருத்தி மற்றும் எதிர்கால வாய்ப்பு வளங்கள் குறித்த விடயப்பரப்புக்களில் பரந்தளவிலான வெளிப்படுத்தலை வழங்குவதனைக் குறிகோளாகக் கொண்டமைந்தது. எதிர்கால இராஜதந்திர பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கையேடாகப் பயன்படுத்தக் கூடிய வகையில், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் போது ஆற்றப்பட்ட அனைத்து விரிவுரைகளையும் பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவங்களையும் தன்னகத்தே உள்ளடக்கிய கைநூலொன்றைத் தயாரிக்கும் பணியில் அமைச்சு தற்போது ஈடுபட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார இராஜதந்திர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பாதீட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, இலங்கையின் பொருளாதார இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கான மென் வலு அணுகுமுறையொன்றாக இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் ஏற்பாடு செய்திட அமைச்சு உத்தேசித்துள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை ஸ்திரப்படுத்தும் வகையில் ஈடுபட்டு வரும் ஏனைய பங்குதாரர் அமைச்சுக்கள் மற்றும் முகவரமைப்புக்களுக்கு உலகில் உள்ள 67 இராஜதந்திர தூதரகங்கள் ஊடாக ஆதரவை வழங்கியுள்ளது. மேலும், அது வர்த்தக ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதுடன், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை மேலும் ஸ்திரப்படுத்துவதில்

ஏனைய முகவரமைப்புக்களுடன் இணைந்து கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களின் இணை ஏற்பாட்டாளராகவும் செயற்பட்டுள்ளது.

2. இருதரப்பு பொருளாதார உறவுகள்

i. இந்தப் பிரிவானது, அவுஸ்திரேலியா, ஜோர்ஜியா, செக் குடியரசு, பல்கேரியா, நியூஸிலாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 07 உயர் மட்ட உள்வரும் விஜயங்களுக்கு வசதியளித்தது.

ii. இந்தோனேசியா, போலாந்து, சிங்கபூர், மியன்மார், ஜப்பான், ஈரான், கென்யா, நேபாளம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கான 10 உயர்மட்ட வெளிச்செல்லும் விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன.

iii. பொருளாதார அலுவல்கள் பிரிவானது, பாகிஸ்தான், இந்தோனேசியா, ரஷ்யா, ஜப்பான், சீசெல்ஸ், சீனா, சிம்பாப்வே, பெல்ஜியம், ஜோர்தான், நோர்வே மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 11 உட்புற வியாபார விஜயங்களையும் கட்டார், அவுஸ்திரேலியா, ஜப்பான், வியட்நாம் மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகளில் இருந்து 05 வெளிப்புற வியாபார விஜயங்களையும் ஒருங்கிணைத்தது.

iv. அமைச்சின் பணிப்பாளர் நாயகம்/ கிழக்காசியா வர்த்தகம், மற்றும் உதவிச் சட்ட ஆலோசகர் ஆகியோர் சுதந்திர வர்த்தக ஒப்பந்த கைச்சாத்து நிகழ்விலும் சேவைகள், பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டு அத்தியாய பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொண்டனர்.

v. இந்தப் பிரிவானது, வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் சுதந்திர வர்த்தக முன்னேற்றம் ஆகிய விடயங்களில் சர்வதேச பொருளாதார அமைப்புக்களுடன் நெருக்கமான முறையில் இணைந்து பணியாற்றி வருகின்றது.

2.1. 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுக்களின் கூட்டம் மற்றும் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கூட்டங்கள் குறித்த விபரங்கள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், பின்வரும் கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுக்களின் கூட்டங்கள் மற்றும் வர்த்தக/ பொருளாதார கலந்துரையாடல்கள் நடைபெற்றன:-

I. வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பிலான குவைத் இலங்கை கூட்டு அமைச்சர்கள் மட்டத்திலான குழுவின் இரண்டாவது அமர்வு

வர்த்தகம்/ தொழில்நுட்ப ஒத்துழைப்பிலான குவைத் இலங்கை கூட்டு அமைச்சர்கள் மட்டத்திலான குழுவின் இரண்டாவது அமர்வு குவைத்தில் 2018 ஒக்டோபர் 9-11 காலப்பகுதியில் நடைபெற்றது. குவைத் – இலங்கை கூட்டு அமைச்சர்கள் மட்டத்திலான குழுவின் 3 ஆவது கூட்டம் கொழும்பில் 2019 ஆம் ஆண்டில் பரஸ்பரம் இணக்கம் காணப்பட்ட திகதிகளில் நடைபெறவுள்ளது.

தற்போதுள்ள இருதரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் மட்டத்தினை மீளாய்வு செய்திட இணங்கியுள்ள இரு நாடுகளும் பரஸ்பர நல்லெண்ண விஜயங்கள் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டுச் சந்தைகளிலும் கண்காட்சிகளிலும் அதிகரித்த பங்கேற்பின் ஊடாக வர்த்தக உறவுகளை விருத்தி செய்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை அதிகரித்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுமுள்ளன.

பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான ஒப்பந்த வரைபொன்றும், இரு நாடுகளுக்குமிடையிலான இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தம் குறித்த நிபந்தனை மூலக் குறிப்பேட்டை திருத்தியமைப்பதற்கான வரைபொன்றும் தற்போது கவனத்திற் கொள்ளப்பட்டு வருகின்றன. வர்த்தக, பொருளாதார மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு, தொழில் மற்றும் மனித வலு ஒத்துழைப்பு, கைத்தொழில் சார்ந்த ஒத்துழைப்பு, விவசாய ஒத்துழைப்பு, சுற்றுலாத்துறை ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு ஆகியவை கலந்துரையாடப்பட்ட ஏனைய சில பிரதான விடயப்பரப்புக்களாகும்.

II. இலங்கை – தென்னாபிரிக்க பங்காண்மைத்துவ மாநாடு

இலங்கை – தென்னாபிரிக்க பங்காண்மைத்துவ மாநாட்டின் ஏழாவது அமர்வு இலங்கையில் 2018 ஒக்டோபர் 16 ஆம் திகதியன்று நடைபெற்றது. வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் சுற்றுலாத்துறை, வனவளர்ப்பு, கடற்றொழில், நீர்ப்பாசனம், சக்திவள விவசாயம் மற்றும் தொழில் ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் பலப்படுத்திட மேற்படி மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

இரண்டு நாடுகளும் பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் உயர் மட்ட விஜயங்கள் உள்ளிட்ட உத்தியோகபூர்வ விஜயங்களை பரஸ்பரம் மேற்கொள்ளல் அனைத்து மட்டங்களிலும் ஒத்துழைப்பை வசதிப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கான தேவைப்பாட்டையும் வலியுறுத்தின.

III. இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய வர்த்தக முதலீட்டுப் பணிச்சட்ட ஒழுங்கு (TIFA)

இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டை வசதிப்படுத்தி ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய வர்த்தக முதலீட்டுப் பணிச்சட்ட ஒழுங்கு குறித்த ஒப்பந்தம் 2017 நவம்பர் 02 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. கூட்டு ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் அவுஸ்திரேலியாவின் கன்பெரா நகரில் 2018 ஏப்ரல் 19 ஆம் திகதியன்று நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டை வசதிப்படுத்தி ஊக்குவித்தல், இரு நாடுகளினதும் வர்த்தக சமூகத்தினரின் ஈடுபாடு, சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் பணிச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயப்பரப்புக்கள் கலந்துரையாடப்பட்டன. இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு பணிச்சட்ட

ஒழுங்கு ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்தல் மீதான தொடர் கலந்துரையாடலொன்று கொழும்பில் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சில் 2019 ஜனவரி 16 ஆம் திகதியன்று நடைபெற்றது. அடுத்த கூட்டம் அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலின் பின்னர் 2019 ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.

IV. இலங்கை மற்றும் ஈரானுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக் குழுவின் பதினோராவது அமர்வின் தொடர் கூட்டம்

இலங்கை மற்றும் ஈரானுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் பதினோராவது அமர்வின் தொடர் கூட்டம் 2018 பெப்ரவரி 7-8 காலப்பகுதியில் கொழும்பில் நடைபெற்றது.

தொடர் கலந்துரையாடல் குழு தனது கலந்துரையாடலின் போது பின்வரும் ஒத்துழைப்பு குறித்த விடயப் பரப்புக்களை இரண்டு உப குழுக்களின் கீழ் அலசி ஆராயந்தது;

வங்கித்துறை, நிதிசார் விடயங்கள், வர்த்தகம், எண்ணெய், தேயிலை மற்றும் விவசாயம், காப்புறுதி, பொருளாதார மற்றும் சுங்க ஒத்துழைப்பு நியமங்கள், போக்குவரத்து, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சுகாதாரம், கலாச்சாரம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

மேற்படி கலந்துரையாடல்களின் போது தூதுக் குழுவினர் இரு நாடுகளுக்குமிடையே நேரடி விமான சேவைகளை ஆரம்பித்தல் மற்றும் வங்கி கொடுக்கல் வாங்கல்கள் குறித்த தீர்மானம் பற்றி கலந்துரையாடினர். இரு நாடுகளினதும் தேயிலைக் கைத்தொழில் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இலங்கை மற்றும் ஈரானுக்கிடையே கைச்சாத்திடப்பட்டுள்ள PTA ஒப்பந்தத்தின் கீழான சுங்கவரிக் கட்டமைப்புக்கள் மற்றும் வர்த்தகப் புள்ளிவிபரங்கள் மீதான தகவல் பரிமாற்றம் ஆகிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இணையப் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான விவகாரங்கள் மீதான புரிந்துணர்வு ஒப்பந்த வரைபொன்றை ஈரானின் பரிசீலனைக்கென அனுப்புவதற்கும் இலங்கைத் தரப்பு ஒப்புக் கொண்டது.

3. பலதரப்பு பொருளாதார உறவுகள்

3.1. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (UNESCAP)

பொருளாதார அலுவல்கள் பிரிவானது, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கான குவிமையமாகத் திகழ்கின்றது. இலங்கை தற்போது ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவில் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான புள்ளிவிபர நிறுவனம் (SIAP), பேண்தகு விவசாய பொறிமுறையாக்கல் மையம் (CSAM), பேண்தகு விவசாயம்

ஊடான வறுமை ஒழிப்புக்கான மையம் (CASPA), தொழில்நுட்ப இடமாற்றத்திற்கான ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய மையம் (APCTT), மற்றும் அனர்த்த தகவல் முகாமைத்துவ அபிவிருத்திக்கான ஆசிய மற்றும் பசுபிக் மையம் (APDIM) ஆகிய 05 ஆளுநர் சபைகளின் நடவடிக்கைகளில் பங்கேற்று வருகின்றது.

i. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா பொருளாதார மற்றும் சமூக ஆணைக் குழுவின் 74 ஆவது அமர்வு பாங்கொக் நகரில் 2018 மே 11-16 காலப்பகுதியில் நடைபெற்றது. பாங்கொக் நகரில் உள்ள மேன்மை தங்கிய தூதுவர் தேசிய தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கினார். இந்தப் பிரிவானது 74 ஆவது அமர்வுக்கான தூதுக் குழு மற்றும் தேசியக் கொள்கை வகுப்பாக்கம் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைப்பதில் முக்கிய இடம் வகித்தது. அத்துடன், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு தொடர்பான கூட்டங்கள், மாநாடுகள், செயலமர்வுகள் முதலியவற்றில் இலங்கைப் பிரதிநிதிகளின் பங்கேற்பினையும் இந்தப் பிரிவு ஒருங்கிணைத்து வருகின்றது.

ii. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் பின்வரும் நிகழ்வுகளில் பொருளாதார அலுவல்கள் பிரிவானது இலங்கையின் பங்கேற்பினை வசதிப்படுத்தியது:-

- தாய்லாந்தின் பாங்கொக் நகரில் 2018 நவம்பர் 28-30 வரையிலான காலப்பகுதியில் சமூக அபிவிருத்தி மீதான குழுவின் ஐந்தாவது அமர்வில் இலங்கைத் தூதுக் குழுவொன்று பங்கேற்றது.
- பாங்கொக் நகரில் 2018 நவம்பர் 26-30 காலப்பகுதியில் நடைபெற்ற "2015 க்கு அப்பால் எச்.ஐ.வி மற்றும் "எய்ட்ஸ்" மீதான ஆசிய – பசுபிக் அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் குறித்த ஆசிய – பசுபிக் பிராந்திய நிபுணர் குழுக் கூட்டத்தில் இலங்கைத் தூதுக் குழுவொன்று பங்கேற்றது.
- பாங்கொக் நகரில் 2018 நவம்பர் 19-21 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற போக்குவரத்து மீதான குழுவின் ஐந்தாவது அமர்வில் இலங்கைத் தூதுக் குழுவொன்று பங்கேற்றது.
- சீனாவின் பீஜிங் நகரில் 2018 டிசம்பர் 12-14 வரையிலான காலப் பகுதியில் நடைபெற்ற சக்தி இணைப்பு (EWG-EC) மீதான இரண்டாவது நிபுணர் குழுக் கூட்டத்தில் இலங்கைத் தூதுக் குழுவொன்று பங்கேற்றது.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடன் (கொழும்பு செயல்முறைக்கான குவி மையம்) இணைந்து பொருளாதார அலுவல்கள் பிரிவு கொழும்பு செயல்முறைச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தது.

3.2. பொருளாதார அலுவல்கள் பிரிவானது 2018 ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற பின்வரும் "BIMSTEC" அமைப்பின் கூட்டங்களில் இலங்கையின் பங்கேற்பு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டுள்ளது.

நேபாளத் தலைநகர் கத்மண்டுவில் 2018 ஒகஸ்ட் 30-31 நடைபெற்ற 4 ஆவது BIMSTEC உச்சி மாநாட்டில் இலங்கை BIMSTEC அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

i. 2018 ஜூன் 13-14 வரையிலான காலப்பகுதியில் நேபாளத்தில் நடைபெற்ற "பன்றி இறைச்சியைச் சந்தைப்படுத்துவதில் பிராந்திய பெறுமதிச் சங்கிலித் தொடரைப் பலப்படுத்துதல்" எனும் தலைப்பிலான செயலமர்வு.

ii. 2018 மார்ச் 08-09 திகதிகளில் தாய்லாந்தில் நடைபெற்ற "BIMSTEC" அமைப்பு மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் AML/CFT மீதான ஆற்றைலைக் கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பிலான செயலமர்வு (இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள்)

iii. பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் 2018 மார்ச் 13-15 வரை நடைபெற்ற "BIMSTEC" அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கான "இணையக் குற்றச் செயலும் இணையப் பாதுகாப்பும்" எனும் தலைப்பிலான செயலமர்வு (இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள்)

iv. தாய்லாந்தில் பாங்கொக் நகரில் 2018 மே 21-22 வரை நடைபெற்ற 'பாரம்பரிய அறிவையும் மரபுவழிப் பண்புசார்ந்த, வளங்களையும் பாதுகாத்தல்" எனும் தலைப்பிலான செயலமர்வு (சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் அதிகாரிகள்)

v. 2018 மார்ச் 28 இல் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற "BIMSTEC" தேசிய பாதுகாப்பு பிரதானிகளின் இரண்டாவது கூட்டம்

vi. 2018 மே 23 இல் நேபாளத்தில் நடைபெற்ற "சட்டவிரோத போதைப் பொருட்கள் மற்றும் முன்னோடி இரசாயனப் பொருட்கள் கடத்தலை தடுத்தல்" எனும் தலைப்பிலான "BIMSTEC" உப குழுவின் ஐந்தாவது கூட்ட செயலமர்வு

vii. 2018 மார்ச் 22-23 வரை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற சுங்க விடயங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி மீதான உடன்படிக்கையின் வரைப்புக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கான "BIMSTEC" செயற் குழுக் கூட்டம் (இலங்கை சுங்கம்/ வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள்)

viii. பங்களாதேஷின் டாக்காவில் 2018 ஓகஸ்ட் 13-14 வரை நடைபெற்ற "பயங்கரவாத மற்றும் நாடுகடந்த குற்றச் செயல் எதிர்ப்பு" எனும் தலைப்பிலான "BIMSTEC" கூட்டு செயற்குழுவின் எட்டாவது கூட்ட செயலமர்வு (பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள்)

ix. நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் 2018 ஒக்டோபர் 29-30 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற சட்டம் மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல் மீதான "BIMSTEC" அமைப்பின் உபகுழுவின் எட்டாவது கூட்டம்

x. நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் 2018 ஓகஸ்ட் 11 அன்று நடைபெற்ற விசேட சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டத்தில் பணிப்பாளர் நாயகம்/ பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகம் (பலதரப்பு) கலந்து கொண்டார்.

xi. நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் 2018 ஓகஸ்ட் 28-31 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற 4 ஆவது "BIMSTEC" உச்சி மாநாடும் அதற்கு முந்தைய கூட்டங்களும்

xii. இந்தியாவின் ஹைதராபாத் நகரில் 2018 நவம்பர் 12-16 காலப்பகுதியில் நடைபெற்ற கணினிச் சட்டம் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (இலங்கை மத்திய வங்கி)

xiii. பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 2018 நவம்பர் 18, 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற 21 ஆவது TNC கூட்டம் (முதலீட்டுச் சபை, வர்த்தகத் திணைக்களம், சுங்கம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு)

3.3. <u>"பிம்ஸ்டெக்" (BIMSTEC) – 2018 க்கான இலங்கையின் வாக்குறுதிகள்</u>

"பிம்ஸ்டெக்" (BIMSTEC) அமைப்பின் நிரந்தர செயலகத்தை தாபித்தல் மீதான "பிம்ஸ்டெக்" (BIMSTEC) கூட்டுச் செயற்குழுவின் எட்டாவது கூட்டம் கொழும்பில் 2018 ஜூலை 10 ஆம் திகதியன்று நடைபெற்றது.

3.4. உலகப் புலமைசார் சொத்து அமைப்பு (WIPO)

பொருளாதார அலுவல்கள் பிரிவானது உலகப் புலமைசார் அமைப்பு தொடர்பான விடயங்களில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் தேசிய புலமைசார் சொத்து அலுவலகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றது. பணிப்பாளர் நாயகம்/ தேசிய புலமைசார் சொத்து அலுவலகம் ஜெனீவாவில் 2018 செப்டெம்பர் 24 – ஒக்டோபர் 02 இல் நடைபெற்ற காப்புரிமை பெற்றுள்ள ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றியப் பேரவையின் அமர்வு உள்ளிட்ட உலகப் புலமைசார் சொத்து அமைப்பின் உறுப்பு நாடுகளின் 58 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டுள்ளார்.

உலகப் புலமைசார் சொத்து அமைப்புடன் ஈடுபடுவதற்கென 10 அம்ச செயல்திட்டமொன்று முறைப்படுத்தப்பட்டது.

இலங்கையில் பயனுறுதிமிக்க புலமைசார் சொத்து முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்கென தேசிய புலமைசார் சொத்து மூலோபாயமொன்றைத் தயாரித்தல் பற்றிய கலந்துரையாடலுக்கென மேற்கொள்ளப்பட்ட கொரியக் குடியரசுக்கான ஆய்வு விஜயத்தை இந்த அமைச்சு பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்தப் பிரிவானது, உலகப் புலமைசார் சொத்து அமைப்புக்கும் (WIPO) தேசிய புலமைசார் சொத்து அலுவலகத்திற்குமிடையிலான பணியை ஒருங்கிணைத்து வருவதுடன்

வருடம் முழுவதும் நடைபெற்ற உலகப் புலமைசார் சொத்து அமைப்பின் பல்வேறு நிகழ்வுகளிலும் (காப்புரிமைகள், வர்த்தக உரிமைக்குறி, பதிப்புரிமைகள், கைத்தொழில்சார் வடிவமைப்புக்கள் மற்றும் அமுலாக்கம்) லிஸ்பன் முறைமை, மட்ரிட் உடன்படிக்கை முதலியவை தொடர்பான விடயங்கள் சார்ந்த நிகழ்வுகளிலும் இலங்கை அதிகாரிகள் கலந்து கொள்வதனை வசதிப்படுத்தியும் வருகின்றது.

3.5. இந்து சமுத்திர ஓர சங்கம் (IORA)

பொருளாதார அலுவல்கள் பிரிவானது 2018 ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் வரையிலான காலப் பகுதியில் நடைபெற்ற பின்வரும் இந்து சமுத்திர ஓர சங்க (IORA) கூட்டங்களில் இலங்கையின் பங்கேற்பு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டுள்ளது.

i. அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் 2018 மார்ச் 19-23 காலப் பகுதியில் நடைபெற்ற "நீல நிலக்கரி' மீதான இந்து சமுத்திர ஓரசங்க இந்து சமுத்திர மாநாடு இந்தப் பிரிவானது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிடமிருந்தான நியமனத்தை ஒருங்கிணைப்புச் செய்தது. இந்த மாநாட்டில் உதவிப் பணிப்பாளர்/ (பொருளாதார அலுவல்கள் மற்றும் சமுத்திர விவகாரங்கள் மற்றும் காலநிலை மாற்றம்) கலந்து கொண்டார்.

ii. மொரிஷியஸில் 2018 மே 03-04 வரை நடைபெற்ற இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பெண்களின் பொருளாதார வலுவூட்டலைப் பலப்படுத்துவதற்கான செயலமர்வு – அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு மற்றும் செயற்குழுவுக்கான தயாரிப்புக்கள் இந்த செயலமர்வில் உதவிப் பணிப்பாளர்/ (சமுத்திர விவகாரங்கள் மற்றும் காலநிலை மாற்றம்), கலந்து கொண்டார்.

iii. இந்து சமுத்திர எல்லைக் கல்விசார் குழு மீதான இலங்கையின் நிலைப்பாடு குறித்த விடயங்களை கலந்துரையாடும் பொருட்டு, இந்தப் பிரிவினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிறு மாநாட்டு மண்டபத்தில் 2018 மே 25 இல் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது

iv. வருடத்திற்கு இரு தடவைகள் நடைபெற்றுவரும் மூத்த அதிகாரிகள் குழுவின் (CSO) 8 ஆவது கூட்டம், 5 ஆவது இந்து சமுத்திர பேச்சுவார்த்தை (IOD) மற்றும் இந்து சமுத்திர எல்லைச் சங்க குழுவின் (IORAG) 24 ஆவது கூட்டம் ஆகியன தென்னாபிரிக்க 'டேர்பன்' (Durban) நகரில் 2018 ஜூலை 30 தொடக்கம் 2018 ஓகஸ்ட் 03 வரை நடைப்பெற்றன.

v. மொரிஷியஸில் 2018 ஓகஸ்ட் 28-29 வரை நடைப்பெற்ற "*பேண்தகு அபிவிருத்திக்கான முன் தேவையாக* ***விளங்கும் பெண்களைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல்***" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்து சமுத்திர எல்லைச் சங்க அமைச்சர்கள் மட்டதிலான மாநாட்டில் கௌரவ மகளிர்

மற்றும் சிறுவர் விவகார அமைச்சர், மற்றும் தேசிய மகளிர் குழுத் தலைவி ஆகியோர் பங்கேற்றனர்.

vi. தென்னாபிரிக்காவில் உள்ள கிழக்கு 'கேப்' மாகாணத்தில் (Eastern Cape Province) 2018 செப்டெம்பர் 12-13 வரை நடைபெற்ற, **சமுத்திரப் பொருளாதாரம்** மீதான இந்து சமுத்திர எல்லைச் சங்க செயற்குழுவை அமைப்பதற்கான முதலாவது முன்னேற்பாட்டுக் கூட்டதில் பிரிட்டோரியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தியது.

vii. அமைச்சர்கள் சபையின் 18 ஆவது கூட்டமும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 20 ஆவது கூட்டமும் தென்னாபிரிக்காவில் 2018 ஒக்டோபர் 31 முதல் நவம்பர் 02 வரை நடைபெற்றன. இந்தக் கூட்டங்களில் திருமதி சரோஜா சிறிசேன, பணிப்பாளர் நாயகம்/ பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகம், மற்றும் திருமதி பிரியாங்கனி ஹேவாரத்ன, ஆலோசகர், பிரிட்டோரியா கலந்து கொண்டனர்.

viii. இந்து சமுத்திரத்தில் உள்ளடங்கலான வளர்ச்சிக்கான கடல்சார் ஒத்துழைப்பினை மிகுதிப் படுத்தல் மீதான இந்து சமுத்திர ஓர சங்க உயர் மட்ட மாநாடு இந்தோனேசியாவில் 2018 டிசம்பர் 07-08 தினங்களில் நடைபெற்றது. திரு கபில பொன்சேக, பதில் பணிப்பாளர் நாயகம்/ பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகம் கலந்து கொண்டார்.

3.6. கொழும்புத் திட்டம்

கொழும்புத் திட்டத்தின் 46 ஆவது ஆலோசனைக் குழுக் கூட்டம் வியட்நாம் தலைநகர் ஹனோயில் 2018 ஒக்டோபர் 29-31 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்றது. அதில் 27 உறுப்பு நாடுகளுள் 22 நாடுகள் பார்வையாளராக வருகை தந்திருந்த சிலி நாட்டுடன் அதில் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி கூட்டத்தின் போது பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்படன:

- உறுப்புரிமைக்கான மொங்கோலியாவின் மீள் பிரவேசம் உறுப்புரிமைக் கட்டண நிலுவைகளைச் செலுத்தாத காரணத்தினால் மொங்கோலியாவின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ளது. மேற்படி உறுப்புரிமைக் கட்டண நிலுவைகளைப் புறக்கணிப்பதற்கும் மொங்கோலியாவுக்கு மீண்டும் உறுப்புரிமையை வழங்குவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆட்சேபனை எதுவுமில்லையென்பதனை அறிவிக்கும் வாய்மூலக் குறிப்பொன்றை இந்த அமைச்சு கொழும்புத் திட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தது.

- இந்தக் கூட்டத்தில், 2020 ஆம் ஆண்டில் இன்னும் இரண்டு வருடங்களில் நடைபெறவுள்ள 47 ஆவது ஆலோசனைக் குழுக் கூட்டத்தை (CCM) நடாத்துவதற்கு வாக்குறுதியளித்தது.

- கொழும்புத் திட்டச் செயலகத்திற்கான புதிய அலுவலக இடத்தினை வழங்குவதற்கென அளிக்கப்பட்ட தனது வாக்குறுதியை மீளவும் உறுதிப்படுத்தியது. செயலகத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கென இதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த காணி நிதி நெருக்கடி காரணமாக பயன்படுத்தப்படாமல் போயிருந்தது.

  கொழும்புத் திட்டச் செயலகத்தில் 2018 டிசம்பர் 19 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற கொழும்புத் திட்டப் பேரவை FY 2018/2019 இன் நிலையியல் கூட்டத்தில் இந்த அமைச்சு இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

3.7. ஆசிய ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை (ACD)

குவைத்தில் 2018 மார்ச் 13 இல் நடைப்பெற்ற உள்ளடங்கலான மற்றும் பேண்தகு அபிவிருத்தி மீதான 2 ஆவது ஆசிய ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை (ACD) அமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் குவைத்தில் அமைந்துள்ள இலங்கைத் தூதரக முதலாவது செயலாளர் பங்கேற்றிருந்தார்.

ஈரானில் உள்ள ஹமெடானில் 2018 ஓகஸ்ட் 27-29 வரை நடைப்பெற்ற ஆசிய சுற்றுலாத்துறை முதலீடு குறித்த உயர் மட்ட நிகழ்வில் ஈரானில் உள்ள மேன்மைதங்கிய இலங்கைத் தூதுவர் பங்கேற்றிருந்தார்

3.8. அபுதாபி பேச்சுவார்த்தை அமைப்புடனான ஒத்துழைப்பு

இலங்கை அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட அபுதாபி பேச்சுவார்த்தை அமைப்பின் 5 ஆவது சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டம் (SOM) கொழும்பில் 2018 மே 8-9 காலப்பகுதியில் நடைபெற்றது. திரு.ரவிநாத ஆரியசிங்க/ மேலதிக செயலாளர்/ பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகம், ஆரம்ப வைபவத்திலும் அபுதாபி பேச்சுவார்த்தை அமைப்பின் சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டத்தின் தொனிப்பொருள் சார்ந்த அமர்வு 04 இலும் கலந்து கொண்டார். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த திருமதி. சுபாஷனி சில்வாவும் உதவிப் பணிப்பாளர்/ பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகம், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்.

"புலம்பெயர்வின் எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் அமைந்த மணிலா மாநாடு பிலிப்பைன்ஸில் 2018 ஓகஸ்ட் 14-15 வரை நடைபெற்றது. மேற்படி மாநாட்டில் திருமதி. ஜே.ஏ.எஸ்.கே.ஜயசூரிய, ஜெனீவாவில் உள்ள பிரதி நிரந்தரப் பிரதிநிதி கலந்து கொண்டார்.

3.9. புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி மீதான உலக உச்சி மாநாடு (GFMD)

புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி மீதான உலக உச்சி மாநாடு (GFMD) மற்றும் GCM தொடர்பான கூட்டங்கள் மொரக்கோவில் மராகேஷ் நகரில் 2018 டிசம்பர் 05-11 வரை நடைபெற்றது.

i. பதினோராவது புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி மீதான உலக உச்சி மாநாடு மொரொக்கோவின் மராகேஷ் நகரில் 05-07 வரை

ii. 11 ஆவது புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி மீதான உலக உச்சி மாநாடு மொரொக்கோவில் 2018 டிசம்பர் 05-09 வரை

iii. பாதுகாப்பான, அமைதியான மற்றும் கிரமமான புலம்பெயர்வுக்கான உலக உடன்படிக்கையொன்றை ஏற்றுக் கொள்வதற்கான அரசாங்கங்களுக்கிடையிலான மாநாடு 2018 டிசம்பர் 10-11 வரை

இந்தப் பிரிவு மேற்படி நிகழ்வில் இலங்கைத் தூதுக் குழுவின் பங்கேற்பினை வசதிப்படுத்தியது.

3.10. **எக்ஸ்போ 2025**

இலங்கை அரசாங்கம் 2018 நவம்பர் 23 இல் பாரிஸில் நடைபெற்ற Bureau Interantional des Expositions (BIE) இன் பொதுச் சபையின் 164 ஆவது அமர்வில், உலக எக்ஸ்போ 2025 கண்காட்சியை ஒசாக்கில் நடாத்துவதற்கான ஜப்பானின் விருப்பத்திற்கு ஆதரவளித்தது.

4. 2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப் பகுதியில் வழங்கப்பட்ட விசாக்கள் குறித்த புள்ளி விபரம்

பொருளாதார அலுவல்கள் பிரிவானது, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பு முதலியனவற்றின் அதிகாரிகளின் குறுகிய கால விஜயங்களுக்கான வீசா வழங்கலை ஒருங்கிணைத்ததுடன், பல்வேறு அரசாங்க முகவரமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டோர் தத்தம் விசாக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வசதியளித்தது.

விசா வகை							
குறுகியகால இலவச விசா		குறுகிய கால வியாபார விசா		பல்நுழைவு/ நீண்ட கால விசா		வதிவிட/ நுழைவு விசா பரிந்துரை	
யாருக்கு	விசாக்களின் எண்ணிக்கை	யாருக்கு	விசாக்களின் எண்ணிக்கை	யாருக்கு	விசாக்களின் எண்ணிக்கை	யாருக்கு	விசாக்களின் எண்ணிக்கை
ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	06	இலங்கை தேயிலை சபை	04	ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB)	04	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	02
உலக வங்கி (World Bank)	211	உலக புலமைச் சொத்து அமைப்பு (WIPO)	02			உலக வங்கி (World Bank)	40
ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பு (JICA)	69	இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சபைகளின் ஒன்றியம்(FCCISL)	18			ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு (JICA)	37
ஏனையவை	85					கொழும்புத் திட்டம்	16
						சர்வதேச நாணய நிதியம் (IMF)	04
						சர்வதேச நிதிக் கூட்டுத் தாபனம் (IFC)	11
						ஏனையவை	02

இலங்கை மாணவர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு கொழும்புத் திட்டத்தின் ஊடாக பல்வேறு குறுகிய மற்றும் நீண்டகால புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இத்தகைய புலமைப் பரிசில்கள் சிங்கபூர் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம், மலேசிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (UNESCAP) கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பு (KOICA) மற்றும் இந்திய அரசாங்கம் ஆகியவற்றினால் வழங்கப் பெற்றன.

கொழும்புத் திட்டம் தொடர்பான பிரத்தியேக விவகாரங்களும் இந்தப் பிரிவினாலேயே கையாளப்பட்டு வருகின்றன. பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகப் பிரிவு கொழும்புத் திட்டப் பேரவைக் கூட்டங்களின் 294 ஆவது மற்றும் 295 ஆவது அமர்வுகளில் கலந்து கொண்டது.

ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா பிரிவு

அரசியல் விவகாரங்கள் பிரிவானது (ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா) இரண்டு புவியியல் பிராந்தியங்களைக் கொண்டதுடன், ஐரோப்பாவிலுள்ள நாடுகளுடனும் பொது நலவாய சுயாதீன நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளைப் பேணிவருகிறது. இப்பிரிவின் பணிக்குறியிலக்கு இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கை நோக்கங்களால் வழிகாட்டப்படுகின்றது. அவையாவன:

- அரசியல், பொருளாதார, சமூக, பாதுகாப்பு, கலாச்சாரம் பற்றியதில் கூட்டுறவை ஊக்கப்படுத்தல், விரிவுபடுத்தல் மற்றும் பல்வகைப்படுத்தல்.

- இருதரப்பு வர்த்தகங்களையும் சுற்றுலாத்துறை உட்பட, வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் அதிகரிப்பதற்கான பொருளாதார இராஜதந்திரத்தை ஊக்கப்படுத்தல்.

- சமாதானம் மற்றும் இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளுக்கான உதவியை உறுதிசெய்தல்

- ஐரோப்பில் வசிக்கும் இலங்கையர்களுடனான நல்லுறவுகளை ஊக்கப்படுத்தல்.

- ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் இலங்கையின் பெயரையும் நலன்களையும் ஊக்கப்பிரச்சாரம் செய்தல்

- ஐரோப்பிய ஒன்றியத்திலும் பிற இருதரப்பு மற்றும் பிராந்திய மன்றங்களில் (ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் போன்றவை) இலங்கையின் நலன்களை ஊக்குவிப்பதற்கான இருதரப்பு ஆதரவை முடுக்கிவிடுதல். அணிசேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகளான, இரு பிராந்தியங்களிலுமுள்ள நாடுகளுடன் கூட்டுறவு, வறுமை, கால நிலை மாற்றம், வர்த்தக சமநிலையின்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற பொதுவான சவால்கள் பற்றியதில் பொதுவான நன்மைகளை ஊக்கப்படுத்தல்.

அ. ஐரோப்பா

பிராந்திய பரப்பெல்லை: 43

அல்பேனியா, அண்டோரா, ஒஸ்ரியா, பெல்ஜியம், பொஸ்னியா மற்றும் ஹெர்ஸகோவினா, பல்கேரியா, குரோஷியா, சைப்பிரஸ், செக் குடியரசு, டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜோர்ஜியா, ஜேர்மனி, கிறீஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லத்வியா, லீஷ்டண்டைன், லித்துவேனியா, லக்ஸம்பேர்க், மசிடோனியா, மோல்டா, மொனாக்கோ, மொண்ரெனேக்ரோ, நோர்வே, போலந்து, போத்துக்கல், ரொமேனியா, சன் மரீனோ, சேர்பியா, ஸ்லொவேக்கியா, ஸ்லவேனியா, ஸ்பெயின், சுவீடன், ஸ்விட்ஸர்லாந்து, ஹோலி சீ, நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் துருக்கி.

வதிவிட தூதரகங்கள்: 14

ஒஸ்ரியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி (பேர்லின் மற்றும் ஃபிராங்க்ஃபேர்ட்), இத்தாலி (ரோம் மற்றும் மிலான்), சைப்பிரஸ், நோர்வே, போலந்து, சுவீடன், நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், துருக்கி.

சமகால அங்கீகாரங்கள் : 23

பொஸ்னியா மற்றும் ஹெர்ஸகோவினா, சேர்பியா, ஸ்லவேக்கியா, வியான்னாவிலிருந்து ஸ்லவேனியா, ப்ரஸல்ஸிலிருந்து லக்ஸம்பேர்க், பாரிஸ் இலிருந்து ஸ்பெயின், ஸ்விட்ஸர்லாந்து, குரோஷியா, பேர்லினிலிருந்து மொண்டெனேக்ரோ, ஜெனீவாவிலிருந்து ஹோலி சீ, அல்பேனியா, கிரீஸ், மோல்டா, ரோமிலிருந்து சன் மரீனோ, வோர்சோவிலிருந்து ரொமானியா, டென்மார்க், எஸ்தோனியா, லத்வியா, ஸ்டொக்ஹோமிலிருந்து லித்துவேனியா, ஒஸ்லோவிலிருந்து பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்து, அங்காராவிலிருந்து ஜோர்ஜியா.

1.1 ஒஸ்ரியா

ஒஸ்ரியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:

- 12-16 மார்ச் 2018 இல் போதைப்பொருட்கள் ஆணைக்குழுவின் 61 ஆவது அமர்வில் கலந்துகொண்டமை, "நீடித்து நிற்கும் அபிவிருத்தி சகாப்தத்தில் உலக போதைப்பொருள் பிரச்சனையைக் கையாளுதல்" என்ற தலைப்பிட்ட நிகழ்வினை ஒழுங்குசெய்தமை.

- (IAEA) இற்கும் இலங்கைக்குமான கூட்டுறவை மீளாய்வு செய்வதற்காக, 14 மார்ச் 2018 இல் சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) பணிப்பாளர் நாயகம் திரு யுகியா அமானோ அவர்களின் இலங்கை விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விஜயத்தின்போது, திரு அமானோ அவர்கள், இலங்கை வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க, மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ அஜித் பெரேரா ஆகியோரைச் சந்தித்தார்.

- 2018 மே 14-18 இல் இடம்பெற்ற குற்றத்தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி பற்றியதிலான ஆணைக்குழுவின் 27 ஆவது அமர்வில், சட்டமா அதிபர் தலைமையில் இலங்கைக்குழு பங்குகொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், 16 மே 2018 இல், ஐக்கிய இராச்சியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட, '21 ஆம் நூற்றாண்டில் காவல்: சைபர் குற்றங்களைக் கையாள்வதில் ஐக்கிய இராச்சியத்தின் அணுகுமுறை' என்ற தலைப்பிலான நிகழ்வில் பங்குபெற்றியமை.

- வியன்னாவில் இடம்பெற்ற, உலகளாவிய கடல்சார் குற்றங்கள் செயற்றிட்டத்தில் (15 மே 2018) மாண்புமிகு பிரதம மந்திரியின் தலைமைப்பணியாளர் சாகல ரத்னாயக்க மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவம், இளைஞர் விவகாரம் மற்றும் தெற்கு அபிவிருத்தியின் அமைச்சரும் கலந்துகொண்டனர்.

- 5-6 ஜூன் 2018 இல் ஜனாதிபதியின் செயலாளர், ஆணையாளர் மற்றும் ஆணையகத்தின் குழு, 'மோசடியிலிருந்து விளையாட்டைப் பாதுகாத்தல்' பற்றியதிலான மாநாடு இடம்பெற்றது. 7 ஜூன் 2018 இல் அரசாங்கங்களுக்கிடையிலான சொத்து மீட்பு பற்றியதில் 12 ஆவது கூட்டம், 8 ஜூன் 2018 இல் மோசடிக்கு எதிரான ஐக்கியாடுகளின் மாநாடு பற்றியதிலான நாடுகளுக்கிடையிலான தொழில் குழுமத்தின் கூட்டம் இடம்பெற்றது

- இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்களை ஆராய்வதற்காக 23-25 மே 2018 இல் GmbH, Med-El GmbH, Odelga Med Ges. MBH and Hitzinger GmbH உள்ளிட்ட ஒஸ்ரிய கம்பனிகளின் பிரதிநிதிகள் இலங்கை வருகையின்போது, இக்குழு, நிதியமைச்சர் மங்கள சமரவீரவுடன் சந்தித்துப் பேசியது.

- 19-21 ஜூன் 2018 இல் இலங்கையில் நடந்த முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்டத்தில், சேர்பிய முதலீட்டாளர்கள்/ வணிகங்கள் பங்கெடுப்பதற்கு இலங்கையின் சேர்பிய கொன்சியுலர் நாயகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒழுங்குசெய்யப்பட்டது.

- தொழினுட்பக் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியைப் பெறுவதற்கான கடன் உடன்படிக்கை 3 ஜூலை 2018 அன்று, ஒஸ்ரிய தலைநகர் வியன்னாவிலுள்ள OFID தலமைச்செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது. இதில் நிதி மற்றும் பல்லூடக அமைச்சின் செயலாளர் டாக்டர் சமரதுங்க, இலங்கையில் சார்பிலும், சர்வதேச அபிவிருத்திக்கான நிதியத்தின் OPEC சார்பாக OFID இன் பணிப்பாளர் நாயகம் திரு சுலைமான் ஜே அல்-ஹேர்பிஷ் கைச்சாத்திட்டனர்.

- அணுசக்தி ஒழுங்காற்றுக் கழகம் மற்றும் அணு எரிசக்தி சபையின் இலங்கைப் பிரதிநிதிகளுடன் இணைந்து, 17-21 செப்டெம்பர் 2018 இல் நடைபெற்ற 62 ஆவது பொது மாநாட்டில் கலந்துகொண்டமை.

- போதைப்பொருட்கள் ஆணைக்குழுவுடன் 3 ஆவது அமர்வுகளுக்கிடையிலான சந்திப்பில் தேசிய அபாயகரமான போதைப்பொருட்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பங்களிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், 27 செப்டெம்பர் 2018 இல் 'மாற்றீடுச் சிக்கல்கள்: போதைப்பொருட்கள், மனித உரிமைகள், இளைஞர், சிறுவர், பெண்கள் மற்றும் சமுதாயம்' என்பதிலான அமர்வில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான உதவிப் பணிப்பாளர், திருமதி பபாசர வீரசிங்க, குழு உறுப்பினராகப் பங்கெடுப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டது.

- ஒஸ்ரியாவிலுள்ள இலங்கைத் தூதரகமும் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புச் சபையும் இணைந்து, ஒஸ்ரியாவின் மிகப்பெரும் விடுமுறை மற்றும் பயண நிகழ்ச்சியான Ferien – Messe Wien 2018 இல் கலந்துகொண்டன.
- தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வும், '*இலங்கை -இந்துசமுத்திரத்தின் முத்து*' என்ற தலைப்பிட்ட பயண திரைப்பட நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டன.

அபிவிருத்தியடைந்துவரும் நிகழ்ச்சித்திட்டங்கள்:

- இலங்கை மத்திய சுற்றாடல் சபையானது, ஐக்கிய நாடுகள் தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முன்மொழியப்பட்ட ஒரு முறைமையான கழிவு முகாமைத்துவத் திட்டத்தைப் பெறுவதற்கு ஆர்வம் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டமையால், ஒஸ்ரியாவிலுள்ள இலங்கைத் தூதரகமானது, இச்செயற்றிட்டம் பற்றிச் சம்பந்தப்பட்ட ஐ.நா அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளது.

- ஒஸ்ரியாவிலுள்ள இலங்கைத் தூதரகமானது; பிரித்தானியாவின் 'வின்ட்ஸர் நிதி'யிலிருந்து 2 மில்லியன் பவுன்ட்ஸ்களை, இலங்கையின் மனிதக்கடத்தல் வியாபாரத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவது பற்றி UNODC உடன் கலந்தாலோசித்துள்ளது. இச்செயற்றிட்டமானது, நியூ டெல்லியில் அமைந்துள்ள தெற்காசிய பிராந்திய அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன், தெற்காசியா 2018-2021 இற்கான UNODC பிராந்திய செயற்றிட்டத்தின் துணைச்செயற்றிட்டம் 1 இற்குள் அமைந்திருக்கும்.

.

1.2 பெல்ஜியம்

பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:

- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச்சபையுடன் இணைந்து, பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகம்; 01-04 பெப்ரவரி 2018 இல் பிரசல்ஸ் எக்ஸ்போவில் இடம்பெற்ற 60 ஆவது பிரசல்ஸ் விடுமுறைச் சந்தை 2018 இல் இலங்கைக் காட்சியரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தது. 12 இலங்கை பயண நிறுவனங்கள் இச்சந்தையில் பங்கெடுத்தன.

- 1-8 பெப்ரவரி 2018 இல் இடம்பெற்ற Brussels Press Club இன் கண்காட்சிக்கூடத்தில், இலங்கை சுற்றுலாப்பயணிகளைக் கவரும் வண்ணம், '*Land Like No Other* 'என்ற தலைப்பிலான புகைப்படக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

- Flanders Expo வில் 17 பெப்ரவரி 2018 இல் பெல்ஜியத்தின் படகுத்துறையில் நடக்கும் பாரிய சந்தையின் படகு முனையில், இலங்கை படகுத் தொழிற்றுறையின் ஊக்குவிப்புச் செயற்றிட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. அந்த ஊக்குவிப்பு நிகழ்வில், இலங்கை வர்த்தகத் திணைக்களத்தின் 04 உறுப்பினர்கள், பெல்ஜியம் படகோட்டிகள் சங்கங்கள், பெல்ஜியம் படகு கம்பனிகள் மற்றும் ஊடகத்தினர் கலந்துகொண்டனர்.

- ஜென்ட் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை வரைவேட்டுக்கான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. சமுத்திர பல்கலைக்கழகத்தில் ஒரு கடல்சார் ஆய்வகத்தை நிறுவுவதாற்கான தொழினுட்ப உதவியைப் பெறும் சாத்தியக்கூறுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, இரண்டு முதுநிலை விரிவுரையாளர்கள் பெப்ரவரி 2018 இல் பெல்ஜியத்திற்கு விஜயம் செய்தனர்.

- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபையுடன் இணைந்து, பிரசல்ஸிலுள்ள மெட்ரபோல் ஹோட்டலில், ஒரு சுற்றுலாப்பயணக் காட்சி நிகழ்வொன்று 15 மார்ச் 2018 இல் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில், இலங்கையின் பயண இயக்குனர்கள் பெல்ஜியம் சுற்றுலா இயக்குனர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏப்ரல் 2018 இல் ஒழுங்குசெய்யப்பட்ட 'ஓடு மற்றும் செங்கல்' உற்பத்தியாளர்களின் 11 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றுக்காக, பெல்ஜியம் செங்கல் உற்பத்தியாளர்கள் சங்கத்துடனான தொழினுட்ப வெளிப்பாட்டுச் செயற்றிட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இலங்கைக் குழுவானது பெல்ஜியத்தின் முன்னணி ஓடு மற்றும் செங்கல் உற்பத்தியாளர்களான Vandersanden NV, Wienerberger NV and Briqueteries de Ploegsteert இற்கு விஜயம் செய்தது. இதன் விளைவாக தாம் ஓடு மற்றும் செங்கல் உற்பத்தி பற்றியதில் புதிய தொழினுட்ப அறிவைப் பெற்றுக்கொண்டதாக இலங்கைக் குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

- இலங்கைத் தூதரகமும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் இணைந்து, ஏப்ரல் 2018 இல் பிரசல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய கடலுணவுக்கான உலகளாவிய கண்காட்சியில், இலங்கைக் கடலுணவுப் பொருட்களின் காட்சியரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சியில் 9 இலங்கை கடலுணவு ஏற்றுமதியாளர்கள் பங்கேற்றனர்.

- இலங்கைத் தூதரகமும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் இணைந்து, ஃப்ளாண்டேர்ஸ் முதலீடு மற்றும் வர்த்தக முகவர் மற்றும் பிரசல்ஸ் தொழில்முயற்சி வர்த்தகம் மற்றும் தொழிற்றுறை, பிரசல்ஸ் முதலீடு மற்றும் ஏற்றுமதி, வலோனியா ஏற்றுமதி முதலீட்டு முகவர் ஆகியோரின் பங்களிப்புடன் 17 மே 2018 இல் வணிக மன்றங்களை ஏற்பாடு செய்தது. இலங்கை சர்வதேச வர்த்தகத்திற்கான இராஜாங்க அமைச்சர், கௌரவ சுஜீவ சேனசிங்கவின் தலைமையிலான 33 உறுப்பினர் கொண்ட வர்த்தக குழுவொன்று இதில் கலந்துகொண்டது.

- 31 மே 2018 இல் எமிரேட்ஸ் விமான சேவையுடன் இணைந்த ஒரு சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வொன்று இடம்பெற்றது. இதில் பெல்ஜியத்தின் பயண மற்றும் சுற்றுலா இயக்குனர்கள் பங்கேற்றனர்.

- 131 ஆவது சுங்க கூட்டுறவுக் கழகத்தின் உலக சுங்க நிறுவத்தின் (WCO) அமர்வுகள் ஜூலை 2018 இல் பிரசல்ஸிலுள்ள WCO தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கைச் சுங்கப் பணிப்பாளர், திருமதி எஸ் எம் சார்ஸ் அவர்கள் தலைமையிலான இலங்கைக் குழு பங்குபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

- 14-20 ஜூலை 2018 இல் பெல்ஜியம் கூட்டாட்சிப் பாராளுமன்றத்திலுள்ள, பெல்ஜியம் – இலங்கை பாராளுமன்ற நட்புரிமைக்குழுவின் 06 உறுப்பினர்களின் இலங்கைக்கான விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டது. இக்குழுவுக்கு, அதன் தலைவர் செனட்டர், திருமதி பெட்ரா டி சட்டர் தலைமை வகித்தார். இவ்விஜயத்தின்போது, அவர்கள் இலங்கைப் பிரதமர் மற்றும் உயர் அமைச்சரவை அமைச்சர்களைச் சந்தித்தனர்.

- பெல்ஜியம் அரசாங்கமானது, தனது ஏற்றுமதிக்கடன் திட்டம் மூலமாக, கொலன்னா மற்றும் பலாங்கொட நீர் வழங்கல் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தல், ஏழு புகையிரதப்பாதைப் பாலங்களைப் புதுப்பித்தல் மற்றும் புத்தள – மொனராகல நீர் வழங்கல் செயற்றிட்டம் போன்றவற்றிற்கு FINEXPO உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

- செப்டெம்பர் 2018 இல், மூலிகைத் தேயிலையை ஊக்கப்படுத்துவதற்காக, FADNA தேயிலை பிரதிநிதிகளுடன் வணிக ஒன்றிணைப்புக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

1.3 சைப்பிரஸ்

சைப்பிரஸிலுள்ள இலங்கை உதவித்தூதரக அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:

- சைப்பிரஸிலுள்ள புலம்பெயர் இலங்கையர்களுக்கான கொன்சியுலர் சேவையை மேம்படுத்தவும் அந்நாட்டுடனான பொருளாதார இராஜதந்திரத்தை விரிவாக்கவுமென, நவம்பர் 2017 இல் சைப்பிரஸில் ஒரு உதவித்தூதரகம் திறந்துவைக்கப்பட்டது.

- சைப்பிரஸ் தொழில் அதிகாரசபைகளுடன்; விருந்தோம்பல், சுகாதாரம் மற்றும் கட்டுமானத்துறைகளில் திறமை வாய்ந்த இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்வது பற்றிய கலந்துரையாடல்களை கொன்சியுலர் நாயகம் நடத்தினார்.

- சைப்பிரஸிலுள்ள பயண முகவர்கள் மற்றும் சுற்றுலாத்துறை அதிகாரிகளுடன், இருதரப்பு சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒத்துழைப்பு பற்றியதில் ஏற்பாடு செய்யப்பட்டது.

1.4 செக் குடியரசு

ஒஸ்ரியாவில் சமகால அங்கீகாரம் பெற்ற செக் குடியரசுக்கான இலங்கைத் தூதரக நடவடிக்கைகள்:

- இலங்கை அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கும், செக் குடியரசின் தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு பற்றிய உடன்படிக்கையொன்று 7 பெப்ரவரி 2018 இல் கைச்சாத்திடப்பட்டது.

- கௌரவ வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன அவர்கள் 15-17 மே 2018 இல் செக் குடியரசுக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது அவர், செக் குடியரசின் துணைப் பிரதமர் திரு மார்ட்டின் ஸ்ரொப்னிக்கி, வெளிநாட்டமைச்சர், செக் வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்கள், பிராக் நகர மேயர் ஆகியோருடன் இருதரப்பு சந்திப்புக்களை மேற்கொண்டார்.

- செக் பாராளுமன்ற செனட் சபையின் தலைவரான மிலான் ஸ்டெக் தலைமையில் குழுவொன்று, செக் வணிக குழுவுடன் இணைந்து, 20-25 செப்டெம்பர் 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்தது.

1.5 டென்மார்க் :

சுவீடனில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள டென்மாக் இராச்சியத்திற்கான இலங்கைத் தூதரக நடவடிக்கைகள்:

- சுவீடனிலுள்ள இலங்கைத் தூதரகமும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபையும் இணைந்து, இலங்கை பயண முகவர்களுடன் சேர்ந்து, 'FERIE FOR ALLE', என்ற டென்மார்க் பயணக் காட்சியரங்கு ஒன்றை 23- 25 பெப்ரவரி 2018 இல் நடத்தியது.

1.6 எஸ்தோனியா

சுவீடனில் சமகால அங்கீகாரம்பெற்றுள்ள எஸ்தோனியா நாட்டுக்கான இலங்கைத் தூதரக நடவடிக்கைகள்:

- எஸ்தோனிய வெளிநாட்டமைச்சின் அழைப்பின்பேரில், 23 பெப்ரவரி 2018 இல் எஸ்தோனிய குடியரசின் தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக சுவீடனிலுள்ள இலங்கைத்தூதர் எஸ்தோனியாவுக்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின்போது, தூதுவர், எஸ்தோனிய அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து, எதிர்கால இருதரப்பு ஒத்துழைப்புக்காக தொழினுட்பம், சைபர் பாதுகாப்பு மற்றும் விருந்தோம்பல் துறைகள் பயிற்சி பற்றி கலந்துரையாடினார்.

- சுவீடனிலுள்ள இலங்கைத் தூதரகம், -11 பெப்ரவரி 2018 இல் எஸ்தோனியாவில் *Tourest 2018*" இல் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சுற்றுலா ஊக்குவிப்புச் சபையை ஏற்பாடு செய்தது.

1.7 பின்லாந்து

நோர்வேயில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள, பின்லாந்து நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள் :

- பின்லாந்து அரசாங்கத்தின் பொருளாதார அலுவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு பிரதி அமைச்சரும் அரசாங்க செயலாளருமான, கௌரவ பெற்றி பெல்டொனென், மற்றும் பின்லாந்து வணிக பிரதிநிதிகள் குழு 10-13 ஜூன் 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடு ஒழுங்குசெய்யப்பட்டது. இவ்விஜயத்தின்போது பின்வரும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன:

i. *சுகாதாரத்துறையில் ஒத்துழைப்புக்காக, இலங்கை சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுக்கும், பின்லாந்தின் சமூக விவகாரம் மற்றும் சுகாதார அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை*

ii. *டிஜிட்டல் மயமாக்கல் துறையில் ஒத்துழைப்பு பற்றியதில் இலங்கை தொலைத்தொடர்பாடல், டிஜிட்டல் உட்கட்டுமானம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கும், பின்லாந்து போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை*

iii. *தொழிற்கல்வி மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் பயிற்சி பற்றியதில் இலங்கை கல்வியமைச்சுக்கும் பின்லாந்து கல்வி மற்றும் கலாச்சார அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை*

- இலங்கைக்கும் பின்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு அரசியல் ஆலோசனைகளின் முதலாவது அமர்வு, கொழும்பு வெ.அ.அமைச்சில் 1 அக்டோபர் 2018 இல் இடம்பெற்றது. இலங்கைக் குழுவுக்கு மேலதிக செயலாளர் (இருதரப்பு அலுவல்கள்) திரு சுமித் நாக்கந்தல அவர்களும் பின்லாந்துக் குழுவுக்கு பின்லாந்தின் அமெரிக்கா மற்றும் ஆசியாவுக்கான வெ.அமைச்சின் பணிப்பாளர் நாயகம், தூதுவர் கிம்மோ லஹ்டெவிர்தா அவர்களும் தலைமை தாங்கினர்.

- கலந்துரையாடல்கள் பெரும்பாலும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு பற்றியதாகவும் கல்வி (தொழிற்பயிற்சி), சுகாதாரம், புதுப்பிக்கத்தக்க சக்தி, தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல்படுத்தல் பற்றியதில் முன்னேற்றம் பற்றியும் மற்றும் e-government, முக்கிய தொடர்பாடல்கள், சைபர் பாதுகாப்பு, காலநிலை மாற்றமும் அதைக் கட்டுப்படுத்தலும், காடு, பாதுகாப்பு, சுற்றுலாத்துறை மற்றும் 'ஸ்மார்ட் நகர அபிவிருத்தி போன்ற துறைகளில் இணைந்த செயற்றிட்டங்கள் பற்றியும் இருந்தன.

1.8 பிரான்ஸ்

பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

- பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தில் ஏப்ரல் 2018 இல் இடம்பெற்ற பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய மாநாட்டில் நிதி இராஜாங்க அமைச்சர், கௌரவ எரான் விக்ரமரத்னவும் குழுவினரும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. பயங்கரவாதத்தை தடுக்கும் மூலங்கள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், பற்றியதில் சிறந்த பயிற்சிகள் தொடர்பாக சர்வதேச விற்பன்னர்கள் கலந்துகொண்ட இந்த மாநாடு இரண்டு நாட்கள் நடைபெற்றது.

- "Salon Mondial du Tourism" இன் 43 ஆவது பதிப்பு 15-18 மார்ச் 2018 இல் பாரிசில் ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் இலங்கையின் பங்கெடுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

- 'பாரம்பரியத்தைப் பாதுகாத்தலில் ஒத்துழைப்பு' என்பதில் தொல்லியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாச்சார நிதியம் பிரதிநிதித்துவப்படுத்தும் பயிற்சி செயற்றிட்டம்

ஒன்று, 19 மார்ச் இலிருந்து 5 ஏப்ரல் வரையில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு பிரான்ஸின் கலாச்சார அமைச்சு அனுசரணை வழங்கியது.

- இலங்கை எழுத்தாளர் அஷோக் ஃபெரியின் புத்தக அறிமுகம் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள், யுனெஸ்கோ தலைமையகத்தில் 3 ஏப்ரல் 2018 அன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் இராஜதந்திர படை, வணிகச் சமூகத்தினர் மற்றும் ஊடகத்தினர் கலந்துகொண்டனர்.

- ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களால் நடத்தப்பட்ட இனங்களுக்கிடையேயான பதட்ட நிலையைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் மற்றும் சமரச செயன்முறைகள் பற்றியதில் ஏற்பட்ட மேம்பாடு பற்றியதில், பிரான்ஸில் வசிக்கும் இலங்கையர்களின் பிரதிநிதிகளுக்கும், உள்ளூராட்சி அரசாங்கம் மற்றும் மாகாண சபை அமைச்சர் கௌரவ ஃபைசர் முஸ்தபா அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று 17 ஏப்ரல் 2018 இல் ஒழுங்குசெய்யப்பட்டது.

- 24 மே 2018 அன்று சர்வதேச ஐ.நா வெசாக் தினத்தை கொண்டாடுவதற்காக, பாரிஸிலுள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் ஒரு நாள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் உயர்கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர், கௌரவ விஜயதாச ராஜபக்ச விருந்தினராக கலந்துகொண்டார். இந்நிகழ்வில், திறப்பு விழா, குழு கலந்துரையாடல் மற்றும் இலங்கை பாரம்பரிய நடன கலாச்சார காட்சியுட்பட பிற ஆசிய நாடுகளின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் 1200 பேர் கலந்துகொண்டனர்.

- பிரான்ஸ் செனட் சபையின் வெளிநாட்டு அலுவல்கள், பாதுகாப்பு மற்றும் இராணுவ குழுவின் உதவித் தலைவர், திருமதி ஹெலன் கொன்வே-மௌரட், 5-8 ஜூன் 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

- பாரிசிலுள்ள சர்வதேச பௌத்த நிலையத்துடன் இணைந்து, 22-23 ஜூன் 2018 இல் 'இலங்கை தினம்' ஒருங்கிணைக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

- பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர், கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் 30 ஜூன் இலிருந்து 6 ஜூலை 2018 வரையான பிரான்ஸ் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. MEDEF International (பிரான்ஸ் வணிக கூட்டமைப்பு) இல் ஒழுங்குசெய்யப்பட்ட முதலீட்டு மன்றத்தில் 15 பிரான்ஸ் கம்பனிகள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டின. இக்கூட்டங்களுக்குப் பின் SNCF (பிரான்ஸ் புகையிரத கம்பனி) பெருநகர அபிவிருத்திசெயற்றிட்டம் பற்றி ஆய்வு செய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்தது.

- இரு நாடுகளுக்கிடையேயான கூட்டுறவு, வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மற்றும் 'பிஸ்னஸ் பிரான்ஸ்' ஆகியவற்றுக்கிடையேயான முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையானது, கொழும்பில் ஜூலை 2018 இல் கைச்சானது.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து, Texworld Apparel Sourcing, Paris – 2018 இல் பங்குபற்றியமை. 17-20 செப்டம்பர் 2018 இல் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆறு ஆடை ஏற்றுமதியாளர்களும் இரண்டு வடிவமைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.
- பாரிசில் 21-23 செப்டெம்பர் 2018 இல் இடம்பெற்ற 'நுகர்வு கிராமம்' நிகழ்வில் இலங்கையின் பங்கெடுப்பு ஒருங்கிணைக்கப்பட்டது.

- பாரிசின் 25-28 செப்டெம்பர் 2018 இல் நடைபெற்ற 'IFTM TOP RESA 2018' இல் இலங்கையின் பங்கெடுப்பு ஒருங்கிணைக்கப்பட்டது.

- 3-17 அக்டோபர் 2018 இல் யுனெஸ்கோ நிறைவேற்றுச் சபையின் 205 ஆவது அமர்வில், கல்வியமைச்சர், கௌரவ அகில விராஜ் காரியவசம் தலைமையிலான குழு கலந்துகொண்டது.

- பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர், கௌரவ நவின் திஸநாயக்க, விவசாய இராஜாங்க அமைச்சர், கௌரவ வசந்த அலுவிஹார ஆகியோர், 21-25 அக்டோபர் 2018 இல் நடைபெற்ற 'SIAL சர்வதேச உணவு மற்றும் குடிபான கண்காட்சி" இல் கலந்துகொண்டனர்.

- 26 நவம்பரிலிருந்து 1 டிசம்பர் வரையில் இடம்பெற்ற, புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் பற்றியதிலான, அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் 13 ஆவது அமர்வில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

- பின்வரும் ஊடக விஜயங்கள் மற்றும் இலங்கையில் நடத்தப்பட்ட படப்பிடிப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன:

  - "Off Roads" சுற்றுலா ஆவணப்படம்
  - "One Planet" வன ஜீவராசிகள் ஆவணப்படம்
  - "Invitation au voyage" பற்றியதில் ARTE France
  - "Faut Pas Rêver" பற்றியதில் TV3 கலாச்சார நிகழ்ச்சி
  - இலங்கையில் வருடாந்த மாநாட்டை நடத்துவதற்கு முன்பாக ஒரு பூர்வாங்க சுற்றுலாவாக, ஸ்பானிய பயண முகவர்கள் சங்கம் (CEAV) இலங்கைக்கு விஜயம் செய்தது.

- பின்வரும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன:

  - 10-15 மார்ச் 2018 இல் 43 ஆவது பிரிவான, "Salon Mondial du Tourism"
  - 21-23 செப்டெம்பர் 2018 இல் பாரிசில் 'நுகர்வோர் கிராமம்'
  - 25-18 செப்டெம்பர் 2018 இல் பாரிசில் IFTM TOP RESA 2018
  - 27-29 நவம்பர் 2018 இல் ஸ்பெயின், பார்சலோனாவில் IBTM World 2018
  - 3-7 டிசம்பர் 2018 இல் பிரான்ஸின் கான்ஸ் நகரில் ILTM Luxury Travel Show 2018
  - 20-30 நவம்பர் 2018 இல் வருடாந்த ஸ்பானிய பயண முகவர் சங்கத்தின் வணிக-வணிக அமர்வு..

1.9 ஜோர்ஜியா

துருக்கியில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள, ஜோர்ஜியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- 6-20 ஜூலை 2018 இல் இடம்பெற்ற திறந்த அரசப் பங்காளர் கருத்துக்களம் இலங்கை ஜனாதிபதி கலந்துகொள்வதற்க்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

- ஆகஸ்ட் 2018 இல் ஜோர்ஜியா மற்றும் இலங்கை சுற்றுலா இயக்குனர்களுக்கிடையிலான வணிக-வணிக கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- 3-6 செப்டெம்பர் 2018 இல் ஜோர்ஜிய அரச இராணுவ விஞ்ஞான தொழினுட்ப நிலையத்தின் (DELTA) இரு உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து, இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு, பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சின் முதுநிலை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

- இலங்கையை சுற்றுலாக் கேந்திரமாக்குவதை ஊக்கப்படுத்தும் நோக்குடன், ஜோர்ஜியாவின் முன்னணி சுற்றுலா இயக்குனர்களுடன் கலந்தாலோசனை.

- நாடுகளுக்கிடையிலான புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாத்தல் தொடர்பான ஐ.நாவின் 2018-2022 ஆவது தவணைக்கான இலங்கையின் அபேட்சகத்திற்கான துருக்கியின் ஆதரவு பெறப்பட்டது.

- இலங்கையில் ஜோர்ஜியாவின் கௌரவ துணைத்தூதரகம் ஸ்தாபிக்கப்பட்டது.

1.10 ஜேர்மனி

ஜேர்மனியிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:

- CKDU பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்காக பேராசிரியர், கலாநிதி எக்டார்ட், 14 பெப்ரவரி 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்தார். இலங்கைக்கு இது சம்பந்தமான உதவியை ஜேர்மனி அரசாங்கம் செய்வது பற்றியும் ஆராயப்பட்டது.

- இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், 18-19 பெப்ரவரி 2019 இல் ஜேர்மனிக்கு விஜயம் செய்து, மீள- அனுமதித்தல், நாடு கடத்தல் பற்றி கலந்துரையாடினார்.

- 18-28 ஜனவரி 2018 இல் ஜேர்மனிக்கு விஜயம் செய்த, விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர், கௌரவ வசந்த அலுவிகார, சர்வதேச பசுமை வாரத்தில் பங்குபற்றினார்.

- இருதரப்பு வர்த்தக முதலீடுகளை மேம்படுத்துவதற்காக 28 பெப்ரவரி 2018 இல் ஜேர்மன் தொழிற்றுறை மற்றும் வர்த்தக குழு ஒன்று நிறுவப்பட்டது.

- 6-10 மார்ச் 2018 இல் சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர், கௌரவ ஜோன் அமரதுங்க, பேர்லினுக்கு விஜயம் செய்தார்.

- மெஸ், பேர்லினில் இடம்பெற்ற சர்வதேச பயண வர்த்தக காட்சி - International Tourismusbörse (ITB) - ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 7-11 மார்ச் 2018 இல் இடம்பெற்ற சுற்றுலாத்துறை போட்டியில் இலங்கை காட்சியரங்கம் 7 ஆம் பரிசை வென்றது.

- ஜேர்மனி கல்விப் பரிமாற்ற சேவைக்கும் (DAAD) இலங்கை தேசிய விஞ்ஞான நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

- 17 ஏப்ரல் 2018 இல் இடம்பெற்ற பேர்லின் சக்தி மாறல் பேச்சுவார்த்தையில் பங்குகொள்வதற்காக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், கௌரவ திலக் மாரப்பன ஜேர்மனிக்கு விஜயம் செய்தார். இவ்விஜயத்தின்போது, ஜேர்மன் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ நீல்ஸ் அன்னென் அவர்களைச் சந்தித்துப்பேசினார்.

- 16-18 மே 2018 இல் இலங்கை பிரதம மந்திரியின் பிரதான செயலாளரும் இளைஞர் விவகார அமைச்சருமான கௌரவ சாகல ரத்னாயக்க, ம்யூனிச்சுக்கு விஜயம் செய்தார்.

- 3 ஜூலை 2018 இல் 'இலங்கையில் சூரிய சக்தி மூலம் கட்டிடங்களுக்குச் சுய வழங்கல்' என்ற தலைப்பிலான சூரிய சக்தி மாநாடு, OAV இனால் ஏற்பாடு செய்யப்பட்ட்துட். இதில் இலங்கைத் தூதுவர் சிறப்புரையாற்றினார்.

- 3-6 ஆகஸ்ட் 2018 காலப்பகுதியில், ஜேர்மனியின் ஹம்பேர்க், டஸில்டோர்ஃப், பிராங்க்ஃபேர்ட் மற்றும் ம்யூனிச் நகரங்களில் சுற்றுலா பிரச்சார நிகழ்வுகள் இடம்பெற்றன.

- 24-26 செப்டெம்பர் 2018 இல் ஜேர்மனியில் ஒழுங்குசெய்யப்பட்ட வணிக கருத்துக்களத்தில் பங்கெடுப்பதற்காக, இலங்கை அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், கௌரவ மலிக் சமரவிக்கிரம விஜயம் செய்தார்.

- 24-26 செப்டெம்பர் 2018 காலகட்டத்தில், இலங்கை அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், கௌரவ மலிக் சமரவிக்கிரமவின் ஜேர்மன் விஜயத்தின்போது, ஜேர்மன் வர்த்தக சம்மேளனம் மற்றும் தொழிற்றுறைக் குழு மற்றும் இலங்கை முதலீட்டுச்சபையுடன் முதலீட்டு/பொருளாதர கருத்துக்களம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- இலங்கைத்தூதரகத்தில், இலங்கைத் திரைப்படங்கள் பற்றிய ஒரு பேச்சுவார்த்தையும், சிங்களத் திரைப்படம் 'இர ஹண்டயட்ட' திரையிடலும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் இயக்குனரும் தயாரிப்பாளருமான திரு பெனெட் ரத்னாயக்க கலந்துகொண்டு, அத்திரைப்படத்தின் பின்னணி மற்றும் கருத்தம்சம் பற்றி விளக்கினார்.

- இலங்கையின் பாரம்பரிய நடனத்தின் அம்சங்களைக் காட்சிப்படுத்தும் வண்ணம், தூதரின் வதிவிடத்தில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தூதர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான ஒரு கலாச்சார மாலை நிகழ்வொன்று ஒழுங்குசெய்யபட்டது.

- இலங்கைக்கும் ஜேர்மனிக்குமான 65 வருடகால இராஜதந்திர உறவுகளைக் கொண்டாடும் முகமாக, இராஜதந்திர சமுதாயத்தினர், இலங்கையர் மற்றும் ஜேர்மானியர் கலந்துகொண்ட சைக்கிள் பேரணியொன்று, பேர்லின் நகரத்திலிருந்து தூதரகம் வரையில் இடம்பெற்றது.

- பேர்லினிலுள்ள பௌத்த விகாரைக்கான 'அதவிசி' புத்தர் சிலையொன்றை, தூதரகம் சடங்கு சம்பிரதாயங்களுடன் வழங்கியது.

- 30 செப்டெம்பர் 2018 இல், பேர்லினிலுள்ள ஃப்ரொனொ பௌத்த விகாரைக்கு, ஸ்ரீ மஹா போதியின் மரக்கன்று ஒன்று சம்பிரதாயங்களுடன் கையளிக்கப்பட்டது.

- 2016 இல் கையெழுத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ், முதியோர் பராமரிப்பு தாதிகளை இலங்கையிலிருந்து ஆட்சேர்ப்பு செய்வது பற்றிய ஜேர்மன் வெளிநாட்டு அலுவலகத்திற்கும் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சக்தி அமைச்சுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் தொடர்ந்தன.

- ஜேர்மனியில் வர்த்தக சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேயிலைச் சபை, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வைரம் மற்றும் நகை அதிகாரசபை மற்றும் வர்த்தக திணைக்களம் ஆகியவை பங்கெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இலங்கையின் 16 வர்த்தக சந்தைகள் ஜேர்மனியில் இடம்பெற்றன. 19 ஜேர்மன் சந்தைகள் இலங்கை ஏற்றுமதியாளர்கள் மத்தியில் ஊக்கப்படுத்தப்பட்டது. இதில் 400 வருகையாளர்கள்/ கண்காட்சியாளர்கள் கலந்துகொண்டனர். ஜேர்மனியின் 4 வணிக குழுவினர் இலங்கைக்கும், இலங்கையின் 17 வணிக குழுவினர் ஜேர்மனிக்கும் விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- ஃபிராங்க்போர்ட்டிலுள்ள இலங்கைத் துணைத்தூதர்; இலங்கை அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரின் விஜயத்தையும், ஜேர்மனியின் வர்த்தகம் மற்றும் தொழிற்றுறைச் சம்மேளனம் மற்றும் ஜேர்மன் ஆசிய பசுபிக் வணிக கூட்டுறவின் (OAV) உதவியுடன் ஃபிராங்க்போர்ட், ஹம்பேர்க் மற்றும் பேர்லினில் முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்தார். OAV மற்றும் ஜேர்மன் பொருளாதாரம் மற்றும் சக்தி அமைச்சின் உதவியுடன், வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான தொடர் நிகழ்வுகள் இரண்டு ஏற்பாடு செய்யப்பட்டன.

- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புச் சமையினால் ஒழுங்குசெய்யப்பட்ட சுற்றுலா நிகழ்வுகள், ஹம்பேர்க், டஸில்டோர்ஃப், பிராங்க்ஃபேர்ட் மற்றும் ம்யூனிச் நகரங்களில் இடம்பெற்றன.

- இளைஞர் பரிமாற்ற செயற்றிட்டத்தின் கீழ், ஜேர்மனியின் கசல் பல்கலைக்கழகத்தின் 05 மாணவர்கள் இலங்கைக்குச் செல்வதற்கான ஒழுங்குகள் துணைத்தூதரகத்தினால்

மேற்கொள்ளப்பட்டது. இதுபோல இலங்கை மாணவர்களும் கசல் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றன.

1.11 இத்தாலி

இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:

- மிலானிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர், மிலான் Prefetto Luciana Lamorgese ஐ 16 ஜனவரி 2918 சந்தித்து, மிலான் பெருநகர ஆட்சிக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுறவை மேம்படுத்தல் பற்றிக் கலந்துரையாடினார்.

- 9 பெப்ரவரி 2018 இல் இலங்கைத் தூதரகம், '*Flavours of Sri Lanka*' என்ற தலைப்பில் ஒரு சிறப்பு கலாச்சார நிகழ்ச்சியை ரோமின் Westin Excelsior ஹோட்டலில் ஒழுங்குசெய்தது. இதில் இலங்கை அரசாங்க நடனக்குழு பங்குபற்றியது. அத்துடன் 10-15 பெப்ரவரி 2018 இல் சிறப்பு இலங்கை உணவு வாரம் ஒன்று, கண்டி அமயா ஹோட்டலின் இரண்டு முதுநிலை சமையல்காரர்களின் பங்களிப்புடன் Westin Excelsior இலுள்ள 'டோனி' உணவகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியானது, இத்தாலியர்களிடையே இலங்கை உணவுகளையும் கலாச்சாரத்தையும் ஊக்கப்படுத்தியது.

- தொடர் வர்த்தக மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. 9-15 பெப்ரவரி 2018 இல் ரோமில் இலங்கை உணவு வாரம், 10 பெப்ரவரியில், ஃப்ளோரன்ஸில் கலாச்சார இரவு, 11-13 பெப்ரவரியில் மிலானில் சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக் கண்காட்சி. இதில் 20 பயணக்கம்பனிகள் கலந்துகொண்ட வணிக-வணிக சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- பெப்ரவரி 2018 இல் இடம்பெற்ற 41 ஆவது IFAD ஆளும் கழகத்தின் ஆலோசனைக்கூட்டத்தில் இலங்கை கலந்துகொண்டது. அத்துடன், WFP's இன் நிறைவேற்றுச் சபைக்கூட்டத்திலும், முறையே பெப்ரவரி மற்றும் ஜூன் 2018 இல் இடம்பெற்ற வருடாந்த நிறைவேற்றுச் சபையின் வருடாந்த அமர்விலும் இலங்கை பங்குபற்றியது. 2018-2022 காலத்திற்கு இலங்கைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட WFP's இன் நாட்டு தந்திரோபாயத் திட்டத்திற்கு இணைவாக, இலங்கையில் பாடசாலை உணவு மற்றும் ஊட்டச்சத்து செயற்றிட்டத்திற்கு நிதி சேர்ப்பதற்கான தனியார் துறை பங்களிப்பை தூதரகம் ஊக்குவித்தது.

- இத்தாலிய வெளியுறவு அமைச்சர் மற்றும் இத்தாலியில் சமகால அங்கீகாரமுள்ள சைப்பிரஸ், கிரீஸ், அல்பேனியா மற்றும் மோல்டா தூதுவர்களுடனும் இலங்கைத் தூதுவருக்கிடையிலான கலந்துரையாடல் ரோமில் 28 பெப்ரவரி – 7 மார்ச் 2018 இல் இடம்பெற்றது. நாடுகளுக்கிடையிலான புலப்படாக் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாத்தல் தொடர்பான ஐ.நாவின் 2018-2022 ஆவது தவணைக்கான குழு IV இன் இலங்கையின் அபேட்சகத்திற்கான இத்தாலியின் ஆதரவு கோரப்பட்டது. இதுபற்றியதில் உறுதியான எதிர்வினைகள் பெறப்பட்டன.

- நேப்பிள்ஸில் இலங்கைக்கான கௌரவ துணைத்தூதராக திரு காமைன் கப்பாசோ 16 மார்ச் 2018 இல் நியமிக்கப்பட்டார்.

- 20 மார்ச் 2018 இல் மிலான் வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மிலானிலுள்ள பொருளாதார இராஜதந்திரத்தின் பங்கு' பற்றியதிலான கருத்தரங்கில் இலங்கை துணைத்தூதுவர் கலந்துகொண்டார். அத்துடன், குழு கலந்துரையாடலிலும் கலந்துகொண்டு, இலங்கையில் முதலீடு /வணிக வாய்ப்புகள் பற்றி கருத்துரைத்தார்.

- 22 மே 2018 இல் டூரின் வர்த்தக சம்மேளனத்தில் இலங்கை நாடு பற்றிய முன்வைப்பு நடத்தப்பட்டது. இதில் வர்த்தக அமைச்சர் தனித்தனியாக இத்தாலிய முதலீட்டாளர்களையும், இலங்கை ரப்பர் உற்பத்திப்பொருட்கள், உணவு, மசாலா, கயிறு மற்றும் பயணப்பொருட்கள் வாங்குவோரையும் சந்தித்தார்.

- மிலானிலுள்ள இலங்கை துணைத்தூதர், இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், கௌரவ விஜேவர்த்தனவின் விஜயத்தை ஏற்பாடு செய்தார்.-30 மே – 4 ஜூன் 2018.

- இத்தாலியின் ஹூப்லி பதிப்பகத்தினர், இலங்கை துணைத்தூதரகத்துடன் இணைந்து, மிலானில் புகழ்பெற்ற இத்தாலிய பத்திரிகையாளர் லூக்கா நொவெலி எழுதிய "IL PONTE DI ADAMO" (The Bridge of Adam (இராமர் பாலம்) என்ற தலைப்பிட்ட புத்தகத்தை house of Manzoni இல் வெளியிட்டனர். -21 ஜூன் 2018.

- இலங்கையிலிருந்து 13 உறுப்பினர்கள், மிலானில் உணவு பதப்படுத்தல் மற்றும் பக்கெட்டுக்களில் அடைத்தல் பற்றியதிலான ஒரு ஆய்வுச் சுற்றுலா மேற்கொள்வதற்கு இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்தது. 18-22 ஜூன்.

- உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் (FAO) பணிப்பாளர் நாயகத்தின் அழைப்புக்கு இணங்கி, மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 14-16 ஜூலையில் இத்தாலிக்கு விஜயம் செய்தார். அப்போது அவர், ரோமில் அமைந்துள்ள FAO தலைமை அலுவலகத்தில் 16-20 ஜூலை 2018 இல் இடம்பெற்ற 6 ஆவது உலக வன வாரத்தின் 24 ஆவது அமர்வில் உரையாற்றினார்.

- சைப்பிரசில் ஒரு துணைத்தூதரக அலுவலகத்தை நிறுவுவது தொடர்பான, இலங்கைத் தூதரகத்தின் திட்டத்தினையடுத்து, நிக்கோசியாவில் புதிய துணைத்தூதரக அலுவலகத்தை முன்னதாகவே திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இலங்கைக்கான புதிய துணைத்தூதராக நியமிக்கப்பட்டவர், 19 செப்டெம்பர் 2018 இல் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

- தூதரகம் தொடர்ந்தும் குழுச்சந்திப்புக்கள், முறைசார்ந்த மற்றும் முறைசாரா கருந்தரங்கங்கள், FAO கழகம் போன்றவற்றில் கலந்துகொண்டு, மரபணு மூலவளங்கள், பல்லுயிர், காடுகள், காலநிலை மாறுதல்கள், பாலின சமத்துவம், உணவுப்பாதுகாப்பு, ஊட்டச்சத்து, தாவர சுகாதாரம் நடவடிக்கைகள், உரங்கள் பற்றியதிலான நடத்தைமுறை, நீடித்து நிற்கும் மண், உலகளாவிய ரீதியில் முக்கியமான விவசாய பாரம்பரிய முறைகள் (GIAHS), மீன்பிடித்துறை, மீன்வளர்ப்பு, சர்வதேச தேயிலை தினம் உட்பட்ட பண்டங்கள்

பற்றிய பிரச்சனைகள் FAO இனால் நிதியளிக்கப்படும் கள விஜயங்கள், ரோமிலுள்ள ஐ.நா நிறுவனங்கள் மற்றும் அதன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஒன்றிணைத்தல், ஐ.நா சீரமைப்புகள், தெற்கு-தெற்கு கூட்டுறவு, ஆசிய பிராந்திய மாதாந்த குழுக்கூட்டம் மற்றும், G77 மற்றும் சீனா சபை மற்றும் வருடாந்தர சந்திப்புக்கள் போன்றவை.

- இலங்கையின் படகு கட்டும் துறையில் இணைந்து முயற்சிகள் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, இலங்கை வணிக்க்குழுவினர் 6 பேரின் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தனியார் துறைக்குழுவினர், 22-26 செப்டெம்பர் 2018 இல் ஜெனோவா மற்றும் மிலானுக்கு விஜயம் செய்து ஜெனோவா படகுக்காட்சி, இத்தாலிய கடல்சார் தொழிற்றுறைக் கூட்டமைப்பு, போன்றவற்றுடன் ஊடாடினர்.

- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து மிலானில் 25-27 செப்டெம்பர் 2018 இல் இலங்கைக் காலணி உற்பத்தியாளர்களின் சந்தைக் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டது.

- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புச் சபையானது (SLTPB, இத்தாலியில் வெளிப்புற சுற்றுலாத்துறை தொடர் நிகழ்வுகளை நடத்தி விளம்பரப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு உதவியது. இத்தாலியின் இரண்டு முன்னணி பயண சஞ்சிகைகளில் 2 பயண விளம்பரங்களை SLTPB பிரசுரிப்பதற்கு உதவி செய்யப்பட்டது.

- இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகம், இத்தாலிய வெளியுறவு அமைச்சுடனும் உலகளாவிய செயற்பாட்டுக் கூட்டமைப்புடனும் இணைந்து, 23 பெப்ரவரி 30 மே 2018 காலப்பகுதியில் நடைபெற்ற 'இராஜதந்திர கல்வி' என்ற நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றது. இது ரோமிலுள்ள பிற இராஜதந்திர பணியகங்களுடன் இணைந்து நடத்தப்பட்டது. தூதரகம், இத்தாலிய பாடசாலை (Liceo Majorana), தூதுவர் மற்றும் இராஜதந்திர அதிகாரிகளுடன் இணைந்து, 25 மாணவர்களுடன் (16,17 வயது), இருதரப்பு அரசியல், கலாச்சாரம் மற்றும் கொன்சுயுலர் ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு பற்றியதில் ஊடாடு அமர்வுகளை நடத்தியது. ரோமிலுள்ள WFP தலைமையகத்தில் மே 2018 இல் இச்செயற்றிட்டத்தின் முடிவில் இத்தாலிய மாணவர்கள், மாதிரி ஐ.நா அமர்வினை நடத்தி. அதில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

- FAO -சீனா-இலங்கைக்கிடையிலான முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு ரோமில் 6 டிசம்பர் 2018 இல் இடம்பெற்றது. இதில் இலங்கை விவசாய அமைச்சர், FAO பிரதி பணிப்பாளர் நாயகம், மற்றும் சீன தூதுவர்கள் பங்கேற்றனர். இச்செயற்றிட்டத்தின் நோக்கம், வாழைப்பழம், மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழம் ஆகிய இலங்கையின் மூன்று பழங்களை வர்த்தகமயமாக்கலும் உற்பத்தியை அதிகரித்தலுமாகும்.

1.12 லத்வியா

சுவீடனில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள லத்வியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள் :

- லத்விய குடியரசின் ஜனாதிபதி, ரெய்மொன்ட்ஸ் வெயொனிஸ் மற்றும் அவரது பாரியார் 6-16 ஜனவரி 2018 இல் இலங்கைக்கு இரு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.
- பெருந்தோட்ட அமைச்சர், கௌரவ நவின் திசநாயக்காவின் லத்வியாவுக்கான விஜயம் 15-18 செப்டம்பர் 2018 இல் ஒழுங்குசெய்யப்பட்டது. இவ்விஜயத்தின் பிரதான நோக்கம், இலங்கைத் தேயிலைச் சந்தையை பால்டிக் நாடுகளில் ஊக்கப்படுத்தி விரிவாக்கலாகும்.

1.13 லித்துவேனியா

சுவீடனில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள லித்துவேனியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- பெருந்தோட்ட அமைச்சர் கௌரவ நவின் திசநாயக்காவின் லித்துவேனிய விஜயம் 13-15 செப்டம்பர் 2018 இல் ஒழுங்குசெய்யப்பட்டது. இவ்விஜயத்தின் பிரதான நோக்கம், இலங்கைத் தேயிலைச் சந்தையை பால்டிக் நாடுகளில் ஊக்கப்படுத்தி விரிவாக்கலாகும்.

- இலங்கை ஊழியர்களுக்கு முறையான வசதிகளை வழங்குவது குறித்து, லித்துவேனியாவிலுள்ள 'Visatex' ஆடைத் தொழிற்சாலையின் முகாமைத்துவத்துடன் பேச்சுவார்த்தை தொடர்ந்தது.

1.14 லக்ஸம்பேர்க்

பெல்ஜியத்தில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள லக்ஸம்பேர்க் நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- 12-14 ஜனவரி 2018 இல் லக்ஸம்பேர்க்கில் இடம்பெற்ற 26 ஆவது Vakanz சுற்றுலாச் சந்தையில், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபையுடன் இணைந்து இலங்கையின் காட்சியரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

- சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர், கௌரவ சுஜீவ சேனசிங்க, லக்ஸம்பேர்க் EIB இன் பணிப்பாளர் நாயகத்தை, 16 மே 2018 அன்று சந்தித்து, EIB இனால் நிதியளிக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிக் கலந்துரையாடினார்.

- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபையுடன் இணைந்து லக்ஸம்பேர்க் சுற்றுலா இயக்குனர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்வொன்று, 29 மே 2019 இல் ஏற்பாடு

செய்யப்பட்டது. இதன் பிரதான நோக்கம், லக்ஸம்பேர்க் சுற்றுலா இயக்குனர்களுக்கு இலங்கை ஒரு விரும்பத்தக்க சுற்றுலாக் கேந்திரம் என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஊக்கப்படுத்துவதுமாகும்.

- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, லக்ஸம்பேர்க் வர்த்தக சம்மேளனம் இணைந்து, 'Discover Sri Lanka' என்பது பற்றிய ஒரு கலந்துரையாடல் லக்ஸம்பேர்க் கம்பனிகளுடன் ஒழுங்குசெய்யப்பட்டது. கௌரவ சர்வதேச வர்த்தக அமைச்சர் சுஜீவ சேனசிங்க தலைமையில் 25 உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

- ஜூலை 2018 இல் இலங்கை போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு ஜி எஸ் விதானகே மற்றும் குழுவினர், லக்ஸம்பேர்க் சிவில் விமான சேவை அதிகாரசபையுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

- Cargolux மற்றும் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபைகளுக்கு இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை ஜூலை 2018 இல் ஏற்பாடு செய்யப்பட்டது.

- ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73 ஆவது அமர்வுகளுக்கு இணைவாக, 25 செப்டெம்பர் 2018 இல், இருதரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக, இலங்கை - லக்ஸம்பேர்க்குக்கு இடையிலான விமான சேவைகள் உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டது.

1.15 மசிடோனியா

ஒஸ்ரியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள மசிடோனியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தலைமையில், கௌரவ ஜானக பாலசூரிய, கௌரவ அஜித் மன்னம்பெருமை மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திரு தம்மிக திஸநாயக்க ஆகியோர், 28-30 மே 2018 இல் மசிடோனியாவுக்கு விஜயம் செய்தனர்.

1.16 நெதர்லாந்து

நெதர்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:

- "Vakantiebeurs-2018" சுற்றுலாச் சந்தை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபையுடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டது. 09 -14 ஜனவரி 2018.

- 10 மே 2018 அன்று, சர்வதேச வெசாக் தின நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் பக்திப்பாடல்கள் நிகழ்ச்சி, தானம், வண. ஓலந்த ஆனந்த தேரோ அவர்களால் எழுதப்பட்ட "Monks and Monkeys" புத்தக வெளியீடு ஆகியவை இடம்பெற்றன.

- 21 கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 31 உறுப்பினர்கள் கொண்ட வர்த்தக குழுவொன்று, கௌரவ அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் தலைமையில் 14-15 மே 2018 இல் நெதர்லாந்திற்கு விஜயம் செய்தனர். இச்செயற்றிட்டம் "Doing business in Sri Lanka" மற்றும் B2B கூட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

- நெதர்லாந்து வெளிநாட்டமைச்சகத்தின் ஆசிய மற்றும் சமுத்திர அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு பீட்டர் போர்ட்மன், 15-17 மே 2018 இல் நெதர்லாந்துக்கு விஜயம் செய்து, 17 மே 2018 இல் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரைச் சந்தித்தார்.
- வெசாக் தின நிகழ்ச்சியொன்று மஹாவெனாம புத்த சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் இராஜதந்திர படையினரும் தூதுவர்களும் கலந்துகொண்டனர்.- 26 மே 2018.

- இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலுள்ள; உள்நாட்டில் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட ஊழியர்களுக்கான சமூகப்பாதுகாப்பு நிலுவைகளை தூதரகம் செலுத்தாமையினால் VAT கொடுப்பனவுகள் மீளச்செலுத்தாமை பற்றியதிலான, நீண்டகாலப் பிரச்சனை பற்றிய பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது. தூதரகம் கடும் முயற்சிகளைச் செய்தபோதும், டச் அதிகாரிகள் ஒத்துழைக்காமையினால் அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களை தாயகம் அனுப்பு முறைமை வெற்றியடையவில்லை. ஆனபோதிலும், தூதரகமானது RCMS மூலம் பயண ஆவணங்களை உருவாக்கி, குடிபெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம் மூலமாக, தானாக முன்வந்த 07 இலங்கையர்களைத் தாயகம் அனுப்பியது.

- இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் அபேட்சகங்களுக்கா ஏப்ரலில் நடைந்த கூட்டத்தில் பண்டங்களுக்கான பொது நிதியத்துக்கான நிர்வாக சபைக்கு இலங்கை தெரிவுசெய்யப்பட்டது. ஜூன் 2018 இல், 'ஹேக்' இல் இடம்பெற்ற வெளிநாட்டுத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவது பற்றிய சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை மன்றாடி அதிபதி, கௌரவ டப்புல்ல டெ லிவேரா அவர்களின் விஜயத்தை தூதரகம் ஒருங்கிணைத்தது. அத்துடன் 'தனிப்பட்ட சர்வதேச சட்டத்தின் மீதான ஹேக் மாநாட்டிந் 150 ஆவது ஆண்டுக் கொண்ட்டாட்டங்களிலும் கலந்துகொண்டார்.

- தூதரகம் நிரந்தர நடுவர் நீதிமன்றத்துடன் முழுமையான ஈடுபட்டுள்ளது. இரசாயன ஆயுதங்களைத் தடுப்பதற்கான நிறுவனத்தின் மேம்பாடுகளை இந்த தூதரகம் பின்பற்றியது. பின்வரும் கூட்டங்களில் பங்குகொண்ட தூதரகம், அவைபற்றிய அறிக்கைகளை அமைச்சுக்கு அனுப்பியது: 9-11, 18-22 அக்டோபர் 2018 இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் 89 ஆவது அமர்வு; 2018 நவம்பர் 5 இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் 61 ஆவது கூட்டம்; நாடுகளுக்கிடையிலான 23 ஆவது மாநாட்டு அமர்வு, 19,20, 29 நவம்பர் 2018 இல் மற்றும் 21-30 நவம்பர் 2018 இல் '4 ஆவது மீளாய்வு மாநாடு".

1.17 நோர்வே

நோர்வேயிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:

அ. ஓஸ்லோ சுற்றுலாத்துறை சந்தை- சனவரி 13 – 15 இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகத்தின் (SLTPB) ஒத்துழைப்புடன் ஓஸ்லோவில் நடைபெற்ற "Reiselivsmessen 2018" முன்னுரிமை சுற்றுலாத்துறை வணிக சந்தையில் இலங்கையின் பங்களிப்பினை வழங்குவதற்று ற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தத. உலகலாவிய ரீதியில் சுமார் 50000க்கு மேற்பட்ட சுற்றுலாப்பயணிகள் "Reiselivsmessen" க்கு வருகை தந்திருந்தனர்.

ஆ. ஹமார் சிறுவர் விழா 2018 யூ 4-5 – 2018 யூன் மாதத்தில் ஹமாரில் நடைபெற்ற வருடாந்த சிறுவர் விழாவில் இலங்கைக்கான கூடமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையை சுற்றுலாத்துறை மையமாக ஊக்குவித்ததோடு சிறுவர்களுக்கான செயற்பாடுகளும் நடாத்தப்பட்டன.

இ. நோர்வே இராச்சியத்தின் அபிவிருத்தி பங்களிப்பு தொடர்பான இராஜாங்க செயலாளர் ஜென்ஸ் ப்ரோலிச் ஹொல்ட்டெ அவர்களின் 2018 யூன் 20 – 23 வரை இலங்கையில் சுற்றுலாவினை மேற்கொண்டிருந்தார். இந்த சுற்றுலா, நோர்வே கடலாய்வு தொடர்பான டொக்டர் பர்டிற்ஜொப் நன்சன் (உடைமை (NORAD) க்கு உரியதோடு நிறைவேற்று தெழகாரம் கொண்ட பொருளியல் வலயத்தில் (EEZ) இலங்கை மீன் வளத்தை ஆய்வு செய்வதற்காக நோர்வே கடலியல் ஆய்வு நிறுவனத்தின் (IMR) மற்றும் பர்க் பல்கலைகழகத்தின் (UIB) ஒன்றினைந்து மேற்கொள்ளப்படுகின்றது.) னின் வருகைக்கு முன்னோடியாகும்

மேற்படி சுற்றுலாவின் போது இராஜாங்க செயலாளர் ஜென்ஸ் ப்ரோலிச் ஹொல்ட்டெ அவர்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை கௌரவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா அவர்கள் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர அவர்கள் நகர திட்டமிடல் மற்றும் நீர்பாசனத்துறை அமைச்சர் கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்கள் , எதிகட்சி தலைவர் கௌரவ ஆர்.சம்பந்தன் அவர்கள்,வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனானாயக்க அவர்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் போன்றவர்களுடன் கலந்துரையாடினார்.

ஈ. கொழும்பில் அமைந்துள்ள நோர்வே தூதரகம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் கடற்றொழில் அமைச்சரினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2018 யூன் 21ம் திகதி நடாத்தப்பட்ட SDG 14 நீரின் கீழ் வாழும் உயிர்கள்" செயலமர்வில் ஜென்ஸ் ப்ரோலிச் ஹொல்ட்டெ அவர்கள் உரையாற்றினார். அவர் யாழ்ப்பாணத்தில் சுற்றுலாவினை மேற்கொண்டதோடு அதன்போது கடற்கரையை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தில் கலந்துகொள்வது மற்றும் மரக்கறி மற்றும் பழவகைகளை வைக்கும் மத்திய நிலையம் ஒன்றை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்பட்டது. 2018யூன் மாதம் 23ம் திகதி இராஜாங்க செயலாளரினால் இராஜ்சியங்கள் இரண்டுக்கிடையில் கடல்சார்ந்த நடவடிக்கைகள் சமூத்திர மற்றும் நீர்வாழ் துறையில் பங்களிப்பு செய்பவர்களுக்கு கடற்றொழிழை ஊக்குவிப்பது மற்றும் நீல பொருளியல் துறை பங்களிப்பினை மேம்படுத்துவதற்கு நீல போருளாதார வணிக செயலமர்வு திறந்து வைக்கப்பட்டது.

உ. நோர்வேயில் ஓஸ்லோ மத்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்சியில் கலந்து கொள்வதற்காக 15 பேர் அடங்கிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவொன்று செப்டெம்பர் 30 தொடக்கம் ஒக்டோபர் 06 வரை நோர்வேயில் சுற்றுலாவில் ஈடுபட்டனர்.

ஊ . சர்வதேச தகவல் தொழிநுட்ப சம்மேளணம் - " ஓஸ்லோ புதியஉற்பத்தி வாரம்" இலங்கை தகவல் தொழிநுட்ப தொடக்க நிறுவன வரவேற்பு விழா 2018 செப்டெம்பர் 28ம் திகதி அதிமேதகு

தூதுவரால் மேற்கொள்ளப்பட்டது. ICT - நோர்வே நோர்வே தகவல் தொழிநுட்ப கைத்தொழில் மற்றும் SLASSCOM இலங்கை, இந்த வரவேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

எ. 2018 ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்ட ப்ரதிபா ஸ்ரீ லங்கா கலாசார விழாவில் தூதரகம் கலந்து கொண்டது.

ஏ. ANTOR Norway" நோர்வே வசந்தம் 2018 கொண்டாட்டம் - 2018 ஆகஸ்ட் மாதத்திலட் பார்கன் மற்றும் ஒஸ்லோவில் நடாத்தப்பட்ட ANTOR செய்தி செயலமர்வில் சோர்வேவுக்கான இலங்கை தூதரகம் கலந்துகொண்டது. இலங்கை சுற்றுலா பயணமுடிவு என ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

ஐ. செப்டெம்பர் 21 தொடக்கம் 23 வரை நோர்வே லில்ஸ்டோம் இல் நடைபெற்ற OPPLEV MER ANTOR மண்டபத்தில் கலந்துகொண்டது. இவ்வேலைத்திட்டத்தில் பிரதானமாக சிரேட்ட பிரசைகளை இலக்கு வைத்து நடாத்தப்பட்டது. ஓய்வு சுகாதாரம் , சுற்றுலா மற்றும் பொருளாதாரம் போன்ற பிரதான வேறு பிரிவுகள் நான்கினை ஊக்குவிப்பதற்கு இவ்வேலைத்திட்டத்தின் இலக்காககொள்ளப்பட்டிருந்தது.

ஒ. தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் கௌரவ நிரோஷன் பெரேரா அவர்கிள் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று கல்வி சுற்றுலாவிற்காக 2018ம் ஆண்டு செப்பெடம்பர் 30 – ஒக்டோபர் 06 வரை நோர்வேயில் சுற்றலாவினை மேற்கொண்டனர். தொடர்பினையம் ஒத்துப்போகும் தன்மையினையும் கட்டியெழுப்பதல் இதன் நொக்கமாகும்.

ஓ. இலங்கை பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள் ஒக்டோபர் 3 – 6 தினங்களில் நோர்வே இராஜ்சியத்தில் சுற்றுலாவினை மேற்கொண்டார் கடற்றொழில் அமைச்சர் இரச பிரதிநிதிகள் வணிக பிரதிநிதிகள் மற்றும் ஊடக பிரதிநிதிகள் இச்சுற்றலாவில் அவருடன் கலந்து கொண்டனர்.

மேற்படி சுற்றலாவின் போது இலங்கை பிரதமர் மற்றும் நோர்வே பிரதமருக்கிடையில் ஒன்றிணைந்த வெளியீடு உன்றில் ஒப்பமிடப்பட்டது. அதனூடாக நிரந்தர அபிவிருத்தி மற்றும் கடல் வள நிலையான முகாமைத்துவ மற்றும் தனியார் பிரிவின் பங்களிப்பும் இருந்தது.

ஔள மொஸ்கோவில் இருந்து கொழும்பு வரை விமான நிலையங்களுக்க உடாக இலங்கை சுற்றுலா வணிகத்தை ஊக்குவிக்கும் விழா நடைபெற்றது.

∴ இலங்கை சுற்றுலா வணிகத்தை ஊக்கவிப்பதற்காக பர்கன் மற்றும் ஒஸ்லோ வில் நடைபெற்ற ANTWOR 2018" சுற்றுலா விழாவில் கலந்துகொண்டமை.

க. நோர்வே புதிய உற்பத்தி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கை தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப நிறவனங்கள் பல நோர்வே இராஜ்சியத்திற்கு வருகைதந்திருந்தன.

கா. இலங்கையீன் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக லிலிஸ்டோமில் நடைபெற்ற " Opplev Mer" நிகழ்வில் கலந்து கொண்டமை.

கி. இலங்கையில் நிலையான அபிவிருத்தி எதிர்பார்ப்பு சம்மேளணத்தை நடாத்துவதற்கான இயலுமை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நோர்வேயில் உள்ள இலங்கை தூதுவர் ஒஸ்லோ பல்கலைகழகத்தில் அபிவிருத்தி மற்றும் சூழல் தொடர்பான மத்திய நிலையத்தின் பேராசிரியர் டேன் பர்க்கின் அவர்களை சந்தித்தார்.

கு. நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதுவர் நீரை சக்கியாக மாற்றும் நிறுவனமான "டீப் ரிசர் ஏஎஸ் " Deep River As" வின் ரெய்டர் வெஸ்ட் அவர்களை சந்தித்தார்.

கூ. தூதரக பதவியினர் இலங்கை சமூக குழு " திசரன" வினால் ஏற்பாடு செய்ப்பட்ட கலாசார விழாவில் கலந்து கொண்டனர்

கெ. இந்திய ஆன்மீக தலைவரான ஸ்ரீ ரவி கிருஷ்ணா அவர்களால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இலங்கை தூதுவர் அவரை சந்தித்தார்

1.18 . போலந்து

போலந்திலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

(i) வெளிநாட்டு இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க, இலங்கை வர்த்தகம் இணைந்து போலந்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை 14-17 பெப்ரவரி 2018 இல் மேற்கொண்டார். இவ்விஜயத்தின்போது, கௌரவ இராஜாங்க அமைச்சர், போலந்தின் பிரதி வெ.வி.அமைச்சர், சுற்றுலா பிரதி அமைச்சர், தொழில்முயற்சி மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் போன்றோருடன் இருதரப்பு உரையாடல்களை மேற்கொண்டார்.
மேற்படி விஜயத்தின்போது, இலங்கை விளையாட்டு அமைச்சு மற்றும் போலந்து குடியரசின் விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சு ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் இரு நாடுகளுக்கிடையிலான வான்வழி போக்குவரத்து பற்றிய உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டன.

(ii) போலந்திலுள்ள இலங்கைத் தூதரகம் அந்நாட்டு வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து, வர்த்தக மன்றம் மற்றும் வணிக-வணிக கூட்டங்களையும் நடத்தியது. 16 பெப்ரவரி 2018. இதில் 40 போலந்து கம்பனிகள் பங்குபற்றின.

(iii) 2018 மார் 21-23 வரை இடம்பெற்ற யூரோ கஸ்ரோ கண்காட்சியில் இலங்கை கம்பனிகள் பங்கேற்கும் வகையில் அனுசரணை வழங்கியது.

(iv) 2018 ஏப்ரல் 6 ஆம் திகதி ஆசிய பசுபிக் மியூசியத்தில் இடம்பெற்ற ஆசியாவின் மரபார்ந்த விளையாட்டுகள் கண்காட்சியில் பங்கெடுக்கப்பட்டது.

(v) இலங்கை தேயிலைச் சபையானது போலந்திலுள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து உலக உணவு வாரத்தில் பங்கேற்றது. 2018 ஏப்ரல் 10-13.

(vi) 2018 ஏப்ரல் 17-18 இல் ஒஸ்ரோடாவில் இடம்பெற்ற எக்ஸ்போ மசுரியில் பங்கேற்றது.

(vii) இலங்கைத் தேயிலைச் சபையானது போலந்திலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து ஏப்ரல் 27 ஆம் திகதி இடம்பெற்ற 'உலக உணவு வார்சோ' இல் பங்கேற்றது.

(viii) இலங்கைச் சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம் இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து மே 14 ஆம் திகதி வார்சோவிலும் 15 மே க்ரனோவிலும் இடம்பெற்ற தொடர் நிகழ்வில் பங்குபெற்றது.

(ix) முதலாவது 'வார்சோ கோர்ப்பரேட் ஃபில்ம் ஃபெஸ்டிவல்' இல் தூதரகம் கலந்துகொண்டது.

(x) வார்சோ பொருளாதார பாடசாலையின் மாணவர்களுக்கான ஒரு செயலமர்வு

(xi) ரொமானியாவின் 'லிவாஸ் பம்பூஸ் க்ளோதிங்க் லிமிட்டெட்' இல் 300 இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

1.19 போத்துக்கல்

பிரான்ஸில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள போத்துக்கல் நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- வெ.நா இராஜாங்க அமைச்சரின் உத்தியோகபூர்வ போத்துக்கல் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது – 18-20 செப்டெம்பர் 2018

  இந்த விஜயத்தின்போது, போர்த்துக்கல் வெளிநாட்டமைச்சரின் இராஜாங்க செயலாளருடன் இருதரப்பு சந்திப்புக்களை மேற்கொண்டார். அத்துடன் போத்துக்கல் கலாச்சார அமைச்சர், 'முசியு டொ ஓரியன்டே' இன் தலைவரையும் 'இன்ஸ்டிடியூட்டோ காமோஸ்' தலைவரையும் சந்தித்தார். இருதரப்பு சுற்றுலா மேம்பாடு, மன்னார் கோட்டையைப் புதுப்பிப்பதற்கான போர்த்துக்கேய அரசின் உதவியைப் பெறுதல், இரு நாடுகளின் நூதன சாலைகளுக்கிடையேயான கூட்டுறவு மேம்பாடு, இலங்கையில் போர்த்துக்கேய மொழி நிலையத்தை நிறுவுதல் பற்றியும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.

1.20 ருமேனியா

போலந்தில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள ருமேனியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்

- இரு நாடுகளுக்கும் இடையிலான பாராளுமன்ற நட்புரிமைக் கூட்டமைப்பு நிறுவப்பட்டது. 24 ஜனவரி 2018.

- கௌரவ அமைச்சர் தயா கமகே, 4-7 ஆகஸ்ட் 2018 இல் ருமேனியாவுக்கு விஜயம் செய்தார். அப்போது ருமேனிய வெ.நா அமைச்சரைச் சந்தித்து, இரு நாடுகளுக்கும் இடையிலான சக்தி, ரயில்வே, கப்பற்துறை உட்கட்டுமானம், கப்பல், விவசாயம், உணவுத்தொழிற்றுறை மற்றும் ஆடைத் துறை ஆகியவற்றின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது பற்றிக் கலந்துரையாடினர்.

- இரு நாடுகளுக்கும் இடையிலானதொரு புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ், இரு இலங்கை 'ஜிம்னாஸ்டிக்' வல்லுனர்கள், 6-31 ஆகஸ்ட் 2018 இல் ருமேனியாவில் பயிற்சியை மேற்கொண்டனர்.

- 28 செப்டெம்பர் 2018 இல் ஐ.நா பொதுச்சபையின் 73 ஆவது அமர்வின்போது, வெ.நா.அ.அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன, ருமேனிய வெ.அமைச்சரைச் சந்தித்தார்.

1.21. **சுவீடன்**

சுவீடனில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

அ. மிதவாதக் கட்சியின் சுவீடிஸ் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கையில் பிறந்தவருமான கௌரவ திருமதி ஆசா கொயன்சாட்ஸ் 2018 பெப்ரவரி 19 இல் இலங்கைத் தூதரகத்திற்கு விஜயம் செய்ததுடன், இலங்கை அரசுடன் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பினை தொடரவுள்ளதனையும் உறுதிப்படுத்தினார்.

ஆ.மல்மோவில் உள்ள உலகக் கடல்சார் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை அதிகாரிகள் மற்றும் இரண்டு கடற்படை அதிகாரிகளுக்கான வருடாந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு சுவீடிஸ் நிறுவனங்களுடன் தூதரகம் ஒருங்கிணைந்து செயற்பட்டது. இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கான பயிற்சி வாய்ப்புக்களை உறுதிப்படுத்தும் வகையில் சுவீடிஷ் ஆயுதப் படைகளுடன் நெருங்கிச் செயற்பட்டது. இலங்கைக்கு 2018 செப்டெம்பர் வரை 8 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இ. சுவீடனில் உள்ள முன்னணி கல்விசார் நிறுவனங்களுக்கு 2018 ஏப்ரல் 18-20 வரை மூன்று துணை வேந்தர்கள் அடங்கிய பல்கலைக்கழகத் தூதுக் குழு மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் விஜயம் செய்திட வசதியளிக்கப்பட்டது. மேற்படி விஜயமானது ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வியிலான சர்வதேச ஒத்துழைப்புக்கான சுவீடிஷ் மன்றத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஈ. இலங்கை மின்சார சபையின் புதுப்பிக்கத்தக்க சக்தி விடயத்திற்கான பிரதி பொதுமுகாமையாளர் திரு. பீ.எம்.யூ சேனாரத்ன பண்டாரவினால் தென் சுவீடனில் உள்ள லைசெக்கில் நகரில் அமைந்துள்ள அலை மின்சக்தி தளத்திற்கு மேற்கொள்ளப்பட்ட விஜயத்திற்கு வசதியளிக்கப்பட்டது.

உ. இலங்கையை 5 அமைச்சுக்களின் செயலாளர்கள் சுவீடன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு 2018 செப்டெம்பர் 12-20 வரை மேற்கொண்ட SWITCH ASIA EXPOSORE செயலகத் தூதுக்குழு விஜயத்திற்கு வசதியளிக்கப்பட்டது.

ஊ. 10 இலங்கை வர்த்தக சந்தைகள் ஊக்குவிப்பு, 35 வர்த்தக மற்றும் முதலீட்டு வினவல்கள் ஊக்குவிப்பு வசதிப்படுத்தப்பட்டதுடன் வர்த்தகம் தொடர்பான 4 முறைப்பாடுகளும் செயல்முறைப்படுத்தப்பட்டது.

எ. ஏற்பாடு செய்த அனைத்து நாடுகள் மத்தியிலும் "யொவன்புரய" இளைஞர் திருவிழாவுக்கு தேவையான விளம்பர வசதி வழங்கப்பட்டது.

1.22. சுவிற்சர்லாந்து

சுவிற்சர்லாந்திற்கு ஒருங்கிணைந்தவாறு பொறுப்பளிக்கப்பட்டு ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

அ. இலங்கையும் சுவிற்சர்லாந்தும் புலம்பெயர்தல் குறித்த விடயப் பரப்பினை ஒத்துழைப்பைப் பலப்படுத்தியுள்ளன. இந்த விடயப் பரப்பிலான இருதரப்பு ஒத்துழைப்பானது, 2018 ஓகஸ்ட் 06 இல் புலம்பெயர்வு பங்காண்மைத்துவமொன்றைத் தாபித்தல் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் சுவிஸ் நேசக் கூட்டமைப்புக்குமிடையில் கைச்சாத்திட்டதன் மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. உள்நாட்டு அலுவல்கள் மற்றும் வயம்ப அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவின்ன அவர்களாலும் 2018 ஓகஸ்ட் 03-08 வரை இலங்கையில் தங்கியிருந்த சமஷ்டி ஆலோசகர் சிமோநெட்டா சொம்மாருகா அவர்களாலும் கைச்சாத்திடப்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பின்வரும் அம்சங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிரமமான மற்றும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய புலம்பெயர்வு விடயங்கள் குறித்து பொதுவான செயல்முறை குறிப்பாக, புலம்பெயர்வு

முகாமைத்துவப் பாய்ச்சல்கள், ஒழுங்கற்ற புலம்பெயர்வைத் தடுத்தல், நாடுகளில் இருந்து வருவோரை மீள அனுமதித்தல், நாடற்ற நபர்கள் மற்றும் மூன்றாம் நாட்டு பிரஜைகள், நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவதிலான உதவி, மீள இணைத்தல், புலம்பெயர் ஆளுகையில் ஆற்றலைக் கட்டியெழுப்புதல், புலம்பெயர்வோரைக் கடத்துதல் மற்றும் சட்ட விரோத ஆட்கடத்தல் முதலியன.

1.23 சேர்பியா

ஒஸ்ரியாவில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள சேர்பியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- சேர்பியாவின் வெ.அ அமைச்சர் மற்றும் முதலாவது துணைப் பிரதம மந்திரி கௌரவ இவிகா டசிச் அவர்கள் இலங்கைக்கு 7- 8 மே 2018 இல் விஜயம் செய்தார். அவர் இலங்கைப் பிரதமர், சபாநாயகர், வெ.நா அமைச்சர் மற்றும் போக்குவரத்து மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்தார்.

- இவ்விஜயத்தின்போது, 8 மே 2018 அன்று, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

1.24 ஸ்லவேக்கியா

ஒஸ்ரியாவில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள ஸ்லவேக்கியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- ஸ்லவேக்கிய குடியரசின் துணைப்பிரதமர் மற்றும் நிதியமைச்சர்கள் மற்றும் 22 வணிக குழுவினர், 27-29 மார்ச் 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

  இவ்விஜயத்தின்போது, இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், நிதியமைச்சர், ஊடக அமைச்சர், தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சர், ஊடக இராஜாங்க அமைச்சர் ஆகியோரைச் சந்தித்தனர். இதன்போது, இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் ஸ்லவேக் முதலீடு மற்றும் வர்த்தக அபிவிருத்தி முகமை ஆகியவற்றுக்கிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது.

1.25 ஸ்லொவேனியா

ஒஸ்ரியாவில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள ஸ்லொவேனியா நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- ஸ்லொவேனிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கார்ல் எர்ஜவெக் மற்றும் துணைப்பிரதமரின் அழைப்புக்கிணங்க, ஸ்லொவேனியாவுக்கு விஜயம் செய்த இலங்கை வெ.நா இராஜாங்க அமைச்சர், 10,11 செப்டெம்பர் 2018 இல் நடந்த 13 ஆவது Bled Strategic கருத்துக்களத்தில் பங்குகொண்டார். இதன்போது, 'Alone we fail: Working together for a sustainable future' என்ற குழு கலந்துரையாடலிலும் கலந்துகொண்டார். இக்குழுவில், அரசாங்கங்கள், கல்வித்துறை, சிவில் சமுதாயம், கூட்டாண்மைத்துறை ஆகிய பிரிவுகளிலுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பேச்சாளர்கள் கலந்துகொண்டனர்.
- இருதரப்பு பிரிவில் இராஜாங்க அமைச்சர் சேனநாயக்க, ஸ்லொவேனிய வெ. நா அமைச்சின் இராஜாங்க செயலாளர் அன்ரே லோகார் அவர்களைச் சந்தித்து, இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு, கலாச்சாரம், கல்வி, வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளை மேம்படுத்துவது பற்றிக் கலந்துரையாடினார்.

1.26 ஸ்பெயின்

பிரான்ஸில் சமகால அங்கீகாரம் பெற்றுள்ள ஸ்பெயின் நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்:

- ஸ்பெயினின் மட்ரிட் நகரில், 15-18 ஜனவரி 2018 இல் இடம்பெற்ற FITUR Travel Fair 2018 ஏற்பாடு செய்யப்பட்டது.

1.26 துருக்கி

துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள்

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி ஓரான் பனோரா மற்றும் அங்காராவில் இலங்கை தேசிய இளைஞர் நடன குழுவால் கலாச்சார நடன காட்சி

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி நட்டாவெகா அங்காரா டேர்கி யில் இலங்கை தேசிய இளைஞர் நடன குழுவால் கலாச்சார நடன காட்சி

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியிலிருந்த 04 ஆம் திகதி வரை நட்டாவெகா அங்காராவில் சுற்றுளா ஊக்குவிப்பு நிகழ்வு நடைபெற்றத

- 2018 அம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி இலங்கை தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வு நடைபெற்றது

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி டேர்கியில் இல்டன் அங்காராவில் இலங்கை தேசிய இளைஞர் நடன குழுவால் கலாச்சார நடன காட்சி

- இலங்கையின் கருத்துருவை மேம்படுத்த 2018 ஆம் அண்டு பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி 8 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதி தேசிய தின வரவேற்புகள் அங்காராவின் பிரதான நகரங்களான அங்காரா டிரப்சோன் மற்றும் ஈர்சுரம் ஆகிய நகரங்களில் நடைபெற்றன

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7அம் திகதி அங்காராவில் இலங்கை தூதுவரின் உத்தியோக வாசஸ்தலத்தில் இலங்கை தேசிய இளைஞர் நடன குழுவால் கலாச்சார நடன காட்சி நடைபெற்றது

- துருக்கியில் உள்ள இலங்கை தூதரகம் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி இலங்கை பிரயாண இயக்குணர்கள் மற்றும் துருக்கிய வகையறாக்கள் இடையே பி2பி கூட்டங்களை எற்பாடு செய்தது.

- 2018 ஆம் அண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம திகதி இலங்கை தேசிய இளைஞர் நடன குழுவால ஈர்சுருரம் துருக்கியில் கலாச்சார நடன காட்சி நடைபெற்றது

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இலங்கை தேசிய இளைஞர் நடன குழுவால் பேர்ஸா துருக்கியில் கலாச்சார நடன காட்சி நடைபெற்றது

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி பேர்ஸாவில் சற்றுளா ஊக்குவிப்பு நிகழ்வு நடைபெற்றது

- 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி ஸ்டாம்புள் மோல் ஸ்டாம்புல் துருக்கியில் கலாச்சார நடன காட்சி நடைபெற்றது

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 5 அம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரை நாம் பாக அஸர்பஜான் இடைக்கால அமைச்சு கூட்டத்தில் இலங்கையை பிரதிநுவப்படுத்தியது.

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 2 அம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரை துருக்கியில் இலங்கை கெர்கோ உற்பத்தியாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள வர்த்தக தரப்பிணர்கள் இடையே பி2பி கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 13 ஆம் திகதி துருக்கி எயார் லைன்ஸ்சுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஜ்டாம்புல் பயிற்ச்சி செயலமர்வில் கொழும்ப பங்குபற்றியது.
-
- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 24 ஆம் திகதி காலிபொலி கனகலே லெண்ட் வோர் ரின் 103 வது ஆண்டு விழாவில் பங்கு பற்றியது

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 24 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை கேப் ஹெலிஸ் கனகலே வில் நடைபெற்ற பொதுநலவாய மற்றும் அயர்லாநது நினைவுநாள் சேவையில் பங்கபற்றியது

- 2018 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி அங்காரா எக்கெ் பல்கழைக்கழகம் சர்வதேச நட்புறவு தினத்தில் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

- 2018 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அடானாவிலுள்ள ஹோட்டல் டிவானில இலங்கை ஊக்குவிப்பு நிகழ்வு நடைபெற்றது

- 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 14 ம் திகதி வரை இலங்கையின் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியிலிருந்து 18 அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக்குழுவின் கல்வி சுற்றுளாவிற்கு வசதி ஏற்படுத்தி கொடுத்தது.

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரை ஸ்டாம்பள்ளிர் உலக உணவு கண்காட்சியில் இலங்கை பங்குபற்ற இலங்கை தூதரகம் வசதி ஏற்படுத்தி கொடுதத்து.

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதி வரை 87வது ஸ்மிர் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்குபற்றியது

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாதம் 7 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரை எனடல்யாவில் சர்வதேச வீதி உணவு கண்காட்சியில் பங்குபற்றியது

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி ஸ்மீர் வர்த்தக சேம்பரில் "இலங்கை நாடு வழங்கல் வர்த்தகம் இலங்கையில் முதலீடு" நடத்தப்பட்டது

- 2018 – 2022 காலப்பகுதிக்கு காணமுடியாத கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் அரசுகளுக்கிடையிலான இலங்கை வேட்பாளரை தெறிவு செய்ய துருக்கியின் ஒத்தாசையை பெற்றுக்கொண்டது.

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி துருக்கியில் முகுல சித்திகி கொக்மான் பல்கழைக்கழகத்தில் நடந்த "யுரோ ஆசியாவிலிருந்து தெற்கு ஆசியா

வரையான பாலம் துருக்கி - இலங்கை உறவுகள் என்ற கருத்தரங்கில் பங்குபற்றியது

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி உள்ளக பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தூதுவரது மாநாட்டில் பங்குபற்றியது. தூதுவர் இலங்கை – துருக்கி உறவுகள் பற்றி ஒரு சொற்பொழிவை நடத்தினார்

- பர்ஸாவில் 2018 ஆம் ஆணடு நவம்பர் மாதம் 13 ஆம் திகதியும் கோசிலியில் 2018 ஆம் ஆண்டு 14 ஆம் திகதி மற்றும் எடிரினில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வர்த்தகம், தேயிலை மற்றும் சுற்றுளா என்பன அடங்கிய பன்முகத்தன்மைகொண்ட இலங்கை விளம்பர நிகழ்வு நடைபெற்றது.

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி துருக்கி அமைச்சின் வாழ்க்கை துணைகளின் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த தொண்டு பஜார் நிகழ்வில் இலங்கை தூதரகம் பங்குபற்றியது

- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட துருக்கி பயணம் இஸ்மிர் - 12வது சர்வதேச சுற்றுளா கண்காட்சி மற்றும் கொங்கிரஸ் இலங்கை பங்குபற்ற வசதிகள் செய்யப்பட்டன.

- பின்வரும் நிகழ்வுகளை எற்பாடு செய்த பங்குபற்றியது ’

    - 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 – 5 திகதிவரை ஹில்டன் அங்காராவில் இலங்கை உணவு கண்காட்சி விழா

    - 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ம் திகதி ஹில்டன் ஹோட்டலில் சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கு இணையாக இலங்கை உணவு கண்காட்சி
    - 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இலங்கை சமையல் வழிகாட்டல்

    - 2018 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி துருக்கி ஊடவியளாலருக்காக உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில்இலங்கை உணவு வழிகாட்டல்

    - 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 22 ஆம் திகதி அங்கார பில்கென்ட் பல்கலைக்கழகத்தில் இலங்கை தூதரகம் சர்வதேச கலாச்சார விழாவுக்கு வசதிகள் எற்படுத்தி கொடுத்தது.

    - துருக்கிய கொண்டாட்டங்களின் கலாச்சார தலைநகரமான கஸ்டமொனு 2018 வில் நெவ்ரு கொண்டாட்டங்களில் இலங்கை தூதரகம் பங்கு பற்றியது.

- 2018 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அங்கார தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஏற்பாடு செய்த அங்கார சர்வதேச கலாச்சார வைபவத்தில் துருக்கியில் உள்ள இலங்கை தூதரகம் பங்குபற்றியது.

1.27 **ஐக்கிய இராஜ்யம்**

வட அயர்லாந்து மற்றும் கிரேட் பிரிட்டனின் ஐக்கிய இராஜ்யத்தில் இலங்கை தூதரகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- 2018 ஆம் ஆண்டு ஜனவரி – செப்டம்பர் காலப்பகுதியில இலங்கை சுற்றுளா விடுமுறை பயண காட்சி டுபிலின், அயர்லாந்து இலக்கு பயண நிகழ்ச்சி மான்செஸ்டர் விடுமுறை பயண நிகழ்ச்சி தேசிய திருமண நிகழ்ச்சி லண்டன் டெலிகிராபிக் பயண நிகழ்ச்சி என்பனவற்றில் பங்குபற்றியது.
- இளவரசர் எடவர்ட் ஏர்ல் மற்றும் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம்திகதி நடைபெற்ற 70வது இலங்கை சுகந்திர விழாவுக்கு இலங்கைக்கு 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி வரை வருகை தந்திருந்தனர்

- ஐக்கிய இராஜ்ய பாரளுமன்ற உறுப்பினர் மற்றும் அனைத்து கட்சி பாராளுமன்ற தலைவர் கௌரவ ரணில் ஜயவர்தன தலைமையிலான ஐந்து அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக்குழு 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. தூதுக்குழு அதிமேதகு ஜனாதிபதி கௌரவ பிரதமர் கௌரவ பாராளுமன்ற பேச்சாளர் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் எதிர்கட்சி தலைவர் அவர்களை சந்தித்து கலந்துரையாடினார்கள்

- இலங்கைக்கான ஐக்கிய இராஜ்யத்தின் பிரதமரின் வர்த்தக தூதுவராக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரணில் ஜயவர்தன இலங்கைக்கு விஜயம் செய்தார்

- 2018 ஆட் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐக்கிய இராஜ்ய பொதுநலவாய பாராளமன்ற அமைப்பினால் எற்பாடு செய்யப்பட்ட ஒரு பயிற்ச்சி கருத்திட்டத்தில் இலங்கை பாராளுமன்றத்தின் பொது கணக்கு குழு பங்குபெற ஐக்கிய இராஜ்ய இலங்கை உயர் ஸ்தாணிகம இந்த விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தது

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில 14 – 20 வரை பொதுநலவாய அரசாங்க தலைவர்கள் கூட்டத்திற்கு அதி மேதகு ஜனாதிபதி விஜயம் செய்ய எற்பாடுகள் செய்யப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரில 14 – 20 வரை பொதுநலவாய அரசாங்க தலைவர்கள் கூட்டத்திற்கு கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர விஜயம் செய்ய எற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த விஜயத்தின்போது

அமைச்சர் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் பசிபிக் மற்றும் ஆசியாவின் இராஞாங்க அமைச்சர் பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ மார்க் பீல்ட்யை சந்தித்தார்

- இலங்கை தேயிலை சபை 4 கம்பனிகளுடன் லண்டனில் 2018 ஆம் ஆணடு எப்ரில் மாதம் நடைபெற்ற இயற்கை கரிம பொருட்கள் காட்சி நிகழ்வில் பங்கு பற்றியது.

- ஐக்கிய இராஜ்யத்திலுள்ள இலங்கை உயர் ஸ்தாணிகம் இலங்கை சுறறுளா ஊக்கவிப்பு பணியகத்துடன இணைந்து ˙இலங்கையில் படமாக்கப்பட்ட ‘‘செல்சியாவில் தயாரிக்கப்பட்டது ‘‘ என்ற தொலைகாட்சி தொடர் பிரபலமான ஒரு அத்தியாயத்தை 2018 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு சிறப்பான அத்தியாயத்தை திரையிடடது. இந்த நிகழ்வில் ஏராளமான பிரயாண ஊடகவியலாளர்கள் (பிரித்தாணிய எழுததாளரகள் அமைப்பு) சங்கிரிலா ஹோட்டல பிரதிநிதிகள் தொலைகாட்சி நிகழ்வில் நடிக்கும் நடிகர்கள் நடிகைகள் கூட்டு வாணிகம் என்பவர்கள் அடங்கனாக வருகை தந்தார்கள்.

- இலங்கையின் கொண்டோமினியம் அபிவிருததி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் ஏனய தரப்பினர்களின் நிறுவனங்கள் என்பவர்களது பங்கேற்புடன் இலங்கையில் கட்டிட அமைப்புகளுக்கான காணிகளை விற்பனை செய்யும் சந்தையை விருத்தி செய்ய ஐக்கிய இராஜ்ஜியத்திலுள்ள இலங்கை உயர் ஸ்தாணகத்தில 2018 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி முதலீட்டாளர்கள் ஒன்றினைந்து கருத்துக்களை பரிமாரும் சந்திப்பு இடம்பெற்றது.

- 2018 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி சாதாரண மக்களின் டெரஸ் காட்சி அரங்கில் ‘‘இன்று அவர்களுடைய எதிர்கலம்’’ என்ற அற நிலையம் நிகழ்வில் பங்கேற்றது˙

- 2018 ஆம் ஆணடுட ஜூன் மாதம் 15 – 17 திகதிகளில் ஐக்கிய இராஜ்யம் பிரதமர் விஜயத்திற்கு எற்பாடு செய்யப்பட்டது. விஜயத்தின்போது முன்னால் ஐக்கிய இராஜ்ய பிரதமர் திரு டேவிட் கெமரோன் மற்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் அடங்களாக சந்திப்பு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன

- இலண்டனுக்கு வருகை தந்த இலங்கை நீபவாகினி குழுவுடன் இலண்டனில் ‘‘எத்தர மித்தர நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது.

- லண்டனில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்துடன் 2010 ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுநலவாய வர்தக அரங்கில் இலங்கை சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக தூதுவர்கள் பங்குபெற வசதிக்ள் வழங்கப்பட்டன. மின்னியல் ஆடை கைவேலைகள் தேங்காய் சுற்றுளா விலை உயர்ந்த கற்கள் மற்றும் ஆபரணங்கள் நீரியல் மற்றும் படகு கட்டும் துறைகளை

பிரதிநுவப்படுத்துபவர்கள் பங்குபற்றினார்கள். இந்த அரங்கில் 40க்கு மேற்பட்ட சிறிய நடுத்தர தொழில் முனைவேர்கள் பங்குபற்றினார்கள்

- இலங்கை சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக தூதுக்குழுவுக்கு 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 2018 பொதுநலவாய வர்த்தக அரங்கு அத்துடன் லண்டனில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் இலங்கை பங்குபெற வசதியளித்தது. இதில் தொழில் நுட்பம் தின்னியல் ஆடை கைப்பணி பொருட்கள் தேங்காய் சுற்றுளா விலை உயர்ந்த கற்கள் நீரியல் மற்றும் படகு கட்டும் துறையை பிரதிநுவப்படுத்தும 40க்க மேற்பபட்ட சிறிய நடுத்தர தொழில அதிபர்கள் இந்த அரங்கில பங்குபற்றினார்கள். இலங்கை தூதுக்குழுவுக்கு தலமை தாங்கிய கௌரவ ரிசார்ட் பதியதீன் சிறிய நடுத்தர தொழில்அதிபர்கள் அரங்கில் பெனலிஸ்டாக பங்குபற்றி பிரதிநுவப்படுத்தினார் அதிமேதகு சனாதிபதி CBF வில் நீடித்த அபிவிருத்தி இலக்குகள் பற்றி ஒரு முக்கிய உரையை நிகழ்த்தினார் அத்துடன் இலங்கையின் விலை உயர்ந்த கற்கள் ஆபரணங்கள் படகு கட்டுதல் ீநிர்வள துறை என்பனவற்றிற்கான ICT/BPM வாய்ப்புகளை காட்ட 170 பொதுநலவாய தொழில் முயற்ச்சியாளர்கள சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் தொழில வாண்மையாளர்கள் என்பவர்களுக்கு அழைப்பு விடுகக ஒரு இலங்கை காலை உணவு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது காலை உணவு கூட்டத்தில் முக்கிய அம்சம் என்னவென்றால் லண்டனில் இலங்கை ICT துறையின் பிரேண்டையை ஆரம்பிததுத வைத்தமையாகும்

- 2018 அம் ஆண்டு ஜுன் மாதம் ஐக்கிய இராஜ்யத்திலுள்ள இலங்கை தூதரகம் ஜோன் கீல்ஸ் கம்பனியின் துணை கம்பனியான இன்போரமேட் (பிரைவேட்) லிமிட்ட் வினால் ஒரு சிறந்த நாளைக்காக இலங்கைக்கு உதவுங்கள்'' என்ற கருப்பொருளுடன் ஒரு வணிக விளம்பர நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் லண்டனில் நடைபெற்ற ''சர்வதேச ஆபரணம் லண்டன்'' இல் இலங்கையிலிருநது 6 கம்பனிகள் பங்குபற்றின

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி ''செவனிங் அறிஞர்களுக்கு'' என்ற ஒரு வரவேற்ப விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

- இலங்கைக்கான ஐக்கிய இராஜ்ய பிரதமரின் தூதுவராக ஐக்கிய இராஜ்ய பாராளுமன்ற உறுப்பினர். ரணில் ஜயவர்தன 2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்

- வ.2018 பொதுநலவாய வர்த்தக மன்றம் ஐக்கிய இராஜ்யத்தில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடைபெற்றது. ஏராளமான சிறிய மற்றும் நடுத்தர வியாபார பிரதிநிதிகள்

இதில் பங்கு பற்றினார்கள். இது பொதுநலவாய அரசாங்க தலைவர்களுடன் நடைபெற்றது.

- ர2018 பொதுநலவாய அரசாங்க தலைவர்கள் கூட்டத்தில் வர்த்தகம் தொடர்புடைய முடிவுகளை பிரதிபலிக்கும் பொதுநலவாய உளகட்சி வணிகம் மற்றும் முதலீட்டை அதிகறிக்க வேலை குழுவிலிருந்து வணிகம் மற்றும் முதலிடடு விருப்பங்களின் பரிநதுரைகளை ஆய்வு செய்யும் நோக்கங்களுடன் பொதுநலவாய சிரேஸ்ட வர்த்தக அதிகாரிகள் கூட்டம் லண்டனில் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை நடைபெற்றது. அடுத்த இரண்டு வருடங்களுக்கு உள்கட்சி பொதுநலவாய வர்த்தகம் மற்றும் முதலீடு என்பனவற்றிற்கு ஒத்தாசை வழங்க அங்கத்தவர்கள் தொடர்வதற்கு உள்ள நடைமுறைகளுக்கு இணங்குதல் மற்றும் அடுதத இரண்டு ஆண்டுகளுக்கு அங்கத்தவர்களுக்கான வேலை திட்டத்திற்கு இணங்குல்

எ. கௌரவ பெட்ரீசியா பொதுநலவாய செயலாளர் நாயகத்தின் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத உத்தியோகபூர்வ விஜயத்தை வசதிப்படுத்தி ஒருங்கிணைத்தது. அவர் இந்த விஜயத்தின்போது கௌரவ பிரதமர் கௌரவ பாராளுமன்ற பேச்சாளர் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நிதி அமைச்சர் மற்றும் மாகாண சபைகள உள்ளுராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சர் என்பவர்களோடு சந்திப்புகளை நிகழ்த்தினார்

ற .வட மாகாண ஆளுணர் கௌரவ ரெஜினோல்ட் குரே மற்றும் துாதுக்குழு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரை ஐக்கிய இராஜ்யத்திலுள்ள இலங்கை புலம்பெயர்ந்தோர்களை சந்தித்து அவர்களை வடமாகாண அபிவிருத்திக்கு முதலீடு செய்யும் வண்ணம் அழைக்க ஐக்கிய இராஜ்யத்திற்கு விஜயம் செய்தார்கள்.

ஒ கௌரவ மார்க் பீல்ட் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஆசிய பசுபிக் இராஞாங்க அமைச்சர் ஐக்கிய இராஜ்ய வெளிநாடு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தில் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரை இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டார்

லு கௌரவ மார்க் பீல்ட் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரித்தாணியா ஐக்கிய இராஜ்யம் மற்றும் வட அயர்லாந்து ஆசிய பசுபிக் இராஞாங்க அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருடன் சந்திப்பொன்றை நிகழ்த்தினார் . . .

ணு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரை கௌரவ பிரதமரது ஐக்கிய இராஜ்ய விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. விஜயத்தின்போது கௌரவ பிரதமர் லண்டன் பங்கு பரிவர்த்தணை குருப்புக்கு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி விஜயம் செய்தார் லண்டன் பங்கு பரிவர்தனை சந்தையில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி ஒக்போர்ட் யுனியனில் இந்து சமுத்திர பிராந்தியத்தின் பூகோள மூலோபாயத்தின் முக்கியத்துவம் பற்றி ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்

யுய கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற கமிஷன் என்பனவற்றிற்கு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐக்கிய இராஜ்யத்தில் முதலீட்டாளர் விளம்பர நிகழுவுகளின் தொடர்களை ஏற்பாடு செய்வதில் வசதிபடுத்திக் கொடுத்தார். லண்டன் பங்கு பரிவர்தணையில் கௌரவ பிரதமரால் சம்பிராயபூர்வமாக சந்தை திறப்பு விழா, லண்டன் பங்கு சந்தையில் முதலீட்டு மன்றம் மற்றும் இலங்கை உயர் ஸ்தாணிகம் வளாகத்தில் முதலீட்டு மன்றம் என்பன இந் நிகழ்வில் அடங்கும். அத்துடன் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி உயர் ஸ்தாணிகத்தில் கொழும்பு பங்கு முதலீட்டாளர் மன்றம் ஏற்பாடு செய்யப்பட்டது

டீடி பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பாட்டாளி சம்பிக்க ரணவக்க மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலக அமைச்சர் கௌரவ மார்க் பீல்டு என்பவர்களுக்கு இடையேயான சந்திப்பு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம 17 ஆம் திகதி ஐக்கிய இராஜ்யத்தில் கௌரவ மார்க் பீலட் வின் அலுவலகத்தில் இடம்பெற்றது

ஊஉ ஐக்கிய இராஜ்யத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தாணிகம் கொழும்பிலுள்ள பிரித்தாணிய உயர் ஸ்தாணிகம் மற்றும் இலங்கையிலுள்ள பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சுடன் ஒருங்கிணைந்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி இலங்கை உயர் ஸ்தாணிகம் வளாகத்தில் பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சரின் கீழ் ஒரு முதலீட்டு விளம்பர நிகழ்வை நடத்த வசதிகள் வழங்கியது.

னுன வருடந்தோரும் 35,000க்கும் அதிகமான பிரயாணிகள் 5,000 காட்சியாளர்கள் 2,000 அதிகமான பயண முகவர்கள் மற்றும் சுற்றுளா இயக்குணர்கள் மற்றும் முன்னனி உலகலாவிய பயண ஊடகங்களை ஈர்க்கவல்ல பயணங்கள் மற்றும் சுற்றுளா துறையின் முன்னனி உலக நிகழ்வான 2018 உலக பயண சந்தைக்கு ஒத்திசைவான இலங்கை சுற்றுளா துறை அதனுடைய புதிய பிரேண்ட் அடையாளமான “ அதனால் இலங்கை” என்பதை 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பித்து வைக்க வசதிகள் வழங்கியது. அது இலங்கையின் வனஜீவியம், மற்றும் சுற்றுளா துறை அமைச்சர மற்றும் ஏனய பிரதாணிகள் முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதிவரை லண்டனில் எக்செல் கண்காட்சி மைதானத்தில் நடைபெற்ற உலக பயண சந்தையில் இலங்கையிலிருந்து 60 தொழில் பங்குதாரர்கள் மற்றும் ஏனையோர் கலந்து கொண்டார்கள்.

ee வருடாந்த பொதுநலவாய கண்காட்சி பொதுநலவாய நாடுகளினால் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது இலங்கை ஸ்டோலில் பாரம்பரிய இனிப்பு பலகாரங்கள் சோறு கரி மற்றும் இலங்கை தேயிலை அடங்கியிருந்தன.

குக உயர் ஸ்தாணிகர் மற்றும் பிரதி உயர் ஸ்தாணிகர் இலங்கையின் அணைத்து கட்சி பாராளுமன்ற குழு அங்கத்தவர்கள் அடங்களாக தெறிவு செய்யப்பட்ட ஐக்கிய இராஜ்ய பாரளுமன்ற அங்கத்தவர்கள் மற்றும் கோமான் மற்றும் பிரபுக்கள் அவையின் அங்கத்தவர்களை சந்தித்து அவர்களை ஆய்வு காலப் பகுதியில் சமூகத்தில் ஈடுபாடு அடையச் செய்தார். இலங்கையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் நல்லாட்சி பொருப்புக்கூறல் நல்லிணக்கம்

மனித உரிமைகள் என்பனவற்றை முன்னேற்ற மடையச்செய்வது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஐக்கிய இராஜ்ய பாராளுமன்ற உறுப்பினர்கள் மறறும் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறும் வழமையான சந்திப்புகள்

புப பொதுநலவாய பட்டயத்தை செயல்படுத்துவதில் பொதுநலவாயம் முழுவதும் சதுப்புநில காடுகளை மறுசீரமைக்கும் முயற்சியை ஒருங்கிணைத்தது. இதற்கு ஏகமனதாக CHOGM 2018ல் அரசாங்க தலைவர்களால் இணக்கம் காணப்பட்டது. சதுப்பு நில காடுகளை மறுசீரமைக்க பொதுநலவாய பட்டய செயற் குழுவை தாபிப்பதற்கு உயர் ஸ்தாணிகம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயற்படுகின்றது.

பி சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம்

பிராந்திய பாதுகாப்பு
ஆர்மேனியா. ஆசர்பஜான். பெலாரஸ், கசகஸ்தான் கிரிகிஸ்தான் மோல்டோவா ரஸ்ஸியா தஜிகிஸ்தான் டேர்க்மென்னிஸ்தான் உக்ரெயின் உஸ்பெகிஸ்தான்

வதிவித தூதரகங்களின் எண்ணிக்கை 01
ரஸ்ஸியா

சமகால அங்கீகாரங்களின் எண்ணிக்கை

ஆர்மேனியா. ஆசர்பஜான். பெலாரஸ், கசகஸ்தான் கிரிகிஸ்தான் மோல்டோவா ரஸ்ஸியா தஜிகிஸ்தான் டேர்க்மென்னிஸ்தான் உக்ரெயின் உஸ்பெகிஸ்தான்

ரஸ்ஸிய சம்மேளணம்

சஸ்ஸிய சம்மேளனத்தில் இலங்கை தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

ள ரஸ்ஸிய அரச கூட்டுத்தாபணத்தின் பிரதி செயலாளர் நாயகம் திர நிக்கோலே ஸ்பாக்ஸி திரு ஓலெக் சாவென்கோவுடன் சேர்ந்து 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை பாதுகாப்பு துறையில் இரண்டு நாடுகளக்குமிடையே ஒத்தாசையை அதிகறிக்க இலங்கைக்கு விஜயம் செய்தார்

பி கூட்டுச் சேவையின் கால்நடை மற்றும் தாவர சுகாதார கங்காணிப்பு மற்றும் ரஸ்ஸியா தாவர தனிமைப்படுத்தல் ஆராய்ச்சி மையம் என்பனவற்றிற்கான நான்கு அதிகாரிகள் என்பவர்களது 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரையான இலங்கை விஜயத்திற்கு இலங்கை தேயிலைச் சபையுடள் ஒருங்குபடுத்தி வசதி வழங்கப்பட்டது.

ஊ ரஸ்ஸிய சம்மேளணத்தில் இலங்கை தூதரகத்தின் தேயிலை ஊக்குவிப்பு பிரிவு மொஸ்கவிவில் லொட்டீ ஹோட்டலில 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை (இலங்கை தேயிலை விருந்து மற்றும் நெட்வெர்க்கங்

அமர்வு மற்றும் இலங்கையின் 70வது சுதந்திர தின கொண்டாட்டத்திற்கான ˙இலங்கை தேயிலை ஸ்பொன்சர்சிப) இலங்கை தேயிலை பிஆர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.

னு 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரை சர்வதேச பாதுகாப்பு பற்றிய மொஸ்கவ் மாநாட்டில் கலந்து கொள்ள பாதுகாப்பு செயலாளர் திரு கபில வைத்தியரத்ன தலைமையில் தூதுக் குழு ரஸ்ஸியாவுக்கு சென்றது.

நு 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரை மொஸ்கவ் சர்வதேச கல்வி கண்காட்சியில் பங்குபெற உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் செயலாளர் திரு டி சி திசாநாயக்க ரஸ்ஸியாவுக்கு விஜயம் செய்தார். விஜயத்தின்போது ரஸ்ஸிய சம்மேளணத்திலுள்ள விஞ்ஞானம் மற்றும் கல்வி பிரதி அமைச்சர் திரு பவல் சென்கோவிச் உடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டார்.

கு ரஸ்ஸியாவில் சென் பீட்டர்ஸ் பேர்க்வில் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15யிலிருந்து 19 ஆம் திகதி வரை நடைபெற்ற VIII சென்ட் பீட்டர்ஸ்பேர்க் சர்வதேச சட்ட கூட்டத்தில் பங்குபெற இலங்கையின் நீதி அமைச்சர் கௌரவ தலாத்தா அத்துகோரளவின் விஜயத்திற்கு வசதிகள் வழங்கப்பட்டன.

பு 2018 ஆம் ஆண்டு மே மாதம் 24யிலிருந்து 269 ஆம் திகதி வரை சென் பீட்டரஸ்பேர்க் பொருளாதார அரங்கில் பங்குபெறுவதற்காக ரஸ்ஸிய விஜயத்தை மேற்கொண்ட கௌரவ அர்ஜுனா ரணதுங்க பெற்றோளிய வளங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சரது விஜயத்திற்கு வசதிகள் வழங்கப்பட்டது.

ர் கண்டி பாரம்பரியம் மற்றும் தொழிற் பயிற்ச்சி திறன் அபிவிருத்தி ஆராய்ச்சி தொழில் நுட்பம் விஞ்ஞானம் பிரதி அமைச்சர் கௌரவ கருணாரத்ன பரணவித்தான மற்றும் ஏ டி சுசில் பிரேமஜயந்த பாராளுமன்ற உறுப்பிணர் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரை பாராளுமன்ற வளர்ச்சி பற்றிய சர்வதேச அரங்கில் பங்குபற்ற மொஸ்கவ்விற்கு விஜயம் செய்தார்

- 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29 ஆம் திகதி நடந்த சமாதான நோக்கங்களுக்கான அணு சக்தியின் பாவணை துறையின் ஒத்தாசைக்கு இலங்கை ரஸ்ஸியாவுக்கு இடையே கூட்டு பணி குழு அமர்வுகள் இடம்பெற்றன

- ˙ 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை மொஸ்கவ்வில் இலங்கை தேயிலை விளம்பர பிரச்சாரம் ரஸ்ஸியாவில் 2018வது பீபா உலக கோப்பைக்கு இணையாக ஏற்பாடு செய்யப்பட்டது. பிரச்சாரத்தில் டிஜிட்டல் சிட்டி பலகைகளின் இரண்டு வடிவங்களிலும் விளம்பர பலகைகளில் 58 விளம்பர பலகைகள் அடங்கியிருந்தன.

- 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை ரஸ்ஸிய சம்மேளணத்தின் இராணுவ தொழில்நுட்ப ஒத்துளைப்பிறகான

சம்மேளணத்தின் பணிப்பாளர் திரு டமிட்ரி சாகு இலங்கைக்கு விஜயம் செய்தார். விஜயத்தின்போது அவர் அதிமேதகு இலங்கை ஜனாதிபதியை சந்தித்தார்.

- 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை சர்வதேச இராணவ தொழில்நுடப அரங்கில் பங்குபெற எயார் வைய்ஸ் மார்ஸல் கே எப் ஆர் பந்நாந்து தலைமையிலான தூதுக் குழு ரஸ்ஸியாவுக்கு விஜயம் செய்தது.

- 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை ரஸ்ஸியாவில் நடைபெற்ற ''ஸ்பாக்ஸ்கயா டவர் இசை விழாவிற்கு இலங்கை இராணுவம் கடற்படை மற்றும் விமானப் படையிலிருந்து ஐம்பது பணியாளர்கள் விஜயம் செய்து இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

- 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 4 ஆம் திகதி வரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு கபில வைத்தியரத்ன தலைமையில் தூதுக்குழ ரஸ்ஸிய சம்மேளணத்திற்கு விஜயம் செய்தது. விஜயத்தின் போது பின்வரும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

- இலங்கை சனநாய சோஷலிச குடியரசு மற்றும் ரஸ்ஸிய சம்மேளணத்திற்கு இடையே இராணுவ ஒத்துளைப்பு தொடர்பாக மொஸ்கவ்வில 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திப்பட்டது

- மொஸ்கவ்வில் இராணுவ தொழில்நுட்ப ஒத்துளைப்பு தொடர்பான இணை ரஸ்ஸியா இலங்கை செயற் குழுவின் குறிப்பு விதிமுறைகள் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி கைச்சாத்திப்பட்டது

- ரஸ்ஸிய சம்மேளனத்தின் பாதுகாப்பு அமைச்சு ரஸ்ஸிய இராணுவ நிறுவனங்களில் இலங்கை இராணுவத்திற்கு 25 பயிற்ச்சி வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

- இலங்கையின் முதன்மை கைத்தொழில்கள் மற்றும் சமூக நல அமைச்சின் கீழ் வேளாண்மை துறை நவீனமயமாக்கல் திட்டம் என்பனவற்றுடன் இணைந்து 2018 மொஸ்கவ் உலக உணவில் இலங்கை பங்குகொள்ள வசதி வழங்கியது. ஆயர்வேத பொருட்கள், நீரிலப்பு பழங்கள் தேயிலை தேங்காய் இலங்கை மசாலா துறைகளில் ஆறு இலங்கை ஏறறுமதியாளர்கள் மற்றும் ஐந்து உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றினார்கள். மேலும் இலங்கை காட்சி அரங்கில் சமையல் கலையை செய்முறையால் எடுத்துக்காட்டி இலங்கை உணவுகளின் தனித்தன்மையை வெளிப்படுத்தியது.

- இலங்கை சுற்றுளா மேம்பாட்டு பணியகத்துடன் இணைந்து 25வது எம்ஐடிடி மொஸ்கவ் சர்வதேச பிரயாணம் மற்றும் சுற்றுளா கண்காட்சியில் இலங்கை பங்குபெற வசதியளித்தது. இந்த நிகழ்வில் 11 பயண வர்த்தக கம்பனிகள் பங்குபற்றின

- 50 வீத இறங்கும் செலவை விலக்கி அசூர் எயார் மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் என்பனவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இறுதிப் படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் உதவியுடன் மொஸ்கவ்வில் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதி வரை இலங்கை OTDYKH ஓய்வு கண்காட்சியில் கலந்து கொள்ள வசதிப்படுத்திக் கொடுத்தது. இந்த நிகழ்வில் 14 சுற்றுலா மற்றும் பிரயாண வர்த்தகர்கள் கலந்து கொண்டார்கள். தேசிய காட்சி அரங்கு இலங்கை இராணுவ நடன குழுவால் நடாத்தப்பட்ட பாரம்பரிய நடன விருந்து தேசிய அரங்கை சிறப்பித்து காட்டியது.

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி மொஸ்கவ் செரட்டன் பெலஸ் ஹோட்டலில் இணைப்பு சுற்றுப் பயணம் மற்றும் இலங்கை சுற்நுலா மேம்பாட்டு பணியகத்துடன இணைந்த பிரயாண முகவருக்கு தகவல் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் 60 பிரயாண முகவர்கள் பங்கு பற்றினார்கள்.

- ரஸ்ஸிய சம்மேளணத்திலுள்ள இலங்கை தூதரக்தின் தேயிலை ஊக்குவிப்பு பிரிவு 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 5 – 09 ல் நடைபெற்ற PRODEXPO 2018 உணவு மற்றும் பானங்கள் கண்காட்சியில் இலங்கை தேயிலை காட்சி அரங்கில் 6 காட்சியாளர்களுக்கு இடமளிக்க அத்துடன் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 – 18 திகதிகளில் இலங்கை தேயிலை காட்சி அரங்கை உலக உணவு அர்பஜான் 2018 கண்காட்சியில் ஏற்பாடு செய்து 7 காட்சியாளர்களுக்கு இடமளிக்க அத்துடன் 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 4 – 6 திகதிகளில் டஸ்கன்ட் யுஸ்பேகிஸ்டான 2018 கண்காட்சியில் இலங்கை தேயிலை காட்சி அரங்கை எற்பாடு செய்து 3 காட்சியாளர்களுக்கு இடமளித்து அத்துடன் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 – 26 திகதிகளில் மொஸ்கவிவில கோப்பி மற்றும் தேநீர் திருவிழா மற்றும் இலங்கை தேயிலை விளம்பர நிலைப்பாடு ஒன்றை பேணுதல் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 – 20 மொஸ்கவ்வில் உலக உணவு கண்காட்சி 2018 6 காட்சியாளர்களுக்கு இடமளிக்க இலங்கை தேயிலை காட்சி அரங்கை ஏற்பாடு செய்தல்.

- மொஸ்கவ்வில் மைய கண்காட்சி மண்டபம் மெனீஜ் இல் **ரஸ்ஸிய ஆற்றல் வாரம்** சர்வதேச அரங்கு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 – 6 ல் நடைபெற்றது. **"மாறி வரும் உலகில் நிலையான ஆற்றல்:"** என்று பார்வையாளர்களுக்கு உரையாற்றிய ரஸ்ஸிய சனாதிபதி வால்டிமர் புட்டின் அரங்கின் சிறப்பு முழுமையான அமர்வில் கலந்து கொண்டார் **ரஸ்ஸிய ஆற்றல் வாரத்தின்** முக்கிய இலக்கு ரஸ்ஸியாவிவ் எரிபொருள் எண்ணை தொழில் என்பனவற்றை நிருபிப்பதாகும் அத்துடன் மேம்பட்ட சர்வதேச ஒத்துளைப்பக்கான தளத்தை வழங்குவதாகும். இந்த மன்ற தலைப்புகள் எரிவாயு துறை எண்ணைய் தொழில்

அணு தொழில் பெற்றோல் வேதியியல் மின்சாரம் எரிபொருள் சேகரிப்பு மற்றும் ஆற்றல் சேகரிப்பு மற்றும் அதிகறித்த போதுமன சக்தி ரஸ்ஸியா சம்மேளணத்தின் இலங்கை தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக முழுமையான அமர்வில் கலந்து கொண்டார் அந்த நிகழ்வில் ஒவ்வொரு கண்டத்திலுமிருந்து ஏராளமான வர்த்தக அரசியல் மற்றும் நிருவாக பிரபலமான பிரதிநிதிகள் சர்வதேச ஒத்துளைப்பை சக்தி துறைக்கு மற்றும் அதிகறித்து மற்றும் பொருளாதாரம் சுற்றாடல் மற்றும் திறமையான முகாமைத்துவ நிகழ்ச்சி நிரலில் உள்ள சவால்களை எதிர்கொள்ள. இலங்கை தூதுக்குழுவில் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் சக்தி அமைச்சின் மேலதிக செயலாளர திரு மெரில் குணதிலக்க இலங்கை மின்சார சபையின் மேலதிக செயலாளர் திரு எஸ் டி டபிள்யு குணவர்தன பணிப்பாளர் நாயகம் பெட்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் திரு வஜிரா திசாநாயக்க என்போர் தூதுக் குழுவில் அடங்குவர்

- 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 – 26 மொஸ்கிவில் நடைபெற்ற 2018 இன்டர்பொலிடெக்ஸ் 22வது சர்வதேச உள்நாட்டு பாதுகாப்பு கண்காட்சியில் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு இராஞாங்க அமைச்சர் கௌரவ நாலின் பண்டார தலைமையிலான மூன்று அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக் குழு பங்குபற்றியது 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கௌரவ நாலின் பண்டார மற்றும் இலங்கை தூதுக்குழு ரஸ்ஸிய சம்மேளணத்தின் உள்விவகார அமைச்சர் கௌரவ வி கோலோகொல்ட் வினால் திறந்து வைக்கப்பட்ட கண்காட்சி திறப்பு விழாவுக்கு கௌரவ நாளின் பண்டார மற்றும் இலங்கை தூதுக் குழ பங்குபற்றியது. கண்காட்சி ரஸ்ஸிய சம்மேளணத்தின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ரஸ்ஸிய ரஸ்ஸிய சம்மேளனத்தின் தேசிய பாதுகாப்பின் கூட்டாச்சி சேவை அத்துடன் நிகழ்வின் அமைப்பாளராக செயல்படும் கண்காட்சி கம்பனிகளின் பிசான் குருப். கண்காட்சி காலப்பகுதியில் கௌரவ நலின் பண்டார ரஸ்ஸியாலிலுள்ள சர்வதேச பொலிஸ் ஒத்துளைப்பு திணைக்கள தலைவரை சந்தித்து அரச பத்திரங்கள் பிரங்கிகள் மற்றும் பொதுவில் சர்வதேச ஒத்துளைப்பு என்பனவற்றின் விவகாரங்களை கலந்துரையாடினார். கண்காட்சியில் காடசியாளர்கள் கௌரவ நாவின் பண்டாரவுக்கு மிகவும் நவீன மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் சட்ட அமுழாக்க அதிகாரிகளினால் பாவிக்கப்பட்ட உபகரணங்களை விளக்கி நிருபித்தனர்.
- 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 – 27 ரஸ்ஸியா மொஸ்கவிவில நடந்த ஐஊயீ யின் 10வது பொது சட்டசபையில் முதன்மை தொழில்கள் மற்றும் சமூக நல அமைச்சர கௌரவ தயா கமகே பங்கு பற்றினார். மேலே உள்ள கூட்டத்திற்கு இணையாக கௌரவ அமைச்சர் 27 ஆம் திகதி ஒக்டோபர மாதம் இன்டர் சாம் கண்காட்சிக்கு விஜயம் செய்து இண்டர் சார்ம் விற்பனை மேலாளர் திரு அலெக்சான்ரை இலங்கை ஏற்றுமதியாளர்கள் பங்கு பற்றக்கூடிய எதிர்கால நிகழ்வுகளை பற்றி கலந்துரையாட அவரை சந்தித்தார்.

- மொஸ்கவ்வில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர மாதம 2 – 5 நடந்த சர்வதேச தன்னார்வ மன்றத்திற்கு இலங்கையிலிருந்த ஒம்பது அங்கத்தவர்கள் கொண்ட

துாதுக் குழு ரஸ்ஸியாவுக்கு விஜயம் செய்தது. மன்றம் இலங்கை துாதுக்குழ எனய இளைஞர் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு அளவளாவ மற்றும் அவர்களுடைய அனுபவங்களை பரிமாறிக்கொள்ள மற்றும் புதிய உறவுகளை உலகம் முழுவதிலும் உள்ள இளைஞர்கள் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் உடன் உருவாக்க நல்ல ஒரு இடத்தை வழங்கியது. டிசம்பர் 6 ஆம் திகதி இலங்கை துாதுக்குழு அங்கத்தவர்கள் ரஸ்ஸியாவினு தேசிய இளைஞர் சபை தலைவரான திரு கிரகரி பெட்சுபுவ் வை இரண்டு நாடுகளின் இளைஞர் அமைப்புகளுடன் நெருங்கிய ஒத்துளைப்பு மற்றும் பங்காளித்துவம் என்பனவற்றை கலந்தாலோசிக்க சந்தித்தது. அவர்களது கலந்துரையாடலின்போது துாதுக் குழு இரண்டு நாடுகளின் இளைஞர் அமைப்புகளுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பரிந்துரைக்கப்பட்டது

- துாதரகம் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி துாதரக வளாகத்தில் துாதரக பணியாளர்கள மற்றும் இலங்கை சமுதாயம் பங்கேற்க ஒரு கொடி ஏற்றும் விழாவை ஏற்பாடு செய்தது. அத்துடன் இந்த விழாவை கொண்டாட துாதரகம் ஒரு விசேட கலாச்சார கண்காட்சி மற்றும் காலா இரவு போசன வரவேற்பு விருந்தை 175 விருந்தினர்கள டுமா நாட்டு அங்கத்தவர்கள் பெடரல் பேரவை அங்கத்தவர்கள் ரஸ்ஸிய அரசாங்க அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கல்வி விஞ்ஞான அமைச்சு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுற்றுளா கலாச்சார அமைச்சு பெடரல் சுங்க சேவை கால்நடை மற்றும் கங்காணிப்பு என்பதற்கான பெடரல் சேவை ஐரோப்பியாவிலிருந்து துாதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் சார்க் ஆசிய மற்றும் மக்கள் கல்வியளாலர்கள் ரஸ்ஸிய வர்த்தக சமூகம் மற்றும் பிரயாண வர்த்தகர்கள் என்பவர்கள் வருகைதர நடந்தேறியது.

- ரஸ்ஸிய வெளிநாட்டு அமைச்சில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தை மேற்பார்வையிடும் ரஸ்ஸிய சம்மேளனத்தின் வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் ஐகர் மோர்குலோ்வை கலாநிதி தயான் ஜயதிலக்க சந்தித்து அவரது நியமன கடிதத்தின் ஒரு பிரதியை 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி வழங்கினார். பிரதி அமைச்சர் கலாநிதி தயாலன் ஜயதிலக்கவை புதிய பிரதமராக மிகவும் அன்புடன் வரவேற்று இலங்கை மற்றும் ரஸ்ஸிய சம்மேளனத்திற்கு இடையே உள்ள வலுவான சினேகபூர்வ உறவு மற்றும் பன்முகத்தன்மைவாய்ந்த மன்றங்கள் என்பனவற்றை நினைவு கூர்ந்தார்

- கலாநிதி தயான் ஜயதிலக்க ரஸ்ஸியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மாநில நெறிமுறையின் செயலாளர் திரு ஐகர் பொக்டேஸ்வ்வை ரஸ்ஸியாவின் பொது நெறிமுறை மற்றும் துாதுவர்களுக்காக வரவிருக்கும் உத்தியோகபூர்வ விழா என்பன தொடர்பாக சந்தித்தார் அவர் ரஸ்ஸியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆசியாவின் இரண்டாவது துறை செயலாளர் திரு சாமீர் கபுல்வோ மற்றும் ரஸ்ஸியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சர்வதேற அமைப்புகளின் செயலாளர் திரு பெட் லோஜியையும் சந்தித்தார்

- ரஸ்ஸிய சமமேளனத்தின் இலங்கைக்கான முழுமையானதும் அசாதாரணதுமான புதிய துாதுவர் கலாநிதி தயான் ஜயதிலக்க நியமன கடிதங்களை 2018

ஆம் அண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி மொஸ்கவ் கிரெம்லின உள்ள ரஸ்ஸிய தலைவர் அதி மேதகு வால்டிமர் புட்டினிடம் கையளித்தார் 23 நாடுகளின் துர்துவர்களிடமிருந்து நியமனங்களைப் பெற்ற தலைவர் புட்டின் ஒரு உரை நிகழ்த்தினார். அவரது உரையாற்றலின்போது இலங்கையுடன் ரஸ்ஸியா பாரம்பரியமாக நட்புறவை பேணி வருகின்றது. மற்றும் சுற்றுளா விவசாயம் மீன்பிடி போன்ற துறைகள் அடங்களாக பொருளாதார ஒத்துளைப்பு மற்றும் நெருங்கிய வர்த்தகம் என்பனவற்றிலும் மிகவும் ஆர்வமாக உள்ளது என்றார். 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி தனது நியமனக் கடிதங்களை வழங்கியபின் இலங்கை ரஸ்ஸியா பங்காளித்துவ பகுதிகளை பிரதிநுவப்படுத்தும் ரஸ்ஸிய விருந்தாளிகளுக்கு அதிமேதகு கலாநிதி தயான் ஜயதிலக்க தனது முதல் அதிகாரபூர்வ வரவேற்பை வழங்கினார்.

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அதிமேதகு கலாநிதி தயான் ஜயதிலக்க ரஸ்ஸிய சம்மேளணத்தின் மாநில டுமாக்கு விஜயம் செய்து கௌரவ ஹேவ்ஜினி பிரிமாகோவ் இளைய பாராளுமன்ற உறுப்பினர் சந்தித்தார். துாதுவர் மற்றும் திரு பிரிமாகோவ் ஆகியோர் தற்போதய இருதரப்பு மற்றும் பிராந்திய உறவுகளை ஒரு பரந்த சூழலில் வைப்பதற்கு உதாரணமாக மேலும் விரிவான மற்றும் பல்நோக்கு சர்வதேச கண்ணோட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏராளமான பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் அபிலாஷைகளை கண்டறிந்தார்கள் இரண்டு இடைதரகர்களும் பெரும்பாலும் மற்ற பொதுவான புள்ளிகள் இல்லாமல வெவ்வேறு கட்சிகள் மற்றும் குழுக்களை ஒன்றுபடுதும் உலகலாவிய சமாதான இயக்கத்தை புத்துயிர் செய்யும் முக்கியத்துவத்தை அடிகோடிட்டு காட்டினார்கள் . 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி துாதுவர் ரஸ்ஸிய பாராளுமன்றத்தின் பெடரல் கவுன்சிலின் வெளிநாட்டு அலுவல்கள் குழு தலைவர் சேனட்டர் அதி மேதகு கொன்ஸ்டேன்டின் கொசாவை சந்தித்தார்

- இலங்கையின் முதன்மை கைத்தொழில்கள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் கீழ் விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்துடன் இணைந்து 2018 ஆம் ஆண்டு மொஸ்கவ் உலக உணவு நிகழ்வில் இலங்கை பங்குபெற துாதரகம் ஒருங்கிணைத்தது. ஐந்து அதிகாரபூர்வ பிரதிநிதிகள் மற்றும இலங்கை மசாலா தேங்காய் தேயிலை நீர்நீக்கப்பட்ட பழங்கள் மற்றும் ஆயர்வேத பொருட்கள் துறைகள் சம்பந்தமான ஆறு இலங்கை ஏற்றுமதியாளர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினார்கள். இலங்கை பொருட்களின் தனித்துவம் என்னவெனில் இலங்கை காட்சி அரங்கில் சமையல் கலையை எடுததுக்காட்டி விளக்கும்போதே இலங்கை பொருட்களும் காட்சிபடுத்தப்பட்டன

- இலங்கை சுற்றுளா ஊக்குவிப்பு பணியத்துடன் இணைந்து 25வது MITT மொஸ்கவ் சர்வதேச பிரயாண மற்றும் சுற்றுளாகண்காட்சியில் இலங்கை பங்குபெற துாதரகம் வசதியளித்து.

- இலங்கை சுற்றுளா ஊக்குவிப்பு பணியகத்தின் போது தொடர்பு பிரிவுடன் ஒருங்கிணைந்து துாதரகம் கலாச்சார தொலைக்காட்சி நிகழ்ச்சி திட்ட பணி

அங்கத்தவர்களது இலங்கை விஜயத்திற்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து. அவர்கள் இலங்கை வரலாறு கலாச்சாரம் ஆவணப்பட வீடியோக்களை படப்பிடிப்பு செய்ய திட்டமிட்டுள்ளார்கள்

- சிவனொலிபாதமலையில் ஒரு வீடியோ படப்பிடிப்பு செய்ய இலங்கை தனியார்துறை முகவர்கள் மற்றும் ரஸ்ஸிய தொலைக்காட்சி சேவை பியட்நிட்சா இடையில் ஒரு இணைப்பை ஏற்படுத்த வசதிகள் செய்து கொடுத்தது.

- மொஸ்கோ மற்றும் கொழும்பு ரஸ்ஸியா விமானம் PSJC AEROflot மற்றும் ரஸ்ஸிய விமானம் ரோஸியா விமானம் இடையே நேரடி விமானங்களை செலுத்த ஒப்புதல் வழங்குவதற்கு வசதிகள் வழங்கியது.

- இந்த நிகழ்வின்போது விருந்தாளிகளுக்கு இலங்கைக்கு அவசியமான ஏராளமான இசைக்கூறுகளின் பாரம்பரிய கலாச்சாரம் என்பனவற்றை இரசித்து இலங்கை தேநிரை சுவைத்து காட்சியை இரசிக்க வாய்ப்பு ஏற்பட்டது.

- நிகழ்வின் கட்டமைப்பில் திருமதி அனா ரஸ்ஸிய தேநீர் கப் செம்பியன் மற்றும் தேயிலை கலவை வெற்றியாளர் இலங்கை தேயிலையின் அடிப்படையில் குளிர் தேநீர் தயாரிக்கும கலையை எடுத்துக் காட்டினார். முதிப்பிற்குரிய விருந்தினர்களுக்கு மேன்ஹெட்டன தேநீரை சுவைக்க வழங்கினார்

- இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து தூதரகம் இலங்கை தேயிலையை சுவைக்கும் அமர்வை நானகு பெரிய ஏயுசான் ஜப்பேர்மார்கட் ல ஓகஸ்ட் 17 முதல் 19 வரை ஓகஸ்ட் 24 முதல் 26 வரை ஓகஸ்ட் 31 முதல் 2 செப்டம்பர மற்றும் 7 செப்டம்பர் முதல் 9 செப்டம்பர 2018 வரை நடத்தியது

தூதரகம் உக்ரெயின் சர்வதேச உணவு மற்றும் பானம் கண்காட்சி மற்றும் கீவ் உக்ரெயினில் 23 - 25 ஒக்டோபர் 2018 நடைபெற்ற உலக உணவு உக்ரெயின் மற்றும் உக்ரெயின் தேயிலை சந்தையில் இலங்கை தேயிலையை மேலும் வலுவடையச் செயயும் நோக்கத்துடன் தூதரகம் பங்குபற்றியது.

பேலாரஸ்

ரஸ்ஸிய சம்மேளனத்தில் ஒரே வேளையில் பெலாரசுடன் அங்கீகாரம் செய்யப்பட்ட இலங்கை தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

இரகசிய தகவலின் பரஸ்பர பாதுகாப்பு பற்றிய உடன்படிக்கையின் வரைவு உறை பற்றி நிபுணர் மட்ட ஆலோசணை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை நடத்த பெலாருசின் தூதுக் குழு (4 பிரதிநிதிகள்) இலங்கைக்கு விஜயம் செய்தார்கள்

1.3 **உக்ரெயின்**

உக்ரெயினில் ஒரே வேளையில் அங்கீகாரம் செய்யப்பட்ட துருக்கியிலுள்ள இலங்கை தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் முதலீடு பற்றி கர்கீவில் இலங்கைக்கு கௌரவ கொன்சுல் சாததியமான வேட்பாளர் மற்றும் முக்கிய வர்த்தகர்கள் உடன் கலந்துரையால்கள் நடத்தப்பட்டன

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உக்ரெயின் வருடாந்த சுற்றுளா பொருட்காட்சியில் இலங்கை பங்குபெற வசதிகள் வழங்கப்பட்டன

- 2018 ஆம் ஆண்டு ஜுலை 19லிருநது 20 ஆம் திகதி வரை கௌரவ திருமதி ஒக்சானா பிலொயிர் தலைமையில் உக்ரெயின் பாராளுமன்ற தூதுக்குழ இலங்கைகக விஜயம் செய்தது.

ஐரோப்பிய ஒன்றியம், பலதரப்பு நேச உடன்படிக்கைகள் மற்றும் பொதுநலவாயப்பிரிவு

1. ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் உறவுகள்

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் உறவுகளில் 2018 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் சாதகமான முன்னேற்றம் காணப்பட்டது.

2018 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளில்/ செயற்பாடுகளில் பின்வருவன அடங்கும்:

I. ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பி பிளஸ் (GSP Plus) வர்த்தக வசதி மீதான தொடர் செயற்பாடுகள்

- இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் (GSP Plus) வசதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜீ.எஸ்.பி பிளஸ் செயல் அம்சங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதனைக் கண்காணித்தல் மீதான நடவடிக்கை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பி. பிளஸ் (GSP Plus) ஒழுங்கு விதிகளின் பிரகாரம், நாடொன்று ஜீ.எஸ்.பி. பிளஸ் பயன்பெறும் நிலையை அடைந்ததும், முற்றிலும் தீவிரமான மற்றும் தொடர்ச்சியான இரண்டு வருட காலச் சுழற்சி மீதான கண்காணிப்பு செயல்முறை தொடங்குகின்றது.

  இந்தச் செயல்முறையில் 2 முடிவு காணும் வழிமுறைகள் அடங்குகின்றன. அவையாவன (I) பயன்பெறும் நாட்டிற்கான கணிப்பெண் பதிவு அட்டை, (II) பயன்பெறும் நாட்டுடன் நெருங்கிய முறையிலான பேச்சு வார்த்தை (விஜயங்கள் மற்றும் கூட்டங்கள் முதலியன மூலம்). இது சம்பந்தமாக, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் (GSP Plus) கணிப்பெண் பதிவு அட்டையினை கௌரவ அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட 2018 மார்ச் 29 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுப்பி வைத்தது.

- ஜீ.எஸ்.பி. பிளஸ் (GSP Plus) வசதியை தொடர்ந்தும் வழங்குவது சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கை அடுத்த 2 வருடங்களில் மதிப்பிடப்படவுள்ள செயல் முறையை இந்தக் கணிப்பெண் பதிவு அட்டை உருவாக்குகின்றது. அதில் உள்ளடங்கும் விவகாரங்கள் குறித்த பட்டியலானது, மனித உரிமைகள், தொழில், ஆட்சி முறை மற்றும் சுற்றாடல் ஆகிய நான்கு அம்சங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஜீ.எஸ்.பி. பிளஸ் தொடர்பான 27 சர்வதேச உடன்படிக்கைகளை

  நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் அநேகமான முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து வருகின்றது.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, மேற்குறிப்பிட்ட நான்கு கொத்தணிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டதனைத் தொடர்ந்து, ஜீ.எஸ்.பி. பிளஸ் குவிமைய அம்சம் குறித்து அபிவிருத்தி மூலோபாயம்

மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுடன் ஒருங்கிணைந்து கணிப்பெண் பதிவு அட்டைக்கான இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தொகுத்தது. ஜீ.எஸ்.பி. பிளஸ் மீதான அமைச்சர்கள் மட்டத்திலான குழுவின் அங்கீகாரத்தைத் தொடர்ந்து இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஐரோப்பிய ஒன்றியத்திடம் 2018 ஒகஸ்ட் 9 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

- பிரதான ஜீ.எஸ்.பி.பிளஸ் வாக்குறுதி விடயங்களைக் கையாளும் வகையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தலைமையில் 2018 ஒக்டோபர் 19 இல் நடைபெற்ற ஜீ.எஸ்.பி பிளஸ் மீதான அமைச்சரவை மட்டத்திலான கூட்டத்தின் போது அத்தகைய முக்கியமான விடயங்கள் மீது கவனஞ் செலுத்துவதற்கான அமைச்சுக்களுக்கிடையேயான சம்மதம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தினால் எழுப்பப்பட்ட சில முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை தெளிவு படுத்துவதில், அமைச்சானது கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவினருடனும் பிரசெல்ஸில் உள்ள அதிகாரிகளுடனும் அவ்வப்போது கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது.

- இந்தோனேசியாவின் உற்பத்தி பொருட்களைப் பாவித்து இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் ஆடை உற்பத்திப் பொருட்களுக்கு முதல்நிலை அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலங்கை அயல் பிராந்திய சேர்ப்புக்கான வேண்டுகோள் ஒன்றையும் ஐரோப்பிய ஆணைக் குழுவிடம் 2018 ஜூன் மாதம் சமர்ப்பித்தது.

- ஜீ.எஸ்.பி. பிளஸ் முதல் நிலைச் சான்றிதழ் வழங்கலுக்கான பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர் முறைமையை நடைமுறைப் படுத்தலின் பேரில், பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் முறைமையின் கீழ் வர்த்தகத் திணைக்களம் ஏற்றுமதியாளர்களை 2018 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் பதிவு செய்ய ஆரம்பிப்பதற்கென சம்பந்தப்பட்ட ஐரோப்பிய ஆணைக்குழுவின் அதிகாரிகளுடனான கலந்தாலோசனைகள் மூலம் பிரசெல்ஸில் உள்ள இலங்கைத் தூதரகம் வசதியளித்துள்ளது.

II. <u>வருடாந்த கட்டமைக்கப் பெற்ற பொறிமுறைகளின் கீழ் கிரமமான பேச்சு வார்த்தை</u>

- ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணைக் குழு, வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான செயற் குழுக்கள், ஆட்சி முறை, சட்டவாட்சி மற்றும் மனித உரிமைகள் மீதான செயற்குழு, மற்றும் அபிவிருத்தி மீதான செயற்குழு போன்ற வருடாந்த கட்டமைக்கப்பெற்ற பொறிமுறைகளின் கீழான ஈடுபாடு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் பணிச்சட்டங்கள் குறித்த பேச்சுவார்த்தையானது,

இரு தரப்பினரும் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுவதற்கான சூழலொன்றை உருவாக்கியதெனலாம்.

- ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணைக் குழுவின் 21 ஆவது அமர்வு கொழும்பில் 2018 ஜனவரி 18 ஆம் திகதியன்று நடைப்பெற்றது. மேற்படி கூட்டம் இலங்கைத் தரப்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம். ஐரோப்பிய ஒன்றியத் தரப்பில் ஐரோப்பிய ஒன்றிய வெளியக செயல் சேவைகள் (EEAS) பிரிவின் கீழ் இயங்கி வரும். ஆசிய - பசுபிக் திணைக்கள பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி பாவோலா பப்பாலோனி ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

- அபிவிருத்தி ஒத்துழைப்பு மீதான செயற்குழுக் கூட்டம் கொழும்பில் 2018 ஜனவரி 17 ஆம் திகதியன்று நடைப்பெற்றது. மேற்படி கூட்டத்திற்கு இலங்கைத் தரப்பில் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், ஐரோப்பிய ஒன்றியத் தரப்பில், தெற்காசியப் பிரிவுத் தலைவர் ஐரோப்பிய ஆணைக் குழுவின் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பணிப்பாளர் குழும நாயகம் ஆகியோர் இணைத் தலைமை வழங்கினர்.

- கடந்த 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பெற்ற ஆட்சிமுறை சட்டவாட்சி மற்றும் மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய ஒன்றிய இலங்கைக் குழு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஐரோப்பிய ஒன்றிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வெளியக செய்கைச் சேவைகள் பிரிவின் பிராந்திய அலுவல்கள் மற்றும் தெற்காசியப் பிரிவின் தலைவர் திருமதி கரோலின் வினொட் ஆகியோரின் இணைத் தலைமையில் பிரசெல்சில் 2018 ஜூன் 5 ஆம் திகதியன்று கூடியது.

- வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான செயற்குழு, இலங்கைத் தரப்பில் அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தரப்பில் தெற்கு மற்றும் தென் கிழக்காசிய பிரிவின் தலைவர், ஐரோப்பிய ஆணைக்குழுவின் வர்த்தக பணிப்பாளர் குழும நாயகம் ஆகியோரின் இணைத் தலைமையில் கொழும்பில் 2018 ஜூலை 5 ஆம் திகதியன்று கூடியது.

- கடந்த 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை முதலீட்டாளர் கலந்துரையாடல் குழு கொழும்பில் 2018 ஏப்ரல் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் கூடியது.

- ஐரோப்பிய ஒன்றிய வெளிவாரி செயற்பாட்டுச் சேவைகள் பிரிவின் (EEAS) பிராந்திய அலுவல்கள் மற்றும் தெற்காசியாவுக்கான பிரிவின் தலைவர் இலத்திரனியல் இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்டதன் அங்கமாக, வெளிவிவகார செயலாளரை 2018 ஒக்டோபர் 9 ஆம் திகதியன்று சந்தித்து உரையாடினார். மேற்படி பேச்சு வார்த்தைகளின் போது, பிரசெல்ஸில் 2018 ஜூன் 5 ஆம் திகதியன்று நடைபெற்ற

மனித வளம் மீதான ஐரோப்பிய ஒன்றிய இலங்கை WG மாநாட்டில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்றிருந்த 19 ஆவது கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்த 58 செயற்பாட்டு அம்சங்கள் குறித்து எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மீதே கவனஞ் செலுத்தப்பட்டது.

III. ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்டு வரும் உதவிகள்

அபிவிருத்தி ஒத்துழைப்பு உதவி

- 5 வருட கால செயல் திட்டமான பல்வகை வருடாந்த தெரிநிலையான வேலைத்திட்டத்தின் கீழ், ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கான அபிவிருத்தி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2007-2013 காலப்பகுதிக்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகையானது (அதாவது, 110 மில்லியன் யூரோ) 2016-2020 காலப்பகுதியில் இரு மடங்காக 210 மில்லியன் யூரோவாக அதிகரித்துள்ளது.

- பல்வகை வருடாந்த தெரிநிலையான வேலைத்திட்டதின் (MIP) கீழ், தற்போது பின்வரும் வேலைத்திட்டங்களுக்கு நிதியளிக்கப்பட்டு வருவதுடன், குறித்த நிதிகள் உலக வங்கி, ஐக்கிய நாடுகள் முகவரமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

  - ஊவா மற்றும் மத்திய மாகாணங்கள் மீதான குறிப்பிட்ட கூடிய கவனத்துடனான ஒருமுகப் படுத்தப்பட்ட கிராமிய அபிவிருத்தி திட்டம். இந்த வேலைத்திட்டமானது, அநேகமாக, முழுமையான அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி கெயார் இன்டர்நெஷனல் (CARE International), ஸ்டிச்சிங் சொலிடாரிடாட் (Stichting Solidaridad), அக்டெட் (ACTED), அட்வென்டிஸ்ட் டெவலப்மென்ட் அன்ட் ரிலீப் ஏஜென்சி(Adventist Development and Relief Agency), ஒக்ஸ்பாம் (OXFAM) ஆகிய சர்வதேச அரசு சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக செலவிடப்பட்டது. மொத்த நிதி ஒதுக்கீடு 60 மில்லியன் யூரோ ஆகும்.

  - உலக வங்கியுடன் கூட்டாக இணைந்து நிதி வசதியளிக்கப்பட்ட விவசாய நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திற்கென ஐரோப்பிய ஒன்றியம் 12 மில்லியன் யூரோவை வழங்கியது.

  - வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்வாதார முன்னேற்ற கருத்திட்டத்திற்கென 5 ஐக்கிய நாடுகள் முகவரமைப்புக்கள் ஊடாக 60 மில்லியன் யூரோ செலவிடப்பட்டது.

  - சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் போட்டித் தன்மையையும் உணவுத் தொழில் துறையில் பெறுமதி சங்கிலித் தொடர் ஆற்றல்களையும்

முன்னேற்றுவதற்கான வர்த்தக வசதிப் படுத்தல் தொழில்நுட்ப உதவித் திட்டம். சர்வதேச வர்த்தக மையத்தினால் நடாத்தப்பட்டு வரும் வர்த்தகப் பேரம் பேசல்கள்/ பேச்சுவார்த்தைகள் மற்றும் வசதிப்படுத்தல் ஆகியவற்றில் இலங்கை அதிகாரிகளின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான கருத்திட்டமொன்றில், மொத்த நிதி ஒதுக்கீடான 8 மில்லியன் யூரோவைப் பாவித்து கூடிய கவனஞ் செலுத்துவதற்கான உதவி, சர்வதேச வர்த்தக மையம் (ITC) மற்றும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு (UNIDO) ஆகியவை ஊடாக வழங்கப்பட்டன.

- உலக வங்கி ஊடாக வழங்கப்பட்ட 40 மில்லியன் யூரோ பெறுமதியுடைய மொத்த ஒதுக்கீட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பொது நிதி முகாமைத்துவ முன்னேற்றத் திட்டம்.

- கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் மற்றும் சுகாதார செயற்றிட்டம். இதற்கான நிதியுதவி ஏஜென்ஸ் பிராங்கைஸ் டீ டெவலப்மென்ட் (AFD) ஊடாக வழங்கப்பட்டது. மொத்த ஒதுக்கீடு 6 மில்லியன் யூரோ ஆகும். செயற்றிட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஆதரவு – அக்கறையாளர் ஆலோசனைகள் உள்ளடங்கலாக, நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான பணியில் முன்னேற்றம் காணப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவாகிய 14.5 மில்லியன் யூரோ தொகையில், ஐரோப்பிய ஒன்றியம் 12 மில்லியன் யூரோவை பங்களிப்புச் செய்து வரும் அதே வேளையில், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் வெளிநாட்டு அலுவலகமும் பிரித்தானிய மன்றமும் இணை நிதியுதவியை இதற்கென வழங்கவுள்ளன.

அனர்த்த நிவாரண உதவி

- ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐரோப்பிய மனிதாபிமான உதவி மற்றும் குடிசார் பாதுகாப்பு அமைப்பினால் அனர்த்த நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி அமைப்பானது, அவசர வெள்ள நிவாரண உதவிக்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 2018 ஜூன் மாதம் 300,000 யூரோ பெறுமதியான பண நன்கொடையை வழங்கியிருந்தது.

IV. மீளாய்வுக்கான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஜயங்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தமை

- ஐரோப்பிய பாராளுமன்ற சர்வதேச வர்த்தகக் குழுவின் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு 2018 ஏப்ரல் 4-6 காலப்பகுதியில் விஜயம்

செய்ததுடன், கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து உரையாடினர். அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய ஜீஎஸ்பி பிளஸ் கண்காணிப்புக் குழுவினர் 2017 செப்டெம்பரிலும், ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தெற்காசிய தூதுக் குழுவினர் 2017 ஒக்டோபரிலும் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

மேற்படி விஜயம் ஜீ.எஸ்.பி பிளஸ் வசதியைப் பயன்படுத்துவதில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றத்தை மதிப்பிடுவதிலும் எஞ்சியுள்ள சவால்கள் குறித்து இலங்கையுடன் கலந்துரையாடுவதனை மிகுதிப்படுத்துவதிலும் கூடிய கவனம் செலுத்துவதாக அமைந்தது. இந்தப் பிரிவானது, சந்திப்புக்களை ஒருங்கிணைத்ததுடன், அவற்றுக்குத் தேவையான உள்ளீடுகளையும் வழங்கியது.

- சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் கௌரவ. சுஜீவ சேனசிங்க லக்ஸம்பேர்க்கிற்கு 2018 மே 16 ஆம் திகதியன்று விஜயம் செய்து ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் நாயகத்தைச் சந்தித்து ஐரோப்பிய முதிலீட்டு வங்கியின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.
- ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் செயற்பட்டு வரும் "***இலங்கையின் நண்பர்கள்***" குழு 2018 ஜனவரியில் மேற்கொண்டிருந்த விஜயத்திற்கான தயாரிப்புப் பணிகள் இந்தப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டது

V. ஐரோப்பிய ஒன்றியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பொன்றாக பட்டியல்படுத்தும் செயல்முனைப்பைத் தொடர்ந்தும் மேற்கொள்ளல்

- பொது நீதிமன்றம் மற்றும் ஐரோப்பிய நீதிமன்றம் ஆகியவற்றினால் 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், இலங்கை அதியுயர் மட்டத்தில் ஈடுபாடுகாட்டி, உருப்படியான சான்றுகளை முன் வைத்ததனைத் தொடர்ந்து, ஐரோப்பிய மன்றமும் அதன் உறுப்பு நாடுகளும் ஐரோப்பிய ஒழுங்கு விதியான ஈ.சி 2580 / 2001 இன் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பொன்றாகத் தொடர்ந்தும் பட்டியல் படுத்தப்படல் வேண்டுமென்ற தடுமாற்றமற்ற நிலைப்பாட்டை இந்த வருடம் மார்ச் மாதம் எடுத்திருந்தன.

- தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் தொடர்ந்தும் இடம் பெற வைக்கும் பொருட்டு, மேற்படி தீர்மானம் 2018 ஜூலை மாதத்தில் மேலும் நீடிக்கப்பட்டது. அத்துடன், அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக தகவல்களைத் திரட்டி அவற்றை ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கும் சமர்ப்பிப்பதற்கான செயல்முனைப்புக்களை இந்தப் பிரிவானது

சம்பந்தப்பட்ட அக்கறையாளர்களுடன் ஒன்றிணைந்து ஜனாதிபதியின் செயலாளரின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

- ஐரோப்பிய ஒன்றியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தொடர்ந்தும் பட்டியலிட்டு வருகின்றமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல் குறித்து இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பத்திரமொன்று புலனாய்வு முகவரமைப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆர்வலர்களுடன் ஒருங்கிணைந்து 2018 நவம்பர் 14 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பான நடவடிக்கைகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

- பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடுவதற்கான கட்டுப்பாடுமிக்க நடவடிக்கைகள் மீதான ஐரோப்பிய கவுன்சில் செயற்குழு (COMET) 2018 டிசம்பர் 4 இல் நடைபெற்ற தனது கடைசி மீளாய்வுக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளிட்ட தற்போதைய பயங்கரவாதப் பட்டியலை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திட பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பட்டியல் குறித்து, ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார சபை 2019 ஜனவரி பிற்பகுதியில்/ பெப்ரவரி முற்பகுதியில் முறைசார்ந்த தீர்மானமொன்றை எடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் காலாந்திர மீளாய்வினை வசதிப்படுத்துவதில், இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல் மீதான தகவல்களைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது

2. <u>பொதுநலவாயம்</u>

இலங்கை, பொதுநலவாயம் மற்றும் நெருங்கிய அதன் உறுப்பு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு. கடந்த 2018 ஏப்ரல் மாதம் இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் இலங்கை காண்பித்த தீவிர ஈடுபாட்டின் மூலம் தொடர்ந்தும் நீடித்தது.

பொதுநலவாய அமைப்பின் மூலம் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் முன்னெடுப்புக்களில் பொதுநலவாய அமைப்பு நாடுகளில் வர்த்தகம் இணையப் பாதுகாப்பு, சதுப்பு நிலங்களை மீள் நிலைப்படுத்தல், சமுத்திரங்களைத் தொடர்ந்தும் பாவித்தல் முதலியவற்றை மிகுதிப் படுத்தல் ஆகியன அடங்குகின்றன.

இலண்டனில் அமைந்துள்ள மல்பரோ மாளிகை மற்றும் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்துப் பொதுநலவாய ஈடுபாடுகளிலும் தீவிரமான முறையில் பங்கேற்கும் பொருட்டு

பொதுநலவாய செயலகத்திற்கும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குமிடையிலான பிரதான அலுவலகமாக இலண்டனில் உள்ள உயர் ஸ்தானிகராலயம் செயற்படுவதற்கு அமைச்சு ஒத்துழைப்பை வழங்கியது.

I. **<u>பொதுநலவாய மாநாடுகளில் இலங்கையின் பிரதிநிதித்துவத்திற்கு வசதியளித்தல்</u>.**

இந்தப் பிரிவானது பின்வரும் பொதுநலவாய மாநாடுகளில் இலங்கையின் பிரதிநிதித்துவத்திற்கு வசதியளித்ததுடன் தேவையான ஆவணங்களையும் வழங்கியது:-

- "பொதுவான எதிர்காலத்தை நோக்கி" எனும் தொனிப்பொருளில் அமைந்த பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு (CHOGM) 2018 ஏப்ரல் 19-20 வரை இலண்டன் மாநகரில் நடைபெற்றது. மேற்படி உச்சி மாநாட்டுக்கான தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கிய அதிமேதகு ஜனாதிபதி அவர்கள், ஏப்ரல் 18 ஆம் திகதியன்று நடைபெற்ற பொதுநலவாய வர்த்தக கருத்தரங்கில் கலந்து கொண்டதுடன் அங்கு "பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைதல்: வியாபாரம், சமூகம் மற்றும் அரசாங்கங்கள் ஆகியவற்றை ஒருநிலைப்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் முக்கிய உரையினையும் ஆற்றினார்.

  "பொதுநலவாய நீலப் பட்டயம்" எனும் தலைப்பில் அமைந்த பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு - 2018 இன் தீர்மான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், இலங்கை சதுப்பு நில மீள்நிலைப் படுத்தலுக்கான பொதுநலவாய நீலப் பட்டய செயற்குழுப் பணிகளை முன்னெடுத்தது.

  இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கு இணையாக இலங்கையைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத் தூதுக் குழுவினர் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்ட பொதுநலவாய வர்த்தகக் கருத்தரங்கு - 2018, 2018 ஏப்ரல் மாதம் நடைபெற்றது.

  மேற்படி கருத்தரங்கில் தகவல் தொழில்நுட்பம்/ வர்த்தக செயல்முறை வெளியகப்படுத்தல், இலத்திரனியல், ஆடை, கைவினைப் பொருட்கள், தெங்குப் பொருள், சுற்றுலாத்துறை, இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில், கடல்சார் மற்றும் கப்பல் கட்டும் துறை ஆகியவற்றைப் பிரதி நிதித்துவப்படுத்தி 40 க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

  மேற்படி வர்த்தகக் கருத்தரங்கிற்கான இலங்கைத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கிய வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீன்

அவர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக கருத்தரங்கில் குழாம் உறுப்பினராகவும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அதற்கு மேலாக, இலங்கையின் தகவல் தொழில்நுட்பம், வர்த்தக செயல்முறை முகாமைத்துவம், கடல்சார் துறை, படகு கட்டுதல் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் ஆகிய துறைகளில் காணப்படும் வாய்ப்புக்களை வெளிப்படுத்தும் பொருட்டு சுமார் 170 பொதுநலவாய தொழில் முயற்சியாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் தொழில் வாண்மையாளர்களை வரவழைப்பதற்கென இலங்கை காலை உணவுக் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

இலண்டனில் இலங்கை தகவல் தொழில்நுட்பத் துறைக்கான "இலங்கை- புதுப்புனைவுத் திறன்கொண்ட தீவு" எனும் தேசிய வர்த்தக நாமம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமை குறித்த காலை உணவுக் கூட்டத்தின் பிரதான அம்சமாக அமைந்ததெனலாம்.

- பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்கு முன்னர், பின்வரும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் பலாபலன் குறித்த ஆவணங்கள், பணித்துறை அறிவிப்பு மற்றும் நான்கு பிரகடனங்கள், அதாவது,

    I. பொதுநலவாய நீலப்பட்டயம்
    II. பொதுநலவாய இணையப் பிரகடனம்
    III. வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றுக்கான பொதுநலவாய இணைப்பு நிகழ்ச்சி நிரல் மீதான பிரகடனம்
    IV. உறுப்பு நாடுகளில் தேர்தல் அவதானிப்பை மேற்கொள்வதற்கான திருத்தியமைக்கப்பட்ட பொதுநலவாய வழிமுறைகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பொருட்டு, நடாத்தப்பட்ட பொதுநலவாய சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டம் மற்றும் பொதுநலவாய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் கூட்டம் ஆகியவற்றுக்கு முறையே அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் சமூகமளித்திருந்தனர்.

- நியூயோர்க்கில் 2018 செப்டெம்பர் 27 ஆம் திகதியன்று நடைபெற்ற 18 ஆவது பொதுநலவாய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் மாநாட்டில் கௌரவ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தின் போது பொதுநலவாய செயலாளர் நாயகம் பதவிக்கான நியமன செயல்முறைகள் உள்ளடங்கலாக பொதுநலவாய செயலக ஆளுகைக் கட்டமைப்பை மீளாய்வு செய்தல் மீதான முக்கிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பின்வரும் நிகழ்வுகளில் இலங்கைத் தூதுக் குழுவினர் கலந்து கொள்வதற்கான முன் ஏற்பாடுகளை இந்தப் பிரிவு மற்றைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டது :-

  - ஃபிஜியில் 2018 பெப்ரவரி 19-23 வரை நடைபெற்ற பொதுநலவாய கல்வி அமைச்சர்களின் 20 ஆவது மாநாடு

  - அவுஸ்திரேலியாவின் 'கோல்ட் கோஸ்டில்' (Gold Coast) 2018 ஏப்ரல் 2-3 வரை நடைபெற்ற 9 ஆவது பொதுநலவாய விளையாட்டுதுறை அமைச்சர்கள் கூட்டம்

  - ஜெனிவாவில் 2018 மே 20 ஆம் திகதியன்று நடைபெற்ற பொதுலவாய சுகாதார அமைச்சர்கள் கூட்டம்

  - ஐக்கிய இராச்சிய பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பயிற்சித்திட்டமொன்றில் கலந்து கொள்வதற்கென இலங்கைப் பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழு உறுப்பினர்களால் 2018 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட விஜயம்.

  - இலண்டன் மாநகரில் அமைந்துள்ள பொதுநலவாய செயலகத்தில் 2019 ஜனவரி 24 ஆம் திகதியன்று நடைபெற்ற கல்வி அமைச்சர்களின் செயற் குழுக்கூட்டம்

- ஜனநாயக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொதுநலவாய விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவாக, உறுப்பு நாடுகள் செயற்பட ஒத்துழைப்பதில் காணப்படும் செயலகத்தினால் வழங்கப்படும் உகந்த தன்மை, வினைத்திறன், பயனுறுதித்தன்மை, தாக்கம், மற்றும் ஆதரவின் பேண்தகைமை ஆகியவற்றை மதிப்பிடும் பொருட்டு, பொதுநலவாய செயலகத்தைச் சேர்ந்த மதிப்பீட்டுக் குழுவொன்று சுயாதீன மதிப்பீட்டாளரொருவருடன் நான்கு நாள் (2018 ஜூன் 12-15) விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்தது. இது சம்பந்தமாக, மேற்படி குழுவினர், பிரதம நீதியரசர் அலுவலக அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், பாராளுமன்ற செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவையின் மேலதிக செயலாளர், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர், தேர்தல்கள் ஆணைக் குழுவின் உதவிப் பணிப்பாளர் மற்றும் ஒரு சில அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமான அக்கறையாளர்களை நேரில் சந்தித்து உரையாடினர். மதிப்பீட்டின் அங்கமாக, மேற்படி குழுவினர் பொதுநலவாய விடயங்களுக்குப் பொறுப்பான

பணிப்பாளர் நாயகத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் 2018 ஜூன் 14 ஆம் திகதியன்று சந்தித்து கலந்துரையாடினர்.

II. பொதுநலவாய செயலாளர் நாயகத்துடனான சந்திப்புகள்

- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் இலண்டனில் 2018 ஜூன் 15 ஆம் திகதியன்று பொதுநலவாய செயலாளர் நாயகம் அவர்களைச் சந்தித்த போது பரஸ்பர பயனளிக்கும் ஏராளமான விடயப் பரப்புக்கள் கலந்துரையாடப்பட்டன.

- பொதுநலவாய செயலாளர் நாயகம் கடந்த 2016 ஆம் ஆண்டில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றதில் இருந்து, இலங்கைக்கான தனது கன்னி விஜயத்தினை 2018 ஓகஸ்ட் 1-4 வரை மேற்கொண்டார். கௌரவ பிரதமர் கௌரவ சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை, கல்வி, இளைஞர் விவகாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து உரையாடிய அவர், சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் கடல்சார் வளங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அக்கறையாளர்களுடன் சுற்றாடல் அமைச்சில் இடம் பெற்ற அர்ப்பணிப்புமிக்க கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். கற்பிட்டி மற்றும் பாம்பாலா ஆகிய பிரதேசங்களில் உள்ள சதுப்பு நில மீள்நிலைப்படுத்தல் பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் சதுப்பு நிலங்களை மீள்நிலைப்படுத்த இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல் முனைப்புக்களைப் பாராட்டினார்.

- நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 73 ஆவது கூட்டத்தொடரின் இறுதி நிலையில் அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் செயலாளர் நாயகத்தை செப்டெம்பர் 28 ஆம் திகதியன்று சந்தித்தார். ஜனநாயகம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில் இலங்கை காண்பித்து வரும் முன்னேற்றம் குறித்து புகழ்ந்துரைத்த செயலாளர் நாயகம், 2018 ஓகஸ்டில் இலங்கைக்கான தனது விஜயத்தின் போது தன்னால் நேரில் பார்க்கக் கூடிய வகையில் நாட்டில் அனைத்து முனைகளிலும் இடம் பெற்றிருந்த சாதகமான அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

III. மகாராணியாரின் பொதுநலவாய மேற்கட்டுமான முன்னெடுப்பு

- மகாராணியாரின் பொதுநலவாய மேற்கட்டுமான முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து, மேன்மை தங்கிய எலிஸபெத் மகாராணியாருக்கு அனுப்பி வைத்த தனது கடிதத்தில் அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் அளிக்கப்பட்ட

வாக்குறுதியின் பிரகாரம், மேற்படி முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான வனப் பாதுகாப்புப் பிரதேசமொன்றை அடையாளங் காண்பதில் அமைச்சு சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து தொடர் நடவடிக்கையை மேற்கொண்டதுடன், அதனை உருவாக்குவதற்கான செயல் முறையையும் முன்னெடுத்தது. இது சம்பந்தமாக, யுத்தம் மற்றும் வரட்சி போன்ற இயற்கை அனர்த்தம் காரணமாக கைவிடப்பட்டிருந்த 10 ஹெக்டெயர் வனப்பகுதியை மீள்நிலைப் படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சு இனங்கண்டுள்ளது. உயிரினங்களுக்கான சூழல் மண்டலத்தையும் உள்ளூர் மனித சமூகங்களுக்கு நன்மைகளையும் வழங்கும் வகையில் குறித்த பிரதேசத்தை இயற்கையான வனமொன்றாக மீள்நிலைப்படுத்துவதே இந்தக் கருத்திட்டத்தின் குறிகோளாகும்.

- இந்தக் கருத்திட்டத்தைப் பாராட்டிய பொதுநலவாய செயலாளர் நாயகம், உள்ளூர் சமூகங்களுக்கு உருப்படியான பலா பலன்கள் கிடைக்கும் வகையில், பாழடைந்து காணப்படும் பிரதேசமொன்றை மீள்நிலைப் படுத்துவதனை மையப்படுத்தியுள்ள, மகாராணியாரின் பொதுநலவாய மேற்கட்டுமான முன்னெடுப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் தனித்துவமானதோர் செயல் முனைப்பெனவும் அதனை இனங்கண்டு கொண்டார்.

IV. பொதுநலவாயத்திற்கு தொடர்ந்தும் வழங்கப்பட்டு வரும் ஒத்துழைப்பு

- இந்த வருட காலப்பகுதியில் இலண்டனுக்கு விஜயம் செய்திருந்த தூதுக் குழுவினரால் செயலகத்திற்கு விடுவிக்கப்பட்ட வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் இலத்திரனியல் வர்த்தகத் துறை மற்றும் இலங்கையில் உள்ள சட்டதுறை தொழில் வாண்மையாளர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியப்பாடு குறித்து பொதுநலவாய செயலகம் ஆராய்ந்து வருகின்றது.
- இலங்கையில் கல்வியின் தரத்தை உயர்த்தவும் பரந்தளவிலான பொதுநலவாயத்துடன் மிகச் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளும் முகமாக, கல்வித்துறையிலான கருத்திட்டங்கள் குறித்து பொதுநலவாய செயலகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக அமைச்சு கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றது.

V. பொதுநலவாய பதவி வெற்றிடங்களுக்கென இலங்கையர்களை நியமித்தல்

- பொதுநலவாய செயலக மத்தியஸ்த தீர்ப்பாயத்தின் உறுப்பினர் மற்றும் தலைவர் பதவிகளுக்கென ஜனாதிபதி சட்டத்தரணியும் சட்ட மா அதிபர் திணைக்கள மேலதிக சொலிசிற்றர் ஜெனரலுமான திரு. நீல உனம்பூவே அவர்களை நியமிப்பதற்கென அமைச்சு நீதி அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் இலண்டனில்

அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

3. <u>பலதரப்பு நேச உடன்படிக்கைகள்</u>

I. இந்தப் பிரிவானது, வெளிப்படைத் தன்மை மற்றும் உள்ளடக்கம் மீதான அரசாங்கக் கொள்கைக்கு அமைவாக, பின்வரும் பொதுவான கலந்தாலோசனைக் கூட்டங்களை ஐக்கிய நாடுகள் பிரிவின் ஆதரவுடன் ஏற்பாடு செய்திருந்தது:-

- ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையில் 2017 நவம்பர் மாதம் இடம்பெற்ற இலங்கை குறித்த பூகோள காலாந்திர மீளாய்வின் போது கிடைக்கப்பெற்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் குறித்து 2018 ஓகஸ்ட் 23 ஆம் திகதியன்று நடாத்தப்பெற்ற இடைக்கால மீளாய்வு மீதான பொது ஆலோசனைக் கூட்டம்.

- குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையை இலங்கை நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கை மனித உரிமைகள் பேரவையிடம் சமர்ப்பிக்க வேண்டிய நகல் அறிக்கை மீது 2018 செப்டெம்பர் 13 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பொது ஆலோசனைக் கூட்டம்.

II. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை ஏற்பாடுகளை தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக, மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மீதான குழுவிடம் இலங்கை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையினைத் தொகுத்தல் பற்றி தேசிய ரீதியில் செயற்பட்டு வரும் அக்கறையாளர்களுடன் தொடர்ந்தும் ஈடுபாடு காட்டப்பட்டு வருகின்றது.

4. தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் 2017-2021

மேற்படி தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்தல் மற்றும் அதன் மீதான அறிக்கையினை அமைச்சர்கள் மட்டத்திலான குழுவிடம் சமர்ப்பித்தல் ஆகிய விடயங்களில் உரிய கால முன்னேற்றத்தை உறுதிப் படுத்தும் பொருட்டு, மேற்படி செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட (I) கௌரவ பிரதமர் அவர்கள் தலைமையிலான அமைச்சர்கள் மட்டத்திலான குழு மற்றும் (II) கௌரவ பிரதமரின் பதவியணியினரின் பிரதானியின் நெறிப்படுத்தலின் கீழ் இயங்கி வரும் அதிகாரிகள் மட்டத்திலான குழு ஆகிய இருவரிசை பொறிமுறையொன்றின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

- தேசிய மனித உரிமைகள் செயல் திட்டமானது, சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தலைமையிலான 10 துறைசார் குழுக்களின் (கொத்தாணிகள்) கீழ்

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு துறைசார் குழுவும் அந்தந்த முகவரமைப்புக்களுடன் மாதாந்தக் கூட்டங்களை நடாத்தி வருவதுடன், காணப்பட்டு வரும் முன்னேற்றம் மற்றும் குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடைவதில் எதிர் நோக்கப்படும் சவால்கள் குறித்து மேற்படி குழுக்களுக்கு அறிக்கையிட்டும் வருகின்றது.

- மேற்படி செயல்திட்ட அம்சங்களை நடைமுறைப்படுத்தலில் முன்னேற்றம் காணப்பட்டு வருவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஐரோப்பிய ஒன்றியப் பிரிவானது ஐக்கிய நாடுகள் பிரிவுடன் ஒருங்கிணைந்து இந்தக் கொத்தணிக் கூட்டங்களில் கலந்து கொள்வதுடன் பொருத்தமான முறையில் தலையீடு செய்தும் வருகின்றது.

நிதிப்பிரிவு

தலைப்பு : 112

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

இவ்வமைச்சின் முகாமைத்துவ மற்றும் நிதித்திட்டமிடல் செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கான துணைச்சேவைகளை வழங்கும் பொறுப்புக்கள் இந்த நிதிப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பிரிவால் பேணப்படும் அமைச்சு மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள்/பதவியணிகள் சம்பந்தப்பட்ட இரு வகையான கணக்குகள் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்படும்.

முக்கிய செயற்பாடுகள்:-

- நிதிசார் கடமைகளைப் பூர்த்திசெய்வதில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்/ பிரதான கணக்கீடு அதிகாரி ஆகியோருக்கு உதவுதல்
- வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல், பாதீட்டு கலந்துரையாடல்களில் பங்குகொள்ளல், அவற்றுக்கான அங்கீகாரத்தைப் பொது திறைசேரியிலிருந்து பெறுதல்.
- தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இணைவாக நிதி திட்டமிடலில் ஈடுபடுதல், தேவையானவற்றுக்கு நிதி வளங்கள் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் மற்றும் பொது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்.
- அமைச்சு மற்றும் தூதரகங்கள்/பணியகங்களின் செயற்பாடுகளின் செலவுகளை ஈடுசெய்வதற்காக பணி முன்பணத்தை வழமையான அடிப்படியில் பட்டுவாடா செய்தல்.
- அமைச்சு மற்றும் தூதரகங்கள்/பணியகங்களின் நிதிச் செயற்பாடுகள் அனைத்தையும் கொடுப்பனவுகளும் அவற்றின் பதிவுகளும் நிதி சார் வழிமுறைகளுக்கு இணைவாகவும் நியதிச்சட்ட தேவைகளுக்கும் இணக்கமாகவிருப்பதை மேற்பார்வை செய்தல்.
- கணக்காய்வு சம்பந்தமான விசாரணைகள், கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் பிறவற்றுக்கு கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளல்

- துணைப் பிரிவுகள்/பிரிவுகள்
- அமைச்சு கொடுப்பனவு அலகு
- பாதீட்டுக்கட்டுப்பாட்டு அலகு
- தூதரக கணக்குகள் அலகு

(1) 2018 ஆம் வருடத்திற்கான ஒதுக்கீடுகளின் செலவினங்கள் வருமாறு;

(அ) மீண்டெழும் செலவினம் :-

விபரம்	**31.12.2018** வரையிலான மொத்த ஒதுக்கீடு ரூ.	**31.12.2018** வரையிலான மொத்த செலவினம் ரூ.	ஒதுக்கீடு மீதான செலவினத்தின் விகிதாசாரம் **%**
தனிப்பட்ட ஊதியங்கள்	6,454,197,450	6,452,857,210	100
பிற மீண்டெழும் செலவினம்	4,723,866,050	4,687,798,515	99
மொத்தம்	**11,178,063,500**	**11,140,655,725**	**100**

(ஆ) மூலதனம் :-

பொருள்	விபரம்	**31.12.2018** வரையிலான மொத்த ஒதுக்கீடு ரூ.	**31.12.2018** வரையிலான மொத்த செலவினம் ரூ.	ஒதுக்கீடு மீதான செலவினத்தின் விகிதாசாரம் **%**
	மூலதனச் சொத்துக்களின் மறுவாழ்வு மற்றும் மேம்பாடு			
2001	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	519,782,100	244,189,622	47
2002	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம்	13,400,000	2,361,673	18
2003	வாகனங்கள்	43,689,350	23,074,431	53
	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்			
2101	வாகனங்கள்	96,779,700	95,156,848	98
2102	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	96,109,750	96,008,470	100
2103	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம்	44,139,875	42,983,232	97
2104	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	734,300,000	734,277,546	100
2105	காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள்			
2106	மென்பொருள் அபிவிருத்தி			
	மூலதன மாற்றல்கள்			
2201(01)	சர்வதேச உறவுகள் மற்றும் தந்திரோபாய ஆய்வுகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம்	8,990,400	7,256,869	81
2201(02)	தேசிய சமுத்திர விவகாரக்குழுச் செயலகம் (NOAC)	2,229,050	2,229,040	100
	இயலளவு கட்டியெழுப்புதல்			
2401	ஊழியர் பயிற்சி	5,678,290	5,678,290	100
	பிற மூலதன செலவினம்			
2509	IORA பணிக்குழு கூட்டத்திற்கென அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து பெற்ற நன்கொடை கணக்கீட்டு குறியீடு (13)	5,576,000	5,337,884	96
1-2509	பொருளாதார இராஜதந்திர முயற்சிகளைச் செயற்படுத்தல் (EDI)	79,846,485	36,398,635	46
	மொத்தம்	**1,650,521,000**	**1,294,952,540**	**78**

கூட்டுத்தொகை ((அ)+(ஆ))	**12,828,584,500**	**12,435,608,265**	**97**

(2) Actual against Prescribed Limits in case of Advance Account

ரூ.

விபரம்	அதிகூடிய வரவு	குறைந்தபட்ச வரவு	அதிகூடிய வரவு நிலுவை
பரிந்துரைக்கப்பட்ட எல்லை	35,000,000	25,000,000	130,000,000
31.12.2018 வரையான உண்மையான தொகை - 1120011	34,942,177	35,955,484	116,775,476

(3) வருமானம்

(அ) அமைச்சு:-

(ரூ.)

விபரம்	வருமானக் குறியீடு	31.12.2018 வரையான நடைமுறைத் தொகை
அரசாங்க கட்டிடம் மற்றும் வீடுகளுக்கான வாடகை	2002-01-01	2,040,171
பிற வட்டி	2002-02-99	3,350,502
கடவுச்சிட்டுகள், வீசா மற்றும் இரட்டைக்குடியுரிமைகளின் கட்டணங்கள்	2003-02-07	12,500
கொன்சியுலர் கட்டணங்கள்	2003-02-99	247,120,776
பிற பெறுகைகள்	2003-99-00	135,904,663
சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் - (மத்திய அரசாங்கம்)	2004-01-00	13,458,521
முதலீட்டு வாகனங்களின் விற்பனை	2006-02-01	10,022,720
மொத்தம்		**411,909,853**

(ஆ) வெளிநாட்டு தூதரகங்கள்/ பதவி நிலைகள்:-

(ரூ.)

விபரம்	வருமானக் குறியீடு	31.12.2018 வரையான நடைமுறைத் தொகை
அரசாங்க கட்டிடம் மற்றும் வீடுகளுக்கான வாடகை	2002-01-01	581,342
பிற வட்டி	2002-02-99	2,292,832
கடவுச்சிட்டுகள், வீசா மற்றும் இரட்டைக்குடியுரிமைகளின் கட்டணங்கள்	2003-02-07	1,369,685,730
பரீட்சைகள் மற்றும் பிற கட்டணங்கள்	2003-02-13	15,429
மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	2003-02-14	737,666
கொன்சியுலர் கட்டணங்கள்	2003-02-99	431,289,676
பிற பெறுகைகள்	2003-99-00	154,096,411
சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் - (மத்திய அரசாங்கம்)	2004-01-00	13,267,142
சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் - (மாகாண சபைகள்)	2004-02-00	711,505
மூலதனச்சொத்துக்களின் விற்பனை (வாகனங்கள்)	2006-02-01	1,934,999
மூலதனச்சொத்துக்களின் விற்பனை (பிற)	2006-02-02	3,154,559
பிற		**1,977,767,291**

கூட்டுத்தொகை ((அ)+(ஆ))	**2,389,677,144**

பொது நிருவாகப் பிரிவு

அ. அறிமுகம்

1. அமைச்சில் முதன்மையான வகிபாகத்தைக் கொண்டுள்ள நிலையில், பொது நிருவாகப் பிரிவானது, அமைச்சின் இலக்குகளை அடையக் கூடிய மனித வளங்களைக் கொண்டு பணியாற்றும் செயல் முறையை இயக்கி வரும் குவிமையமாகத் திகழ்கின்றது. மனித வள முகாமைத்துவம், பாராளுமன்ற வினவல்கள் அமைச்சரவைப் பத்திரங்கள், வழங்கல்கள் மற்றும் சேவைகள் ஏற்பாடுகளை மேற்கொள்ளல், கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல், பெறுகை, போக்குவரத்து, தொடர்பாடல் வசதிகள், ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள், உள்ளகப் பயிற்சிகள் மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை பங்குதாரர்கள் பெற்றுக்கொள்ள வசதியேற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அமைச்சுடன் தொடர்புபட்ட ஏனைய அனைத்து செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் மீதான ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் இந்தப் பிரிவிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஆ. மனித வள முகாமைத்துவம்

மனித வள முகமைத்துவம் தொடர்பில், பொது நிருவாகப் பிரிவானது, 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெவ்வேறு வகுதிகளில் உள்ள அனைத்து பதிவியினரும் (இலங்கை வெளிநாட்டுச் சேவை அலுவலர்கள் தவிர) தமது மொழித் தேர்ச்சித் திறன்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திறன்களை விருத்தி செய்யும் வகையில் அவர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி எதிர்பார்க்கப்பட்ட மற்றும் தற்போதைய செயலாற்றுகைக்கு இடையே காணப்படும் இடைவெளியைக் குறைப்பதற்கு வசதியளித்தது. அமைச்சில் வெவ்வேறு மட்டங்களில் உள்ள 163 அலுவலர்களுக்கென பண்டாரநாயக்க இராஜதந்திரப் பயிற்சி நிறுவகத்துடன் ஆலோசனை கலந்து ஆங்கில மொழித் தேர்ச்சிக் கற்கை நெறியொன்றையும் பொது நிருவாகப் பிரிவானது நடாத்தியது.

தமிழ் மொழித் தேர்ச்சியினை விருத்தி செய்யும் நோக்குடன், 11 அலுவலர்களுக்கு நிதி அமைச்சின் கீழ் இயங்கி வரும் மிலோடா நிறுவனத்தில் தனித்தனி பயிற்சிக் கற்கை நெறிகளைப் பயிலும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும், 33 சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அடிப்படை தமிழ் மொழியில் சரளமாகப் பேசும் வல்லமையுடையவர்களாகத் திகழச் செய்யும் வகையில் அவர்களுக்கென சனிக்கிழமைகளில் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள பதவியணியினர் பற்றாக்குறையினை நிவர்த்திக்கும் வகையில், பொது நிருவாக அமைச்சின் ஊடாக 7 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. மேலும், அமைச்சில் அதிகரித்துக் காணப்பட்ட பணிச் சுமையினை சமாளிக்கும் வகையில், ஆங்கில/ தமிழ்/ சிங்கள மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக் குறையைத் தணிக்கும் பொருட்டு பொது நிருவாகப் பிரிவானது 04 மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தது.

இவற்றுக்கு மேலாக, பாலியல் துன்புறுத்தல் குறித்த கருப்பொருள் மீதான வெவ்வேறு கட்டங்களிலான 5 பயிற்சிப்பட்டறைகள் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் உதவியுடன் அனைத்துப் பதவியினருக்குமென நடாத்தப்பட்டுள்ளன.

இ. பராமரிப்புப் பணி

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த 100 வருடங்கள் பழமைவாய்ந்த கட்டிடத்தில் அமையப் பெற்றுள்ளதுடன், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கை நெறிகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கெனப் பாவிக்கப்பட்டு வரும் சுமார் 27 உத்தியோகபூர்வ வதிவிடங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றை நல்ல நிலையில் பேணி வரும் வகையில், அவற்றை ஒரே நிலையில் சீரான மற்றும் கிரமமான முறையில் பராமரிக்கும் தேவைப்பாட்டையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அமைச்சின் பிரதான மாநாட்டு மண்டபத்தினை மெருகூட்டும் நோக்குடன், பொது நிருவாகப் பிரிவானது, தரைப்பகுதியை மரத்தால் செய்யப்பட்ட பளபளப்பான அடித்தட்டுக்கள் கொண்டு பூர்த்திசெய்வதற்கும், அமைச்சுக்கு பொலிவான தோற்றத்தை ஏற்படுத்தும் வண்ணம் அமைச்சில் செயற்கையான வலையமைப்பு ஒலியமைப்பொன்றைப் பொருத்துவதற்குமான நடவடிக்கையினை எடுத்துள்ளது. குடியரசுக் கட்டிடத்தில் கிரமமான பராமரிப்புப் பணியினை மேற்கொண்டுள்ள நிலையில், 2018 ஆம் ஆண்டில் சிறிய மாநாட்டு மண்டபத்தில் மரத்தால் செய்யப்பட்ட தரைப்பகுதி மற்றும் புதிய ஒலியமைப்பு ஆகியவற்றைச் சீர்செய்யும் பணியினையும் பொது நிருவாகப் பிரிவானது பூர்த்தி செய்துள்ளது.

குடியரசு கட்டிடத்தின் பிரதான நுழைவாயிலை மேலும் பொலிவுறச் செய்யும் வகையில், பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டுவருவோருக்கென பாதுகாவலர் அறையொன்றை அண்ணளவாக 756,000.00 ரூபா செலவில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையானது அமைச்சின் பணியாற்றும் சூழலின் சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத் தரங்களை உறுதிப்படுத்தும் நல்ல பிரயத்தனமாக அமைந்ததெனலாம். மேலும், குடியரசுக் கட்டிட படிக்கட்டு மழைநீர்த் தடுப்பு (Rain Cover) 2.50 மில்லியன் ரூபா (அண்ணளவாக) செலவில் பொருத்தப்பட்டுள்ளது.

அமைச்சின் புதியதோர் மைல் கல்லைப் படைக்கும் வகையில், மாத்தறையில் நவீன அலுவலக சூழலொன்றையும், தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் நன்கு பயிற்றப்பட்ட பதவியினரைக் கொண்ட கொன்சியுலர் அலுவலகத்தை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திறந்து வைப்பதற்கான திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாத்தறையில் பிராந்திய கொன்சியுலர் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதனை அடுத்து, தெற்கு பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள் பிறப்பு, விவாக மற்றும் மரணச் சான்றிதழ்கள் மற்றும் வெளிநாடுகளில் தமது பாவனைக்கான ஏனைய சட்டபூர்வமான ஆவணங்கள் ஆகியவற்றை அத்தாட்சிப்படுத்துதல், வெளிநாடுகளில் சிக்கித்தவிக்கும் இலங்கையர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவுதல், புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்கள் பரிகாரம் மற்றும் இழப்பீட்டுக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல் மற்றும் வெளிநாடுகளில் இருந்து மனித சடலங்களை தாயகத்திற்கு அனுப்புதல் உள்ளடங்கலான கொன்சியுலர் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈ. பெறுகை மற்றும் பொருள் விபரக்கட்டுப்பாடு

ஆண்டின் பிற்பகுதியில், அமைச்சு தனது செயல் முறைகளை சுலபமான மற்றும் முறையான வழியில் மேற்கொள்வதிலான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையில் மிகச் சிறந்த பொருத்தமான வழங்குநரைத் தெரிவு செய்வதற்கான சக்திவாய்ந்த. சுலபமான உபாயமொன்றாக, பொது நிருவாகப் பிரிவானது, வணிகர்களைப் பதிவு செய்வதற்கான பணியில் ஈடுபட்டது. மேலும், வருடம் முழுவது, ஒரே வீதத்தில் வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் பதிவு குறித்த பிரமாணங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும், குறித்த வருடத்தில் 150 க்கும் மேற்பட்ட பெறுகைச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் அதே சமயம், அமைச்சின் அனைத்து பெறுகைத் தேவைகளையும் எதிர்வு கூறும் வகையில் பெறுகைத் திட்டமொன்று வகுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் தூதரகம்/ துணை அலுவலகம் தொடர்பான பெறுகைக்கென 369 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை கணக்கிடப்பட்டிருந்த அதே வேளையில், உள்நாட்டுப் பெறுகைகென 102 மில்லியன் ரூபா கணக்கிடப்பட்டது.

உ. பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள்

பொது நிருவாகப் பிரிவானது அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற வினவல்களை ஒருங்கிணைக்கும் குவிமையமாக செயற்பட்டு வருகின்றது. இது சம்பந்தமாக, இந்த அமைச்சு தொடர்பான 51 அமைச்சரவைப் பத்திரங்களையும், 3 பாராளுமன்ற வினாக்களுக்கான மறுமொழிகளையும் பொது நிருவாகப் பிரிவு சமர்ப்பித்துள்ளது.

மேலும், ஏனைய அமைச்சுக்களின் அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான கருத்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊ. பொருள் வழங்கல்கள் மற்றும் ஏனையவை

அமைச்சின் வாகனத் தொகுதியைப் பராமரித்தலின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு, அமைச்சின் வாகனத் தொகுதியில் உள்ள 110 வாகனங்களைப் பராமரிக்கும் பணி பொது நிருவாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாகனங்களைச் சீர்படுத்துதல், காப்புறுதி செய்தல், வாகனங்களைக் கொள்வனவு செய்தல் ஆகிய பணிகள் இந்தப் பிரிவினாலேயே கையாளப்பட்டு வருகின்றன. இது ஒருபுறமிருக்க, வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களின் பதவி நியமனக் கடிதங்கள் கையளிப்பு வைபவங்கள், அரச தலைவர்கள் விஜயங்கள் மற்றும் அதிமுக்கிய பிரமுகர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுக்குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் விஜயங்களுக்கான போக்குவரத்து மற்றும் ஏனைய பொருள் வழங்கல்களும் பொது நிருவாகப் பிரிவினாலேயே எளிதாக்கப்பட்டு வருகின்றன.

2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில், 6 நியமனப் பத்திரக் கையளிப்பு வைபவங்கள் நடைபெற்றதுடன், 26 அதிமுக்கிய பிரமுகர்கள் விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் கொழும்பில் நடைபெற்ற *"இந்து சமுத்திரம் எமது எதிர்காலத்தை நிர்ணயித்தல்"*

எனும் தொனிப் பொருளில் அமைந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்த தூதுக்குழுவினருக்கு அனைத்துப் போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. மேலும், வாகனத்தொகுதியை புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் புதுப்பிப்பதற்கென பொது நிருவாகப் பிரிவு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது.

எ. நூலகம்

தற்போதைய நூலகத்தைத் தரமுயர்த்துதல் பொது நிருவாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இன்னுமொரு பணியாகும். இந்தப் பிரிவானது நியமங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல், நூலக சாதனங்கள் மற்றும் சேகரிப்பு அபிவிருத்தி ஆகியவற்றை ஒழுங்கமைத்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றது. வெளிநாட்டு இராஜதந்திரம், பொருளியல், சர்வதேச சட்டம், ஆராய்ச்சி தொடர்பான வெளியீடுகள் முதலியவற்றுடன் அதிகளவில் தொடர்புடைய வெளியீடுகளை வாங்குவதில் கூடிய கவனஞ்செலுத்தி வருகின்றது.

லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிரிவு

லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிரிவுஇ இலங்கையினுடனான லத்தின் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்தியத்திலுள்ள நாடுகளுடனான இருதரப்பு உறவுகள் தொடர்பான செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது. பிரிவின் செயற்பாடுகளின் அம்சம் பரந்தளவில் தெளிவாக விளக்கக்கூடிய இலங்கை அரசின் வெளிநாட்டு கொள்கை நோக்கங்களால் வழிநடத்தப்படுகின்றது.

- அரசியல், பொருளாதாரம், சமூக, பாதுகாப்பு மற்றும் கலாச்சார ஒத்துழைப்புகளை உள்ளடக்கி இருதரப்பு உறவுகளை மேம்படுத்தி அதிகரிக்க
- கரிபியன் மற்றும் லத்தீன் அமெரிக்கா என்பனவற்றிலுள்ள நாடுகளுடன் பாரியளவில் ஈடுபாடு மற்றும் கலந்துரையால்களை மேம்படுத்த
- வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வர்த்தகத்தை விருத்தி செய்வதற்கு பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்தல்
- லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்தியத்தில் இலங்கையின் மதிப்பு மற்றும் அதன் ஆர்வமான ஈடுபாடுகளை மேம்படுத்தல்

பரப்பெல்லை 33

குயுபா, பிரேஸில், ஆர்ஜென்டீனா, அன்டீகா மற்றும் பார்பூடா, பாஹாமாஸ், பிலயிஸ், பொலிவியா, சிலி, கொலம்பியா, கொஸ்டா ரிகா, டொமினிகா, டொமினிக்கன் குடியரசு, எக்வடோர், எல் செல்வடோர், கிரேனாடா, கவுதமாலா, கயானா, ஹெய்டி, ஜமெய்கா, மெக்ஸிகோ, நிகராகுவா, பனாமா, பரகுவே, பேரு, சென். கிட்ஸ், மற்றும் நெவிஸ், சென். வின்சென்ட், மற்றும் கிரெநாடின்ஸ் செயின்ட் லுஸியா, ஹொன்டுராஸ் சுரிநேம், டிரிநிடாட் மற்றும் டொபாகோ உருகுவே, வெனிசுலா

வதிவிட தூதரகங்களின் எண்ணிக்கை 02

குயுபா பிரேஸில்

சமகால அங்கீகாரம 13

ஹவானா கியுபா - வெனிசுலா ஜமேக்கா எல் செல்வாடர், டொமினிக்கன் குடியரசு இகியுஹெடர், டொமினிக்கா ஹெய்டி ஹொன்டுரஸ், மற்றும் பனாமா

பிரேஸிலியா பிரேஸில் - ஆர்ஜென்டீனா கொலம்பியா சுரினம் பரகுவே

கௌரவ கொன்சுல் பிரதிநிதித்துவம்

புவனர்ஸ் அயர்ஸ் (ஆர்ஜென்டீனா) நாசு (பாஹாமாஸ்) பொலிவியா (பொலிவியா) சோ போலோ ரியோ டி ஜெனிரோ பாயிஹா (பிரேஸில்) போகோடா (கொலம்பியா) இகியுஏடர் (இகியுஏடர்) கிங்ஸ்டன் (ஜமேய்க்கா) மெக்ஜிகோ (மெக்ஸிகோ) லீமா (பேரு) பரமாரிபோ (சுரிநேம்) போன்ற நாடுகளில் இலங்கைக்கு ஹொனரரி கொன்சுல் பிரதிநிதித்துவம்

1. பிரேஸில்

1.1 இருதரப்பு உறவுகள்

1. இலங்கை அரசாங்கம் மற்றும் பிரேஸில் அரசாங்கத்துக்கு இடையே தற்போது நிலவும் இருதரப்பு உறவுகளை அதிகரிக்கும் எண்ணத்துடன் பிரேஸிலில் உள்ள இலங்கை தூதரகம் தொடர்ந்தும் சம்பந்தப்பட்ட பிரேஸிலியன் அமைச்சுகள், மற்றும் அதனைச் சார்ந்த அமைப்புகள் பிரேஸிலியன் நிறுவனங்கள் வியாபார கம்பனிகள் அதபோல பிரேஸில் பாராளுமன்றத்திலுள்ள சமஸ்டி குடியரசின் அரசியல் தலைமையுடன் நல்லுறவைப் பேணி வருகின்றது

ii 2018 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கௌரவ ஆ.ஆ. ஜபாபீர் பிரேஸிலுக்கு இலங்கையின் புதிய துர்துவராக பதவி ஏற்று தனது நியமனங்களை 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி ஜனாதிபதி மைக்கல் டிமெருக்கு வழங்கினார். 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி தூதுவர் சுரிநம் ஜனாதிபதி அதி மேதகு டிசயர் டெலனோ பூட்டேர்ஸ்வுக்கு வழங்கி சுரினமிலுள்ள வர்த்தக மன்றத்திலுள்ள அதிகாரிகள் வர்த்தகம் கல்வி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்களிடம் சந்திப்புகளை நடத்தினார்.

iii தூதுவர் ஜாபீர் கொலம்பியா நாடு மற்றும் ஆர்ஜன்டீனா குடியரசின் தலைவர்களுக்கு கூடிய சீக்கிரம் நியமனங்களை அங்கீகாரம் வழங்கப்பட்ட தூதுவராக வழங்குவார்.

iv 2011ம ஆண்டு மார்ச் மாதம் கைச்சாத்திட்ட அரசியல் ஆலோசணைகளுக்காக ஒரு பொறிமுறையை தாபிக்க இலங்கை வெளிவிவகார அலுவல்கள் அமைச்சு மற்றும் பிரேஸில் வெளிநாட்டு உறவுகள் அமைச்சு என்பனவற்றிற்கு இடையே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நியதிகளை செயற்படுத்த இரு நாடுகளும் இலங்கைக்கும் பிரேஸிலுக்கும் இடையே அடுத்த இருதரப்பு அரசியல் ஆலோசணைகளுக்கு சந்திப்பு ஒன்றை 2019 ஆண்டு முதல் காலப்பகுதியில் நடத்தவும் மற்றும் அரசியல் பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றின் புதிய மார்க்கங்களை ஆராய்ந்து அறிய கலந்துரையாடல்களை மேற்கொண்டன.

1.2 **பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்**

i. இலங்கை மற்றும் பிரேஸில் சம்பந்தமான இருதரப்பு விவகாரங்களை கண்டறிய பிரேஸில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இரு சுற்று தூதுவர் மட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இலங்கை தனது பிரசண்ணத்தை அதிகளவில் வெளிப்படுத்தக்கூடிய வர்த்தக நிகழ்வுகளை அடையாளம் காண சியோ டி ஜெனெயிரோ மற்றும் சோ போலோ உள்ள சம்பந்தப்பட்ட ஹொனரரி கொன்சுலகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

ii. பொது இராஜதந்திர கருத்திட்டத்தின் ஒரு பாகமாக தூதரகம் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பேரா டாஸ் எம்பயிஸாதாஸ் தூதரகங்களின் சர்வதேச கண்காட்சி என்பனவற்றில் பங்குபற்றி விருந்தாளிகள் மத்தியில் இலங்கை உணவுகளை பிரபலப்படுத்தியது.

iii. 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை நடைபெற்ற 8வது உலக தண்ணீர் அரங்கில் பங்குபெற நீர்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சர கௌரவ காமினி விஜித் விஜயமுனி சொய்ஸா பிரேஸிலுக்கு விஜயம் செய்தார்

iv. தூதரகம் மூன்று பிரேசில் நகரங்களுக்கான ஹொனனரி கொன்சுலகள் அதாவது (1) ரியோ டி ஜெனிரோ (கலாநிதி சொயாக்க ரெய்முன்டு ஸீஸர் பெஸ்டோஸ்0 (2) சோ போலோ (திரு இடுஆர்டோ பெரெரைரா டி ஒலிவியிரா) மற்றும் (3) பாய்யா (திரு ஜோஸ் ஹோகுஸ்டோ மேஸியல் டோரெஸ்). 2018 ஆம் ஆண்டு ஜுனு முர்துமு 14 ஆம் திகதி ஆர்ஜன்டீனா புவனர்ஸ் ஹயரஸ வுக்கு ஒரு புதிய ஹொனனரி கொன்சுல திரு ரெலீஸ் ஏடுஹார்டோ பிலியுஸர் இரண்டு வருடங்களுக்கு நியமிக்கப்பட்டார்

v. பிரேஸிலிய ஊடகம் மூலம் இலங்கை சுற்றுளா பற்றி வீடியோ மற்றும் நாட்டின் சமர்ப்பணங்களைப் பற்றி பிரேஸிலியன் பிரயாண இயக்குனர்கள் பயண முகவர்கள் என்பவர்களுக்கு தூதரகம் நடத்தியது. விழிப்புணர்வு சந்திப்புகள் மற்றும் பிரேஸில்

பிரயாண அமைப்புகள் மற்றும் வணிக மன்றங்களுடன் இணைந்து நிகழ்வுகள் நடத்தப்பட்டன. தூதரகம் பிரேஸில் தொலைகாட்சி நிறுவனத்திலிருந்து ஒரு ஒரு பட பிடிப்பாளர் அணி இலங்கைக்கு விஜயம் செய்ய வசதிப்படுத்தி கொடுதத்து அவர்கள் "இலங்கை ஒரு சுற்றுளா தளம்' என்று ஒரு ஆவணப் படத்தை தயாரிக்க இலங்கைக்கு வருகை தந்தனர்.

vi பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் என்ற சூழ்நிலையில் தாதரகம் இலங்கை ஏற்றுமதியாளர்களை தேயிலை, வாசைன தேங்காய் தைத்த ஆடைகள் மற்றும் இறப்பர் பொருட்கள் என்பனவற்றை இறக்குமதி செய்யும் பிரேஸில் இறக்குமதியாளர்களுடன் இணைத்து அவர்களுடன் தொடரந்து ஈடுபாட்டில் உள்ளது.

vii பிரேஸலில் உள்ள உப நாடுகளில் தூதரகம் வர்த்தக மேம்பாட்டு செயற்திட்டங்களை ஆரம்பித்து பராநாவில் வணிக அரங்குடன் பராநாவின் தலைநகரில் வெற்றிகரமான நிகழ்வை ஆரம்பித்து வைத்தது. தூதரகம் இறக்குமதியாளர்கள் வர்த்தக கைத்தொழில் மற்றும் சுற்றுளா அமைப்புகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் பல வர்த்தக சந்திப்புகளை நடத்தி அத்துடன் ஒரு சிறிய கண்காட்சியையும் ஒரு தேநீர் சுவைக்கும் நிகழச்சியையும் நடத்தியது. சாத்தியப்பட்ட வர்த்தக ஒத்தாசைகளுக்காக இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு கண்டறியப்பட்ட வாய்ப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1.3 கலாச்சார உறவுகள்

பிரேசிலியாவில் பௌத்த நாடுகளை பிரதிநுவப்படுத்தும் தூதரகங்களின் ஒத்தாசையுடன் பிரேசிலியாவில் சின் பௌத்த விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்ட உணவு விழா மற்றும் வெசாக் கொண்டாட்டம் என்பனவற்றில் பிரேசிலில் உள்ள இலங்கை தூதரகம் பங்குபற்றியது

2. கியூபா

2.1. இருதரப்பு உறவுகள்

i பலதரப்பு துறைகளின் முயற்சளில குயுபாவுடன் ஹவானாவில் உள்ள இலங்கை தூதரகம் இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர நன்மைகளுக்கான ஒத்தாசைகளை தொடர்ந்து பேணி வருகின்றது.

ii இரு தரப்பு உறவுகளை விஸ்தரிப்பதற்காக புதிய வழிகளை கண்டறிய மற்றும் இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களை விளக்கிக் கூற தூதரகம் குயுபா அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியது.

iii ஏனைய அங்கீகாரம் பெற்ற நாடுகள் மற்றும் முக்கியமாக கியுபாவிலுள்ள இலங்கை மாணவர்கள் என்பவர்களுக்கு ஆக்கபூர்வமான சேவை உதவி மற்றும் ஒத்தாசைகளை தூதரகம் தொடர்ந்தும் வழங்கி வருகின்றனர்.

iv விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பனவற்றிற்கான ஒத்தாசைக்காக இலங்கை – கியூபா முதலாவது இணைக் குழ கூட்டத்தில் பங்குபெற 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை விஞ்ஞானம்

தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சிலிருந்து ஆறு அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக் குழு குயுபாவுக்கு விஜயம் செய்தது.

v 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை குயுபா - சலுட் 2018 பொது சுகாதாரம் பற்றிய சர்வதேச மாநாட்டில் பங்குபற்ற சுகாதாரம் போசாக்கு சுதேச மருந்துவம் அமைச்சர் கௌரவ கலாநிதி ராஜித்த சேனாரத்தன மற்றும் நான்கு அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக் குழு ஹவான சென்றது குயுபன் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இலங்கை வைத்தியசாலைகளில் குயுபன் மருந்துகளை அரசாங்கங்களுக்கிடையில் விநியோகிக்க ஒரு ஒத்தாசையான ஏற்பாட்டை மேற்கொள்ளுவதற்கு இரு அமைச்சர்களும் இணங்கினார்கள இதன் நடைமுறையை கலந்தாலோசிக்க ஒரு தொழில்நுட்ப மட்ட தூதுக்குழு குயுபாவுக்கு 2019 ஆம் ஆண்டு விஜயம் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

vi வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்தா சேனானாயக்கா 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதியிலிருந்து 09 ஆம் திகதி வரை குயுபாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இந்த விஜயத்தின் நோக்கம் பாரம்பரிய உறவை மேலும் பலப்படுத்தி விஸ்தரிகும் எண்ணத்துடன் இரு நாடுகளுக்கடையேயுள்ள ஒத்தசைகளை மீளாய்வு செய்தல்

2.2 **பலதரப்பு உறவுகள்**

i. பல்வேறு அரங்குகளில் இலங்கையின் விண்ணப்பதாரிகளுக்கு குயுபா ஒத்தாசை வழங்கியுள்ளது

ii. ஐக்கிய அமெரிக்காவினால் சுமத்தப்பட்ட பொருளாதாரம் வணிகம் மற்றும் நிதி தடைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான UNGA தீர்மானத்திற்கு ஆதரவாக இலங்கை தவராது வாக்களித்தது.

2.3 **பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்**

i. இரு நாடுகளுக்கிடையே வர்த்தக உறவை தாபிக்க தூதரகம் இலங்கையில் ‘‘யாடன் சர்வதேசம்’’ பார்மசூட்டிகல் கம்பனி மற்றும் குயுபன் பார்மசூட்டிகல் துறை இடையே 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில் வர்த்தக சந்திப்புகளை நடத்த வசதிபடுத்திக் கொடுத்தது.

ii. இலங்கையின் ஏற்றுமதியை மேம்படுத்த தூதரகம் குயுபாவில் வர்த்தக மன்றங்கள் மற்றும் தனியார் கம்பனிகளுடன் இணைந்து மற்றும் சமகால அங்குகாரங்களுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது

iii. உள்நாட்டு அதிகார சபைகளுடன் ஒப்பந்தங்களை புதுப்பிக்க தூதுவர் கமகே மற்றும் பராக்கோ மாகாணங்கயுக்கு விஜயம் செய்தார்

2.4 **கலாச்சார உறவுகள்**

i இலங்கையின் 70 வது வருட சுகந்திர தினத்தை கொண்டாட ஹவானாவிலுள்ள இலங்கை தூதரகம் குயுபன் நட்புறவு நிறுவனத்துக்கு ஒத்தாசை நல்கியது. இந்த நிகழ்வை நினைவு கூற 3 ஆம் 4ஆம திகதிகளில் ஒரு இராஜதந்திர வரவேறப்பு மற்றும் தொலைகாட்சி நிகழ்ச்சி திடட்தை ஏற்பாடு செய்தது.

ii ஒத்துழைப்புகளின் பதிய வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக தூதரகம் மற்றும் குயுபாவின் தேசிய விளையாட்டு உடற் கல்வி மற்றும பொழுதுபோக்கு நிறுவகம் இடையே கலந்துரையாடலகள் நடைபெற்று வருகின்றன. விளையாட்டு ஒத்துளைப்பின் வாய்ப்புகளை கயுபா தேசிய விளையாட்டுகள் உடற் கல்வி மற்றும் பொழுதபோக்கு நிறுவகம் மற்றும் இலங்கை விளையாட்டு அமைச்சு இடையே விஸ்தரிக்க ஒன்றுபட்ட செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட குயுபன் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2018 ஆம் ஆண்டு இலங்கை வொலிபோல் அணியை பயிற்றுவிக்க ஒரு மேலதிக பயிற்றுணர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்

iii இலங்கை மாணவர்களுக்கு உயிரித் தொழில்நுட்பம், நேனோ தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி என்பன வற்றில் மேலதிக பயிற்சி மற்றும் புலமைப் பரிசில்கள் என்பனவற்றை வழங்கும் வாய்ப்புகளை ஆராய்ந்து கண்டறிய சம்பந்தப்பட்ட குயுபன் அதிகாரிகளுடன் தூதரகம் கலந்தரையாடல்களை நடத்தியது.

3. ஏல் செல்வடோர்

i. கௌரவ வசந்தா சேனாநாயக்க வெளிநாட்டு அலுவல்கள் இராஞாங்க அமைச்சர் 2018 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 06 அம் திகதியிலிருந்த 12 ஆம் திகதி வரை எல் சல்வாடோருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார் இந்த விஜயத்தின் நோக்கம் இலங்கைக்கும் எல் சல்வாடோருக்கம் இடையிலான முதலாவது சுற்று ஆலோசணைகளில் பங்குபற்றசென்றார் கலந்துறையாடல்கள் முழுமையாக சுற்றுளா விவசாயம் கல்வி தொழில்நுட்பம் விஞ்ஞானம் கலாச்சாரம் துறைகளில் ஒத்தாசை மற்றும் இரதரப்பு வர்த்தகம் முதலீடு என்பனவற்றில் குறியாக உள்ளது. அத்துடன் நாட்பட்ட சிறுநிரக நோய் பற்றிய இணை ஆராய்ச்சி ஒன்றை நடத்துதல் ஆலோசணைகளின் முடிவைத் தொடர்ந்த ஒரு உத்தியோக பூர்வ அறிவிப்பு வழங்கப்பட்டது.

ii. **இலங்கையின் நீண்டகால சிறுநீரக நோய் பற்றி ஆராய்ச்சி ஒன்றை மேற்கொள்வதற்காக எல் சல்வடோர் குழுவொன்று மார்ச் 2019 இல் ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.**

iii. **எல்-சல்வடோர் தூதுவருக்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டது. 6 ஜூலை 2018**

4. ஜமைக்கா

i. **இருதரப்பு கூட்டுறவை மேம்படுத்தும் நோக்குடன், வெ.நா இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க, 3-6 அக்டோபர் 2018 இல் ஜமைக்காவுக்கு விஜயம் செய்தார்.**

ii. **ஜமைக்கா தூதுவருக்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டது. 29 மே 2019.**

iii. **ஐ,நா, வில் அமெரிக்க மற்றும் கரிபியன் நாடுகளுக்கான பொருளாதார மற்றும் சமூக கழகத்தில் 2019-2021 காலப்பகுதியில் 3 இருக்கைகளுக்கான ஜமைக்காவின் அபேட்சகத்திற்கு இலங்கை ஆதரவளித்தது.**

5. டொமினிக்கன் குடியரசு

i. வெ. நா இராஜாங்க அமைச்சர், 9-12 அக்டோபர் 2018 இல் டொமினிக்கன் குடியரசுக்கு விஜயம் செய்தார். இரு நாடுகளதுன் நன்மைக்காக, இருதரப்பு ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

ii. இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் ஆலோசனைகள் மற்றும் கல்விசார் கூட்டுறவு பற்றியதிலான இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் பற்றிய இறுதி முடிவு செயலாக்கப்பட்டு வருகின்றது.

சட்டப்பிரிவு

சட்டப் பிரிவின் செயற்பாடுகளின் முதன்மை விடயப் பரப்புகள் குறித்த பொதுவான விவரணம்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சட்டப் பிரிவானது கடந்த 1967 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. குறித்த சட்டப் பிரிவின் தொழிற்பாடானது சர்வதேச சட்ட விடயங்களில் அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சருக்கு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கு, வெளிநாடுகளில் இயங்கி வரும் தூதரகங்களுக்கு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதாகும். சட்டப் பிரிவானது இலங்கை அரசாங்கத்தின் உடன்படிக்கை வைப்பகமாகவும் திகழ்கின்றது.

இந்தப் பிரிவினால் ஆலோசனை வழங்கப்பட்டு வரும் முதன்மையான விடயங்கள்

சட்டப் பிரிவானது அனைத்து கொள்கைத் தீர்மானங்கள் குறித்த சட்டபூர்வமான அம்சங்கள் மற்றும் குறிப்பாக ஆள்புல கோரிக்கைகள் மற்றும் எல்லைகள், உடன்படிக்கை உறவுகளை அங்கீகரித்தல் இராஜதந்திர விதிவிலக்குகள் மற்றும் சிறப்புரிமைகள் முதலியன போன்ற காலத்திற்குக் காலம் தோன்றக் கூடிய சர்வதேச பிரச்சினைகள் மீதான ஆலோசனையை வழங்கி வருகின்றது.

சட்டப் பிரிவானது கப்பல் போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம், முதலீடு, பயங்கரவாதம், புலம்பெயர்தல் போன்ற பல பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கும் வகையில் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வரும் ஏனைய அனைத்து அமைச்சுக்களுக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் சர்வதேச சட்டம் குறித்த விடயங்களிலும் ஆலோசனை வழங்கி வருகின்றது.

மேலும், குற்றவாளிகளை தத்தமது சொந்த நாடுகளிடம் ஒப்புவித்தல், குற்றவியல், குடிசார் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர சட்ட உதவி வழங்குதல், இரட்டை வரி விதிப்பினைத்தவிர்த்தல், முதலீட்டுப் பாதுகாப்பு, சிறைக் கைதிகளை இடமாற்றம் செய்தல், நபர்களை மீள அனுமதித்தல், புலம்பெயர்தல், மனித வலு மற்றும் கடல் சட்டம் ஆகிய விடயங்கள் போன்ற நீதித்துறை சார்ந்த ஒத்துழைப்பு குறித்த உடன்படிக்கைகள் குறித்த கூட்டங்களைக் கூட்டுதல், பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் மற்றும் அவற்றை நிறைவேற்றுதல் ஆகிய செயற்பாடுகளிலும் சட்டப் பிரிவானது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

இலங்கை வெளிநாட்டுச் சேவை தொடர்பான விடயங்கள், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களினால் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள், எமது தூதரகங்களினால் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிலாளர் ஆட்சேர்ப்பு, வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுக்கான இராஜதந்திர மற்றும் கொன்சியூலர் சிறப்புரிமைகள் மற்றும் விதிவிலக்குகள் ஆகியவை தொடர்பாக அமைச்சினால் வழங்கப்பட்டு வரும் அறிவுறுத்தல் தொடர்களைப் பொருள் கோடல் செய்தல் என்பன இந்தப் பிரிவினால் ஆலோசனை வழங்கப்பட்டு வரும் ஒருசில விடயப்பரப்புகளாகும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அனைத்து இருதரப்பு கூட்டங்களிலும் முக்கியமானதும் செயற்பாடுமிக்கதுமான வகிபாகம்மொன்றினைக் கொண்டுள்ள சட்டப் பிரிவானது, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு, இரட்டை வரிவிதிப்பு, விமான சேவைகள், மீள் அனுமதி மற்றும் விசா விலக்களிப்பு போன்ற விடயப்பரப்புகளில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் முன்னின்று நடாத்தி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் குறித்த பிரகடனம்

ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை (UNSCR – 2231) பிரகடனப் படுத்தும் ஒழுங்கு விதிகள் 2018 ஜூலை 17 ஆம் திகதிய 2080/34 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன் அதற்கான திருத்தம் 2018 ஓகஸ்ட் 21 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

கடல்சட்டம்

இலங்கையின் கண்ட மேடை குறித்த சமர்ப்பணம்

கடந்த 2009 மே 8 ஆம் திகதியளவில் இலங்கை அரசினால் தயாரிக்கப்பட்ட கண்ட மேடை குறித்த அறிக்கையைக் கருத்திற்கொள்ளும் பொருட்டு கண்ட மேடை குறித்த எல்லைகள் மீதான ஆணைக்குழு உபகுழுவொன்றை நியமித்ததுடன். அதனை ஆராயும் செயல்முறையையும் ஆரம்பித்துள்ளது.

அதன் பிரகாரம், குறித்த உப குழுவுடன் இதுவரை ஐந்து கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் இயங்கி வரும் தேசிய சமுத்திர விவகாரங்கள் குழு இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக சட்டப் பிரிவுடன் இணைந்து சம்பந்தப்பட்ட அக்கறையாளர்களுடன் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றது.

2. தேசிய நியாயாதிக்கத்திற்கு அப்பால் உள்ள பிரதேசங்களின் கடல்சார் உயிர் வேறுபாடு மீதான உடன்படிக்கை பேச்சுவார்த்தைக்கான (BBNJ) அரசாங்க நிறுவனங்களுக்கிடையிலான மாநாடு (IGC)

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சட்டப் பிரிவானது, மேற்படி உடன்படிக்கையின் அடிப்படை அம்சங்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பொருட்டு தாபிக்கப் பெற்ற ஆயத்தப்படுத்தும் குழுவில் தீவிரமாகப் பங்கேற்றது. குறித்த மாநாட்டினை செம்மையாக நடாத்துவதற்கான பிரதான அடிப்படைக் கூறுகளை அடையாளங் காணும் முகமாக சட்டப் பிரிவின் பங்கேற்புடன் அரச நிறுவனங்களுக்கிடையிலான மாநாடு தனது பணியை 2018 செப்டெம்பர் 4 தொடக்கம் 17 வரையிலான காலப்பகுதியில் ஆரம்பித்தது. தேசிய நியாயாதிக்கத்திற்கு அப்பால் உள்ள பிரதேசங்களின் கடல்சார் உயிர் வேறுபாடு (BBNJ) மீதான தேசிய மூலோபாயத்தை முறைப்படுத்துவதற்கான பணிக்குழு கூடிய விரைவில் உருவாக்கப்படவுள்ளது. மேலும், சட்டப்பிரிவானது 2019 மார்ச் 25 தொடக்கம் ஏப்ரல் 5 ஆம் திகதியன்று நடைபெறவுள்ள அரசாங்க நிறுவனங்களுக்கிடையிலான II ஆவது மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளது.

சர்வதேச வர்த்தக சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் சபை மாநாடு

அரச முதலீட்டாளர் தகராற்றைத் தீர்த்து வைத்தல் மீதான சர்வதேச வர்த்தக சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டு பணிக்குழு III இன் இரண்டாவது கூட்டம் 2018 ஏப்ரலில் நியூயோர்க்கில் நடைபெற்றது. சட்டப் பிரிவானது முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களின் உறுப்பினர் என்ற வகையில் மேற்படி கூட்டத்தில் இலங்கையைப் பிரதி நிதித்துவப்படுத்தியது. கைச்சாத்திடப்பெற்ற பழைய இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்களுக்குப் புத்துயிரளிக்கும் வகையில் பணிக்குழுவின் பரிந்துரையின் சட்ட மா அதிபர் திணைக்களம், முதலீட்டுச் சபை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு (சட்டப் பிரிவு) ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கபடவுள்ளது.

<u>புலமைசார் சொத்து (IP)</u>

புலமைசார் சொத்து மீதான தேசியக் கொள்கைத் திட்டம் குறித்து பங்குதாரர்களுடன் தற்போது பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருவதுடன் இது சம்பந்தமான பணிகளில் சட்டப்பிரிவு உதவிவருகின்றது.

மீள் அனுமதி

இலங்கைக்கும் ஜோர்ஜியாவுக்குமிடையிலான மீள் அனுமதி மீதான ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் பணி நிறைவடைந்துள்ளதுடன் அது கைச்சாத்திடப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளது.

புலம்பெயர்வு

புலம்பெயர்வுப் பங்காண்மைத் திட்டமொன்றைத் தாபித்தல் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இலங்கை அரசாங்கத்திற்கும் சுவிஸ் கூட்டிணைப்பாட்சிக்குமிடையே கொழும்பில் 2018 ஓகஸ்ட் 06 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

<u>விமான சேவைகள்</u>

சேர்பிய அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் அரசு முறை விஜயத்தின் போது இலங்கைக்கும் சேர்பியாவுக்குமிடையிலான விமான சேவைகள் ஒப்பந்தம் கொழும்பில் 2018 மே 8 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள விமானப் போக்குவரத்து விதிமுறைகளை திருத்தியமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தென்கொரியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுடன் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றன.

இலங்கைக்கும் லக்ஷம் பேர்கிற்குமிடையிலான விமான சேவைகள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடும் பொருட்டு 2018 ஜூலை 26 ஆம் திகதியன்று நடைபெற்ற இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு விமான சேவைகள் பேச்சுவார்த்தைகளில் சட்டப்பிரிவு பங்கேற்றது.

ICAO விமான சேவைகள் பேரம் பேசல் மாநாடு 2018

ICAO விமான சேவைகள் பேரம் பேசல் மாநாடு கென்யாவின் நைரோபி நகரில் 2018 டிசம்பர் 10 தொடக்கம் 14 வரை நடைபெற்றது. இந்த மாநாட்டின் போது, விமான சேவைகளுக்கான ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை மேலும் விருத்தி செய்வதற்கான விமானப் போக்குவரத்து உறவுகளை மீள ஆராயும் பொருட்டு இலங்கை, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், போர்த்துக்கல், கட்டார் அரசு, தன்ஸானியா, நெதர்லாந்து, துருக்கி, பஹாமாஸ், நமீபியா மற்றும் கொரியக் குடியரசு ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

முதலீடு ஊக்குவிப்பு மற்றும் எதிரீட்டுப் பாதுகாப்பு மீதான ஒப்பந்தம்
துருக்கியுடனான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம்
இலங்கை அரசாங்கத்திற்கும் துருக்கி அரசாங்கத்திற்குமிடையேயான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எதிரீட்டுப் பாதுகாப்பு மீதான ஒப்பந்தமானது, கொழும்பில் 2018 பெப்ரவரி 21 ஆம் திகதியன்று நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது கைச்சாத்திடப்பட்டது.

பெலாரஸுடனான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம்

முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தம் மீதான நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து இலங்கை மற்றும் பெலாரஸுக்கிடையிலான கடிதத் தொடர்பு மூலம் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்துடனான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம்

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்குமிடையிலான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2018 ஏப்ரல் 25-27 காலப்பகுதியில் அபுதாபியில் நடைபெற்றன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சட்டப் பிரிவானது நிறைவு பெறாத நிலையில் உள்ள முதலீட்டு அத்தியாயங்கள் குறித்து இந்தியா, தாய்லாந்து மற்றும் சீனா ஆகிய நாடுகளுடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்தல் மற்றும் அரசிறை ஏய்ப்பைத் தடுத்தல் மீதான ஒப்பந்தம்

இலங்கைக்கும் ஓமானுக்குமிடையில் இரட்டை வரி விதிப்பைத் தவிர்த்தல் மற்றும் அரசிறை ஏய்ப்பைத் தடுத்தல் மீதான ஒப்பந்தமொன்று 2018 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் (IAEA) அணுவாயுத விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கான பிராந்திய கூட்டுறவு ஒப்பந்தக் கால எல்லையை நீடித்தல்.

மொங்கோலியாவின் உலான் பாட்டாரில் 2016 மே மாதம் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம், அரச தரப்புகளின் பிராந்திய கூட்டுறவு ஒப்பந்தப் பிரதிநிதிகள்

குறித்த பிராந்தியக் கூட்டுறவு ஒப்பந்தத்தை காலவரையறையின்றி நீடித்துக் கொள்வதனை ஏற்றுக்கொண்டனர்.

அதன் பிரகாரம், அணுவாயுத விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கான 1987 ஆம் ஆண்டின் பிராந்திய கூட்டுறவு ஒப்பந்த நீடிப்பை ஏற்றுக்கொள்ளும் ஆவணம் 2018 செப்டெம்பர் 07 ஆம் திகதியன்று கௌரவ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் கைச்சாத்திடப்பட்டது.

<u>கிகாலி திருத்தத்தினை உறுதிப்படுத்துதல்</u>

மொன்றியல் உடன்படிக்கை மூல வரைபுக்கான கிகாலி திருத்தத்தினை உறுதிப் படுத்தும் ஆவணம் கௌரவ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் கைச்சாத்திடப்பட்டு 2018 மே 21 ஆம் திகதியன்று நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் செயலகத்தில் வைப்பில் இடப்பட்டது.

கிகாலி திருத்தத்தினை அமுல்படுத்துவதன் மூலம், மொன்றியல் உடன்படிக்கை மூல வரைபின் கீழ் கட்டமிடப்பட்டிருந்த குளோரோ புளோரோ காபனுக்கு (Chlorofluro Carbon) மாற்றீடாகப் பாவிக்கப்பட்டு வரும் ஹைட்ரோபுளூரோ காபன் பாவனையைக் குறைத்துக் கொள்வதற்கான பொறுப்பை அரச தரப்புக்கள் ஏற்றுக் கொண்டன.

தற்போதைய சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான மேலதிக உடன்படிக்கை மூலவரைபு

இலங்கை தனது சட்டப்படியான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வரை, சர்வதேச அணுசக்தி முகவரமைப்புடனான இலங்கையின் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான மேலதிக உடன்படிக்கை மூல வரைபில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசின் உடன்பாட்டினை வெளிப்படுத்தும் எழுத்துருவிலான அறிவித்தலொன்று கௌரவ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் 2018 ஜூலை 23 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

மத்திய கிழக்குப் பிரிவு

பிரிவின் செயற்பாடுகள்:

1. மேன்மைதங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி, மாண்புமிகு வெளிநாட்டமைச்சர் மற்றும் பிற அமைச்சரவை மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் மட்ட அதிகாரிகளுக்கான இருதரப்பு விஜயங்களை ஒருங்கிணைத்தல்.

2. உயர்மட்ட விஜயங்கள், வெளிநாட்டு தூதுவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களுக்கான பேச்சுக்குறிப்புக்களையும் நாடுகளுக்கான சுருக்க உரைகளையும் தயாரித்தல்.

3. இருதரப்பு அரசியல் ஆலோசனைகள், அரசியல் பேச்சுவார்த்தைகள் மற்றும் கூட்டு ஆணைக்குழு போன்றவற்றை நடத்துதல்

4. நிலுவையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளை முன்கூட்டி நிறைவு செய்தல்.

5. அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளுக்கான அமைச்சரவை அங்கீகரத்தைப் பெறுதலும்.

6. மேன்மைதங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் வெளிநாட்டமைச்சருக்கான அனுதாபச் செய்திகள், தேசிய தினச் செய்திகள், பாராட்டுச் செய்திகள் வாழ்த்துச் செய்திகள் போன்றவற்றைத் தயாரித்தல்.

7. கொழும்பில் உள்ள மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் தூதுவர்கள்/உயர் ஸ்தானிகர்கள் போன்றவர்களுக்கான உள்ளக கூட்டங்கள் மற்றும் மரியாதை நிமித்தமான சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல்.

8. மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்கான செயற்றிட்டம், செயலாற்றுகை மற்றும் பாதீட்டு அறிக்கைகள் போன்றவற்றைத் தயாரித்தல்.

9. மத்திய கிழக்குப் பிராந்திய கொழும்பு பிரிவானது தனது நாளாந்த செயற்பாடுகளின்போது, வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுத் தூதரங்களை நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற முகவர்களுடன் ஒன்றிணைக்கிறது.

10. மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்து இலங்கைக்கு வருவோர் மற்றும் இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வோருக்கான கொன்சியுலர் விடயங்கள், சட்டச் செயற்பாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற விடயங்களைச் செய்தல்.

11. மத்திய கிழக்குப் பிராந்தியங்களுக்கான இராஜாங்க விஜயங்கள், அரசியல் ஆலோசனைகள், கூட்டு ஆணைக்குழுக்கள் மற்றும் பிற விஜயங்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றியதில் தொடர் நடவடிக்கை எடுத்தல்.

பிராந்திய பரப்பெல்லை

அ) (விக்கிபீடியாவின்படி) மத்திய கிழக்கில் பதினேழு (17) நாடுகள் உள்ளன. இவற்றில், எகிப்து, லிபியா (ஆபிரிக்க பிராந்தியம்), துருக்கி (மேற்கு பிரிவு) உட்பட்ட, பாலஸ்தீனம் தவிர்ந்த, 13 நாடுகளுடன் இலங்கை முறைசார் இராஜதந்திர உறவுகளைப் பேணிவருகின்றது.

ஆ) இலங்கை பின்வரும் 14 மத்திய கிழக்கு நாடுகளுடன் முறைசார் இராஜதந்திர உறவுகளைப் பேணிவருகின்றது;

1. பஹ்ரெய்ன் இராஜ்ஜியம்
2. ஈரான் இஸ்லாமிய குடியரசு
3. ஈராக் குடியரசு
4. இஸ்ரேல் அரசு
5. ஜோர்டான் ஹஷிமைட் இராஜ்ஜியம்
6. குவைத் அரசு
7. லெபனான் குடியரசு
8. ஓமான் சுல்தான்
9. பாலஸ்தீன அரசு
10. கட்டார் அரசு
11. சவுதி அரேபிய இராஜ்ஜியம்
12. சிரிய அரேபிய குடியரசு
13. ஐக்கிய அரசு அமீரகம்
14. யேமன் குடியரசு

இ) மேற்குறிப்பிட்ட 14 நாடுகளில் இலங்கை வதிவிட தூதரகங்களை நிறுவியுள்ள 12 நாடுகள்;

- தூதரகங்கள் உள்ள நாடுகள்;

1. **பஹ்ரெய்ன் (மனாமா)**
2. **ஈரான் (தெஹ்ரான்)**
3. **ஈராக் (பாக்தாத்)**
4. **இஸ்ரேல் (தெல் அவிவ்)**
5. **ஜோர்டான் (அம்மான்)**
6. **குவைத் (குவைத் நகரம்)**
7. **லெபனான் (பெய்ரூட்)**
8. **ஓமான் (மஸ்கட்)**
9. **கட்டார் (டோஹா)**
10. **சவூதி அரேபியா (ரியாத்)**
11. **ஐக்கிய அரபு அமீரகம் (அபுதாபி)**

- **12. ரமாலா நகரத்தில் (பாலஸ்தீனம்) ஒரு பிரதிநிதி அலுவலகம் உள்ளது**

- **13. ஐக்கிய அரபு அமீரகம் (டுபாய்)** மற்றும் **14. சவூதி அரேபியா (ஜெட்டா)** ஆகிய நாடுகளில் இரண்டு கொன்சியுலர் நாயகம் (உதவித்தூதுவர்) அலுவலகங்கள் உள்ளன.

ஈ) அதனால், யேமன் மற்றும் சிரியா ஆகிய இரு நாடுகளில் மட்டுமே எமக்கு வதிவிட தூதரகங்கள் இல்லை. அவை முறையே ஓமான் தூதரகத்திலும் (யேமன்) மற்றும் லெபனான் தூதரகத்திலும் (சிரியா) சமகால அங்கீகாரம் பெற்றுள்ளன.

- ஈரானிலுள்ள எமது தூதரகத்தில் அஸர்பைஜான் மற்றும் டேர்க்மெனிஸ்தான் ஆகியவை சமகால அங்கீகாரம் பெற்றுள்ளன.

- மத்திய கிழக்கிலுள்ள நான்கு கௌரவ தூதரக பிரதிநிதித்துவங்கள் வருமாறு:

- இஸ்ரேல் அரசு (ஜெருசலேம்)
- பாலஸ்தீன அரசு (பெத்லஹேம்)
- ஈராக் குடியரசு (குர்திஸ்தான்)
- சிரிய அரபுக் குடியரசு (டமாஸ்கஸ்)

1. பஹ்ரெய்ன்

அ) இருதரப்பு உறவுகள்

- மாட்சிமை தங்கிய பஹ்ரெய்ன் அரசர், பிரதம மந்திரி, முடிக்குரிய இளவரசர், துணை பிரதம மந்திரிகள் மற்றும் அமைச்சரவை மந்திரிகளை பல தடவைகள் சந்தித்த

இலங்கைத் தூதுவர்; வர்த்தகம், சுற்றுலாத்துறை மற்றும் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற முக்கிய விடயங்கள் பற்றியும் இருதரப்பு உடன்படிக்கைகளை மேம்படுத்துவது பற்றியும் கலந்துரையாடினார்.

- பஹ்ரெய்ன் தொழிலாளர் மற்றும் சமூக அபிவிருத்தியின் செயலாளர் திரு சுபா சலீம் ரஷித் சாகேர் அல்டசோரி தலைமை தாங்கிய பஹ்ரெய்ன் குழுவொன்று, 8,மே 2018 அன்று கொழும்பில் நடந்த 'அபுதாபி பேச்சுவார்த்தை' யின் உயர்மட்டக் கூட்டத்தில் கலந்துகொண்டது.

- 3 செப்டெம்பர் 2018 இல் பஹ்ரெய்னிலுள்ள 25 வதிவிட தூதுவர்கள் பங்குகொண்ட 'மஹாமா பேச்சுவார்த்தை' பற்றிய வட்டமேசை கலந்துடையாடலில் இலங்கைத் தூதுவர் கலந்துகொண்டார். அக்டோபர் 2018 இல் 'மஹாமா பேச்சுவார்த்தை' யில் கலந்துகொள்ளும் உலகெங்கிலுமுள்ள புலனாய்வாளர்கள் மற்றும் விற்பன்னர்கள், இப்பிராந்தியம் முகங்கொடுக்கும் பிரதான விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவர்.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய குழுவின் 42 ஆவது அமர்வானது, 24 ஜூன், 2018 அன்று, மனாமா, பஹ்ரெய்னில் நடந்தது. இந்த மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக, தொல்லியல் துறையின் இயக்குனர் நாயகமான பேராசிரியர் பி.பி. மண்டாவல கலந்துகொண்டார்.

- 7 ஜூன் 2018 அன்று நியூயோர்க்கில் நடந்த, 'பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்கும் குழு' வுக்கான, 2019 – 2022 தவணைக்கான தேர்தலில் பஹ்ரெய்ன் இராச்சியத்தின் வேட்புமனுவை ஆதரித்த இலங்கை அரசாங்கம், பதிலுக்கு, ஜூன் 2018 இல் நடைபெற்ற, அரச தரப்பினரின் 7 ஆவது பொது அமர்வில் இடம்பெற்ற, 'புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அரசாங்கங்களுக்கு இடையேயான குழு' விற்கான தேர்தலில் இலங்கையின் வேட்பாளருக்கான பஹ்ரெய்னின் ஆதரவைக் கோரியது. இந்த தேர்தலில் இலங்கை வெற்றியீட்டியது.

- அக்டோபர் 2018 அன்று நியூயோர்க்கில் நடக்கவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கழகத்தின் 2019 – 2021 ஆம் தவணைக்கான தேர்தலில், பஹ்ரெய்ன் இராச்சியத்தின் அங்கத்துவத்திற்கு ஆதவளிப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது.

இ) பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

- 2018 ஜூன் 19 இலிருந்து 21 வரை கொழும்பில் நடைபெற்ற 'இலங்கை முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்டுக்குழு –2018' இல் பஹ்ரெய்ன் வர்த்தக சம்மேளனம் மற்றும் தொழிற்றுறையின் தலைவர் திரு மொஹமட் சாஜிட்டின் தலைமையில், அல்

ஜபரியா குழுவின் நிர்வாக இயக்குனர் உட்பட, பத்து உறுப்பினர்கள் அடங்கிய வணிக குழு பங்குபற்றியது.

ஈ) கலாச்சார உறவுகள்

- 'ஸ்ரீலங்கா கிளப்' மற்றும் பஹ்ரெய்னிலுள்ள சில இலங்கை குழுக்களால் நடத்தப்பட்ட புதுவருட, வெசாக், கிறிஸ்மஸ், பொசொன், தீபாவளி மற்றும் இ.ப்தார் விழாக்களுக்கு இலங்கைத் தூதரகம் அனுசரணையளித்தது.

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, 9 .பெப்ரவரி 2018 இல் தூதரகம் ஒழுங்குசெய்த பிரமாண்டமான 'இலங்கை கலாச்சார நிகழ்ச்சி' யில், அங்குள்ள புலம்பெயர் இலங்கையர்களின் நடனம், இசை மற்றும் நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- 2018 மார்ச் 28 இலிருந்து ஏப்ரல்1 வரை, இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நிக்கவரெட்டியாவில் நடைபெற்ற இளைஞர் விழாவான 'யொவுன் புர' வில் பஹ்ரெய்ன் இளைஞர்கள் குழுவொன்று கலந்துகொண்டது.

- பஹ்ரெய்னிலுள்ள அமெரிக்க மிஷன் மற்றும் ஸ்ரீலங்கா பொறியியலாளர் சங்கம் இணைந்து, இலங்கை தூதரகத்தின் ஆதரவுடன், 18 மே 2018 அன்று, வெசாக் கொண்டாத்திற்கு இணைவாக, ஒரு மாபெரும் மருத்துவ சிகிச்சை மற்றும் பாசறையை தூதரக வளவில் நடத்தியது. அத்துடன், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் ஜனவரி 2018 இல் சல்மானியா மருத்துவமனையில் ஒரு இரத்த தான நிகழ்வையும் நடத்தியது.

உ) தொழிலாளர் நலன்

- வேலை நாட்களில் தூதரகத்திற்கு வருகை தரமுடியாத புலம்பெயர் இலங்கையர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் நோக்குடன், தூதரகமானது, 8 ஜூன் 2018 (வெள்ளிக்கிழமை) ஒரு 'சிறப்பு கொன்சியுலர் தின' த்தை நடத்தியது. இது பிரதானமாக, எந்த பயண ஆவணங்களோ சட்ட ஆவணங்களோ இல்லாமல் நீண்ட நாட்களாக பஹ்ரெய்னில் வசிக்கும் பதிவுசெய்யப்படாத தொழிலாளர்களுக்கானது.

- தூதரகத்தின் தொழிலாளர் பிரிவானது, புலம்பெயர் இலங்கையர்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதன் மூலம் பெறக்கூடிய பொது நல நன்மைகள் மற்றும் உரித்துக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, பஹ்ரெய்னிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட இலங்கை கூட்டமைப்புக்களில் பல பயிற்சிப்பட்டறைகளை நடத்தியதுடன், தூதரகத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் பெறக்கூடிய நன்மைகள் மற்றும் பயன்பாடுகளை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் நோக்கம், பஹ்ரெய்னிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தைப் பற்றி அறிந்திருப்பதையும் அதில் தம்மைப் பதிவுசெய்வதை ஊக்கப்படுத்துவதுமாகும்.

- தூதரகத்தின் தொழிலாளர் பிரிவானது; பஹ்ரெய்னின் வேலைவாய்ப்பு மற்றும் மனிதவள முகவர்களுடன் இணைந்து, இடை நிலைத் தேர்ச்சியுள்ள மற்றும் முழு தேர்ச்சியுள்ள இலங்கை மனிதவளத்தை ஆதரிக்கக்கூடிய 10 தொழில் ஊக்கச் செயற்பாடுகளை நடத்தியது.

2. ஈரான்

அ) இருதரப்பு உறவுகள்

- 12-14 மே 2018 காலப்பகுதியில் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஈரானுக்கு இராஜாங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

- இந்த இராஜாங்க விஜயத்தின்போது, ஜனாதிபதியுடன், அமைச்சர்கள் திலக் மாரப்பன, ராஜித சேனரத்ன, ரௌவ் ஹக்கிம், ரிஷாத் பதியுதீன், விஜயதாச ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோரும் சென்றனர்.

- இந்த இராஜாங்க விஜயத்தின் காலகட்டத்தில், 13 மே 2018 அன்று பின்வரும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன:

    - நியமப்படுத்தல், அளவியல் மற்றும் பயிற்சித் துறைகளின் ஒத்துழைப்புடன், ஈரான் நியமங்கள் மற்றும் தொழிற்றுறை ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

    - சுகாதாரம், மருத்துவ விஞ்ஞானம், மருந்து உற்பத்தித்துறை மற்றும் மருத்துவ உபகரணம் போன்ற துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

    - போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் கூட்டுறவு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம்

    - திரைப்பட மற்றும் தொலைக்காட்சித் துறைகளில் கூட்டுறவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

    - கலாச்சார, விஞ்ஞான மற்றும் தொழினுட்ப செயற்றிட்ட கூட்டுறவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

    - மேற்குறிப்பிட்ட கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றியதிலான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- இலங்கை மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுனர் திரு செய்யத் அஹ்மட் அராக்சியின் அழைப்பின் பேரில், 12 ஜூலை 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய பரிமாற்ற அலுவல்கள் துணை ஆளுனர், இலங்கை மத்திய வங்கியுடன் இணைப்புக்களை மறுபடியும் ஸ்தாபிப்பது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தினார்.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- இந்துசமுத்திர எல்லை வலய கூட்டமைப்பின் ஆலோசனைக் குழு, தெஹ்ரான் விஞ்ஞானம் மற்றும் தொழினுப்ப மாற்றத்திற்கான பிராந்திய நிலையம் போன்றவற்றின் செயற்பாடுகளில் பங்குபற்றிய தூதரகம், அது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசனைகளை நடாத்திவருகின்றது.

- சர்வதேச அணுசக்தி முகவரின் ஆளுனர் சபைத் தேர்தல் மற்றும் RCA உறுப்புரிமையில் ஈரானின் அபேட்சகத்தை இலங்கை ஆதரித்தது.

இ) பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

- 12-14 மே 2018 காலப்பகுதியில் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் ஈரானுக்கான இராஜாங்க விஜயத்தின்போது, ஈரானிய ஜனாதிபதி, மேன்மைதங்கிய எச். ஈ. ஹஸன் ரௌஹானியையும் கௌரவ அயத்தொல்லா அலி கமெனியையும் சந்தித்து இருதரப்பு பிரச்சனைகள், தற்கால அரசியல், இராஜதந்திரம், மற்றும் முக்கியமாக பழங்கால சரித்திரம் மற்றும் கலாச்சாரம் பற்றிய பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. இரு தரப்பினரும் சமூக அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, விவசாயம், மீன்பிடி, நீர் உயிரின வளர்ப்பு, பால் பண்ணை, சுற்றுலாத்துறை, ஆடைத்தொழிற்றுறை, பாதுகாப்பு, ரயில்சேவை, சிவில் விமானத்துறை மற்றும் நேரடி விமான சேவைகளை நிறுவுதல் போன்ற துறைகளில் கூட்டுறவை மேம்படுத்தல் பற்றி விபரமாக கலந்துரையாடினர்.

- இராஜாங்க விஜயத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றியதில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஈரானின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் வருமாறு:

  i. கிராமப்புறங்களுக்கு மின்சாரமளிக்கும் செயற்றிட்டம் – RE 8)

  ii. உமா ஓயா பல்நோக்கச் செயற்றிட்டம்

- ஈரானிய வர்த்தகர்களுடனான கலந்துரையாடல்களின் விளைவாக, ஒரு தனியார் ஏற்றுமதிக் கண்காட்சிக் கம்பனியானது (கஸ்பியன் இண்டர்நாஷனல் எக்ஸிபிஷன் கம்பனி), எமது இருதரப்பு வர்த்தகச் செயற்பாடுகளுக்காக ஈரானின் சாஞ்ஜான்

நகரிலுள்ள தமது ஏற்றுமதி நிலையத்தில் 500 சதுர மீட்டர்கள் இடத்தை இலவசமாக வழங்குவதற்குச் சம்மதித்திருக்கிறது.

அஸர்பைஜான்

- அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் 2018 – 2021 தவணைக்கான மறு தேர்தலில் அஸர்பைஜானின் அபேட்சகத்தை இலங்கை ஆதரித்தது. இதற்குப் பதிலாக இதே தேர்தல் 4-6 ஜூன் 2018 இல் பாரிசில் நடைபெற்றபோது, அஸர்பைஜான் இலங்கை அபேட்சகத்தை ஆதரித்திருந்தது.

- 8 ஆகஸ்ட் 2018 அன்று, ஈரானிலுள்ள இலங்கைத் தூதுவர்; இலங்கைக்கான சமகால அங்கீகாரத்தைக் கொண்டிருக்கும் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அஸர்பைஜானின் இலங்கைத் தூவரிடம் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நியமனக்கடிதத்தை வழங்கினார்.

டேர்க்மெனிஸ்தான்

- 16 ஏப்ரல் 2018 அன்று, ஈரானிலுள்ள இலங்கைத் தூதுவர்; இலங்கைக்கான சமகால அங்கீகாரத்தைக் கொண்டிருக்கும் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள டேர்க்மெனிஸ்தானின் மாண்புமிகு சபாநாயகர் திருமதி குல்ஷத் மம்மெடோவாவிடம் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நியமனக் கடிதத்தைக் கையளித்தார்.

3. ஈராக்

அ) இருதரப்பு உறவுகள்

- ஈராக்கின் பாக்தாத் நகரின் பச்சை வலயத்தில் (சர்வதேச வலயம்) நடைபெற்ற இராணுவத்தினருக்கு மலர்வளையம் வைக்கும் நிகழ்வில் தூதுவர் கலந்துகொண்டார்.

- இலங்கைத் தூதுவர், ஆசியாவுக்கான புதிய இயக்குனர் நாயகம், டாக்டர். திருமதி அமால் அல் ருபாயே மற்றும் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதான உபசரணை அதிகாரி, அல் மனால் அல் சாஃபியுடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.

- குர்திஸ்தான் பிராந்தியத்துடன் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக டாக்டர் அஹ்மட் ஜலாலுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

- இலங்கைத் தூதுவரைச் சந்தித்த ஈராக் பிரதிநிதிகள் குழுவொன்று, ஊனமுற்ற போர் வீரர்களைக் கவனிப்பது பற்றிக் கலந்துரையாடியது.

- தூதுவர் தனது நேர்காணல் ஒன்றில், இலங்கையின் தேயிலை மற்றும் சுற்றுலாத்துறை பற்றிக் குறிப்பிட்டார்.

- இலங்கையில் ஈராக்கின் இராஜதந்திரிகளுக்கான பயிற்சிகளில் மேலதிக வெற்றிடங்களை ஈராக் கோரியது.
- ஈராக் இலங்கை இணைந்த பொருளாதார தொழினுட்ப கூட்டுறவுக்கான குழுவின் கூட்டத்தின் 8 ஆவது அமர்வின் வளர்ச்சி பற்றித் தூதுவர் கலந்துரையாடினார்.
- ஐ.எஸ்.ஐ.எஸ் இனால் பாலியல் வன்முறை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றமை பற்றி பாக்தாத்திலுள்ள தூதுவர்களுக்கு தொகுத்துரைக்கப்பட்டது.
- குர்திஸ்தான் பிராந்தியத்திலுள்ள 5 பல்கலைக்கழக மாணவர்கள் பரிமாற்றம் பற்றிய திட்டம் ஒன்று அனுப்பப்பட்டது.
- இலங்கைத்தூதுவர், 23 ஜூலை 2018 இலிருந்து 4 நாட்கள் விஜயமாக குர்திஸ்தான் பிராந்தியத்திற்குச் சென்றார்.
- இலங்கைத்தூதுவர், குர்திஸ்தான் பிராந்திய அரசைச் சேர்ந்த பல அமைச்சர்களுடன் கலந்துரையாடினார்.
- இலங்கைத் தூதரகத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் பற்றி தூதுவர், வெளிநாட்டு அமைச்சுடன் கலந்துரையாடினார்.
- ஆசியாவுக்கான புதிய பணிப்பாளர் நாயகம் அம்ப்ஸாட் ஜவாட் கிண்டீலுடன் தூதுவர் கலந்துரையாடினார்.
- ஈராக் இலங்கை இணைந்த பொருளாதார தொழினுட்ப கூட்டுறவுக்கான குழுவின் கூட்டத்தின் 9 ஆவது அமர்வுக்காக, பக்தாத் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து புதிய திகதிகள் கோரப்பட்டன.
- பக்தாத்தின் வெளிநாட்டு அமைச்சகத்தின் மீதான குண்டுத்தாக்குதலின் 9 ஆவது நினைவு தினத்தில் இலங்கைத் தூதுவர் கலந்துகொண்டார்.
- ஈராக்கின் 4 ஆவது பாராளுமன்ற ஆரம்ப அமர்வில் தூதுவர் கலந்துகொண்டார்.
- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம் பாக்தாத்தில் கொண்டாடப்பட்டது.
- ஈரானின் 39 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வரவேற்பில் தூதுவர் கலந்துகொண்டார்.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் உதவி மையத்தின் தலைவரால் அழைப்பு விடுக்கப்பட்ட, சகல இராஜதந்திரிகளுக்குமான கூட்டத்தில் இலங்கைத் தூதுவர் கலந்துகொண்டார்.

- ஈராக்கை மீளக்கட்டியெழுப்புதலுக்கான சர்வதேச மாநாட்டில் இலங்கைத் தூதுவர் கலந்துகொண்டார்.

- ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் உதவி மையத்தினால், பொது தேர்தலுக்கான புதிய தொழினுட்பம் பற்றி சகல இராஜதந்திரிகளுக்கும் ஒரு தொகுப்புரை வழங்கப்பட்டது.

- ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் உதவி மையத்தினால், சகல இராஜதந்திரிகளுக்கும் தேர்தல், அரசியல் மற்றும் மனித உரிமைகள் பற்றியதில் ஒரு தொகுப்புரை வழங்கப்பட்டது.

- ஈராக்கின் இஸ்லாமிய மீயுயர் குழுவால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் தூதுவர் கலந்துகொண்டார்

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இலங்கைத் தூதுவர், பாக்தாத்தின் தேயிலை இறக்குமதியாளரான திரு ஹைதர் அப்பாஸைச் சந்தித்தார்.

- சுற்றுலாப் பயணப் பொதிகளை ஏற்பாடு செய்வதற்காக, இலங்கைத்தூதுவர், பாக்தாத்திலுள்ள முன்னணிப் பயண முகவரான திரு மொஹமட் மாஷ் மற்றும் திருமதி லூமா சோபி ஜூட் ஆகியோரைச் சந்தித்தார்.

- 2017 இல் அதிகமாக இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈராக் இரண்டாவதாக இருந்ததை இலங்கைத் தேயிலைச் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

- 2018 இன் முதல் 8 மாதங்களில், உலகளாவிய ரீதியில் இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் முன்னணி நாடாக ஈராக் இருக்கிறது.

- குர்திஸ்தானிலுள்ள எமது மாண்புமிகு உதவித் தூதரக அதிகாரியின் தலைமையில் வணிகக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது.

- அரபு மொழியில் தயாரிக்கப்பட்ட இலங்கை சுற்றுலாத்துறை பற்றிய சிறு நூல்கள், ஈராக் பயண கண்காட்சியில் விநியோகிக்கப்பட்டன.

- 'உம்-கஸர்' துறைமுகத்தில் இரண்டு கப்பல்களைக் கட்டுவதற்காக 'கொழும்பு டொக்யார்ட் லிமிட்டெட்' (கப்பல் துறைத்தளம்), தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

- ‘இலங்கை முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்டம் – 2018’ இல் ஒரு பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டது.

- குர்திஸ்தான் பிராந்தியத்தில் இலங்கைத் தேயிலை வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

- இலங்கைத்தூதுவர், ஏர்பில் மற்றும் சுலைமானியா வர்த்தக சம்மேளனங்களுடன் கூட்டங்களை நடத்தினார்.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் கொடுக்கப்பட்ட வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறை இலக்குகளை ஈராக் நிறைவேற்றி வருகிறது.

ஈ) கலாச்சார உறவுகள்

- இலங்கையின் கலாச்சார நிகழ்வுகளைக் கொண்டிருக்கும் 44 நிமிட காணொளி ஒன்று, பெரிய திரையில் காட்டப்பட்டது.

- ஈராக் சுற்றுலாத்துறை கண்காட்சியில், இலங்கையின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை சம்பந்தமான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

உ) தொழிலாளர் நலன்

- குர்திஸ்தான் பிராந்தியத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி தூதுவர் கலந்தாலோசித்தார்.

- ஈராக்கிலுள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு 1150 இடங்களை வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

- இலங்கைத் தூதரகமானது, ஈராக்கிலுள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

- ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்திலுள்ள வேலைகளுக்கான கேள்விகள் பற்றி இலங்கை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

- ஏர்பிலிலுள்ள புலம்பெயர் தொழிலாளர்களின் இருப்பிடத்தைப் பரிசோதித்த தூதுவர், அதுபற்றி கொழும்புக்கு அறிவித்தார்.

4. இஸ்ரேல்

அ) இருதரப்பு உறவுகள்

- விமானப்படைத்தளபதி கே.வி.பி ஜயம்பதி தலைமையிலான இருவரை உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழுவொன்று, 9 – 13 ஃபெப்ரவரி 2018 காலப்பகுதியில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்தது.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், திரு பிரசாத் காரியவசம், 10 -13 ஜூன் 2018 காலப்பாகுதியில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்தார். இவர், 12 ஜூன் 2018 இல் ஜெருசலேமிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற 2 ஆவது அரசியல் பேச்சுவார்த்தைக்கான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகித்தார். இரு தரப்பினரும், 1 ஆவது அரசியல் பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீளாய்வு செய்ததுடன், விவசாயம், கல்வி, உயர் கல்வி, வர்த்தகம், பொருளாதாரம், முதலீடு, சுற்றுலாத்துறை, மின்பிடி, பாதுகாப்பு, நீர்வளத்துறை, நகர திட்டமிடல், தொலைத்தொடர்பாடல் மற்றும் எரிசக்தி போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளையும் மேம்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றியும் ஆராய்ந்தனர். இந்த விஜயத்தின்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், 11 ஜூன் 2018 அன்று, ஜெருசலேமில் நடைபெற்ற வருடாந்த வழக்குரைஞர் மாநாட்டில், மையப்பொருள் பேச்சாளராகவும் கலந்துகொண்டார்.

- இலங்கை விமானப்படையின் வான் படைத்தலைவர் சி.பி லப்ரோய் தலைமையில் 17 உறுப்பினர் கொண்ட குழுவொன்று ஆகஸ்ட் 3 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரையில் இஸ்ரேலில் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

- இஸ்ரேலின் நவீன விவசாய தொழினுட்பங்கள் பற்றி ஆராய்வதற்காக, விவசாய அமைச்சின் செயலாளர் திரு பி விஜயரத்னவின் தலைமையில் 20 உறுப்பினர் கொண்ட குழுவொன்று, ஆகஸ்ட் 15 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரையில் இஸ்ரேலுக்கு வருகை தந்திருந்தது.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- ஆசிய அபிவிருத்தி வங்கியில் இஸ்ரேலின் உறுப்புரிமைக்கான விண்ணப்பத்திற்கு ஆதரவளிப்பதென இலங்கை தீர்மானித்துள்ளது.

- நியூயோர்க்கில் 2019 நவம்பரில் கூட்டப்படவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 74 ஆவது அமர்வின்போது நடத்தப்படவுள்ள நிருவாக மற்றும் பாதீட்டுக் கேள்விகளுக்கான ஆலோசனைக்குழு (ACABQ) தேர்தலில், 2020 - 2022 தவணைக்கான இஸ்ரேலின் அபேட்சகத்தை ஆதரிப்பதாக இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது.

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இஸ்ரேலிலிருந்து இலங்கைக்கான சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்குடன், இஸ்ரேலுக்கும் இலங்கைக்குமிடையில் வாடகை விமான சேவைகளை இயக்குவது பற்றி, இஸ்ரேலிய சுற்றுலா தொழில் நடத்துவோரிடம் தூதரகம் கலந்துரையாடலை நடத்தியது.

- இலங்கையிலிருந்து ஆடை ஏற்றுமதி செய்வது குறித்து, முன்னணி ஆடை இறக்குமதியாளரான 'ஃபொக்ஸ் கம்பனி' யுடன் தூதரகம் கலந்துரையாடியது.

- இலங்கையின் வாசனைத் திரவியங்கள், தேங்காய் உற்பத்திப்பொருட்கள், தேயிலை மற்றும் பிற உணவுப்பொருட்களை இஸ்ரேல் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்காக தூதரகமானது, பேரங்காடிகள் சிலவற்றுடன் கலந்துரையாடலை நடத்தியது. இந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து, எமது உணவு உற்பத்திப்பொருட்கள் 'கொஷர்' சான்றிதழைக் கொண்டிருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் இஸ்ரேல் தரப்பு, அதே உணவுப்பொருட்களை, இலங்கையுடன் ஒப்பிடுகையில் மலிவான விலையில் தாய்லாந்து, வியட்னாம் மற்றும் பிலிப்பைன்ஸிலிருந்து இறக்குமதி செய்வதாகவும் அறிவித்தது.

- 2018 ஆகஸ்ட் 6 முதல் 18 ஆம் திகதிவரை 43 ஆவது சர்வதேச கலை மற்றும் கைவினைப்பொருட்களுக்கான விழா ஜெருசலேமில் இடம்பெற்றது. தூதரகத்தின் அழைப்பின் பேரில், 'ரன் ருவான் கம்பனி பிரைவேட் லிமிட்டெட்', 'ப்ளூ ஸ்டார் கம்பனி' ஆகிய கம்பனிகள் இந்த விழாவில் கலந்துகொண்டு, இஸ்ரேலியர்களுக்காக இலங்கையின் கலை மற்றும் கைவினைப்பொருட்களைக் காட்சிக்கு வைத்தன.

- 2018 ∴பெப்ரவரி 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெற்ற, 24 ஆவது 'வருடாந்த சர்வதேச மத்தியதரைக்கடல் சார் சுற்றுலாச் சந்தை -2018' இல் 50 நாடுகளுடன் இலங்கையின் தூதரகத்தினரும் பங்குபற்றினர். கிட்டத்தட்ட 25,500 பார்வையாளர்கள் அந்தக் கண்காட்சி நிலையத்திற்கு வந்திருந்தனர்.

- இந்த வருடத்தில் இலங்கைத் தூதரகத்தில் இரண்டு வர்த்தகம் சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இஸ்ரேல் - இலங்கை வர்த்தக சம்மேளத்துடன் தொடர்புகொண்டு, அந்த முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டன.

- இலங்கைத் தூதுவர்; இஸ்ரேல் – இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர், ஜெருசலேமிலுள்ள இலங்கைக்கான கௌரவ உதவித்தூதர் மற்றும் பிற இயலாற்றலுள்ள முதலீட்டாளர்களைச் சந்தித்து, இலங்கையின் முதலீட்டுச் சூழல், போக்குவரத்து, சுற்றுலாத்துறை மற்றும் உட்கட்டுமானம் போன்றவை பற்றித் தொகுத்துரைத்தார்.

ஈ) கலாச்சார உறவுகள்

- தமிழ் சிங்கள புதுவருடம் ஏப்ரல் 7 ஆம் திகதி ஜெருசலேமில் கொண்டாடப்பட்டது.

- வெசாக் தினமானது, ஏப்ரல் 29 ஆம் திகதி, தூதரகத்திலுள்ள இலங்கை மற்றும் இஸ்ரேலிய துறவிகளின் பங்களிப்புடன் நடைபெற்றது.

- 2018 மே 5 ஆம் திகதி, தெல் அவிவ் இல் 'வெசாக் சீல' நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- 2018 மே 10 ஆம் திகதியன்று, தெல் அவிவிலுள்ள இலங்கைச் சமூகத்தினரால் கலாச்சார நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

- 2018 மே 12 ஆம் திகதியன்று, தெல் அவிவிலுள்ள இலங்கைச் சமூகத்தினரால் வெசாக் விழா ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

- 2018 ஜூன் 30 அன்று, தூதரக வளவில் பொசொன் நிகழ்வு இடம்பெற்றது.

- இலங்கையர்களுடன் தூதரக உத்தியோகத்தர்களும் பங்குபெற்ற சமய நிகழ்வொன்று, 28 ஜூலை 2018 அன்று தெல் அவிவில் நடைபெற்றது. இந்த 'வஸ் பிங்காம்' நிகழ்ச்சியில் சுவிட்சர்லாந்தில் வாழும் இரண்டு இலங்கைத் துறவிகள் பங்குபற்றியதுடன் தற்காலிக பௌத்த கோவிலானது 'பத்திவேத விஹாரய' என்று பெயரிடப்பட்டது.

- 2018 ஆகஸ்ட் 18 இல் இலங்கைச் சமூகத்தினரால் தெல் அவிவில் பொசொன் நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது.

- 24 செப்டெம்பர் 2018 அன்று வதிவிடத்தில் ஒரு 'தான' நிகழ்ச்சியை தூதரகம் ஒழுங்குசெய்தது.

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம், தூதரக வளவில் ்பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

உ) தொழிலாளர் நலன்

- இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு, இலங்கைத்தூதரகம், 18.02.2018 அன்று, ஹை்பாவில் ஒருநாள் நடமாடும் சேவை ஒன்றை நடத்தியது. அதில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கான 34 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 11 நபர்களுக்கு கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. ஒரு புதிய கடவுச்சீட்டு கையளிக்கப்பட்டது.

- "இஸ்ரேலின் 'எல்லை கடத்தல், சனத்தொகை மற்றும் குடிவரவு நிர்வாகத்திற்கும் (PI PA) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கும் இடையிலான ஏற்பாடு" என்ற, பருவகால விவாசாயத் தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் ஜி2ஜி வேலைத்திட்டத்தின் கீழ், இஸ்ரேலில் 5 இலிருந்து 8 மாதங்கள் வரை பருவகால விவசாய வேலைகளைச் செய்வதற்காக 257 பருவகால விவசாய தொழிலாளிகள் இஸ்ரேலை வந்தடைந்தனர்.

- "இஸ்ரேலிலுள்ள வயதான, ஊனமடைந்த ஊழியர்களைக் குணப்படுத்துவதற்காக, இலங்கையிலிருந்து 50 தொண்டு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தலும் நியமித்தலும்' என்பதான ஜி2ஜி இன் இணைந்த முன்னோடித் திட்டத்தின் கீழ், 10 காப்பாளர்கள் இஸ்ரேல் வந்தடைந்தனர்.

- 169 இலங்கை புலப்பெயர் தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவி வழங்கப்பட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 8 இலங்கை புலம்பெயர்

தொழிலாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டது. சிறைகளிலும் தடுப்புக்காவலிலும் இருந்த 4 இலங்கைத் தொழிலாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டது. இலங்கையிலிருந்து வந்திருந்த பருவகால விவசாயி ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் அவர் தூதரக அதிகாரி ஒருவருடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

- இஸ்ரேலின் குறிப்பிட்ட தொழில் சந்தைத் துறைகளில் இலங்கையர்களை தற்காலிகமாக பணிக்கமர்த்துவது தொடர்பான ஒரு வரைவு உடன்படிக்கையை இஸ்ரேல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, இலங்கை அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது. இது பற்றி இலங்கை பரிசீலனை செய்து வருகிறது.

- காப்பாளர்கள் துறையின் விரிவாக்கப்பட்ட முன்னோடித்திட்டம் என கருதப்படும் மேற்படி உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தல் வரைவுச் செயற்றிட்டத்தையும் இஸ்ரேலிய அதிகாரிகள் அனுப்பியுள்ளனர். இதுபற்றி இலங்கை பரிசீலனை செய்துவருகின்றது.

- இஸ்ரேலுக்குச் சுற்றுலா சென்றிருந்த திருமதி டி.எச்.டி வயலட் வின்னி்ப்ரட், 13.09.2018 அன்று ஜெருசலேமில் காலமான நிலையில், அவரது பூதவுடலானது, விமானம் மூலமாக - இல.பி.எஸ்.778 – இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

5. ஜோர்டான்

அ) இருதரப்பு உறவுகள்

- ஜோர்டான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நாயகம், மேன்மை தங்கிய திரு சையித் அல் லௌஸியை, இலங்கைத்தூதுவர் சந்தித்து, வெளிநாட்டு அமைச்சர்கள் மட்டத்திலான பரஸ்பர விஜயங்கள் பற்றி கலந்துரையாடினார்.

- இலங்கைத் தூதுவர், 15.01.2018 அன்று, இளவரசி பாஸ்மாவின் அலுவலகத்தைச் சேர்ந்த செல்வி மாயைச் சந்தித்து, இலங்கை தேசிய தினத்தன்று இளவரசி பாஸ்மாவை பிரதம விருந்தினராக அழைத்தார்.

- 15.02.2018 அன்று, இலங்கைத் தூதுவர், 'சிலியன் எலக்ரோனிக் டெக்னோலொஜி' யின் நிர்வாக இயக்குனர் திரு ராத் சுல்தானையும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான முன்னாள் உயர் ஸ்தானிகரான, இளவரசர் சையித் ராத் அல் ஹுசைனின் சகோதரரையும் சந்தித்தார்.

- 2018 மார்ச் 5 ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், 'மனிதர்களுக்கெதிரான கண்ணிவெடி தடை ஒப்பந்த' த்தின் சிறப்புத் தூதுவர், மேன்மை தங்கிய இளவரசர் மைரட் ராட் சையித் அல் ஹுசைன் அவர்கள், இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவர் மரியாதை நிமித்தமாக, மேன்மைதங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி, மாண்புமிகு வெளிநாட்டு

அலுவல்கள் அமைச்சர் போன்றோரைச் சந்தித்தார். அத்துடன் அவர், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமி நாதனுடன் வடக்கு மாகாணத்திற்கும் விஜயம் செய்தார்.

- தாவரப் பாதுகாப்பு மற்றும் தாவர நலச்சான்று இயக்குனரகத்தின் இயக்குனர், பொறியியலாளர் கொலெளத் ஏ அராங்கி அவர்களைச் சந்தித்த தூதுவர், இலங்கைப் பழங்களை ஜோர்டானிய அதிகாரிகள் தடை செய்தமை குறித்துக் கலந்துரையாடினார்.

- வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்த சேனநாயக்க; 9-11 மே, 2018 காலப்பகுதியில் ஜோடானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அவர், அம்மான் வர்த்தக சம்மேளனத்தின் அதிகாரிகள், ஜோடான் சுற்றுலாச்சபை மற்றும் உரிமையாளர்கள், இலங்கை ஆடைத்தொழிற்சாலைகளின் பிரதான நிறைவேற்றதிகாரிகள் மற்றும் மனிதவள முகாமையாளர்கள் போன்றோருடன் கலந்தாலோசனைகளை நடத்தினார். சில வருடங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்ட 'றோயல் ஜோர்டான்' விமான சேவைகளை மறுபடியும் ஆரம்பிப்பது பற்றியும் திறமையுள்ள, ஓரளவுக்குத் திறமையுள்ள மேலும் தொழிலாளர்களுக்கு ஜோர்டானில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆசிய பிரிவின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் மஹர் தார்னேயைச் சந்தித்த இலங்கைத் தூதுவர், யுனெஸ்கோவின் புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கங்களுக்கிடையேயான குழுவுக்கான 2018 – 2022 தவணைக்கான இலங்கையின் அபேட்சகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

- ஜோர்டான் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைச் சந்தித்த தூதுவர், அங்குள்ள இலங்கை குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பை வழங்குவதாக அறிவிப்பது பற்றிக் கலந்துரையாடினார்.

ஆ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடு

- 22.02.2018 அன்று இலங்கைத் தூதுவர், அம்மான் வர்த்தக சம்மேளன தலைவர் திரு இஸ்ஸா முராட்டைச் சந்தித்தார்.

- 28.02.2018 அன்று, இலங்கைத் தூதுவர், 'அல் ம்ஹராடோ இண்டர்நாஷனல் ட்ரேடிங் எஸ்டேட். ஜெனரல் இன்வெஸ்ட்மென்ட்' இன் தலைவர் திரு மஜ்டி முஹ்ராடியைச் சந்தித்துப் பேசினார். ஏல அறிவிப்புகள் அவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தன. அத்துடன் அமைச்சர் ஹரின் ஃபெர்னாண்டோவின் ஜோர்டான் விஜயத்தின்போது, 20.08.2018 அன்று ஒரு சந்திப்பும் ஒழுங்குசெய்யப்பட்டது.

- ஜோர்டான் வர்த்தக சம்மேளனத்தின் பேரவை தலைவர், செனெட்டர் நயேல் அல் கபாரிட்டியைச் சந்தித்த தூதுவர், இலங்கையின் 'பொருளாதார வளாக'த்திற்கு

ஜோர்டான் வர்த்தக பிரதிநிதிகள் குழுவினர் வருவதற்காக ஏற்பாடுகள் பற்றியும் இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது பற்றியும் கலந்துரையாடினார்.

- 10 ஆவது ஜோர்டானிய பொருளாதார மன்றத்தின் middle east block chain & fintech திறப்பு விழாவில் தூதுவர் கலந்துகொண்டார்.

- 25.04.2018 அன்று, தூதுவர், தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கமைப்பின் தலைவர் திரு மஸென் மாய்லாவைச் சந்தித்தார்.

- ஜோர்டான் ஆடை, அணிகலன் மற்றும் துணி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு ஹுசம் சலேயை, 27.05.2018 அன்று சந்தித்தார்.

- அம்மான் வர்த்தக சம்மேளனத்திற்கு நான்கு தடவைகள் விஜயம் செய்த தூதுவர், திரு மார்வான் கெய்த் மற்றும் திரு ரியாட் அல் சைபி ஆகிய அதிகாரிகளைச் சந்தித்தார்.

- இலங்கை மற்றும் ஜோர்டான் வர்த்தக உறவின் தலைவர் திரு மொஹமட் எச் டௌபத்தை, 13.08.2018 அன்று சந்தித்த தூதுவர், இலங்கை ஊற்று நீர் மற்றும் வாசனைத் திரவியங்களை இறக்குமதி செய்வது பற்றிக் கலந்துரையாடினார். அத்துடன், இலங்கையின் நக்கிள்ஸ் தண்ணீர் நிறுவனத்துடன் தொடர்புகொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொடுத்தார்.

- ஜோர்டான் வணிகர்கள் மத்தியில் இலங்கை உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், செப்டெம்பர் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் தூதரக வளவில் ஒரு கடைத்தெருவை இலங்கைத் தூதரகம் ஒழுங்கு செய்தது.

- அறிவார்ந்த ஆதனப் பதிவு மற்றும் பாதுகாப்பு (Intellectual Property Registration and Protection) துறையில், உலகளாவிய பாரிய தொழில் வல்லுனர் சேவை நிறுவங்களில் ஒன்றான 'தலால் அபு கசலே' நிறுவனத்தின் தலைவரை, இலங்கைத் தூதுவர் சந்தித்தார். இந்த நிறுவனமானது (TAG org), தனது கிளையை இலங்கையில் நிறுவுவதற்காக 200,000 அமெரிக்க டொலர்களை அனுப்பியுள்ளது.

- ஜோர்டானில் 25 கடல் உணவுச் சாலைகளையும் 22 கிளைகளையும் கொண்டுள்ள நிறுவனமான 'Ocean Sea Food and Restaurant' தலைவரைச் சந்தித்த தூதுவர், இலங்கையிலிருந்து கடல் உணவுகளை ஜோர்டானுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து கலந்துரையாடினார்.

இ) கலாச்சார உறவுகள்

- இலங்கை தேசியதினத்தை நினைவு கூரும் நோக்குடன் 500 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கெடுத்த கலாச்சார நடன நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

- இணக்கப்பாட்டுக்கான தேசிய வாரம் 2018' நடத்தப்பட்டது.

- இலங்கைத் தூதரகமானது, பெருமளவிலான இலங்கையர்களும் வெவ்வேறு மத தலைவர்களும் கலந்துகொண்ட தமிழ் சிங்கள புத்தாண்டு, வெசாக், பொசொன் மற்றும் ஈஸ்டர் போன்ற சமய நிகழ்வுகளைக் கொண்டாடியது.

- இலங்கையிலிருந்து வருவிக்கப்பட்ட பௌத்த துறவிகள், இலங்கை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சமய மற்றும் ஆன்மீக சேவைகளை வழங்கினர். நான்கு பௌத்த, இரண்டு கிறிஸ்தவ, ஒரு இந்து மற்றும் ஒரு இஸ்லாம் மத நிகழ்வுகள் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- 'அல் வகலட்' தெருவில், 40 இற்கும் மேற்பட்ட இலங்கை பாரம்பரிய நிகழ்வுகளும் இலங்கை கலாச்சார ஊர்வலமும் தூதரகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

ஈ) தொழிலாளர் நலன்

- 18.02.2018 அன்று, இலங்கைத் தூதுவர், ஜோர்டான் தொழிலமைச்சர் மாண்புமிகு. டாக்டர் அலி அல் கஸாவியைச் சந்தித்து, 'தொழிலாளர்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வது தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக் கண்டுபிடிக்கும் வழிகளை மேம்படுத்தலும், அந்த தொழிலாளர்களை விரிவாக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்தலும்' பற்றியதிலான உடன்படிக்கையைப் புதுப்பிப்பது பற்றியும் பொது மன்னிப்பு பற்றியும் கலந்துரையாடினார்.

- ஜோர்டானிலுள்ள 'இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவன'த்தின் (IOM) பிராந்தியத் தலைவர் திரு என்ரிகோ பொன்சியானியைச் சந்தித்து, பொது மன்னிப்பை அறிவித்தல் பற்றியதில் அவருடைய ஆதரவைக் கோரினார்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் குழுவும் இலங்கையின் புலனாய்வுத் துறையின் குழுவினரும், 'மனிதக் கடத்தல் வியாபார விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தில் கலந்துகொள்வதற்காக, 14.08.2018 அன்று ஜோர்டானுக்குச் சென்றார்கள். இந்தக் குழுவினர் இடம்பெயர்ந்தோருக்கான சட்ட உதவி – தம்கீன் சம்பந்தமாக தொழிலமைச்சரையும் ஜோர்டான் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருக்கின்ற மனிதக்கடத்தல் வியாபாரத்திற்கெதிரான அலகைச் சேர்ந்த அதிகாரிகளையும் சந்தித்தனர்.

- தொலைத்தொடர்பாடல், டிஜிட்டல் உட்கட்டுமானம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர், மாண்புமிகு ஹரின் ∴பொர்னாண்டோ, 19 ஆகஸ்ட் 2018 ஜோர்டானுக்கு விஜயம் செய்தபோது, ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்களையும் ஜோர்டானின் ஆட்சேர்ப்பு முகவர் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர், அட் டுலையில்

பகுதியிலுள்ள மலிபன் ஆடைத்தொழிற்சாலைக்குச் சென்று, அங்குள்ள வேலைத்தள நிலைமைகளைக் கண்காணித்தார்.

- தூதுவர் கமால், அஸீல், மாஸ் மற்றும் மலிபன் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்தார்.

- 'பாதுகாப்பான இடப்பெயர்வுச் செயற்றிட்ட'த்தின் கீழ், இலங்கையிலிருந்து ஒரு பிரதிநிதிகள் குழு 17 செப்டெம்பர் 2018 அன்று ஜோர்டானுக்கு வந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம், தம்கீன்-இடம்பெயர்ந்தோருக்கான சட்ட உதவி, தொழில் அமைச்சு, அரபு இடம்பெயர்ந்தோர் மூலவள மையம் மற்றும் ஜோர்டானின் ஆட்சேர்ப்பு முகவர்கள் கூட்டமைப்பு போன்றவற்றுக்கு விஜயம் செய்தனர்.

- வீசா காலாவதியான நிலையில் சட்ட விரோதமாக தங்கியிருந்த 11 இலங்கையர்களை நாட்டுக்கு அனுப்புவதற்கு தூதரகம் உதவியது.

- மனிதக் கடத்தல் வியாபாரத்திற்கு எதிரான அலகின் தலைவர் திரு யசின் ஜெரா, தொழில் இயக்குனர், 'தம்கீன்' இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வி லிண்டா எம் அல் கலாஷ் மற்றும் ஜோர்டானின் அரச சார்பற்ற நிறுவனங்களான கரிட்டாஸ், ரெட் கிரசன்ட் போன்றவற்றுடன் தூதரகம் கூட்டங்களை நடத்தியது.

- தூதரகத்தின் தொழிலாளர் பிரிவின் அதிகாரிகள் அடிக்கடி தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிடுகின்றனர். ஜனவரி 2018 இலிருந்து இதுவரையில் 36 சாதாரண வருகைகளும் 10 அவசரகால வருகைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

- ஜூலை 2018 இல், 'இடம்பெயர்ந்தோருக்கான நியாயமான வேலை வழங்கல் பயிற்சிகள்' என்ற கருத்தம்சத்தின் கீழ், ஜோர்டானின் ஆடைத் துறையின் மனிதவள முகாமையாளர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட மாநாட்டில் தொழிலாளர் பிரிவின் அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

- தூதரகம் மாதத்திற்கு ஒரு தடவை சிறைக்குச் சென்று, அங்குள்ள இலங்கையர்களைப் பார்வையிடுகின்றது.

6. குவைத்

அ) இருதரப்பு உறவுகள்

- குவைத்தின் ஆசிய விவகாரங்களுக்கான வெளிநாட்டு அலுவல்கள் உதவி அமைச்சர், மாண்புமிகு அலி சுலைமான் அல் சையித், 22-25 ஜூலை 2018 காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இவர், 24 ஜூலை அன்று இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் தொடர்புபட்ட பிற திணைக்களங்கள், முகவர்களுடன் கலந்துரையாடினார்.

இரு தரப்பினரும் கலாச்சாரம், ஊடகம், கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், முதலீடு, தொழிலாளர் போன்ற துறைகளில் கூட்டுறவை ஏற்படுத்துவது குறித்துக் கலந்துரையாடினர். இலங்கையின் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு குவைத்தின் நிதியுதவி, அரபு பொருளாதார அபிவிருத்திக்கான நிதியுதவி, மற்றும் எதிர்காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் குவைத்தின் முதலீடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. இதுவரையில் மொரக்கந்த நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்திச் செயற்றிட்டம், மொரகொல நீர் சக்தி செயற்றிட்டம் உள்ளிட்ட, 15 செயற்றிட்டங்களுக்காக 77 மில்லியன் குவைத் தினார் (அமெரிக்க டொலர் 256 மில்லியன்) கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.1997 இல் நடைபெற்ற முதலாவது கூட்டத்திற்கு 21 வருடங்களுக்குப் பின், குவைத் வர்த்தகம் சம்பந்தமாக இலங்கை-குவைத் இணைந்த குழுவின் 2 ஆவது அமர்வுக்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் 9-11 அக்டோபர் 2018 காலப்பகுதியில் குவைத்தில் இடம்பெற்றன.

- 30 ஏப்ரல் 2018 அன்று குவைத் வெளிநாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட, 'மனித உரிமைகளை ஆதரிப்பதில் தனியார் துறையின் சமூக பொறுப்பு' பற்றிய கருத்தரங்கில், தூதரகம், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

- இலங்கையின் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர், மாண்புமிகு அப்துல் ஹலீம், குவைத் இஸ்லாமிய விவகார அமைச்சின் அழைப்பின் பேரில், 22-26 மார்ச், 2018 காலப்பகுதியில் குவைத் செல்வதற்கான ஏற்பாடு தூதரகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

- 2018 ்பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரலில் நடந்த உள்துறை மற்றும் வெளிநாட்டு அமைச்சுக்களுடனான சந்திப்புக்களினால், குவைத் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக்காலத்தின் உச்ச நன்மையைப் பெற முடிந்தது.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பது பற்றியதில் அரசாங்கங்களுக்கு இடையேயான குழுவைத் தெரிவு செய்வதற்கான, 2018 – 2022 தவணைக்கான இலங்கையின் அபேட்சகத்திற்கு குவைத்தின் ஆதரவு உறுதிப்படுத்தப்பட்டது.

- 23 ஜூன் 2018 அன்று, சண்டிகன் குவைத் வீட்டு பணியாளர்கள் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 'சர்வதேச வீட்டுப் பணியாளர்கள் தின'த்தில் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

- ஆசிய கூட்டுறவு பேச்சுவார்த்தையின் பின்வரும் நிகழ்வுகளில் இலங்கையின் பங்களிப்பை தூதரகம் உறுதிப்படுத்தியது:

  - 15 ஒக்டோபர் 2018 அன்று தெஹ்ரான், ஈரானில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய கூட்டுறவு பேச்சுவார்த்தை

- 14 ஒக்டோபர் 2018 அன்று 16 ஆவது ஆசிய கூட்டுறவு பேச்சுவார்த்தை

- 12-13 மார் 2018 அன்று குவைத்தில் இடம்பெற்ற 'உள்ளடங்கியதும் நீடித்ததுமான அபிவிருத்தி' பற்றியதிலான 2 ஆவது ஆசிய கூட்டுறவு பேச்சுவார்த்தையின் பணிக்குழு.

- 4-6 செப்டெம்பர் 2018 அன்று, 'பான் பசிபிக் சொனர்கோன் ஹோட்டல்' டாக்காவில், 3 ஆவது சுற்றுலாத்துறை அமைச்சர்கள் கூட்டம்

- 27 செப்டெம்பர் 2018 அன்று நியூயோர்க்கில் 73 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின்போது, ஆசிய கூட்டுறவுப் பேச்சுவார்த்தையின் அமைச்சுக்கள் ரீதியிலான கூட்டம்.

- 13-14 செப்டெம்பர் 2018 அன்று பெய்ஜிங்கில் ஆசிய எரிசக்தி பாதுகாப்பு மற்றும் மாற்ற நிலைக்கான கூட்டுறவு மன்றம்.

- 8 டிசம்பர் 2017 இல் குவாங்ஸூ, சீனாவில் 'ஆசிய கூட்டுறவு பேச்சுவார்த்தை மற்றும் பொதுவான எதிர்காலத்திற்கான ஆசிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பல்' பற்றிய கருத்தரங்கம்.

இ) பொருளாதார உறவுகளும் வெளிநாட்டு முதலீடுகளும்

- 9 – 11 ஒக்டோபர் 2018 காலப்பகுதியில் குவைத்தில் 2 ஆவது இணைந்த வர்த்தக குழு கூட்டத்தை நடத்துவதற்காக குவைத் அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

- 27 ஜனவரி 2018 இல் 'Palm beach' ஹோட்டலில் 'ஆசிய அங்காடி' மற்றும் 21 மார்ச் 2018 இல் ஷஹீத் பார்க்கில் 'ஸ்பிரிங்க் ஃபெஸ்டிவல்' போன்றவற்றில் தூதரகம் பங்குகொண்டது.

- குவைத் வர்த்தகர்கள் இலங்கைக்கு வந்து, இங்குள்ள ஏற்றுமதியாளர்களைச் சந்திப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

- சில வர்த்தக பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன.

ஈ) கலாச்சார உறவுகள்

- 8 ஃபெப்ரவரி 2018 அன்று அதிகாரபூர்வ வதிவிடத்தில் தேசிய தின வரவேற்பு நடத்தப்பட்டது.

- இலங்கைத் தூதரகம், குவைத்தின் சர்வதேச பெண்கள் குழுமத்துடன் இணைந்து, 4 மார்ச் 2018 அன்று 'கிரௌன் பிளாஸா ஹோட்டலில் 'இலங்கை தின'த்தை ஏற்பாடு செய்திருந்தது.

- தூதரகமானது, இலங்கை ஈமக்கடன் நிதி மற்றும் சமூக சேவைச் சங்கத்துடன் இணைந்து, குவைத்திலுள்ள இலங்கை கலாச்சார கூட்டமைப்பு ஒழுங்குசெய்திருந்த இரு நாள் புதுவருட விழாக்கள் 2018 ஏப்ரல் 6 ஆம் திகதியும் 13 ஆம் திகதியும் நடைபெற்றன.

- 2018 மே 3 ஆம் 4 ஆம் திகதிகளில் வெசாக் தின நிகழ்ச்சிகளை தூதரக வளவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

- 28 - 29 ஜூன் 2018 இல் 'நாம் இலங்கைச் சமுதாயம்' உடன் இணைந்து தூதரகம் பொசொன் நிகழ்வை ஒழுங்குசெய்திருந்தது.

- இலங்கை முஸ்லிம்களுக்காக, 2018 ஜூன் 1,7,8 திகதிகளில் தூதரக வளவில் இஃப்தார் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- 2018 ஆகஸ்ட் 10-11 ஆம் திகதிகளில் வணக்கத்துக்குரிய அத்தரகம பக்னலங்கர தேரோவினால் ஒரு சிறப்பு தம்ம உபதேசம் ஒழுங்குசெய்யப்பட்டது.

உ) தொழிலாளர் நலன்

- தொலைத்தொடர்பாடல், டிஜிட்டல் உட்கட்டுமானம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிலிருந்து பிரதிநிதிகள் குழுவொன்று 11-12 ஜூலை 2018 காலப்பகுதியில் குவைத்துக்கு விஜயம் செய்தது. இந்த குழு, மனிதவலுவுக்கான பொது அதிகாரசபை, புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம் மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகளையும் குவைத்திலுள்ள ஆட்சேர்ப்பு முகவர்களையும் சந்தித்தது.

- 2012 இல் கைச்சாத்திடப்பட்ட தொழிலாளர், ஆட்சேர்ப்பு மற்றும் மனிதவலு அபிவிருத்தி பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ், இணைந்த பணிக்குழுவை உருவாக்குவது தொடர்பாக, குவைத்திலுள்ள மனிதவலுவுக்கான பொது அதிகாரசபையுடன் தூதரகம் ஆலோசனையில் ஈடுபட்டது.

- மனிதக்கடத்தல் வியாபாரப் பிரச்சனைகளைத் தீர்க்கும் நோக்கத்துடன், தூதரகமானது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, மனிதவலுவுக்கான பொது அதிகார சபைத் திணைக்களம், வீட்டுப் பணியாளர் திணைக்களம், குவைத்திலுள்ள புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம் மற்றும் குவைத்திலுள்ள பல தூதரகங்களுடன் தொடர்புகொண்டிருந்தது.

- அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வெவ்வேறு பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதற்கான உதவிகளை தூதரகம் செய்தது. 2018 ஜனவரி 1 இலிருந்து செப்டெம்பர் 30 வரையிலான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற

வீட்டுப்பணியாளர் மற்றும் ஏனைய பணியாளர்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் 577 ஆகும். (பெண்கள் 48, ஆண்கள் 529).

- பல புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சம்பள நிலுவையைப் பெற்றுக்கொடுப்பதற்கு தூதரகம் உதவி செய்தது. 2018 ஜனவரி 1 இலிருந்து செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதியில் 25 புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சம்பள நிலுவைத் தொகையான 6,971/ குவைத் தினார்கள் (3.6 மில்லியன் இலங்கை ரூபா) மீளப்பெறப்பட்டது.

- தூதரகமானது வைத்தியசாலைகளில் நோயாளர்களாக அனுமதிக்கப்பட்டிருந்த இலங்கையர்களை 14 தடவைகள் சென்று பார்வையிட்டு, உதவியிருக்கிறது. இதில் 5 நோயாளிகளுக்கான வைத்தியசாலைக் கட்டணமான 19,120 குவைத் தினார்கள் (10 மில்லியன் இலங்கை ரூபாய்), விலக்களிக்கப்பட்ட நிலையில், அவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

- பல்வேறு பிரச்சனைகளால் தமது பணியிடங்களிலிருந்து வெளியேறும் வீட்டுப் பணிப்பெண்களுக்காக ஒரு தங்குமிடத்தை தூதரகம் பேணிவருவதுடன், இது தொடர்பான ஒரு வரவேற்புக் கருமபீடம் 24/7 காலமும் இயங்கிவருகிறது. 2018 ஜனவரி 1 முதல் 30 செப்டெம்பர் வரையான காலப்பகுதியில், தமது இடத்தை விட்டு வெளியேறி இந்த தங்குமிடத்திற்கு வந்த வீட்டுப் பணிப்பெண்களின் எண்ணிக்கை 771 ஆகும். இந்த தங்குமிடத்தில் சராசரியாக 75 பெண் தொழிலாளர்களை தூதரகம் பாதுகாத்துப் பராமரிக்கிறது.

- 2018 ஜனவரி 1 முதல் 30 செப்டெம்பர் வரையான காலப்பகுதியில், தூதரகம் 742 இலங்கையர்களை நாட்டுக்கு அனுப்பியிருந்தது. இதில் 630 பேர் பெண் தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் தூதரகத்தின் தங்குமிடத்தில் இருந்தவர்கள். மிகுதி 112 பேர் சட்டவிரோத புலம்பெயர் தொழிலாளர்களாவர்.

- திறனுள்ள மற்றும் ஓரளவுக்குத் திறனுள்ள இலங்கையர்களுக்கு புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன், இலங்கைத் தூதரகத்தினர், குவைத்திலுள்ள பல வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் பிரபல வணிக நிறுவனங்களுக்குப் பல தடவைகள் சென்றிருந்தனர். இதன் மூலம் வணிக நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு முகவர்களிடமிருந்து 434 வேலை வாய்ப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

- குவைத்திலுள்ள சிறைச்சாலைகளில் 192 இலங்கையர்கள் (160 ஆண்கள், 32 பெண்கள்) தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தூதரகமானது 11 இடங்களிலுள்ள மத்திய சிறைச்சாலைக்கும் நாடுகடத்துவோருக்கான தடுப்புக்காவல் நிலையம் மற்றும் அரசாங்க தங்குமிடம் போன்றவற்றுக்கும் விஜயம் செய்தது.

- குவைத்தின் மாண்புமிகு அமீரின் பொது மன்னிப்பின் கீழ், 139 இலங்கைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதற்கு தூதரகம் நடவடிக்கைகளை எடுத்தது. இதில் 32 கைதிகளுக்கான ஆயுட்தண்டனை 10 வருடங்களாகவும் 74 கைதிகளின் 15 வருட தண்டனைகள் 10 வருடங்களாகவும் குறைக்கப்பட்டன.

7. லெபனான்

8. அ) இருதரப்பு உறவுகள்

- 07.02.2018 அன்று உத்தியோக வதிவிடத்தில் இராஜதந்திர வரவேற்பு நடத்தப்பட்டது.
- 23.05.2018 அன்று, சட்டசபையின் தலைவருக்கான தேர்தலிலும் லெபனானின் தேசிய சட்டசபையின் பொதுச் செயலகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பணியகத்திலும் தூதரகம் பங்குபற்றியது.
- 28.06.2018 அன்று, லெபனானிலுள்ள புலம்பெயர் வீட்டுப் பணியாளர்களுக்கான தேசிய பாதுகாப்பு பற்றி, பெய்ரூட்டிலுள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்தில் நடந்த 'பல்வேறுபட்ட பாத்தியதையுடையோருக்கான மாநாட்டில் தூதரகம் பங்குபற்றியது.
- 16.01.2018 அன்று, லெபனான் குடியரசின் ஜனாதிபதியிலான் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட நிகழ்வையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பில், இலங்கையைப் பிரதிநிதுத்துவப்படுத்தி, தூதரகம் கலந்துகொண்டது.
- 09.02.2018 அன்று, குடியரசின் ஜனாதிபதி கலந்துகொண்ட சென்ற் மாரொன் சமய விழா விருந்தில் மாண்புமிகு கர்தினால் மா பெச்சாரா பௌட்ரஸ் எல் ராஹியால் நடத்தப்பட்ட இறைவழிபாட்டில் தூதரகம் கலந்துகொண்டது.
- 14.02.2018 அன்று புனித உயிர்த்துறப்பின் 13 ஆவது ஆண்டு நிறைவில் தூதரகம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.
- 17.04.2018 அன்று, "மிக அண்மைக்காலத்து வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட்ட, லெபனானுக்கான சிறப்பு நியாயசபையின் செயற்பாட்டில் தற்போதைய நிலை' என்ற தலைப்பில் சிறப்பு நியாயசபையின் தலைவரால் நடத்தப்பட்ட முன்வைப்பில் தூதரகம் கலந்துகொண்டது.
- 01.03.2018 அன்று, மே சிடியக் அறக்கட்டளை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் தூதரகம் கலந்துகொண்டது.
- 13.03.2018 அன்று 2020 இலிருந்து 2013 இற்குள் லெபனானின் நிலைத்து நிற்கும் சக்தியின் திண்மையான இலக்கினைப் பேணுவது பற்றிய மாநாட்டில் தூதரகம் பங்குபற்றியது.

- 16.04.2018 அன்று, சுகாதார அமைச்சு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் பெய்ரூட் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம் போன்றவற்றால் ஒழுங்குசெய்யப்பட்ட மாநாட்டில் தூதரகம் கலந்துகொண்டது.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- 05.03.2018 இல் லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகள் இடைக்காலப் படை (UNIFIL) இனால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் தூதரகம் கலந்துகொண்டது.

- 19.03.2018 அன்று, லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகள் இடைக்காலப் படை (UNIFIL) நிறுவப்பட்ட 40 ஆவது ஆண்டு நிறைவில் தூதரகம் கலந்துகொண்டு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

- 22.03.2018 அன்று 'மை ஃபெயர் ஹோம்' என்ற பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது.

- இலங்கைப் படை பாதுகாப்பு அலகுக்கான வருடாந்த பதக்க அணிவகுப்பில் தூதரகம் கலந்துகொண்டது.

- 23.03.2018 அன்று, உலக காசநோய் தின நிகழ்வில் நடைபெற்ற மாநாட்டில் தூதரகம் கலந்துகொண்டது.

- 03.04.2018 அன்று, பெண்கள் மற்றும் மனித உரிமைகள் பற்றியதிலான 'இன்சான்' கூட்டுறவினால் ஒழுங்குசெய்யப்பட்ட மாநாட்டில் தூதரகம் பங்குபற்றியது.

- 27.06.2018 அன்று, மேற்காசியாவுக்கான ஐக்கிய நாஉட்களின் பொருளாதார, சமூக ஆணைக்குழுவினால் (ESCWA) ஏற்பாடு செய்யப்பட்ட 30 ஆவது அமைச்சு ரீதியிலான அமர்வில், தூதர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- 24.02.2018 அன்று திரிபோலியிலுள்ள வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு தௌஃபிக் தபௌஸியை தூதர் சந்தித்துப்பேசினார்.

- லெபனானிலுள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் சுற்றுலாத்துறை மற்றும் விஞ்ஞான பீடத்தின் ஒத்துழைப்புடன், 13.03.2018 அன்று 'இலங்கை தினம்' ஏற்பாடு செய்யப்பட்டது.

- 2018 ஜூன் 19,20,21 ஆகிய தினங்களில், கொழும்பில் நடைபெற்ற, 'இலங்கை முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்ட'த்தில் சிரியாவுக்கான இலங்கையின் உதவித்தூதுவர், மாண்புமிகு. டாக்டர் மொஹமட் மௌசல்லாம் அல் ட்ரௌபி கலந்துகொண்டார்.

- 'ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்' இன் லெபனானுக்கான பொது விற்பனை முகவராக திரு ஜமீல் பெய்ராமின் நியமனம் மற்றும் அவர் பெய்ரூட்டின் மத்திய கிழக்கு விமான

சேவைகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான அனுசரணைகளை தூதரகம் மேற்கொண்டது.

- 30,000 பிரதிகள் விற்பனையாகும் 'பிரிஸ்டீஜ்' சஞ்சிகையின் ஃபெப்ரவரி 2018 பதிப்பில், தூதரகத்தினால் 'இலங்கை – இந்துசமுத்திரத்தின் பிரகாசமான தீவு' எனும் தலைப்பில் கட்டுரை வெளியிடப்பட்டது.

- 2 ஃபெப்ரவரி 2018 அன்று தூதரக உத்தியோகபூர்வ வதிவிடத்தில், அதிமுக்கிய நபர்கள், மிக முக்கிய நபர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய இராஜதந்திர வரவேற்பின்போது, 20 நிமிட முன்வைப்பு மேற்கொள்ளப்பட்டது.

- 70 ஆவது தேசிய தின கொண்டாட்டங்கலுக்காக சிறப்பு இணைப்பு வெளியிடப்பட்டது.

- 19.02.2018 அன்று, வணிக சூழலை மேம்படுத்தலுக்கானதும் லெபனான் புதுமை உருவாக்கங்களை ஊக்குவிப்பஹ்டுமான 'எம்.ஐ.சி முயற்சிகள் அறிமுகத்தின்போது தூதரகம் பங்குபற்றியது.

- 14.02.2018 அன்று, சாஹல் வர்த்தக சம்மேளனத்துடன் ஒரு தொழில் வளர்ச்சி ஊக்கப்படுத்தல் கூட்டத்தை தூதரகம் ஒழுங்குசெய்தது.

- 14.02.2018 அன்று, அலே நகரசபையில் தொழில் வளர்ச்சி ஊக்கப்படுத்தல் கூட்டம் நடைபெற்றது.

ஈ) கலாச்சார உறவுகள்

- 25.01.2018 அன்று, கல்வியமைச்சுடனும், அலே நகரசபையுடனும் இணைந்து, 'இலங்கையின் காட்சிகள்' என்ற தலைப்பின் ஒரு சித்திரப்போட்டியை தூதரகம் ஒழுங்குசெய்தது.

- 05.02.2018 அன்று, ஹஸ்மியே நகரசபை மண்டபத்தில், பேராசிரியர் நாஜ்ஜி எல் ஜால் அவர்களால், வழங்கப்பட்ட, 'Enter fiel et ciel' என்ற இலங்கை புகைப்பட கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

- 17.02.2018 அன்று, பெய்ரூட் நூதனசாலையின் இயக்குனரைச் சந்தித்த இலங்கைத் தூதுவர், கலாச்சார பரிமாற்றங்களுக்கான கூட்டுறவை ஏற்படுத்தி, கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி கலந்துரையாடினார்.

- 2018, 28 மார்ச் இலிருந்து 1 ஏப்ரல் வரையில் நிக்கவரெட்டியாவில் சர்வதேச இளைஞர் பாசறை நடத்தப்பட்டது.

- லெபனான் அமெரிக்க பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட, முன்னணி பலே நடனக்கலைஞரை மரியாதை செய்விக்கும் நிகழ்வொன்று 08.05.2018 அன்று

நடந்தபோது, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் தூதுவர் அதில் கலந்துகொண்டார்.

- வில்மா இசைப் பாடசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட அம்சித் கலாச்சார விழாவானது, 30.06.2018 அன்று அம்சித் அல் செய்டெ தேவாலக சதுக்கத்தில் இடம்பெற்றது.

உ) தொழிலாளர் நலன்

- 14.02.2018 அன்று, இலங்கை வேலை வாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர் செல்வி சேகா பிரேமசிறி மற்றும் இன்னும் இருவர் கலந்துகொண்ட, தொழில் வாய்ப்பு மற்றும் மனித கடத்தல் வியாபாரம் சம்பந்தமான ஆலோசனைக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

- 04.02.2018 அன்று, இலங்கையின் 70 ஆவது தேசிய தினம் கொண்டாடப்பட்டது.

- 04.02.2018 அன்று, இலங்கைத் தூதரகம் மற்றும் லெபனானிலுள்ள இலங்கை சமூகத்தினரால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட 'ரங்க சார' கலாச்சார நிகழ்வு இடம்பெற்றது.

- 25.03.2018 அன்று, 'சல்லொமெ' யிலுள்ள '்ப்ரெரெஸ் யுனிஸ்' பாடசாலை மைதானத்தில் 'சர்வதேச பெண்கள் தினம்' கொண்டாடப்பட்டது.

- 15.04.2018 அன்று தமிழ், சிங்கள புதுவருடம் கொண்டாடப்பட்டது.

- 2018 ஜூன் 23 மறும் 24 ஆம் திகதிகளில், மீரா நலன்புரிச்சங்கத்தினால் நடத்தப்பட்ட தூதரக வளவில் பொஸொன் சமய நிகழ்வில் 12,000 அமெரிக்க டொலர்கள் சேகரிக்கப்பட்டு, ஹொரனவிலுள்ள பிக்கு வைத்தியசாலையான 'பக்குல மஹாசெய' வுக்கு வழங்கப்பட்டது.

- 2018 ஜூல் 28, 29 ஆம் திகதிகளில், இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுச்சேவை கொள்கைக்கிணங்க, லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் வெசாக் தினம் கொண்டாடப்பட்டது.

- உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களற்ற 100 தொழிலாளர்களை தாயகத்திற்கு அனுப்புதல் தொடர்பாக, 'பாப்டா' நகர வழக்குரைஞருடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது.

- திருபொலி சிறையிலுள்ள லில்லி நோனா மற்றும் வேர்டுன் சிறையிலுள்ள புத்திகா ஜயரத்ன ஆகிய, நீண்டகால சிறைக்கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டன.

- பாதுகாப்பு இல்லத்தில் தங்கியுள்ள செல்வி பஞ்சவர்ணம் என்பவருக்கு 15 வருடங்களாக சம்பளம் வழங்காதது பற்றி, நீதியமைச்சுடன் இணக்கப்பாட்டுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.

- இலங்கை சமூகத்தினரதும் நலன் விரும்பிகளதும் உதவியுடன், மகரகம அபேக்ஷா மருத்துவமனைக்கு, ரூ.306,150.00 பெறுமதியான, குரல்வளைக்குள் கூர்ந்து நோக்குவதற்கான கருவி – 'video Laryngoscope' – ஒன்றை தூதரகம் நன்கொடையாக வழங்கியது.

- இலங்கை புலம்பெயர் தொழிளாளரான திருமதி பி.ஜே முனசிங்க மற்றும் லெபனான் பிரஜையான திரு நடீம் மௌஜாப்டரின் உதவியுடன், 23.07.2018 அன்று, டெஹிவல அத்திதியவிலுள்ள சார்ஜன்ட் ரணசிங்க என்பவருக்கு மின்சார சர்க்கர நாற்காலி ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டது.

- 2018 ஜனவரியிலிருந்து செப்டெம்பர் வரையான காலகட்டத்தில், 131 சட்டவிரோத இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் தாயகத்திற்கு அனுப்பப்பட்டனர்.

- மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இழப்பீடாக 62,892.93 அமெரிக்க டொலர்கள் சேகரிக்கப்பட்டது.

8. ஓமான்

அ) இருதரப்பு உறவுகள்

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வண்ணம், 6 ஃபெப்ரவரி 2018 அன்று, தூதரகத்தினால் ஒரு இராஜதந்திர வரவேற்பு நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது. அந்த நிகழ்வு பற்றி 'டைம்ஸ் ஒஃப் ஓமான்' பத்திரிகையில் கூடுதல் இணைப்பு ஒன்றும் பிரசுரிக்கப்பட்டது.

- 1981 இல் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து முதன் முறையாக, 2018 மார் 11 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை பாராளுமன்ற சபாநாயகரின் தலைமையில் ஒரு பாராளுமன்ற குழுவினரின் ஓமானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

- ஓமான் மற்றும் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கிடையிலான 2 ஆவது அரசியல் ஆலோசனைகள், 15 ஆகஸ்ட் 2018 அன்று கொழும்பில் இடம்பெற்றன. இலங்கை பிரதிநிதிகள் குழுவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு பிரசாத் காரியவசம் தலைமை தாங்கினார். ஓமான் பிரதிநிதிகள் குழுவுக்கு, அந்நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இராஜதந்திர மற்றும் பிரதான

தலைவர் திணைக்களத்தின் துணை நிலைச் செயலாளர், திரு மஹ்மூத் அவாட் அல் ஹசன் தலைமை வகித்தார்.

- வர்த்தகம், சுற்றுலாத்துறை, குடிவரவு, குடியகல்வு, தொழில், மனிதவலு பயிற்சி, பாதுகாப்பு, விவசாயம், உயர் கல்வி மற்றும் கலாச்சாரம் போன்ற துறைகளில் பரஸ்பரம் இணைந்த தொழிற்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி மீளாய்வும் கலந்தாலோசனையும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் பரஸ்பரம் இணைந்த தொழிற்பாட்டுக்கான விடயங்களாக மீன்பிடித்துறை, விளையாட்டு, எண்ணெய் மற்றும் எரிவாயு போன்றவையும் இனங்காணப்பட்டன. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் ஓமான் வர்த்தக மற்றும் தொழிற்றுறை சம்மேளனத்திற்கிடையே, இலங்கை-ஓமான் வணிக குழுவை நிறுவுவதற்கு உதவுவது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- முதலீடுகளை ஊக்கப்படுத்தல் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு பற்றியதில் விரைவில் ஒரு உடன்படிக்கைக்கு வருவது பற்றியும், இலங்கையிலிருந்து ஓமானுக்கு செல்லும் திறன் தொழிலாளர்களின் தொழில் தகுதிகளை பரஸ்பரம் இனங்காணல் மற்றும் திறன் அபிவிருத்தி பற்றியதில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வது பற்றி கருத்தில் கொள்வதையும் இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர். இரட்டை வரி விதிப்பைத் தவிர்த்தல், வருமானத்தின் மீதான வரி இறை ஏய்ப்பைத் தடுத்தல் பற்றியதில் இரு நாடுகளுக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

- தொலைத்தொடர்பாடல், டிஜிட்டல் உட்கட்டுமானம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மாண்புமிகு ஹரின் ஃபெர்னாண்டோ, 2018 ஆகஸ்ட் 15, 16 ஆம் திகதிகளில் ஓமானுக்கு விஜயம் செய்து, திறமையுள்ள இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதை ஊக்குவித்தல் பற்றிக் கலந்துரையாடினார். இவர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவரையும் இலங்கைச் சமூகத்தினரையும் சந்தித்தார்.

- 2018 ஜூலை 3 ஆம் 4 ஆம் திகதிகளில் தொழில் மற்றும் பயிற்சி பற்றியதில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் 3 ஆவது இணைந்த கூட்டம் இலங்கையில் நடைபெற்றது. வேலை வாய்ப்பு முகவர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத ஆட்சேர்ப்பு முறைகளைத் தடுக்கும் நோக்குடன், ஓமானுக்கு வேலைக்காக அனுப்பப்படும் இலங்கை பெண் தொழிலாளர்களுக்கான ஆட்சேர்ப்பு முறைகளைச் சீராக்குவதற்கென ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

- மே, 2018 இல் மனிதவலு அமைச்சிலிருந்து ஒரு பிரதிநிதிகள் குழு அபுதாபி பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கு தூதரகம் ஏற்பாடு செய்தது.

- தூதரகத்தின் வேண்டுகோளின்பேரில், ஓமான் அரசாங்க புலமைப்பரிசில் செயற்றிட்டத்தின் கீழ், ஒரு இலங்கை மாணவருக்கு ஓமான் அரசாங்கத்தினால்

புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. சுல்தான் கபூஸ் பல்கலைக்கழகத்திலிருந்து மூன்று ஓமான் மாணவர்களை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் உள்ளக பயிற்சிக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை தூதரகம் மேற்கொண்டது.

- இலங்கைத் தூதரகம், 2018 மார்ச் 28 இலிருந்து ஏப்ரல் 2 வரை நடைபெற்ற, யொவுன் புர இளைஞர் விழாவில் இரண்டு ஓமான் மாணவர்கள் பங்குபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்தது.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- யுனெஸ்கோவின் புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பது பற்றியதில் அரசாங்கங்களுக்கு இடையேயான குழுவைத் தெரிவு செய்வதற்கான, 2018 – 2022 தவணைக்கான இலங்கையின் அபேட்சகத்திற்கு ஓமான் அரசாங்கம் ஆதரவு தெரிவித்தது.

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தைக் குறிக்கும் வண்ணம், தூதரகமானது, லூலூ சிறப்பங்காடியின் கூட்டுப்பங்குடமையுடன், 2018 ஃபெப்ரவரி 5 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரையில் மஸ்கட்டில் இலங்கை உற்பத்திப் பொருட்கள் வாரம் ஒன்றை ஒழுங்குசெய்திருந்தது. 4 ஃபெப்ரவரி 2018 இல் வெளியிடப்பட்ட 'டைம்ஸ் ஒஃப் ஓமான்' பத்திரிகையில், இலங்கை சுற்றுலாத்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு, இலங்கைத் தேயிலை, மாணிக்கக்கல் மற்றும் நகைகள் பற்றிய கட்டுரைகள் அடங்கிய இணைப்பு பிரசுரிக்கப்பட்டது.

- தூதரகத்தின் ஏற்பாட்டின்படி; ஓமான் வங்கித்துறை இலங்கையின் நிதிச் சந்தைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாதகங்களை ஆராய்வதற்காக, மத்திய வங்கி ஆளுனரின் தலைமையில், வங்கித்துறை பிரதிநிதிகள் குழு ஒன்று 8-11 செப்டெம்பர் 2018 காலப்பகுதியில் ஓமானுக்கு விஜயம் செய்தது. அரச பொது சேமவைப்பு நிதியத்திடமிருந்து முதலீடுகளைப் பெறுதல் மற்றும் பல்வேறு விடயங்கள் பற்றியதில் அந்த நிதியத்தின் நிறைவேற்று தலைவருடனான சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இலங்கையின் விருந்தோம்பல் துறையில் முதலீடு செய்வதற்கான அரச பொது சேமவைப்பு நிதியத்தினது வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

- லலான் குழுமத்தின் கீழுள்ள லலான் ரப்பர் பிரைவேட் லிமிட்டெட் உட்பட, பல கம்பனிகளுக்கும் ஓமான் கொள்வனவாளர்களுக்கும் இடையேயான வணிக கூட்டங்களை ஒழுங்குசெய்வதற்கு தூதரகம் உதவியது. 19-21 ஜூன் 2018 காலப்பகுதியில் நடைபெற்ற, இலங்கை முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்டத்தில் 'சன்செட் பிறைட்னெஸ் எல்.எல்.சியிலிருந்து இரு பிரதிநிதிகள் பங்கெடுப்பதற்கான ஏற்பாடுகளை தூதரகம் செய்துகொடுத்தது. ஓமானிலுள்ள இலங்கையர் ஒருவரின் கம்பனியான '88 டிவலொப்பேர்ஸ்' ஐ, பொரளையிலுள்ள ஒரு அலுவலக

கட்டிடத்திற்கான ஆதன விற்பனை (ரியல் எஸ்டேட்) செயற்றிட்டமாக முதலீட்டு வங்கியில் பதிவு செய்வதற்குத் தூதரகம் ஏற்பாடு செய்தது.

- அம்பாந்தோட்டை சிறப்பு பொருளாதார வலயத்தில் எண்ணைச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்காக, ஓமான் எண்ணெய் கம்பனிக்கும் சில்வர் பார்க் இண்டர்நாஷனலுக்கும் இடையே ஒரு கூட்டுப்பங்குடைமையை ஏற்படுத்துவதற்கான ஆதரவைப் பெறும் நோக்குடன், தூதரகமானது, ஓமான் எண்ணெய்த்துறை அமைச்சுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டது.

ஈ) கலாச்சார உறவுகள்

- இலங்கைத்தூதரகமானது, இலங்கைச் சமுதாய சமூக மன்றம் மற்றும் அதனுடன் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து, 9 ஃபெப்ரவரி 2018 அன்று 'தைப்பொங்கல்', 2 மற்றும் 3 ஃபெப்ரவரி 2018 அன்று 'பிரதீப பிரபா' ஆற்றல் நிகழ்ச்சி, 13 ஏப்ரல் 2018 அன்று தமிழ் சிங்கள் புதுவருஷ விழா, 27 ஏப்ரலிலிருந்து 5 மே வரையில் தூதரக வளவிலுள்ள ஸ்ரீ சம்புதத்வ ஜயந்தி விஹாரையில் நடைபெற்ற வெசாக் விழா, 1 ஜூன் 2018 இல் ரம்ழானின் 'இஃப்தார்' நிகழ்வு, 14 செப்டெம்பர் 2018 இல் ஈத் மற்றும் முதலாவது முஹரம் போன்ற விழாக்களை ஒழுங்குசெய்தது. அத்துடன், 10 மார்ச் 2018 அன்று ஓமான் சமூக அபிவிருத்தி அமைச்சில் முறையாக பதிவுசெய்யப்பட்ட 'டார் அல் அட்டா' கொடை நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட உணவு விழாவிலும் தூதரகம் கலந்துகொண்டது.

- ஓமானிலுள்ள, ஜேர்மன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் சர்வதேச மாணவர் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட, 'இண்டர்நாஷனல் நைட்' நிகழ்ச்சியில், மஸ்கட்டிலுள்ள இலங்கை பாரம்பரிய நடனக்குழுவினர் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டை தூதரகம் செய்தது.

உ) தொழிலாளர் நலன்

- இலங்கை தூதரகத்திற்கு, பிரதானமாக பணிப்பெண்களிடமிருந்து கிடைத்த 275 முறைப்பாடுகளில், 216 தீர்க்கப்பட்டன. ஆதரவின்றித் தவிக்கும் பெண் தொழிலாளர்களுக்குத் தூதரகம் தொடர்ந்தும் புகலிடம் வழங்கி வருவதுடன், சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள்/அனுசரணையாளர்/முகவர்கள் மூலமாக அப்பெண்களின் பிரச்சனைகளை தீர்த்துவைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்தது. 270 பெண் தொழிலார்களும் 23 ஆண் புலம்பெயர் தொழிலாளர்களும் பாதுகாப்பு/புகலிடம் கோரினர். தூதரகமானது, பிரச்சனைகளை தீர்த்துவைப்பது தொடர்பாக பொலிஸ், மனிதவலு அமைச்சு, மருத்துவ மனைகள், குடிவரவு போன்றவற்றுடன் 354 சந்திப்புக்களை மேற்கொண்டு, பிரச்சனைகள் தீர்க்கப்பட்ட புகலிடத்தில் வசித்த 121 நபர்களை தாயகம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் செய்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாத வீட்டுப் பணிப்பெண்கள்

தொடர்பாக கொன்சுலர் பிரிவினால் தூதரகத்திற்கு 54 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

- தூதரகத்தின் தொழிலாளர் பிரிவிலுள்ள அலுவலர்களுக்கு, மனிதக்கடத்தல் வியாபாரத்தை தடுத்தல் தொடர்பான பயிற்சியை வழங்குவதற்காக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்திலுள்ள நிபுணர் குழுவொன்று 15-19 ஃபெப்ரவரி 2018 இல் ஓமானுக்கு வருவதற்கான ஒழுங்குகளைத் தூதரகம் ஏற்பாடு செய்தது. இந்தக் குழு ஓமான் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து, மனிதக்கடத்தல் வியாபாரத்தை தடுப்பதில் ஒத்துழைப்பு வழங்குவது பற்றிக் கலந்துரையாடியது.

- இலங்கைத் தூதரகத்தின் ஏற்பாட்டின் பேரில், தூதரகத்தின் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்ட மனிதக்கடத்தல் வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறுவதற்காக, நான்கு சி.ஐ.டி அதிகாரிகளை உள்ளடக்கிய நிபுணர் குழுவொன்று 10 மார்ச் 2018 அன்று, வருகை தந்தது.

- தூதரகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர்களுக்கான வேலை ஊக்குவிப்பு நிகழ்வு மற்றும் விழிப்புணர்வு அமர்வு ஒன்றை, 1 ஜூலை 2018 அன்று, தூதரகம் ஒழுங்குசெய்தது.

9. பாலஸ்தீனம்

அ) இருதரப்பு உறவுகள்

- பாலஸ்தீன – இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைவர் நாஸர் யகின் மற்றும் உறுப்பினர்களைச் சந்தித்த இலங்கைப் பிரதிநிதி, அச்சங்கத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவது பற்றிக் கலந்துரையாடினார்.

- கிரான்ட் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற 70 ஆவது இலங்கை தேசிய தினக் கொண்டாட்டத்தில், பாலஸ்தீன அரசாங்கத்தின் நீதியமைச்சர், மாண்புமிகு அலி அபு தியக் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். 'இலங்கைக்கு வணக்கம்' விருதுகள் பின்வரும் மூன்று பாலஸ்தீனியர்களுக்கு வழங்கப்பட்டது:-

  - திரு சலே ஜாபர் இஹ்றமெய்ட், தலைவர், 'யூனிவேர்ல்ட் டீ' கம்பனி, இலங்கை

  - திரு ஷதாத், ஜெனின் இலிலுள்ள முன்னணி தேயிலை வியாபாரிகளில் ஒருவரும், 'சைலத் அல்டஹார் ட்ரேடிங் கம்பனி' யின் உரிமையாளருமாவார்.

  - திரு தர்காம் அல்னபாலி, தலைவர், 'அல் – நபாலி அன்ட் அல்- ஃபாரிஸ் இன்வெஸ்ட்மென்ட் குரூப்' .

- இலங்கைப் பிரதிநிதி இஃப்தாரை ஏற்பாடு செய்தார். ஷேக் ரஃபாத்தினால் நடத்தப்பட்ட சிறப்பு ரமழான், உத்தியோகபூர்வ வதிவிடத்தில் நடந்தது. இலங்கையையும் அதன் மக்களையும் இயற்கைப் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றுவதற்கான தொழுகைகள் இடம்பெற்றன.

- மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நலனுக்காகவும் இலங்கை மற்றும் பாலத்தீனத்திலுள்ல சகல சமூகங்களையும் சார்ந்த மக்களின் சமாதானம் மற்றும் வளமான வாழ்வுக்காகவும் தொழுகை நடத்தப்பட்டது.

- ரம்ழான் மாத நோன்பு காலத்தில், இலங்கை, பாலஸ்தீனம் மற்றும் பிற நாடுகளில் வசிக்கும் அனைத்து சமுதாயத்தினரையும் ஆசிர்வசிப்பதற்காக, சைஃபுல்லா பள்ளிவாசலின் இமாம் ஷேக் அஹ்மட் சுகி, குர்ஆன் மற்றும் பத்ர் மௌலூத் வாசிப்பவர், தொழுகையையும் டுவாவையும் நடத்தினர்.

- இலங்கையின் பிரதிநிதி, வாக்ஃப் மற்றும் சமய விவகார அமைச்சர் ஷேக் யூசஃப் எடைஸைச் சந்தித்துப் பேசினார்.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- இந்தியா, அயர்லாந்து, மொறொக்கோ, அவுஸ்திரேலியா, போலந்து போன்ற பாலஸ்தீனத்திலுள்ள உதவித் தூதரகங்கள் மற்றும் பிரதிநிதித்துவ அலுவலகங்களின் தேசிய தின கொண்டாட்ட நிகழ்வுகளில் இலங்கைப் பிரதிநிதி கலந்துகொண்டார்.

- பாலஸ்தீனத்திலுள்ள சில பிரதிநிதிகளை மரியாதை நிமித்தம் சந்தித்த இலங்கைப் பிரதிநிதி, இலங்கையின் தற்போதைய சூழ்நிலை பற்றி விளக்கினார்.

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடு

- பொது விவகார அமைச்சர், மாண்புமிகு ஹுசைன் அல் ஷேக்கைச் சந்தித்த இலங்கைப் பிரதிநிதி; கடந்துசெல்லும் இடைவழி (ட்ரான்சிட்) மூலமாகவோ அல்லது அலென்பி பாலத்தைக் கடந்து ஜோர்டான் மூலமாகவோ பாலஸ்தீனம்/ பாலஸ்தீன மேற்கு கரைப்பகுதிக்கு வரும் இலங்கைப் பணிப்பெண்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். (ஜோடான் மூலமாகச் செல்லமுடியும் ஆனால் அங்கு தங்க முடியாது. அதற்குச் சிறப்பு அனுமதி தேவை). அமைச்சரும், தான் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, இலங்கைப் பணிப்பெண்களுக்கு பாலஸ்தீனத்தில் வேலைசெய்வதற்கான சிறப்புத் தொழில் அனுமதி பெற்றுத்தருவதாகவும் அவர்களுக்கு அதிக சம்பளத்தைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

- பாலஸ்தீனத்திலுள்ள முதலீடு மற்றும் அபிவிருத்திக்கான 'அனாப்டாவி குழும'த்தின் சமூக மற்றும் நன்னெறிக்கான முதலீடு எனக் கருதப்படும் 'அல் ஆர்ட் பாலஸ்தீனியன் அக்ரி-ப்ரொடக்ஸ் லிமிட்டெட்' டின் தலைவர் திரு சையட் அனாப்டாவியை

இலங்கைப் பிரதிநிதி சந்தித்தார். திரு அனாப்டாவி, 1950 இல் பாலஸ்தீனத்திலுள்ள நாபுலஸில் திறக்கப்பட்ட 'அல் ஆர்ஸ்' என்ற பாரிய ஐஸ்கிரீம் தொழிற்சாலையின் தலைவராவார். இது பாலஸ்தீன பங்குச்சந்தையில் மிகப்பெரிய பங்கை வைத்துள்ளதுடன், கடந்த பத்து வருடங்களில் அரபுலக நாடுகளில் பல வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதியும் செய்துவருகிறது. 2017 இல் திரு அனாப்டாவி, இலங்கையில் கூட்டுப்பங்காளரை தேடி ஒரு இணைந்த வர்த்தக முயற்சியை ஆரம்பிப்பதற்கான அல்லது ஏற்றுமதி செய்வதற்கான அல்லது அந்த தொழிற்சாலைக்கான மூலப்பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்புகள் பற்றி இலங்கைப் பிரதிநிதியுடன் கலந்துரையாடினார். 2018 இல் திரு அனாப்டாவி, இலங்கை கம்பனியுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு, கொழும்பிலுள்ள 'மாக்சன்ஸ் ஹோல்டிங்க்ஸ்' மூலமாக இலங்கைக்கு ஐஸ்கிரீம் ஏற்றுமதியை ஆரம்பிக்கவுள்ளார்.

- பாலஸ்தீன வர்த்தக சம்மேளனத்துடன் சந்திப்பு.

- 2018 இல், பாலஸ்தீன வணிகர் ஒருவர் கொழும்பு 'மரைன் ட்ரைவ்' இல் ஒரு உணவகத்தை திறப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

- 'நேஷன்ஸ் டுவர்ஸ் அண்ட் ட்ரவல்ஸ்' இன் முகாமையாளர், திரு வஜ்டி நம்மாரி மற்றும் 'ஹோலி ஜெருசலேம் டுவர்ஸ் அண்ட் ட்ரவல்ஸ்' முகாமையாளர் திருமதி டூனியா கடோமி ஆகிய ஜெருசலேமைச் சேர்ந்த பயண முகவர்களுடனான சந்திப்பில், இலங்கை மற்றும் சிங்கப்பூரிலிருந்து புனித தலமான ஜெருசலேமுக்கான யாத்திரையை ஊக்கப்படுத்துவதில் இரு நாடுகளுக்குமிடையே பல்வேறு வழிகளிலான ஒத்துழைப்பு பற்றி கலந்துரையாடப்பட்டது.

ஈ) தொழிலாளர் நலன்

- இலங்கை பிரதிநிதி, பாலஸ்தீனிய தொழில் அமைச்சர், மாண்புமிகு மஹ்மௌன் அபு ஷாலாவைச் சந்தித்து, இலங்கைப் பணிப்பெண்களுக்கு பாலஸ்தீன/ மேற்கு கரையோரத்தில் இருக்கும் தேவை பற்றிக் கலந்துரையாடினார்.

- பாலஸ்தீனத்தில் வேலை பார்க்கும் சில இலங்கையர்களைச் சந்தித்த பிரதிநிதி, அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் பற்றி அறிந்து, பின்னர் அது சம்பந்தமாக உரிய பாலஸ்தீன அதிகாரிகளுடன் பேசினார்.

10. கட்டார்

அ) இருதரப்பு உறவுகள்

- இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு திலக் மாரப்பன, 15 ஏப்ரல் 2018 இல் கட்டாருக்கு விஜயம் செய்தார். அங்குள்ள தூதுவருடன் அரசியல்,

பொருளாதார சூழல், புலம்பெயர் இலங்கையர்களின் நலன் மற்றும் கட்டாரிலுள்ள வேலை வாய்ப்புக்கள் பற்றி அமைச்சர் கலந்துரையாடினார்.

- டோஹாவிலுள்ள 'ஸ்டாஃபோர்ட்' இலங்கைப் பாடசாலை சம்பந்தமான பிரச்சனைகளை தீர்க்கும் நோக்கில், வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு வசந்த சேனநாயக்க, 11-13 மே 2018 காலப்பகுதியில் கட்டாருக்கு விஜயம் செய்தார்.

- விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் கண்டி பாரம்பரியத்துக்கான பிரதியமைச்சர், மாண்புமிகு கருணாரத்ன பரணவிதாரண, 20-21 ஆகஸ்ட் 2018 இல் கட்டாருக்கு விஜயம் செய்தார். அமைச்சர், 'ஸ்டாஃபோர்ட்' இலங்கைப் பாடசாலைக்கு விஜயம் செய்தபோது, அந்த பாடசாலையின் புதிய நிர்வாகம் பற்றி தொதுத்துரைக்கப்பட்டது. அது பற்றியதில் தூதுவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பிரதியமைச்சர் பாராட்டினார்.

- தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகளுக்கான அமைச்சர், மாண்புமிகு ரவீந்திர சமரவீர, 27 ஆகஸ்ட் 2018 இல் கட்டாருக்கு விஜயம் செய்தார். அமைச்சர், 'ஸ்டாஃபோர்ட்' இலங்கைப் பாடசாலைக்கு விஜயம் செய்தபோது, அந்த பாடசாலையின் புதிய நிர்வாகம் பற்றி தொதுத்துரைக்கப்பட்டது. அப்பாடசாலையின் சீரமைப்பு பற்றியதில் தூதுவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பிரதியமைச்சர் பாராட்டினார்.

- இலங்கைக்கும் கட்டாருக்கும் இடையிலான இராஜதந்திர, சிறப்பு மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போருக்கான வீசா விலக்கு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றியதில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, 22 ஆகஸ்ட் 2018 முதல் அந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வருகின்றது.

- 2017 அக்டோபர் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்டாருக்கான இராஜாங்க விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றியதில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- 'புலப்படா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அரசாங்கங்களுக்கு இடையேயான குழு' வின் 2018 – 2022 தவணைக்கான தேர்தலில் இலங்கை வேட்பாளர்களை கட்டார் அரசாங்கம் ஆதரித்தது.

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இலங்கையர்களுக்கு கட்டாரில் மேலும் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், 25 ஜனவரி 2018 அன்று, டோஹாவிலுள்ள ஷெரட்டன் கிராண்ட்

ஹோட்டலில், ஒரு வேலைவாய்ப்பு ஊக்குவிப்புச் செயற்றிட்டத்தை, தூதரகமானது கட்டாரின் வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து ஒழுங்குசெய்திருந்தது.

- இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர், மாண்புமிகு முனைவர் இந்திரஜித் குமாரஸ்வாமி மற்றும் பிரதிநிதிகள் குழு 13 செப்டெம்பர் 2018 அன்று கட்டாருக்கு விஜயம் செய்தனர். ஆளுனர், டோஹாவிலுள்ள ஸ்டாபோர்ட் இலங்கைப் பாடசாலைக்கு விஜயம் செய்தார்.

- மாண்புமிகு ஆளுனர் மற்றும் குழுவினர் பின்வருவோரை சந்தித்து பேச்சுவார்த்த நடத்தினர்:

  - கட்டார் மத்திய வங்கியின் ஆளுனர் மேன்மை தங்கிய ஷேக் அப்துல்லா பின் சௌட் பின் அப்து அசிஸ் அல் தானி மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினர்.

  - கட்டார் தேசிய வங்கியின் குழும பிரதான நிறைவேற்றதிகாரி திரு அலி அஹ்மட் அல் குவாரி மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினர்

  - சர்வதேச வங்கியியல் நிறைவேற்று பொது முகாமையாளர் திரு பஹாட் படார், முதலீடுகள் மற்றும் உத்தியின் நிறைவேற்று பொது முகாமையாளர் திரு பார்வெஸ் கான், கட்டார் வர்த்தக வங்கியின் நிதியியல் நிறுவனங்களுக்கான மாற்றாள் தலைவர் திரு மன்சூர் சலீம்.

  - கட்டார் வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர், மேன்மை தங்கிய மொஹமட் பின் அஹ்மட் பின் தவார் அல் குவாரி.

- இலங்கையின் வங்கித்துறை, நிதித்துறை மற்றும் பிற பொருளாதார துறைகளில் கிடைக்கக்கூடிய புதிய முதலீடுகள் பற்றி அந்த குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டதுடன் இலங்கையின் உள்நாட்டு வங்கியியல் முறைமையினால் கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கான புதிய வழிமுறைகள் மற்றும் சந்தைகள் பற்றியும் அக்குழு ஆராய்ந்தது.

- ஆளுனரும் குழுவினரும் டோஹா வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்ட தொடர் நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டனர்.

- தூதுவரின் முயற்சியினால், இலங்கை – கட்டார் வணிக மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டு, 13 செப்டெம்பர் 2018 அன்று, தூதுவராலும் டோஹா வங்கியின் பிரதான நிறைவேற்றதிகாரியாலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

- தூதுவரின் முயற்சியால், டோஹாவின் பிரதி நிதித்துவ அலுவலகம் ஒன்று இலங்கையில் 7 ஜூன் 2018 அன்று நிறுவப்பட்டது. இது புலம்பெயர் இலங்கையர்கள் பணம் மற்றும் கடன் வசதிகளுக்கான கொடுக்கல் வாங்கல்களைச் சுலபமாக மேற்கொள்வதற்கு உதவும்.

- 4 ஜூலை 2018 அன்று, தூதரகம், ஸ்ர:ிபோர்ட் இலங்கைப் பாடசாலைக்கு புதிய தலைவர் மற்றும் முகாமைத்துவத்தை நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுத்தது. தூதரகத்தின் மேற்பார்வையில் இந்தப் பாடசாலை சீராக இயங்குகின்றது.

- தூதுவரின் முயற்சியினால், மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்கு அனுப்பப்படும் பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சேகரிப்பதற்காக லூலூ குழுமம் கட்டுநாயக்கவில் ஒரு சேகரிப்பு நிலையத்தை திறந்துள்ளது.

- கட்டார் சம்மேளனம், கொழும்பில் 'கட்டார் சிட்டி;' என்ற பெயரில் ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்மொழிந்துள்ளது.

- 3 ஆகஸ்ட் 2018 அன்று, 'கட்டார் சரிட்டி' (அறக்கொடை) இலங்கையில் தனது கிளையை திறந்தது.

ஈ) கலாச்சார உறவுகள்

- இலங்கை சுதந்திர தினம் 8 :ிபெப்ரவரி 2018 அன்று, டோஹாவிலுள்ள ஷெரட்டன் ஹோட்டலில் தூதரகத்தினால் கொண்டாடப்பட்டது.

- தைப்பொங்கல் 19 ஜனவரி 2018 அன்றும் வெசாக் 26-30 ஏப்ரல் 2018 இலும் வருடாந்த இ:ிப்தார் தினம் 24 ஜூன் 2017 அன்றும், தூதரக வளவில் கொண்டாடப்பட்டது.

உ) தொழிலாளர் நலன்

- இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பு செயற்பாடுகளை செயற்றிறமூட்டுவதன் மூலம், தூதரகத்தின் தொழிலாளர் பிரிவானது, ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முகவர்கள்/கம்பனிகள்/தொழில் தருனர்களுக்கு, அவசியமான வழிமுறைகளை வழங்கி உதவியது.

- தனிப்பட்ட முறையில் ஒரு இலங்கைப் பணிப்பெண்ணை ஆட்சேர்ப்புக்காக, திரும்பப் பெறக்கூடிய பாதுகாப்பு முற்பணமாக, (இலங்கை முகவரின் தலையீடு இன்றி), 3,650/ கட்டார் ரியால் அறவிடப்படுகிறது. திரும்பப் பெறக்கூடிய முற்பணம் உரிய அனுசரணையாளரிடம் வழங்கப்படுகிறது.

- தனிப்பட்ட முறையில் ஒரு இலங்கைப் பணிப்பெண்ணின் ஆட்சேர்ப்புக்காக, திரும்ப பெறமுடியாத பாதுகாப்பு முற்பணமாக, (இலங்கை முகவரின் தலையீடு இன்றி), 1,460/ கட்டார் ரியால் அறவிடப்படுகிறது. திரும்பப் பெறமுடியாத முற்பணம் உரிய அனுசரணையாளரிடம் வழங்கப்படுகிறது.

- மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகள் கட்டார் அனுசரணையாளர்களுக்கு பிரத்தியேகமானது. கட்டார் அல்லாத அனுசரணையாளர்கள் மீளப்பெறக்கூடிய அல்லது

மீள பெறமுடியாத முற்பணத்தைச் செலுத்தவேண்டும். (அவர்கள் அதை தீர்மானிக்கலாம்).

- 1 ஜனவரி 2018 இலிருந்து 30 செப்டெம்பர் 2018 வரையான காலப்பகுதியில், 136 வீட்டுப் பணிப்பெண்கள் (பணிப்பெண்கள் / குழந்தை பராமரிப்பாளர்/ செவிலியர்கள்/ வேலைக்காரர்கள்) தூதரகத்தை தொடர்புகொண்டிருந்தார்கள். இவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் அல்லது மீள வேலைக்கமர்த்தல் தொடர்பான செயற்பாடுகள், கட்டார் அரசாங்க அதிகாரிகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. (குற்றவியல் சான்று மற்றும் தகவல் திணைக்களம் (CEI D),பொலிஸ், வெளிநாட்டு முகவர்கள் போன்றவை).

- 1 ஜனவரி 2018 இலிருந்து 30 செப்டெம்பர் 2018 வரையான காலப்பகுதியில் ஆண் தொழிலாளர்களிடமிருந்து 1,014 தொழில் சம்பந்தமான முறைப்பாடுகள் தூதரகத்திற்கு கிடைக்கப்பெற்றன. எல்லா முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ள்பபட்டன.

- தூதரக அதிகாரிகள் சிறைச்சாலைகள் மற்றும் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு அவ்வப்போது சென்று, அங்குள்ள இலங்கையர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்களை வழங்கினர்.

- தூதரகத்தின் பாதுகாப்பான தங்குமிடத்திலுள்ள குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் உணவு வகைகள் வழங்கப்பட்டன.

- இலங்கைத் தூதரகத்தின் பொறுப்பிலிள்ள பெண் தொழிலாளர்கள், குற்றவியல் சான்று மற்றும் தகவல் திணைக்களத்தின் (CEI D) ஊடாக, இலங்கை திரும்புவதற்கான உதவிகளும் அவர்களின் பயணத்திற்கான விமானச்சீட்டு செலவும் வழங்கப்பட்டன.

- தூதரக அதிகாரிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இலங்கை தொழிலாளர்களைப் பார்வையிட்டதுடன், புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கியுள்ள முகாம்களுக்குச் சென்று அவர்களின் பிரச்சனைகள், முறைப்பாடுகளைக் கேட்டறிந்தனர்.

- வேலைவாய்ப்பு ஊக்கப்படுத்தல் செயற்றிட்டம் இடம்பெற்றது. கம்பனிகளுக்குச் சென்று, வேலை வாய்ப்புக்களை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 1 ஜனவரி 2018 இலிருந்து 30 செப்டெம்பர் 2018 வரையான காலப்பகுதியில், 17,932 உடன்படிக்கைகளும் 274 வேலை அழைப்புகளும் உறுதிப்படுத்தப்பட்டன.

- 1 ஜனவரி 2018 இலிருந்து 30 செப்டெம்பர் 2018 வரையான காலப்பகுதியில், தூதரகத்தின் பாதுகாப்பில் தங்கியிருந்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கான உணவு மற்றும் மருந்து வகைகள் வழங்கியதற்கான செலவு ரூ.1,112,534.64 ஆகும்.

-

11. சவூதி அரேபியா

அ) இருதரப்பு உறவுகள்

- தூதுவர் பின்வருவோருடன் கலந்துரையாடினார்:

  - மாண்புமிகு. முனைவர். மொஹமட் சலே பின் தாஹிர் பெண்டன் – ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சர்

  - மேன்மை தங்கிய இளவரசர் சௌட் பின் நை◌ஃப் பின் அப்துல் அசிஸ், கிழக்கு மாணாண ஆளுனர்

  - மேன்மை தங்கிய இளவரசர் மொஹமட் பின் அப்துல் ரஹ்மான் பின் அப்துல் அசிஸ், துணை ஆளுனர், ரியாத்

  - மாட்சிமை தங்கிய, முனைவர். நாஸர் அல் தாவூத், உள்துறை துணை அமைச்சர்

  - மாட்சிமை தங்கிய திரு தமீம் பின் மஜிட் அல் டெளசாரி, மோ◌ஃபா விலுள்ள உதவித்தூதரக அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர்

  - மாட்சிமை தங்கிய முனைவர் அடெல் சிராஜ் மிர்தாத், மோ◌ஃபா வின் அரசியல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர்

- இக்காலகட்டத்தில், தூதரகத்தின் 'விஷன் 2020' என்ற நிகழ்ச்சியின் மூலமாக சிந்திக்கப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியானது; இலங்கைப் பொருளாதாரத்திற்கான சவூதி அரேபியாவின் பங்களிப்பை அதிகரிக்கவும், சவூதி அரேபியாவில் வசிக்கும் இலங்கையர்களின் நலனை மேம்படுத்தவும், சவூதி அரேபியாவில் வசிக்கும் இலங்கையர்களுக்கான தூதரக சேவைகளின் தரத்தை மேம்படுத்தவுமென இலங்கைத் தூதுவராலும் தூதரக உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கைத் தொழில் விற்பன்னர்களாலும் உருவாக்கப்பட்டது.

- 18-19 ஜூலை 2018 இல், கழுகங்கை அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கான கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கென, அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது.

- இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் திரு அப்துல் நசார் எச் ஒ. அல் ஹார்த்தி, 25 மே 2018 அன்று தனது நியமன கடிதத்தை, மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார்.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- இஸ்லாமிய நாடுகளுக்கான அமைப்பின் செயலாளர் நாயகம், முனைவர் யூசுஃப் பின் அஹ்மட் அல் ஒதைமீனுடன் தூதரக அதிகாரிகள் கலந்துரையாடினர்.

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இலங்கைக்கு வருகைதரும் சவூதி வணிகர்களுக்கு தூதரகம் வசதியளித்து வருகிறது. 'இலங்கை முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்டம் 2018' இல் சவூதி வணிகர்கள் குழுவொன்று பங்குபற்றியது. சவூதி ஏற்றுமதி செயற்றிட்டம் (SEP) மூலமாக இலங்கை கம்பனிகளுக்கு 'ஃபைனான்ஸ் லைன்' வசதிகள் கிடைப்பதற்கு தூதரகம் ஆதரவு வழங்கியது. இது; டிசம்பர் 2017 இல் இலங்கை வர்த்தக சம்மேளனத்திற்கும் சவூதி வர்த்தக சம்மேளன மன்றத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு கூட்டுறவு பற்றியதிலான உடன்படிக்கையின் விளைவாகும். தூதரகம், தம்மாம் வர்த்தக சம்மேளத்துடன் சந்திப்புக்களை மேற்கொண்டு, அபிவிருத்திக்கான சவூதி நிதியம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் கழுகங்கை செயற்றிட்டங்களுக்கான இலங்கை அதிகாரிகள் இடையே கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளைச் செய்தது.

- JTTX travel fair, Riyadh travel fair போன்ற உல்லாசப்பயண ஊக்குவிப்பு நிகழ்வுகளிலும் ரியாத், ஜெட்டா மற்றும் தம்மாமில் நடந்த உல்லாசப்பயண தொடர் ஊக்குவிப்பு நிகழ்வுகளிலும் தூதரகம் கலந்துகொண்டு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. தூதரகம், தனது 'விஷன் 2020' செயற்றிட்டத்தின் கீழ், அரேபிய சமூக ஊடக பயனாளர்கள் மத்தியில் இலங்கை சுற்றுலாப் பயணத்தை ஊக்குவிக்குப்பதற்காக ஒரு சிறு காணொளியையும் தயாரித்திருந்தது.

ஈ) கலாச்சார உறவுகள்

- மேன்மை தங்கிய இளவரசர் ஃபைசல் பின் பந்தார் பின் அப்டுல் அசிஸ் அல் சௌட்/ ரியாத் ஆளுனர் கௌரவ விருந்தினராக கலந்துகொள்ள, இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை, 27 ஃபெப்ரவரி 2018 அன்று இலங்கைத் தூதரகம் கொண்டாடியது. இந்த நிகழ்வில் இலங்கையின் பாரம்பரிய கலாச்சாரத்தைக் காட்டும் பொருட்காட்சி நிகழ்வொன்றும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

- இலங்கையின் இந்து, பௌத்த, கிறிஸ்தவ சமுதாயத்தினர் தமது சமய, கலாச்சார செயற்பாடுகளை தூதரக வளவில் நடத்துவதற்கு தூதரகம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. தமிழ்/சிங்கள புதுவருட விழா, வெசாக் மற்றும் சீல வியாபரணய உட்பட்ட 11 பௌத்த மத நிகழ்வுகள், கிறிஸ்மஸ் உட்பட்ட 38 கத்தோலிக்க மத நிகழ்வுகள், தைப்பொங்கள் உட்பட்ட 39 இந்துமத நிகழ்வுகள் மற்றும் 28 பௌத்த மற்றும் கத்தோலிக்க தஹம்பஸல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தூதரகம் உதவியது.

உ) தொழிலாளர் நலன்

- சவூதி அரேபிய இராச்சியத்தின் கிழக்கு மாகாணத்தில் 9 நடமாடும் சேவைகளை தூதரகம் நடாத்தியது. தூதரகத்திற்கு 55 இறப்புகள் அறிவிக்கப்பட்டன. இதில் 14 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன, 36 உடல்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 5 உடல்கள் பற்றிய நடவடிக்கை நிலுவையில் உள்ளது. தூதரகத்தின் ஆண்களுக்கான பிரிவுக்கு, ஆண் தொழிலாளர்களிடமிருந்து 323 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இதில் 218 பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. இலங்கையைச் சேர்ந்த ஆண், பெண் தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான, தூதரகத்தினர் பல்வேறுபட்ட நாடுகடத்தும் முகாம்கள், வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள், கம்பனிகள் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்கள் போன்றவற்றுக்கு 152 தடவைகள் விஜயம் செய்தனர். தூதரகத்தின் பெண் தொழிலாளர்களுக்கான பிரிவு, 76 பெண்களுக்கான நலன்புரி/ சமூக நல நிலையங்களுக்கு விஜயம் செய்தது. நீதிமன்றங்களில் 30 தொழிலாளர் வழக்குகளில் ஆஜரானது, ஆபத்தான நிலையில் உள்ள 25 நோயாளிகளைப் பார்வையிடுவதற்காக வைத்தியசாலைகளுக்குச் சென்றது. 56 தடவைகள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றது. தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் சராசரியாக 33 நபர்கள் பராமரிக்கப்பட்டார்கள். இக்கால கட்டத்தில் 299 வீட்டுப் பணிப்பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் புகலிடம் வழங்கப்பட்டார்கள். தூதரகத்தின் தடுத்துவைக்கப்பட்டோர் பிரிவானது, தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட இலங்கையர்களுக்கான சேவைகளை வழங்கும் நோக்குடன், 32 தடவைகள் சிறைச்சாலைக்குச் சென்றதுடன், 48 பொது நீதிமன்றங்களுக்கும் சென்றது.

12. ஐக்கிய அரபு இராச்சியம்

12.1. அபுதாபி, ஐக்கிய அரபு இராச்சியம்

அ) இருதரப்பு உறவுகள்

- மேன்மை தங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் மாண்புமிகு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோரின் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான உயர் மட்ட விஜயம் பற்றியதில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- மாண்புமிகி அர்ஜுன ரணதுங்க, மாண்புமிகு ஹரின் ஃபெர்னாண்டோ, மாண்புமிகு எ.எச்.எம் ஃபௌஸி மற்றும் மாண்புமிகு ரிஷாத் பத்யுதீன் ஆகியோர் ஐக்கிய அரபு இராச்சியத்திற்குப் பல அமைச்சு ரீதியிலான விஜயங்களை மேற்கொண்டனர்.

- இலங்கை பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரியிலிருந்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் ஆய்வுச் சுற்றுலா ஒன்றை தூதரகம் ஒருங்கிணைத்தது. ஐக்கிய அரபு இராச்சிய அரசாங்கம் இந்த பிரதிநிதிகள் குழுவை அழைத்திருந்தது.

- அடுத்த வருடம் இலங்கை – ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான 2 ஆவது இணைப்பு ஆணைக்குழுவை நடத்துவதற்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றன.

- இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் திரு அல் அஹ்மட் இப்ராஹிம் அலி அல் முல்லா, 11 ஏப்ரல் 2018 அன்று தனது நியமனக் கடிதத்தை மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார்.

ஆ) பல்தரப்பு உறவுகள்

- சர்வதேச புதுப்பிக்கப்படத்தக்க சக்தி முகவர் (international renewable energy agency) மன்ற கூட்டங்களில் தூதுவர் பங்கேற்றார்.

- அபுதாபி பேச்சுவார்த்தைகளில் இலங்கையின் பங்களிப்புக்கு தூதரகம் அனுசரணை வழங்கியது

இ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் தலைமையிலான குழுவொன்று, ஐக்கிய அரபு இராச்சியத்தின் மத்திய வங்கி அதிகாரிகளைச் சந்தித்தி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தூதரகம் ஏற்பாடு செய்தது. இப்பேச்சு வார்த்தைகளில் பல அரச மற்றும் தனியார் வங்கித்துறை அதிகாரிகளும் பங்கெடுத்தனர்.

- தூதுவர் டுபாயில் ஒரு முதலீட்டு மன்றத்தில் கலந்துகொண்டு, இலங்கை முதலீடுகளை ஊக்கப்படுத்தினார்.

ஈ) கலாச்சார உறவுகள்

- அபுதாபியிலிருக்கும் புலம்பெயர் இலங்கையர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கை இசை நிகழ்ச்சிகள், சித்திர வகுப்புகள் மற்றும் சித்திரப்போட்டிகள், புத்தக கண்காட்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், இஃப்தார், புதுவருட நிகழ்வு, தஹம்பசால் போன்றவை உட்பட பல கலாச்சார நிகழ்ச்சிகளுக்குத் தூதரகம் அனுசரணை வழங்கியது.

- ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஒரு பௌத்த நிலையத்தை நிறுவுதல் சம்பந்தமாக இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகளை தூதரகம் ஏற்பாடு செய்தது.

உ) தொழிலாளர் நலன்

- தூதரக வளவில் தொழில் ஊக்கப்படுத்தல் கூட்டங்களை தூதரகம் நடத்தியதுடன், ஐக்கிய அரபு இராச்சியத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் நலன் அறிக்கையிலும் பங்குபற்றியது. ஐ.அ.இ இல் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், அவர்களைச்

சட்டபூர்வமாக்குதல்/ தாயகத்திற்குத் திருப்பி அனுப்புதலுக்கான ஏற்பாடுகளைத் தூதரகம் தற்சமயம் செய்துவருகிறது.

12.2. டுபாய், ஐக்கிய அரபு இராச்சியம்

அ) பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

- டுபாயில் வருடாந்தம் நடைபெறும் உலகின் மாபெரும் உணவு மற்றும் குடிபானங்களுக்கான 2018 ஆம் வருட நிகழ்வு 18-22 ஃபெப்ரவரி 2018 காலப்பகுதியில் நடைபெற்றபோது, இலங்கைத் தூதரகமானது, இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கைத் தேயிலைச் சபையின் உடனுழைப்புடன், இலங்கையின் மாபெரும் உணவு மற்றும் குடிபானங்கள் சார்ந்த ஏற்றுமதிக் கம்பனிகள் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்தது. இந்நிகழ்வில் மொத்தமாக 43 இலங்கை ஏற்றுமதியாளர்கள் கலந்துகொண்டனர்.

- ஐக்கிய அரபு இராச்சியத்தின் 'காலீஜ் டைம்ஸ்' மற்றும் 'கல்ஃப் நியூஸ்' ஆகிய முன்னணி ஆங்கிலப் பத்திரிகைகளில், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தையும் டுபாயில் இலங்கையின் கொன்சுலர் அலுவலகம் நிறுவப்பட்ட 25 ஆவது வருட நிறைவையும் குறிக்கும் வண்ணம், 4 ஃபெப்ரவரி 2018 அன்று, நான்கு பக்கங்களில் சிறப்பு இணைப்புகள் பிரசுரிக்கப்பட்டன.

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தையும் டுபாயில் இலங்கையின் கொன்சுலர் அலுவலகம் நிறுவப்பட்ட 25 ஆவது வருட நிறைவையும் குறிக்கும் வண்ணம், 4 ஃபெப்ரவரி 2018 அன்று பேர்ஜ் கலீஃபாவிலுள்ள அமானி ஹோட்டலில் வரவேற்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தையும் டுபாயில் இலங்கையின் கொன்சுலர் அலுவலகம் நிறுவப்பட்ட 25 ஆவது வருட நிறைவையும் குறிக்கும் வண்ணம் 'இலங்கை தினம் 2018' என்ற மாபெரும் நிகழ்வு நடத்தப்பட்டது.

- டுபாயில் நடைபெற்ற, "டேஸ்ட் ஒஃப் டுபாய்' உணவுத் திருவிழாவின் 11 ஆவது தொடரில், இலங்கைச் சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்பட்ட மூன்று நாட்களில் இலங்கை பங்குகொள்வதற்கான ஏற்பாட்டை இலங்கை சுற்றுலாச் சபையும் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸும் செய்திருந்தன.

- 22-25 ஏப்ரல் 2018 காலப்பகுதியில், மத்திய கிழக்கு மற்றும் அரபு பிராந்தியங்களில் முன்னணியிலிருக்கும் பயண மற்றும் உல்லாசப்பயண கண்காட்சியான 'த அரேபியன் ட்ரவல் மார்க்கட்' இல் இலங்கையும் பங்குகொள்வதற்கு, இலங்கை சுற்றுலாச்சபையுடன் இணைந்து தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் பங்குபற்றிய 60 இற்கும் அதிகமான கம்பனிகளுடன் இலங்கையின் உல்லாசப் பயண கம்பனிகளும் அடங்கும். 23 ஏபரல் 2018 அன்று ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது.

- ஷார்ஜாவிலும் டுபாயிலும் முறையே ஏப்ரல் 17 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற இரு உல்லாசப்பயண ஊக்குவிப்பு தொடர் நிகழ்வுகளை, தூதரகம், இலங்கை சுற்றுலாச் சபையுடன் இணைந்து நடத்தியது.

- முன்மொழியப்பட்டுள்ள கொழும்பு சர்வதேச நிதி நகரத்தின் சட்ட கட்டமைப்பு சம்பந்தமான தகவல்களைப் பெறுவதற்காக, இலங்கை அரசாங்கத்தின் ஆலோசகர் திரு வை விஜேதிலக, டுபாய் சர்வதேச நிதி நகரத்தின் பிரதான சட்ட அதிகாரியுடன் சம்பந்தப்பட்ட பிற அதிகாரிகளையும் சந்திப்பதற்கான ஒழுங்குகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

- 'எக்ஸ்போ 2020' இல் இலங்கை கலந்துகொள்வது மற்றும் இலங்கையில் அதற்குப் பொருத்தமான இடத்தை இனங்காண்பது தொடர்பாக, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபையும் டுபாய் எக்ஸ்போ செயலகமும் இணந்து செயற்படுவதற்கான உதவியை தூதரகம் ஏற்பாடு செய்தது.

- ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாக வசிக்கும் இலங்கையர்களுக்கு விஷேச மன்னிப்பை வழங்கும் காலத்தை அந்நாடு அறிவித்ததையடுத்து, அங்குள்ள இலங்கைத் தூதரகமானது, இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் இணைந்து, அங்குள்ள இலங்கையர்களுக்கு மூன்று வாரங்களுக்குள் கடவுச்சீட்டுக்களை வழங்குவது உட்பட, அவர்கள் தாயகம் திரும்புவதற்கோ அல்லது தமது வீசாவை உறுதிப்படுத்துவதற்கோ ஆன சிறப்பு ஏற்பாடுகளைச் செய்தது.

- கொழும்பில் இடம்பெற்ற 'கடல்சார் அரச –தனியார் பேச்சுவார்த்தை, இடப்பெயர்வு மற்றும் போக்குவரத்துச் சீர்த்திருத்த மன்றத்தில் கலந்துகொள்வதற்காக, ஐக்கிய அரபு இராச்சியத்தின் தேசிய சரக்கேற்றல் மற்றும் இடப்பெயர்வு கூட்டமைப்பின் தலைவரும் சர்வதேச சரக்கனுப்புவோர் கூட்டுறவின் மேலதிக சபையின் துணைத்தலைவரும் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் தூதரகத்தினால் செய்யப்பட்டன.

- இலங்கையிலிருந்து டுபாய்க்கு அமைச்சுமட்டத்திலான 7 விஜயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- இலங்கையிலிருந்து கிடைக்கப்பெற்ற தேயிலை, வாசனைப்பொருட்கள், தென்னை உற்பத்திப்பொருட்கள், தகவல் தொடர்பு தொழில்நுட்ப பொருட்கள் போன்ற, வர்த்தக சம்பந்தமான விசாரணைகளுக்கு, வணிக தொடர்புகளை மேற்கொள்வதற்காக, சாத்தியமான இறக்குமதியாளர்கள் பற்றிய விபரங்கள் வழங்கப்பட்டன.

- இலங்கை உற்பத்திப்பொருட்கள்/ சுற்றுலாப்பயணத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் 141 இலங்கை ஏற்றுமதியாளர்கள்/ கம்பனிகள் டுபாய்க்கு வருகை தந்தபோது, வணிக

தொடர்புகளை ஏற்படுத்துவதற்குச் த்தியமான டுபாய் இறக்குமதியாளர்கள்/ சுற்றுலா கம்பனிகள் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

- 2018 ஏப்ரல் 2 இலிருந்து 4 வரை டுபாயில் நடத்தப்பட்ட, மாபெரும் வருடாந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வில் தூதரகம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

- இலங்கையில் முதலீடு செய்யவிரும்பிய ஒரு பெரிய சுற்றுலாக் கம்பனித்தொடருடன் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டு, இலங்கையின் முதலீடு சம்பந்தமான தரப்பினர் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

- இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்குச் சாத்தியமான முதலீடு பற்றி மொஹமட் ஒமார் பின் ஹைதர் உரிமைக்கம்பனிகளின் தலைவருடன் கலந்துரையாடப்பட்டது. அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோது, 5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு பற்றி மாண்புமிகு பிரதம மந்திரியுடன் கலந்துரையாடினர்.

- ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமைந்துள்ள கம்பனியொன்று, இலங்கையில் விவசாய சம்பந்தமான செயற்றிட்டம் ஒன்றுக்காக, மொத்தம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டன.

- ஹோட்டல் பொது முகாமையாளர்களுக்கான சர்வதேச சங்கத்தின் தலைவருடன், ஹோட்டல் செயற்றிட்டம் ஒன்றில், 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வது தொடர்பாகவும் இலங்கையில் ஹோட்டல் பொது முகாமையாளர்கள் பயிற்சி செயற்றிட்டம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. முதலீடு கைகூடுவதற்காக முதலீட்டுச் சபையிடம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

ஆ) கலாச்சார உறவுகள்

- புலம்பெயர் இலங்கைச் சமூகத்தின் உதவியுடன், கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகம் பின்வரும் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தது:

  - தேசிய தின கொண்டாட்டங்கள்

  - வெசாக் மற்றும் பொசொன் விழாக்கள்

  - புதிதாக நிறுவப்பட்ட லங்காராமய விகாரையில் மாதாந்த பௌத்த மத அனுட்டிப்புகள்

  - கொன்சியுலர் நாயகத்தின் அலுவலக வளவில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் (டுபாய் மற்றும் வடக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசிக்கும் இலங்கைப் பௌத்தர்களும் அவர்களின் பிள்ளைகளும்) கலந்துகொள்ளும் 'தம்ம பாடசாலை' (தஹம்பாசல).

இ) தொழிலாளர் நலன்

- ஆய்வுக்காலத்தில், 257 வேலைவாப்பு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், 179 புதிய வேலைகள் வழங்கப்பட்டன.

- சிறையிலுள்ள இலங்கையர்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக, 20 தடவைகள் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிடச்சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டுபாய் மற்றும் வடக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் குடிவரவு மற்றும் பொலிஸுக்கு 202 தடவைகள் விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

- டுபாய் மற்றும் வடக்கு ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களை 36 தடவைகள் சென்று பார்வையிடப்பட்டது.

- அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கையர்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக சில தொழில் முகாம்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

- இலங்கையர்களால் கோரப்பட்ட இழப்பீடுகள் முன்னுரிமையின் அடிப்படையில் கவனிக்கப்பட்டன.

- மரணமடைந்தவர்களின் உறவினர்களின் கோரிக்கைக்கு இணங்க, 31 உடல்கள் தாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

- தூதரகத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவர்கள் உட்பட, குடிவரவுத் தடை நீக்கத்திற்குப் பின், 120 தொழிலாளர்கள் தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

- இலங்கைத் தூதரகத்திற்கு 94 முறைப்பாடுகளும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மூலம் 122 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன. இவற்றில் 102 முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டன.

- தொழிலாளர் கூட்டுறவு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உள்நாட்டு தொழிலாளர்களுக்கிடையிலான இருதரப்பு கூட்டுறவு சம்பந்தமான நியம உபசரணை பற்றியதில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகத்தின் கொன்சியுலர் மற்றும் தொழிலாளர் பிரிவுகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான மனிதக்கடத்தல் வியாபாரத்திற்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் நடத்தப்பட்டது.

- இரண்டு அமைச்சு ரீதியிலான விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர், மாண்புமிகு ஹரின் ஃபெர்னாண்டோ, தூதரக பாதுகாப்பு இல்லத்திற்குச் சென்று பரிசோதித்தார்.

சமுத்திர அலுவல்கள், சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவு

இருதரப்பு உறவுகள்

1. இந்தப் பிரிவானது, பல்வேறு நாடுகளுடனான சமுத்திரம் தொடர்பான விடயங்கல் மீதான உறவுகளை விருத்தி செய்யப்பாடுபட்டது. குறிப்பாகச் சொல்வதாயின், நோர்வே, ஜப்பான், நெதர்லாந்து, மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளையும், ஜேர்மனியின் மக்ஸ் பிளாங் பவுன்டேஷன் (Max Plank Foundation of Germany), மற்றும் அவுஸ்திரேலியாவின் பொது நலவாய விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சி அமைப்பு (CSIRO of Australia) ஆகிய அமைப்புக்களையும் சேர்ந்த பிரதி நிதிகளுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பெற்றன.

2. கடல்சார் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் சமுத்திர விவகாரங்கள் மீதான 3 ஆவது இலங்கை- ஜப்பான் பேச்சுவார்த்தை இந்தப் பிரிவின் ஏற்பாட்டில் ஜூலை 19 ஆம் திகதியன்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்றது. மேற்படி பேச்சுவார்த்தையின் போது பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன:-

I. ஜப்பான் கடல்சார் பாதுகாப்புப் படையணிகளுக்கும் இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப் படை மற்றும் இலங்கை கரையோரப் பாதுகாப்புப்படை ஆகியவற்றுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்த இருதரப்புக்களும் ஒப்புக் கொண்டன.

II. "ஆசியான்" நாடுகளின் பிராந்திய மாநாடு (ASEAN Regional Forum) மற்றும் ஆசியக் கடற்பரப்பினுள் பயணிக்கும் கப்பல்கள் மீதான கடற்கொள்ளை மற்றும் ஆயுத முனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொள்ளைக்கு எதிராகப் போராடுதல் மீதான பிராந்திய ஒத்துழைப்பு உடன்படிக்கை ஆகியவற்றில் அதிகரித்த ஈடுபாட்டின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு, இருதரப்புக்களும் பலதரப்பு பணிச்சட்டங்களிலான ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடின.

அத்துடன்,

III. கடல்சார் அதிகார எல்லை குறித்த அறிவூட்டலை மேம்படுத்துவதற்கான சாத்தியம்மிக்க ஒத்துழைப்பு குறித்தும் அவை ஆராய்ந்தன.

மேற்படி விவகாரங்கள் மீதான முன்னெடுப்புக்களை இலங்கை மற்றும் ஜப்பானிய தரப்புக்களுடன் இணைந்து சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவானது மேற்கொண்டு வருகின்றது.

3. தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரமைப்புக்கும் (NARA) அவுஸ்திரேலியாவின் பொதுநலவாய விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சி அமைப்புக்கும் (CSIRO) இடையே பங்காண்மையொன்றைத் தாபிக்க வேண்டுமென

இந்தப் பிரிவானது முன்மொழிந்தும் ஆராய்ந்தும், முன்னெடுப்புக்களை மேற்கொண்டுமிருந்தது. குறித்த இருதரப்புக்களும் கொழும்பின் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தல் மீதான செயல் நோக்கக் கடிதத்தில் 2018 செப்டெம்பர் 5 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டன.

4. இலங்கை கடற்பரப்பில் கடல்சார் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான வெளிநாட்டுக் கப்பல்களின் விண்ணப்பங்களுக்கான இசைவை வழங்குதல் மீதான தனித்த வசதிப்படுத்தல் செயல்முறையைத் தாபித்தல் குறித்த கலந்துரையாடல்களை இந்தப் பிரிவு முன்னெடுத்துள்ளது. இந்தச் செயல்முறையானது மிக விரைவில் இறுதி நிலைப்படுத்தப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.2018 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

5. 'கடல்சார் இடப்பண்புக்குரிய திட்டமிடல் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட கரையோர வலய முகாமைத்துவம்" எனும் தொனிப்பொருளில் அமைந்த தேசிய ஆர்வலர் மாநாட்டினைக் கூட்டுவதில் நோர்வே அரசின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியம் குறித்தும் இந்தப் பிரிவானது ஆராய்ந்து வருகின்றது.

6. இந்தப் பிரிவானது, 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அநேகமான உயர்மட்ட இருதரப்பு விஜயங்கள்/ மாநாடுகளுக்கான சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்ற விடயதானங்கள் மீதான உரைகளை/ உள்ளீடுகளை வழங்கியதெனலாம்.

அதாவது:

அ. 2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிங்கப்பூர் பிரதமர், இந்தோனேசிய ஜனாதிபதி மற்றும் வியட்நாம் பிரதமர் ஆகியோரின் உத்தியோகபூர்வ விஜயங்களுக்கென நிகழ்த்தப்பட்ட உரைக் குறிப்புக்களுக்கான உள்ளீடுகள்.

ஆ. 2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெற்ற 12 ஆவது "ஆசியான்" பிராந்திய மாநாட்டு நிபுணர்கள் மற்றும் மேதகையோர் (ARF-EEPS) இந்து சமுத்திர பசுபிக் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மீதான உரைக் குறிப்புக்களின் நகல்கள்.

இ. கொழும்பில் 2018 ஏப்ரல் 11 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கை- வியட்நாம் அரசியல் கலந்தாலோசனை குறித்த 3 ஆவது கூட்டத்திற்கான உள்ளீடு

ஈ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நோர்வேயின் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான இராஜாங்க செயலாளர் திரு. ஜென்ஸ் புரொலிச் ஹொல்டேயுடன் 2018 ஜூன் 20 அன்று நடாத்திய சந்திப்புக்கான உள்ளீடு.

உ. கொழும்பில் 2018 ஜூன் 21 முதல் 22 வரை நடைபெற்ற " பேண்தகு அபிவிருத்தி இலக்கு 14 - நீருக்கடியிலான சிற்றுயிர்த் தொகுதி (நீல பேண்தகு அபிவிருத்தி) எனும் தொனிப்பொருளிலான பிராந்திய ஆய்வரங்கில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆற்றிய உரை, வியட்நாம் தலைநகர் ஹனோயில் 2018 ஓகஸ்ட் 27 முதல் 28 வரை நடைபெற்ற 3 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கௌரவ பிரதமர் ஆற்றிய உரை

ஊ. கொழும்பில் 2018 ஓகஸ்ட் 30-31 வரை நடைபெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர் ஆற்றிய உரைக்கான உள்ளீடு

எ. "இந்து சமுத்திரம்; எமது எதிர்காலத்தை நிர்ணயித்தல்" எனும் தொனிப் பொருளில் அமைந்த தடம் 1.5 மாநாடு குறித்து கௌரவ சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்புக்கென கௌரவ பிரதமர் ஆற்ற வேண்டியிருந்த உரைக்கான குறிப்புக்கள்.

ஏ. கடந்த 2018 செப்டெம்பரில் மேற்கொள்ளப்பட்ட பொதுநலவாய செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயத்திற்கான உள்ளீடு.

ஐ. 2018 ஒக்டோபர் 29-30 வரை நடைபெற்ற எமது சமுத்திர மாநாட்டிலும், இந்தோனேசியாவில் 2018 நவம்பர் 1-2 வரை நடைபெற்ற AIS மாநாட்டிலும் கலந்து கொண்ட இலங்கைத் தூதுக்குழுவுக்கான அறிக்கைகள் மற்றும் உரைக் குறிப்புகள்

ஒ. இந்தோனேசிய பாலித்தீவில் 2018 டிசம்பர் 7-8 வரை நடைபெற்ற இந்து சமுத்திரத்தில் உள்ளடங்கல் வளர்ச்சிக்கான கடல்சார் ஒத்துழைப்பை மிகுதிப்படுத்தல் மீதான இந்து சமுத்திர ஓர (எல்லைச்) சங்க உயர்மட்டக் குழாத்தினருக்கான அளிக்கை மற்றும் உரை

ஓ. 2018 டிசம்பர் 8 ஆம் திகதியன்று நடைபெற்ற சர்வதேச தொழிற்பாட்டு முறைசார்ந்த பகுப்பாய்வு மாநாட்டு ONS சான்றிதழ் கற்கைநெறி தொடர்பான நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கான உரை

7. இந்தப் பிரிவானது, சர்வதேச மட்டத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் கௌரவ அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர், செயலாளர் மற்றும் ஏனைய உயர் மட்டப் பிரதிநிதிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் மற்றும் வேண்டப்படும் தகவல்களை வழங்குவதன் மூலம், வெளிநாட்டமைச்சின் "சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான விவகாரங்கங்களைக் கையாண்டு வரும் தகவல் கரமாகவும் தொழிற்பட்டு வருகின்றது.

8. சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களிலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் இந்தப் பிரிவானது சமுத்திர அலுவல்கள்

மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான விவகாரங்கள் சம்பந்தமாக ஏனைய அமைச்சுக்கள், முகவரமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்தும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆ. **<u>பலதரப்பு உறவுகள்</u>**

<u>இந்து சமுத்திர ஓர சங்கம் –கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு செயலமர்வு 4-5 செப்டெம்பர் 2018, கொழும்பு, இலங்கை</u>

1. கடந்த 2017 ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவின் டர்பனில் நடைபெற்ற அமைச்சர்கள் பேரவையின் 17 ஆவது கூட்டத்தில், ஏனையவற்றுக்கு மத்தியில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு மீதான பணிக்குழுவொன்றைத் தாபித்தல் உள்ளடங்கலாக, கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு மீதான இந்து சமுத்திர ஓர சங்கத்தின் (IORA) செயல்திட்டம் 2017-2021 ஐ நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை இலங்கை ஒருங்கிணைக்குமென தீர்மானிக்கப்பட்டது. அதன் நிமித்தம், இலங்கை இந்து சமுத்திர ஓர சங்க (IORA) கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்பாதுகாப்பு முன்னுரிமை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முன்னணி ஒருங்கிணைப்பாளராக விளங்குகின்றது.

2. இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சர்வதேச முன்னெடுப்பில் தாக்கத்தை உண்டு பண்ணும் வகையில், சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவானது, இந்து சமுத்திர ஓர சங்கத்தின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு பணிக்குழுவை அமைத்துக்கொள்வதற்கான ஆரம்ப செயலமர்வொன்றை கொழும்பில் 2018 செப்டெம்பர் 4 முதல் 5 வரையிலான காலப்பகுதியில் ஏற்பாடு செய்திருந்தது. இந்து சமுத்திர ஓர சங்க உறுப்பு நாடுகள் இந்தச் செயலமர்வில் கூடி கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு பணிக்குழுவை அமைத்துக் கொள்வதற்கான ஆய்வெல்லையை நிர்ணயித்தன.

3. குறித்த செயலமர்வில் மேற்படி ஆய்வெல்லையை நிர்ணயித்தமையானது, இந்து சமுத்திர ஓர சங்க கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு முன்னுரிமை விடயப்பரப்பில் முக்கிய திருப்பு முனையாகும். குறித்த பணிக் குழுவானது, ஆர்வலர்கள் மத்தியில் செயன்முறை, ஒருங்கிணைப்பை வசதிப்படுத்துவதன் மூலம் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் கடல்சார் அலுவலர்கள் மற்றும் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களை ஈடுபடுத்துவதற்கான பொறிமுறையொன்றை வழங்கி வருகின்றது.

4. இந்து சமுத்திரத்தில் கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு அபாயங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புக்கள் குறித்து இந்து சமுத்திர ஓர சங்க (IORA) உறுப்பு நாடுகளிடையே பொதுவான புரிந்துணர்வை ஏற்படுத்துதல், செய் வல்லமையை

மேம்படுத்தல் மற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் உள்ளடங்கலாக, கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு மீதான ஒருமுகப் படுத்தப்பட்ட கொள்கை அணுகுமுறையொன்றை ஏற்படுத்துதல்; கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு தளத்திலான செயல் வல்லமை மற்றும் நிறுவனக் கட்டமைப்பைப் பலப்படுத்தும் பொருட்டு, இந்து சமுத்திர ஓர சங்கக் (IORA) கட்டுக்கோப்புக்குள் பங்காண்மையைக் கட்டியெழுப்புதல் மற்றும் இந்து சமுத்திர ஓர சங்க (IORA) உறுப்பு நாடுகளிடையே கடல்சார் தளம் குறித்த அறிவூட்டலை மேம்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடங்கும் வகையில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்பாதுகாப்பு விடயப் பரப்பில் உள்ள கொள்கை முன்னுரிமை செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான பணிக்குழுவின் நோக்கங்களை மேற்படி செயல் ஆய்வெல்லையானது சுருக்கமாக கூறுகின்றது.

5. இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவற்றின் இணை ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற ஆரம்ப செயலமர்வுக்கு இலங்கை, அவுஸ்திரேலியா, இந்தியா, இந்தோனேசியா, மடகஸ்கார் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இணைத் தலைமை வகித்தன.

6. மேற்படி செயலமர்வு நடாத்துவதற்கு இந்தப் பிரிவானது, 50,000 அவுஸ்திரேலியா டொலர் நிதியுதவியை அவுஸ்திரேலியாவிடமிருந்து பெற்றுக் கொண்டது.

7. கடல்சார் பாதுகாப்பு மீதான செயற்குழுவுக்கான விசாரணை நியதிகளை முறைப்படுத்துவதற்கான ஆரம்ப செயலமர்வு மீதான அறிக்கை தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் 2018 ஒக்டோபர் 31- நவம்பர் 2 வரை நடைபெற்ற இந்து சமுத்திர ஓர சங்க சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 20 ஆவது கூட்டத்திலும் அமைச்சர்கள் சபையின் 18 ஆவது கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. செயற்குழுவின் முதலாவது கூட்டத்தை 2019 ஆம் ஆண்டில் நடத்துவதற்கும் இலங்கை முன்வந்தது.

8. கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அரண் ஒன்றை அமைக்கும் விடயத்தில் முன்னிலை ஒருங்கிணைப்பாளரென்ற வகையில் இலங்கையின் கடின உழைப்பு மற்றும் அதன் முன்னேற்றத்தையும், 2019 ஆம் ஆண்டில் செயற்குழுவின் முதலாவது கூட்டத்தை நடாத்த முன்வந்தமையையும் இந்து சமுத்திர ஓர சங்க அமைச்சர்கள் வரவேற்றனர்.

<u>இந்து சமுத்திரத்தில் கடற்பயண சுதந்திரம் மீதான முன்னோடி நடவடிக்கை</u>

கௌரவ பிரதமர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பூர்வாங்க நடவடிக்கையின் பிரகாரம், கடலோர நாடுகள் மற்றும் கடல்சார் பாவனையாளர்களின் நன்மை கருதி இந்து சமுத்திரத்தில் கடற்பயண சுதந்திரத்தைப் பேணுதல் மற்றும் உறுதிப்படுத்தல் மீதான

ஆராய்வுத் தேவையான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் பணிகளில் இந்தப் பிரிவு தற்போது ஈடுபட்டு வருகின்றது. இந்தப் பணியானது பிரதமர் அலுவலகம் மற்றும் கௌரவ பிரதமர் அவர்களால் நியமிக்கப்பட்டு கடற்பயண சுதந்திரம் மீதான செயலணி ஆகியவற்றுடன் கலந்தாலோசித்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய முன்னெடுப்பு நடவடிக்கையின் அங்கமாக, பின்வரும் 3 நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன:-

i). மெல்போர்னில் உள்ள டீகின் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தடம் II கல்விசார் மாநாட்டில் இந்தப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ii). தடம் 1.5 நிகழ்வு 2018, ஒக்டோபர் 11 முதல் 12 வரை நடாத்தப்பட்டது.

iii). தடம் 1 அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு 2019 மே./ ஜூன் காலப்பகுதியில் நடைபெறவுள்ளது.

மேற்படி விடயம் II இல் குறிப்பிடப்பட்டுள்ள தடம் 1.5 மாநாடு சம்பந்தமாக, கீழே தரப்பட்டுள்ள விபரங்களை தயவு செய்து பார்க்கவும்;

<u>இந்து சமுத்திரம்: எமது எதிர்காலத்தை நிர்ணயித்தல், தடம் 1.5 மாநாடு, 11-12 ஒக்டோபர் 2018</u>

1. குறித்த முன்னெடுப்பு நடவடிக்கையின் அங்கமாக, "இந்து சமுத்திரம்: எமது எதிர்காலத்தை நிர்ணயித்தல்" எனும் தொனிப்பொருளிலான மாநாடு இலங்கையின் கொழும்பு மாநகரில் 2018 ஒக்டோபர் 11 முதல் 12 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பிரதமர் அலுவலகத்தின் தலைமையில் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் பூகோள கடல்சார் குற்றச் செயல் நிகழ்ச்சித் திட்டத்தின் (UNODC) ஒத்துழைப்புடன் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தினால் குறித்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

2. இந்து சமுத்திரத்தின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடும் பொருட்டு 40 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் 2018 ஒக்டோபர் 11-12 வரை இலங்கையில் ஒன்று கூடினர். தடம் 1.5 கலந்துரையாடலானது எதிர்காலத்தில் உலகப் பொருளாதாரத்தில் வளர்ச்சி துருவமொன்றாக மிளிரக் கூடிய ஆற்றலைக் கொண்டுள்ள சமுத்திரம் மீதான கவனத்தை அதிகரிப்பதற்கென இந்து சமுத்திரக் கடலோர நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட பிரதிநிதிகளையும் பிரதான கடல்சார் பாவனையாளர்களையும் கொழும்புக்கு ஒன்றுசேர அழைத்து வந்துள்ளது.

3. கலந்து கொண்ட ஏனையோரில், இந்தியா, தென்னாபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஜேர்மனி, நெதர்லாந்து, சிங்கபூர், இந்தோனேசியா, ஜப்பான், மற்றும் ஐரோப்பியம்

ஆகியவற்றைச் சேர்ந்த முக்கிய சிரேஷ்ட அதிகாரிகள் பிராந்தியம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளைச் சேர்ந்த நிபுணத்துவப் பிரதிநிதிகளுடன் பிரதிநிதிகளாக உள்ளடங்கியிருந்தனர் சமுத்திர விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி தூதுவர் பீற்றர் தொம்சன் அவர்களும் மேற்படி மாநாட்டிற்கென கொழும்பில் தங்கியிருந்தார். மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

4. இந்தப் பிரிவானது, கௌரவ பிரதமர் அலுவலகத்தினதும், இந்த முன்னெடுப்பை ஒருங்கிணைப்பதற்கென பிரதமரால் நியமிக்கப்பட்ட செயலணியினதும் உதவியுடன் எண்ணக்கரு சார்ந்த சட்டகப் பணியினைத் தயாரித்தல் மற்றும் பங்குதாரர் உள்வினையை வசதிப்படுத்தல். உள்ளடங்கலாக மாநாட்டிற்குத் தேவையான தயாரிப்புப் பணிகளைக் கையாளும் பிரதான பொறுப்பை மேற்கொண்டது.

"பேண்தகு அபிவிருத்தி – இலக்கு -14- நீருக்கு அடியிலான உயிரின வாழ்க்கை (நீல பேண்தகு அபிவிருத்தி இலக்கு)" எனும் தொனிப் பொருளிலான பிராந்திய மாநாடு

1. நோர்வே அரசாங்க ஆதரவுடன் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் 2018 ஜூன் 21-22 காலப்பகுதியில் நடைபெற்ற "பேண்தகு அபிவிருத்தி இலக்கு 14- நீருக்கு அடியிலான உயிரின வாழ்க்கை (நீல பேண்தகு அபிவிருத்தி இலக்கு) எனும் தொனிப் பொருளிலான பிராந்திய மாநாட்டினை ஏற்பாடு செய்வதில் இந்தப் பிரிவானது உதவியது.

2. கடற்றொழில் வளங்களைச் சிறந்த முறையில் முகாமை செய்வதனை இயலச் செய்யும் வகையில், நோர்வே ஆராய்ச்சிக் கப்பல் நிபுணர் கலாநிதி. பிரிட்ஜொப் நான்சென்னால் இலங்கைப் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட மீன் இனங்களை இருப்பெடுப்பதற்கான ஆய்வானது மேற்படி ஆய்வரங்கின் மூலம் கிடைத்துள்ள இன்னுமொரு பலாபலனாகும். மேற்படி ஆய்வின் பூர்வாங்கப் பெறுபேறுகள் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரமைப்பிடம் (NARA) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத்தகை மீன்களின் இருப்பு மதிப்பீடானது 1980 களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

"இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கான சமுத்திர விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல்" மீதான இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்கத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த மத்திய நிலையம்

இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கான சமுத்திர விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல்" மீதான இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்கத்தின் தனிச் சிறப்பு_வாய்ந்த மத்திய

நிலையமொன்றை தாபிப்பதற்கு இலங்கை உடன்பட்டுள்ளது. கடல்சார் ஆராய்ச்சி செயற்களுக்கான வசதிகளை அளிக்கும் பிரதான நோக்கத்தைக் கொண்டு ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயற்பட உத்தேசிக்கும் இந்த மத்திய நிலையத்தை தாபிப்பதனை வசதிப்படுத்தும் பொருட்டு இந்தப் பிரிவானது மற்றைய முகவரமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றது. குறித்த தனிச்சிறப்பு வாய்ந்த மத்திய நிலையம் விரைவில் தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

<u>பொதுநலவாய நீல சாசனத்தின் கீழ் இயங்கி வரும் சதுப்பு நில மறுசீரமைப்புக்கான பொதுநலவாய செயலணி</u>

1. இலங்கை பொதுநலவாய நீலசாசனத்தின் கீழ் இயங்கி வரும் சதுப்பு நில மறுசீரமைப்புக்கான பொதுநலவாய செயலணியில் முதன்மை வகித்து வருகின்றது. இந்த முன்னெடுப்பு நடவடிக்கையின் கீழ், இலங்கை பொதுநலவாய நாடுகளில் உள்ள சதுப்பு நில பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் பொதுநலவாய நாடுகளின் குழுவொன்றுக்கு தலைமைதாங்கவுள்ளது. பூர்வாங்க தயாரிப்புப் பணிகளை பொதுநலவாய செயலகம் மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்ட இந்தப் பிரிவானது, மற்றைய முகவரமைப்புக்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளுடன் கூடிய முன்னெடுப்புக்கான கருப்பொருள் பத்திர தயாரிப்புப் பணிகளையும் விருத்தி செய்துள்ளது.

2. கென்யாவின் நைரோபி நகரில் 2018 நவம்பர் 26-28 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற நீலப் பொருளாதார உச்சி மாநாடு மீதான உயர் மட்ட மாநாட்டின் போது நீலசாசனம் மீதான பொதுநலவாய பக்க நிகழ்வில் இந்தப் பிரிவின் பணிப்பாளர் கலந்து கொண்டதுடன், கென்யாவில் 2018 ஒக்டோபர் 27 ஆம் திகதியன்று நடைபெற்ற நீலசாசனம், மற்றும் சதுப்பு நிலப் பாதுகாப்பு மாநாட்டில் இலங்கை தற்போது மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கைகளையும் எடுத்தியம்பினார்.

<u>ஏனைய முன்னெடுப்புக்கள்</u>

1. ஆசிய நாடுகளில் இடம் பெற்றுவரும் கடற்கொள்ளை மற்றும் ஆயுத முனையில் கப்பல்களில் கொள்ளையடித்தல் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுதல் மீதான பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பான பணியில் இலங்கை கடற்படை மற்றும் இலங்கை கரையோரக் காவல்படை ஆகியவற்றுக்கு இந்தப் பிரிவானது சிங்கபூர் மற்றும் டோக்கியோவில் உள்ள எமது தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து உதவி வருகின்றது.

2. சர்வதேச சூரிய ஒளி கூட்டமைப்பின் (ISA) செயற்பாடுகள் சம்பந்தமாக, இந்தப் பிரிவானது, அமைச்சின் பொருளாதார அலுவல்கள் பிரிவுடன் ஒருங்கிணைந்து ஜனாதிபதி செயலகம்

மற்றும் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு ஆகியவற்றுடன் நெருக்கமான முறையில் பணியாற்றி வருகின்றது.

3. கடந்த 2018 செப்டெம்பரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 73 ஆவது கூட்டத் தொடரில் மொன்ட்ரியல் உடன்படிக்கை மூல வரைவுக்கான கிக்காலி திருத்தத்துக்கு (Kigali Amendment) இலங்கை ஒப்புதல் அளித்தல் குறித்த செயல்முறையை இந்தப் பிரிவானது, அமைச்சின் சட்டப் பிரிவின் மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்தே மேற்கொண்டது.

4. இந்தப் பிரிவானது, பசுமைக் காலநிலை நிதியம் (GCF), பூகோள பசுமை வளர்ச்சி நிறுவனம் (GGGI), உழவியல் வனவளர்ப்பிலான ஆராய்ச்சிக்கான சர்வதேச மையம் (ICRAF) மற்றும் சர்வதேச பவளப்பாறை முன்னெடுப்பு (ICRI) ஆகியவை குறித்த உடன்படிக்கைகள் தொடர்பான பணியை ஒருங்கிணைத்து வருகின்றது. பூகோள பசுமை வளர்ச்சி நிறுவன உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வது குறித்து இலங்கை 2018 டிசம்பரில் கடிதமொன்றைச் சமர்ப்பித்தது. குறித்த உறுப்புரிமை 2019 ஜனவரியில் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு இந்தச் செயல்முறையினை வசதிப்படுத்தியது.

5. கொழும்பில் மேன்மைதங்கிய நெதர்லாந்தின் தூதுவருடனான சந்திப்பொன்றின் போது பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், இலங்கையின் 10 இராஜதந்திரிகள்/ அதிகாரிகளுக்கு ஹேக் நகரில் உள்ள கிளின்ஜென்டீல் நிறுவனத்தில் (Clingendael Institute) பயிற்சி வாய்ப்புக்களை மேற்கொள்வதற்கான முழு அளவிலான நிதி வசதியை இந்தப் பிரிவு பெற்றுக் கொண்டது. குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2018 நவம்பர் 5-16 வரை நடைபெற்றதுடன் அதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, மகாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கைக் கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

செயலமர்வுகள்/ மாநாடுகள்/ கருத்தரங்குகள்

1. நீலக் கரிமம் (Blue Carbon) மீதான இந்து சமுத்திர மாநாடு

பொதுநலவாய விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சி அமைப்பு (CSIRO) மற்றும் அவுஸ்ரேலியா தேசிய விஞ்ஞான முகவரமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில், இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்க செயலகம் மற்றும் அவுஸ்திரேலிய அரசின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடன் நீலக் கரிமம் மீதான இந்து சமுத்திர மாநாடு 2018 மார்ச் 19 முதல் 23 வரையிலான காலப்பகுதியில் அவுஸ்திரேலிய பேர்த் நகரில் நடைபெற்றது. மேற்படி மாநாட்டில் இந்தப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கலந்து கொண்டார்.

2. இந்து சமுத்திரத்தில் கடல்சார் ஒழுங்கு மீதான தடம் II மாநாடு

மேற்படி மாநாடு டீக்கின் பல்கலைக்கழகத்தினால் மெல்போனில் 2018 ஏப்ரல் 30 முதல் மே 1 வரை நடாத்தப் பெற்றது. இலங்கைத் தூதுக் குழுவில் பணிப்பாளர் நாயகம் அங்கம் வகித்திருந்தார். குறித்த நிகழ்வானது 2018 ஒக்டோபரில் ஏற்பாடு செய்யப்பட்ட தடம் 1.5 மாநாட்டுக்கானதோர் முன்னோடி நிகழ்வாகத் திகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. கரையோர நாடுகள் அமைப்பின் (CSO) ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் எட்டாவது கூட்டம்:

இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்கப் தலைமைப் பொறுப்பை தற்போது வகித்து வரும் தென்னாபிரிக்கா குடியரசின் ஏற்பாட்டில் இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்கச் செயலக ஆதரவுடன் டேர்பன் நகரில் 2018 ஜூலை 30 முதல் 31 வரை நடைபெற்றது.

இந்து சமுத்திர கரையோர நாடுகள் சங்கச் செயல்திட்டம் - 2017-2021 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் விசேட கவனஞ் செலுத்தும் வகையில், அதன் முன்னேற்றத்தை இருப்பு எடுப்பதற்கும் அதனை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் 21 உறுப்பு நாடுகளும் தனித்தன்மை வாய்ந்த முகவரமைப்புக்களும் கலந்து கொண்டன. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைத் தூதுக் குழுவில் பணிப்பாளர் நாயகம் அங்கம் வகித்திருந்தார்.

4. 2018 ஓகஸ்ட் 27-28 காலப்பகுதியில் வியட்நாமின் ஹனோயில் நடைபெற்ற 3 ஆவது இந்து சமுத்திர மாநாடு

மேற்படி மாநாட்டில் கௌரவ பிரதமர் வியட்நாமில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பங்கேற்பதற்கு இந்தப் பிரிவு வசதியளித்தது. கௌரவ பிரதமர் தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவில் சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்ற விடயத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் அங்கம் வகித்திருந்தார்.

குறித்த விஜயத்தின் உருப்படியான அம்சங்களுக்கு குறிப்பாக, மேற்படி மாநாட்டில் பிரதமரின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் முன்னர் நடைபெற்ற இருதரப்பு கூட்டங்களுக்கு

உதவி வழங்கப்பட்டது. அத்துடன், பிரதமர் மேற்படி மாநாட்டிற்கான ஏற்பாட்டுக் குழுத் தலைவராக விளங்கியதன் காரணமாக, அரச தலைவர்களையும் அரசாங்கங்களையும் அணுகிச் செயற்படுவதில் இந்தப் பிரிவானது பிரதமர் அலுவலகத்திற்கு ஒத்துழைப்பையும் நல்கியது.

5. **காலி கலந்துரையாடல், கொழும்பு இலங்கை 22-23 ஒக்டோபர் 2018**

இந்தப் பிரிவானது ஐக்கிய நாடுகள் மற்றும் மனிதவளப் பிரிவுடன் ஒருங்கிணைந்து பங்கேற்பாளர்களுக்கான விசாக்களை வழங்குவதனை வசதிப்படுத்தியது. பணிப்பாளர் நாயகம் மற்றும் உதவிப் பணிபாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

6. **இந்து சமுத்திர மாநாடு, பாலித் தீவு, இந்தோனேசியா 29-30 ஒக்டோபர் 2018 மற்றும் (AIS) அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் - 1-2 நவம்பர் 2018 - மனடோ, இந்தோனேசியா**

இந்தப் பிரிவானது மேற்படி நிகழ்வில் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களின் பங்கேற்பினை வசதிப்படுத்தியது. இந்தத் தூதுக் குழுவின் பிரிவின் பணிப்பாளர் நாயகம் அங்கமாக விளங்கியதுடன் பொருத்தமான தொடர் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார்

7. **நீலப்பொருளாதார உச்சி மாநாடு – 26-28 நவம்பர் 2018, நைரோபி, கென்யா**

மேற்படி மாநாடு கென்யா அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது சம்பந்தப்பட்ட ஏனைய முகவரமைப்புகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட இலங்கைத் தூதுக்குழுவின் பங்கேற்பினை இந்தப் பிரிவு வசதிப்படுத்தியுள்ளது. பிரிவின் பணிப்பாளர் இலங்கைத் தூதுக்குழுவின் அங்கமாக விளங்கி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் தொடர் நடவடிக்கையும் முன்னெடுத்துள்ளார்.

8. **ஐக்கிய நாடுகள் சபை UNODC/ சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) கடல்சார் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பான சர்வதேச சட்ட அம்சங்கள் மற்றும் நியமங்களை நடைமுறைப்படுத்துதல் மீதான உப பிராந்திய செயலமர்வு, 27-29 நவம்பர், இலண்டன்**

ஐக்கிய நாடுகள் சபையின் (DC) பயங்கரவாத தடுப்புக் கிளை சர்வதேச கடல்சார் அமைப்புக்களுடன் (IMO) இணைந்து "சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) கடல்சார் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பான சர்வதேச சட்ட அம்சங்கள் மற்றும் நியமங்கள்" எனும் தொனிப்பொருளில் பங்களாதேஷ், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான உப பிராந்திய செயலமர்வொன்றை ஐக்கிய

இராச்சியத்தின் இலண்டன் மாநகரில் 2018 நவம்பர் 27 முதல் 29 வரை ஏற்பாடு செய்திருந்தது. பிரிவின் உதவிப் பணிப்பாளர் செயலமர்வுக்கான இலங்கைத் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்ததுடன் இது சம்பந்தமான தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது,

9. காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகள் பணிச்சட்ட உடன்படிக்கையுடன் தொடர்புடைய தரப்பினர் மாநாடு (COP24) – கட்டோவைஸ், போலந்து

இந்தப் பிரிவானது மேற்படி மாநாட்டின் இலங்கையை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழுவொன்றின் பங்கேற்பினை வசதிப்படுத்தியது. பிரிவின் உதவிப் பணிப்பாளர் தூதுக் குழுவில் அங்கம் வகித்தார். தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டு நிருவாகப் பிரிவு

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள்/ பணி அலுவலகங்கள் ஆகியவற்றின் நாளாந்த செயற்பாடுகள் தொடர்பில் வேண்டப்படும் நிதி, மனித வளங்கள் மற்றும் வழிகாட்டல் உள்ளடங்கலாக மூலவளங்களை வழங்குவதன் ஊடாக சீரான தொழிற்பாட்டினை வசதிப்படுத்துவதே வெளிநாட்டு நிருவாகப் பிரிவின் முதன்மைத் தொழிற்பாடாகும். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் காணப்படும் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை முகாமைசெய்தல், அத்துடன், அமைச்சுக்கும் உலகம் முழுவதும் காணப்படும் அதன் தூதரக வலையமைப்பிற்கும் இடையிலான நாளாந்த தொடர்பாடலை மேற்பார்வை செய்வதும் வெளிநாட்டு நிருவாகப்பிரிவின் பொறுப்புக்களும் அடங்குகின்றது.

தற்போது இலங்கை வெளிநாடுகளில் பின்வரும் இராஜதந்திர தூதரகங்களையும் துணை அலுவலகங்களையும் நிருவகித்து வருகின்றது:

தூதரகங்கள்/ உயர் ஸ்தானிகராலங்கள் – 50
ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தர தூதரகங்கள் – 02
பிரதி உயர் ஸ்தானிகராலயம் – 01
பிரதிநிதி அலுவலகம் – 01
கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகங்கள் – 13
மொத்தம் - 67

குறிப்பு:- சைப்பிரஸில் உள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதற்கும், சைப்பிரஸுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்குமான எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டு, சைப்பிரஸில் உள்ள நிகோசியாவில் புதிய தொழில் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தை திறப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் கொன்சல் ஜெனரல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

1. I. இலங்கைக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களைக் கையகப்படுத்தலும் பராமரித்தலும்

I. அசையாச் சொத்துக்கள்

வெளிநாட்டு நிருவாகப் பிரிவானது, வெளிநாடுகளில் இயங்கி வரும் இலங்கைத் தூதரகங்கள்/ துணை அலுவலகங்களுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு வருடமும் வெளிநாடுகளில் உள்ள எமது தூதரகங்களின் பயன்பாட்டிற்கென குறைந்த பட்சம் இரண்டு புதிய சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்தது. 2018 ஆம் ஆண்டில், தற்போது கைவசமுள்ள சொத்துக்களை அவசரமாக புனரமைப்புச் செய்வதற்கு/ நிர்மாணிப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இது சம்பந்தமாக, 23 தூதரகங்களின் சொத்துக்கள் இலங்கை ரூபா 187,703,579.26 மொத்த ஆகுசெலவில் புனரமைக்கப் பெற்றன.

அமைச்சரவையின் அல்லது அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானங்களுக்கு அமைவாக, தேவையான நிதி வசதி திறைசேரி ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக்கள், புனர்நிர்மாணங்கள் மற்றும் சீரமைப்புக்கள் குறித்த விபரங்கள்

இல	விவரணம்	மதிப்பிடப்பட்ட தொகை (இலங்கை ரூபா)
01	**பிரசெல்ஸ் – உத்தியோகபூர்வ வதிவிடம், பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடகக் கட்டிடச் சீரமைப்புக்கள் - உத்தியோகபூர்வ வதிவிட சீரமைப்புக்கள் - உத்தியோகபூர்வ வதிவிடத்திற்கான நுழைவாயில் அமைத்தல் - பணித்துறைப் பதிவேடக சன்னல் திரைகளையும் திரைச்சீலைகளையும் பதிலீடு செய்தல் - பணித்துறைப் பதிவேடக கதவு, சன்னல்களின் நழுவடைப்புச் சட்டங்களைப் பதிலீடு செய்தல். - பணித்துறைப் பதிவேடகக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ வதிவிடம் ஆகியவற்றைப் புனரமைத்தலும் உத்தியோகபூர்வ வதிவிடத்திற்கென சூரிய ஒளிபடாதவாறு சரிப்படுத்தக் கூடிய கூரையொன்றைப் பொருத்துதலும்.	24,045,329.00
02	**ஒட்டாவா – உத்தியோகபூர்வ வதிவிடம்** - உத்தியோகபூர்வ வதிவிடப் புனரமைப்பு - பணித்துறைப் பதிவேடகத்தில் புதிய தொலைபேசி/ இடைச்செய்தித் தொடர்பு முறையொன்றை நிறுவுதல்	24,803,881.00
03	**கெய்ரோ – பணித்துறை பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடகப் புனரமைப்பு	812,646.00

04	**பாரிஸ் – பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடக மத்திய வெப்பமூட்டல் முறைமை சீரமைப்புக்கள்	520,000.00
05	**பேர்லின் – பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடக கைப்பிடிச் சுவர் புனரமைப்பு	9,436,194.00
06	**புதுடில்லி – உத்தியோகபூர்வ வதிவிடம், பணித்துறைப் பதிவேடகம் மற்றும் உத்தியோகத்தர் விடுதி** - உத்தியோகபூர்வ வதிவிட சீரமைப்புக்கள் - உத்தியோகத்தர் விடுதியில் உள்ள நான்கு மாடிக்கட்டிடத்தில் உள்ள சன்னல் திரைகளைச் சீரமைத்தலும் கட்டிடத்திற்கு வர்ணம் தீட்டுதலும் - சீரமைப்புக்கு/ பழுதுகளைச் செப்பனிடுவதற்கு முன்னர் பணித்துறைப் பதிவேடக மின் மாற்றிகளையும் மின்சக்தி வழங்கல் முறைமையின் மின் விநியோக முகப்புப் பலகைகளையும் பரிசோதித்தல் - பணித்துறைப் பதிவேடக மற்றும் உத்தியோகபூர்வ வதிவிட தரைகளைச் சுத்தம் செய்தலும் பளபளப்பாக்கலும் - பணித்துறைப் பதிவேடக மத்திய குளிரூட்டி இயந்திரத் தொகுதியைச் சீரமைத்தலும் செப்பனிடலும்.	10,223,321.00
07	**சென்னை – உத்தியோகபூர்வ வதிவிடம் மற்றும் பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடக சூரியசக்தி கருவிகளை நிறுவுதல் - பணித்துறைப் பதிவேடகக் கட்டிடம் மற்றும் பிரதி உயர் ஸ்தானிகர் வதிவிடத்தில்	6,427,474.50

	கண்காணிப்பு கமெராவைப் பொருத்துதல்.	
08	**மும்பை – பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடக தரையைச் சீரமைத்தல்	888,561.00
09	**ஜகார்த்தா – பணித்துறைப் பதிவேடகம்** - தூதரக வளாகப் பின்புற நிலப்பகுதியில் சாந்து பூசுதல்	1,201,596.00
10	**தெஹ்ரான் – பணித்துறைப்பதிவேடகம் (Chancery)** - புதிய பணித்துறைப் பதிவேடகத்தைப் பிரிவிடல் செய்தல்	1,490,000.00
11	**டோக்கியோ – பணித்துறைப் பதிவேடகம் (Chancery)** - பணித்துறைப் பதிவேடக வெப்பமூட்டல் மற்றும் குளிராக்கல் முறைமைகளைப் பதிலீடு செய்தல் - பணித்துறைப் பதிவேடக 2 ஆம் மாடியில் தரையமைத்தல் - பணித்துறைப் பதிவேடகத்தில் புதிய தொலைபேசி முறைமையை நிறுவுதல்	13,788,376.00
12	**குவைத் – பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடகத்தில் கண்காணிப்புக் கமெரா முறையை நிறுவுதல்	526,333.36
13	**கோலாலம்பூர் – உத்தியோகபூர்வ வதிவிடம்** - உத்தியோகபூர்வ வதிவிடத்தை உள் அலங்காரம் செய்தலும் தேவையான சாமான்கள் கொண்டு நிறைத்தலும் - உத்தியோகபூர்வ வதிவிட புணரமைப்பு/ மெருகூட்டல்	8,056,920.00
14	**ஹேக் – பணித்துறைப் பதிவேடகம்**	

	- புதிய பணித்துறைப் பதிவேடகத்தில் (New Chancery) பாதுகாப்பு அபாய அறிவிப்பு மற்றும் கண்காணிப்பு கமெரா முறை ஆகியவற்றை நிறுவுதல்	6,603,826.00
15	**மஸ்கட் – பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடகத்தில் கண்காணிப்பு கமெரா முறையினை நிறுவுதல்	584,000.00
16	**பிரிட்டோரியா – பணித்துறை பதிவேடகம் உத்தியோகத்தர் விடுதி** - பணித்துறைப்பதிவேடகம் மற்றும் உத்தியோகத்தர் விடுதி ஆகியவற்றைச் சீரமைத்தல்	904,435.00
17	**துபாய் – பணித்துறைப் பதிவேடகம்** - பணித்துறைப் பதிவேடகத்திற்கு புதிய பிரதான வாயிற் கதவொன்றை நிறுவுதல்	1,291,395.00
18	**ஜெனீவா – உத்தியோகபூர்வ வதிவிடம்** - உத்தியோகபூர்வ வதிவிட வாயிற்கதவைச் சீரமைத்தல் - உத்தியோகபூர்வ வதிவிடத்தைப் புனரமைத்தல் - உத்தியோகபூர்வ வதிவிடத்திற்கென திரைச்சீலைகளைப் பொருத்துதல் - உத்தியோகபூர்வ வதிவிட மின்சார மின்னோட்டக் கம்பி அமைப்பு முறையைப் பதிலீடு செய்தல்	13,795,708.84
19	**றியாத் – பணித்துறைப்பதிவேடகம்** - பணித்துறைப்பதிவேடகத்தில் தீவிர கண்காணிப்பு கமெரவைப் பொருத்துதல்	1,348,515.00
20	**லண்டன் – உத்தியோகபூர்வ வதிவிடம் பணித்துறைப் பதிவேடகக் கட்டிடம் மற்றும் உத்தியோகத்தர் விடுதி**	11,592,951.00

	- உயர் ஸ்தானிகராலயப் பின்புறத்தைச் சீரமைத்தல் - உயர் ஸ்தானிகராலய அலுவலகம், பிரதான மண்டபம் மற்றும் பணித்துறைப்பதிவேடக நூலகம் ஆகியவற்றை புனரமைத்தல்	
21	**நியூயோர்க் – பணித்துறைப்பதிவேடகம் (Chancery)** - பணித்துறைப் பதிவேடக வளாகத்தைச் சீரமைத்தல்	3,193,025.00
22	**வாஷிங்டன் – உத்தியோகபூர்வ வதிவிடம், பணித்துறைப்பதிவேடகம் மற்றும் பழைய பணித்துறைப் பதிவேடகக் கட்டிடம்** - பழைய பணித்துறைப் பதிவேடகத்திற்கு வர்ணம் தீட்டுதல் - பணித்துறைப் பதிவேடகத்தில் உள்ள சிறிய வெப்பமூட்டல் முறைமையைப் பதிலீடு செய்தல் - தூதரகத்திற்குச் சொந்தமான 3 சொத்துக்களைச் சீரமைத்தல்/ விருத்தி செய்தல் - பணித்துறைப் பதிவேடக கீழ் நில வடிகாலமைப்பு முறைமையைச் சீரமைத்தல் - உத்தியோகபூர்வ வதிவிடத்தில் உள்ள கட்டட மேற்பார்வைப் பொறுப்பாளரின் அறை மற்றும் குளியலறையைச் சீரமைத்தல்	45,234,062.00
23	**நிக்கோசியா – பணித்துறைப் பதிவேடகம்** - புதிதாக தாபிக்கப் பெற்றுள்ள பணித்துறைப்பதிவேடகத்தில் தொலைபேசி இடைத்தொடர்பு அமைப்பு, தொலைநகல் மற்றும் இணையத்தள முறைமையை நிறுவுதல்	935,029.56

	மொத்தம்	187,703,579.26

நியூயோர்க்கிலும் பிரேசிலியாவிலும் உள்ள இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான கட்டிடச் சொத்துக்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. உரிமை மாற்றுப் பத்திரங்கள் 2018 மே மாதம் கைச்சாத்திடப்பட்டன.

II. **அசையும் சொத்துக்கள்**

அ. **<u>வாகனங்கள்</u>**

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்களுக்கென புதிய வாகனங்கள் மாற்றீடு செய்யும் போது அல்லது புதிய வாகனங்கள் வேண்டப்படும் போது, வெளிநாட்டு நிருவாகப் பிரிவானது திறைசேரியுடன் கலந்தாலோசித்தே வாகனக் கொள்வனவை வசதிப்படுத்தி வருகின்றது. வெளிநாடுகளில் இயங்கி வரும் தூதரகங்களின் பாவனைக்கென சொல்லப்பட்ட காலப்பகுதியில் பதினைந்து (15) வாகனங்களை ரூபா 111,688,674.46 மொத்த ஆகு செலவில் கொள்வனவு செய்வதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றது.

நியூயோர்க், துபாய், பிரிட்டோரியா, இஸ்லாமாபாத், பெய்ரூத், கோலாலம்பூர், ஹேக் ஆகிய நகரங்களில் உள்ள தூதரகங்களில் பணியாற்றி வரும் பதவியணியினருக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான வேண்டுகோள் திறைசேரியின் பரிசீலனைக்கென சமர்பிக்கப்பட்டுள்ளது.

ஆ. ஏனைய மூலதனச் சொத்துக்கள்

வெளிநாடுகளில் உள்ள பல்வேறு தூதரகங்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களின் பேரில், 2018 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் ரூபா 133,615,559.63 ஆகு செலவில் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கும், பொறித் தொகுதி, இயந்திரதாதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கையகப்படுத்துவதற்குமான அங்கீகாரத்தை அமைச்சு வழங்கியுள்ளது.

II. வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்களுக்கென தளபாடங்கள், உபகரணங்கள் முதலியன போன்ற மூலதனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதனை வடிவமைக்கும் வகையில், அமைச்சு 2017 ஆம் இலக்க 2018.08.19 ஆம் திகதிய அமைச்சின் அறிவுறுத்தல் தொடர் (MS) சுற்றறிக்கையினை வெளியிட்டுள்ளது. அதன் பிரகாரம், சொல்லப்பட்டுள்ள சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகும் வண்ணம் தூதரகங்கள்/ துணை அலுவலகங்கள் அறிவுறுத்தப்பட்டன.

2. கணக்காய்வுப் பரிசோதனைகள்

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்களிலான கிரமமான கணக்காய்வுப் பரிசோதனை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஆலோசனையுடன் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா, கனடா, கொரியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, அவுஸ்திரியா, பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இயங்கி வரும் தூதரகங்கள்/ துணை அலுவலகங்களில் இத்தகைய கணக்காய்வுப் பரிசோதனைகள் நடாத்தப் பெற்றன.

3. உத்தியோக பூர்வ பிரயாணங்களை வசதிப்படுத்தல்

வெளிநாட்டு நிருவாகப் பிரிவின் அதிகார வரம்பின் கீழ் இயங்கி வரும் பிரயாண அலகானது, 2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் அமைச்சின் 140 உத்தியோகபூர்வ விஜயங்களுக்கான விசாக்கள் மற்றும் விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதற்கு வசதியளித்ததுடன், குறித்த காலப்பகுதியில், 282 அலுவலர்களுக்குத் தேவையான பிரயாணப்படிகள் மற்றும் ஏனைய உரித்துகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கவும் ஏற்பாடு செய்திருந்தது. பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த அரசாங்க அலுவலர்களுக்கான விசாவை வசதிப்படுத்தும் பொருட்டு 2,200 மூன்றாம் தரப்பு குறிப்புக்களும் (Third Party Notes) வழங்கப்பட்டன.

4. பாதுகாப்பு அஞ்சல் பிரிவு

பாதுகாப்பு அஞ்சல் பிரிவானது, வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்/ துணை அலுவலகங்களுக்கான இராஜதந்திர பொதிகளை அனுப்பி வைத்தல், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்/ துணை அலுவலகங்களினால் அனுப்பப்பட்டு வரும் இராஜதந்திரப் பொதிகளைச் சேகரித்தல் மற்றும் அமைச்சுடன் தொடர்புடைய பிரிவுகளுக்கு சேகரிக்கப்படும் இராஜதந்திரப் பொதிகளை விநியோகித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆகுசெலவைக் குறைப்பதற்கும், அஞ்சல் பொதிகளை குறித்த கால அடிப்படையில் விரைவாக விநியோகிப்பதனை உறுதிப் படுத்துவதற்கும் ஏதுவாக, தெரிவு செய்யப்பட்ட தூதரகங்களுக்கான இராஜதந்திரப் பொதிகளை அனுப்பி வைப்பதற்கான பொறுப்பையும் கூரியர் கம்பனியின் (Courier Company) உதவியுடன் அமைச்சு முன்னெடுத்தது.

5. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது, வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்/ துணை அலுவலகங்களில் இருந்தும், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏனைய அமைப்புக்கள் மற்றும் தனித்தன்மை வாய்ந்த நிறுவனங்களில் இருந்தும் நாளாந்த அடிப்படையில் 600-700 வரையிலான தொலைநகல்கள் மற்றும் மின்னஞ்சல்களைக்

கையாண்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் கடமை நேரங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அறிவுருத்தல்களுக்கிணங்க திருத்தியமைக்கப்பட்டுள்ளன. (வார நாட்களில் மு.ப 5.30 – பி.ப 8.00, சனிக்கிழமைகளில் மு.ப 5.30 பி.ப 9.00, ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 6.00 – பி.ப 8.00 பதவியணியினர் வேலை முறைப்பட்டியல் அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

6. **முன்னேற்ற அறிக்கை மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றைத் தயாரித்தல்**

வெளிநாட்டு நிருவாகப் பிரிவானது, வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் அமைச்சில் உள்ள அந்தந்த பிரிவுகளுடன் ஒருங்கிணைத்து, பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு மூன்றாம் காலாண்டுக்கான முன்னேற்ற அறிக்கையினையும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினையும் தயாரித்து வருகின்றது.

7. **பயணப்பொதிகளை பொதி செய்தல் & அனுப்பி வைத்தல் மற்றும் காப்புறுதி செய்தல் (தனிநபர் பலன்கள்)**

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில்/ துணை அலுவலகங்களில் வீட்டை அடிப்படையாகக் கொண்ட பதவியணியினரின் பாரம்மிக்க பயணப் பொதிகளை வசதிப்படுத்தும் செயல்முறையை வடிவமைக்கும் வகையில் 216 ஆம் இலக்க, 2018.10.19 ஆம் திகதிய அமைச்சின் அறிவுறுத்தல் தொடர் சுற்றறிக்கை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பான செலவீனத்தைக் குறைக்கும் பொருட்டு, பாரம்மிக்க பயணப் பொதிக்குப் பதிலாக, வீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள பதவியணியினருக்கென (இராஜதந்திர அலுவலர்கள் நீங்கலாக) முழுத் தொகைப் பணத்தை 2018.10.19 ஆம் திகதி தொடக்கம் செலுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8. **வீட்டை அடிப்படையாகக் கொண்ட அனைத்து அலுவலர்களுக்குமான தனி அறை ஒன்றை பொறுப்பேற்றல் மற்றும் ஒப்படைதல் குறித்த வழிமுறைகள் மற்றும் சரி பார்ப்பதற்கான பட்டியல்**

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்களைச் சேர்ந்த அனைத்து வீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள அனைத்து அலுவலர்களுக்குமான தனி அறையொன்றை பொறுப்பேற்றல் மற்றும் ஒப்படைத்தல் குறித்த வழிமுறைகள் மற்றும் சரிபார்ப்பதற்கான பட்டியலைக் குறித்துரைக்கும் 215 ஆம் இலக்க, 2018.07.17 ஆம் திகதிய அமைச்சின் அறிவுறுத்தல் தொடர் சுற்றறிக்கை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், வாடகை வைப்புக்களை உறுதிப்படுத்தத் தவறிய அலுவலர்களிடமிருந்து கூடுதலான கட்டணம் அறவிடப்பட்டதன் மூலம் அமைச்சினால் அரசாங்கத்திற்கு கணிசமான அளவிலான பணத்தைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

9. மனித வளங்களை முகாமை செய்தல்

மனித வளங்கள் மற்றும் தூதரக முகாமைத்துவப் பிரிவு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், வெளிநாட்டு நிருவாகப் பிரிவை மீள ஒழுங்கமைத்ததன் விளைவாக, மனித வள தூதரக முகாமைத்துவப் பிரிவானது 2018 நவம்பர் 19 ஆம் திகதி முதல் செயற்பட ஆரம்பித்தது. தேவைப்படும் மனித வளங்களையும் நாளாந்த செயற்பாடுகள் தொடர்பான வழிகாட்டலையும் வழங்குவதன் மூலம் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றை தடங்கலற்ற விதத்தில் செயற்பட வசதிப்படுத்துவதே இந்தப் பிரிவின் முதன்மை செயற்பாடாகும்.குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சிலவற்றின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு

I. எண் முறைப்படுத்தப்பட்ட மனித வளங்கள் தகவல் முறைமை

பதவியணியினரை ஒருங்கிணைத்தல் மற்றும் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்ளல் ஆகிய பணிகளை வசதிப்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டு நிருவாகப் பிரிவானது அமைச்சிலும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்/ துணை அலுவலகங்களிலும் இலக்கமுறைப்படுத்தப்பட்ட மனிதவள முகாமைத்துவ முறைமையை (Digitalized Human Resources Management System) முன்னெடுக்கும் செயல் முறையைப் பூர்த்தி செய்தது.

II. ஆட்சேர்ப்புகள்

இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கென ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், வெளிநாடுகளில் உள்ள எமது தூதரகங்களில் சேவையாற்றுவதற்கென அரச (பொது) முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் தனிப்பட்ட உதவியாளர்கள் ஆகியோரைத் தெரிவு செய்வதற்குமான திறந்த போட்டிப் பரீட்சைகளை வெளிநாட்டு நிருவாகப் பிரிவானது பரீட்சைகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடத்தி வருகின்றது.

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் III க்கென 19 அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ள வெளிநாட்டு நிருவாகப் பிரிவானது, இலங்கை வெளிநாட்டுச் சேவை அலுவலர்களுக்கான வினைத் திறமைகான தடைப் பரீட்சைகள் ஒன்று (I) மற்றும் இரண்டு (II) ஆகியவற்றை நடாத்துவதனை ஒருங்கிணைப்புச் செய்தது.

III. புதிய தூதுவர்களை நியமித்தல்

குறித்த காலப்பகுதியில் 17 தூதுவர்கள்/ துணை அலுவலகப் பிரதானிகள் நியமனம் செய்யப்பட்டனர்.

IV. வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களுக்கு ஊக்குவிப்பு பதவியணியினரை நியமித்தல்

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றுவதற்கென 29 அரச (பொது) முகாமைத்துவ உதவியாளர்களும் 21 தனிப்பட்ட உதவியாளர்களும் ஒரு (01) உபசரணை உதவியாளரும் நியமிக்கப்பட்டனர்.

V. இடமாற்றச் சபையினை நியமித்தல்

தாபனக் கோவையின் அத்தியாயம் – III, பிரிவு 3 இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இடமாற்றச் சபை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு அமைச்சில் சேவையாற்றும் இலங்கை வெளிநாட்டுச் சேவை அலுவலர்களைத் தெரிவு செய்தல் குறித்து வெளிநாட்டு அலுவலர்கள் அமைச்சின் செயலாளருக்குப் பரிந்துரைகளைச் செய்வதற்கான பொறுப்பு இடமாற்றச் சபைக்குரியதாகும்.

VI. பரீட்சை வடிவூட்டத்தை மீளக்கட்டமைத்தல்

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கான பொது முகாமைத்துவ உதவியாளர்களையும் தனிப்பட்ட உதவியாளர்களையும் நியமிப்பதற்கான நடத்தப்பட்டு வரும் போட்டிப் பரீட்சைகளின் வடிவூட்டத்தை மீளக் கட்டமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உபசரணைப் பிரிவு

உபசரணைப் பிரிவு

1. உபசரணைப்பிரிவின் தொழிற்பாடுகள் பின்வரும் பிரதான பகுதிகளாக வகைப்படுத்தப்படும்:

அ) கொண்டாட்ட நிகழ்வுகளை ஒன்றிணைத்தல்

ஆ) வெளிநாட்டு பிரதிநிதித்துவங்கள், ஐ.நா மற்றும் அதன் சிறப்பு முகவர்கள் மற்றும் இலங்கையின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட இராஜதந்திர பாதிப்பின்மைகள் மற்றும் சிறப்புரிமைகளைக் கண்காணித்தலும் ஏற்பாடு செய்தலும்

இ) இலங்கையிலுள்ள தூதரக தலைவர்களுக்கான ஒழுங்குகளைச் செய்தல் (கொழும்பில் உள்ள மற்றும் சமகால அங்கீகாரமுள்ள பிற தூதரகங்கள்)

ஈ) இலங்கையில் நடக்கும் சர்வதேச மாநாடுகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் உபசரணை ஒழுங்குகளைச் செய்தல்

2. **கொண்டாட்ட நிகழ்வுகள்:**

குறிப்பிட்ட காலகட்டத்தில் இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட கொண்டாட்ட நிகழ்வுகள்:

2.1 இலங்கைக்கான அதிமுக்கிய/முக்கிய விருந்தினர் வருகை

2.1.1	அரச தலைவர்கள்/ பிரதம மந்திரிகள்	பார்க்க: இணைப்பு I/I, I/II, I/III
2.1.2	வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் பிரதி வெளிநாட்டு அமைச்சர்கள்	
2.1.3	ஐ.நா உயரதிகாரிகள் மற்றும் பிற சர்வதேச நிறுவனங்கள்	
2.1.4	பயண இடைவழி வருகைகள்	
2.1.5	பிற வெளிநாட்டு உயரதிகாரிகள்	
2.1.6	கூட்டங்கள்/ மாநாடுகளுக்கான பிரதிநிதிகள்	

2.2 இலங்கை அதிமுக்கிய/முக்கிய விருந்தினர் விஜயங்கள்

2.2.1 மேன்மை தங்கிய ஜனாதிபதியின் விஜயங்கள் (இணைப்பு II)

2.2.2 மாண்புமிகு பிரதம மந்திரியின் விஜயங்கள் (இணைப்பு III)

2.2.3 கௌரவ வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் விஜயங்கள் (இணைப்பு IV)

2.2.4 கௌரவ துணை/இராஜாங்க வெ. அமைச்சரின் விஜயங்கள் (இணைப்பு V)

3. பாதிப்பின்மைகள் மற்றும் சிறப்புரிமைகள்

குறிப்பிட்ட காலப்பகுதியில் உபசரணைப் பிரிவினால் பாதிப்பின்மைகள் மற்றும் சிறப்புரிமைகளின் கீழ் செயப்படுத்தப்பட்ட பணிகள் வருமாறு;

3.1 இசைவுச் சான்றிதழ்கள் வழங்குதல்

3.1.1	வெளிநாட்டு தூதரகங்களுக்கு (50 சான்றிதழ்கள் கொண்ட 134 புத்தகங்கள்)	6700
3.1.2	சர்வதேச நிறுவனங்களுக்கு (50 சான்றிதழ்கள் கொண்ட 30 புத்தகங்கள்)	1500

3.2 சுங்க வசதிகள் – இறக்குமதிகள்

3.2.1	வெளிநாட்டு தூதரகங்களுக்கு	1450
3.2.2	சர்வதேச நிறுவனங்களுக்கு	250

3.3 சுங்க வசதிகள் – ஏற்றுமதிகள்

3.3.1	வெளிநாட்டு தூதரகங்களுக்கு	167
3.3.2	சர்வதேச நிறுவனங்களுக்கு	20

3.3 வாகனங்கள் ((இராஜதந்திர / ஐ.நா மற்றும் பிற நிறுவனங்கள்)

3.3.1	வாகனங்கள் விற்பனை	212
3.3.2	வாகனங்கள் பதிவுசெய்தல்	198
3.3.3	வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்	700
3.3.4	சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்	172
3.3.5	எரிபொருள் கூப்பன் புத்தகங்கள் வழங்குதல்	489

3.4 வீசாக்கள்

3.4.1	வெளிநாட்டு தூதர்களுக்கான வீசா – நுழைவு வீசா (இணைப்புVI)	759
3.4.2	வெளிநாட்டு தூதர்களுக்கான வீசா – வதிவிட வீசா– (இணைப்பு VII)	1274
3.4.3	சர்வதேச நிறுவனங்களுக்கான வீசா – நுழைவு வீசா (இணைப்பு VIII)	207
3.4.4	சர்வதேச நிறுவனங்களுக்கான வீசா – வதிவிட வீசா (இணைப்பு IX)	421

3.5 விமான நிலைய அனுமதிச்சீட்டுகள்

3.5.1	நிரந்தரமானவை – புதிதாக வழங்கப்பட்டவை	62

3.5.2	தற்காலிகமானவை (6 மாதங்களுக்கு) – புதிதாக வழங்கப்பட்டவை	10
3.5.3	நிரந்தரமானவை – புதுப்பித்தல்	94
3.5.4	தற்காலிகமானவை (6 மாதங்களுக்கு) – புதுப்பித்தல்	35
3.6	அதிமுக்கிய நபர் (VIP) கூடத்திற்கான அனுமதிகள்	
3.6.1	வெளிநாட்டுப் பயணிகள்	6316
3.6.2	உள்நாட்டுப் பயணிகள்	4894
3.7	இராஜதந்திர இசைவாணைகள் (இணைப்பு X)	
3.7.1	வெளிநாட்டு விமானங்களுக்கான அனுமதி (இராணுவ விமானங்கள்/ நாட்டுக்குச் சொந்தமானவை)	172
3.7.2	வெளிநாட்டுக் கப்பல்களுக்கான அனுமதி (இராணுவ விமானங்கள்/ நாட்டுக்குச் சொந்தமானவை)	40

3.8 அடையாள அட்டைகள் (இராஜதந்திரம் / ஐ.நா மற்றும் பிற நிறுவனங்கள்) 715

4. தூதர்கள் / கௌரவ உதவித்தூதர்கள் நியமனங்கள்

வெளிநாட்டுத் தூதுவர்கள்/ உயர்ஸ்தானிகர்கள் மற்றும் இலங்கை வதிவிடங்களை ஸ்தாபித்துள்ள வெளிநாடுகளில் நியமிக்கப்பட்ட தூதர்கள்/உயர்ஸ்தானிகர்கள் போன்றவர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கும் நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல் உபசரணைப்பிரிவின் பொறுப்பாகும். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கௌரவ தூதர்களை நியமிப்பதற்கும் இப்பிரிவே பொறுப்பாகும். இக்காலகட்டத்தில் இப்பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு:

4.1.	இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதர்களின் நியமனங்கள் (இணைப்பு XI)	27
	வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதர்களின் நியமனங்கள்	21
4.2	வெளிநாடுகளுக்கான இலங்கை கௌரவ தூதர்கள் நியமனங்கள் (இணைப்பு XII)	
4.2.1	நியமனங்கள்	16
4.2.2	பதவி நீட்டிப்புகள்	24
4.3	இலங்கைக்கான கௌரவ தூதர்களின் நியமனங்கள்	05

5. இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச மாநாடுகள்

சர்வதேச மாநாடுகளை நடத்துவதற்கேற்ற ஒரு கவர்ச்சிகரமான நிகழ்விடமாக, இலங்கையை மேம்படுத்துவதில் உபசரணைப்பிரிவானது ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. இவ்வகையில் இப்பிரிவானது, சம்பந்தப்பட்ட பிற அமைச்சுக்களால் ஒழுங்குசெய்யப்படும் வர்த்தக நிகழ்வுகளை, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள்/திணைக்களங்களுடன் ஒருங்கிணைக்கிறது.

அந்தமாதிரியான சர்வதேச மாநாடுகளுக்கான ஏற்பாடுகளையும் உபசரணைகளையும் செய்வதற்கான உதவிகளை அந்தந்த அமைச்சுக்கள்/முகவராண்மைகளின் உத்தியோகத்தர்களுக்கும் வழங்குகிறது

இணைப்பு I / I

நாட்டு தலைவர்கள்/ பிரதம மந்திரிகள்

1.	லத்வியக் குடியரசின் ஜனாதிபதி மேன்மை தங்கிய ரேய்மொன்ட்ஸ் வெஜோய்ன்ஸ் 2018 ஜனவரி 6 – 16 வரையில் இலங்கைக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்று மேற்கொண்டிருந்தார்
2.	2018 ஜனவரி 22-24 இல் சிங்கப்பூர் பிரதமர் மாண்புமிகு லீ ஹ்சீன் லூங்க் அவர்கள் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.
3.	2018 ஜனவரி 24-25 இல் இந்தோனேசிய குடியரசின் ஜனாதிபதி, மேன்மைதங்கிய ஜோகோ விடோடோ இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டார்
4.	2018 ஜூலை 12-13 இல் தாய்லாந்து இராஜ்ஜியத்தின் பிரதம மந்திரி மாண்புமிகு ஜெனரல் பிரயுத் சான் ஒ சா அவர்களின் வருகை
5.	2018 ஜூன் 11-12 இல் முன்னாள் யப்பானிய பிரதம மந்திரி, கௌரவ யுகியோ ஹடொயமா அவர்களின் இலங்கை வருகை
6.	2018 ஜனவரி 25-28 இல் கட்டார் அரசர் மேன்மைதங்கிய எமிர் அவர்களின் இலங்கைக்கான தனிப்பட்ட விஜயம்

இணைப்பு I / II

வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் பிரதி வெளிநாட்டமைச்சர்கள்

1.	2018 ஜனவரி 4-6, யப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், கௌரவ தாரா கோனோ அவர்களின் விஜயம்
2.	2018 ஜூலை 31 இலிருந்து ஆகஸ்ட் 01 வரையில் ஈரானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் இலங்கை விஜயம்
3.	2018 நவம்பர் 8-9 இல் தாய்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ டொன் பிரமுத்வினையின் இலங்கை விஜயம்
4.	2018 மார்ச் 27-29 காலப்பகுதியில் ஸ்லோவேக்கிய குடியரசின் துணைப் பிரதம மந்திரி, மாண்புமிகு பீட்டட் கஸிமீரின் விஜயம்
5.	2018 மே 7-8 இல் சேர்பியாவின் முதலாவது துணைப் பிரதம மந்திரி கௌரவ இவிக்கா டேசிட் அவர்களின் விஜயம்

ஐ.நா மற்றும் பிற சர்வதேச நிறுவனங்களிலிருந்து பிரமுகர்கள்

1.	2018 ஜூலை 25-27 இல் போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் உலகளாவிய விற்பன்னர் குழுமத்தின் கூட்டம்
2.	2018 ஏப்ரல் 5-10 வரையில் Green Climate Fund இன் நிர்வாக இயக்குனரின் உத்தியோகபூர்வ விஜயம்
3.	2018 ஆகஸ்ட் 1-4 வரையில் பொதுநலவாய செயலாளர் நாயகம், மாண்புமிகு பற்றீசியா ஸ்கொட்லான்ட், கியூ.சி அவர்களின் விஜயம்

பிற பிரமுகர்கள்

1.	2018 ஜனவரி 14-17 வரையில் இந்தியாவின் சட்டம் மற்றும் நீதி, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர், கௌரவ ரவி ஷங்கர் பிரசாத் அவர்களின் வருகை
2.	2018 ஜனவரி 24-26 இல் யப்பான் வர்த்தக சம்மேளனம் மற்றும் தொழிற்றுறை மற்றும் டோக்யோ வர்த்தக சம்மேளனம் மற்றும் தொழிற்றுறையைச் சேர்ந்த குழுவினர் வருகை தந்தனர்.
3.	இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தில் பங்குபற்றுவதற்காக யப்பான்- இலங்கை பாராளுமன்ற நட்புக்குழுவின் தலைவர், கௌரவ வத்தாரு தக்கஷிட்டா அவர்களின் வருகை
4.	2018 பெப்ரவரி 19-23 இல் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஜேம்ஸ் சென்சென்பிரென்னர் வருகை
5.	2018 பெப்ரவரி 4-7 இல் சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் துணைத் தலைவர், கௌரவ ஹான் கைட்டின் உத்தியோகபூர்வ விஜயம்.
6.	2018 பெப்ரவரி 1-4 வரையில் சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக்குழுவின் துணைத்தலைவர் திரு வான் க்வின்மின் மற்றும் குழுவின் இலங்கை விஜயம்
7.	2018 ஜூன் 20-22 இல் நோர்வே அரச செயலாளரின் உத்தியோகபூர்வ விஜயம்
8.	2018 ஜூன் 10-13 பின்லாந்து பொருளாதார அலுவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு இராஜாங்க துணை அமைச்சரின் செயலாளர் கௌரவ பெட்ரி பெல்டொனின் தலைமையில் பின்லாந்து வணிகக்குழு ஒன்றின் இலங்கை விஜயம்.
9.	சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவகத்தின் (RRI) இயக்குனர் நாயகம் டாக்டர் மத்யூ மொரெல் அவர்களின் விஜயம்
10.	2018 ஜூலை 23-25 குவைத் வெளிநாட்டமைச்சு மற்றும் ஆசிய விவகாரத் திணைக்களத்தின் அமைச்சரின் உதவியாளர் கௌரவ அலி சுலைமான் அல் சயீத் அவர்களின் உத்தியோகபூர்வ விஜயம்
11.	2018 ஆகஸ்ட் 20-22 ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர், கௌரவ இட்சுனோரி ஒண்டேரா அவர்களின் விஜயம்.
12.	இல் வெளிநாட்டுக்கடன் மற்றும் அதுதொடர்பான பிற சர்வதேச நிதிசார் கடமைகள் பற்றியதிலான சுயாதீன விற்பன்னரான திரு ஜுவான் பப்லோ பொஹோஸ்லவஸ்கி அவர்கள் 2018 செப்டெம்பர் 03-11 காலப்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயத்தை

	மேற்கொண்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகள்

1.	உலக சுகாதார தினம் 2018 ஏப்ரல் 7 ஆம் திகதி
2.	தெற்காசிய கூட்டுறவு சுற்றாடல் செயற்றிட்டத்தின் ஆளும் குழுவின் (SACEP)14 ஆவது கூட்டம்.
3.	தேசிய வெசாக் கொண்டாட்டம் – புத்த ராஷ்மி 2018
4.	BIMSTEC இணைந்த தொழிற்பாட்டுக்குழு வின் 8 ஆவது கூட்டம் – 10 ஜூலை 2018
5.	தேரவாத பௌத்த பல்கலைக்கழகங்களின் சர்வதேசக் கூட்டமைப்பின் 5 ஆவது சர்வதேச மாநாடு – 2 ஆகஸ்ட் 2018
6.	Eval Colombo 2018 – பாராளுமன்ற உறுப்பினர்களின் உலகளாவிய நிகழ்வு – 19-21 செப்டெம்பர் 2018

இருதரப்பு மாநாடுகள்

1.	ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வு – 18 ஜனவரி 2018
2.	இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான முதலீட்டு ஊக்கப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கை பற்றியதில் முடிவெடுத்தல் – 20 பெப்ரவரி 2018
3.	இலங்கை தாய்லாந்து இருதரப்பு ஆலோசனையின் 4 ஆவது அமர்வு (தாய்லாந்து அரசியல் ஆலோசனை)
4.	உலக சுகாதார தினம் 2018 ஏப்ரல் 7 ஆம் திகதி
5.	2 ஆவது இலங்கை – ஓமான் அரசியல் ஆலோசனைகள் – 15 ஆகஸ்ட் 2018

இணைப்பு II

மேன்மை தங்கிய ஜனாதிபதியில் வெளிநாட்டு விஜயங்கள்

இல.	நாடு	கால வரையறை	நோக்கம்
1	**இந்தியா**	10-11 மார்ச் 2018	சர்வதேச சூரியசக்தி உச்ச மாநாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயம்
2	**ஜப்பான்**	12-16 மார்ச் 2018	இராஜாங்க விஜயம்
3	**பாகிஸ்தான்**	22-24 மார்ச் 2018	தேசிய தினக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதற்கான உத்தியோகபூர்வ விஜயம்
4	**ஐக்கிய இராஜ்ஜியம்**	16-21 ஏப்ரல் 2018	CHOGM 2018 இன் உத்தியோகபூர்வ விஜயம்

5	ஈரான்	12-15 மே 2018	இராஜாங்க விஜயம்
6	இத்தாலி	14-16 ஜூலை 2018	வனவியல் குழு மீதான உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் (FAO) 24 ஆவது அமர்வு
7	ஜோர்ஜியா	16-18 ஜூலை 2018	அரசாங்க கூட்டுடைமையை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ வருகை
8	நேபாளம்	29 ஆகஸ்ட் – 02 செப்டெம்பர் 2018	BIMTEC இராஜாங்க விஜயமும் உச்ச மாநாடும்
9	அமெரிக்கா	22-27 செப்டெம்பர் 2018	ஐ. நா பொதுச்சபை

இணைப்பு III

மாண்புமிகு பிரதம மந்திரியின் வெளிநாட்டு விஜயங்கள்

இல	நாடு	கால வரையறை	நோக்கம்
1	சிங்கப்பூர்	01 - 02 மார்ச் 2018	உத்தியோகபூர்வ விஜயம்
2	சிங்கப்பூர்	08 - 10 ஜூலை 2018	உத்தியோகபூர்வ விஜயம் (உலக நகரங்கள் உச்சி மாநாடு)
3	வியட்நாம்	25 - 28 ஆகஸ்ட் 2018	உத்தியோகபூர்வ விஜயம் (இந்துசமுத்திர மாநாடு)
4	வியட்நாம்	10 -13 செப்டெம்பர் 2018	உத்தியோகபூர்வ விஜயம் (ஆசியான் பற்றியதில் உலக பொருளாதார மன்றம்)

இணைப்பு IV

கௌரவ வெளிநாட்டமைச்சரின் வெளிநாட்டு விஜயங்கள்

இல.	நாடு	காலம்	நோக்கம்
1	இந்தியா	10-14 ஜனவரி 2018	நாலந்தா பல்கலைக்கழக விஜயம்
2	ஜப்பான்	10-17 மார்ச் 2018	மேன்மைதங்கிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயம்
3	ஜெனீவா	19-24 மார்ச் 2018	மனித உரிமைகள் கழக அமர்வு
4	ஜேர்மனி	15-17 ஏப்ரல் 2018	பேர்லினில் சக்தி தொடர்பான பேச்சுவார்த்தை
5	பிரித்தானியா	18-24 ஏப்ரல் 2018	CHOGM
6	ஈரான்	10-14 மே 2018	மேன்மைதங்கிய ஜனாதிபதியின் இராஜங்க விஜயம்
7	செக் குடியரசு	15-20 மே 2018	இருதரப்பு விஜயம்
8	பூட்டான்	6-10 ஜூன் 2018	இருதரப்பு விஜயம்
9	உகண்டா	13 - 20 ஜூன்	இருதரப்பு விஜயம்
10	கென்யா	24-28 ஜூன்	இருதரப்பு விஜயம்
11	சிங்கப்பூர்	3-5 ஆகஸ்ட்	ஆசியான் பிராந்திய மன்றம்
12	இந்தோனேசியா	6-8 ஆகஸ்ட்	பாலி செயன்முறையின் அமைச்சு ரீதியிலான மாநாடு
13	சிங்கப்பூர்	19-24 ஆகஸ்ட்	இருதரப்பு விஜயம்
14	மலேசியா	27 ஆகஸ்ட்	இருதரப்பு விஜயம்
15	நியூயோர்க்	22-30 செப்டெம்பர்	UNGA அமர்வு
16	பாலி, இந்தோனேசியா	24-30 அக்டோபர்	சமுத்திர மாநாடு

இணைப்பு V

கௌரவ இராஜாங்க அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்கள்

இல	நாடு	காலம்	நோக்கம்
1	**இந்தியா**	17-19 ஜனவரி 2018	உத்தியோகபூர்வ விஜயம் Rosina பேச்சுவார்த்தை
2	**போலந்து**	14-19 பெப்ரவரி 2018	போலந்து அரசாங்க அழைப்பு
3	**அவுஸ்திரேலியா**	23-30 மார்ச் 2018	அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பு (வர்த்தக ஊக்குவிப்புச் செயற்பாடுகள்)
4	**கட்டார் மற்றும் ஜோர்டான்**	08-13 மே 2018	சட்டவிரோத குடியேற்றம், உணவுத்தடை நீக்கம், இலங்கைப் பாடசாலை ஊழியர் பற்றிய கலந்துரையாடல்
5	**சீனா**	24 ஜூன் -1 ஜூலை	சீன அரசாங்கத்தின் வேண்டுகோள்
6	**எல் சல்வடோர்**	3-11 ஜூலை 2018	உத்தியோகபூர்வ விஜயம் (இலங்கைக்கும் எல் சல்வடோருக்கும் இடையிலான அரசியல் மற்றும் கூட்டுறவு பற்றியதில் 1 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை
7	**நேபாளம் – காத்மண்டு**	27 ஆகஸ்ட் – 2 செப்டெம்பர் 2018	16ஆவது BIMSTEC உச்சி மாநாடு
8	**ஸ்லொவேனியா, எத்தியோப்பியா மற்றும் போத்துக்கல்**	08 – 20 செப்டெம்பர் 2018	8-12 ஸ்லொவேனியா – Blood Forum 13-16 எத்தியோப்பியா – உண்மை கண்டறியும் இலக்கு மற்றும் பொருளாதார மேம்பாடு 17-20 போத்துக்கல் – பொருளாதார வர்த்தக ஊக்குவிப்பு செயற்பாடுகளை மேம்படுத்தல்
9	**ஜமைக்கா, கியூபா மற்றும் டொமினிக்கன்குடியரசு**	3-12 அக்டோபர் 2018	உத்தியோகபூர்வ விஜயம்
10	**ருவாண்டா**	21-25 அக்டோபர் 2018	உத்தியோகபூர்வ விஜயம்

இணைப்பு IX

	ADB	Col ombo Plan	FAO	ICAC	IFAD	ILO	IMF	IOM	IWM	JICA	SAGEP	UNHCR	UNDP	UNFPA	UNOPS	UNICEF	AMNESTY	IFC	UNHABITAT	WFP	WHO	World Bank	மொத்தம்
ஐரோ		4		2					8	3	3	3	4							1	1		29
பெல்ஜி		1			2					1			1					3				2	10
ஜெர்ம				1		3	2	2	2	2						1		2			1		16
ஸ்பெய்	1	4			1	1			7	1						5		1			3	1	25
சுவ	1	3	1	1	1	1		1	6	6			9				3	4		1		15	53
ஜப்ப			1	6		3		4	5	7			7		4					1	1	5	44
ஐரோவ		1		4	5			2	11	3	1		10					1	4	1	1	4	48
ஆஸ்ரே	1			10		1			4	2	5	1	4	1		9	3	4		2		4	51
கொரிய			1	5				4	5	5			7	1	3	1				2		2	36
அங்	1			2		1		5	1	3	3		8	1	1	2			1	1		4	34
நெத		2	1	1	3		2	4	9				6		3	8	5						44
டிபெ		3	2	10				2	7	2									1	2	2		31
மொத்தம்	4	18	6	42	12	10	4	24	65	35	12	4	56	3	11	26	11	15	6	11		37	421

இணைப்பு
VIII

சர்வதேச நிறுவனங்களுக்கான நுழைவு வீசா

	ADB	COLOMBO PLAN	FAO	I CRC	I FRC	I LO	I MF	I OM	I WM	J I CA	SACEP	UNFPA	UNHCR	UNDP	UNFPA	UNOPS	UN CEF	AMNESTY	UNHABI TAT	WFP	WHO	WORLD BANK	I FC	TOTAL
Jan										2			1				1							4
Feb										3												1		4
Mar		1		2		1			4	3							7					8		26
Apr		2		6					5								5	1						19
May			1	4				2	4			3		3							2	1	1	21
Jun		1		8		4		2	3	2		1		3								2		26
Jul			1	5					4	2	2	1	2	3				3		2		4	4	33
Aug		1		2		1				3	1			7						1		1		17
Sep				1				5	2	3	3			2		3	1			2				22
Oct							2	1	2	1						2	1	5		1				15
Nov			2	4						1								1			1			9
Dec									8	2				1										11
TOTAL		5	4	32		6	2	10	32	22	6	5	3	19		5	15	10		6	3	17	5	207

வெளிநாட்டு தூதர்களுக்கான வதிவிட வீசா **இணைப்பு VII**

	ஜன	பெப்	மார்ச்	ஏப்ர	மே	ஜூ	ஜூலை	ஆகஸ்	செப்	அக்ட்	நவம்	டிசம்	மொத்தம்
அப்கானிஸ்தான்		3						1		1		2	
அவுஸ்திரேலியா	5							9	9	3		7	
பங்களாதேசம்	9	1	3	5	1	4	7			3			
பிரித்தானிய மன்றம்			9	2	10	7	10	4		18			
பிரேசில்	2								4				
கனடா		1		13				4	9				
சீனா		1	1	3	2	4	2	11	5		1	3	
கியூபா	2								1				
எகிப்து	4	1			1		1	1	2				
ஐ.ஒன்றியம்		6	2	6		6	2	15	1	3	1	1	
பிரான்ஸ்	2	5	5	1	8	12	4	10	16	7	2		
ஜேர்மனி	2	2	8	3	7		5	9	3	3	1	1	
ஹோலி சீ			1										
இந்தியா	36	10	57	18	8	17	18	15	15	4	17	12	
இந்தோனேசிய	4	7		1	5					4	2	3	
ஈரான்	1	1	1		6				11	2		4	
ஈராக்						11	3			4	1		
இத்தாலி	4	3	5			1		1	9	3	3		
ஜப்பான்	2	5	11	1	10	1	1	4	1	4		2	
கொரியா	2	9	10	8	2	3	6	14	3	4		6	
குவைத்		1				5	1	2	3				
லிபியா		1	5	2		1		4	10		1		
மலேசியா	1	3						4		1			
மாலைதீவு	11	5	12	4	9	7	21	2	5	2	1	4	
மெக்சிகோ									1				
மியன்மார்								1		3			
நேபாளம்				4		3							
நெதர்லாந்து	6		1	1				1	2				
நைஜீரியா	4			2			8	8		1			
நோர்வே	1	1	2					4	1	2			
ஓமான்	5				1		1						
பாகிஸ்தான்	11		1	3	1	7		12	13	4			
பாலஸ்தீனம்		7	7							4			
கட்டார்			1					8	3	1			
ரஷ்யா		5	1	1	6		6	4	3	2	2	2	
ருமானியா												2	

சவுதி அரேபிய		3			1					2			
சேஷெல்ஸ்							3	3					
தென்னாபிரிக்													
சுவிட்ஸர்லா			9	1	1		4	4			1		
டஜிகிஸ்தான்													
தாய்லாந்து	1					4		5		4	6	1	
துருக்கி	3		1				2						
UAE				10	7		3	8		1			
அமெரிக்கா	3	10	14	4	13	9	28	25	16	38	5	3	
பிரித்தானியா	4	12	15	3			7	8	14		2	6	
வியட்நாம்	1				1	2	2	2					
ஸ்வீடன்													
இஸ்ரேல்													
USAID								4					
மொத்தம்	**126**	**103**	**182**	**96**	**100**	**104**	**145**	**207**	**160**	**128**	46	59	1456

இணைப்பு III

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் வெளிநாட்டு விஜயங்கள்

இல	நாடு	காலம்	நோக்கம்
1	**இந்தியா**	10 -11 மார்ச் 2018	ஜம்புதீபவில் யாத்திரிகர் விடுதியை திறந்து வைத்தல்
2	**ஜெனீவா**	08 -21 ஏப்ரல் 2018	புலம்பெயர் தொழிலாளர்கள் பாதுகாப்பு தொடர்பான ஐ.நா குழு
3	**இஸ்ரேல்**	09 – 13 ஜூன் 2018	AJC குளோபல் மன்றம்
4	**வோஷிங்டன்**	21 – 30 ஜூலை 2018	உறவுகளை மேம்படுத்தும் அமைச்சு ரீதியிலான கூட்டம்
5	**நியூயோர்க்**	21 செப்டெம்பர் இலிருந்து 01 அக்டோபர் 2018	73 ஆவது UNGA

பொதுத் தொடர்பாடல் பிரிவு

பொதுத் தொடர்பாடல் பிரிவானது, தொழிற்பாட்டுப் பிரிவொன்றாக விளங்குவதுடன், வெளிநாடுகளில் தகவல்களைப் பரப்புவதற்காகவும் இலங்கை பற்றிய எண்ணப் பாங்கினை எதிர்வு கூறுவதற்கும் அரசாங்கம் மற்றும் வெளிவாரி செயற்பாட்டாளர்களுக்கிடையிலான இடைமுகமொன்றாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச உறவுகள் தொடர்பில் அமைச்சிலும் பொதுவாக நாட்டிலும் இடம் பெற்றுவரும் நிகழ்வுகள்/ நிலைமைகளை உள்ளடக்குகின்றது.

1.1. <u>பிரதான செயற்பாடுகள்</u>

I. இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து வெளிநாடுகளில் இலங்கை பற்றிய எண்ணப்பாங்கினை மேம்படுத்தல்.

II. வெளிநாடுகளில் இயங்கி வரும் தூதரகங்களுக்கு தகவல்கள்/ விளம்பர சாதனங்களைப் பரப்புவதுடன், ஊடாக வெளியீடுகள்/ அரசாங்க அறிக்கைகள் ஊடாக தூதரகங்களுக்கும் பரந்தளவில் பொதுமக்களுக்கும் விடயங்களைத் தெரியப்படுத்துதல்.

III. அமைச்சுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை/ சர்வதேச உறவுகள் தொடர்பான கருமங்கள் மீதான ஊடக வினவல்களுக்குப் பதிலளித்தல்.

IV. சுற்றுலா, வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவை மீதான ஊக்குவிப்புச் சாதனங்களை (பிரசுரங்களை) தூதரகங்கள் மற்றும் ஆர்வலர்களுக்கிடையே பரப்புதல்.

V. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுடனான தொடர்பினை வலுப்படுத்தல்.

VI. அரசியல் கருமபீடங்களுடன் கலந்தாலோசித்து ஊடகம் சார்ந்த அறிக்கைகளைத் தயாரித்தலும் வெளியிடுதலும்

VII. வெளிநாட்டு ஊடக விஜயங்களுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.

VIII. இலங்கையில் செயற்பட்டு வரும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் குறித்த பதிவேடுகளைப் பேணுதலும் இலங்கையின் செயற்பாடுகள் குறித்து அறிக்கையிடலும்

IX. அனைத்து தூதரகங்கள் மற்றும் அலுவலர்களிடையே உள்ளூர் அச்சு ஊடகங்கள் ஊடாக பரப்பப்பட வேண்டிய உள்நாட்டுச் செய்திகளைத் திரட்டி தொகுத்தல் மற்றும் அமைச்சின் வலைத் தளத்தில் தரவேற்றம் செய்யப்பட வேண்டிய, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடகங்களில் இருந்து கிடைக்கப்பெறும் செய்தி அறிக்கைகளைத் தெரிவு செய்தல்.

X. மும்மொழிகளிலும் செய்திகளை வெளியிட்டு வரும் சமூக வலைத்தளங்கள் (முகநூல், டுவிட்டர், யூடியூப், இன்ட்ஸ்டகிராம் மற்றும் ஒலி முகில் (Sound Cl oud) உள்ளடங்கலாக அமைச்சு வலைத் தளத்தைப் பேணுதல்.

XI. இலங்கையில் நடைபெறும் திரைப்பட விழாக்கள், ஊடக செயலமர்வுகள் மற்றும் மாநாடுகள் ஆகியவற்றை ஊக்குவித்து அவை நடைபெற வசதியளித்தல்.

1.2. வெளிநாட்டு ஊடகவியலாளர்களினதும் திரைப்படக் குழுவினரதும் விஜயங்கள்

செய்தி சேகரித்தல் மற்றும் சுற்றுலா, பிரயாணம் மற்றும் கலாசாரம் ஆகியவை தொடர்பான திரைப்படங்களை/ ஆவணத் திரைப்படங்களையும் தொலைக்காட்சி கருத்திட்டங்களையும் தயாரிக்கும் வகையில் வெளிநாட்டு ஊடகங்களின் இலங்கைக்கான விஜயங்களை வசதிப்படுத்தியும் ஒருங்கிணைத்தும் வருகின்ற இந்தப் பிரிவு அவற்றுக்கான தற்காலிக ஊடக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்து வருகின்றது.

2018 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் 35 திரைப்பட மற்றும் ஆவணத் திரைப்படங்கள் உள்ளிட்ட கருத்திட்டங்களுக்கு 309 தற்காலிக ஒப்புதல் அனுமதிச்சீட்டுக்கள் அரசாங்க தகவல் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து வழங்கப்பட்டுள்ளன.

1.3. ஊடக அறிக்கைகளை வெளியிடுதல்

இந்தப் பிரிவானது, குறிப்பிட்ட காலப்பகுதியில் 452 ஊடக அறிக்கைகளை பரவச் செய்துள்ளது. இவற்றில் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களால் வெளியிடப்பெற்ற ஊடக அறிக்கைகளும் அமைச்சினால் வெளியிடப் பெற்ற ஊடக அறிக்கைகளும் அடங்கும். இவற்றில் அமைச்சானது 126 ஊடக அறிக்கைகளை வெளியிட்டது. இவற்றுள் 126 ஊடக அறிக்கைகளாகும். அத்துடன், இத்தகைய ஊடக அற்றிக்கைகளை இந்தப் பிரிவு அமைச்சின் சமூக ஊடக வலைத்தளங்களில் (முகநூல் மற்றும் டுவிற்றர்) அநேகமாக நாளாந்த அடிப்படையில் பதிவேற்றம் செய்தது.

1.4. <u>இலங்கைக்கு மிகவும் அதிமுக்கிய/ அதிமுக்கிய வெளிநாட்டுப் பிரமுகர்கள் மேற்கொண்ட விஜயங்கள் குறித்த செய்தி சேகரிப்பும் ஊடக நிகழ்வுகளும்/ செயற்பாடுகளும்</u>

குறித்த காலப்பகுதியில், இந்தப் பிரிவானது பின்வரும் விஜயங்கள்/ நிகழ்வுகளுக்கான ஊடக செய்தி சேகரிப்பு ஏற்பாடுகளைச் செய்தது. அரச/ அரசாங்கத் தலைவர்கள் மேற்கொண்ட விஜயங்கள் குறித்த ஊடக செய்தி சேகரிப்பு அரசாங்க தகவல் திணைக்களத்துடன்

ஒருங்கிணைந்தே ஏற்பாடு செய்யப்பட்டது. ஏனைய விஜயங்கள்/ நிகழ்வுகள் குறித்த செய்தி சேகரிப்பு இந்தப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

I. ஐக்கிய இராச்சியத்தின் மாட்சிமை தங்கிய இளவரசர் எட்வேட் அவர்களின் இலங்கைக்கான விஜயம்:- 2018 ஜனவரி 31 – பெப்ரவரி 03

II. ஜப்பானிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ராரோ கோனோ அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 ஜனவரி 04-06

III. சிங்கபூர் பிரதமர் கௌரவ லீ ஹசியன் லூங் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 ஜனவரி 22-24

IV. இந்தோனேசியக் குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு ஜோகோ விடோடோ அவர்களின் இலங்கைக்கான விஜயம்:- 2018 ஜனவரி 24-25

V. இலங்கை- தாய்லாந்து இருதரப்பு கலந்தாலோசனை குறித்த நான்காவது சந்திப்பு:- 2018 பெப்ரவரி 27-28

VI. நிலக் கண்ணி வெடி அகற்றல் உடன்படிக்கை ஆளணி அமைப்பின் விசேட பிரதிநிதி மாட்சிமை தங்கிய இளவரசர் மிரட் ராத் ஸெயித் அல் ஹுசைன் அவர்களின் இலங்கைக்கான விஜயம்:- 2018 மார்ச் 5-7

VII. ஸ்லோவாக்கியக் குடியரசின் பிரதி பிரதமரும் நீதி அமைச்சருமான மேன்மை தங்கிய திரு. பீற்றர் கஸிமிர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 மார்ச் 27-29

VIII. வியட்நாமிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் திரு. டாங் டின் கை அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 ஏப்ரல் 11

IX. சேர்பியாவின் முதலாவது பிரதி பிரதமரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான கௌரவ இவிகா டாசிக் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் 2018 மே 06-08

X. இலங்கைக்கும் கொரிய குடியரசுக்குமிடையில் 2018 ஜூன் 07ஆம் திகதியன்று இடம்பெற்ற இரண்டாம் சுற்று இரு தரப்பு பேச்சுவார்த்தை

XI. நோர்வேயின் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான இராஜாங்க செயலாளர் திரு. ஜென்ஸ் புரொலிச் ஹொல்டே அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் 2018 ஜூன் 23-25

XII. தாய்லாந்து இராச்சியத்தின் பிரதமர் மேன்மைதங்கிய ஜெனரல் பிரேயுத் சான் ஓ சா அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 ஜூலை 12-13

XIII. கடல்சார் பாதுகாப்பு, இடர்காப்பு மற்றும் சமுத்திரம் சார்ந்த விவகாரங்கள் மீதான மூன்றாவது (3 ஆவது) இலங்கை- ஜப்பான் பேச்சுவார்த்தை:- 2018 ஜூலை 20

XIV. பொது நலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கௌரவ. பற்றீஷியா ஸ்கொட்லண்ட், இராணி வழக்குரைஞர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 ஓகஸ்ட் 01-04

XV. சுவிஸ் கூட்டிணைப்பாட்சியின் சமஷ்டி சட்ட மன்ற உறுப்பினர் மேன்மைதங்கிய சிமொனெட்டா சொம்மாருகா அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- 2018 ஓகஸ்ட் 07

XVI. இலங்கை- ஓமான் இருதரப்பு இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை:-2018 ஓகஸ்ட் 15

XVII. ஜப்பானிய வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ. கஸூயுகி நக்கானே அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்:- ஓகஸ்ட் 28-30

XVIII. கடல்சார் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு குறித்த இந்து சமுத்திர ஓர சங்கப் பணிக்குழுவை அமைப்பது குறித்த ஆரம்ப செயலமர்வு:- 2018 செப்டெம்பர் 04-05

XIX. இலங்கை – பின்லாந்து இருதரப்பு ஆலோசனைகள் 2018 ஒக்டோபர் 01

XX. இலங்கை – தென்னாபிரிக்கா பங்காண்மைத்துவ கருத்தரங்கின் ஏழாவது அமர்வு 2018 ஒக்டோபர் 16

XXI. இலங்கை வெளிநாட்டுக் கொள்கை மற்றும் பொருளாதார இராஜதந்திர கலந்துரையாடல் குறித்த பிரிவுபசார வாழ்த்துரை வழங்கும் அமர்வு 2018 ஒக்டோபர் 26

1.5. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணையத் தளத்தின் இடைமுகம்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணையத்தள இடைமுகமானது விருத்தி செய்யப்பட்ட நிலையில் 2018 ஏப்ரல் மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிங்கள மற்றும் தமிழ் மொழி இடைமுகங்கள் 2018 மே மாதம் பாவணைக்கு விடப்பட்டன. பொது மக்களுக்கான பாவனையாளர் சிநேகபூர்வ இணையத்தள இடைமுகமொன்றை வழங்கும் நோக்குடனேயே இந்தப் புதிய இடைமுகம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், விரிவான, இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைத் தன்னகத்தே கொண்டுமுள்ளது.

1.6. வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில்/ துணை அலுவலகங்களில் இணையத்தளங்களை உருவாக்குவதற்கான முன்மொழிவு

வெளிநாடுகளில் உள்ள அனைத்து தூதரகங்களுக்குமென பாவனையாளர் சிநேகபூர்வ, பாதுகாப்புமிக்க மற்றும் தரம்வாய்ந்த வலைத்தளங்களை வடிவமைப்பதற்கான நகல் முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் கலாசாரம் சார்ந்த இராஜதந்திரப் பிரிவு

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் கலாசாரம் சார்ந்த இராஜதந்திரப் பிரிவானது, அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் கலாசாரம் சார்ந்த இராஜதந்திர நடவடிக்கை தொடர்பான விடயங்களைக் கையாண்டு வருகின்றது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுடனான (வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையைப் பூர்வீகம் பிறப்பிடமாக/ மரபுரிமையாகக் கொண்டோர்) உள்வினை மற்றும் ஈடுபாட்டினை வசதிபடுத்துதல், வெளிநாட்டு வாசம் முடிந்த பின்னர் அவர்கள் மீளவும் இணைந்து கொள்ளத்தக்க வகையில் இலங்கைக்கு வருகை தருவதற்கும், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக-பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில் தமது பங்களிப்பைச் செலுத்திடவும் அவர்களுக்கு உதவுதல், புலம்பெயர் இலங்கையர்கள் தொடர்பான ஆய்வுகள்/ ஆராய்ச்சிகள்/ நிகழ்ச்சித் திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல், மற்றும் இலங்கையில் இயங்கி வரும் அமைப்புக்கள்/ மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் பணியாற்றி வரும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் விசாக்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல் என்பன இந்தப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும்.

கலாசாரம் சார்ந்த இராஜதந்திர செயற்பாடுகளின் கீழ், ஊக்குவிப்பு மற்றும் கலாசார செயற்பாடுகள், கல்விசார் பரிமாற்றங்கள், ஊடக மற்றும் திரைப்படக் கருத்திட்டங்கள், புலமைப்பரிசில் வழங்கல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் பங்காண்மைகளுக்கான ஆதரவு

மற்றும் மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் போன்ற வெளிக்களச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கான பொது இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்க இந்தப் பிரிவானது முயன்று வருகின்றது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுடனான பணி

- வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களை குவிமையங்களாக விளங்க வைக்கும் வகையில் அதிகாரியை/ அதிகாரிகளை நியமிக்குமாறு இலங்கைத் தூதரகங்கள் வேண்டப்பட்டுள்ளன.

- இலங்கை அரசின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குப் பங்களிப்புச் செய்து வரும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைக் குழுக்கள்/ சங்கங்களுடன் உறவைப் பேணி அவற்றுக்கு ஆதரவளிக்குமாறு தூதரகங்கள் வேண்டப்பட்டுள்ளன.

- வெளிநாடுகளில் வதியும் இலங்கை சமூகத்தினர் தூதுவரை/ பதவியணியினரை சந்திப்புத் திட்டம் எதுவுமின்றி சந்திப்பதற்கென வாரத்தில் ஒருநாள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

- தூதரகங்கள் வெளிநாடுகளில் வதியும் இலங்கைச் சமூகத்தினருடனான நிகழ்வுகள் குறித்த அறிவூட்டலை மேம்படுத்த வேண்டியுள்ளதுடன் தனியார் துறைக் குழுக்கள்/ அமைப்புக்களுடனான கல்வி, சுகாதாரம் போன்ற குறிப்பிட்ட துறைகளை இனங்கண்டும் வருகின்றன.

- குறிப்பிட்ட துறைகளில் உள்ள, வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் குறித்த பட்டியலைத் தொகுத்து, அதனைக் கிரமமாக இற்றைப்படுத்தி அமைச்சுக்கு அறிவிக்குமாறு தூதரகங்கள் வேண்டப்பட்டுள்ளன.

அரசாங்க நிறுவனங்கள்/ முகவரமைப்புக்களுடனான பணி

- வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் நலன் கவனிப்புப் பிரிவானது, இலங்கையில் பணியாற்றி வரும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் அமைப்புக்களுக்கு உதவும் பொருட்டு நல்லிணக்கத்திற்கான தேசிய ஐக்கிய அலுவலகத்துடன் நெருக்கமான முறையில் பணியாற்றி வருகின்றது. அத்துடன், அமைப்புக்களுக்கு நிகராக விளங்குவதற்கும், இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாடுகளில் வதியும் இலங்கைச் சமூகத்தினருடன் ஈடுபாடு கொள்ளவும் நாம் பாவித்து வரும் பிரதான பங்குதாரராகவும் இது விளங்குகின்றதெனலாம்.

- இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களில் பணியாற்றி ஆதரவு வழங்கும் பொருட்டு, இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கான விசாக்களை சீரிய

முறையில் வழங்கும் வகையில், இந்தப் பிரிவானது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நெருங்கிய ஒத்துழைப்பு மற்றும் உதவியைப் பெற்று வருகின்றது.

- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், விசா வழங்கல் செயல் முறையைத் துரிதப்படுத்துவதற்கும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் தொடர்பான விசா வழங்கல்களுக்கு உதவும் வகையிலும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களுக்கான குவிமையமொன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

2018 ஜனவரி 01 தொடக்கம் 31 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

வெளிநாடுகளில் வதியும் அநேகமான இலங்கைச் சமூகத்தினர், நிபுணர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கான விசாக்களைப் பரிந்துரை செய்ததன் மூலம், இந்தப் பிரிவானது, இலங்கையில் இயங்கி வரும் பிரிட்ஜிங் லங்கா, நெக்டர் லங்கா, கொம்டு இற், சுனிராலங்கா மற்றும் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச மத்திய நிலையம் போன்ற அநேகமான வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் அமைப்புக்களின் பணிகள் இனிதே நிறைவு பெற வசதியளித்தது.

- **பிரிட்ஜிங் லங்கா: கண்டியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றுக்கான உதவி; 2018 ஓகஸ்ட்**

- பிரிட்ஜிங் லங்கா அமைப்பானது இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பைச் செய்து வரும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள்/ இலங்கையைப் பூர்வீக பிறப்பிடமாகக் கொண்டோரை உள்ளடங்கிய அமைப்புக்களுடன் ஈடுபாடு காட்டி ஒத்துழைத்து பணியாற்றுவதற்கு இந்தப் பிரிவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

  பிரிட்ஜிங் லங்கா அமைப்பானது ஏராளமான வாழ்வாதார உதவி, வியாபார அபிவிருத்தி, சமூக ஆதரவு, நகர திட்டமிடல் மற்றும் சமூக ஒன்றிணைவுக் கருத்திட்டங்களுக்கான நிபுணத்துவம் மற்றும் வளங்களை ஏற்பாடு செய்து வருகின்றது.

- பல்வேறு தரப்பட்ட சமூகங்களிடையே நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர நன்மதிப்பு ஆகியவற்றைப் பலப்படுத்தும் வகையில், "இன நல்லிணக்கம்' எனும் தலைப்பில் பிரிட்ஜிங் லங்கா அமைப்பினால் கண்டி மாவட்டத்தில் உள்ள திகன மற்றும் தெல்தெனிய பிரதேசங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைக்கு இந்தப் பிரிவு வசதியேற்படுத்திக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

  அத்துடன், பதவியணியினர் இலங்கையில் தங்கியிருந்து பணியாற்றுவதனை இயலச் செய்யும் வகையில் அவர்களுக்கான விசாக்களை வழங்குவதற்கும் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களின் நலனைக் கவனித்துவரும் பிரிவானது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

- **கொம்டு இட்**

  கொம்டு.இட் என்பது, இலங்கையில் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கும் பேண்தகு அபிவிருத்திக்கு உதவுவதற்குமான ஏராளமான வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் குறித்த தன்னார்வத் தொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து வரும் கனேடிய அமைப்பாகும். இந்தப் பிரிவானது, அவற்றின் 2018-2019 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவாக செயற்பட்டதுடன், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் பல்வேறுபட்ட அமைப்புக்களுடன் பணியாற்றுவதற்கென 12 இளம் மாணவர்களுக்கு/ தொழில்வாண்மையாளர்களுக்கு வசதியேற்படுத்தி கொடுத்துமுள்ளது.

- **ஆசியா பவுண்டேஷன் நிகழ்ச்சித்திட்டம்- லங்கா கோர்ப்ஸ் ∴பெலோஸ்- 2018**

  இந்தப் பிரிவானது லங்கா கோர்ப்ஸ் ∴பெலோஸ்- 2018 (Lanka Corps Fellows 2018) எனும் கருத்திட்டப் பணியை பரிந்துரை செய்தது. அரச மற்றும் தனியார் துறையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த ஆறு ஆற்றல்மிக்க தொழில்வாண்மையாளர்கள் இலங்கையில் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடும் பொருட்டு ஆறுமாத கால ஆதரவு ஊதிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இலங்கை வந்தடைந்தனர்.

கலாசார இராஜதந்திரம்

- கலாசார இராஜதந்திர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இந்தப் பிரிவானது, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளில் குறித்த காலப்பகுதியில் இலங்கை ரூபவாஹினியின் "எதர மெதர" நிகழ்ச்சியை ("Ethara Methara" Programme) நடாத்துவதனை வசதிப்படுத்தியது.
- 2018 மார்ச்/ ஏப்ரல் காலப்பகுதியில் நடைபெற்ற "யொவன் புரய" (Yowun Puraya) எனும் தேசிய இளைஞர் முகாமில் வெளிநாட்டு இளைஞர், யுவதிகள் பங்கேற்பதற்கும் வசதியளித்தது.

  இந்தப் பிரிவானது, வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் அநேகமான கலாசார இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு செவிப்புல-கட்புல சாதனங்கள், ஆவணங்கள் முதலியவற்றை வழங்கியதன் மூலம் உதவியுள்ளது.

தெற்காசிய மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு (சார்க்) பிரிவு

ஆப்கானிஸ்தான்

I. ஆப்கானிஸ்தான் வானொலி தொலைக் காட்சி நிறுவனத்திற்கும் இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்திற்குமிடையே கைச்சாத்திடப்படுவதற்கான முன்மொழிவு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

II. இலங்கையில் ஐந்து ஆப்கான் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்வதற்கான ஆப்கானிஸ்தான் அரசின் வேண்டுகோளினை தூதரகம் ஏற்று செயற்பட்டதுடன் இலங்கை பொலிஸ் தலைமைக் காரியாலயம் அதனை வசதிப்படுத்த இணக்கம் தெரிவித்தது.

III. பரஸ்பர நலன் குறித்த விடயங்கள் மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை தொழிற்படுத்துதல் குறித்து கலந்துரையாடும் முகமாக தூதுவர் ஆப்கானிஸ்தானின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி வெளிநாட்டு அமைச்சரை சந்தித்துள்ளார்.

IV. இருதரப்பு மற்றும் பலதரப்பு கருத்தரங்குகளிலான ஆப்கானிஸ்தான் மற்றும் ஏனைய நாடுகள் தொடர்பான விவகாரங்கள் விவாதிக்கப்பட்ட UNAM மற்றும் UNHCR கூட்டங்களில் கிரமமான பங்கேற்பு.

பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தேயிலை இறக்குமதி மீதான கலந்துரையாடல்கள் தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது விடயமாக இலங்கைக்கு விஜயம் செய்ய முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

II. ஆப்கானிஸ்தானில் இலங்கையைச் சேர்ந்த திறன்பெற்ற ஊழியர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவது குறித்து இரு நாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப் பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி தொழிற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

III. தூதரகத்தில் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவன ஊக்குவிப்பு ஆக்கப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவன செயற்பாடுகள் சிறந்தவை விடுமுறையைக் கழிப்பதற்கு இலங்கை சிறந்ததோர் நாடாகத் திகழ்கின்றதெனும் எண்ணப்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு காபூல் நகரில் உள்ள பிரயாண முகவர்கள் மத்தியில் அவை விநியோகப்பட்டன.

கலாச்சார உறவுகள்

I. காபூல் நகரில் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்துடன் நடாத்தப்பெற்ற கலந்துரையாடல்களை அடுத்து, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் புனரமைப்பு/ புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கென இலங்கையின் நிபுணத்துவம் வழங்கப்பட்டதுடன், பாமியான் நகருக்கான புவிச்சரிதவியல் நிபுணரின் விஜயத்திற்கான தமது உதவியை வழங்குவதற்கு யுனெஸ்கோ அமைப்பு (UNESCO) இணக்கம் தெரிவித்துள்ளது. எவ்வாறிருப்பினும், பாமியான் நகருக்கு இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள் இந்தத் தூதரகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், மேற்குறித்த இரண்டு விஜயங்களும் இலங்கைத் தரப்புக்கு உரிய பலனை அளிக்கவில்லை.

தொழில் ஆக்கநலம்

I. ஆப்கானிஸ்தானில் இலங்கைப் பிரஜையொருவர் அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு அப்பால் தங்கியிருந்தமைக்கான தண்டப் பணமாக 4920 அமெரிக்க டொலர்களைச் அவர் செலுத்திய பின்னர், அவரை தாயகத்திற்கு திருப்பி அழைத்து வருவதற்கு தூதரகம் ஆதரவாகச் செயற்பட்டது.

பங்களாதேஷ்

வெளிப்புற விஜயங்கள்

I. டாக்காவில் 2018 மே 1-4 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற சிறுவர்களுக்கான தெற்காசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அரங்கின் 2018 கூட்டத்தில் முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் கௌரவ (வைத்தியக் கலாநிதி) சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தலைமையிலான தூதுக்குழுவினர் கலந்து கொண்டனர்.

II. டாக்காவில் 2018 மே 15-17 வரை நடைபெற்ற "இயலாமை மற்றும் இடர் முகாமைத்துவம்" எனும் தொனிப்பொருளில் அமைந்த 2 ஆவது சர்வதேச மாநாட்டில் நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜங்க அமைச்சர் கௌரவ பாலித ரங்கே பண்டார கலந்து கொண்டார்.

III. டாக்காவில் 2018 செப்டெம்பர் 04-08 வரை நடைபெற்ற தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் 9 ஆவது கூட்டத்தில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் திரு. மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தூதுக்குழுவினர் கலந்து கொண்டனர்.

IV. டாக்காவில் 2018 ஒக்டோபர் 9-10 வரை நடைபெற்ற தெற்காசிய கடல்சார் மற்றும் பொருள் வழங்கல் அரங்கின் இரண்டாவது கூட்டத்திற்கென சென்றிருந்த தூதுக்குழுவுக்கு தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தலைமை தாங்கினார்.

V. அபிவிருத்தி, மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் கௌரவ மலிக் சமரவிக்ரம டாக்காவுக்கு 2018 ஒக்டோபர் 11-12 வரை விஜயம் மேற்கொண்டிருந்த உயர் மட்ட ஆடைத்துறை வர்த்தகத் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

<u>உட்புற விஜயங்கள்</u>

I. கொழும்பில் 2018 ஒக்டோபர் 11-12 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற "இந்து சமுத்திரம்: எமது எதிர்காலத்தை நிர்ணயித்தல்" எனும் தலைப்பிலான மாநாட்டில் கலந்து கொள்ளவென பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகார பணிப்பாளர் நாயகம் ஜனாப் தாரிக் முஹம்மது தலைமையிலான தூதுக் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தனர்.

இருதரப்பு உறவுகள்

மேன்மைதங்கிய உயர் ஸ்தானிகர் பங்களாதேஷின் பின்வரும் முக்கியஸ்தர்களை நேரில் சந்தித்து உரையாடினார்:-

I. பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சின் செயலாளருடன் 2018 மார்ச் 25 ஆம் திகதியன்று சந்திப்பு

II. 2018 ஏப்ரல் 02 ஆம் திகதியன்று பங்களாதேஷின் வெளிவிவகார கௌரவ இராஜாங்க அமைச்சருடனான சந்திப்பு

III. 2018 ஜூன் 26 ஆம் திகதியன்று பங்களாதேஷ் பாராளுமன்ற வளாகத்தில் பங்களாதேஷ் பிரதமர் மேன்மைதங்கிய ஷேய்க் ஹசினா அவர்களுடனான சந்திப்பு

IV. விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவை மற்றும் பங்களாதேஷின் விவசாய ஆராய்ச்சிப் பேரவைக்குமிடையில் கைச்சாத்திடப் பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தல் குறித்து கலந்துரையாடும் பொருட்டு பங்களாதேஷின் விவசாய ஆராய்ச்சிப் பேரவைத் தலைவர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் 2018 ஜூலை 29 ஆம் திகதியன்று மேற்கொண்ட சந்திப்பு.

பலதரப்பு உறவுகள்

மேனமைதங்கிய உயர் ஸ்தானிகர் அவர்கள் பின்வரும் நிகழ்வுகளில் கலந்து கொண்டார்:-

I. "பிம்ஸ்டெக்" BIMSTEC அமைப்பின் செயலகத்தில் 2018 மார்ச் 20 ஆம் திகதியன்று நடைபெற்ற வங்காள விரிகுடா சமூகத்தை நோக்கிய பயணத்தில் "பிம்ஸ்டெக் (BIMSTEC) அதன் 20 இல்" எனும் தலைப்பில் அமைந்த மாநாடு

II. டாக்காவில் 2018 மே 05 ஆம் திகதியன்று நடைபெற்ற இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் வெளிநாட்டு அமைச்சர்கள் பேரவையின் 45 ஆவது அமர்வு

III. டாக்காவில் 2018 ஓகஸ்ட் 13-14 வரை நடைபெற்ற பயங்கரவாதம் மற்றும் நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களுக்கெதிரான 'பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் கூட்டு செயற்குழுவின் (JWG-CTTC) கூட்டம்.

<u>பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்</u>

I. பங்களாதேஷில் இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் முதலீடுகள் தொடர்பான விவகாரங்கள் குறித்து கலந்துரையாடும் முகமாக உயர் ஸ்தானிகர் இலங்கை பங்களாதேஷ் வர்த்தக, கைத்தொழில் சபையின் பணிப்பாளர் சபையுடன் சேர்ந்து பங்களாதேஷ் முதலீட்டு அபிவிருத்தி அதிகார சபையின் (BIDA) தலைவர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளை 2018 ஜூலை 06 ஆம் திகதியன்று சந்தித்தார்.

II. இலங்கையை கூட்டங்கள், ஊக்குவிப்பு நடவடிக்கைகள், மாநாடுகள் மற்றும் நிகழ்வுகள் (MCE) ஆகியவற்றை நடாத்தக் கூடிய சுற்றுலாத்துறை இடமாக ஊக்குவிக்கும் பொருட்டு உயர் ஸ்தானிகராலயம் இலங்கை மாநாட்டுப் பணியகம், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம் ஆகியவற்றுடன் இணைந்து இரண்டு நிகழ்வுகளை (Meet in Sri Lanka & Sri Lanka Stall) 2018 மார்ச் 22-24 வரையிலும் ஒக்டோபர் 11 ஆம் திகதியன்றும் ஏற்பாடு செய்திருந்தது.

<u>கலாச்சார உறவுகள்</u>

I. பங்களாதேஷில் உள்ள இலங்கைச் சிறுவர்களுக்கென இலங்கை கலாச்சாரக் கல்வியை உயர் ஸ்தானிகராலயம் பங்களாதேஷில் உள்ள இலங்கைச் சங்கத்தின் உதவியுடன் வசதிப்படுத்தியது.

தொழில் ஆக்கநலன்

உயர் ஸ்தானிகராலயம் பங்களாதேஷில் பணியாற்றி வரும் இலங்கைப் பணியாளர்கள் தொடர்பான ஏராளமான கொன்சியுலர் விடயங்களைக் கையாண்டது.

<u>பூட்டான்</u>

இருதரப்பு உறவுகள்

I. பூட்டான் அரசாங்கம் 2018 ஏப்ரல் 29 தொடக்கம் மே 02 வரை நடைபெற்ற வெசாக் கொண்டாட்டத்திற்கென கௌதம புத்தரின் நான்கு திருவுருவச்சிலைகளை வழங்கியது. டாக்கா மற்றும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் இது சம்பந்தமாக ஆதரவளித்தன

வெளிப்புற விஜயங்கள்

I. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன அவர்கள் பூட்டானுக்கு 2018 ஜூன் 06-09 வரையிலான காலப்பகுதியில் விஜயம் மேற்கொண்டார். கௌரவ அமைச்சருடன் வர்த்தகத் தூதுக் குழுவொன்றும் சென்றிருந்தது.

மேற்படி விஜயத்தின் போது, பூட்டான் மாணவர்கள் தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் தமது உயர் கல்வியைத் தொடரும் வகையில் அவர்களுக்கென மேலதிக புலமைப்பரிசில் வாய்ப்புக்களை இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.

கௌரவ அமைச்சர் தனது விஜயத்தின் போது பூட்டானின் மேன்மை தங்கிய 5 ஆவது மன்னர், கௌரவ பிரதமர், கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் கௌரவ பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ஆகியோரை நேரில் சந்தித்து உரையாடினார்.

நேபாளம்

வெளிப்புற விஜயங்கள்

I. நேபாளத் தலைநகர் கத்மண்டுவில் 2018 செப்டெம்பர் 01-02 வரை நடைபெற்ற 4 ஆவது பிம்ஸ்டெக் (BIMSTEC) உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கென இலங்கை ஜனாதிபதி மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2018 ஓகஸ்ட் 30-31 வரை மேற்கொண்ட விஜயம். மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் இளவரசர் சித்தார்த்த கௌதமரின் பிறந்த இடமான லும்பினியில் அமைந்துள்ள மாயாதேவி விஹாரை, துட்டகைமுனு யாத்திரீகர் விடுதி, 'சார்க் அமைப்பின் செயலகம், ஆனந்தக் குட்டி விஹாரை மற்றும் பசுபதிநாத் கோவில் ஆகியவற்றுக்கு விஜயம் செய்ததுடன், நேபாளப் பிரதமர் கௌரவ. கே.பி ஷர்மா ஓலி அவர்களை சந்தித்து, +ISSR

அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "வர்த்தகம், சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டுக் கருத்தரங்கு" எனும் தலைப்பிலமைந்த நிகழ்வையும் ஆரம்பித்து வைத்தார்.

II. இளைஞர் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு குறித்து நேபாளத்தின் வெளிநாட்டு அலுவல்கள் நிறுவனத்திற்கும் இலங்கையின் பண்டார நாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்திற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறப்பட்டன.

III. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு (சார்க் - SAARC) பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் திருமதி யசோஜா குணசேகர கத்மண்டுவில் ஜூலை 07 ஆம் திகதியன்று நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டக் குழுவின் 55 ஆவது அமர்வில் கலந்து கொண்டார்.

IV. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு (சார்க் - SAARC) பிரிவின் சிரேஷ்ட பணிபாளர் நாயகம் திருமதி. யசோஜா குணசேகர மற்றும் பிரதிப் பணிப்பாளர் திருமதி அபயஜீவ ஆகியோர் டிசம்பர் 11-12 வரை நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டக் குழுவின் 56 ஆவது அமர்வில் கலந்து கொண்டனர்.

இருதரப்பு உறவுகள்

I. தூதுவர் நேபாளத்தின் இராணுவத்தளபதி ஜெனரல் இராஜேந்திர செட்ரி அவர்களையும் நேபாள வெளிவிவகார அமைச்சர் கௌரவ பிரதீப் குமார் கியாவலி அவர்களையும் ஜனவரி 08 ஆம் திகதியன்று சந்தித்துரையாடினார்.

II. இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா அவர்களின் அழைப்பின் பேரில் நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் இராஜேந்திர செட்ரி இலங்கைக்கு விஜயம் செய்தார்.

பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. இலங்கைக்கும் நேபாளத்திற்குமிடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் முகமாக தூதுவர் பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்:-

- டாங், ஜனக்பூர், பொக்காரா வர்த்தக மற்றும் கைத்தொழில் சபைகளின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முறையே 2018 ஜனவரி 05, மார்ச் 23 மற்றும் மே 07 ஆகிய திகதிகளில் இடம் பெற்ற சந்திப்புக்கள்
- ஜனவரி 27 ஆம் திகதியன்று நேபாள மின்சக்தி முதலீட்டு உச்சிமாநாடு
- நேபாள பௌதீக உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சர் கௌரவ ரகுபிர் மகாசெத் அவர்களுடன் 2018 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று மேற்கொண்ட சந்திப்பு
- நேபாள முதலீட்டுச் சபை பிரதம நிறைவேற்று அலுவலருடன் ஏப்ரல் 25 இல் மேற்கொண்ட சந்திப்பு

- 2018 ஜூலை 19 ஆம் திகதியன்று நடைபெற்ற ECAN கல்விச் சந்தை

சுற்றுலாத்துறை

I. தூதுவர் பொக்காரா, பக்தாபூர், லலித்பூர் மற்றும் நேபாள Trekking Agencies Association of Nepal (TAAN) உள்ளிட்ட முகவரமைப்புக்கள் சங்கம் உள்ளடங்கலாக நேபாளத்தில் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் சந்திப்புக்களில் கலந்து கொண்டார்.

II. மார்ச் 28 இல் நேபாளத்தின் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் பிரயாண முகவர்களுடனான சந்திப்பு

- ஜூலை 11 இல் நேபாள சுற்றுலாத்துறைச் சபை மற்றும் NATTA நிறுவன பிரதம நிறைவேற்று அலுவலர்களுடனான சந்திப்பு

- உலக விவகார நேபாளப் பேரவை உறுப்பினர்களை 2018 செப்டெம்பர் 20 ஆம் திகதியன்று சந்தித்து உலக விவகார நேபாளப் பேரவைக்கும் (NCWA) லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவகத்திற்கும் (LKIIRS) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார்.

கலாச்சார உறவுகள்

I. தூதரகமானது ஆனந்தக் குட்டி விகாரை மற்றும் ரத்தோ மச்சிந்திர நாத் கோவில் ஆகியவற்றின் மீள் நிர்மாணப் பணிகளைக் கண்காணித்து வருகின்றது.

II. லும்பினியில் சர்வதேச விஞ்ஞானக் குழு பற்றி கத்மண்டுவில் உள்ள யுனெஸ்கோ (UNESCO) அலுவலகத்தினால் 2018 பெப்ரவரி 21-24 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் தூதுவர் கலந்து கொண்டார்.

III. இலங்கையில் மார்ச் 28 தொடக்கம் ஏப்ரல் 01 வரை நடைபெற்ற இளைஞர் தூதுக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்க தூதர்கம் உதவியது.

IV. தூதரகம் கத்மண்டுவில் உள்ள யக் அண்ட் யெட்டி உணவகத்தில் "இலங்கை உணவுப் பெருவிழா" ஒன்றை 2018 மே 25 முதல் ஜூன் 02 வரை ஏற்பாடு செய்திருந்தது.

V. நேபாளத்தின் கலாச்சார, சுற்றுலாத்துறை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மற்றும் லும்பனி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய உப தலைவர் வணக்கத்திற்குரிய மெத்தெயா சக்யாபுத்தா ஆகியோருடன் 2018 ஓகஸ்ட் 07 ஆம் திகதியன்று மேற்கொண்ட சந்திப்புக்கள்

VI. தூதரகம் கலாசார நிகழ்வொன்றை ஓகஸ்ட் 30 ஆம் திகதியன்று வையாத் ரிஜென்சி உணவகத்தில் ஏற்பாடு செய்தது.

VII. நேபாள அக்கடமியின் வேந்தருடனான சந்திப்பு

கொன்சியுலர் உதவிகள்

I. மனிபால் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்றுவரும் இலங்கை மாணவர்கள் தொடர்பான விடயங்கள் குறித்து தூதுவர் மருத்துவக் கல்லூரி நிருவாகத்தினருடன் கலந்துரையாடியிருந்தார்.

II. இலங்கையின் நிர்மாணக் கைத்தொழிற்சபையின் வேண்டுகோளின் பிரகாரம், நேபாளத்திலிருந்து தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தூதரகம் உதவி புரிந்தது.

மாலைதீவு

இருதரப்பு உறவுகள்

I. மாலைதீவு ஆள்புல நீர்ப்பரப்பில் சிக்கித் தவித்த இலங்கை மீனவர்களை தாயகத்திற்கு திருப்பி இலங்கை மீனவர்களை தாயகத்திற்கு திருப்பி அழைத்து வரும் சம்பந்தமாக சிறந்த ஒத்துழைப்பு மற்றும் தடங்கலற்ற ஒத்துழைப்பை வேண்டி, வெளிநாட்டு அமைச்சு, மாலைதீவு தேசிய பாதுகாப்புப்படை, கடலோரக் காவற்படை, பொலிஸ் திணைக்களம், குடிவரவுத் திணைக்களம் மற்றும் மாலைதீவுச் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

II. தூதுவர் பின்வரும் சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டிருந்தார்.

- மாலைதீவில் வசித்துவரும் இலங்கையர்களின் வீசா விடயங்கள் சம்பந்தமாக குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருடனான கலந்துரையாடல்
- கைது செய்யப்பட்ட இலங்கையர் சம்பந்தமாக பொலிஸ் ஆணையாளருடனான கலந்துரையாடல்
- வெலனா சர்வதேச விமான நிலையம் ஊடாகப் பயணிக்கும் இலங்கையர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் சம்பந்தமாக விமான நிலைய விமானப் போக்குவரத்து துறைத் தலைவர் மற்றும் சுங்க ஆணையாளர் நாயகம் ஆகியோருடனான சந்திப்பு

- மாலைதீவின் மருத்துவத்துறைசார் மாணவர்களுக்கு இலங்கையில் உள்ளகப் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் மாலைத்தீவு மாணவர்களுக்கு கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் மேலதிக வாய்ப்புக்களை வழங்குதல் சம்பந்தமாக சுகாதார அமைச்சருடன் நடாத்தப் பெற்ற கலந்துரையாடல்.
- மாலைதீவில் கிரிக்கெட்டின் தரத்தினை விருத்தி செய்வது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சருடன் நடாத்தப்பெற்ற கலந்துரையாடல்.

III. 'SGD 14' மாநாட்டில் கலந்து கொள்வதற்கென மாலைதீவின் கடற்றொழில் மற்றும் விவசாய அமைச்சைச் சேர்ந்த தூதுக் குழுவொன்றை தூதரகம் இலங்கைக்கு அனுப்பி வைத்தது.

IV. மாலைதீவின் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்கென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ சரத் அமுனுகம, மகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கங்கா ஹேரத் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரல் மேற்கொள்ளப்பட்ட விஜயம்

<u>பலதரப்பு உறவுகள்</u>

- மாலைதீவில் தொற்று வியாதி பிரச்சினைகள் குறித்து தூதுவர் மாலைதீவில் உள்ள உலக சுகாதார நிறுவன பிரதிநிதி வைத்தியக் கலாநிதி அரவிந்த் மதுர் அவர்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

- சர்வதேச இளைஞர் குழுத் தலைவர் தலைமையிலான தூதுக் குழுவினர் தூதரகத்திற்கு விஜயம் செய்தனர்.

<u>பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்</u>

I. தூதரகம் கல்விக் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் (மாலைதீவு சர்வதேசக் கல்வி மற்றும் தொழில் எக்ஸ்போ (EXPO) இலங்கையில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்பைப் பேணிட வசதியளித்தது.

II. "KMCC Group எனும் "முன்னணி வன்பொருள் (hardware) உற்பத்திக் கம்பனி சார்பில் முன்னணியில் உள்ள நிர்மாண நிறுவனங்களுக்கான கூட்டமொன்றை தூதரகம் ஏற்பாடு செய்து நடாத்தியது.

III. மாலைதீவுக்கு வேண்டிய மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதற்கு வழிகோலும் பொருட்டு தூதரகம் சுகாதார அமைச்சுக்கும் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் மாலைதீவின் அரச வர்த்தக அமைப்புக்குமிடையிலான பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தது.

IV. மாலைதீவில் நடைபெற்ற "14 ஆவது ஹோட்டல் ஏசிய கண்காட்சி மற்றும் சர்வதேச சமையற்கலை சவால் 2018" எனும் தலைப்பிலான மாநாட்டில் லங்கா எக்ஸிபிஷன் & கொன்பரன்ஸ் சேர்வில் (பிரைவட்) லிமிடெட்" நிறுவனம் பங்கேற்பதற்கு தூதரகம் வசதியளித்தது.

கலாசார உறவுகள்

I. திரைப்பட இயக்குநர்களின் பங்கேற்புடன் பிரபல மூன்று திரைப்படங்களைத் திரையிட்டு தூதரகம் திரைப்பட விழாவினை வெற்றிகரமான முறையில் நடாத்தியது.

தொழில் ஆக்கநலன்

I. இலங்கைத் தொழிலாளர்களின் உரிமைகள், உரிமை அளிப்புக்கள் நாடுகளின் செய்யத்தக்க மற்றும் செய்யத்தகாத விதிமுறைகள், நடத்தை, மற்றும் சேவை ஒழுக்கம் ஆகியவை குறித்து செயலமர்வுகளையும் அறிவூட்டல் நிகழ்வுகளையும் தூதரகம் ஏற்பாடு செய்தது.

II. பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி மாலைதீவுக்கு விஜயம் செய்து இலங்கைத் தொழிலாளர்களைச் சந்தித்தார்.

<u>இந்தியா</u>

வெளிப்புற விஜயங்கள்

I. மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் சர்வதேச சூரிய சக்தி உடன்படிக்கை ஆரம்ப மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு 2018 மார்ச் 11 ஆம் திகதியன்று புதுடில்லிக்கு விஜயம் செய்தார்.

II. புதுடில்லியில் 2018 ஜனவரி 18 இல் நடைபெற்ற "Raisina Dialogue 2018" மாநாட்டில் இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ வசந்த சேனநாயக்க கலந்து கொண்டார்.

III. இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் இறுதிச் சடங்குகளில் அரச நிறுவனங்கள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் கௌரவ லக்ஷ்மன் கிரியெல்ல இலங்கை அரசின் விசேட பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

IV. 2018 செப்டெம்பர் 9-14 வரை நடைபெற்ற ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) 3 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மும்பைக்கு விஜயம் செய்தார்.

V. இந்திய லோக்சபா (மக்கள் அவை) சபாநாயகரின் அழைப்பின் பேரில், பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய மற்றும் தூதுக்குழுவினர் பரிச்சயமாக்கல் சுற்றுலாவில் 2018 செப்டெம்பர் 9-14 வரையிலான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்தனர்.

VI. கௌரவ பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தியாவுக்கு 2018 ஒக்டோபர் 18-20 வரையிலான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

VII. பின்வரும் கூட்டங்களை உயர் ஸ்தானிகராலயம் ஒருங்கிணைத்தும் வசதிப்படுத்தியுமிருந்தது.

VIII. புதுடில்லியில் 2018 மார்ச் 13-14 வரை நடைபெற்ற "தென்கிழக்காசிய பிராந்தியத்தில் காச நோய்க்கு முற்றுப்புள்ளி வைத்தல்" எனும் தொனிப்பொருளில் அமைந்த கூட்டத்தில் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன கலந்து கொண்டார்.

IX. டார்ஜீலிங், டகாபூரில் இந்திய சட்ட விஞ்ஞான பரிசோதனைகள் நிறுவனத்தில் 2018 ஏப்ரல் 28-29 வரை நடைபெற்ற சார்க் (SAARC) நாடுகளின் சட்ட பிரத்தியேக கூட்டத்தில் மேன்மை தங்கிய இலங்கையின் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அவர்கள் கலந்து கொண்டார்.

X. இந்தியாவில் 2018 ஏப்ரல் 10-12 வரை நடைபெற்ற 16 ஆவது சர்வதேச சக்திவள மாநாட்டில் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வள அமைச்சர் கௌரவ அஜித் பீ.பெரேரா கலந்து கொண்டார்.

XI. இந்தியாவில் 2018 ஏப்ரல் 9-12 வரை நடைபெற்ற "மூன்று (03) வளங்கள் மற்றும் வள செயல்திறன் ஊடாக சுத்தமான தண்ணீர், சுத்தமான நிலம் மற்றும் சுத்தமான காற்றை அடையப் பெறுதல்' எனும் தொனிப் பொருளில் அமைந்த ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திலான 8 ஆவது 3R மாநாட்டில் நீர்ப்பாசன, நீர் வளங்கல் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா கலந்து கொண்டார்.

உட்புற விஜயங்கள்

I. இந்தியாவின் சட்டம், நீதி, இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கௌரவ ரவி ஷங்கர் பிரசாத் 2018 ஜனவரி 14-17 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். மேற்படி விஜயத்தின் போது, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் துறையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப் பெற்றது.

II. 2018 ஜூலை 11-12 வரையிலான காலப்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய சபாநாயகர்கள் உச்சி மாநாட்டில் இந்தியப் பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ சுமித்ரா மகாஜன் கலந்து கொண்டார்.

III. மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரின் வர்த்தகர்களின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையைச் சேர்ந்த 18 பேரடங்கிய தூதுக்குழுவொன்று செப்டெம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்தது. இந்த விஜயத்தின் போது இலங்கை வர்த்தக சபையுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

கொன்சியுலர் சேவைகள்

I. சென்னையில் அமைந்துள்ள பிரதி உயர் ஸ்தானிகராலயம் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்களை இந்திய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து விடுவித்துக் கொள்வதனை வசதிப்படுத்தியது. அத்துடன், தமிழ் நாடு மாநிலத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் தமது சுயவிருப்பத்தின் பேரில் தாயகம் திரும்பவும் அது வசதியளித்தது.

II. இலங்கை ஓய்வூதியர்களுக்கு இலங்கை ஓய்வூதியத் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து ஓயூதியத்தைப் பெற்றுக் கொடுக்கவும் மருத்துவ சிகிச்சை

பெற்றுவரும் இலங்கை நோயாளர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்ளவும் வசதியளித்தது.

அத்துடன்,

III. தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த அதிமுக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு, உபசரணை மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் வழிபாட்டு வசதிகளையும் ஒழுங்கு செய்திருந்தது.

இந்தியாவுடனான இருதரப்பு உறவுகள்

இலங்கையின் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கும் இந்தியப் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்குமிடையில் புதுடில்லியில் பெப்ரவரி 22-23 வரை நடைபெற்ற கடத்தல்காரர்களுக்கு எதிரான 28 ஆவது இந்திய – இலங்கை பணிப்பாளர் நாயகங்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை உயர் ஸ்தானிகராலயம் வசதிப்படுத்தியது.

வர்த்தகம்/ விமானப் போக்குவரத்து

I. ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் தனக்கான கோயம்புத்தூர், மதுரை, மற்றும் பெங்களூர் விமான நிலையங்கள் உள்ளிட்ட 14 விமான நிலையங்களுடனான விமானப் போக்குவரத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

பொருளாதார மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. சுற்றுலா நிறுவன இயக்குநர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பொன்றுக்கென சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகாரங்கள் கௌரவ அமைச்சரின் பெங்களூருக்கான விஜயத்தை வசதிப்படுத்தியது. பெங்களூரில் உள்ள ஊடகங்கள், சுற்றுலா நிறுவன இயக்குநர்கள் மற்றும் பிரயாணத்துறையினர் முன்னிலையில் இராமாயண திரைப்பட மாதிரிக் காட்சிகள் அடங்கிய இணையத்தளம் கௌரவ அமைச்சர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

II. இந்திய ஆடைக் கைத்தொழிலாளர்களுடனான சந்திப்பொன்றுக்கென இலங்கை கூட்டு ஆடைக் கைத்தொழில் சங்கத்தைச் சேர்ந்த தூதுக் குழுவொன்று 2018 செப்டெம்பர் 26-27 காலப்பகுதியில் புதுடில்லிக்கு விஜயம் செய்தது.

III. வடக்கு – கிழக்கு மற்றும் மலையகத்தில் நாடுபூராவுமான அவசரகால வீடமைப்பு வசதிகளுக்கான உதவி வழங்கப்பட்டது.

IV. இந்தியாவினால் வருடாந்தம் நேரு ஞாபகார்த்த 100 புலமைப்பரிசில்களும் ராஜீவ் காந்தி ஞாபகார்த்த 25 புலமைப்பரிசில்களும், அஸாத் மௌலானா திட்டத்தின் கீழ் 50 புலமைப்பரிசில்களும், பொதுநலவாயத் திட்டத்தின் கீழ் 5 புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 5-10 வரையிலான புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

கலாச்சார உறவுகள்

I. இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் உள்ள ராஜ்கிரில் 2018 ஜனவரி 11-13 வரை நடைபெற்ற 4 ஆவது சர்வதேச தர்ம- தம்ம மாநாட்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ திலக் மாரப்பன கலந்து கொண்டார்.

II. இந்தியாவின் சாரநாத் நகரில் அமைந்துள்ள முலகந்த குடி விஹாரையில் பாதுகாத்துப் பேணப்பட்டு வந்த புத்த பகவானின் புனித தந்த தாதுக்களை பொதுமக்கள் வழிபாட்டிற்கென இலங்கைக்கு 2018 ஏப்ரல் 27 - 2018 மே 02 வரையிலான காலப்பகுதியில் எடுத்து வரும் செயல்முறைகளை உயர் ஸ்தானிகராலயம் ஒருங்கிணைத்தது.

கல்விசார்ந்த விடயங்கள்

I. இலங்கை றுகுணு பல்கலைக்கழகம் சத்திஸ்காரில் உள்ள கைரகார் நகரில் உள்ள இந்திர கலா சங்கீத் பல்கலைக்கழகம் மற்றும் கல்கத்தா பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டது.

பாதுகாப்பு விடயங்கள்

I. இலங்கை புதுடில்லியில் ஜனவரி 09 இல் நடைபெற்ற 5 ஆவது இந்திய - இலங்கை வருடாந்த பாதுகாப்பு மாநாடு, 2018 பெப்ரவரி 07-09 வரை நடைபெற்ற இரு நாட்டுக் கடற்படை அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள், 2018 ஜனவரி 16-18 வரை நடைபெற்ற இரு நாட்டு விமானப்படை அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள், புதுடில்லியில் 2018 மார்ச் 20-22 வரை நடைபெற்ற இரு நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை மற்றும் 2018 மார்ச்சில் நடைபெற்ற இரு நாட்டுக் கடலோரக் காவற்படைகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை ஆகியவற்றில் கலந்து கொண்டது.

III. கோவா கப்பல் தள லிமிடெட் நிறுவனத்தில் நிர்மாணிக்கப்பட்ட 2 ஆவது உயர்தர கரையோரரோந்துப் படகினை 2018 மார்ச் 22 அன்று ஏற்றுக் கொண்டமையை ஒருங்கிணைத்தது.

<u>பாகிஸ்தான்</u>

<u>வெளிப்புற விஜயங்கள்</u>

I. இலங்கை மேன்மை தங்கிய ஜனாதிபதி 2018 மார்ச் 22-24 வரையிலான காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். மேற்படி விஜயத்தின் போது அவர் பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் சந்திப்புக்களை மேற்கொண்டார். இளைஞர் அபிவிருத்தி, இராஜதந்திரப் பயிற்சிகள், இலங்கை நிருவாக சேவை அதிகாரிகளுக்கான பயிற்சி மற்றும் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதிலான ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

II. நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ ரவூப் ஹக்கீம் 2018 ஏப்ரல் 11-15 வரையிலான காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார்.

III. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் என்.யூ.எம்.எம்.டபிளியூ. சேனாநாயக்க 2018 ஏப்ரல் 22-28 காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார்.

IV. மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.எச்.ரி.கமால் பத்மசிறி மற்றும் நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் கட்டுப்பாட்டாளர் நாயகம் திரு. பீ.பீ.எஸ்.சி நோனிஸ் ஆகியோர் பாகிஸ்தானில் உள்ள அரச கொள்கை தேசியப் பாடசாலைக்கும் (NSPP) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்குமிடையே (SLIDA) கைச்சாத்திடப் பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தும் முகமாக பாகிஸ்தானில் உள்ள அரச கொள்கை தேசிய பாடசாலைக்கு விஜயம் செய்தனர்.

V. லாகூரில் 2018 பெப்ரவரி 26-27 காலப்பகுதியில் நடைபெற்ற காலநிலை மாற்றம் மீதான ஆசிய – பசுபிக் நீதித்துறை மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கையின் பிரதம நீதியரசர் மாண்புமிகு பிரியசாத் டெப் பாகிஸ்தானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

உட்புற விஜயங்கள்

I. பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் காமர் ஜவாத் பஜ்வா இலங்கைக்கு 2018 ஜனவரி 15-17 வரை விஜயம் செய்தார்.

இருதரப்பு உறவுகள்

I. இலங்கையின் கால்நடைத்துறையை குறிப்பாக, பொலன்னறுவை பாற்பண்ணைக் கருத்திட்டம் மீது கவனஞ் செலுத்தும் வகையில், அபிவிருத்தி செய்யும் பொருட்டு பாகிஸ்தான் அரசினால் தொழில்நுட்ப உதவி மற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதிலான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

கல்வி மற்றும் பாதுகாப்பு

I. விசேட தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கு இராஜதந்திரப் பயிற்சி நெறியொன்று 2018 மார்ச்சில் வழங்கப்பட்டது.

II. பாகிஸ்தான் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் (PTAP) கீழ் எம்.பி.பி.எஸ் (MBBS), பீ.டி.எஸ் (BDS), டி.மருந்தகவியல் (D Pharmacy) மற்றும் பீ.எஸ்.சி.பொறியியல் (B.Sc Engineering) ஆகிய துறைகளில் இலங்கை மாணவர்களுக்கென 18 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

III. பாகிஸ்தான் முப்படையினர் இலங்கை இராணுவத்தினர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் திணைக்கள அதிகாரிகளுக்கென பயிற்சி நெறிகளை வழங்கினர்.

பலதரப்பு உறவுகள்

I. தெற்காசியாவில் பாதுகாப்பான உடல் நல சுகாதாரத்திற்கான 7 ஆவது தெற்காசிய மாநாடு – திட்டம் 2030 – (SACOSAN-VII) இஸ்லாமாபாத்தில் 2018 ஏப்ரல் 11 முதல் 15 வரை நடைபெற்றது.

பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்

I. ஜனாதிபதி 2018 மார்ச்சில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த போது, இந்த உயர் ஸ்தானிகராலயம் ஆற்றல்மிக்க பாகிஸ்தானிய முதலீட்டாளர்களுக்கான சந்திப்புக்களை ஒழுங்கு செய்திருந்தது.

II. இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டிய நான்கு உயர் பெறுமதி மிக்க முதலீட்டாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திக்கும் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்திட வசதியளிக்கப்பட்டது.

III. தெரிவு செய்யப்பட்ட பிரயாண முகவர்கள் மற்றும் பிரயாண பத்திரிகையாளர்களை பாகிஸ்தானில் வெளிவரும் முன்னணி சஞ்சிகைகளில் இலங்கை சுற்றுலாத்துறை வளர்ச்சி குறித்து எழுத வைக்கும் முகமாக உயர் ஸ்தானிகராலயம் அவர்களுக்கென பரிச்சயப்படுத்தல் சுற்றுலாவொன்றைத் திட்டமிட்டு செயற்படுத்தியது.

IV. பாகிஸ்தானிய வர்த்தக சமூகத்தினரிடையே இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் கைவினைப் பொருட்கள் பாவணையை ஊக்குவிக்கும் பொருட்டு, ராவல்பிண்டி வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையினால் (RCCI) ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச ராவல் எக்ஸ்போ – 2018 வர்த்தகக் கண்காட்சியில் உயர் ஸ்தானிகராலயம் கலந்து கொண்டது.

V. பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு 76,000 மெட்ரிக் தொன் யூரியா உர ஏற்றுமதியை மேற்கொள்ள உயர் ஸ்தானிகராலயம் வசதிப்படுத்தியது.

VI. பாகிஸ்தானின் தாவரப் பாதுகாப்புத் திணைக்களம் இலங்கையைச் சேர்ந்த இறக்குமதியாளர்களுக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதனை இடை நிறுத்திக் கொண்டது. கராச்சியில் உள்ள கொன்சல் ஜெனரல் சர்வதேச வர்த்தகச் சட்டக் கட்டுப்படுகளை தெளிவு படுத்தியதைத் தொடர்ந்து குறித்த விடயம் தீர்த்து வைக்கப்பட்டது.

VII. 2018 -2019 நிதியாண்டிற்கான பாகிஸ்தானின் நிதிச் சட்ட மூலத்தின் பிரகாரம் சுங்கவரி முரண்பாடு காணப்பட்டதுடன், இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு இறக்குமதி செய்யப்படும். MDF மரப்பலகைகள் மீது ஒழுங்குபடுத்தல் வரி விதிக்கப்பட்டது. இது சம்பந்தமாக, பாகிஸ்தான் மர வர்த்தகர் சங்க உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசிய கொன்சல் ஜெனரல், பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் மரப்பலகைகள் மீது ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த ஊக்குவிப்புக்கள் விடயத்தில் பாகிஸ்தான் அளித்திருந்த வாக்குறுதி பற்றி தெளிவு படுத்தியிருந்தார்.

VIII. விற்பனைக்காக முன்னரே தயாரிக்கப்பட்ட பாகிஸ்தானின் கறித்தூள் வகைகளை இலங்கைக்கு விநியோகிக்கவும் இலங்கையின் புத்தம் புதிய வாசனைத் திரவியங்கள் மற்றும் உணவுக்கு ருசியூட்டும் பொருட்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யவும் வழிவகை செய்யும் பொருட்டு இலங்கையின் சல்வா டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்திற்கும், பாகிஸ்தானின் நோராஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குமிடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வைபவத்தில் கொன்சல் ஜெனரல் கலந்து கொண்டார்.

IX. 22 பேரடங்கிய பாகிஸ்தான் வர்த்தகத் தூதுக் குழு 2018 ஏப்ரல் 26-28 வரை இலங்கைக்கு விஜயம் செய்திட கொன்சியுலேட் ஏற்பாடு செய்தது.

சுற்றுலாத்துறை

I. கொன்சியுலேட் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து பாகிஸ்தானின் கராச்சி நகரில் பெப்ரவரி 7-9 வரையிலான காலப்பகுதியில் உணவு மற்றும் கலாச்சார விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

II. இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்துடன் (SLTPB) இணைந்து நடாத்தப்பெற்ற பாகிஸ்தான் ட்ரவல் மார்ட் – 2018 நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த 10 சுற்றுலாத் துறை நிறுவனங்கள் கலந்து கொள்வதற்கான ஒழுங்குகளை கொன்சியுலேட் மேற்கொண்டிருந்தது.

கலாச்சார உறவுகள்

I. இலங்கையின் உணவுத்திருவிழா இஸ்லாமாபாத்தில் உள்ள மரியட் ஹோட்டலின் (Marriot Hotel) ஒத்துழைப்புடன் 2018 பெப்ரவரி 3 ஆம் திகதியன்று உயர் ஸ்தானிகராலயத்தினால் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

II. இலங்கையில் பிரதமர் அலுவலகத்தினால் 2018 ஏப்ரல் 28 முதல் 2018 மே 2 வரை ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் பண்டிகைக்கென கௌதம புத்தரின் புனித தந்த தாதுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு உயர் ஸ்தானிகராலயம் வசதி ஏற்படுத்திக் கொடுத்தது.

III. லாகூரில் உள்ள பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழக சர்வதேச மாணவர் சங்கம் உயர் ஸ்தானிகராலயத்துடன் இணைந்து சர்வதேச கலாச்சார மற்றும் உணவுத் திருவிழாவினை ஒழுங்கு செய்தது.

தொழில் ஆக்கநலன்

I. உயர் ஸ்தானிகராலயம் மற்றும் கொன்சியுலேட் ஆகிய இரண்டும் இலங்கைச் சமூகத்தினரை கிரமமான முறையில் சந்தித்து வருவதுடன் அவர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியும் வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு

இலங்கையினது நிரந்தர தூதரகங்கள்/ உயர்ஸ்தானிகராலயங்கள்/ நியூயோர்க் ஜெனிவா வியன்னா, பரிஸ் ரோம், நைரோபி, பெங்கொக், மற்றும் எக்விலுள்ள தூதரகங்கள் என்பன பல்தரப்பு செயற்பாடுகளின் அடிப்படையின் பிரிவின் கீழ் வருவனவாகும். இந்தப் பிரிவு, ஊடகங்கள், மற்றும் சமுதாய அமைப்பு, வெளிநாட்டு உள்நாட்டு மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் முகவர்கள் அத்துடன் அதனுடன் இணைந்த அமைச்சுகள் என்பனவற்றின் செயற்பா:களை ஒருங்கிணைக்கின்றது. இந்தப்பிரிவின் 2018 ஆம் ஆண்டின் காலப்பகுதியின் செயற்பாடுகளின் முக்கிய பகுதிகளில் பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. ஐக்கிய நாடுகளின் பொதுக்கூட்டத்தின் 73வது கூட்டத்தொடர் நியூயோர்க் 25, செப்தெம்பர் - 1 ஒக்டோபர் 2018

    - உயர் மட்ட பிரிவு அடங்களாக 2018 செப்தெம்பரில் 73வது கூட்டத்தொடரின் உயர் மட்ட பிரிவில் அதிமேதகு சனாதிபதி தலைமையில் இலங்கை தூதுக் குழுவின் பங்கேற்பிற்காக பிரிவு பிரத்தியேகமான பங்களிப்புகளை வழங்கியுள்ளது. அமைச்சும் உயர் மட்ட பிரிவின் பக்கச்சார்புடன் ஐக்கிய நாடுகளின் உயர் அதிகாரிகள் மற்றும் தூதுக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் ஏனய நாடுகள் ∴ அரசாங்க தலைவர்களுடன் அதிமேதகு சனாதிபதியின் சந்திப்பு கூட்டங்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்தது.

    - அயர்லாந்தின் பிரதி பிரதமர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரோமேனியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அசர்பயிஜானின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இந்துநேசியாவின் கடல்சார் அலுவல்கள் மற்றும் மீன்பிடிதுறை அமைச்சர் லுக்சம்பேர்க்கின் வெளிநாட்டு மற்றும் ஐரோப்பிய அலுவல்கள் அமைச்சர் மற்றும் கனடாவின் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் என்பனவற்றுடன் இருதரப்பு சந்திப்புகளுக்கு நிவ்யோர்கிலுள்ள நிரந்தர தூதரகம் வசதிகளை அமைத்து வழங்கியது. பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் செயலாளர் நாயகம், பிரதான பிரதி உதவி செயலாளர் ஐக்கிய அமெரிக்காவின் சுகாதாரம் மற்றும் மனிதபிமான சேவைகளின் மத்திய மற்றும் தெற்கு ஆசிய அலுவல்கள் பணியகம் என்பனவற்றுடன் இருதரப்பு சந்திப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

    - யுஎன்ஜிஏ வின் பக்கசெயற்பாட்டுடன் நடந்த பொதுநலவாய வெளிநாட்டு அமைச்சர்கள், சார்க் மற்றும் ஏசிடி கூட்டங்களில் இலங்கையும் பங்குபற்றியது. வெளிநாட்டு அமைச்சர்களின் ஆசியாவில் நம்பிக்கையை கட்டி எழுப்பும் நடவடிக்கையின் விசேட கூட்டங்களில் இலங்கை புதிய அங்கத்தவராக வரவேற்கப்பட்டது.

2. **நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள்**

    ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றம்

    - இலங்கையில் மனித உரிமைகள், மற்றும் பொருப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை 30.∴1 (2015) மற்றும் 34.∴1 (2017) தீர்மானங்கள் என்பனவற்றை அமுழ்படுத்துவதை நிச்சயப்படுத்த அரசாங்கம் எடுத்திருக்கும் செயற்பாட்டிற்கு ஒத்தாசை நல்கி ஒருங்கிணைக்க பிரிவு ஏனய பங்கேற்பாலர்களுடன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

    - இலங்கையில் மனித உரிமைகள் நல்லிணக்கம், மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதலில் இலங்கையால் பெறப்பட்ட முன்னேற்றம் என்பன முறையாக பேணப்பட்டு வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்கள் அடங்களாக சம்பந்தப்பட்ட பங்காளர்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது

- ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 2018வது அமர்வுகளில் இலங்கை பங்குபெற பிரத்தியேகமான மற்றும் வழங்கும் பொருட்கள் சேவைகள் தயார்படுத்தப்பட்டன. (26 பெப்ரவரி - 23 மார்ச் 2018) 38வது அமர்வு (18 ஜீன் - 06 ஜுலை 2018) மற்றும் 39வது அமர்வு (10 - 28 செப்டம்பர் 2018)

  - இலங்கை பற்றிய மனித உரிமைகளக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தாணிகரது அலுவலக அறிக்கையை சமர்ப்பிப்பது தொடர்பாக மான்புமிகு எம்எப்ஏ ஜெனிவாவுக்கு 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 - 23 ஆம் திகதி வரை விஜயம் செய்தார். தூதுக் குழுவின் ஏனையோர் மான்புமிகு கலைஞர் சரத் அமுனுகம பாராளுமன்ற உறுப்பினர், மான்புமிகு பயிஸர் முஸ்தபா பாராளுமன்ற உறுப்பிணர் மற்றும் மனோ தித்தவெல செயலாளர் நாயகம், இலங்கையின் நல்லிணக்க பொறிமுறை ஒருங்கிணைப்பிற்கான செயலகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏனய சிரேஸ்ட அதிகாரிகள்

  - 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த 37வது அமர்வில் மனித உரிமைகளுக்கான பதில் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தாணிகரினால் இலங்கை பற்றிய ஔச்சிஎச்ஆரின் அறிக்கை வழங்கப்பட்டதை தொடர்ந்து அக்கரையுள்ள நாடாக இலங்கை குறுக்கிட்டது

- ஒத்தாசை நல்கும் பிராந்தியங்களுக்கு இடையிலான 4 அறிக்கை மற்றும் 16 தீர்மானங்கள் தொடர்பான சிபாரிசுகள் முழுமையான அவதானிப்புகளை மேற்கொள்ளல் என்பனவற்றிற்கு ஒத்தாசையாக 17 குருக்கீடல்களை மேற்கொண்டு பேரவையுடன் இலங்கை ஜனவரி - செப்டெம்பர 2018 காலப்பகுதியில் ஈடுபாடுகளை மேற்கொண்டது. 3 அமர்வுகளின் காலப்பகுதியில் அங்கத்துவ நாடுகள் மற்றும் அவதானிப்பு நாடுகள் என்பனவற்றால் இலங்கை பற்றிய குறிப்புகள் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது. இது நாட்டில் மனித உரிமைகளின் முன்னேற்றமான நிலையை பிரதிபலிக்கின்றது என்று கருத்திற்கொள்ளலாம் மற்றும் அது வெளிநாட்டில் எவ்வாரு பிரதிபடுத்தப்படுகின்றது

- அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை சார்பாக பின்வரும் அறிக்கைகள் குருக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

  - 2018 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 23 - 27 ஆம் திகதிகளில் அபிவிருத்திக்கான உரிமை பற்றிய தொழிற்பாட்டு குழுவின் 19வது அமர்வின் அறிக்கை

  - 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 - 17 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்த தொழிற்பாட்டு குழுவின் அறிக்கை பற்றிய 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் 'நாடு தொடர்பான' என்ற அறிக்கை மற்றும் (மார்ச் 2018) 37வது மனித உரிமைகள் பேரவையின் போது தன்னிச்சையான தடுத்து வைத்தல் தொடர்பான தொழிற்பாட்டு குழவுடனான கலந்துரையாடலின் போதான அறிக்கை

- மனித உரிமைகள் மாநாட்டின் 2018 வது சமுதாய கூட்டத்திற்கு இலங்கை தலைமைதாங்கி ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளுக்கு நிரந்தர பிரதிநிதியாக உள்ள இலங்கையின் தூதுவர் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கூட்டத்தில் ஒரு வெளிப்படையான அறிக்கையை சமர்ப்பித்தார்

உலகளாவிய காலத்துகால மீளாய்வு

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி 37 வது மனித உரிமைகள் பேரவையில் ஆலோசனை குழுவினால் இலங்கையின் உலகளாவிய காலத்துக்கால மீளாய்வு

தொழிற்பாட்டு குழுவின் பிரதிபலன்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது பொது மீளாய்வில் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகளை மீளாய்வு செய்யவும் அத்துடன் அரசாங்கத்தின் தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் அவற்றை உள்ளடக்க பல வழிகளை ஆராய்ந்து அறிய 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி பங்குபெரும் அமைச்சுகளின் பிரதிநிதிகள் மற்றும் சமுதாய சங்கத்தின் அங்கத்தவர்களுடன் ஒரு கலந்துரையாலை இணைந்து ஏற்பாடு செய்தது.

ஐக்கிய நாடுகள் விசேட செயற்பாடுகள் ஆணை உரிமை உடையவர்கள்

- 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இலங்கை அரசாங்கத்தினால் விசேட நடவடிக்கைகள் ஆணை உரிமை உடையவர்களுக்கு வழங்கப்பட்ட நிலையான அழைப்பை தொடர்ந்து முக்கியமாக பொருளாதாரம் சமுதாயம், மற்றும் கலாச்சார உரிமைகள் எல்லா மனித உரிமைகள் ீ யின் முழுமையாக அனுபவிக்கக்கூடியவை பற்றிய சர்வதேச நிதி கடற்பாடுகள் தொடர்பான மற்றும் வெளிநாட்டு கடனின் தாக்கங்கள் பற்றி ஐக்கிய நாடுகள் சுதந்திரமான நிபுணர் திரு ஜயுயான் பப்லோ போஹொஸ்லாவ்ஸ்க 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 - 11 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தை இந்தப் பிரிவு புருன் ஜெனிவாவிலுள்ள சுதந்திர நிபுணரது செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட திறத்தவர்களுடன் ஒருங்கிணைந்தது. ்

தேசிய மனித உரிமைகள் செயற் திட்டம்

- செயற்திட்டத்தின் நடைமுறைபடுத்தலை கங்காணிப்பதுடன் அதிலுள்ள குறிப்பிடப்பட்ட செயல்களின் குறிப்புகளையும் நடைமுறைப்படுத்தி அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட அமைச்சுகளுக்கிடையேயான பொறிமுறைக்கு உதவி வழங்கி 2017 - 2021 தேசிய மனித உரிமைகள் செயற் திட்டதை பயன்தரக்கூடிய முறையில் நடைமுறைபடுத்த அமைச்சு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் ஒரு பரந்த ஆலோசணை செயல்முறை அடிப்படையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டத. தேசிய மனித உரிமைகள் கௌரவ பிரதமர் தலைமையில் மற்றும் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற முகவர்களால் ஒத்தாசை வழங்கப்பட்டு மூன்று அமைச்சகளுக்கிடையிலான குழவின் மூலம் நடைமுறைபடுத்தப்படுகின்றது.

3. இளைஞர்

- நிவ்யோர்கிலுள்ள நிரந்தர தூதரகம் ஐக்கிய நாடுகளுக்கான போர்த்துகளிலுள்ள நிரந்தர தூதரகத்துடன் சர்வதேச தொழிலாளர் சங்கம் இளைஞருக்கான செயலாளர் நாயகத்தின் தூதுவரின் அலுவலகத்துடன் பங்காளியாக இணைந்து அடுத்தடுதத நான்காவது வருடமாக **உலக இளைஞர் திறன்கள் நாள் 2018'** ஐ நினைவுகூறும் முகமாக ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தார்கள். ஐக்கிய நாடுகள் அமைதியை கட்டி எழுப்பும் நிதி

4. அமைதியை கட்டி எழுப்பும் நிதி

இலங்கை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் அமைதியை கட்டி எழுப்பும் நிதிக்கு ஒரு பயனாளியாக உள்ளது. அதன்படி சம்பந்தப்பட்ட திறத்தவர்களுடன கலந்துரையாடி ஒரு தேசிய அமைதியை கட்டி எழுப்பும் முன்னுரிமை திட்டம் முன்னெடுக்கப்பட்டது அமைதியை கட்டி எழுப்பும் நிதியத்தால் நிதிகள் வழங்கப்படும் செயற் திட்டங்களின் முன்னேற்றங்களை கங்காணிக்க ஒரு அமைதியை கட்டி எழுப்பும் சபை நிறுவப்பட்டது. அத்துடன் 2017 ஆம் ஆண்டு முதல் வழமையான சபை கூட்டங்கள் நடந்தேறின. ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருடன் அமைதியை கட்டி எழுப்பும் சபை கூட்டத்தில

வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர இணை தலமையளிக்கின்றார். 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்தப் பிரிவு அமைதியை கட்டி எழுப்பும் சபையின் 09 கூட்டங்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி வழங்கியுள்ளது. பிரிவு அமைதியை கட்டி எழுப்பும் நிதியத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்களை கங்காணிக்கும் குழுவில் பிரிவு எம்எப்ஏ வை பிரதிநிதித்துவம் செய்கின்றது அத்துடன் பிரிவு அவற்றை வெற்றிகரமாக நடைமுறைபடுத்த ஆக்கபூர்வமாக பங்களிக்கின்றது

5 ஆள் கடத்தல்

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரிவு இலங்கையின் அறிக்கையை அமெரிக்க ஆள் கடத்தல் திளைக்கள அறிக்கையுடன் ஒருங்கிணைத்தது. இந்த விடயத்தை கவனத்தில் கொள்வதற்காக எடுக்கப்பட் முயற்சிகளின் விளைவாக அடுத்தடுத்த இரண்டாவது வருடமும் 2018 வது ஆண்டுக்கான அமெரிக்காவின் அரச திணைக்களத்தின் அறிக்கையில் இலங்கை 2வது இடத்தை தக்கவைத்துக் கொள்வதில் வெற்றி கண்டது

- பிரிவு ஆள் கடத்தல் பொறியில் அகப்பட்வர்களை அடையாளம் காண அதிகாரிகளுக்கு பயிற்ச்சி வழங்க வசதிகள் வழங்கி நடவடிக்கைகளுக்கு உதவி செய்தது. மற்றும் பிரிவு பாதுகாப்பு சேவைகளை முன்னேற்றம் அடையச் செய்து ஆள் கடத்தல் குற்றங்களை தடுகக வசதிகளை செய்து கொடுத்தது. இது தொடர்பாக ஆள் கடத்தல் பொறியில் அகப்பட்டவர்களை கையாள்வதில் உணர்சியுடனும் பயன்தரக்கூடிய முறையில் பதிலளிக்க இலங்கை தூதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் திறன்கள் மற்றும் அறிவை மேம்பாடு செய்ய உதவுவதற்கு ஒரு இணையத்தள பயிற்ச்சிமுறை உறுவாக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்ச்சி திட்டம் முதன் முறையாக 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதேப்போன்ற ஒரு பயிற்ச்சி திட்டம் சிலி லங்கா எயார் லைன்ஸ் விமான பணியாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆள் கடத்தல் பொறியில் அகப்பட்டோர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவி செய்ய விமான பணிப்பாளர்களது திறமை ஆற்றலை அதிகறிக்க ஆரம்பிக்கப்பட்டது.

6. **மனிதபிமான அலுவல்கள்**

செஞ்சிலுவை சங்க சர்வதேச குழு

- 1989 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சிறைசாலைகளில் மற்றும் தற்காலிகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள் ஆகியவற்றில் உள்ள நபர்களை பார்க்க விஜயம் செய்யும் செஞ்சிலுவை சங்க சர்வதேச குழுவுடன் இலங்கை நல்ல கூட்டுறவை பேணி வருகின்றது. 2018 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தில் இலங்கை அரசாங்கம் மற்றும் செஞ்சிலுவை சங்கத்தின் சர்வதேச குழு " சுதந்திரத்தை இழந்த நபர்களின் நன்மைக்கான ஒத்தாசைகள் மற்றும் மனிதபிமான செயற்பாடுகள்" என்ற உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கம் மற்றும் செஞ்சிலுவை சங்க சர்வதேச குழு என்பன கைச்சாத்திட்டன. மேலே கூறப்பட்ட உடன்படிக்கையின் உறுதியான முடிவுக்கு பிரிவின் பங்கெடுப்பு மற்றும் கலந்துரையாடல்களுக்கு முழுமையாக பங்களித்தமை வழி வகுத்தது.

- இராணுவ நிறுவனங்களில் இராணுவ சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவ நபர்களை விட இலங்கை அரசாங்க வரம்பின் கீழ் உள்ள தடுத்து வைக்கப்பட்டவர்கள் மற்றும் தடுத்து வைக்கும் நிலயங்கள் என்பனவற்றிற்கு செஞ்சிலுவை சங்க சர்வதேச குழுவுக்கு இந்த உடன்படிக்கை நுழைவுரிமை வழங்குகின்றது. இந்த உடன்படிக்கை மூலம் இலங்கை அதன் நாட்டில் தடுத்து

வைக்கப்பட்டவர்கள் கையாளப்படும் விதம் மற்றும் தடுத்துவைத்திருக்கும் சூழ்நிலைகள் என்பனவற்றை மேம்படுத்தும் முயற்சியில் சர்வதேச அனுபவங்களூ மற்றும் செஞ்சிலுவை சங்க சர்வதேச குழுவின் நிபுணத்துவம் என்பன மூலம் பயன் பெறலாம். அத்துடன் சர்வதேச அங்கீகாம் பெற்ற தரப்படுத்தலுடன் அதனுடைய முறைமையை இணைத்துக கொள்ளலாம்

7. **ஆயுதக்களைவு**

- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி பாவனைக்கு தடை ஆயுத குவிப்பு மற்றும் கன்னி வெடி உற்பத்தி என்பனவற்றை அழிக்கும்போது வேறு இடத்திற்கு மாற்றுதல் என்பனபற்றிய மாநாட்டின் நுழைவு அனுமதியின் ஆவணத்திற்கு இலங்கை தனது நெடுநாள் பொருப்பான மனிதபிமான ஆயுதகளைவின் உறுதியான பொருப்பை தெளிவாக எடுத்துக்காட்டி இணங்கியது மற்றும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி நிவ்யோர்க்கில் ஐக்கிய நாடுகளுக்கு இலங்கையின் நிரந்தல தூதரகம் மூலமாக ஐக்கிய நாடுகள் தலமையகத்தில் நுழைவுஅனுமதி ஆவணத்தை சமர்ப்பித்து ஆயுத கலைவு உடன்படிக்கைக்கு இணங்கியது..

- பின்வருவன ஆயுத களைவு பகுதியின் 2018ஆம் ஆண்டின் சிறப்பு அம்சங்கள் ஆகும்

    - ஆயத களைவு கூட்டத்தின் உடன்படிக்கைக்கு நாடுகளின் தரப்பினர்களின் 9வது கூட்டத்தின் தலைமை பதவி மற்றும் ஆயுத களைவ மாநாட்டின் தலைவர் பதவியை இலங்கை மேற்கொண்டது

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரை இலங்கை பாவனையின் தடுப்பு, ஆயத குவிப்பு தயாரிப்பு மற்றும் அவற்றை அழிப்பதில இடமாற்றம் என்பன பற்றிய மாநாட்டில் இலங்கை விசேட தூதுவர் பிரினஸ் மீர்ட் பின் ராட் அல் யுசெயின் என்பவரை இலங்கை வரவேற்றது.

- இலங்கையின் (ஒட்டாவா உடன்படிக்கை) நில கன்னி வெடி தடை மாநாட்டில் இலங்கை கலந்துகொண்டதை தொடர்ந்து ஜெனிவாவில் உடன்படிக்கையின் துணை பிரிவை நடைமுறைபடுத்துதலுடன் ஜெனிவா ஈடுபாடுகளை வசதிபடுத்தியது. அத்துடன் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஐஎஸ்யு வுடன் நடைபெற்ற தனிப்பட்ட நாட்டு சமர்ப்பணம" என்ற நிகழ்வில் இணைந்து விருந்தோம்பல் செய்தது.

- 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சமர்ப்பிக்கவிருக்கும் கன்னிவெடி உடன்படிக்கையை குறிக்கும் அரசு தரப்பின் எழுதி இறுதியாக்கம் செய்வதை பிரிவு ஒருங்கிணைக்கின்றது

- பிரிவு தேசிய கன்னி வெடி நடவடிக்கை மூலோபாயத்தின் இடை காலவரையறை மீளாய்வில் எம்எப்ஏ யை பிரதிநுவப்படுத்தியது.

8. ஐக்கிய நாடுகள் அங்கத்துவ நாடுகளின் பொருப்புகளுக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் தீர்மானங்களை நடைமுறைபடுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உள்நாட்டு சட்ட ஒழுங்குமுறைகள் எழுதப்பட்டு வர்த்தமானியில் ஈரான் பற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் 2231வது தீர்மானத்தை அறிமுகப்படுத்த ஈரான் பற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் 2231வது தீர்மானத்தை அறிமுகப்படுத்த 1968 ஆம் ஆண்டு 45ம ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டது. அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2080.˙.34 ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மான இலக்கம் 2231 தொடர்பான தடைகளை நடைமுறைபடுத்த உதவியது தீர்மானங்களை நடைமுறைபடுத்துவது தொடர்பாக செயலாளர் பாதுகாப்பு அமைச்சு அடுத்த மேல் அலுவலராக நியமிக்கப்பட்டார்

- சம்பந்தப்பட்ட அமைச்சுகள் திணைக்களங்கள் என்பனவற்றின் பயனுக்காக போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உதவியுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் திணைக்களங்கள் என்பனவற்றின் பயனுக்காக போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உதவியுடன் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொழும்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் தீர்மான இலக்கம் 1540 நடைமுறைபடுதடதுவது தொடரர்பாக மூன்று பயிற்ச்சி செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன

9. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்

- அகதிகளை மீளக்குடி அமர்த்தல் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் புகலிடம் வேண்டுவோர அகதிகள் என்பவர்களின் பதிவுகளின் சம்பந்தப்பட்ட அரசாங்க முகவர்கள் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தாணிகர் இடையே ஒத்துளைப்பை பிரிவு தொடர்ந்தும் நல்கி வருகின்றது பிரிவு மனிதபிமான கரிசனைகளை கவனத்தில் கொள்கின்றது மற்றும் ரஜேஊருநுகு மற்றும் ருஊேர்சு என்பனவற்றின ஒத்தாசையுடன் அகதிகளுக்கான கல்வியை பெறும் விவகாரம் மற்றும் புகலிடம் தேடுபவர்களின் பிள்ளைகள் என்பனவற்றை கவனத்தில் கொள்கின்றது

- குறிப்பாக இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கை அகதிகளின் மீள்குடியமர்த்தல் சம்பந்தமான பிரச்சினைகளை பிரிவு கவனத்தில் கொள்கின்றது 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இலங்கைக்கு திரும்பி வந்த அகதிகளின் எண்ணிக்கை 948 மற்றும் மொத்தமாக 10,675 இலங்கை அகதிகள் 2009 ஆண்டு முதல் இலங்கைக்கு திரும்பி உள்ளார்கள்.

- அகதிகள் மற்றும் புகலிடம் தேடுவோர் என்பவர்களது சர்வதேச பாதுகாப்பு தொடர்பான விளிப்பூட்டல்களை அரசாங்க அலுவலகர்கள் மத்தியில் எற்படுத்த 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐந்து பயிற்ச்சி செயலமர்வுகள் (107 பங்குபற்றியவர்கள்) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தாணிகரால் நடத்தப்பட்டது

10 வேட்புமனு

- ஐக்கிய நாடுகள் .அமைப்புகளுக்கு தேர்தல்களில் இலங்கையின் வாக்குகளை வழங்கும் முறைகள் பற்றிய தகவல்செறிவு சாதனை அமைப்பை பேணல் மற்றும் தேர்தல்களில் இலங்கையின் வாக்குகளை அவர்களுடைய வேட்பு மனுக்களுக்கு பரிமாற்றம் செய்வதன் மூலம் ஒத்தாசை வழங்கி ஏனய ஐக்கிய நாடுகள் அங்கத்துவ நாடுகளுடனான இலங்கையின் உறவுகளுக்கு பிரிவு பங்களிப்பு வழங்கி உள்ளது.

- இருதரப்பு ஒத்தாசைகளை வளர்ப்பதற்காக இலங்கை அதனுடைய ஆதரவை ஏனய ஐக்கிய நாடுகளுக்கு வழங்குகின்றது

- 2018 - 2022 காலப்பகுதிக்கு யுனெஸ்கோவின் உணர்ந்தறிய இயலாத கலாச்சார மரபுரிமையை பாதுகாப்பது சம்பந்தமாக அரசாங்கங்களுக்கு இடையிலான குழுக்களுக்கு இலங்கையின் வேட்பாளர் மனுவுக்காக ஒத்தாசையை வேண்ட பிரிவு இலங்கை தூதரகங்கள் இடையே ஒருங்கிணைப்பு செய்தது.

- அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அமைச்சுகள் திணைக்களங்கள் என்பனவற்றின் பயனுக்காக போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உதவியுடன்

- சம்பந்தப்பட்ட அமைச்சுகள் திணைக்களங்கள் என்பனவற்றின் பயனுக்காக போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உதவியுடன்

11. நீடித்த அபிவிருத்தி இலக்குகள்

- பிரிவு கொள்கை அலுவல்கள் மற்றும் கால முறைப்படி அறிக்கையிடுதல் தொடர்பாக நீடித்த அபிவிருத்தி அமைச்சு மற்றும் யுஎன்டிபி கொழும்பு ஐக்கிய நாடுகள் செயலகம் இடையே ஒருங்கிணைத்தது.

- நியூயோர்க்கின் நிரந்தர தூதரகம் நீடித்த அபிவிருத்தி வனஜீவியம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி என்பனவற்றின் கங்காணிப்பு அமைச்சர் தலைமையில் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகள் அடங்கிய உயர் மட்ட தூதுக்குழு பங்குபற்றுவதற்கு வசதிகள் அமைத்து கொடுத்தது.

சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம்

- 2019 ஆம் ஆண்டு நகரங்களுக்கான அரச தரப்பினர்களின் 18வது கூட்டம் இலங்கையால் விருந்தோம்பல் செய்யப்படும். இது தொடர்பாக பிரிவு ஜெனிவா, மற்றும் நீடித்த அபிவிருத்தி அமைச்சு மற்றும் CITES செயலகத்துடன் ஏற்பாடுகள் தொடர்பாக தொடர்ந்து அணுக்கமாக செயலாற்றி வருகின்றது

- பிரிவு அமைச்சுகள் மற்றும் புருன்/ ஜெனிவா மற்றும் பல்தரப்பு முகவர்கள் இடையே பாசல் ரொட்டோடம் மற்றும் ஸ்டொக்ஹோல்ம் உடன்படிக்கைகள் தொடர்பாக இலங்கையின் இணக்கப்பாட்டிங்காக தொடர்ந்து ஒருங்கிணைப்பை மேற்கொள்கின்றது.

12. பல்தரப்பு அரங்குகளில் இலங்கையின் பிரதிநிதுத்துவம்

சர்வதேச மாநாடுகளில் பங்குபெறுதல் மற்றும் இலங்கையின் பிரதிநுவத்துவத்திற்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் ஆயுத களைவு சுகாதாரம் சமுதாய பொருளாதார பிரச்சினைகள் சுற்றாடல் அடங்களாக பலவித விளைவுகள் தொடர்பாக இலங்கையின கவனத்தை ஈர்க்கக்கூடிய விவகாரங்கள் தொடர்பாக பதவிகளை உருவாக்குதல் ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டங்களில் பங்குபெற 34 அங்கீகார கடிதங்கள் தயாரித்தல (2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை)

13. விசாக்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பதிவுகளை செயலாற்றுதல்

வருடம் முழுவதும் இலங்கையில் நடைபெறும் மாநாடுகள் பயிற்ச்சி செயலமர்வுகள் கூட்டங்கள் கருத்தரங்குகள் என்பனவற்றிற்கான விசாக்களைவழங்க வசதிபடுத்தி கொடுத்தல. அரசார்பற்ற நிறுவனங்களால் அரச சார்பற்ற நிறுவனங்களிக் பதிவுக்கு அமைச்சுவின் உதவியை நாடும்போது வசதிபடுத்தி கொடுத்தல். 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை பிரிவு 2253 விசாக்களை வழங்கியுளளது.

14 **ஐக்கிய நாடுகள் மற்றும் அது தொடர்பான முகவர்களுக்கு இலங்கையின் பங்களிப்பு**

- அந்த நிறுவனங்களில் இலங்கையின் அங்கத்துவத்துகான கொடுப்பனவுகளை ஐக்கிய நாடுகள் முகவர்களுக்கு வழங்க பிரிவு சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கின்றது

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்காக 56 நாடுகளின் தொகுதியின் ஐக்கிய நாடுகளின் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை ஒருங்கிணைக்க இலங்கை ஆசிய பசுபிக் குழுவில் தலமை தாங்கியது. தொடரில் தலைவராக இலங்கையும் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு சிறு கூட்டத்தில் பங்குபற்றி மூலோபாய ஆலோசணை தொடர் குழ அடங்களாக இணை நிதியத்தின் திட்டமிடப்பட்ட ஆட்சி கட்டமைப்பு பற்றி தொடர் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் UNDS மாற்றமடையும் அணிக்கு விளக்கம் அளித்தது. நெல்சன் மன்டேலாவின் சமாதான உச்சிமாநாட்டை ஆரம்பிப்பதற்கு முன் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி UNSG யின் முன்னிலையில் தென் ஆபிரிக்காவின் முன்னால் ஜனாதிபதி நெல்சன் மன்டேலாவின் உருவச் சிலையை திறக்கும் வைபவத்தில் ி இலங்கை APGG யை பிரதிநிதித்துவப்படுத்தியது.

வட அமெரிக்கா மற்றும் கனடா

1.1 ஐக்கிய அமெரிக்க நாடுகள்

சமகால அங்கீகாரங்கள்: வோஷிங்டன் டி.சி: மெக்ஸிகோ, ட்ரினிடாட் மற்றும் டொபாகோ

அ. இருதரப்பு உறவுகள்

I. இலங்கையின் மேம்பாடுகளை மதிப்பிடுவதற்காக, அமெரிக்க அரசாங்க திணைக்களம், தேசிய பாதுகாப்பு அவையினர், காங்கிரஸ் உறுப்பினர்கள்/ ஊடகத்தினர் போன்றோர் தூதரக பிரதி நிதிகளைச் சந்தித்தனர். இந்த அறிக்கைக்கான காலப்பகுதியில் தூதரகமானது ஏறத்தாழ 220 நேரடிச் சந்திப்புகளை (சந்திப்புகள், பரஸ்பர உடையாடல்கள்) மேற்கொண்டது. உயர்மட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதன் முக்கியத்துவத்தை நிருவாக மற்றும் காங்கிரஸ் பிரதிநிதிகள் இனங்கண்டனர்.

II. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மூன்றாவது உயர்மட்ட அதிகாரியான அரசியல் விவகாரங்களுக்கான இராஜாங்க செயலாளர் டொம் ஷனொன், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின வரவேற்பில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

III. 2018 மே மாதம் ஆயுதப்படைச் சேவைகள் குழுவின் பிரதிநிதி மக் தோன்பரியின் தலைமையில் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்தது. ஆகஸ்டில், இலங்கைக்கான வெளிநாட்டு இராணுவ நிதிக்கு 39 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்தது. பரஸ்பர கல்வி மற்றும் கலாச்சார பரிமாற்றச் சட்டத்தின் கீழ், பெப்ரவரி 2018 இல், காங்கிரஸ் சபையின் வெளிநாட்டு விவகாரக் குழு பிரதிநிதி சென்சென்ப்ரென்னர் அவர்களும் அவரது பிரதான பணியதிகாரி மாட் பிசேனியஸும், இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

IV. தூதுவரின் கோரிக்கைக்கிணங்க, பிரதிநிதி ராஜா கிருஷ்ணமூர்த்தி இலங்கை பற்றிய காங்கிரஸ் அரசியல் கட்சிக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

V. லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள வெளிநாட்டு தூதரக அலுவலகத்துடன் துணைத் தூதரகம் இணைந்து மேற்கொண்ட, தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கிடையே தொழில்முறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளல் பற்றிய நிகழ்ச்சியின்போது, அதில் பெண்கள் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான உத்திகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

VI. தூதரகத்தின் கோரிக்கைக்கு இணங்க, காங்கிரஸ் கூட்டமைப்பின் இணைத்தலைவர், பிரதிநிதி டீனா டைட்டஸ் அவர்கள், அமெரிக்க – இலங்கை இராஜதந்திர உறவின் 70 ஆவது வருட நிறைவினைப் பதிவுசெய்து அறிக்கை வெளியிட்டார்.

VII. தூதரகம் தொடர்ந்து சிந்திப்போர் குழுமத்துடன் ஈடுபாட்டுடன் இருந்துவருகிறது. அக்டோபரில் பாரம்பரிய நிறுவனத்தின் ஆசிய கற்கைகள் மையத்தின் இயக்குனரின் தலைமையில் ஒரு குழு, இலங்கைக்கு விஜயம் செய்து, பிரதமருட்பட அரசாங்க பிரதிநிதிகளைச் சந்தித்தது. அத்துடன் அவர்கள் LKI RSS உடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பையும் மேற்கொண்டனர்.

VIII. செப்டெம்பர் 2018 இல், கௌரவ சாகல ரத்னாயக்க வோஷிங்டன் டி.சிக்கு விஜயம் செய்து, பாதுகாப்பு, தேசிய பாதுகாப்புக்கழகம், USAID, Millenium Challenge Corporation ஆகியவற்றின் இராஜாங்க அதிகாரிகளையும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களையும் சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு பற்றிக் கலந்துரையாடினார்.

IX. ஜூலையில் வோஷிங்டனுக்க்கு விஜயம் செய்த வெ.நா.அமைச்சின் செயலாளர் திரு பிரசாத் காரியவசம், பாதுகாப்பு, தேசிய பாதுகாப்புக்கழகம், USAID, Millenium Challenge Corporation ஆகியவற்றின் இராஜாங்க அதிகாரிகளையும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களையும் சந்தித்து, இலங்கையில் இன, மத சுதந்திரம் பற்றிக் கலந்துரையாடினார். அத்துடன் அவர், அமெரிக்க இராஜாங்க செயலாளரால் நடத்தப்பட்ட, முதலாவது **வருடாந்த சர்வதேச சமய சுதந்திர அவை**'யில் இலங்கைக் குழுவினருடன் கலந்துகொண்டார். அந்த அவைக்கு அழைக்கப்பட்டிருந்த 80 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

X. சிறுபான்மை மதத்தவருக்கான சிறப்பு ஆலோசகர் நொக்ஸ் தேம்ஸ் அவர்கள் மார்ச்சில் இலங்கைக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து சாத்தியமான ஒத்துழைப்பு பற்றிக் கலந்துரையாடுவதற்காக தூதுவர் அவரைச் சந்தித்துப்பேசினார். டிசம்பர் 2018 இல் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் அமெரிக்க நீதித்துறை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு உறுப்பினர்கள், இலங்கை சட்ட அமுலாக்கலில் பயிற்சியையும் உட்பட்ட ஆளுகை பற்றியதில் பயிற்சிப்பட்டறையையும் வழங்கவிருக்கின்றனர்.

XI. 'மனிதக்கடத்தல் வியாபாரம் பற்றிய அறிக்கை'யில் இலங்கை 2018 இல் தனது அடுக்கு 2 நிலைப்பாட்டைப் பேணியது. அந்த அறிக்கையில், மனிதக்கடத்தலை முற்றாக இல்லாமல் ஒழிப்பதற்கான ஆகக்குறைந்த தரங்களை இலங்கை அரசாங்கம் அடையவில்லையாயினும், அதற்கான முயற்சிகளைச் செய்துவருகின்றது என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும், முன்னைய அறிவிக்கப்பட்ட காலத்தில் இலங்கையின் முயற்சிகளை விட, அடுக்கு 2 இல் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) பாதுகாப்பு விடயங்கள்

I. இலங்கைத் தூதரகமானது அமெரிக்க சரிநிகராளர்களுடன் கிட்டத்தட்ட 120 பாதுகாப்பு கூட்டுறவு சம்பந்தமான நேரடி உறுதிமொழிகளைக் கொண்டிருக்கிறது. இந்த

உறுதிமொழிகளாவன; இலங்கை அரச பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கள், கலந்துரையாடல்களை உள்ளடக்கியது.

II. மூன்று சேவைகள் மற்றும் கடலோர காவற்படை உடன் பாதுகாப்பு கூட்டுறவு மற்றும் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் விரிவாக்கவும் நோக்கம் உள்ளது என்று தூதரக பிரதிநிதிகள் முன்மொழிந்தனர். இது தொடர்பாக ஐக்கிய அமெரிக்கா இரு நாடுகளுக்குமிடையே படை உடன்படிக்கையை இறுதிப்படுத்த ஆர்வமாக உள்ளது. மேலும் விமான மையம் விமான தளம் விமான பகுதி சேமிப்பு HADR உபகரணங்களை முன்னிலைப்படுத்துதல் மற்றும் இராணுவ தகவல் ஒப்பந்தத்தின் பொதுவான பாதுகாப்பு என்பனவற்றின் மற்ற ஐந்து முன்மொழிவுகள் என்பன கருத்திற்காக ஐக்கிய அமெரிக்காவினால் அனுப்பப்பட்டன

XII. தூதரகம் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான கொள்கை பாதுகாப்பு செயலாளர் அலுவலகத்துடன் தொடர்ந்தும் பேணி வருகின்றது. அமைச்சர்கள் தூதுக்குழுக்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றம் கடற்படை தளபதி என்போர் னுயுளுனு ரன்டோல் மற்றும் னுயுளுனு கலாநிதி ஜோசப் பெல்டர் ஆகியோரை ஆணடு முழுவதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்து பாதுகாப்பு ஒத்துளைப்புகள் மற்றும் படைகள் உடன்பாட்டின் நிலை மற்றும் ஏனய முன்மொழிவுகள் பற்றி கலந்தாலோசித்தனர

XIII. தற்போதய ஐக்கிய அமெரிக்காவின் இந்தோ –பசுபிக் மூலோபாயத்தில் தென் கிழக்கு மற்றும் தெற்கு ஆசியா நாடுகளுடனான பாதுகாப்பு உறவு குறித்த ஒரு முக்கிய கவனம் ஈடுபட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐக்கிய அமெரிக்க செயலாளர் அமெரிக்க டொலர் 300 கோடியை நிதி உதவியை பிராந்தியத்திற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நிதி திட்டம் மூலமாக அறிவித்தார். அதில் அமெரிக்க டொலர 39 கோடி இலங்கைக்கு கடல் பாதுகாப்பு மனிதபிமான உதவிகள் மற்றும் பேரளிவு பதில் தொடர்பான செயற்திட்டங்களுக்கு சமாதானத்திற்கான திறன்களை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச குற்றத்தை எதிர்த்து போராடுவது மற்றும இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துளைபபுகளை மேலும் அதிகறிக்க அமெரிக்காவின் நோக்கங்களை சமிக்ஞை செய்வதாகும்

XIV. 2015 ஆம் ஆண்டு முதல் இருதரப்பு ஒத்துளைப்புகளை அதிகறிப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிப்பது ஹவாயில் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி இலங்கை கடற்படைக்கு ஐக்கிய அமெரிக்கா **சேர்மன்** என்று அழைக்கப்படும் முன்னால் அமெரிக்க கடலோர ் காவலரை இலங்கைக்கு மாற்றம் செய்தது. தற்போது இலங்கை குழுவினர் கப்பலில் பயிற்ச்சி பெறுகின்றனர் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முடிவில் கப்பல் இலங்கைக்கு பயணம் செய்ய இருக்கின்றது மாற்றம் செய்யப்பட்டபின் அது இலங்கை கடற்படையின் பெரிய கப்பலாக அமையும்.

XV. அத்துடன் தூதரகம் பயிற்ச்சி அணிகளின் பரிமாற்றங்களுக்கு உதவி வழங்கியது. சம்பந்தப்பட்ட விவகார வல்லுணர்கள் மொபைல் பயிற்ச்சி அணிகள் என்பவர்கள் இராணுவ உடற்பயிற்ச்சி மற்றும் பயிற்ச்சிகளில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் INDOPACOM என்பனவற்றுடன் நெருங்கிய ஒத்துளைப்புடன் பங்குபற்ற வசதி வழங்கியது. இலங்கையும் ஐக்கிய தூதரகமும் தொடர்ந்து இணைந்த இராணுவ உடற்பயிற்சிகள் மற்றும் பயிற்ச்சிகளில் கப்பல் வருகைகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு செயற்திட்டங்கள் என்பனவற்றில் ஈ:பட்ட வருகின்றன. இந்த வருடன் ஏப்ரல் மாதம் திருகோணமலையில் இரண்டாவது தடவையாக பெசிபிக் ஒத்தாசைகள் என்ற மனிதபிமான உதவி மற்றும் பெரலிவு விளைவ உடற்பயிற்ச்சி என்பன நடத்தப்பட்டன.

XVI. ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற 25 நாடுகள் கலந்து கொள்ளும் RIMPSCK என்ற உலகின் பெறிய கூட்டு சர்வதேச கடல்வழி பயிற்ச்சிகளில் இலங்கை கடற்படை பங்குபற்றியது.

XVII. மார்ஸல் லீகஸி நிறுவனத்துடன் இலங்கையில் மனிதபிமான கன்னிவெடி அகற்றும் திட்டத்திற்கு தூதரகம் தொடர்ந்து ஒருங்கமைத்தது. 2020 ஆம் ஆண்டளவில் கன்னி வெடி அற்ற இலங்கையை அடையும் நோக்கத்திற்காக இலங்கை இராணுவ பொறியியளார்களுடன் செயலாற்ற MLI மேலதிக கன்னி வெடியை கண்டுபிடிக்கும் நாய்களை இலங்கைக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது

XVIII. 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 – 21 ஆம் திகதிகளில் ஐக்கிய அமெரிக்காவில் நவல் கல்லூரியில் நிவ் போர்ட் ரோட் ஐலண்டில் 23வது சர்வதேச கடல் சக்தி சிம்போசியத்தில் இலங்கை கடற்படை தளபதி பங்குபற்றினார் தளபதி இந்து சமுத்திர நவல் சிம்போஸியம் என்ற அறிக்கையை மாநாட்டில் வழங்கி ஐக்கிய அமெரிக்காவின் கடற்படை நடவடிக்கைகளின் தலைவர் மற்றும் அவஸ்திரேலிய கடற்படை தலைவர் ஐக்கிய அமெரிக்க மற்றும் பசுபிக் கடற்படை தளபதி ஐக்கிய அமெரிக்க தளபதி கடற்படையின் மத்திய கட்டளை கடலோர காவற்படை தளபதி என்பவர்களிடம் பரஸ்பர ஆர்வங்கள் மற்றும் கூட்டுறவு ஈடுபாடல்கள் என்பனபற்றி கலந்துரையாடல்களை நடத்தினார் வாஷிங்டனில் டி சி யில் இருக்கும்போது கடற்படை தளபதி தெற்கு மற்றும் மற்திய ஆசியாவிற்கான பிரதி உதவி செயலாளர் மற்றும் தெற்கு மற்றும் மற்திய ஆசியாவிற்கான கொள்கை பாதுகாபபு பிரதி உதவி செயலாளர் என்போரை சந்தித்தார்

XIX. இலங்கை பார்வையாளர் நிலைக்கான அதனுடைய வேட்பு மனுவை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற வெஸ்டேர்ன் பெசிபிக் நவல் சிம்போஷியத்தில் வழங்கியது. தூதரகம் அரச திணைக்களத்தின் மூலம் ஐக்கிய அமெரிக்காவின் ஒத்துதளைப்பை வேண்டியது. இலங்கைக்கு பார்வையாளர் நிலை வழங்கப்பட்டது அத்துடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தோபெசிபிக் பங்காளிகள் எங்களுடைய கோரிக்கைக்கு ஒத்தாசை வழங்கினார்கள் என்று அரச திணைக்களம் அறிவித்தது.

XX. தூதரகம் தொடர்ந்தும் பாதுகாப்பு மற்றும் கடல்வழி மாநாடுகளுக்காக அமெரிக்க மக்கள் மற்றும் இராணுவ நிபணர்கள் பங்குபெறுவதற்கு வசதி வழங்கி வருகின்றது கடற்படை பிந்தைய பட்டதாரி பள்ளி கலிபோர்னியா, வாஷிங்டன டி சி யிலுள்ள தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்க இன்டோபாகொம் 2018 ஆம் ஆண்டு மாநாடுகளில் பங்குபற்றியது.

1. கல்வி மற்றும் ஆராய்ச்சி

(1) தூதரகம் இலங்கை மாணவர்களுக்கு மலிவான உயர்கல்வி வாய்பபுகளை பெறுதல் மற்றும் இலங்கை பல்கலைக்கழகத்துடன் கூடடு கல்வி நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் கொழும்பில் முகவர்கள் அலவலகங்களை தாபித்தல் கல்வி பரிமாற்றங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்க பல்கலைக்கழகங்களை இலங்கையில் அவர்களது பிரசண்ணத்தை விஸ்தரிக்க ஊக்குவித்தல். அதே வேளை இலங்கை பிராந்தியத்தில் ஒரு மையமாக இருந்து தேவைப்படும நவீன கல்வியை வழங்குதல் மற்றும் அதே வேளை தெற்கு ஆசிய பிராந்தியம் ஒரு சாத்தியமான பொருளாதார இயக்கியாக மோலோங்குவதற்காக பல்கலைக்கழகத்தின் சர்வதேச கார்பரேஷன் திணைக்களம் என்பனவற்றை நெருங்குகின்றது .

(2) ஆராய்ச்சி மற்றும் எண்ணங்களின் கிடங்கு என்பனவற்றின் பிரதிநிதிகளுடன் வழமையான தொடர்புகளுடன் உள்ளது. இந்த நிருவகங்கள் அமெரிக்காவின் கொள்கை வகுத்தமைத்தல் செயல்முறையில் அங்கம் வகிக்கின்றது.

2. மக்கள் இராஜதந்திரம் மற்றும் கலாச்சார உறவுகள்

1. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தூதரகத்தில் 70 வருடாந்த இலங்கை சுகந்திரதினத்தில் ஒரு வரவேப்பு வழா அமெரிக்க சமாதான நிறுவகத்தில் அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் இராஜதந்திரிகள் இலங்கை அமெரிக்க குடிமக்கள் சிவில் சமுதாயம் மற்றம் எனய தொடர்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

11 இராஜாங்க திணைக்களம் அடங்களாக அரசாங்க நிறுவனங்கள் அமெரிக்காவின் ஆசிய அமெரிக்க அமைப்பகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வகளில் கலாச்சார நிகழ்வகளில் இலங்கை நடன குழுமம பங்குபெற வசதிகள் வழங்கியது.

111 வேசக் தினத்தை கொண்டாட 2018 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி தூதரகம் வருடாந்த பிச்சைசோறு வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தது.

1V 2018 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் திகதி தூதரகம் வருடாந்த உணவு திருவிழாவை வாஷிங்டன் பௌத்த விஹாரையில் ஏற்பாடு செய்தது

V 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி தூதரகம் பென்டார் ஜெசிசி கிரேட் டிவாஷிங்டன் 6125 மொன்டுருஸ் வீதி ரொக்வெல் எம டி 20820 உள்ள இலங்கை அமெரிக்க குடிமக்கள் பங்குபற்றிய வாஷிங்டன் டி சி யில் இலங்கை அமெரிக்க அமைப்புகளால் இணைந்து எற்பாடு செய்யப்பட்ட **இலங்கை நாள் நிகழடவில பங்குபற்றியது.**

V1 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி டக்ஹோமா பார்க் ஸ்4ல் ஹொடிடோரியம் 7611 பினி கிளை வீதி சில்வர ஸபிசிங் எமடி 20910.

V11 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி ரெஸ்நிக் பெவிலியன் லொஸ்ஏங்சல்ஸ் கன்ரி மியுசியத்தில் ஏழு மாத தொழில்ரீதியாக மற்றும விரிவாக ஒழுங்க செய்யப்பட்ட கண்காட்சியில் அமெரிக்க அரசாங்க முகவர்கள் மேற்கு நாடுகளின் அரசாங்கங்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் வணிக தொழில் முனைவோர் மற்றும் இலங்கை குடிமக்கள் பங்குபற்றினார்கள் கொன்சுல் நாயகம் கெள்சுல நாயகத்தின் வளாகத்தில் ஒரு பகல் சாப்பாடு விருந்தை ஏற்பாடு செய்தார். அதில் 150 விருந்தாளிகள் கலந்து கொண்டார்கள்

11 பன்முக உறவுகள்

1 உலக வங்கி பண்ணாட்டு நிதியம்

- **உலக வங்கி மற்றும் பண்ணாட்டு நிதியத்தின் சம்பந்தப்பட்ட பணியாளர்களளுடன் உறவுகளை வலுப்படுத்தல்**

- **அமெரிக்காவில் பொருளாதார மற்றம் பொருளாதார கொள்கை அபிவிருத்தி மற்றும் இலங்கையில் அதனுடைய தாக்கம் என்பனவற்றை கண்காணித்தல அதனுடைய**

- **உலக வங்கி மற்றும் பண்ணாட்டு நிதிய வங்கி வசந்த கூட்டம் மற்றும் வருடாந்த கூட்டங்கள் என்பனவற்றில் இலங்கை தூதுகுழு பங்குகொள்வதற்கு வசதிகள் அமைத்து ஒருங்கிணைத்தல்**

2 அமெரிக்க நாடகளின் அமைப்பு

OAS மற்றும் அதன் கட்டமைப்பிலுள்ள அங்கத்துவ நாடுகளுடன் தூதரகம் பார்வையாளராக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றது தூதரகத்தல் இருந்த ஒரு

பிரதிநிதி OAS கூட்டங்களுக்கு நிரந்தர பார்வையாளராக கலந்துகொள்கிறார் OAS சம்பந்தமான விவகாரங்களை தூதரகம் அமைச்சுக்க அறிக்கையிடகின்றது

3 சர்வதேச தொலைத்தொடர்பு செயற்கைகோள அமைப்பு

2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 - 15 ஆம் திகதி அமெரிக்காவில் வாஷிங்டன் டி சியில 38வது ITSO தரப்பிணர கூட்டத்தில் பங்கு பற்றயது. தூதரகம் சம்பந்தப்பட்ட விவகாரங்களை கொழும்பக்கு அறிக்கை விடுகின்றது

111 வர்த்தக முதலீடு பொருளாதாரம் மற்றும் சுற்றுளா ஒத்துளைப்பு

2019 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு அமெரிக்க திணைக்களத்தால் எற்பாடு செய்யப்பட்ட ஒரு உயர்மட்ட வர்த்தக துர்துக் குழு விஜயம் செய்ய உள்ளது. 30 வருடங்களுக்கு பின் இலங்கைக்கு விஜயம் செய்யும் பெரிய மற்றும் உயர் மட்ட துர்துக் குழு இதுவாகும்.

1. வர்த்தகம்

ஊக்குவிப்பு பிரச்சாரங்கள்

- மதிப்பு சேர்க்கும் சினமனை ஊக்கவிக்க 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 அம் திகதி கல்வித்துறையில் தொழில் இணைக்கும் வர்த்தகர்களை தாபிப்பதற்கு ஒரு அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது

- 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி டி சி சர்வதேச கிளப்பின் அங்கத்தவர்களக்காக சுற்றளா மற்றும் தேயிலை ஊக்குவிப்ப நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

- கொன்சுல் நாயகம் கருவாவின் முக்கிய சந்தைபடுதுபவர்களோடு வழமையான தொடரபுர்டன் உள்ளார். வரும் மாதங்களில் வளரச்சி தருணங்கள் பேணப்படுவதை நிச்சயப்படுத்த நடைபெற்றவரும் ஊக்கவிப்பு செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்கின்றது.

- இயற்கையான ஸ்பைஸஸ் மற்றும் இலங்கை கறுவா

கோன்சுல் நாயகம் சிறிய சந்தைகளை பிரபலப்படுத்தும்நோக்கத்துடன் ஊக்குவிப்பு செயற்திட்டங்களுக்கு விசேட கவனம் செலுத்துகிறார்

(11) வர்த்தக சந்தைகளில் பங்கேற்பு

vi கோடைக்கால ஆடம்பர உணவு நிகழ்ச்சி 2018 - 30 ஜூன் - 02 ஜூலை 2018

vii லூஸ் வெகாஸ் வில் கொன்வென்சன் மையத்தில் 12 14 ஜூன் மாதம் உலக தேயிலை எய்ஸ்போவில் 2018வது பதிப்பில் இலங்கை பெவிலியனை கொன்சுல் நாயகத்தடன் இலங்கை தெயிலை சபை உலக எக்ஸ்போ 2018 இலங்கை தெயிலை ஊக்கவிப்பு ஏற்பாடு செய்தது.

viii ஊக்குவிப்பு கூட்டங்கள் விசாரணைகள்

viv காலப்பகுதியில் மொத்தமாக 28 கூட்டங்கள் நடந்தன

vv பயண பொருட்கள் சினமன் மற்றும் மதிப்பு சேர் சினமன் பொருடகள் கயிறு மற்றம் அது தொடர்பான பொருடக்ள கைத்தொழில் டயரடஸ் உணவு பொருட்கள் தெங்காய் பொருட்கள் செரமிக் போர்சலீன் டேபில்வெயார் கைப்பணிபொருட்கள் துப்பரவுசெய்யும் பிரஸ்கள் தேங்காய் எண்ணை மங்க்கள்றுகள் கொக்கோ பீட் காரசின ஆடை தேயிலை ஸ்பைசைஸ் அபரணங்கள் பொலிபிரோப்லின் பேக் அவசியமான எண்ணை துவிச்சக்கரவண்டி டின் மீன் மாங்காய் கணணி மென்பொருள் மற்றம் Rwwsh <u;gitfs;

Iv. வணிக விஜயங்களை ஏற்பாடு செய்தல் /ஒருங்கிணைத்தல்

- பல்வேறு வணிக நோக்கங்களுக்காக, 32 தனிப்பட்ட விஜயங்களை ஒருங்கமைத்தல்

v. அமெரிக்காவிலும் சமகால அங்கீகாரம் வழங்கப்பட்ட நாடுகளிலும் வர்த்தக சந்தைகளை/ நிகழ்வுகளை ஊக்குவித்தல்.

- ஊக்குவிக்கப்பட்ட வர்த்தக நிகழ்வுகள்/சந்தைகள் வருமாறு:
  1) கொழும்பு மணமகள் வாரம் 2018
  2) 'ஆயுர்வேத எக்ஸ்போ' 2018
  3) இலங்கை முதலீடு மற்றும் வணிக தனிக்கூட்டம் 2018
  4) FACETS ஸ்ரீலங்கா
  5) இலங்கை படகுக்கண்காட்சி
  6) இலங்கை விவசாய கண்காட்சி

vi) சந்தை ஆய்வுகள்/ சிறப்பு அறிக்கைகள் –

- பின்வரும் அறிக்கைகள்/வர்த்தக தகவல்கள் தயாரிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டன:

1- தேயிலைச் சந்தை அறிக்கை 2017
2- அமெரிக்க ஜி.எஸ்.பி திட்டத்தின் கீழ், சில ஆடைப் பிரிவுகளில் பொருத்தமான வரிச் சலுகைகள்
3- பெறுமதிசேர் கறுவாவை ஊக்கப்படுத்துவதற்காக, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச்சின்ன உத்தியை தயாரிப்பதற்கான உள்ளீடுகள்
4- அமெரிக்க தொழிற்றுறைக் கொள்கை பற்றியதிலான தகவல்கள்
5- மஞ்சள் சோளத்தின் சந்தைச் சூழ்நிலை மற்றும் ஏற்றுமதி விலைகள்
6- ஆசியபசுபிக்கின் 'எத்தோனல் (மதுபானம்) உச்சி மாநாடு 2018' இல் பங்குபற்றியமை பற்றிய அறிக்கை
7- இந்து-பசுபிக் வணிக கருத்துக்களம் 2018' இல் பங்குபற்றியதன் அறிக்கை
8- அமெரிக்க LNG உச்சி மாநாடு 2018 இல் பங்குபற்றியதன் அறிக்கை
9- வர்த்தக திணைக்களத்திற்கு மசாலாப்பொருட்கள் பற்றி அமெரிக்க சந்தை ஆய்வு

vii) வாஷிங்டனிலுள்ள மெக்சிக்கோ, ட்ரினிடாட் மற்றும் டொபாகோ போன்ற நாடுகளின் தூதரகங்கள் ஊடாக அந்நாடுகளுடனான தொடர்புகளைப் பலப்படுத்தல்

- இலங்கை வர்த்தக சந்தைகள்/நிகழ்வுகளை விளம்பரப்படுத்துவது தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினர் பற்றி மெக்சிக்கோ மெக்சிக்கோ தூதரகத்தின் 'வர்த்தகம் மற்றும் NAFTA அலுவலகத்தின் உதவி பெறப்பட்டது. அத்துடன், இரு மெக்சிக்கோ இறக்குமதியாளர் பற்றிய இரண்டு இலங்கை கம்பனிகளின் வர்த்தக முறைப்பாடு தொடர்பில் பிரச்சனையைத் தீர்த்துவைப்பதற்கான உதவியும் கோரப்பட்டது.

- ட்ரினிடாட் மற்றும் டொபாகோவிலுள்ள ஆர்வமுள்ள தரப்பினரிடம் இலங்கை வர்த்தக சந்தைகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான விளம்பரங்களுக்கான உதவி கோரப்பட்டது.

2. முதலீடு

(i) ஊக்குவிப்புக் கூட்டங்கள்

காணி அபிவிருத்தி, மின்சாரம், சக்தி, தொலைத்தொடர்பாடல், குளிர்பானங்கள், போக்குவரத்து, விவசாயம், உட்கட்டுமான அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் சக்தி முதலியவற்றின் மீதான முதலீடுகள் தொடர்பாக 17 கம்பனிகளுடன் கூட்டங்களும் தொடர்பாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

- ஏப்ரல் 2018 இல் இலங்கை பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஆதரவுடன், துணைத் தூதரகம் இணைந்து, கலிஃபோர்னியா மற்றும் நெவேடா மாநிலங்களில் 4 நாள் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை நடத்தியது.

- வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பற்றியதில் அமெரிக்க முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக, லொஸ் ஏஞ்சல்ஸ் துணை மேயருடனும் அந்த மாநிலத்திலுள்ள சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு அலுவலகத்திலுள்ள நிறைவேற்று அதிகாரிகளுடனும் பிரத்தியேக கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

3. சுற்றுலாத்துறை

i) சுற்றுலாச் சந்தைகளில் கலந்துகொண்டமை

- 'நியூயோர்க் டைம்ஸ்' பயண நிகழ்ச்சி, 26-28 ஜனவரி 2018

ii) சிறப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்;

- வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வு – 12 நவம்பர் 2018

iii) ஊக்குவிப்புக் கூட்டங்கள்-

- International club of DC
- Silk route, Maryland
- Embassy Experience
- Harvard Club of Washington DC

4. பொருளாதார ஒத்துழைப்பு

I. வர்த்தக நடவடிக்கைகள் வசதிப்படுத்தும் முகமாக வர்த்தகக் கொள்கை விடயங்களைக் கையாளுதல்

- ஐக்கிய அமெரிக்க சர்வதேச வர்த்தக ஆணைக்குழுவுக்கும் அமெரிக்காவுக்கும் சூரிய ஒளி முகப்புப்பலகைகளை இறக்குமதி செய்வதற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கை மீதான அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் சர்வதேச வர்த்தக நிருவாகத்திற்கும் பிரதிநிதித்துவம் மேற்கொள்ளப்பட்டது. குறித்த நடவடிக்கையிலிருந்து இலங்கை விலக்கப்பட்டதுடன், இறக்குமதியாளரால் பாதுகாப்பு சுங்கவரியைச் செலுத்தாமல் இறக்குமதி செய்ய முடிந்ததெனலாம்.

- இலங்கையில் இருந்து மேற்கொள்ளப்படும் Rubber bands இறக்குமதி மீதான சுங்கவரிக்கு எதிரான விசாரணை மீதான ஐக்கிய அமெரிக்க சர்வதேச வர்த்தக ஆணைக்குழு மற்றும் ஐக்கிய அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் சர்வதேச வர்த்தக நிருவாகத்திற்கு தொடர்ந்தும் பிரதிநிதித்துவங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை வர்த்தகத் திணைக்களத்துடன் கலந்தாலோசனை செய்து தூதரகத்தினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பயனாக குறித்த விசாரணையில் இருந்து இலங்கை விலக்கப்பட்டது.

- இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் குறிப்பிட்ட வாகன டயர்கள் மீது அமெரிக்கா விதித்துவரும் சுங்க வரிக்கு எதிராக இலங்கை அரசினால் சர்வதேச வர்த்தகம் குறித்த அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சம்பந்தமாக தூதரகம் கொழும்பில் உள்ள வர்த்தகத் திணைக்களம் மற்றும் சட்ட நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து தொடர் நடவடிக்கையை மேற்கொண்டது. மேற்படி வழக்கு குறித்து கொழும்பில் உள்ள வர்த்தகத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியது. குறித்த வழக்கின் தீர்ப்பு இலங்கைக்குச் சாதகமாக அமைந்ததுடன் இந்தத் தீர்ப்பை எதிர்த்து அமெரிக்க அரசாங்கம் மேன்முறையீடு செய்தது. இது சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகள் குறித்து தூதரகம் கொழும்பில் உள்ள வர்த்தகத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து சட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்தியது.

- ஐக்கிய அமெரிக்க ஜீ.எஸ்.பி (USGSP) திட்டத்தைப் புதுப்பித்தல், சூரிய ஒளி முகப்புப் பலகைகள் இறக்குமதி மீது பாதுகாப்பு வரி விதிப்பு, இலங்கையில் இருந்து Rubber bands ஐ இறக்குமதி செய்வது குறித்த விசாரணை மற்றும் வர்த்தக முதலீட்டுப் பணிச்சட்ட உடன்படிக்கைகள் (TIFA) அமைப்பின் அடுத்த கூட்டம் குறித்த ஒழுங்குகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் ஆகியவை குறித்து தூதரகம் ஐக்கிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியின் (USTR) அலுவலகத்துடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை நடாத்தியது.

- தூதரகம் மேற்கொண்ட முன்னெடுப்பின் பலனாக, புதிதாகக் கண்டுபிடித்த "டெங்கு நோய்த் தடுப்பு மருந்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் தேசிய சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த உயர் மட்டத் தூதுக்குழுவினர் ஏப்ரல் 18-24 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

- இலங்கைக்கு எதனோல் (Ethanol) கலப்பினை அறிமுகப்படுத்தும் வகையில் அதன் கொள்கை மற்றும் தொழில்நுட்பம் மீதான உதவியைக் கோருவதற்கென தூதரகம் அமெரிக்க தானிய சபை (US Grain Council) யுடனும் ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களத்துடனும் ஒருங்கிணைந்து முன்னெடுப்பை மேற்கொண்டது. அதன் பலனாக, பிரதிநிதியொருவர் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டு தாபனம் ஆகியவற்றுடன் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பொருட்டு 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதியன்று இலங்கைக்கு வருகை தந்தார்.

- திரவமாக்கப்பட்ட இயற்கை வாயு தொழிநுட்பத்தினை (LNG Technology) பெற்றுக்கொள்ளவும், இலங்கைக்கான திரவமாக்கப்பட்ட இயற்கை வாயுத்துறை மீது ஈடுபாடுகாட்ட ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவுமென திரவமாக்கப்பட்ட இயற்கை வாயு நட்பு நிறவனங்களுடனும் இணைந்து செயற்பட்ட தூதரகம் இது குறித்து ஆரம்ப பேச்சவார்த்தைகளையும் மேற்கொண்டது.
- ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாடு தனியார் முதலீட்டு ஒத்துழைப்பு (OPIC) அமைப்புடன் தொடர்ச்சியான முறையில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் இதலங்கையில் அமெரிக்க முதலீடுகளை ஊக்குவித்து உத்தரவாதமளிப்பதற்கான அவர்களின் ஒத்துழைப்பு மற்றும் உதவி வேண்டப்பட்டது. மேற்படி அமைப்பின் (OPIC) இரண்டு பிரதிகள் 2018 செப்டெம்பர் 26 – 30 வரையிலும் இன்னும் இரண்டு பிரதிநிதிகள் ஒக்டோபர் 02 – 04 வரையிலும் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.
- இலங்கை நிதிசார் சொத்துக்கள் செயலணியின் முதிர்வுப் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. நிதிசார துறையினை அபிவிரத்தி செய்வதற்கென இலங்கை எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அமெரிக்க திறைசேரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் முதிர்வப்பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குவதற்கான ஆதரவும் கோரப்பட்டுள்ளது.

II. <u>உட்புற/ வெளிப்புற தூதுக்குழுக்களை ஒழுங்குபடுத்துதல்/ ஒருங்கிணைத்தல்</u>

- புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள டெங்கு நோய்த்தடுப்ப மருந்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் வகையில் 2018 ஏப்பிரல் 18 – 24 வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகைத்தந்திருந்த தேசிய சுகாதார நிறுவன தூதுக்குழுவின் விஜயத்தை ஒழுங்குசெய்ததுடன் ஒருங்கிணையும் மேற்கொண்டது.
- உணவு உற்பத்தி கம்பனிகள் குறித்த ஒழுங்கற்ற பரிசோதனை விஜயத்தை 2018 மே 24 – 30வரை இலங்கைக்கு மேற்கொண்டஅமெரிக்க உணவு மற்றம் மருந்து அதிகாரசபை அதிகாரிகளின் விஜயம் குறித்து தூதரகம் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மெற்கொண்டது.

- பெறுமதி செர் கறுவா உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு 2018 ஜுலை 01ஆம் திகதியன்று வியாபார அடைக்காக்கும் இயந்திரத்தொடர்பக்கைத்தொழில் மற்றும் கல்வியுலகத்தை தாபிக்கும் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்ளவென ஸ்ரீஜயவர்தனபுரப் பல்கலைகழகத்தைச் சேர்ந்த தூதுக்குழுவினரின் வாஷிங்டன் டிசி பயணத்திற்கான ஒழுங்குகளை தூதரகம் ஒருங்கிணைத்தது.
- வெளிநாட்டு தனியார் முதலீட்டு ஒத்துழைப்பு அமைப்பைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளை 2018 செப்டெம்பர் 26 – 30வரை இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயத்தினை தூதரகம் ஒருங்கிணைத்தது.
- வெளிநாட்டு தனியார் முதலீட்டு ஒத்துழைப்பு அமைப்பைச்சேர்ந்த இரண்டு அதிகாரிகளால் 2018 ஒக்டோபர் மாதம் 04 – 05 வரை மேற்கொள்ளப்பட்ட இலங்கை விஜயத்தினை தூதரகம் ஒருங்கிணைத்தது.
- அமெரிக்க தானியங்கள் சபை (Grams Council) பிரதிநிதியொருவர 2018 ஒக்டோபர 11 – 12 வரை இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தினை தூதரகம் ஒருங்கிணைத்தது.

1.2. <u>கனடா</u>

I. <u>இருதரப்பு உறவுகள்</u>

i. கனடாவின் உலக விவகாரங்கள் குறித்த ஆசிய - பசுபிக் பிராந்தியத்திற்கான உதவி பிரதி அமைச்சர் கௌரவ கலாநிதி டொனால்ட் பொபியாஷ் அவர்களால் 2018 பெப்ரவரி 24-27 வரை மேற்கொள்ளப்பட்ட இலங்கைக்கான விஜயத்தினை உயர்ஸ்தானிகராலயம் ஊக்குவித்து ஒருங்கிணைத்து இந்த விஜயத்தின் போது, அவர் கௌரவ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் வெளிவிவகார செயலாளர், ஏனைய ஒருசில அமைச்சர்கள் மற்றும் இலங்கையில் உள்ள உயரதிகாரிகளுடன் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

ii. பின்வரும் பேராளர்களின் கனடாவுக்கான விஜயங்களுக்கு உயர்ஸ்தானிகராலயம் உதவியளித்தது:-

- பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாயந்த திசாநாயக – 2018 ஏப்ரல்
- ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சுசித சேனாரத்தன – 2018 ஜூலை
- முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க – 2018 ஓகஸ்ட் 26 – செப்டெம்பர் 08 (தனிப்பட்ட விஜயம்)

iii. விரைவில் கைச்சாத்திடப்படவுள்ள இலங்கைக்கும் கனடாவுக்குமிடையே இருதரப்பு ஆலோசனை பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

iv. இலங்கைக்கு குழுவொன்றினால் கனடாவுக்கு 2018 ஒக்டோபர்/ நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட அமைதிக்காப்பு பரிச்சயப்படுத்தல் குறித்த விஜயத்தினை உயர் ஸ்தானிகராலயம் கனேடிய தேசிய பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இலங்கை பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து ஒருங்கிணைந்தது.

v. பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்திற்கும் கனேடிய வெளிநாட்டு சேவை நிறுவகத்திற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் செயல்முறையில் உயர் ஸ்தானிகராலயம் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

vi. இலங்கையின் சட்ட அமுலாக்கம் அதிகாரிகளுக்கான பயிற்சி வாய்ப்புக்கள் சம்பந்தமாக கொன்சல் ஜெனரல் டொரன்ரோ பொலிஸ் கல்லூரியின் அத்தியட்சகர் ஸ்ரீவென் மொலினியோக்ஸ் அவர்களை சந்தித்து உரையாடினார்.

vii. இலங்கையின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கான பயிற்சி வாய்ப்புக்கள் சம்பந்தமாக கொன்சல் ஜெனரல் டொரன்ரோ பொலிஸ் கல்லூரியின் அத்தியட்சகர் ஸ்ரீவென் மொலினியோக்ஸ் அவர்களை சந்தித்து உரையாடினார்.

II. <u>பலதரப்பு உறவுகள்</u>

i. 2017-2020 காலப்பகுதிக்கான திறந்த அரசாங்க பங்குடமை வழிகாட்டல் குழுவின் உறுப்புரிமைக்காகப் போட்டியிடும் இலங்கைக்கான ஆதரவை உயர் ஸ்தானிகராலயம் கனடாவிடம் நாடியது.
ii. கொரியக் குடியரசில் 2018 ஒக்டோபர் 12 இல் நடைபெற்ற மேற்கு பசுபிக் கடற்படைக் கருத்தரங்கில் பார்வையாளர் அந்தஸ்தைப் பெறுவதற்குப் போட்டியிட்ட இலங்கைக்கான ஆதரவை உயர் ஸ்தானிகராலயம் கனடாவிடம் நாடியது.
iii. சர்வதேச அமைப்புக்களின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள போட்டியிட்ட இலங்கைக்கான ஆதரவைப் பெறுவதற்கு உயர்ஸ்தானிகராலயம் கனேடிய வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தக மற்றும் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் ஒட்டாவாவில் அமைந்துள்ள ஏனைய இராஜதந்திர தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

III. <u>பொருளாதார உறவுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடு</u>

கனடாவுக்கு 2018 ஆம் ஆண்டில் 220.96 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்யும் இலக்கினை அடையும் வகையில், இலங்கையில் வர்த்தக மற்றும் முதலீட்டு சாதக நிலைகளை ஆராய்வதில் இலங்கையின் புலம்பெயர் மக்களின் வர்த்தக சமூகத்தினருடன் ஒருங்கிணைந்து கனேடிய கம்பனித்துறை, சிறிய மற்றும் நடுத்தர வியாபார

நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் உயர் ஸ்தானிகராலயமும் கொன்சல் ஜெனரல் அலுவலகமும் ஈடுபட்டது.

1. <u>வர்த்தகம்</u>

I. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஏற்றுமதி 2018 ஜனவரி – ஜூலை காலப்பகுதியில் 165.88 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்த வகையில் 2.8 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது.

II. கனடாவில் இருந்து இலங்கைக்கான இறக்குமதியுடன் (2017 ஜனவரி – ஜூலை காலப்பகுதியில் 84.13 மில்லியன் அமெரிக்க டொலர்) ஒப்பிடுகையில், 2018 ஜனவரி – ஜூலை இறக்குமதி 113.49 அமெரிக்க டொலராக அதிகரித்தது.

III. டொரன்ரோ காங்கிரஸ் நிலையத்தில் 2018 ஒக்டோபர் 23-24 வரை நடைபெற்ற பாரிய "பலசரக்குப் பொருட்கள் புத்தாக்கங்கள்" எனும் தொனிப் பொருளில் அமைந்த கண்காட்சியுடன் இணைந்த வகையில் இலங்கை தேசிய வர்த்தக சபையைச் சேர்ந்த வர்த்தகத் தூதுக் குழுவொன்றை கனடாவுக்கு விஜயம் செய்யுமாறு உயர் ஸ்தானிகரும் கொன்சல் ஜெனரலும் முன்மொழிந்தனர்.

IV. டொரன்ரோ உசாத்துணை நூலகத்தில் 2018 பெப்ரவரி 3-4 வரை கனடாவின் தேயிலை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 6 ஆவது வருடாந்த தேயிலை விழா குறித்த கணினிக் கட்டமைப்பு நிகழ்வில் கலந்து கொண்டதன் மூலம் கொன்சல் ஜெனரல் தேயிலை வர்த்தகர்கள் மற்றும் ஏனையோர் மத்தியில் பரந்தளவிலான அறிவூட்டலை ஏற்படுத்தினார்.

V. 2018 மே இல் மொன்றியலில் நடைபெற்ற SIAL கனடா சர்வதேசக் கண்காட்சி 2018 இல் இலங்கையின் பங்கேற்பை கொன்சல் ஜெனரல் அலுவலகம் வசதிப்படுத்தியது. இதன் மூலம் உணவு மற்றும் குடிபானத்துறை உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்க முடிந்தது. இலங்கைத் தூதுக் குழுவினர் இரண்டு நாள் சந்தை திசைமுகப்படுத்தல் நிகழ்விலும், சந்தை பரிச்சயப்படுத்தல் சுற்றுலாவிலும் கனேடிய சந்தை குறித்த தகவல் அமர்விலும் கலந்து கொண்டனர். இந்தக் கண்காட்சியின் போது நடைபெற்ற வியாபாரத்திற்கு வியாபார (B28) கூட்டங்கள் மூலம் காட்சிப்படுத்துவோர் பயனுள்ள வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர்.

VI. உணவு விதிமுறைகள் மற்றும் கனேடிய சந்தைக்குள் நுழைதல் குறித்து உணவு உற்பத்தித் துறையில் பதிவு பெற்ற ஏற்றுமதியாளர்களுக்கென 2018 இல் அறிவூட்டல்

கருத்தரங்கொன்றை நடாத்துவதற்கான ஆலோசகர்களை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) இனங்கண்டுகொள்ள கொன்சல் ஜெனரல் அலுவலகம் உதவியது. இதே வருட நிகழ்வு வெற்றிகரமாக இருந்ததென அறிவித்த ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மேலும் ஒரு நிகழ்வுத்திட்டத்தில் பங்குபற்ற 2019 இல் தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் கனடாவுக்கு விஜயம் செய்வரெனவும் சுட்டிக்காட்டியது.

2. வெளிநாட்டு நேரடி முதலீடு

I. உயர்ஸ்தானிகர், கொன்சியுலர் நாயகம் மற்றும் முதலீட்டுச் சபைத் தலைவர் ஆகியோரைச் சந்தித்த பின்னர், ஒரு முதலீட்டாளர், 20 மில்லியன் கனேடிய டொலர்கள் செலவில் யாழ்ப்பாணத்தில் ஒரு ஹோட்டல் கட்டும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

II. இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடியர்கள் இலங்கை பங்குச்சந்தையில் முதலீடு செய்வதை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கொழும்பு பங்குச்சந்தை மற்றும் உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், கனடாவில் 'இலங்கையில் முதலீடு செய்வீர்' என்ற முதலீட்டுக் கருத்துக்களத்தை ஒழுங்குசெய்வதற்கான தகவல்களை கொன்சியுலர் நாயகம் வழங்கினார். கொழும்பு பங்குச்சந்தை தேவையான அனுமதியைப் பெறும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதால், இந்த முதலீட்டுக் கருத்துக்களத்திற்கான இடமாக கனடா இன்னும் தெரிவாகவில்லை. கொழும்பு பங்குச்சந்தையும் டொரெண்டோ பங்குச் சந்தையும் ஒருங்கிணைவதற்கான ஏற்பாடுகளை உயர்ஸ்தானிகராலயமும் துணைத் தூதரகமும் மேற்கொண்டது.

III. உயர்ஸ்தானிகரும் கொன்சியுலர் நாயகமும் கனேடிய வர்த்தக ஏற்பாட்டு அலுவலம் மற்றும் வர்த்தக நகரசபை அலுலகத்தின் அதிகாரிகள், வணிக மன்றத்தின் அதிகாரிகள், முதலீட்டாளர்கள், வணிகர்கள், பிரதிநிதிகள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் போன்றோரைச் சந்தித்தனர்.

IV. இந்த முதலீட்டாளர்களின் செயற்றிட்ட முன்மொழிதல்கள், பொருத்தமான வகையில் இலங்கை முதலீட்டுச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. சுற்றாடலுக்குச் சாதகமான கழிவு முகாமைத்துவம், கழிவுகளிலிருந்து எரிசக்தி உருவாக்கல், சூரிய சக்தி உருவாக்கம், வதிவிட மற்றும் வர்த்தக சொத்து அபிவிருத்தி போன்ற துறைகளில் செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டன.

V. துணைத்தூதரகமானது, புலம்பெயர் வணிகச் சமூகத்தினருடன் நெருக்கமாக இணைந்து, 26 ஜூலை 2018 இல் முதலீட்டு இயலாற்றலுள்ள குழுவினர் உட்பட்ட ஒரு கூட்டத்தை நடத்தியது.

VI. கனடாவில் வசிக்கும் இலங்கையர்கள், இலங்கை பங்குச்சந்தையில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதை நோக்கமாககொண்டு, இலங்கை முதலீட்டுச்சபையின் ஒருங்கிணைப்புடன், 'இலங்கையில் முதலீடு செய்வீர்' என்ற முதலீட்டுக் கருத்துக்களத்தை கனடாவில் ஒழுங்குசெய்வதற்கான தகவல்களை துணைத் தூதரகம் வழங்கியது. கொழும்பு மற்றும் ரொறொண்டோ பங்குச்சந்தைக்கிடையிலான ஒத்துழைப்பையும் துணைத்தூதரகம் ஒருங்கிணைத்தது.

VII. செப்டெம்பர் 3, 2018 இல், Ni-Met Metals Inc, இன் தலைவர் திரு அனில் ஷாவின் தலைமையில் ஒரு குழுவினரின் வருகை ஒழுங்குசெய்யப்பட்டது. இந்நிறுவனமானது, 35 மில்லியன் கனேடிய டொலர்கள் முதலீட்டில் உலோக துண்டங்களை மீள்சுழற்சி செய்யும் ஒரு திட்டத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

VIII. 100 மெகாவோட்ஸ் சூரிய சக்தி செயற்றிட்டம் ஒன்றுக்கான முதலீட்டுத் திட்டமொன்று பற்றி Global PC Trade Finance Corp' அதிகாரிகளுடன் துணைத்தூதர் கலந்துரையாடலை நடத்தினார்.

3. சுற்றுலாத்துறை

I. இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்திச்சபையின் புள்ளிவிபரங்களின்படி, 2018 இல் இலங்கைக்கு வரக்கூடிய கனேடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இலக்கும் 50,235 ஆக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அதற்கேப, ஆகஸ்ட் 2018 வரையில் கனேடிய சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 39,196 என இச்சபையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

II. கனேடிய சுற்றுலாத்துறை மற்றும் பயண முகவர்களுக்கும் மற்றும் இலங்கைக்கு சுற்றுலா வருவதற்கு ஆர்வமுள்ள பிறருக்கும் தேவையான தகவல்கள், வழிகாட்டல் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன. முன்னணி பயண இயக்குனர்கள் மற்றும் விமான சேவைகளை அணுகி, அவர்களின் ஊக்கப்படுத்தல் செயற்றிட்டங்களிலும் சுற்றுலாப் பொதிகளிலும் இலங்கையையும் இணைக்குமாறு கோரப்பட்டது.

III. தூதரகமும் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்கப்படுத்தல் பணியகமும் இணைந்து வழங்கிய, சுற்றுலாத்துண்டுப் பிரசுரங்கள், இலங்கைத் தேயிலை மற்றும் படங்கள், 16-18 ஆகஸ்ட் 2018 இல் நடைபெற்ற Folkfest, Saskatoon போன்ற நிகழ்ச்சிகளில் இலங்கை காட்சியரங்குகளை அலங்கரித்தன.

4. கலாச்சார உறவுகள்

I. தூதரகமும் துணைத்தூதரகமும் இணைந்து பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்து/ உதவிசெய்தது/ஒருங்கிணைத்தது/பங்குபற்றியது:

- ஜனவரி 2018 இல், ஒட்டாவா பௌத்த விகாரையிலுள்ள ஹில்டா ஜெயவர்தனராமய பௌத்த மடம் மற்றும் தியான மையத்தில் புதுவருட ஆசி வழங்கும் நிகழ்வு
- 4 பெப்ரவரி 2018 அன்று, இலங்கை உயர்ஸ்தானிகரது உத்தியோகபூர்வ வதிவிடத்தில், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம்
- மார்ச் 2018 இல் கால்டன் பல்கலைக்கழகத்தில், ஒட்டாவா இலங்கைச் சமூகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட இசை மாலை.
- ஏப்ரல் 2018 இல் ஒட்டாவா பௌத்த விகாரையிலுள்ள ஹில்டா ஜெயவர்தனராமய பௌத்த மடம் மற்றும் தியான மையத்தில் தமிழ் சிங்கள் புதுவருட கொண்டாட்டங்கள்.
- 21 ஏப்ரல் 2018 இல் டொரொண்டோ இலங்கை – கனடா கூட்டுறவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 50 ஆவது வருடாந்த தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்.
- 19 மே 2018 இல் நகர மண்டபத்தில் 'ஒட்டாவாவில் வெசாக் மற்றும் ஆசிய பாரம்பரிய' மாதம் ஒழுங்குசெய்யப்பட்டது.
- 6 செப்டெம்பர் 2018 இல், தூதரகம் மற்றும் ஒட்டாவா பொது நூலகம் மற்றும் ஆசிய ஜோதி நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், இலங்கையின் விருதுபெற்ற திரைப்படமான 'ஸ்ரீ சித்தார்த்த கௌதம' ஐ, பொது நூலகத்தின் பிரதான கிளையில் திரையிடப்பட்டது.
- ஜனவரி 2018 இல், இலங்கை Cambridge, Guelph, Kitchener, waterloo இணைந்து வருடாந்தக் கொண்டாட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.
- ஜனவரி 2018 இல் 'வரசித்தி விநாயகர்' கோவிலில் தைப்பொங்கல் கொண்டாடப்பட்டது.
- ஏப்ரல் 2018 இல் சிங்கள சங்கமய மற்றும் கனடா-இலங்கை கூட்டமைப்பினால் தமிழ் சிங்கள புதுவருட கொண்டாட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.
- ஏப்ரல் 2018 இல் கனடா, இலங்கை மற்றும் மலே கலாச்சார மையத்தில் மலே உணவு மற்றும் கலாச்சார விழா நடைபெற்றது.
- ஏப்ரல் 2018 இல், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வொன்று 'SLUNA ஆல் ஒழுங்குசெய்யப்பட்டது.
- ஏப்ரல் 2018 இல் 'கனடா அத்தியாயத்தில் முகாமைத்துவ பெண்கள்' ஆரம்பத்தைக் கொண்டாடும் இரவு விருந்து.
- மே 2018 இல் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் திரு விக்டர் ரத்னாயக்க, திரு சுனில் எதிரிசிங்க, திரு டி எம் ஜயரத்ன மற்றும் திரு ரொஹான் வீரசிங்க ஆகியோர் பாடினர்.

5. தொழிலாளர் நலன்

i) கனடாவில் தொழில்தேடும் இலங்கையர்களுக்கு, முகவர் மூலம் வேலைகளை பெற்றுத்தருவதற்கான உதவியை தூதரகமும் உதவித்தூதரகமும் செய்தது.

ii) அதுபற்றியதில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு தூதரகம் உதவியது.

iii) கனடா கம்பனிகளில் வேலைசெய்யும் இலங்கையர்களின் நலன், கனேடிய வேலைவாய்ப்பு மற்றும் அங்குள்ள வேலை தருனர்கள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

நாடு	ஐக்கிய அமெரிக்கா		கனடா	
தூதரகம்	தூதரகம்/வோஷிங்டன் டி.சி.	லொஸ் ஏஞ்சல் துணை தூதரகம்	இலங்கை உயர்ஸ்தானிகராலயம்/ ஒட்டாவா	துணை தூதரகம்- ரொறொண்டோ
காலம் (தூதரகத்திலிருந்து கிடைத்த விபரங்கள்	01.01.2018 இலிருந்து 31.12.2018 வரை		01.01.2018 இலிருந்து 31.12.2018	
வழங்கப்பட்ட வீசாக்கள்	1160	400	599	2245
வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகள்	596	319	432	956
இயந்திரத்தால் இனங்காணமுடியாத கடவுச்சீட்டுக்கள்	69	59	47	107
வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்கள்(TTD)	13	04	04	23
கடவுச்சீட்டுக்களில் மேலொப்பங்கள்	26	05	05	24

கடவுச்சீட்டு புதுப்பித்தல்கள்	-	-	03	-
தாயகம் அனுப்புதல் (இறந்தோர் உடல்கள்)	14	-	02	05
பதிவுசெய்யப்பட்ட பிறப்புகள்	213	81	64	89
பதிவுசெய்யப்பட்ட இறப்புகள்	08	01	-	04
ஆவண அத்தாட்சிப்படுத்தல்	511	84	186	1211
பொலிஸ் இசைவுச் சான்றிதழ்கள்	10	-	06	66
இரட்டைக் குடியுரிமை விண்ணப்பங்கள்	302	238		331
குழந்தை தத்தெடுப்பு				01
சத்தியக்கடதாசி/ அற்றோனித்தத்துவம்				89
இளைப்பாற்றுச் சம்பளம்				450
மொழிபெயர்ப்புகள்	10			

1 ஜனவரி 2018 இலிருந்து 31 டிசம்பர் 2018 வரையில் சேகரிக்கப்பட்ட வருமானம் - ஒட்டாவா


விடயம்	கனேடிய டொலர்	இலங்கை ரூபாய்
குடிவரவுச் சட்டம் (2003-02-07)	191,294.00	24,107,274.25
கொன்சியுலர் சட்டம் (2003-02-99)	29,195.00	3,690,248.09
பிற (2003-99-00)	9,854.62	1,233,327.94
மொத்தம்	**230,343.62**	**29,030,850.28**

1 ஜனவரி 2018 இலிருந்து 30 செப்டெம்பர் 2018 வரையில் சேகரிக்கப்பட்ட வருமானம் - ரொறொண்டோ

விடயம்	இலங்கை ரூ.	கனேடிய டொலர்
குடிவரவுச்சட்டம்	76,673,105.69	616,950.00
கொன்சியுலர் சட்டம்	6,716,521.05	53,993.00
பொலிஸ் இசைவுச்சான்றிதழ்	220,132.07	1,764.00
மொத்தம்	**83,609,758.81**	**672,707.00**

1 ஜனவரி 2018 இலிருந்து 31 டிசம்பர் 2018 வரை சேகரிக்கப்பட்ட வருமானத்தின் விபரங்கள்

	அமெரிக்க டொலர்	இலங்கை ரூ.
குடிவரவுச் சட்டம்	155205.50	25,075,261.75
கொன்சியுலர் சட்டம்	39501.67	6327404.59
பிற	764.19	185682.22
வேலை ஒப்பந்தங்கள் பதிவு	0.00	0.00


வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் / அலுவலகங்கள்
ஒஸ்லோ
ஸ்டொக்ஹோல்ம்
ஹேக்
பேர்லின்
வோர்சோ
பிரஸ்ஸல்ஸ்
மொஸ்கோ
ஜெனீவா
ஒட்டாவா
பெல்ஜ்ரட்
காராசி
காபூல்
வண்டன்
அம்மான்
பரிஸ்
வியன்னா
அங்காரா
மஸ்கட்
ரபல்
பக்தாத்
இஸ்லாமாபாத்
மிலான்
குவைத்
காத்மண்டு
ரோம்
சியோல்
டோக்கியோ
டெல் அவிவ்
யங்கொன்
தெஹ்ரான்
பெய்ஜிங்
வொஷிங்டன் டி.சி
ஹவானா
மனாமா
ஏதென்ஸ்
ரியாத்
டுபாய்
குவாலாலம்பூர்
தோஹா
டாக்கா
மணிலா
அபுதாபி
பெங்கொக்
சிங்கப்பூர்
அபுஜா
முபாய்
கோலாலம்பூர்
அடிஸ் அபாபா
நைரோபி
ஜகார்த்தா
மாலி
விக்டோரியா
பிரிட்டோரியா
சிட்னி
கான்பரா
மெல்போர்ன்
உயர்ஸ்தானிகராலயங்கள்
தூதரகங்கள்
கௌரவ தூதரகங்கள்
துணைத்தூதரகங்கள்
இணை உயர்ஸ்தானிகராலயங்கள்
இலங்கை பிரதிநிதித்துவ அலுவலகம்
திறக்கப்படவுள்ளது
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
Ministry of Foreign Affairs
© comersis.com

31.12.2018 உள்ளவாறு தூதரகங்கள்/ துணை அலுவலகங்களின் வருமான அறிக்கை

தூதரக இலக்கம்	தூதரகம்	அரச கட்டிடங்களுக்கான வாடகை	பிற வட்டி	கடவுச்சீட்டு & வீசா	பரீட்சைகள் & ஏனையவை	மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	கொன்சியுலர் கட்டணம்	ஏனைய பெறுகைகள்	W & OP மத்திய	W & OP மாகாணம்	மூலதனச சொத்துக்களின் விற்பனர்	மூலதனச சொத்துக்களின் விற்பனர்	மொத்தம்
01A	கன்பரா		47,149.64	18,865,305.06		19,355.88	6,695,534.73	1,184,229.70	223,687.68	18,405.75		855,581.30	27,909,249.76
02A	சிட்னி		17,696.48	29,163,538.91	638.95	177,474.78	12,213,467.68	969,538.76	157,630.98	14,299.74			42,714,286.29
03A	கெய்ரோ		180,904.44	2,454,308.43			372,139.87	82,508.55	103,545.20				3,193,406.50
04A	பாரிஸ்		35,750.68	165,016,757.55	683.40		21,481,458.68	2,890,211.07	291,488.63	65,706.05			189,782,056.06
05A	ஹேக்		27,769.17	16,023,028.72			2,449,308.58	1,043,843.09	132,883.97				19,676,833.53
06A	டோக்கியோ		32,450.22	26,279,075.92	600.19	540,835.31	13,663,387.10	6,159,883.40	190,951.62	17,827.39			46,885,011.15
07A	அம்மான்		13,062.23	5,906,578.17			709,334.73	83,239.12	57,870.73				6,770,084.98
08A	காத்மண்டு	4,843.84	252,509.03	4,979,842.24	605.48		498,212.43	7,555,035.60	106,458.47				13,397,507.09
09A	பேர்லின்		8,212.60	37,817,263.64			3,298,301.74	1,755,332.96	123,568.86	49,719.73			43,052,399.53
10A	வியன்னா		17,451.52	3,759,003.25			1,103,788.05	6,667,526.09	137,957.84		154,454.64		11,840,181.38
11A	பீஜிங்		29,306.54	17,933,055.04	618.50		5,299,626.96	5,897,972.27	343,000.36	20,928.11			29,524,507.78
12A	ஹவன்னா		11,225.46	179,877.85			249,425.92	192,869.66	84,808.98	2,445.03			720,652.90
13A	கோலாலம்பூர்		17,717.27	14,419,487.18			4,056,483.55	8,517,923.64	235,749.39				27,247,361.02
14A	சிங்கப்பூர்		41,964.28	5,993,525.77			4,463,454.45	2,905,345.99	256,674.95				13,660,965.44
15A	நியூயோர்க்		22,887.77	14,533,009.30			2,823,892.40	1,450,924.07	369,386.75				19,200,100.29
16A	வொஷிங்டன்		83,360.10	25,034,722.68			6,424,145.42	1,258,486.19	451,993.79	49,180.57		34,408.50	33,336,297.25
17A	லொஸ் ஏஞ்சல்ஸ்		19,897.68	15,326,871.89			1,311,749.50	128,675.89	137,928.09				16,925,123.05
18A	டாக்கா		6,203.02	9,882,454.61	3,005.33		553,863.27	138,770.43	86,819.63		25,630.23		10,696,746.51
19A	மும்பை		14,269.67	1,563,953.34			1,495,105.84	2,826,318.59	139,146.67				6,038,794.11
20A	நைரோபி		30,304.42	1,275,770.11			208,278.24	75,709.81	123,730.90				1,713,793.48
21A	யங்கோன்	39,046.00	8,104.73	2,183,633.25			118,141.55	75,709.81	124,203.94	17,642.93			2,566,482.21
22A	ஸ்டொக்ஹோம்		21,463.05	13,905,644.92			1,944,396.41	1,544,455.72	165,463.07				17,581,423.18
23A	பாங்கொக்		20,043.46	3,476,890.38			1,826,237.39	4,354,946.13	149,619.67	38,889.82			9,866,626.84
24A	பிரசெல்ஸ்		26,550.14	4,677,568.10			1,304,628.18	216,157.81	205,905.86		589,343.70		7,020,153.78
25A	சென்னை		39,476.91	8,738,122.36			28,562,461.94	2,059,829.76	481,726.73			77,135.13	39,958,752.83
26A	ஜக்கார்த்தா		31,757.51	1,420,790.00	604.20		515,758.66	583,241.46	187,957.92				2,740,109.74
27A	மாலி		29,664.12	2,357,477.01	601.20		2,529,195.30	116,610.60	92,238.02	27,913.21			5,153,699.47
28A	ஜெனிவா		31,121.93	47,003,676.30	649.03		13,442,565.52	202,569.45	419,829.89	25,438.76			61,125,850.89
29A	அபுதாபி		50,276.69	19,715,193.13	99.89		3,482,380.78	2,370,013.29	150,682.69	92,903.22			25,861,549.68
30A	டுபாய்		39,075.40	77,523,527.40			15,043,313.80	4,047,220.62	257,070.56	21,041.00		394,827.30	97,326,076.09
31A	இலண்டன்		61,471.20	72,343,255.70			86,867,753.29	3,244,470.98	400,335.51	34,076.61			162,951,363.29
32A	புதுடெல்லி	14,675.38	39,877.48	3,172,734.61			5,438,802.69	11,835,909.96	411,432.53	22,769.02			20,936,201.68
33A	சியோல்	396.79	32,496.50	35,264,587.30	1,799.76		12,297,362.10	1,323,148.45	401,437.60				49,321,228.49
34A	குவைத்		49,283.43	90,029,120.39			25,340,468.95	458,204.29	572,887.61				116,449,964.67
35A	றியாத்		117,327.41	43,556,177.46			2,274,153.56	2,614,998.20	368,869.56		660,483.20		49,592,009.39
36A	மொஸ்கோ		28,207.06	1,280,360.28	624.20		621,666.56	7,573,648.65	177,331.87				9,681,838.63
37A	ஒட்டோவா		40,232.54	24,248,687.62			3,648,471.00	1,655,010.46	212,967.83	5,931.02			29,811,300.46
38A	பாக்தாத்		12,393.21	895,854.00			153,489.50	211,529.65	42,988.58	866.17			1,317,121.11
39A	ரோம்	514,511.03	23,277.07	95,606,047.86			31,123,973.26	2,312,974.08	289,207.42				129,869,990.73
40A	ஒமான்		33,166.51	10,588,167.43	612.98		4,380,670.91	456,392.71	289,363.40	22,149.25	505,087.20		16,275,610.39
41A	இஸ்லாமாபாத்		9,146.99	1,426,017.13			819,116.06	229,986.57	174,286.96	30,503.14			2,689,056.85
42A	கராச்சி		15,614.29	1,615,518.77			750,624.89	87,035.83	99,580.20	22,132.99			2,590,506.95
43A	ஜெட்டா		16,673.43	15,887,323.36			2,951,402.04	9,522,153.06	99,881.82				28,477,433.72
44A	கட்டார்		19,964.88	55,165,190.85			12,177,589.76	7,980,706.49	972,987.48			728,169.50	77,044,608.95
45A	பிரிட்டேரியா		22,268.24	3,386,544.58			473,944.51	1,805,112.41	172,230.66				5,860,100.40
46A	பெய்ரூட்		34,049.48	5,089,498.01			464,049.49	404,436.45	199,486.53	19,328.71		1,062,300.00	7,273,148.67
47A	தெஹ்ரான்		25,578.57	1,193,925.50			116,244.80	279,473.58	56,719.32			2,137.26	1,674,079.03
48A	மணிலா		29,877.46	3,100,528.53			673,318.24	133,192.88	145,632.27				4,082,549.38
49A	வார்சோ		13,852.98	865,635.19			419,028.20	1,043,536.62	47,133.26	22,011.96			2,411,198.21
50A	ஒஸ்லோ		12,046.18	9,711,914.03	1,199.92		462,236.69	1,726,248.92	96,710.36	1,242.34			12,011,598.44
51A	பிராங்பார்ட்		10,968.73	40,515,588.36			1,096,323.82	1,829,344.88	233,194.81				43,685,420.61

தூதரக இலக்கம்	தூதரகம்	அரச கட்டிடங்களுக்கான வாடகை	பிற வட்டி	கடவுச்சீட்டு & வீசா	பரீட்சைகள் & ஏனையவை	மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	கொன்சியுலர் கட்டணம்	ஏனைய பெறுகைகள்	W & OP மத்திய	W & OP மாகாணம்	மூலதனச சொத்துக்களின் விற்பனர்	மூலதனச சொத்துக்களின் விற்பனர்	மொத்தம்
52A	டெல் அவிவ்		2,928.21	10,195,054.81			2,402,404.08	1,729,421.69	97,739.19				14,427,547.97
53A	டொரெண்டோ		32,792.42	93,918,065.42			8,446,376.43	8,634,675.79	256,500.12				111,288,410.18
54A	பிரசீலியா		40,739.90	189,610.09			169,940.98	376,057.43	216,673.44				993,021.84
55A	ஹனோய்		3,738.94	1,831,478.25	600.00		936,686.47	2,295,315.29	165,146.68	11,659.84			5,244,625.47
56A	ரமலாஹ்		1,666.50					1,101,301.77	17,855.26				1,120,823.53
57A	ஷங்ஹாய்	7,868.92	5,166.30	6,422,352.51			508,238.66	2,642,134.46	91,526.62				9,677,287.48
60A	அங்காரா		16,949.61	865,905.66			533,054.75	595,982.12	177,219.27				2,189,111.40
61A	குவான்சூ		6,847.11	3,489,657.82			432,783.52	838,029.56	129,435.50				4,896,753.52
62A	மெல்பேர்ன்		261,129.04	53,605,200.94			19,835,250.97	1,642,512.56	137,313.25				75,481,406.75
63A	மனாமா		17,715.82	10,735,530.94	2,485.60		2,398,893.92	435,632.54	122,392.23	33,289.80			13,745,940.86
65A	அபுஜா		7,245.92	2,641,633.83				75,709.81	120,931.82	23,203.05			2,868,724.43
66A	விக்டோரியா		7,126.65	993,514.48			231,629.99	5,638,159.88	19,735.01				6,890,166.01
67A	காபுல்			1,735,937.00				76,518.32	20,394.36				1,832,849.68
68A	மிலான்		17,965.92	70,231,544.77			44,400,201.50	946,444.25	98,522.23				115,694,678.66
69A	அடிஸ் அபாபா		15,419.99	477,614.35			303,485.55	2,985,901.22	131,884.26				3,914,305.36
70A	சைப்பிரஸ்							-	9,225.52				9,225.52
மொத்தம்		**581,341.96**	**2,292,832.09**	**1,369,685,730.34**	**15,428.62**	**737,665.97**	**431,289,675.82**	**154,096,411.35**	**13,267,142.18**	**711,505.21**	**1,934,998.97**	**3,154,558.98**	**1,977,767,291.51**

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
ஆப்கானிஸ்தான்	காபூல்	-	483	-	-	-	-	-	1	-	-	-	-	2	-
அவுஸ்திரேலியா	கன்பரா*	-	82	599	109	-	5	-	-	177	-	5	343	53	-
அவுஸ்திரேலியா	மெல்பேர்ன்*	-	616	1442	126	60	34	-	-	365	-	7	1921	105	20
அவுஸ்திரேலியா	சிட்னி*	-	520	627	58	80	18	-	-	142	-	6	1136	85	3
ஆஸ்திரியா	வியன்னா	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
பஹ்ரெய்ன்	மனாமா	555	310	675	48	0	66	0	15	64	0	8	525	17	462
வங்களாதேசம்	டாக்கா	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
பெல்ஜியம்	பிரசல்ஸ்	0	465	33	0	12	0	0	0	15	0	0	203	0	-

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டில் மேற்கொள்ளப்பட்ட [illegible]	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
பிரேசில்	பிரசீலியா	-	8	5	1	-	3	-	-	1	-	-	27	4	2
கனடா	டொரொண்டோ	-	2905	1184	132	-	29	-	27	107	-	6	-	88	-
கனடா	ஒட்டாவா	-	599	432	47	04	05	03	02	64	0	0	186	06	-
சீனா	பெய்ஜீங்	-	2285	52	4	-	3	3	-	21	-	-	1126	2	17
சீனா	குவங்க்சூ	-	561	-	5	-	-	2	-	1	-	1	95	-	-
சீனா	ஷாங்ஹாய்*	-	597	14	45	-	4	-	19	11	9	2	293	5	6
கியூபா	ஹவானா	-	7	4	-	-	-	-	-	1	-	-	57	23	-
எகிப்து	கெய்ரோ	31	205	32	13	-	2	-	-	10	-	-	97	-	-
பிரான்ஸ்	பாரிஸ்	0	1202	4191	130	58	435	0	112	1167	286	0	849	31	2928
ஜேர்மனி	பேர்லின்*	-	1876	311	9	-	11	-	-	36	-	-	258	3	10

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்ட [illegible]	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
ஜேர்மனி	பிராங்க்பேர்ட்*	-	973	878	21	0	25	0	0	70	2	3	68	1	0
இந்தியா	புதுடெல்லி	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
இந்தியா	சென்னை														
இந்தியா	மும்பை	0	884	19	3	-	2	6	2	1	-	1	308	2	2
இந்தோனேசியா	ஜக்கார்த்தா	-	231	12	79	-	-	-	10	-	-	-	44	-	04
ஈரான்	தெஹ்ரான்	-	239	1	6	-	-	1	4	1	-	2	9	-	-
ஈராக்	பாக்தாத்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
இஸ்ரேல்	டெல் அவிவ்*	-	5	275	26	-	6	-	3	20	2	1	191	6	-
இத்தாலி	ரோம்	-	29	847	69	0	62	0	05	269	04	11	439	43	2323

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்ட பிரக்கூலிப்புகள்	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
இத்தாலி	மிலான் *	-	5	1954	690	-	275	-	-	672	17	10	1081	201	2643
ஜப்பான்	டோக்யோ	-	670	637	139	21	16	-	23	204	41	8	974	01	66
ஜோர்தான்	அம்மான்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
கென்யா	நைரோபி *	-	67	20	8	-	-	-	1	10	-	1	8	-	8
கொரியா	சியோல் *	-	286	941	91	-	9	11	-	30	8	5	1489	9	40
குவைத்	குவைத்	-	1375	5523	1704	-	-	-	-	-	-	-	-	-	-
லெபனான்	பெய்ரூட் *	-	11	416	30	-	12	-	207	41	-	1	70	4	-
மலேசியா	கோலாலம்பூர்*	114	272	288	444	-	23	-	87	37	20	9	280	-	-
மாலைதீவுகள்	மாலே	0	148	103	18	0	7	0	0	7	0	0	477	0	0
மியன்மார்	யங்கொன்*	-	333	9	6	-	-	-	6	1	-	1	-	-	-

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்ட பிரசுரிப்புகள்	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
நேபாளம்	காத்மண்டு	0	1418	01	06	0	0	0	0	01	01	0	13	142	01
நெதர்லாந்து	ஹேக் *	-	674	65	1	3	-	-	9	20	-	-	211	-	-
நைஜீரியா	அபூஜா*	-	333	9	6	-	-	-	6	1	-	1	-	-	-
நோர்வே	ஒஸ்லோ	-	544	141	8	-	7	0	4	38	-	1	48	1	-
ஓமான்	மஸ்கட்	4635	94	624	151	-	52	624	148	78	0	16	875	4	0
பாகிஸ்தான்	இஸ்லாமாபாத்	-	595	1	3	-	-	4	-	8	-	-	168	-	66
பாகிஸ்தான்	கராச்சி	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
பிலிப்பைன்ஸ்	மணிலா *	-	303	21	1	-	5	-	-	11	-	-	91	3	31
போலந்து	வார்சோ	7	47	11	2	-	2	-	8	1	-	-	211	-	-
பாலஸ்தீனம்	ரமாலா நகரம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்ட [illegible]	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
கட்டார்	டோஹா	-	185	3897	1541	-	305	14	-	345	15	53	2255	6	576
ரஷ்யா	மொஸ்கோ	0	166	10	6	8	1	0	1	9	0	0	352	5	0
சவூதி அரேபியா	ரியாத்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
சவூதி அரேபியா	ஜெட்டா	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
சேஷெல்ஸ்	விக்டோரியா	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
சிங்கப்பூர்	சிங்கப்பூர்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
தென்னாபிரிக்கா	பிரிட்டோரியா	-	107	12	17	-	5	66	-	20	-	2	69	21	-
சுவீடன்	ஸ்டொக்ஹோம்	0	1033	168	20	0	0	03	0	53	0	02	76	0	40
தாய்லாந்து	பாங்கொக்	-	466	10	37	-	4	-	16	11	7	1	219	4	-

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொன்சியுலர் செயற்பாடுகள்
2018 ஜனவரி 1 இலிருந்து 31 டிசம்பர் வரை

* 2018 ஜனவரி இலிருந்து செப்டெம்பர் வரையில் தூதரகங்களால் அறிவிக்கப்பட்டமை

நாடுகள்	தூதரகம்	தொழில் ஒப்பந்தம்	வழங்கப்பட்ட வீசாக்கள்	வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்	இயந்திரம் வாசிக்கமுடியாத கடவுச்சீட்டு	வழங்கப்பட்ட அடையாள சான்றிதழ்	கடவுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்ட [illegible]	கடவுச்சீட்டுப் புதுபித்தல்கள்	தாயகத்திற்கு திருப்பி அனுப்புதல்	பிறப்பு பதிவுகள்	திருமணப் பதிவுகள்	மரணப்பதிவுகள்	ஆவணங்கள் சான்றுப்படுத்தல்	பொலிஸ் இசைவுச்சான்றிதழ்கள்	ஏனையவை
துருக்கி	அங்காரா	-	113	-	4	-	-	3	56	7	-	1	110	1	-
ஐக்கிய அரபு இராச்சியம்	அபுதாபி	11	174	1114	29	232	109	993	9	144	23	9	506	5	1085
ஐக்கிய அரபு இராச்சியம்	டுபாய்	293	734	4102	830	-	425	4332	145	455	-	20	491	25	1438
ஐக்கிய இராச்சியம்	இலண்டன் *	-	2710	2356	-	-	198	638	51	333	16	10	-	-	-
ஐக்கிய நாடுகள்	ஜெனீவா	0	855	1315	103	0	49	3	188	326	0	4	1039	2	-
ஐக்கிய நாடுகள்	நியூயோர்க்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
ஐக்கிய அமெரிக்கா	வோஷிங்டன்	-	1160	596	69	13	26	-	14	213	-	08	511	10	312
ஐக்கிய அமெரிக்கா	லொஸ் ஏஞ்சல்ஸ்	-	400	319	59	4	5	0	0	81	0	1	84	0	238
வியட்நாம்	ஹனோய்	-	195	6	4	-	1	3	-	8	-	-	255	5	23

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

EHA/A/MFA/01/FS/2018 2019 மே 31 ஆம் திகதி

செயலாளர்,

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 உண்மை நிலைமை கணக்கெடுப்பு கருத்துரை

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் எனது கட்டளைப் பிரகாரம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் முன்வைக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை உரிய காலப் பகுதிக்குள் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலப் பகுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல்

கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 உண்மை நிலைமை கணக்கெடுப்புக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வுத் தரவுகளுக்கமைய என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்று தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்பும் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொய்க் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் குறிப்பிட்ட காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய முறையில் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணிவரப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணி வருவதாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன் அந்த முறைமையின் பயன்தரும் தன்மை சம்பந்தமாக இடைக்கிடை மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை பயன்மிக்க வகையில் மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் பொய்யான கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது கருத்துக்கள் உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும், இலங்கை கணக்காய்வுத் தரத்தின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் அளவுசார்ந்த தவறான

பொருள்கூறல்களைக் கொண்டிராதவையென உறுதிப்படுத்தப்படாதவைகளாக இருக்கலாம். மோசடி மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டான தாக்கம் காரணமாக அளவுார்ந்த தவறான பொருள்கூறல்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்கள் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்களை எடுக்கும்போது அது சம்பந்தமாக கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

தொழில் சார்ந்த நியாயத் தீர்ப்புக்கள் மற்றும் தொழில் சார்ந்த சந்தேகங்களுடன் இலங்கை கணக்காய்வு தரங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவு சார்ந்த பொய்யான கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்தும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்வதற்கு போதுமானளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது கருத்துக்கான அடிப்படையாகும். அளவு சார்ந்த பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய தாக்கத்தினைப் பார்க்கிலும் மோசடியினால் ஏற்படும் தாக்கம் கடுமையாக இருப்பதுடன் உள்கூட்டணி, பொய் ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுதல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கான காரணிகளாகும்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயன்தருதன்மை சம்பந்தமான கருத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா என்ற விடயம்.

போன்ற விடயங்கள் எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்ட ரீதியிலான தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- திணைக்களத்திற்கு கடந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான தேவை இருக்காமையினால் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ் குறிப்பிடப்படும் அளவு சார்ந்த கணக்கீட்டுக் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(அ) வருமானம் அல்லாத கிடைப்பனவுகள்

மீளாய்வாண்டில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு வருமானம் அல்லாத கிடைப்பனவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது கீழ் குறிப்பிடப்படும் விடயம் அவதானிக்கப்பட்டது.

முற்பணக் கிடைப்பனவுகள்

நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட முற்பணக் கிடைப்பனவுகளை அமைச்சின் கணக்குப் பொழிப்புடன் ஒப்பிடும்போது ரூ.9,934,037 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அமைச்சுக்கமைய அந்த வேறுபாடு ரூ.9,896,124 ஆக இருந்தது. அதற்கமைய வேறுபாடு ரூ. 37,913 ஆக இருந்தது.

1.6.2 கட்டு நிதிக் கணக்கு

கட்டு நிதி சீர்படுத்தல் கணக்கில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஏனைய செலவுத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூ.778,863,553 ஆக சீர்படுத்தப்பட்டிருந்தாலும், மாதாந்த கணக்குப் பொழிப்பிற்கமைய இது ரூ.786,835,575 ஆக இருந்தமையினால் ரூ.7,972,022 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.3 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

(அ) மீளாய்வாண்டின்போது விற்பனை செய்யப்பட்ட அமைச்சுக்குரிய வாகனங்களின் கிரயப் பெறுமதி நீக்கல் மதிப்பாக குறிப்பிடுவதற்குப் பதிலாக காப்புறுதித் தேவைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூ.13,900,000 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், 05 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தாலும், 06 வாகனங்களின் பெறுமதி நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது 03 தூதுவராலயங்களில் நீக்கப்பட்ட ரூ.13,875,228 கிரயப் பெறுமதியைக் கொண்ட 03 வாகனங்களின் விற்பனைப் பெறுமதி ரூ.2,156,731 நீக்கல் பெறுமதியாகவும் மேலும், நீக்கப்பட்ட 02 வாகனங்களின் கிரயப் பெறுமதி ரூ.7,648,500 தொகையை உள்ளடக்காமல் நிதி சாராத சொத்துக்கள் கூற்றில் நீக்கல் பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளினால் உருவான காசுப்ப் பாய்ச்சலின் உரிமை நீக்கல் ஏற்பாடு மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனையின் கீழ் ரூ.5,089,558 தொகை வெளிநாட்டு தூதுவராலயங்களின் வாகன விற்பனைகளின் கிடைப்பனவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் வாகன விற்பனைளினால் கிடைக்கப்பெற்ற ரூ. 10,020,720 தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.4 முற்பணக் கணக்கு நிலுவைகள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "B"கணக்கிற்கமைய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இடமாற்றல் பெற்றுச்சென்ற, மரணித்த, பதவி நீக்கப்பட்ட, சேவை முடிவுறுத்தப்பட்ட மற்றும் பணியை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவையிலுள்ள கடன் தொகை ரூ.2,326,566 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவி வரும் மொத்தக் கடன் நிலுவை ரூ.1,259,997 என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "B" கணக்கில் குறிப்பிடப்பட்ட 05 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக இனங்காணப்படாத நிலுவையிலுள்ள கடன் தொகை ரூ.1,515,668 தொடர்பாக இனங்கண்டு கொள்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

1.6.5 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணி வராமை

நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தொடர்பான சேதங்கள் பற்றிய பதிவேடு பேணி வரப்பட்டிருக்கவில்லை.

2 - நிதி மீளாய்வு

2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் அமைச்சின் மாதாந்த கட்டு நிதியைத் திட்டமிடல், கோருதல் மற்றும் கிடைக்கப்பெற்ற கட்டு நிதி சம்பந்தமான பகுப்பாய்வின்போது கோரப்பட்ட கட்டு நிதியைப் பார்க்கிலும் ரூ. 4,380.4 மில்லியன் குறைவாக கட்டு நிதி கிடைத்திருந்தது.

2.2 செலவு முகாமைத்துவம்

மதிப்பீட்டை முடியுமானவரை பூரணமாகவும் சரியாகவும் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருப்பினும் 04 செலவினத் தலைப்புக்களுக்காக ஒதுக்கீடு ரூ.3,669,300 நிதி ஏற்பாட்டின் நூறு சதவீதமும் மீதமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், 07 செலவினத் தலைப்புக்களின் ரூ.566,000,000 நிதி ஏற்பாட்டில் மீதியாகிய ரூ.324,915,822 தொகையில் 54% முதல் 78% வரையிலான வீச்செல்லை காணப்பட்டது.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் 31 செலவினத் தலைப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.9,925,496,365 மொத்த தேறிய நிதி ஏற்பாட்டைத் தாண்டி ரூ.244,155,260 கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) 2018 நவம்பர் 11 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் 3.4 பிரிவிற்கமைய அறிக்கைப்படுத்தப்படாத எந்த விதமான பொறுப்பு மற்றும் கடப்பாட்டை முன்னைய ஆண்டின் செலவாக 2019 ஆம் ஆண்டில் செலுத்தித் தீர்க்கக் கூடாது. எனினும் சில வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனைகளின்போது அறிக்கைப்படுத்தப்படாத ரூ.10,884,464 பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் தீர்க்கப்பட்டிருந்தது.

2.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் 2018 டிசம்பர் 31 ஆம திகதியன்று தீர்க்கப்படாத முற்பண நிலுவை ரூ.392,373,638 ஆகும். இது வீட்டுப் பாதுகாப்புக்கான பிணை வைப்பு ரூ.342,391,044 மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூ.49,982,594 ஆகும். வீட்டுப் பாதுகாப்புக்கான பிணை வைப்புக்களில் தற்போது வசிக்கும் வீடுகளுக்காக வைப்புச் செய்யப்பட்ட மற்றும் தற்போது வசிக்காத ஆனாலும் மீண்டும் ஈடு செய்துகொள்ள முடியாத வைப்புக்கள் உள்ளடங்கும். இந்த நிலுவைக்குள் 1 வருடம் முதல் 27 வருடங்கள் வரையிலான காலப் பகுதிக்குள் தீர்க்கப்படாத முற்பணம் மற்றும் வைப்பு நிலுவைகள் காணப்படுகின்றன.

2.5 வைப்புக்கள்

நிதிப் பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கும் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்புக் கூற்று அடுத்த மாதம் முடிவடைவதற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்தாலும் அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3 - செயற்பாட்டு மீளாய்வு

3.1 நட்டம் மற்றும் இழப்புக்கள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தொடர்பாக 46 நிகழ்வுகளின் நட்டம் மற்றும் தளர்த்தீடுகளின் பெறுமதி ரூ.27,162,885 ஆகும். அந்த நிலுவைகள் 10 வருடங்ளைத் தாண்டியவை மற்றும் 05 - 10 வருடங்களுக்கிடைப்பட்ட நிலுவைகள் முறையே ரூ.21,626,285 மற்றும் ரூ.1,334,664 ஆகும்.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறையற்ற பயன்பாட்டு பணம் களவாடல்கள் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகள் மூலமாக அறவிடப்பட வேண்டிய ரூ.1,091,828 சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் தேவையான சோதனைகளை மேற்கொண்டு தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் கணக்கில் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளது.

(இ) அறவிடப்படாத வீட்டுப் பாதுகாப்பு பிணை வைப்பு ரூ.2,166,467, வாகன விபத்துக்கள் ரூ.3,752,431, அறவிட முடியாத முற்பணம் ரூ.1,750,081, தொலைபேசிகள் காணமல் போனமை ரூ.16,000 மற்றும் ஏனைய நட்டங்கள் சம்பந்தமாக ரூ.2,235,495 தொகை நட்டம் மற்றும் தளர்த்தீடுகளின் கீழ் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4 - மனித வளங்கள் முகாமைத்துவம்

4.1 இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பணியாட் தொகுதி, உண்மையாக நிலவும் பணியாட் தொகுதி மற்றும் ஆளுக்கான வேதனாதிகளுக்கான செலவுகள்

2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான, வெற்றிடம் மற்றும் மேலதிக ஊழியர் எண்ணிக்கை சம்பந்தமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்காக அமைச்சு அலுவலகம் தவிர அமைச்சினால் ஆளுக்கான வேதனாதிகளின் கீழ் சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவுத் தலைப்பிற்கு ரூ.1,735,721,849 செலவிடப்பட்டிருந்தது.

(அ) அமைச்சின் பணியாட் தொகுதி

	ஊழியர் வகை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உண்மையான ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை	மேலதிக எண்ணிக்கை
i	சிரேஷ்ட மட்டம்	99	92	07	-
ii	மூன்றாம் நிலை மட்டம்	08	04	04	-
iii	இரண்டாம் நிலை மட்டம்	367	342	28	03
iv	ஆரம்ப மட்டம்	138	130	28	03
v	ஏனையவை (அமைய/தற் காலிகம்/ஒப்பந்த அடிப்படை	51	13	38	0
	மொத்தம்	**663**	**581**	**87**	**05**

(அ) தூதுவராலயப் பணியாட் தொகுதி

சொந்த நாட்டு அடிப்படை (Home Based)	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உண்மையான ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை	மேலதிக எண்ணிக்கை
சிரேஷ்ட/ மூன்றாம் நிலை*	246	208	38	-
இரண்டாம் நிலை**	260	258	02	-
ஆரம்பநிலை***	07	07	-	-
மொத்தம்	**513**	**473**	**40**	
உள்நாட்டு ஆட்சேர்ப்பு (Locally recruited)				
இரண்டாம் நிலை**	306	276	30	-
ஆரம்பநிலை***	270	255	15	-
மொத்தம்	**576**	**531**	**45**	

i. சிரேஷ்ட/ மூன்றாம் நிலை - தூதுவராலய பிரதானி, அமைச்சர் ஆலோசகர், ஆலோசகர், முதலவது செயலாளர், இரண்டாவது செயலாளர், மூன்றாவது செயலாளர்.

ii. இரண்டாம் நிலை - ஒழுங்குமரபு உதவியாளர், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள்.

iii. உள்நாட்டு ஆட்சேர்ப்பு இரண்டாவது நிலை - எழுதுவினைஞர், வரவேற்பு அலுவலர்கள், சுருக்கெழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட்ட உத்தியோகத்தர்கள்.

iv. ஆரம்பநிலை - சாரதி, அலுவலக உதவியாளர், சுத்திகரிப்பாளர்கள் உட்பட்ட உத்தியோகத்தர்கள்.

டப்ளியூ.ஜீ.என்.மெனிகே
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை

பிரதி : பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.